சமுதாயமும் பண்பாடும்



அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்த் துறைத் தலைவர்

பச்சையப்பர் கல்லூரி, சென்னை-30

தமிழ்க்கலைப் பதிப்பகம்

தமிழ்க்கலை இல்லம் — சென்னை-30

உரிமைப் பதிப்பு 1962 செப்டம்பர்

Y:1
N62

விலை ஏழு ரூபாய்



விற்பனை உரிமை

பாரி நிலையம்
59, பிராட்வே
சென்னை–1.

பொருளடக்கம்

பகுதி ஒன்று — சமுதாயம்

பக்கம்

I. எது சமுதாயம் 17

உடலின் சமுதாய வாழ்வு—கூட்டம் சமுதாய மாகுமா?—தன்னை அறியா மனித வாழ்வு — சமுதாய வித்து— மாறுதல்களுக் கிடையில்—காலம் கடந்த ஒன்று

II. வளரும் சமுதாயம் 38

உயிரொடு ஒன்றிய பாசம்—மனிதனும் பிற உயிர்களும்—உணர்வு முளை—கூட்டு வாழ்க்கையும் குடில் அமைப்பும்—இன உணர்வும் பிரிவுகளும்—ஆற்றங்கரை நாக ரிகம்—பயிர்தொழிலும பண்பாடும்—தனி நலமும் பொது நலமும்—வீட்டுத் தலைமையும் நாட்டுத் தலைமையும்—கடவுள் உணர்வு—நாடோடி வாழ்க்கை—வேறுபாடும் வளர்ந் தது—மாறுபாட்டுக் கிடையில் மன நிறைவு

III. சமூக அமைப்புகள் 68

குழுக்களின் பெருக்கம் — பதவிப் போட்டி—அடிப்படைச் சமூகம் குடும்பமே—ஊரும் உலகமும்—ஆணும் பெண்ணும்—ஊர்ச் சபைகள்—குழுக்களின் அடிப்படை—உணர்வு—பெரும்பான்மையும் சிறுபான்மை யும்—சட்ட திட்டங்கள்—கட்டுப்பாடுகள்—

ஏற்றத் தாழ்வு—பணிமனைகளில் பாகுபாடு—உணர்வு வளருமா?

IV. தனி மனிதனும் சமுதாயமும் 99

இணைந்த வாழ்க்கை—நடந்த நிகழ்ச்சிகள்—முன்னேடிகள்—எப்படி வளர்ந்தது?—அமைதிக்கு வழி—எவர் உறவர்? எவர் பகைஞர்?—அவ்வழி நல்லை வாழிய நிலனே—யார் பதில் சொல்வது?—எல்லார்க்கும் எல்லாச் செல்வமும்—உரிமையும் உடமையும்—முதல் நாட வேண்டும்—இரண்டும் இணைந்ததே வாழ்வு—சமுதாயத்துக்கே பெரும் பங்கு

V. நாகரிகமும் சமுதாயமும் 132

எது நாகரிகம்?—நாகரிகத்தின் அடிப்படை—பொன்னை நாட்கள்—காலந்தொறும் வளர்ந்த ஒன்று—சமயமும் நாகரிகமும்—திரும்பிக் காண்க—உழவும் உள்ளமும்—சில குறைபாடுகள்—தேவையான மாறுபாடுகள்—பன்மையில் ஒருமை

VI. கலை வளர்த்த சமுதாயம் 158

கலையும் வாழ்வும்—கலையும் நாகரிகமும்—விழாக்களும் கலைகளும்—நகரங்களும் கலைகளும்—கலை காட்டும் பண்பாடு—நாட்டு வாழ்வின் பண்பாடு—நகர வாழ்க்கை—கிராமங்களும் நகர வாழ்வும்—இன்றைய வாழ்வுச் சிக்கல்—நகரங்களின் நன்மைகள்—நன்மை தரும் திட்ட முறை

VII. பண்பாட்டு வழிச் சமுதாயம் 189

பரம்பரையும் கலப்பும்—சார்புக்கு ஏற்ற வாழ்வு—பன்மையில் ஒருமை—சட்ட திட்டங்களும் சமூக மாறுபாடுகளும்—பொருளாதாரமும் அரசியலும்—நல்ல அரசாங்கம்—மாறுதல்களின் இயற்கை—வளரும் மக்கள் தொகைக்கு வழி என்ன?—பண்பாடு காண்போம்

பகுதி இரண்டு—பண்பாடு

I. எது பண்பாடு? 215

எது பண்பாடு?—பண்பாட்டின் பொருள்-பண்பாட்டின் தோற்றம்—சூழலும் குடிப்பிறப்பும்—அகமும் புறமும்—பிணைக்கும் அன்பு—கல்வியின் துணை—நீக்க மற நிறைந்த ஒன்று வீடும் நாடும்—உடை வழி—உணவு வழி—சமயத்தின் வழி—கலை வழி—மொழி வழி—பண்பாட்டை வளர்க்கும் பிற—மருந்து வழி—அரசியல் வழி—விஞ்ஞானத்தின் வழி—செல்வ நிலை—சமுதாய அடிப்படை—மனித உணர்வு—சார்பு வாழ்க்கை—வரலாற்று எல்லை—தமிழ் நாட்டு வரலாறு

II. வளரும் பண்பாடு 259

சங்க காலத்தில்—பல்லவர் காலத்தில்—உளப் பண்பாட்டாளர் அறவுரைகள்—சோழர் காலத்தில்—உயர்வும் தாழ்வும்—விசயநகர வேந்தர் நாளில்—இன்றைய நிலை—நீறு பூத்த நெருப்பு—கடவுளும் பண்பாடும்

III. எங்கே பண்பாடு ? 280

சொல்லும் செயலும்—நேற்றும் இன்றும்—உலவும் பண்பாடு—வள்ளுவர் உவமைகள்—உயிரற்றனவும் உதவுகின்றன—கதைகளின் வழியே கருத்துக்கள்—இராமனும் வாலியும்—கற்பனைக் கதையும் காட்டுகிறது—திகைத்த இராமன்—பண்பாடு காட்டிய வாலி—மனிதரினும் மேம்பட்டான்—இன்றும் அதே நிலை—எங்கே பண்பாடு ?

IV. இலக்கியம் வளர்த்த பண்பாடு 307

எது இலக்கியம் ?—வாழும் இலக்கியம்—காப்பியங்கள் ஏன் ?—சங்க இலக்கியம்—பாரியின் பண்பாடு—பேகனின் பெருநிலை—அகப் பொருளில் அறம்—அருள் உள்ளம்—அடுக்களைப் பண்பாடு—சிலம்பில் பண்பாடு—மேகலையில் பண்பாடு—தேவர் காட்டும் பண்பாடு—மொழி பெயர்ப்பு இலக்கியங்களில்—சிற்றிலக்கியங்களில்—வேறுபாடற்ற இலக்கியங்கள்—நேரிய உணர்வு

V. இயற்கை உணர்த்தும் பண்பாடு 336

இயற்கையோடியைந்த வாழ்வு—செயற்கை காட்டும் மனித உள்ளம்—நிலம் நல்கும் பாடம்—மரம் உணர்த்தும் பாடம்—அன்பு வெல்லும்—புறம் காட்டும் நெறி—நல்லார் ஒருவர் உளரேல்—புழு உணர்த்தும் நெறி—சிந்தாமணியின் உவமை விளக்கம்—மலர் காட்டும் பண்பு—அகப்பொருளில் இயற்

கைப் பாடம்—இயற்கையின் தாயுள்ளம்—கதைகள் வழி

VI. சமயம் வளர்த்த பண்பாடு **362**

எது சமயம்?—தொல்காப்பிய விளக்கம்—சமய நெறியாளர்-திருமூலர் அன்பு-மணிவாசகர்—இன்பமும் துன்பமும்—உலகம் வாழ—மனுச் சோழன் — மெய்ப்பொருளார் — சமுதாயத்தைத் திருத்தும் சமயம்—சமயம் உலக வாழ்வுக்கே—புறமும் அகமும்—விழாக்களின் அடிப்படை—கோயில் அமைப்பு—யார் பின் பற்றுபவர்? — உடலுக்கும் உளத்துக்கும்—யாம் இரப்பவை

VII. மொழி வளர்த்த பண்பாடு **389**

மொழி வாழ்வின் அடிப்படை—ஆய்வின் வழியே—உணர்வைப் புலப்படுத்துவது—அகர முதல்—மன உணர்வும் பண்பாடும்—உயிரும் மெய்யும்—இன அமைப்பு—இன இணைப்பின் சிறப்பு—திணை வகை—சொற்களின் நற் பண்பு—ஒருவர் என்ற சொல்—'கள்' நமக்குத் தேவையா?—வினைச் சொல் விளக்கம்—இடைச் சொல்—புணர்ச்சி—புலம்பே தனிமை - தெய்வ நெறி — வேற்றுமையும் உண்டு — பொருளியல்—மரபியல்—தழாஅல் வேண்டும்

VIII. பண்பாட்டு நிலைக்களன்கள் I **423**

பண்பாட்டைக் காட்டுவன பல—ஆடை அணி—சிலம்பு—இலக்குவன் விடை—காப்பு—மலரும் மணமும் — உணவு — பெயர்கள் —

உண்ணும் முறை—மருந்து—அகமும் புற மும்—போரிலே பண்பாடு—கல்வி—கலைகள்—விழாக்கள்—பழக்க வழக்கங்கள் — ஆசாக் கோவை—விரதங்கள்—இல்லறமா? துற வறமா ?

IX. பண்பாட்டு நிலைக்களன்கள் II

நில அமைப்பும் பண்பாடும்—அமைதி இல்லையே—இயற்கை வாழ்வு—சார்பு—நடிப்பு வாழ்க்கை—நல்லவருக்கு மூன்று வழி—சாதி வெறி—உழவும் தொழிலும்—வாணிபப் பண் பாடு—புலவர் வாழ்க்கை—வீடும் நாடும்.

துணை செய்த நூல்கள் — ஆங்கிலம்

ANSHAN —The family.
BARNES & NOBLE —Principles of Sociology.
,, —Man and Society,
BNES D. E. —The feature of the West.
BOAS F. —The mind of Premitive man.
CHERRY T. —The Discovery of Agriculture.
COLE G. D. H. —Essays on Social Theory.
COX O. C. —Caste, Class and Race.
DUBZHNNSKY —Heridity, Race and Society.
EDWARD HALLETT —The New Society.
ELIOT. TS. —Towards the definition of Culture
ELIOT SMITH —The Origin of Magic and Religion.
GORDEN CHILDE —Social Evolution.
HADDON A. C. —The Races of Man.
HARTLAND E. S. —Premitive Man.
KARIDINER A. —The Individual and His Society.
KOLIN H. —The Idea of Nationalism.
LAPIERE R. D. —Sociology.
LINTON R. —The Study of Man.
MACIVER R. M. & PAGE C. H. —Society.
MAN HAJAN V. D. —Recent Political Thought.
MANNHENIM K. —Man and Society in the age of reconstruction.
MERTON R. K. —Civilization & Culture.
NIMKOFF. M. —Marriage and the family.
OGBURN U. F. —Social characteristic of the Cities.
,. —Man of the Old Stone Age.
PADMINI SEN GUPTA. —Eveyday Life in Ancient India.
PERRY V. T. —The Growth of Civilization.

PIGORS P. —Leadership of Domination.
RADHA-
KRISHNAN S. DR. —An Idealistic view of Life.
,, —The Feature of Civilization.
RAMACHANDRAN T.M.—Our Heritage.
SAMUAL KOEING —Man and Society.
STUART PIGGOTT —Prehistoric India.
SUMNER & KILLER —The Science of Society.
TALCOTT PARSONS —The Social System.
THOMAS W. I. —Premitive Behaviour.
,, —The Story of the Cultural Empire of India.
VANLOON K. W. —The Story of Mankind.
YOUNG K. —Personality and Problem of Adjustment.
YOUMG P. T. —Emotion of Man & Animal.
ZIMMERMAN C. C. —Family and Civilization.

முன்னுரை

தமிழ்நாடு கலைகளுக்குப் பிறப்பிடம் கலைகள் தமிழர் வாழ்வை உலகுக்கு உணர்த்துகின்றன. அக்கலைகளை உலகுக்கு வழங்கும் வானுயர்ந்த கோபுரங்களும், வற்றாத இயற்கைச் சூழல்களும், பேசும் கற்பாறைகளும், இலக்கியங்களும் இன்றும் நம்முன்னே நலம் பெற்று வாழ்கின்றன. எல்லாக் கலைகளிலும் திட்பமும் செறிவும் செம்மையும் நலமும் செறிந்து, தமிழர் தம் வாழ்வு 'நல்ல பண்பட்ட வாழ்வு' என்பதை அவை உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் தமிழ்ச் சமுதாயம் தன் பண்டைப் பெருமையோடு புத்தம் புதிய நல் லொளிச் சுடர்களையும் தாங்கி வளர்ந்து வாழ்கின்றது.

இவ்வாறு நெடுங்காலமாக வரலாற்று எல்லை அறியமுடியாதபடி வளர்ந்து வரும் சமுதாயத்தில் இன்று வாழ்கின்ற மக்கள், பழம் பெருமைகளை மட்டும் பேசிக் காலம் கழித்தால் பயனில்லை. 'திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற முறைப்படி புத்தம் புதிய உணர்வுக் கலைகளை தோற்றியும் வளர்த்தும் வாழ வைக்க வேண்டியது இன்றைய சமுதாயத்தின் தலையாய கடமையாகின்றது.

பரந்த பாரதம் உரிமை பெற்றபின் இன்றைய மக்கள் வாழ்வில் செய்யவேண்டிய பல நல்ல செயல் களை வற்புறுத்துகின்றது; கோடிக் கணக்கில் மானிய மாகவும் கடனுகவும் பொருளை வாரி வழங்கி, இன்று நாம் செய்யவேண்டிய நல்ல பணிகளை உணர்த்து கின்றது. நாட்டின் சமுதாய வாழ்வையும், அவ் வாழ்வு பற்றி வளர்ந்தும் அச் சமுதாயத்தைக் காலந் தோறும் தாழாமல் வளர்த்தும் வந்துள்ள பண்பாடு, நாகரிகம், கலை இன்ன பிறவற்றையும் வளர்க்கவேண் டிய தேவை அறிந்து ஒல்லும் வகையில் அரசாங்கம் உதவுகின்றது.

பண்பாட்டுத் துறைக்கெனவே தனி அமைச்சு இயங்குவதறிவோம். அது இந் நாட்டுச் சமுதாயம் கொண்டுள்ள பண்பாட்டினையும், அதன் வழிக் கணக்கிட முடியாத கால எல்லையில் உருவாகிய சமுதாய அமைப்பு முறைகளையும் ஆராய்ந்து, வாழும் மக்கள் முன் வைக்க ஒல்லும் வகையில் முயலுகின்றது. எனினும் சமுதாயம் பற்றியோ அதன் வாழ்வோடு பிணைந்த பண்பாடு பற்றியோ இந்திய மொழியில் சிறந்த நூல்கள் வரவில்லை என்பதை நாடு அறியும். ஒரு சில தலைவர்கள் சமுதாயம், பண்பாடு பற்றி ஆங்கிலத்தில் எழுதிய சில நூல்களேயன்றித் தமிழிலோ அன்றி வேறு இந்திய மொழியிலோ நல்ல நூல்கள் இன்றுவரை வெளிவரவில்லை என அறிஞர் கள் கணக்கிட்டுள்ளனர். மேலை நாடுகளில் இதை ஒரு பெரும் பிரிவாகவே கருதி, இந்தச் சமுதாயப் பண் பாட்டு நிலைக்களன்களை ஆராயப் பல்வேறு வகைக் குழுக்களை அமைத்து, அவற்றின் வழி ஆய்வுகள் நடத்தி, அவை பெற்ற முடிவுகளை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து நல்ல இலக்கியங்களாக நாட்டுக்கு வடித்துத் தருகிறார்கள். ஆங்கிலத்தில் வெளியாகும் நூல்களில் ஒரு பெரும்பகுதி சமுதாய அடிப்படை யிலேயே (Sociology) உள்ளமை அறிவோம். நம் நாட்டில் பல கோடி ரூபாய்கள் செலவுசெய்தும் நல்ல நூல்கள் வெளிவராதது எண்ணத்தக்க ஒன்றே யாகும். இந்த உண்மையை எண்ணிய எனது நல்ல அன்பர் சிலர் இரண்டாண்டுகளுக்கு முன் என்னை இத்துறையில் கருத்திருத்துமாறு கேட்டுக் கொண் டார்கள். எனது பல்வேறு பணிகளுக்கும் சூழல் களுக்கு மிடையில் அப்போது நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்கினேன். எனினும் அத்துறையில் வெளிவந்துள்ள சில ஆங்கில நூல் களை முறையாகப் படிக்கத் தொடங்கியபோது, இக் கருத்துக் குவியல்கள் பலப்பல நம் தமிழ் இலக்கியத் திலே—இலக்கியக் கடலிலே—முத்து முத்தாக உள்ள னவே என உணர்ந்தேன். சமுதாயத்தையும் பண் பாட்டையும் இணைத்துப் பார்த்தபோது, இரண்

டையும் இணைத்த ஒரு நூல் எழுதலாம் என்ற உணர்வு அப்போது—இரண்டாண்டுகளுக்கு முன்—பிறந்தது. அதற்குப் பிறகே அத்துறையில் வெளி வந்துள்ள பல ஆங்கில நூல்களை ஆழ்ந்து பயின்றேன். அவ்வாறு பயிலும்கால், அந் நூல்களின் கருத்துக்களும் விளக்கங்களும் காட்டமுடியாத பல உயர்ந்த உண்மைகளையும் செம்பொருள்களையும் நம் பழம்பெரு இலக்கியங்கள் உள்ளடக்கிக் காட்டிய நிலை உணர்ந்தேன். எனவே இந்த உணர்வின் அடிப் படையிலே கடந்த இரண்டாண்டுகளில் ஓய்வு கிடைத்த நேரங்களிலெல்லாம் படித்து எழுதி ஓரளவு இன்று இந் நூலை முடித்து மக்கள் முன் வைக் கின்றேன்.

தமிழில் சமுதாயம் பற்றியோ பண்பாடு பற் றியோ ஆய்ந்த நிலையில் நல்லதொரு நூல் இல்லை இது எனது முதல் முயற்சி. எனவே இதில் சமுதாயத் தைப் பற்றிய எல்லாக் கருத்துக்களையும் சொல்லி விட்டேனென்றோ—பண்பாடு பற்றிய அனைத்தையும் எழுதிவிட்டே னென்றோ—முடிவு கட்ட முடியாது. என்னால் இயன்ற வரையில் பெருங்கடலில் புகுந்து சிறு முத்து ஒன்று எடுப்பதைப் போன்றே இந்த நூலை எழுதியுள்ளேன். இதில் குறைகளிருப்பின், அறிஞர் எடுத்துக் காட்டுவார்களாயின் அவர்கட்கு என்றென்றும் கடமைப் பட்டவனுவேன். அவர்தம் எடுத்துக்காட்டுகள் அடுத்த பதிப்பிற்குத் துணை செய்யும் என்ற துணிபுடையேன்.

சமுதாயமும் பண்பாடும் ஒன்றையொன்று பற்றி படர்வன. பண்பாடு எத்தனையோ வகையில் பரந்த உலகில் வாழ் மக்களின் மனம், சூழல், இயற்கை, இன்னபிறவற்றிற் கேற்ப அமைந்து விரிந்ததாகக் காணப் பெறினும், அனைத்தின் அடிப்படையும் ஒன்றுகவே முடியும் என்பதைக் காட்ட முயன்றிருக் கின்றேன். அப்படியே மக்கட் சமுதாய வாழ்வு தோன்றி வளர்ந்து வளம்பெற்றும் சரிந்தும் நிமிர்ந் தும் காலமெனும் கடும்புனலில் எதிர் நீச்சலிட்டு மெல்ல மெல்ல ஓங்கிவரும் நிலையையும் ஓரளவு

தொகுத்துக் காட்டியுள்ளேன். இரண்டும் ஒன்றை யொன்று தழுவியனவே ஆனமையின், இரண்டைப் பற்றியும் தனித்தனி விளக்கும்போதும், ஒன்றைப் பற்றியே பல்வேறு கோணங்களில் ஆராயும்போதும் ஒரு சில எடுத்துக்காட்டுகளைத் திரும்பத் திரும்பக் கையாண்டுள்ளேன். அவை கூறியன கூறல்போல அமையினும், அவ்வவ்விடங்களை அவ்வெடுத்துக்காட்டுக்களைத் தவிர வேறு நிறைவு செய்யத்தக்கன இல்லை யென்பதைப் பயிலும் அனைவரும் அறிவர். அப்படியே சமுதாயம் பண்பாடு என்ற இரண்டினையும் தனித்தனியாகப் பிரித்து ஆராய்கின்ற நிலையில் ஒரு சில கருத்துக்கள் தேவை கருதி—இன்றியமையாமை கருதி—ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளன.

நல்லதோர் சமுதாயம்—பண்பட்ட சமுதாயம்—பாரினை நல்ல நெறியில் வாழவைப்பதாகும். வெறும் மனித உடம்பால் மட்டும் உலகைச் செந்நெறியில் கொண்டு செல்ல இயலாது. மனித உள்ளமே—பண்பட்ட உள்ளமே—அம் மனித சமுதாயத்தை நல்ல வழியில் உலகை நடத்திச் சென்று, தானும் வாழ்ந்து தரணியையும் வாழ வைத்து, எல்லா உயிர்களையும் இன்பத் தாழ்த்திச் சிறக்கும் என்பதை அன்று தொட்டு இன்று வரை 'ஆய்ந்தவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்' பலர் வற்புறுத்தி வருகின்றார்கள். அவர்களுடைய வாய்மொழிகளை யெல்லாம் இடையிடையே பெய்து இந்நூலை நான் எழுதியுள்ளேன். அவர்தம் நல்ல உள்ளங்களில் எழுந்த கருத்துக்களே இந் நூலில் இடம் பெற்றுள்ளன. எனவே அவர் வாய்மொழியைப் பின்பற்றி மனித சமுதாயம்—பண்பட்ட சமுதாயமாக—உள்ளொளி பெற்று ஓங்கும் சமுதாயமாக்கச் சிறக்க வேண்டுமென்பது என் ஆசை. அந்த ஆசையை ஓரளவாவது இந்நூல் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையோடு இதை வெளியிடுகின்றேன்.

பணிவார்ந்த,

தமிழ்க்கலை இல்லம்
சென்னை–30. 1—9—62.

அ. ம. பரமசிவானந்தம்.

முதற் பகுதி

சமுதாயம்

1. எது சமுதாயம்?

உடலின் சமுதாய வாழ்வு—
கூட்டம் சமுதாயமாகுமா?—
தன்னை அறியா மனித வாழ்வு—
சமுதாய வித்து—மாறுதல்களுக்
கிடையில்—காலம் கடந்த ஒன்று

உடலின் சமுதாய வாழ்வு

மனிதனுடைய கையும் காலும் ஒரு காலத்தில் தம் முள் பின் வருமாறு உரையாடின: கை காலை நோக்கி, "காலே, நீ இரவு பகல் ஓய்வின்றி ஓடி ஓடித் திரிகின் றாய்; கல்லிலும் முள்ளிலும் இடர்ப்படுகின்றாய். நீ அப் படி ஓடி ஓடிக் காட்ட, நான் அங்கங்கே கிடைக்கும் உணவுப் பொருள்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு வருகின்றேன்; ஓரிடத்தில் அவற்றையெல்லாம் பக்கு வப்படுத்தி வாய்க்கு அளிக்கின்றேன். பாவம்! வாயிடை உள்ள அத்தனைப் பற்களும் அவ்வுணவுப் பொருள் களில் உள்ள வலியவற்றையெல்லாம் மென்று மென் மையாக்க, வாய் தன்னிடம் உண்டாகும் நீரிற்கரைத்துப் பக்குவமாக்குகிறது. அதைச் சுவைக்கச் சோம்பேறி யாகிய நாக்கு எவ்வளவு ஆத்திரம் கொண்டுள்ளது! அதுதான் போகட்டும் என்றிருந்தால், அனைத்தையும்

தன்னிடம் கடைசியாக அடக்கிக்கொள்ளும் வயிறு எவ் வளவு திமிர் படைத்திருக்கின்றது! நாமெல்லாம் இவ்வ ளவு வருந்துகின்றோமே, அது கண்டு வயிறு ஏதாவது இரக்கப்படுகிறதா? அல்லது நம்முடைய வேலைகளுக் கெல்லாம் கூலி தருகிறதா? ஒன்றும் செய்ய வேண்டா. ஒரு நன்றியாவது சொல்லுகிறதா? பார்த்தாயா அதன் கர்வத்தை!'' என்றது.

இதைக் கேட்ட கால், "ஆமாம்! நீ சொல்லுவது முற்றிலும் சரிதான். அன்றொரு நாள் என்மேல் முள் குத்தி இரத்தம் வடிந்த போது நீயல்லவா பரிந்து வந்து இரத்தத்தைத் துடைத்து, கட்டும் போட்டுக் கவலைப்பட்டாய்? நம்மால் சுகம் பெறும் இந்த வயிறு ஒரு வார்த்தையாவது சொல்லிற்றா? ஆமாம்! அது கர்வம் பிடித்திருக்கின்றது! அதன் கொட்டத்தை அடக்க வேண்டும்!'' என்றது.

இதைக் கேட்ட கைக்குப் பின்னும் உற்சாகம் அதிகமாகிவிட்டது. அது மேலும், "காலே, நன்கு சொன்னாய்! நீயும் உணர்ந்துதான் வைத்திருக்கிறாய். இப்படி நாமெல்லாம் வருந்திப் பாடு பட, அதனால் வரும் பயனை வயிறு அனுபவித்துக்கொண்டிருப்பது பெருங்கொடுமை அல்லவா? இதை உடனே எப்படியா வது தடுக்க வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லட் டுமா, அல்லது நீ ஏதாவது வழி சொல்லுகிறாயா?'' என்று கேட்டது.

கால் அதைக் கேட்டுச் சிறிது நேரம் ஆழ்ந்த சிந்த னையில் இருந்தது.

அதைப் பொறுத்த கை, "காலே, என்ன சிந்திக்கத் தொடங்கிவிட்டாய்? நான் முன்னமே வழி கண்டு

பிடித்துவிட்டேன். என்னுடன் ஒத்துழைத்துப் பயன் பெற யாரும் இல்லையே என்றுதான் இது வரை அமை தியாய் இருந்தேன். இப்போது நீயும் என்னைப்போலத் தான் எண்ணுகிறாய் என்பதை உணர்ந்துகொண்டேன். நாம் இருவரும் சேர்ந்தால்—இந்த 'வயிறு' என்ன!— உலகையே ஆட்டிப்படைக்கலாமே! என் எண்ணம் இதுதான். நாம் இன்று முதல் இந்த வயிற்றுக்காக ஒன்றும் செய்யக்கூடாது. நீ இருந்த இடத்திலிருந்து நகராதே. நானும் எதுவும் என் வசம் வலிய வந்து சேர்ந்தாலும் அதை வாய்க்கு அனுப்பாது வேலை நிறுத் தம் செய்கிறேன். பின்பு நடக்கும் வேடிக்கையைப் பார்ப்போம். ஒன்று, வயிறு நம்மிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்; அல்லது, மடிந்து ஒழியவேண்டும்,'' என்றது.

காலுக்கும் அந்த வேலை நிறுத்தம் சரி எனப்பட்டது போலும்! அன்று முதல் கால் ஒன்றும் செய்யவில்லை. கையும் எதையும் எடுத்து வாயில் போடவில்லை. முடிவு என்ன?

நாள்கள் சில சென்றன. வயிறு அமைதியாய் இருந்தது. நாக்குச் சில சமயங்களில் அல்லற்பட்டி ருக்கும். பிறகு அதுவும் அமைதியாய் இருந்துவிட்டது ஆனால், உடல் முழுதும் சோர்வடைந்தது. பசி காரண மாக வயிறு இரைந்தது. இதைக் கேட்டுக் காலும் கை யும் தம் வேலை நிறுத்தம் பயன்தரத் தொடங்கிவிட்டது எனவும், அடுத்த நிலையில் வயிறு தம்மிடம் மன்னிப்புக் கேட்கும் எனவும் எதிர்பார்த்தன. பாவம்! அவற்றிற்கு ஏமாற்றமே மிஞ்சிற்று.

மேலும் சில நாள்கள் கழிந்துவிட்டன. பிறகு கையும் காலும் தம் வலுவிழக்கத் தொடங்குதல்

இயல்புதானே! தம் வலிமையும் செயலும் நாளுக்குநாள் நிலை குலைந்து வருவதை இரண்டும் ஓரளவு உணரத் தொடங்கின. தாம் ஒரு வேலையும் செய்யாத காரணத்தாலும் சோர்வாலும் உண்டான தளர்ச்சியே அது என முதலில் இரண்டும் எண்ணின. வரவர அவற்றுள் ஒன்றும் செய்யவே இயலவில்லை. நகர நினைத்தாலும் காலால் நகர இயலவில்லை. தூக்கி நிறுத்த நினைத்தாலும் கையால் இயலவில்லை, இதற்குக் காரணம் எதுவாய் இருக்கலாம் என்று இரண்டும் நெடுநேரம் எண்ணியெண்ணிப் பார்த்தன. அவற்றிற்கு ஒன்றும் விளங்கவில்லை. உடலின் மற்ற உறுப்புக்களும் அப்படியே அமைதியாய் இருந்தன. ஆயினும், வயிறு மட்டும் ஓரளவு சோர்ந்திருந்தாலும், இவற்றின் வேலை நிறுத்தத்தைக் கண்டு உள்ளூர நகைத்துக் கொண்டே இருந்தது. கையும் காலும் சோர்ந்துவிடுவதைக் கண்ட வயிறு, வெளிப்படையாகவே சிரித்து விட்டது. அதைக் கண்டு கையும் காலும் சினம் கொண்டன. சினந்து என்ன செய்வது? சிறிதும் அசைய இயலவில்லை. பேசவும் இயலவில்லை. முன் அவ்வளவு வீரம் பேசிய கை சோர்ந்து சோர்ந்து விழுந்துவிட்டது. காலோ, நகர இயலாது—ஏன்?—அசையமுடியாது திண்டாட்டமுற்றது.

இவற்றின் கொடுமைகளை மேலும் பார்த்துக் கொண்டிருக்க வயிறு விரும்பவில்லை. அதற்கும் தளர்ச்சிதான் என்றாலும், அது உண்மையை இவற்றிற்கு விளக்க வேண்டுமென்ற கருத்தால் மெள்ளப் பேசத் தொடங்கிற்று:

"கையே, காலே, நீங்கள் முன்பு பேசிக்கொண்டிருந்த அத்தனையும் நான் கேட்டேன். நீங்கள் எனக்

காகப் பாடு படுவதாக அல்லவா நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? நாக்குச் சுவை அனுபவிக்கவும் நான் பயன் அனுபவிக்கவும் நீங்கள் நாள்தோறும் வருந்தி வருந்திச் செயலாற்றுவதாக நினைத்திருக்கின்றீர்கள். இப்போதாவது உண்மையை உணர்ந்தீர்களா? நீங்கள் உணவு தேடித் தாராத காரணத்தால் நான் சற்று இளைத்தேன் என்பது உண்மைதான். ஆனால், என்னைக் காட்டிலும் நீங்கள் எவ்வளவு வாடியுள்ளீர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். அப்படி எண்ணிப் பார்த்தால், உங்களுக்கு ஓர் உண்மை விளங்காமற் போகாது. தோற்றத்தால் நீங்களும் நானும் பிற உறுப்புக்களும் வேறுவேறுகத் தோன்றினும், இந்த உடம்பெனும் சமுதாயத்தில் நாம் அனைவரும் சேர்ந்துள்ளோம். இதில் ஒருவர் மற்றவருக்காகப் பாடு படுவதாக நினைப்பது பெருந்தவறு. அனைவரும் ஒருசேரப் பாடுபட்டாலன்றி, உடம்பெனும் சமுதாயம் நோயின்றிச் சோர்வின்றித் தளர்வின்றி இயங்கிக்கொண்டேயிருக்க இயலுமா? நீங்கள் எனக்காகப் பாடு படுவதாக நினைத்தீர்கள். நான் செய்யும் வேலையைக் கேட்டால் நீங்கள் அஞ்சி ஓடிவிடுவீர்கள்! நானும் என் குடர்களும் நீங்கள் கொடுக்கின்ற எல்லாப் பொருள்களையும் தரம் பிரித்து, வகைப்படுத்தி, உரியவகையில் செரிக்கச்செய்து, வேண்டாதவற்றை வெளித்தள்ளி, உடலுக்கு வேண்டிய வற்றை வேண்டிய வகையில் மாற்றி, ஒரு நிமிடமும் ஓய்வில்லாது உழைக்கின்றேம் என்பதை இனியாவது உணர்ந்துகொள்ளுங்கள். உங்கள் வேலை ஒரு நாளின் ஒரு சிறு பகுதியில் முடிந்துவிடும். எங்களுடைய வேலையோ, இடையறாது நடைபெற்றுக்கொண்டேயிருக்க வேண்டும். நாங்கள் மட்டுமென்ன! உடலிலுள்ள புறத்தோல் தொட்டு உள்ளே ஓடும் இரத்தக்

குழாய்கள் சிறு அணுக்கள் வரை அத்தனையும் இடை யருது உழைத்தால்தான் உடல் என்னும் சமுதாயம் உள்ளும் புறமும் நாற்றமெடாது நல்லபடி உலகத்தில் நிலவும். எனவே, இந்த உடலாகிய சமுதாயத்தைச் சேர்ந்த நம்முள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொறுப்பு உண்டு. அதை எண்ணிப் பாராது தட்டிக் கழித்தால், உடலில் எங்காவது புரையோடிப் புற்று நோயும் பிற கொடுமைகளும் உண்டாகும். நீங்கள் உணவு தேடித்தாராததால் வருந்தியவர் யார்? எல்லோ ருமேயாவோம். நீங்களும் அதற்கு விலக்கல்லீர்கள் என்பதை உணர்ந்தீர்களல்லவா? எனவே, உடலென் னும் சமுதாயம் உலகில் செம்மையாக நிலவ ஒவ்வோர் உறுப்பும் ஒல்லும் வகையான் ஓய்வின்றி உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இன்றேல், எல்லாம் ஒன்றி, உடலென்னும் சமுதாயமே அழியுமன்றி அங்கொன்றும் இங்கொன்றும் மட்டுமழிய, மற்றவை வாழ இயலாது. இந்த உண்மையை நன்றுக உணர்ந்து கொண்டிருப்பீர்களென நினைக்கிறேன். உணர்ந்து உங்கள் கடமையை அறிந்து செயலாற்றுவீர்களாயின் 'உடம்பை வளர்க்கும் உபாயமறிந்து, உடம்பை வளர்த் தேன்; உயிர் வளர்த்தேன்,' என்று பெரியார் கூறியபடி நம்மை நாம் வளர்த்துக்கொண்டு அத்துடன் நம் கூட்டு வாழ்வுக்கு இவ்வுலகில் அடிப்படைக்காரண மாகிய உயிரையும் வளர்த்தவராவோம். என்ன? விளங் கிற்று? இனியாவது உணர்ந்து நடவுங்கள்,'' என்று ஒரு பெரிய உபதேசமே செய்துவிட்டது. இந்த உண் மையை உணர்ந்த பிறகும் காலும் கையும் அமைதியாய் இருக்குமென எண்ண இயலுமா? அவை பழைய படியே ஓடி ஆடி உழைத்தன; உடல் உரம் பெற்றது.

இது ஒரு கதைதான். ஆனால், இந்தக் கதை மக்கட் சமுதாய வாழ்வுக்கும் பொருந்தியதாகும். உலக அரங்கில் மக்களாகிய சமுதாயம் புண்ணும் புரையும் ஓடாது தலை நிமிர்ந்து பன்னெடுங்காலம் அழியாது வாழ வேண்டுமானால், அச்சமுதாயத்தில் உறுப்பினராகிய ஒவ்வொருவரும் தத்தம் கடமையை வழுவாது செய்யத் தான் வேண்டும். அப்போதுதான் சமுதாயம் சமுதாய மாக வாழும். ஆம்! அச்சமுதாயந்தான் யாது?

கூட்டம் சமுதாயமாகுமா ?

'நம்மவர்' என்றும் 'நாம்' என்றும் நாட்டில் இரு சொற்கள் வழங்குகின்றன. ஒவ்வொரு மொழியிலும் இதே பொருளில் பல சொற்கள் அமைந்துள்ளன. ஆனால், இந்தச் சொற்கள் உணர்த்தும் பொருள்களைப் பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? இல்லை என்றே அனைவரும் பதில் சொல்வோம். நம்மையொத்து நாம் அறிந்தோ அறியாமலோ நம்மைப்போன்றே வாழ்ந்து, நாம் மேற்கொள்ளும் பழக்க வழக்கங்களையே தாமும் மேற்கொண்டு, நமக்கு ஏற்ப வாழ்கின்றவரை நம்மவர் என்று சொல்லுவது மரபு. இந்த இயைபு எப்படி உண்டாயிற்று? அந்த உண்மையை உணர்வதே சமுதாயத்தை உணர்வதாகும்.

'கூடி வாழ்வதே சமுதாயம்,' என்னும் கொள்கை நாம் அறிந்ததேயாகும். அப்படியாயின், கூடிவாழும் அத்தனையும் சமுதாயம் எனக்கொள்ளும் வழக்கம் உண்டா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சேர்ந் திருப்பது சமுதாயமாயின், எத்தனையோ சமுதாயங்கள் உலகில் இருக்க வேண்டுமல்லவா? ஒரு பள்ளிக்கூடத் தின் வகுப்பறையிற் பல மேசைகளும் நாற்காலிகளும் சேர்ந்துள்ளமையை நாம் காண்கின்றோம். அந்தக்

கூட்டு நிலையை நாம் மேசைச் சமுதாயம் அல்லது நாற்காலிச் சமுதாயம் என்று சொல்லுகிறோமா? எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு சொன்னால், நம்மை நாட்டார் ஏளனமாகையாடமாட்டாரா? அவற்றை அவ்வாறு சொல்லுவதில்லை.

ஊர்க் கோடியிலே அன்றாடம் மாடுகள் கூட்டம் கூட்டமாய் வந்து சேர்கின்றன. வேடந்தாங்கலில்* ஏரி நிரம்பிய காலத்தில் பல வகையான பறவைகள் ஆயிரக் கணக்கில் வந்து சேர்கின்றன. வயல்களில் ஆடுகள் மந்தை மந்தையாய் உள்ளன. எறும்பும் தேனீயும் என்றுவது கூடி வாழாது தனித்தனியாக வாழ்வதைக் கண்டிருக்கிறோமா? அவை எப்போதும் கூட்டம் கூட்டமாய் வாழ்ந்து தம் வாழ்வைப் பெருக்கிக்கொள்வதே மரபல்லவா! இவை அனைத்தும் உயிருள்ள பொருள்கள்தாமே? இவற்றை மேலே கண்ட மேசை,நாற்காலி போன்ற உயிரற்றவைஎன்று சொல்ல இயலுமா? இயலாதே! எனவே, உயிருள்ள இவை கூடி வாழ்வதைச் சமுதாயம் என்று சொல்லலாமா? யார் சொல்லுவார்? உலகில் எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் அவ்வாறு சொல்லுவார் இல்லையே! எனவே, இந்தச் சமுதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் ஒன்று என்பது தானே நமக்குப் புலப்படுகின்றது.

இனி அந்த மனித இனத்திலும் மற்றொரு வகையாக எண்ணிப்பார்க்கத் தோன்றுகிறது. பேரூர்தோறும் பெருஞ்சிறைச்சாலைகளைக் காண்கின்றோம். அவற்றுள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்

*இது செங்கற்பட்டு மாவட்டத்தில் ஓர் ஊர்.

கான கைதிகள் இருப்பதையும் காண்கின்றோம். அங்கெல்லாம் மனிதர்கள் சேர்ந்து வாழ்வதைக்காணும் போது, அந்தச் சிறை வாழ்வு வாழும் மக்களைத் 'திருட்டுச் சமுதாயத்தார்' என்று யாராவது சொல்லுவதாகக் கேட்டிருக்கிறோமா? மற்றும், வாரந்தோறும் பல ஊர்களில் சந்தைகள் கூடுகின்றன. பல ஊர்களிலிருந்து மக்கள் வருகின்றார்கள்; சிறிது நேரம் கூடிச் செயலாற்றிச் செயல் முடிந்ததும் பிரிந்து விடுகின்றார்கள். அங்கே மக்கள் கூடியுள்ளார்கள் என்பது உண்மை; ஆனால், அவர்களைச் 'சந்தைச் சமுதாயத்தார்' என்று யாரும் சொல்லுவதில்லையல்லவா? அவர்கள் ஆறறிவு படைத்தவர்கள் தாமே? ஆயினும், அவ்வாறு கூடுபவரைச் சேர்த்து ஏன் 'சந்தைச் சமுதாயம்' என்று சொல்லுவதில்லை? இந்த மனிதச் சந்தைக்கும் முன்னே கண்ட மாட்டுச் சந்தைக்கும் அடிப்படையில் வேறுபாடு இல்லை. ஏதோ கூடுகிறோம் பிரிகிறோம் என்ற அளவில் அந்நிகழ்ச்சி நடைபெறுகின்றது. சிறைச்சாலைக் கைதிகள் வாழ்க்கையும் கட்டாய வாழ்க்கையே. எனவே, அறுபட்ட மரப்பலகைகளின் கூட்டமும், மரத் தோட்டத்தின் ஈட்டமும், விலங்கு பறவைகளின் கூட்டமும், உணர்வற்ற, அடிப்படை உணர்வில்லாத மக்கள் கூட்டமும் சமுதாயம் என்னும் சொல்லுக்கு இலக்காகா என்ற உணர்வு நமக்கு உண்டாகிவிடுகிறதல்லவா? இந்த உணர்வு நிலையிலே நின்று எண்ண எண்ண உண்மைச் சமுதாயம் எது என்பது நன்கு புலனாகும். 'யான், பிறர்' என்ற உணர்வும், மற்றவர் சொல்லுக்குச் செவி சாய்க்க வேண்டும் என்ற உணர்வும் இருந்த போதிலும், சந்தையும் சிறைக்கூடமும் சமுதாய வாழ்வகங்களாக மாறுவதில்லை. எனவே, அவர் போன்ற மக்களே வாழ்ந்த போதிலும் சமுதாயம்

அவற்றினும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையில் உருவாவது என்பது தேற்றம்.

தன்னை அறியா மனித வாழ்வு

மனிதன் விலங்கிலிருந்து தோன்றினான் என்பது உறுதியாக்கப்பட்டது. மனிதனையே விலங்கென எண்ணுவதும் மரபாகின்றது. ஆங்கிலத்தில் மனித விலங்கினைப் பிற விலங்குக் கூட்டத்தினின்றும் பிரித்துக்காட்டச் சமுதாய விலங்கு (Social animal) என்ற சொற்றொடர் வழங்குவதைக் காண்கின்றோம். 'Social' என்னும் இந்த ஆங்கிலச் சொல் சமூகம் அல்லது சமுதாயத்தைக் குறிக்கும் 'Society' என்னும் சொல்லோடு நெருங்கிய தொடர்பு உடையதேயாகும். எனவே, மனிதனை விலங்கினத்திலிருந்து பிரிப்பதே இந்தச் சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல்தான் என்பதை நன்கு உணரவேண்டும். இந்த அடிப்படையில் ஆராய்ந்தால், 'ஒருவன் மற்றவனை உணர்தலே சமுதாயம்' என்ற உண்மை நன்கு புலனாகுமல்லவா? இந்த உணர்ச்சி என்று தோன்றிற்றோ அன்றே சமுதாயம் தோன்றிவிட்டது என்று சொல்ல வேண்டும். முதல் மனிதன் தோன்றிய நாளை இன்னும் யாரும் அறுதியிட இயலவில்லை. பல ஆயிரமாண்டுகளுக்கும் சில கோடி ஆண்டுகளுக்கும் இடையில் அந்த நாள் சிக்கித் தவிக்கின்றது. என்று மனிதன் தோன்றினான் என்றாலும் அன்றே அவன் சமுதாயம் உருவாயிற்று என்று யாரும் சொல்லிவிட முடியாது. அவனுக்கும் வாலில்லாக் குரங்குக்கும் (Ape) தொடர்பு காட்டி மனித இனம் வளர்ச்சியடைவதற்கு முன்பே அந்த இனக் குரங்குகள் மனித உணர்வோடு வாழ்ந்தன எனச் சாதிப்பவரும் சிலர் உளர். ஆயினும், ஆராய்ந்தால் அது பொருந்தாது.

விலங்கினத்திலும் எறும்பு, தேனீ முதலிய சிற்றுயிர்களினத்திலும் இத்தகைய உணர்வுகள் ஓரளவு உள்ளன என்பதை இன்றைய விஞ்ஞானம் நமக்கு உணர்த்துகின்றது. ஏன்? ஓரறிவுயிராகிய தாவர இனத்திலே அவற்றின் இனப் பெருக்கத்துக்காகவும், பிற வளர்ச்சிகளுக்காகவும் மேற்கொள்ளும் பல்வேறு செயல்களை எண்ணி எண்ணி விஞ்ஞானிகள் மட்டுமன்றிச் சாதாரண மக்களும் வியக்கின்றார்களல்லவா? அந்த அறிவியல் ஆய்வைக் கொண்டு, அவற்றின் திறம் வியந்து, அவற்றைச் சமூகமாக்க முடியுமா? தேனீக் கூட்டத்தில் இராணி ஈயும், பணியாள் ஈயும், இன்ன பிற வேறுபாடுகள் கொண்டவையும் சேர்ந்து கூட்டை அமைப்பது உண்மை. ஆனால், அவை தேனீச் சமுதாயம் என வழங்கப் பெறுமா? பெறுவே!

மனிதன் தோன்றிப் பன்னெடு நாள்களுக்குப் பின்பே சமுதாயம் உருவாகியிருக்கவேண்டும். அது என்று என்பதை அறுதியிட்டுத் திட்டமாகக் காட்ட இயலாவிட்டாலும், ஒன்று திட்டமாகக் கூற இயலும். மனித உள்ளம் பண்பட்டுப் பண்பாட்டை அறிந்து கொண்ட நாளே அந்த நாள். அது என்றுயினுமாகுக. மனித வாழ்வோடு பண்பாடு பிணைந்த நாளே சமுதாயம் உருவான பெருநாள்.

மனிதன் தன் இனப் பெருக்கம் செய்யத் தொடங்கிய நாளுக்கும், பண்பாடு உண்டான நாளுக்கும், அன்றிச் சமுதாயம் உருவான நாளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. எத்தனை எத்தனை ஆயிரமாண்டுகள் தன் இனப்பெருக்கத்திற்குத் தானே காரணம் என்ற உண்மையை அவன் உணராது வாழ்ந்திருக்க வேண்டும்? மனித இனத்து ஆடவனும் பெண்டிரும் எங்கெங்கோ

பிறந்து, எப்படி எப்படியோ சுற்றித்திரிந்து, அவர்தம் சேர்க்கையும் பிரிவும் சாதாரண நிகழ்ச்சிகள் என்றும் மாறும் திடீர்ச்செயல்கள் (Accidents) என்னுமாறும்எதிர் பாராதவை என்னுமாறும் இருந்த நாள்கள் எத்தனை? ஏதோ எதிர்பாராது ஒருவரையொருவர் கண்ட ஆடவனும் பெண்ணும் சேர்ந்தனர். சில காலம் சென்று பெண் கருவுயிர்த்தாள். ஆனால், அந்தக் கரு ஆணின் சேர்க்கையினுலேதான் உண்டாயிற்றென்பது அவனுக்கோ அவளுக்கோ சிறிதும் தெரியாது. சிறு புழுப் பூச்சி தொடங்கி ஆண் பெண் இன உணர்ச்சி பெற்றுத் தத்தம் இனத்தைப் பெருக்குவது போல, எதுவோ இயற்கையினுலே தன் இனம் வளர்கின்றது என அந்த முதல் மனித இனம் கருதி வாழ்ந்திருக்கும். பெற்றதைப் போற்றி வளர்த்திருப்பாள் பெண். இன்று விலங்கினங்கள் பறவையினங்களுள்ளும் பெண்ணினம் அவ்வாறு குட்டிகளையும் குஞ்சுகளையும் போற்றி வளர்ப்பதைக் காண்கிறோமல்லவா? நம் வீட்டுக் குருவிகளில் ஆணினம் தன் குஞ்சு வளரக் காட்டும் பரிவுகூட ஆதி மனிதனுக்கு இல்லை. ஏன்? தன் கருவே அந்தக் குழந்தை என்பதையே அறியான் அவன். எனவே, கணவன் மனைவி என்ற பாசமோ பற்றோ, தந்தை மகன் என்ற குடும்ப உறவோ, அவன் அறியாதன. இந்த நிலையில் அவன் எப்படிப் பண்பட்டவனுகிச் சமுதாயத்தை உருவாக்கியிருக்க இயலும்?

சமுதாய வித்து :

காலம் செல்லச் செல்ல இந்த நிலை மெல்ல மெல்ல மாற்றம் பெற்றிருக்க வேண்டும். கண்டவரோடு கண்டபடியெல்லாம் விளங்கெனக் கூடி வாழ்ந்த பெண்ணினம், சற்று நின்று நினைத்திருக்க வேண்டும். ஆடவர் தம்

விருப்பம்போலெல்லாம் ஒரு தொல்லையுமற்று ஓடி ஆடித்திரிய, அவ்வாடவரோடு சேர்ந்த சில நாள் களில் தம் உடலில் மாறுதல் பெறுவதோடு, ஒரு குறிப் பிட்ட காலத்தில் வேறோர் உயிரையும் உலகத்துக்கு அளித்து அதைக் காப்பாற்றும் தன் பொறுப்பையும் எண்ணிப்பார்த்திருக்கும் அப்பெண்ணினம். அதற்குள் மனிதன் தன் உடலுறுப்புக்களை மறைக்கத்தக்க வகை யில் மர உரியோ தோலுடையோ உடுக்கவும் கற்றுக் கொண்டிருப்பான். இந்த வளர்ச்சியினிடையிலேதான் பெண்ணினம் கண்டவரோடு தன் உறவை வைத்துக் கொள்ளாது ஒரு வரையறை செய்துகொண்டிருக்கும். இன்று 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கொள்கை நாடெங்கும் பேசப்படுவதைக் காண்கின்றோம். இன்றும் நாட்டின் ஒரு சில மலைப்பகுதிகளில் ஒரே குடும்பத்திற் பிறந்த நால்வர் அல்லது ஐவர் ஆடவர் ஒருத்தியையே மணந்து அவள் வழியே மக்களைப்பெற்று இனப் பெருக் கம் செய்வதைக் காண்கின்றோம். இந்த நிலை நம் இதி காசங்களில் காண்பது மட்டுமன்றி, இன்றைய வாழ் விலும் காண்பதாகும். இது ஒரு நியதியாக அமைவ தற்கும் வரலாற்றாசிரியர்கள் காரணம் காட்டுவார்கள்.

இந்தக் கணவன் மனைவி என்ற பிணைப்பு உண் டான காலந்தான் பண்பட்ட சமுதாயம் உண்டான காலம் என்று ஒருவாறு கொள்ளலாம். பண்பாடு என் பதே நாம் மற்றவருக்காக வாழப்பழகுவதில் உருவான ஒன்றல்லவா? தம்மை ஒறுத்து மற்றவரை வாழவைக் கும் அந்த நிலையான பண்பாடே உலகை வாழ்விக் கின்றது என்பதை எல்லோரும் எடுத்துக் காட்டு கின்றனரன்றோ? இங்கே வீட்டு வாழ்வில் அந்தப் பண் பாடு ஓரளவு உருவாகின்றது உண்மை. எங்கெங்கோ

சுற்றித்திரிந்து தம் மனம் போனபடி வாழ்ந்த அவனும் அவளும், ஒருவர் மற்றவருக்காக என்பதை உணர்ந்து கொண்ட பண்பாடே சமுதாய வாழ்வின் அடிப்படையாய் அமைகின்றது என்ற உண்மையைக் குறளின் அதிகார வைப்பு முறையிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ள இயல்கின்றதல்லவா! இந்த உணர்வே காட்டு வாழ்வை விட்டு வீட்டு வாழ்வையும், பின் நாட்டு நகர வாழ்வுகளையும் மனிதனுக்கு உண்டாக்கித் தந்தது.

கூடி வாழ வழி அமைக்கும் முறையே சமுதாய அடிப்படை என்பதைக் கண்டோம். ஆனால், 'மனிதன் எத்தனையோ வகையாகக் கூடுகின்றானே! அத்தனையும் சமுதாய அடிப்படையில் அமைந்தனவா?' என்னும் கேள்வி எழலாம். இதை எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும். தமிழில் கூறும் கூட்டத்திற்கு எத்தனையோ சொற்கள் உள்ளன. கூட்டம், ஈட்டம், கும்பல், குழு, சேர்க்கை, நெருக்கம், அவை, மாநாடு என்னும் எத்தனையோ சொற்கள் சேர்ந்திருக்கும் மக்களைக் குறிக்கப் பயன்படுகின்றன. இப்படியே பல மொழிகளிலும் பலப்பல சொற்கள் மக்கள் கூட்டத்தைக் குறிக்கப் பயன்படுகின்றன. ஆனால், இவை அனைத்தும் பண்பட்ட மக்கள் கூட்டத்தைக் குறிப்பன என்று கூற இயலாது. கும்பல் என்ற சொல் மக்கள் கூட்டமாக இருப்பதைக் காட்டுவதோடு பல உயிரற்ற பொருள்களின் குவியல்களையும் ஒரு சில இடங்களில் குறிப்பதைக் காண்கின்றோம். அப்படியே கூட்டம், ஈட்டம் போன்ற சொற்களுக்கும் சிலர் பொருள் கொள்ளுகின்றனர். எனவே, இவற்றின் அடிப்படையிலேயே சமுதாயம் அமைந்துவிட்டது என்றும் சொல்ல இயலாது.

சபை, அவை போன்றவற்றை எண்ணிப் பார்க்கலாம். இன்று உலகப் பேரவையாகிய ஐக்கிய நாட்டுச் சபை தொடங்கி, சாதாரணக் கிராம வம்பர் சபைவரையில் எத்தனை எத்தனையோ சபைகளும் அவைகளும் உலகில் உள்ளதை அறிவோம். எனினும், அவற்றையே நாம் சமூகம் என்று வரையறை செய்ய இயலுமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். உலகப் பெருஞ்சபையாயினும் சரி, அல்லது எளிய கிராமச்சபையாயினும் சரி; அவற்றுள் எல்லோரும்—மனிதர் யாவரும்—தாராளமாக இடம்பெற இயலுமா? அத்தகைய சபைகள் வரையறுக்கப்பட்ட ஒரு சிலருக்காக அமைக்கப் பெற்றவை; பல கட்டுப்பாடுகளுக்கும் சட்டதிட்ட வரையறைகளுக்கும் உட்பட்டவை. எனவே, அவற்றையும் சமுதாயம் எனச் சொல்ல இயலாது. இவ்வாறு கூறுவதால் சமுதாயம் வரையறைக்கு உட்படாத ஒன்று என்று கொள்ளவும் வேண்டா. அதற்குரிய அமைப்பு முறைகளைப் பின்னே தொடர்ந்து காண்போம். மேலே கண்ட இத்துணை அமைப்புக்களும் சமுதாயம் அல்ல என்று சொன்னால், சமுதாயம் இவற்றைக் கடந்த ஒன்று என்று கொள்ளவேண்டுவதில்லை. சமுதாயத்தின் எல்லை விரிந்தது. மேலே கண்ட அனைத்தும் சமுதாயப் பரந்த எல்லையில் சிறுசிறு துளிகளாய் நின்று தத்தம் வகையில் பணியாற்றுவனவாம்.

சமுதாயத்துக்கு எல்லை வரம்போ கால வரம்போ கட்டுவது எளிதன்று. சமுதாயம் அல்லது சமூகம் என்ற சொல் உருவாவதன்முன்—எந்தமொழியிலும் இச்சொல் தோன்றுமுன்—ஏன்? எந்தமொழியும் தோன்றுவதற்கு முன்—இந்தச் சமுதாயம் அல்லது சமூகம் உருப்பெற்று விட்டதென்பதை யாரும் மறுக்க இயலாது. இந்தத் துறையில் இதுவரை யாரும் கருத்திருத்தவில்லை

யாதலால், ஆங்கில மொழியிலுங்கூட இச்சமுதாய இயல்பற்றிப் பல நூல்கள் வெளிவரவில்லை. தமிழில் ஒரு நூலும் இல்லை என்று சொல்லலாம். சிலகாலமாகத் தமிழ் நாட்டில் உயர்நிலைப் பள்ளிகளில் நிலநூலையும் வரலாற்றையும் சேர்த்துச் 'சமூக நூல்' என்று கூறும் ஒன்றைத் தவிர, சமூக இயலைப்பற்றி வேறு நூல்கள் இல்லை. அதனால் தமிழ் நாட்டிலேயே சமுதாய இயல்பு மக்களிடை மலரவில்லை என்பது பொருளன்று. உலகில் மிகு பழங்காலந்தொட்டு உயிரினத்தை ஒத்து நோக்கிப் பண்பாடு கெடாத வகையில் வாழ்ந்தவருள் தமிழன் தலை சிறந்தவன் என்பதை உலக வரலாற்றாசிரியர் அனைவரும் ஒருசேர ஒப்புக்கொள்ளுகின்றனர் அன்றே? அவ்வாறு மேலை நாடுகளிலும் சமுதாய இயல்பற்றிய நூல்கள் இல்லையாயினும், சமுதாய அமைப்பும் வாழ்வும் வளமும் வளர்ச்சியும் எத்தனையோ ஆயிரமாயிரமாண்டுகளாக உள்ளன என்பதை அறியவேண்டும். காற்றும் வானமும் இன்று விஞ்ஞானி ஆய்வுக்களத்தில்அமர்ந்து கண்டுபிடித்த பிறகுதான் உண்டாயின என்று யாராவது சொன்னால், அவரைப் பயித்தியக்காரர் என்று உலகம் பழியாதா? சமுதாய அமைப்பும் அத்தகைய நிலையில் அமைந்ததே. தோன்றிய காலத்தைத் திட்டமாக வரையறை செய்ய இயலாவிட்டாலும், நேற்று வரை அது பற்றிய விளக்கங்கூற எம்மொழியிலும் யாரும் முன் வரவில்லை என்றாலும், மனிதனது சிந்தனைக்கும் அறிவுக்கும் எட்டாத வகையில் அது காலமறியாத அந்தத் தோன்றிய நாள் தொட்டு மெல்ல மெல்ல வளர்ந்து, உருப்பெற்று, காலத்தேவன் கையிற் பட்டு, பெறவேண்டிய மாறுதல்களைப் பெற்று, வளர்ந்து வாழ்ந்து வரும் ஒப்பற்ற ஒன்று என்பதே தேற்றம்.

மாறுதல்களுக்கிடையில்

இருபதாம் நூற்றாண்டின் இடையிலே வாழும் 'அறிவியல் மனிதனு'க்கு முன்பாக இன்று ஒரு சமுதாயம் உருவாகியுள்ளதை நாம் நன்கு அறிந்து கொள்ள இயல்கின்றது. ஆனால், இந்தச் சமுதாயம் தோன்றிய காளிலிருந்து இப்படியே வளர்ச்சிபெற்றதா என்று எண்ணிப் பார்க்கும்போது நமக்குப் பெரிய மலைப்பே உண்டாகும். தோன்றிய காலம் கணக்கிட இயலாத கடவுளைப்போன்று—கடவுளை அறியும் சமய உணர்வு போன்று—அவற்றுல் ஆட்கொள்ளப்பெறும் மனித இன வரலாற்றைப் போன்று—இச்சமுதாய வரலாறும் பரந்த எல்லையில் அடங்காத ஒன்றுய் அமைகின்றது. அது வாழத்தொடங்கிய அந்த நாள் முதல் இந்த நாள் வரை பெற்ற மாற்றங்களும் வேறுபாடுகளும் கணக்கற்றவையாய் இருக்க வேண்டும் என்பது உறுதி. இன்றும் சமுதாயம் வளர்ச்சியின் எல்லையில் நின்றுவிட்டதென்று யாராவது சொல்ல இயலுமா? எந்தப் பொருளுக்கும் வளர்ச்சி இல்லை என்றுல் வாழ்வும் இல்லை. ஒவ்வொரு நிமிடத்திலும் வளர்ச்சி நடந்துகொண்டேதான் இருக்கிறது. பாலுண்ணும் பச்சிளங்குழந்தையாய்ப் பிறந்த நாம், அறுபது எழுபது ஆண்டுகள் கழித்து, நரை திரை மூப்பு அடைந்த பின், நமது கடந்த காலத்தை எண்ணிப் பார்க்கிறுேமன்றே? தமிழ் நாட்டில் மக்கள் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடுவதறிவோம். தமிழ்நாட்டில் ஆண்டுகளுக்குப் பெயரிட்டு அவற்றை அறுபதாகக் கணக்கிட்டிருக்கிறுர்கள். எனவே, அடுத்த அறுபது வரும்போது, "சென்ற இதே ஆண்டில் 'குவா' எனக் குதித்த நாமா இப்படி மாறிவிட்டோம்!" என எண்ண வாய்ப்பளிக்கிறது அந்த விழா. அன்றும்,

'அறுபது ஆகிவிட்டது; எனவே, இனி வளர்ச்சி வேண்டா,' என்று யாரும் முடிவு கட்டுவதில்லை. அப்படி முடிவு கட்டிவிட்டால், பின் வாழ்வு ஏது! பிறந்த அல்லது தோன்றிய உயிரும் அவ்வுயிருக்கு உணர்வூட்டும் பிறவும் நிமிடந்தோறும் வளர்ந்துகொண்டே இருந்தால்தான் உலகில் வாழ்வும் வளமும் காண இயலும். சமுதாய வளர்ச்சியும் இத்தகையதே. அது தோன்றிய கால எல்லை தெரியாவிட்டாலும், தோன்றிய நாள் தொட்டு, மெல்ல மெல்ல எத்தனையோ மாறுதல்களுக்கிடையில் வளர்ந்துகொண்டுதான் வருகின்றது. வளரும் நிலை காலந்தோறும் மாறுபடலாம். சில காலத்தில் வளர்ச்சியும் மாற்றமும் வேகமாக நடைபெறலாம்; சில காலம் வளர்ச்சியே இல்லையோ என ஐயுறும்படி மெள்ள வளர்ந்து வரலாம். எப்படியாயினும், சமுதாயம் பல மாறுதல்களுக்குள்ளாகி வளர்ந்தும் மாறியும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் நிலைபெற்று வருகின்றது.

மனித வரலாற்றில் எத்தனையோ ஆயிரமாயிர மாண்டுகள் கழிந்துவிட்டன! அவன் வரலாற்றில் ஒரு நூற்றாண்டு ஒரு கொடிப்பொழுதினும் குறுகிய ஒன்று. அத்தனை விரிந்த கால எல்லை அவனுடையது. சமுதாய எல்லை அதற்கு அடுத்து விரிந்து பரந்த ஒன்று. இந்த நூற்றாண்டில் சமுதாயம் விரைவாக மாறுதலடைந்து வருகின்றதென்பர் அறிந்தோர். ஒரு வேளை இப்போதுதான் இது பற்றி ஆராயத் தொடங்கிய ஒன்றும் இதற்குக் காரணமாக அமையலாம். ஆயினும், இன்றைய உலகத்தின் பல சூழ்நிலைகள் சமுதாய வாழ்வை விரைந்து மாற்றுகின்றன எனக்கொள்வது பொருந்துவதாகும்.

இந்தக் காலத்தை விஞ்ஞான யுகம் அல்லது அறிவியற்காலம் என்பர் அறிந்தோர். இந்த நூற்றாண்

டின் இடையில்—அதுவும் சென்ற உலகப் போருக்குப் பிறகு—அறிவியல் மிக வேகமாக மாறி வளர்ந்து வருகின்றதைக் காண்கின்றோம். இதனுல் உண்டாவது ஆக்கமா, அன்றி அழிவா என்ற ஆராய்ச்சி நமக்கு இங்கே வேண்டா. அதை அந்த விஞ்ஞானிகளிடமும் அரசியல் தலைவர்களிடமுமே விட்டுவிடலாம். இந்த விரிந்த விஞ்ஞான வளர்ச்சியினுல் சமுதாயம் ஓரளவு விரைந்து மாறுபட வாய்ப்பு இருக்கின்றதென்பதே நாம் உணர வேண்டுவது. முதல் உலகப் போருக்குப் பின் மக்கட் சமுதாயத்திலே பல மாறுதல்கள் உண்டாயின. இந்த உலகப் போருக்குப் பிறகோ, சமுதாயம் அடியோடு மாறி நிலைகெட்டது என்னுமாறு எங்கோ சென்றுகொண்டிருக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சியால் மனிதன் தூரத்தை மறக்கவும் குறை மதிப்பிடவும் வாய்ப்பு உண்டாயிற்று. வேற்றுக் கோளங்களுக்குத் தாவிச் செல்லும் அளவுக்கும் அங்கெல்லாம் வாழ்வை நிலைபெறச் செய்யும் அளவுக்கும் விஞ்ஞானம் மனிதனுக்கு வாய்ப்பைத் தேடித் தருகின்றது. இந்த நிலையில் பரந்து இருநூறு கோடி மக்களுக்கிடையில் வாழ்ந்த—அங்கங்கே சூழலுக்கும் சார்புக்கும் பிற நிலைக்களன்களுக்கும் இடனுகிப் பல்வேறு வகையில் நிலைத்த—சமுதாயம், உலகில் ஒன்றுக மாறுவது இயற்கையேயாகும். இப்படித் தோன்றிய நாள்தொட்டு இன்று வரை இச்சமுதாயம் பெற்ற மாறுதல்கள் கணக்கற்றனவாய் இருக்கலாம். ஆயினும், மாறிய ஒவ்வொரு நிலையிலும் பழமையும் புதுமையும் இணைந்து பிணைந்து ஒன்றையொன்று தழுவிப் புதிய சமுதாயமோ என்னுமாறு தோற்றமளிக்கும் அதே வேளையில், சமுதாயம் கடவுளைப் போன்று 'பழையதினும் பழையதாய்ப் புதியதினும் புதியதாய்' அமைந்துள்ள பெருஞ்சிறப்பை

அத்துறையை ஆய்ந்துள்ள மேனாட்டு அறிஞர்கள் போற்றிப் புகழ்வதை அறியவும் மகிழ்ச்சி பிறக்கிற தல்லவா?

காலம் கடந்த ஒன்று

சமூக வாழ்வில் தோன்றிய மாற்றங்களும் அவற்றின் வாழ்க்கை நெறிகளும் எண்ணில. ஏறக்குறைய மனித வாழ்வை ஒத்த வகையிலேதான் சமூக வாழ்வும் அமைகின்றது. விஞ்ஞானி ஆய்வுக் களத்தில் உட்கார்ந்து ஆராயும்போது பெறும் பல மாற்றங்களைப் போன்றே சமுதாய மாற்றமும் அமைகின்றதென்பர் அறிஞர். எப்படியும் மேலே நாம் கண்டபடி தோன்றிய தன்மை கெடாததாய்ப் புறத்தில் உண்டாகும் மாறுதல்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, காலத்தோடு போட்டியிட்டுக் கருத்துடைய மக்களின் நிலையினை உலகுக்குக் காட்டிக்கொண்டே இச்சமுதாயம் வளர்ந்து வருகின்றது. உயிரும் உடம்பும் ஒன்றிப்பிணைந்து பிறந்தன. உடலைக் காண்கின்றோம்; உயிரைக் காணவில்லை. எனவே, நாம் உயிர் இல்லாத ஒன்று என்று முடிவுகட்ட இயலுமா? அப்படியே இன்றைய சமுதாய வாழ்வில். நம்மால் காண இயலாவிட்டாலும், தோன்றிய காலத்தில் இருந்த பல நிலைகள் இன்றைய வாழ்வில் மறைந்து கிடக்கின்றன என்று கொள்ளவேண்டும். விஞ்ஞான ஆய்வுக்களத்தில் பல பொருள்கள் நிலை மாறுதலடைவதைக் காண்கின்றோம். அதனால் முன்னது அழிந்து விட்டது என்பது பொருளன்று. நீரைக் காய்ச்சி ஆவியாக மாற்றிவிடுகின்றோம். நீர் இல்லை; ஆனால், ஆவி இருக்கின்றது. எனவே, நீர் அழிந்துவிட்டது என்று யாராவது சொல்ல இயலுமா? சமுதாய வாழ்வின் மாறுபாடும் அத்தகையதேயாகும். பரந்த உலகில்

வாழும் வெவ்வேறு மக்களினங்களின் கூட்டுறவினூலே தோன்றிய அந்த நாள் தொட்டுச் சமுதாய வாழ்வு எத்தனை எத்தனை மாறுதல்களைப் பெற்று வந்த போதிலும், அதன் அடிப்படை நிலை மட்டும் உரு மாறியோ நிலைகெட்டோ, தன்மை வேறுபட்டோ, நிலை குலைந்தோ போயினும், அழியாது நிகழ்ந்துகொண்டே இருக்கும். அந்த அடிப்படை வாழ்வை அளிப்பதுதான் பண்பாடு. ஆம்! 'தாம் இன்புறுவது உலகின்புறக் காணும்' பண்பாடு என்று வள்ளுவரும் பிறரும் கூறும் அந்தப் பண்பாடே சமுதாய வாழ்வை அன்று உருவாக் கிற்று; இன்றும் வாழ வைக்கிறது. அதனூலேயே உலகம் வாழ்கின்றது. இதைத்தான் திருவள்ளுவர் 'பண்புடையார்பட்டு உண்டு உலகம்' என்று பண் பாட்டின்மேல் ஏற்றிச் சொன்னர். அடுத்து இத்தகைய பண்பாட்டு நிலைக்களனைக் கொண்டே சமுதாயம் எப் படித் தோன்றியநாள் தொட்டு மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்தது என்பதைக் காணலாம்.

II. வளரும் சமுதாயம்

உயிரொடு ஒன்றிய பாசம்—மனிதனும் பிற உயிர்களும்—உணர்வு மூலை—கூட்டு வாழ்க்கையும் குடில் அமைப்பும்—இனவுணர்வும் பிரிவுகளும்—ஆற்றங்கரை நாகரிகம்—பயிர்த் தொழிலும் பண்பாடும்—தனிநலமும் பொதுநலமும்—வீட்டுத் தலைமையும் நாட்டுத்தலைமையும்—கடவுள் உணர்வு—நாடோடி வாழ்க்கை—வேறுபாடும் வளர்ந்தது—மாறுபாட்டுகிடையில் மனநிறைவு

உயிரோடு ஒன்றிய பாசம்

வடமொழியில் 'மர்க்கட நியாயம், மார்ச்சால நியாயம்' என இரு வகை நியாயங்களை வழக்கத்தில் கொள்ளுவர். ஒன்று, குரங்கு நியதி; மற்றொன்று, பூனை நியதி. இந்த இரண்டும் உலக வழக்கில் இன்றும் உள்ளன. குரங்கு பூனை இவற்றின் வாழ்வை ஊன்றிக் கவனித்தவர்கள் இவற்றின் உண்மை நிலையினை உணர்ந்துகொள்ள முடியும். குட்டி போட்ட குரங்கோ பூனையோ எப்படி வளர்கின்றன என்பதையே இந்தத் தொடர்கள் நமக்கு உணர்த்துகின்றன. குரங்குக்குட்டியும் தாயும் ஓரிடத்தில் சற்று விலகி உட்கார்ந்திருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அந்த இடத்திற்கு யாராவது மனிதர் வந்தாலோ, எதிர்பாராத தாக்குதல் உண்டானாலோ, அவை என்ன செய்கின்றன? எங்கோ தொலைவில்

உள்ள தாயின் வயிற்றைக் குட்டி தாவிப்பிடித்துக் கொள்ளுவதைக் காண்கின்றோமல்லவா? தாய்க் குரங்கு தாவிப்பிடிக்கும் குட்டியைத் தாங்கிக்கொண்டே பல மரங்களையும் சோலைகளையும் கடந்து கடந்து செல்வ தைக் காண்கிறோம். அப்படியே பூனை தன் 'குட்டி களுடன் கொள்ளும் பாசமும் எண்ணத்தக்கது. குட்டி போட்ட பூனை ஓரிடத்தில் நில்லாது, என்று சொல் லுவார்கள். அது அடிக்கடி கண் திறக்க முடியாத தன் குட்டிகளை வாயினால் கவ்விக்கொண்டு பல இடங்களுக்கு மாறிமாறிச் சென்றுகொண்டேயிருப்ப தைக் காண்கின்றோம். எனவே, அங்குத் தாய்ப்பாசம் நன்கு தெரிகின்றது. இப்படிப் பிள்ளைப்பாசம் பெற்ற விலங்குகளைக் காட்டி மனிதனுக்குப் பல உண்மை களை விளக்க வேண்டிய நிலையில் இருபதாம் நூற் றாண்டிலும் நாம் வாழ்ந்துவருகின்றோம். கூடி வாழும் நெருங்கிய பண்பு இன்றேனும், பெற்றதை வளர்க்க வேண்டும் என்ற பாச உணர்ச்சி மிருகங்களிடமும் பறவைகளிடமும் சிறக்க விளங்குவதை நாம் நன்று கக் காண்கிறோம். நம் வீட்டில் முட்டையிட்டுக்குஞ்சு பொறிக்கும் குருவி எவ்வளவு அன்புடன் தன் குஞ்சு களுக்கு இரை தேடித்தந்து வளர வைத்துப் பறக்க வைக்கிறது! இங்கே பெண் குருவியோடு ஆண் குருவியும் சேர்ந்து ஆற்றும் தொண்டை எண்ணிப் பார்த்தவர் உண்டா! மனிதரைப் போல அவையும் இரண்டிரண்டாக இணை பிரியாத நிலையில் குஞ்சு களைப் பேணி வளர்க்கின்றன. குஞ்சுகள்வளர்ந்தபிறகு பெற்றவற்றை விட்டு முழு உரிமையோடு பிரிந்துவிடு கின்றன. இந்தப் பாசம் கொடியன என நம்மால் வெறுக்கப்படும் வனவிலங்குகளாகிய சிங்கம், புலி முதலியவற்றிற்குங்கூட இருக்கும் ஒரு பாசமாகும்

அங்கெல்லாம் சிறியவை வளரும் வரையிலேதான் அந்தப் பாசம் இருக்கும்; பின்பு அவை ஒன்றை ஒன்று நினைப்பது கூட இல்லை எனலாம். ஆனால், மனிதன் உயிர் வாழும் நாள் வரை அப்பாசத்தை ஓயாமல் போற்றுகின்றனல்லவா? இந்த உணர்வே அவனை விலங்கிலிருந்து வேறுபடுத்திற்று என்பது பொருந்தும்.

மனிதனும் பிற உயிர்களும்

தொடக்க நாளில் எந்த உயிரும் தன்னிலும் வேறான உயிரைக் கண்டு அஞ்சி ஓடியிருக்கும். அன் பென்பதும் அரவணைப்பென்பதும் என்னவென அறி யாத அந்தத் தொடக்க நாளில் விலங்குகள் மட்டு மன்றி மனிதருங்கூட ஒருவரை ஒருவர் கண்டு அச் சத்தால் விலகி ஓடியிருப்பர். எனினும், ஆண் பெண் சேர்க்கையானது அவர்களை அறியாத வகையில் எப்படியோ நடைபெற்றுக்கொண்டு வந்தது. ஓரறிவு உயிராகிய தாவரங்களின் இனப்பெருக்கம்—இன்று அவை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—பல்வேறு வகையில் நடைபெற்றுக்கொண்டேயிருப்பதைக் காண்கின்ற நமக்கு, முதன்மனிதன் எப்படியோ தன் இனப்பெருக்கத்தைச் செய்துகொண்டான் என்பது தெரிகின்றதன்றோ? ஆனாலும், நாம் மேலே கண்டபடி கருவின் தோற்றம் ஆணின் சேர்க்கையாலேதான் உண்டாகிறது என்று பெண்ணை, தன் சேர்க்கையே கருத்தோற்றக் காரணம் என்று ஆணை அறியாத நாள் அது. ஏதோ விலங்குணர்ச்சியால் இருவர் கட் டுண்டதன் விளைவே இனப்பெருக்கம். அந்தத் தொடக்க நாளில் இவ்வாறு வளர்ந்த மனிதன், கூடி வாழக் கற்றுக்கொண்டான் என்று கூற இயலாது.

அவனுக்கு முன்னோடிகளென்றும் மூதாதைகளென்றும் எண்ணத்தக்க பறவைகளும் விலங்குகளும் அவன் வாழ்வை வளமாக்க எத்தனையோ வகையில் உதவின என்பது பொருந்தும்.

விலங்கொடு விலங்காய்த் திரிந்த மனிதன் அவை போலவே குகைகளிலும், முழைகளிலும், பிற பொந்துகளிலும் தேவையாயின் மரக்கிளைகளின் இடுக்குகளிலும் தன் வாழ்க்கையைத் தொடங்கியிருப்பான். அவனுக்கு முன்னோடிகளான விலங்குகளும் பறவைகளும் அப்படித்தான் அவனுக்கு வாழ்ந்து காட்டின. அக்காலத்தில் அதே குகைகளில் வாழ்ந்த கொடிய விலங்குகளுடன் அவன் போராடிய நாட்கள் பல; பாம்பு முதலிய விஷ உயிர்களோடு செய்த போர்கள் பல. கொடிய பறவைகளுடன் மாறுபட்ட நாட்கள் பல. இக்கொடுமைகளிலிருந்தெல்லாம் மெல்ல மெல்ல விடுதலை பெற்று வந்த மனிதனே இன்று உலகைக் கட்டி ஆளும் உரம் பெற்றவனுய்த் தலை நிமிர்ந்து தருக்கி வாழ்கின்றன். தன்னை அறியாது வாழ்ந்த அந்த மனிதனுக்கு, உறைவிடமட்டுமன்றி, உணவும் பிறவுங்கூட அவ்வாறே அமைத்திருக்க வேண்டும். பிற விலங்குகளின் உணவைத் தானும் அவற்றுடன் போட்டியிட்டுக் கவர்ந்து உண்டு வந்தான் அவன். இன்றும் தெருக்களில் சில திருமண வீடுகளுக்குமுன் கழித்து ஒதுக்கிய உணவுக்கு நாய்களோடு சிலர் போட்டியிடுவதைக் காண்கின்றோம். இந்த நாகரிக நாளிலேயும் மனிதன் இந்த நிலையில் வாழ்கின்றன் என்பதைக் காண மனித சமுதாயம் வெட்கப்பட வேண்டாவா? ஆம். இன்று வெட்கப்படத்தான் வேண்டும். ஆனால், அந்தத் தொடக்க நாளில் மனித

னுக்கு அத்தகைய வெட்கமில்லை. அதுவன்றி வேறு வகையில் அவன் வாழ்க்கை செல்லவில்லை என்பது தெளிவு.

இவ்வாறு விலங்கோடும் பறவைகளோடும் உணவுக்கும் உறையுளுக்கும் போட்டியிட்ட மனிதன், உடை பற்றி அதிகமாக அன்று கவலைப்படக்காரண மில்லை —பறவைகளும் விலங்குகளும் உடுக்கவில்லை என்ற காரணத்தால். ஆயினும், தனது ஆருவது அறிவு சற்று விளக்கம் பெறத் தொடங்கிய அந்த நாளிலே, தான் அவற்றினும் வேறுபட்டவன் என்பதை உணர்ந்து, தன் உடலுறுப்புக்களைத் தழையாலும் தோலாலும் மறைத்துக்கொண்டான். பின்னரே அவன் பல உடைகளை உண்டாக்கக் கற்றுக்கொண்டான். அவன் உணவும் அந்த வகையிலே அமைந்திருக்கும். பச்சையிறைச்சியும் பழவகைகளும் காய்களும் பிறவும் அவன் அன்றுட உணவுப் பொருள்கள். இப்படி வாழ்ந்த அந்த முதல் மனிதனுக்குச் சமுதாயம் என்பது என்ன என்பதே தெரியாது.

உணர்வு முளை

உணர்ச்சிஅற்ற மரக்கட்டையாய்க் கிடந்த அவன் உள்ளத்தில் உணர்ச்சி மலரத் தோன்றியிருக்கவேண்டும். இயல்பாக இன்றேனும் நாம் மேலே காட்டிய விலங்குகளைக் கண்டாயினும், அவன் உள்ளம் உணர்ச்சிக்கு இடம் கொடுத்திருக்கும். பூனையும் குரங்கும்—ஏன்—கொடிய விலங்குகளுங்கூடப் பாசத்தால் கட்டுண்டு வாழ்வதைக் கண்ட அந்த மனிதன், மெல்ல மெல்ல அந்தப் பாசத்தின் அடிப்படைப் பண்பை உணர்த்திருப்பான். விலங்குகளும் பிறவும்

அறியாது அப்பாசத்தால் ஆட்கொள்ளப்பெறு கின்றன. மனிதனே, முதலில் அவ்வாறு அறியாது பாசம் வழியே பற்றினைச் செலுத்தினன் என்றாலும், பின்னர் மெல்ல மெல்லச் சிந்திக்கத் தொடங்கி அப் பாசத்தின் ஆட்சியையும் அவசியத்தையும் உணர்ந்துகொண்டான். இந்த உணர்ச்சியே பண் பாட்டு அடிப்படை என்பது பொருந்தும்.

திருவள்ளுவர் மனிதனைக் கெடுப்பது இரு செருக்குகளே எனவும், அவை 'யான்', 'எனது' என்ற அகப்பற்றுப் புறப்பற்று என்ற இரண்டுமே யெனவும் காட்டுவர். இந்த இரண்டு பற்றுக்களை மனிதன் பிற்காலத்தில் வெறிகளாக்கிவிட்டான். அதனாலேயே அன்பு வேண்டும் என்ற வள்ளுவர்-சுற் றத்தையும் மற்றவற்றையும் 'எனது' என்ற பாசத் தால் பிணிக்க வேண்டுமென்று பல அதிகாரங்களில் காட்டியவள்ளுவர்-இவற்றைச் செருக்கு என்கிறார். ஆம்! இவை இரண்டுமே வெறியாகாத வகையில் மனித சமுதாயத்தை வாழ வைப்பன; இவையே, வெறியாய் முடியுமானால், மனித சமுதாயத்தைக் குழி தோண்டிப் புதைக்கவும் முன்னிற்கின்றன. உலகில் வரலாற்று நாள் எல்லையில் நின்று இந்த உண் மையை ஆராயின், உண்டான அத்தனை போர்களும் பிற கொடுமைகளும் இச்செருக்குகளின் அடிப்படை யில் அமைந்தவை என்பதைக் காண இயல்கின்ற தன்றே? ஆயினும், இவை வெறியாய் மாறுத நிலை யில் இவற்றின் பயனே நாட்டில் ஓரளவு சமுதாயத் தைத் தோற்றுவித்து வளர்த்தது. முதல் மனிதன் 'யான்' என்று தன்னையும், 'எனது' என்று மற்றப் பொருளையும் எண்ணுதிருந்திருப்பானையின், இந்த

விரிந்த உலகமும், சமுதாயமும், அதன் வழி வளர்ந்த பண்பாடு, கலை, நாகரிகம், இன்ன பிறவும் எங்ஙனம் அமையும் என்ற வினாவன்றி வேறு என்ன தோன்றும்? எனவே, அந்த முதல் மனிதன் சற்றுச் சிந்திக்கத் தொடங்கிய நாளில்—நான் யார்? என் 'மனைவியோ மக்களோ யாவர்?' என்ற வினாவை எழுப்பிய நாளில்—பண்பாடும் அவனை அறியாமலே அவனுடன் உருப்பெற்று உள்ளத்து மெல்ல வளரத் தொடங்கிவிட்டது.

இவ்வாறு எண்ணச் சூழலிற் சிக்கிய மனிதனுக்குப் பலபல உணர்வுகள் தோன்றுவது இயற்கை. 'நானும் அவளும் சேர்ந்து வாழ வேண்டாவா?' என்ற குடும்ப உணர்வு அவனுக்குத் தோன்றியிருக்கலாம். நாம் மேலே கண்டபடி சில விலங்குகளும் பறவைகளுங்கூட இக்கூட்டுக் குடும்ப வாழ்வை நடத்தியதை அவன் கண்டிருப்பான் அல்லனே! அப்போதுதான் அவன் தான் நாடோடியாய்த் திரிவது தவறு என்று உணர்ந்து நிலத்து ஓரிடத்திலிருந்து வாழக் கற்கத் தொடங்கினன். அப்படி ஓரிடத்தில் இருந்து வாழத் தொடங்கிய காலத்து—அவன் தனக்கும் தன் உற்றாருக்கும் உண்டான ஊறுகளைத் தடுத்து நிறுத்த நினைத்த காலத்து—அவனுக்குக் கூரிய கற்களும் முட்களும் எலும்புகளும் தக்க ஆயுதங்களாய் உதவியிருக்க வேண்டுமல்லவா? அந்தக் கால எல்லையைத்தான் வரலாற்றாசிரியர்கள் **'பழைய கற்காலம்'** எனக் குறிப்பிடுவார்கள். அந்தப் பழைய கற்காலம் கணக்கிடப்பெறும் நாட்களுக்கு முன்பே பலப்பல ஆயிரமாயிரமாண்டுகள் அந்த மனிதன் வாழ்ந்திருந்தான் என்பதை யாரும் மறுக்க இயலாது. எனினும்

அக்காலத்தைப் பற்றியெல்லாம் வரலாற்று வழி ஆராய நமக்கு யாதொரு வாய்ப்பும் கிட்டவில்லை யாதலால், வரலாற்று ஆய்வாளர்கள் அவற்றைப் பற்றிச் சிந்திப்பதில்லை. எனினும், அண்மையில் வெளி வந்த ஓர் ஆராய்ச்சியின்படி பழைய கற்காலத் துக்குமுன் ஓர் எலும்புக்காலம் இருந்திருக்கவேண்டு மென ஆராய்ச்சியாளர் முடிவு செய்துள்ளதைக் காண்கின்றோம். அங்கங்கே இறந்து மடிந்த பல் வேறு விலங்குகளின் கூரிய எலும்புகளே பழங்கால மனிதனுக்குப் பாதுகாவலாய் அமைந்திருந்த அந்த மிகப் பழைய காலத்தையே அறிஞர் 'எலும்புக் காலம்' என்று சொல்லுவதை அறிகின்றோம்.

இவ்வாறு 'யான், எனது' என்ற பற்றோ, விருப் போ, ஆசையோ, அன்றி அன்போ உண்டான அந்த நாளிலேயே மனிதனுக்கு மாறுபாட்டு உணர்ச் சியும் உண்டாகியிருக்க வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. ஒருவன் தன்னையும் தனக்கு வேண்டியவரையும் காக்க வேண்டும் என்ற உணர்வில் தனக்குப் புறம்பான அத்தனையும் மாறுபட்டவை எனக் கொள்ளுதல் மரபுதானே? அத னாலேயே அன்றே மாறுபட்ட உணர்ச்சியும் தோன்றி விட்டது. இதைத்தான் சமயத் தலைவர் சிலர், 'என்று நீ அன்று நான்' என்று இறை உணர்வோடு மாறுபட்ட பைசாச உணர்வும் மிக பழங்காலம் முதற்கொண்டே இருந்து வருகின்றது எனக் காட்டுகின்றனர். எப் படியாயினும், 'தான்' என்றதுமே 'புறம்பு' என்ற ஒன்று உண்டாவது இயற்கையே. இந்த இரண் டையும் பகுத்துணர்ந்து தன்னை ஒம்பிப் பிறரையும் இவற்றுள் ஒம்பி, இன்றேல் வெறுத்தொதுக்காது

வாழப் பழகுவதே பண்பாடாகும். அந்த முதல் மனிதன் இந்தப் பண்பாட்டினை அறியான். எனவே, அவன் தனது என்பதை அறிந்தவுடன் மற்றவற்றை மாறு பாட்டுடன் நோக்கித் தன் வாழ்வைத் தனிமையில் வளர்த்துக்கொள்ள எண்ணற்ற திட்டங்களைத் தீட்டத் தொடங்கியிருக்க வேண்டும். அத்திட்டங் களின் அடிப்படைதான் உலக வளர்ச்சிக்கும் நாகரி கச் சமுதாயப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் காரண மாய் அமைந்தது.

கூட்டு வாழ்க்கையும் குடில் அமைப்பும்

கூடி வாழக் கற்றுக் கொண்ட மனிதன், 'குடில்' அமைக்கவும் தொடங்கிவிட்டான். அதற்கும் பல பறவைகளும் அவை கட்டிய கூடுகளுமே அவனுக்கு உதவி செய்தன எனக் கொள்ளல்பொருந்துவதாகும். தனக்கெனச் சிறு குடில் அமைக்கத் தொடங் கிய நாளே அவனது 'தனது' என்ற உறவின் எல் லையை விரிவாக்கிய காலம் எனல் பொருந்தும். குடில் அமைத்துக்கொள்வது தான் ஒருவனுலோ அன்றி உடன் வாழும் ஒருத்தியாலோ முடியாத ஒன்றுஎனக் கண்ட அவன், பிறர் உதவியை நாட முயன்றிருப் பான். அக்காலமே ஒருவருக்கொருவர் உதவ வேண் டும் என்ற பண்பாடும் உருவாகியிருக்க வேண்டும். இவ்வாறே குடும்பமும் சுற்றமும் பிறர் தொடர்பு களும் மனிதனுக்கு நாளுக்குநாள் உண்டான வர லாறே மனித வரலாற்றின் முதற்படியாகும்.

இனி, இக்குடில்கள் நிலைத்தனவாய் இரா என வும், தேவையான காலத்தில் தேவையான இடத்தில் அமைத்துக் கொள்ளும் வகையிலேயே இவை அமைந்

திருக்க] வேண்டும் எனவும் சிலர் கருதுவர். அக் கருத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. நெடுங் காலத்துக் குப் பின்னர், மனிதன் ஆற்றங்கரை நாகரிகங்கண்டு உழவுத் தொழிலை மேற்கொண்ட அக்காலத்திலே தான் முதன்முதல் நிலைத்த வாழ்வை மேற்கொண் டான் என்று எண்ண இடமிருக்கின்றபடியால், அதற்கு முன் அவன் கண்ட இடங்களில் உணவு தேடித் திரிந்த காலத்தில் குடிலையும் இடத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொண்டே சென்றான் எனல் பொருந்துவதாகும். இன்றும் முன்னேறாத இனத்தவர் சிலர் அவ்வாறு சிறு சிறு குடில்களைச் சுமந்துகொண்டே தங்குமிடந்தோறும் 'கூடாரம்' அமைத்துக்கொள்வதை நாம் காண இயல்கின்றதன்றே?

இனவுணர்வுகளும் பிரிவுகளும்

இவ்வாறு தமக்கும் தம்மைச் சேர்ந்தோர்க்கும் வாழ்வு தேடிய சிறு சிறு வீட்டு வாழ்வை உடைய மக்கள் பலப்பல ஆயிரமாயிரமாண்டுகள் அவ்வாறு வாழ்ந்து, பிறகு பலர் ஒன்று சேர்ந்து வாழக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் கூட்டுச் சமுதாயம் உருவாயிற்று என்று கொள்ளலாம். அந்தக் காலத்திலேதான் உலகில் பலப்பல இனங்களின் தோற்றமும் மாறுபாடுகளும் பிற வேற்றுமைகளும் உண்டாயின எனக் கொள்ளல் பொருந்தும். ஓரிடத்தில் வாழ்ந்த மக்கள், தங்கள் வாழ்வும் வளமும் பெருக்கவோ, அன்றிச் சாதாரண வாழ்வுக்கே போராடவோ மற்றோரிடத்திற்குச் சென்ற காலத்து, அந்தப் புது நிலத்தில் வாழ்ந்து வந்த மக்களோடு அவர்கள் கட்டாயம் மாறுபட்டே

யிருப்பார்கள். மொழியும் பிற மாற்றுக் காரணங்களும் இல்லாத அந்தக் காலத்தில் புதியவராய் வந்தவரைக் கருவி வெருவி மற்றவர் மருளுவதும் மாறுபட்டுப் போர் விளைப்பதும் இயற்கைதானே? இந்த நிலையிலேதான் மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர் வடமேற்குக் கணவாய்கள் வழியாக இந்தியாவுக்கு வந்தார்கள் எனக் காட்டுவர் வரலாற்றுராய்ச்சியாளர். பஞ்சாபு, சிந்து, பலுச்சிஸ்தானம் உட்படப் பரந்த பாரதநாடு முழுவதிலும் ஆரியர் வருகைக்குமுன் திராவிடர்களே எங்கும் பரவி வாழ்ந்தார்களென்றும், வாழ்வைப் பெருக்க வந்த ஆரியருக்கும் அவர்களுக்கும் அடிக்கடி போர் மூள, வந்தவர்கள் இருந்தவர்களை மெல்ல மெல்ல உள்ளே அனுப்பி விட்டார்களென்றும் வரலாற்று ஆசிரியர் விளக்குவர்.[1] இந்த உண்மைக்குச் சான்றுகளே சிந்து வெளி நாகரிகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பல பொருள்கள் அமைந்துள்ளன. இப்படியே உலகின் பல பாகங்களிலும் மொழியும் பிற நாகரிக இயல்புகளும் இல்லாத அந்தக் காலத்தில் பல இனத்தவர் தம்முள் மாறுபட்டு வலிமையால் வென்றவர் தம் வாழ்வைப் பெருக்கிக்கொண்டனர். இதுவே வரலாறு.

சிந்து வெளி நாகரிகம் ஓர் எடுத்துக்காட்டு. உலகெங்கணும் இந்த நிலையிலேயே மக்களினம் போராடி வாழக் கற்றுக் கொண்டது. இவ்வாறு உணவு தேடும் மக்களினம் எகிப்து, ஆர்ச்சிபிலாகோ. கிரிட்டு, மேர், இரான், சிரியா, சிறிய ஆசியா, இந்தியா, சீனு, துருக்கி, பலுச்சிஸ்தானம், பால்கன்

1. Early day life in Ancient Indian By Padmini Sengupta (P. 13.)

நாடுகள், கிரீஸ், இத்தாலி முதலிய நாடுகளில் வாழ்ந்தன எனக் காட்டுவர் திரு. பெரி என்பவர்.[1] இவையெலாம் பெரும்பாலும் பழங்கற்காலத்திலேதான் இவ்வாறு இடம் விட்டு இடம் மாறின என்பது அறிஞர் கருத்து. அக்காலத்துக்கு முன் மனிதவாழ்க்கை எப்படி எப்படி அமைந்ததென்பதே இதுவரை அறிய இயலாத ஒன்றாக அல்லவா அமைந்துள்ளது? இந்த இடமாற்றம் பல ஆயிரமாயிரமாண்டுகளாக நடைபெற்றிருக்க வேண்டும் என்பர். கி. மு. 3300ல் எகிப்திலிருந்து இத்தகைய ஓரினம் வெளியே சென்றதற்குச் சான்று உண்டு என அவர் காட்டுவர்.[2] இவை யெல்லாம் அவ்வந்நாட்டுப் பண்பாட்டு முறையின் அடிப்படையிலேயே ஆராயப்பெறுகின்றன. எனவே, மனிதன் நாடோடியாய் வாழ்ந்த அந்தப் பழங்காலத்திலேயே ஓரளவு பண்பாட்டின் வழி ஒழுகத் தொடங்கிவிட்டான் எனக் கொள்ளல் பொருந்தும். மற்றும் இந்த இனங்களின் பிரிவும் பல வேறுபாடுகளும் மொழிகள் தோன்றுத அந்தக் காலத்தில் உணர்வது எளிதல்லவே? அவை அனைத்தும் இப்பண்பாட்டின் அடிப்படையிலேதான் ஆராயப்பெற்றன. ஆரிய திராவிடப் பண்பாட்டின் அடிப்படைதானே சிந்து வெளியின் சிறப்பை உலகுக்கு உணர்த்திற்று? இப்படித்தான் அந்தச் சுற்றித்திரிந்த எழுத்தறியாத மக்கட்சமுதாயம் வாழ்ந்த காலத்தில் அவரவர் வாழ்வு, வளன், சுற்றுச் சார்பு, பிற வேறுபாடுகள், உள்ள வளர்ச்சி முதலியவை காரணமாகப் பலப்பல பண்பாட்டு நிலைக்களன்கள் உருவாகி வளர, அவை மக்களை வாழவைத்தன எனக் காண இயல்கின்றது.

---

1. The Growth of Civilization. by V. J. Perry B 39
2. Ibid P. 51.

ஆற்றங்கரை நாகரிகம்

இவ்வாறு நாகரிகமற்ற நாடோடி மக்கள் மெல்ல மெல்ல நாகரிக மக்களாய் மாறிய வரலாறே மனித வரலாற்றில் சிறந்த இடம் பெற்றுள்ளது. இந்த வரலாற்றைக் காண்பதற்குமுன் இவ்வாறு பல விடங்களில் சுற்றித்திரிந்த மக்கள் பின் எப்படி நிலை பெறலானார்கள் என்பதைக் காணல் நலம். அவ்வாறு காணும்போது மேலே கண்ட சில நாடுகளில் மட்டும் நெடுங்காலமாக மக்கள் வாழ்ந்தார்கள் எனக் காட்டக் காரணம் என்ன? அங்கே மட்டும் மக்கள் சமுதாயமாக வளரச் சூழ்நிலை எப்படி அமைந்துள்ளது என்பதையும் எண்ணிப் பார்க்கலாம். மேலே கண்ட நாடுகள் அனைத்தும்—இந்தியா உட்பட—மிகு பழங் காலத்திலிருந்தே சிறந்த மக்களினத்தைப் பெற்றுள்ளவை என வரலாற்றாசிரியர் கூறுவதன் கருத்தென்ன? சிறந்த மக்கள் என்பதை எப்படி அறுதியிடுவது? ஆம்! எண்ணிப் பார்த்தால் பண்பாட்டு வழியே வாழ்ந்தவர்களே சிறந்த மக்கள் என்பது தெளிவு. எனவே, இந்த நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மற்ற நாடோடி மக்களினும் பண்பட்டு வாழ்ந்தார்கள் எனக் கொள்ளவேண்டியுள்ளதன்றே! அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்கள் வாழ்க்கை ஆற்றங் கரையில் அமையக் காரணம் என்ன?

விலங்கொடு விலங்காய் அமைந்து வாழ்ந்த மனிதன், கூடாரம் அமைத்து, அதையும் தான் செல்லுமிடமெல்லாம் தூக்கிச் சென்று, நாடோடி வாழ்க்கை வாழ்ந்த காரணம் பலவிடங்களிலும் அவன் உணவினைத் தேடச் சென்றமையே என்பதை மேலே கண்டோம். பின்பு அவனே ஓரிடத்தில் நிலைத்து நின்று தனக்கு வேண்டிய உணவினைத் தானே உண்டாக்

கக் கற்றுக்கொண்டான். அவ்வாறு உண்டாக்கிய தொழிலே பயிர்த்தொழில் அல்லது வேளாண் தொழில் எனப் பெயர் பெற்றது. அத்தொழிலையும் அவன் பறவை முதலிய பிற உயிர்களைக் கண்டே கற்றுக் கொண்டான் என்பர் ஆய்வாளர். பல மரஞ்செடி கொடிகளின் விதைகள் எத்தனையோ வழிகளில் இடம்விட்டு இடம் மாறிப் பயிராகப் பறவைகளும் விலங்குகளும் உதவுகின்றன. 'காக்கை விரும்பும் கனி'யாகிய வேம்பு கண்ட இடங்களில் விதைப் பாரின்றியே முளைத்து வளர்வதை இன்றும் காண் கின்றோம். நாயுருவி போன்றவற்றின் விதைகளை, மனி தனே தன் உணர்வில்லாத நிலையிலேயே பலவிடங் களில் தோன்றி வளர உதவி செய்கின்றன். இப் படியே அந்த நாடோடி மனிதன் சுற்றித் திரியாது ஓரிடத்தில் நிலைத்துப் பயிரிடப் பழகிய நிலையும் அமைந்தது. நல்ல நீரும் குளிர்ச்சியும் கொண்ட ஆற் றுப் படுகைகளிலும் ஓரங்களிலும் நாடோடி மனிதன் தன்னை மறந்து பல நாள் வரை தங்கியிருப்பான். அது போது சில நாள்களுக்கு முன் ஒன்றுமில்லாத வெற்று நிலத்தில் புதுப் புதுப் பயிர்கள் முளைத்து வளர் வதைக் கண்டிருப்பான். பறவைகள் எங்கிருந்தோ உண்டு வந்து எச்சமிட்டவைகளிலிருந்து அவை தோன்றி யிருக்கலாம். பின்பு அவை வளர்ந்து முற்றிக் கதிர் விட்டுக் காய்த்திருக்கலாம். அக்கதிர்களைத் தனக்கு உணவாக்கிக்கொண்டிருப் பான் அந்த மனிதன். அதன் சுவையையும் வளத்தை யும் கண்டமனிதன் மெல்லப் பயிராக்கவும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஒரு சில நாள் தொடங்கி, பல மாதங்கள் வரையில் பயிராகும் பல்வகைப் பயிர்களை வகையறிந்து அவன் பயிரிட

அறியாதவனுய் இருந்தும், எண்ணற்ற செடி கொடிகளுக்கு இடையில் அவன் விரும்பிய சிறு பயிரையும் வினைவித்திருப்பான். இக்காலத் தைச் சிலர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்றும் கூறுவர். ஆழ்ந்து சிந்திப்பின், அவற்றின் எல்லையெல்லாம் கடந்து இன்னும் பல ஆயிரமாண்டு களுக்கு முன்பே மனிதன் பயிரிடக் கற்றுக்கொண் டான் என்று கூறுவது பொருந்தும். ஒரு சிலர் கூறு வது போல, ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவன் பயிரிடத் தெரிந்திருந்தான் எனக் கொள் வதில் தவறில்லை. எந்தக் காலமாயினும், அந்தப் பயிரிடத் தெரிந்த காலமே அவனது பண்பாடு நன்கு விளக்கமுறத் தொடங்கிய காலமெனக் கொள்ளல் வேண்டும்.

பயிர்த்தொழிலும் பண்பாடும்

இப்பயிர்த்தொழிலையும் பண்பாட்டையும் பல வகையில் இணைத்துக் கண்டிருக்கிறோம். உள்ளத் தைப் பண்படுத்துவது போலவே நிலத்தைப் பண் படுத்துவது உழவாகின்றது. அதனுலேயே நிலத்தைச் 'செய்' என்று தமிழில் வழங்குகிறார்கள். நன்முகப் பண்படுத்தப்பட்ட நிலம் 'நன்செய்' ஆகின்றது; அல்லாதது, 'புன்செய்' ஆகின்றது. அப்படி நன்மு கப் பண்பட்ட மனிதன் நல்லவனுகின்முன்; மற்றல்லா தார் யாரோ! நாம் கூற வேண்டா. ஆங்கிலத்திலும் 'Culture', 'Agriculture' என்னும் இரு சொற்கள் உளப் பண்பாட்டுக்கும் நிலப் பண்பாட்டுக்கும் அமைவ தைக் காணலாம். இவை பற்றிய விளக்கங்களைப் பின், பண்பாடு பற்றிக் காணும் போது நன்கு உணர்ந்துகொள்ளலாம். நாம் இங்கே நினைக்க

வேண்டுவது, ஆற்றங்கரையில் பயிரிடத் தொடங்கிய அந்தக் காலமே அவன் சமுதாயத்தைச் செம்மையாக உருவாக்கிக்கொள்ளத் தொடங்கிய நாள் என்பதுதான்.

ஒருவனுக்கு கண்டதைத் தின்று நாடோடியாய்த் தானே தன் குடும்பமோ வாழ்வதிலும் பயிர்த் தொழிலுக்குப் பலர் உதவி தேவைப்படும். தேவை மட்டுமன்று; ஒருவரை ஒருவர் உணர்ந்துகொள்ள வேண்டிய நிலையிலேதான் பயிர்த்தொழில் அமையும். அதில் ஒரு சிலர் சேர்ந்து ஒரே இடத்தில் பயிரிடத் தொடங்குகின்றார்களென்றால், அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாத நிலையில் ஒன்றும் செய்ய இயலாது. எனவே, உண்மையில் கூட்டு வாழ்வாகிய சமுதாய வாழ்வு ஆற்றங்கரை நாகரிகத்திலே தான் செம்மையுற்றது எனலாம். எத்தனையோ பேர் கூடிச் செயலாற்றுவதாலேதான் சமூகம் வளர முடியும் என்று நாம் முதலில் உதாரண வழியில் காட்டிய அந்த உண்மையை மனிதன் உணரத் தொடங்கிய நாள் பயிர்த்தொழில் தொடங்கிய நாளே. அந்நாள் சிறக்க என வாழ்த்தி மேலே செல்லலாம்.

தனி நலமும் பொது நலமும்

தனி ஒருவனுய் இருந்து, 'அவனும் அவளும்' ஆகிப் பின்பு குடும்பம் என்ற வீட்டுச் சமூகம் மெல்ல மெல்ல விரிவடைந்து, ஆற்றங்கரை நாகரிகத்தில் ஒரு சிறு கூட்டமாகிய சமூகம் என்னும் அளவுக்கு வளர்ந்து விட்டது. இந்தச் சமூகவளர்ச்சியைக் காட்டுவது, 'நாம், நாங்கள்' என்ற உணர்வு எண்ணிக்கையில் பெருகத் தொடங்கிய காலம். இந்தச் சமூக அமைப்பு இந்த வகையில் உருவாக அடிப்படைக் காரணம்

ஒருவருக்கொருவர் உதவுதலே என்பதைக் கண்டோ மல்லவா? அந்த உதவும் உணர்வே சமூகத்தை உரு வாக்கியது. அந்த உணர்வே ஏதோ ஒரு பொது நலத்தின் அடிப்படையிலே தானே உண்டாகியிருக்க வேண்டும்? 'நான் வாழவேண்டும்,' என்ற ஒருமை எண்ணம் நீங்கி, 'நாம் அல்லது நாங்கள் வாழவேண் டும்' என்ற பன்மை உணர்வூட்டிய அந்தப் பொது நலந்தான் சமூகத்தை உருவாக்கிற்று. அந்தப்பொது நலம் மெல்ல வீட்டில் விரிந்து, ஆற்றங்கரை நாகரிகத் தின்போது ஒரு சிறு கூட்டத்தாரிடை மட்டும் பரவி வந்தது. அந்தச் சிறு கரையில் வாழும் ஒரு கூட்டம்-சுமார் நூறு அல்லது இருநூறு பேர் மட்டும்-வாழ வேண்டும் என்ற உணர்வே அச்சமூகத்தைக் கட்டி ஆண்டது. அதனாலேதான் தன்னை ஒறுத்து மற்ற வர் வாழ்க்கைக்குப் பாடு படும் பண்பாடே சமூக நெறி என்பதை முதலிற் கண்டோம். ஆகவே, ஒரு பொது நலங்காரணமாகவே இந்த ஒருமைப்பாடு அமைந்தது. எங்காவது அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டாலோ, அல்லது அந்த இடத்தை யாராவது வேறு கூட்டத்தார் தாக்க வந்தாலோ, அனைவரும் 'நாம்' என்ற ஒரே போது உணர்வில் செயலாற்றி னர். இந்த உணர்வுதான் பின்பு 'இனம்' என்ற அடிப் படைக்குக் காரணமாயிற்று. ஆற்றங்கரையில் நிலத் திருந்தவராயினும், நாடோடிகளாய் ஊர்தோறும் அல் லது நாடுதோறும் சுற்றித்திரிந்தவராயினும், இந்த ஒருமை உணர்வே அவர் வாழ்வுக்கு அடிப்படையாய் அமைந்தது. ஆனால், இந்த உணர்வு விரிவடைய வாய்ப்பில்லாமல் பல காலம் நின்றுவிட்டது. இன்று நம் ஊர்களில் ஒரு தெருவில் இருக்கும் நாய்கள் மற் றொரு தெருவில் இருக்கும் நாய் தமது பக்கம் வரப்

பார்த்தால், வரவிடாது குரைத்து, சண்டையிட்டு, துரத்திவிடுவது போன்றே அன்று இனமாய்ப் பிரிந்த சிறு சிறு கூட்டத்தினர் ஒரு கூட்டம் மற்றொன்றிற் கலவாதபடி மாறுபட்டே வாழ்ந்து வந்தனர். இன்றும் எத்தனையோ வகையில் நாட்டு ஒற்றுமையும் உணர்ச்சி ஒற்றுமையும் உலக ஒற்றுமையும் பிற ஒற்றுமைகளும் வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்த போதுங்கூட வேற்றுமையே வளர்ந்து கொண்டு போவதை நம் நாட்டிலும் உலகிலும் காண்கின்றோமல்லவா? நாகரிகப் பண்பாடு நிறைந்துள்ள நம்மிடையிலேயே இத்தகைய மாருட்டங்கள் இருக்குமாயின், நாகரிக முதற்படியிற் கால் வைத்த அந்த முதல் இனக்குடும்பங்களுக்குப் பரந்த நோக்கம் எப்படி அமையுமென்று எதிர்பார்க்க இயலும்? எனவே, ஒரு பக்கத்தில் சிறு சிறு கூட்டங்களாகிய இனம் பற்றிய சமுதாய உணர்ச்சி வளர்ந்தபோதிலும் மற்றொருபுறம் அவற்றின் வேறுபாட்டு உணர்ச்சியும் வளரலாயிற்று.

வீட்டுத் தலைமையும் நாட்டுத் தலைமையும்

இவ்வாறு வளர்ந்த இனம் பின்பு என்னென்ன மாறுதல் பெற்றது எனபதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். வீடு என்ற குடும்பம் அமைந்த போதே, அமைப்பில் இந்த முறை உண்டாகியிருக்கவேண்டும். தமிழ்நாட்டு அகப்பொருள் இலக்கணங்களில் 'தலைவன் தலைவி' என்னும் இருவரைக் காண்கின்றோம். நாடகங்களில் நாடகத் தலைவன், தலைவி ('Hero' and 'Heroin') என்னும் இருவரைக் காண்கின்றோம். இவர்களே வாழ்விலோ, அன்றி இலக்கியத்திலோ, அன்றி நாடகத்திலோ முக்கிய பாகங்களைப் பெறுகின்றார்கள்.

ஆம்! வீட்டு வாழ்விலும் இதே தலைவன் தலைவி என்ற பகுப்பு அல்லது பிரிவு இருந்திருக்க வேண்டும். நாம் மேலே கண்ட கருவுண்டாகக் காரணமே அறியாது கண்டபடி சுற்றித்திரிந்த முற்காலத்தே இந்தப் பகுப்பு இருந்திராது என்றாலும், குடும்பமும் இனமும் உண்டான பின்னுளில் தலைவன் தலைவியர் வாழ்வும் பகுப்பும் இல்லை என்று சொல்ல முடியாது. குடும்பத்தில் தலைவன் ஆணை செலுத்த, மற்றவர் அடங்கியிருந்தனர் என்று சொல்ல வழியில்லை. குடும்பமாய் வாழ்ந்த சிலர் சில பொது நலன்களை ஆராயவும், அவற்றை முன் நோக்கி இனத்தில் பிறருடன் கலந்து பேசவும் தம்முள் ஒருவனைத் தலைவனுக்கியிருப்பர். ஆம்! இன்றைய சமுதாயத்திலுள்ள தேர்வுமுறை-கோடிக்கணக்காகச் செலவிடக் கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கும் இந்தத் தேர்வுமுறை—அந்தத் தொடக்க நாளில் இப்படி வீட்டுக்கு வீடு அமைதியாகத் தொடங்கிய ஒன்றே என உணர்தல் வேண்டும்.

நெருங்கிப்பழகிய பழக்கத்தால் இந்தத் தலைவர் முறை குடும்பத்துள் உண்டாயிற்று. இதுவும் ஒருவனும் ஒருத்தியும் பிணைந்து மக்களுடன் வாழ்ந்த குடும்ப நாளிலேயேதான் உருவாயிற்று. தலைவன் என்று 'அவன்' அமைந்துவிட்டாலும், அவன் தன் குடும்பத்திலுள்ள மற்றவரை அடக்கியே தன் அதிகாரத்தைக் காட்டும் வகையில் ஆட்சி செலுத்தினான் எனக் கொள்ள முடியாது. வீட்டில் தலைவியே பெரும்பாலும் உரிமை பெற்றிருந்தாள். இந்த உண்மை தமிழில் வழங்கும் சொற்களாலேயே தெளிவுறும். தலைவனை வீட்டுக் குடைவனுகக் கொண்டாலும், அவனை 'இல்லான்' என்று சொல்லுவதில்லை. அச்சொல் ஒன்றுமில்லாத வறியவனையே குறிக்கும். ஆனால், 'இல்லாள்'

என்ற சொல் மனைக்கு உரியவன் என்ற பொருளிலே வழங்குகிறது. அவள் வீட்டில் இருந்தால் பிற எல்லாப் பொருளும் அமையும் என்ற கருத்திலேயே ஔவையார், 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை,' என்று பாடியுள்ளார். எனவே, குடும்பத் தலைவன் தலைவியர் என்ற சிறு பிரிவுகள் அக்குடும்பமும் அதைச் சார்ந்த இனமும் செம்மையாகச் செல்ல அவர்களுக்குள் ஏற்பாடு செய்துகொண்ட ஒரு சிறு பிரிவேயாகும். ஆனால், இந்தப் பிரிவே பிற்காலத்தில் பலவகையில் பெருகி, இனத்துடன் இனத்தையும் நாடுகளுடன் நாடுகளையும் போரிடுமளவிற்குத் தூண்டிவிட்டதோ என எண்ண வேண்டியுள்ளது.

இனத்தில் இத்தகைய ஒரு தலைவன் என்ற நிலையும் உண்டாயிற்று. ஓரூரிலோ அல்லது நாடோடிக் கும்பலிலோ நூறு குடும்பங்களிருப்பின், அவற்றை நடத்திச் செல்ல அவர்களுக்குள் ஒரு தலைவன் தேவையாய் இருந்தான். அந்த அடிப்படையிலே ஒவ்வோர் இனத்துக்கும் ஒவ்வொரு தலைவன் உண்டானான். அத்தலைவனை அவர்கள் எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்குரிய ஆதாரங்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. குடவோலையும் (Ballot Box) அதன் அலுவலர்களும் இல்லை என்றாலும், அப்பழங்கால இனத்தவர் தத்தம் தலைவரை ஒரு வரையறுத்த எல்லையில் நின்று தேர்ந்தெடுத்தார்கள் எனக் கொள்ளுவது பொருந்துவதாகும்.

கடவுள் உணர்வு

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவனும் அவனது இனமும் ஓரிடத்தில் தங்கியோ அல்லது பல விடங்களுக்குச் சென்றோ தம் வாழ்வை நடத்திக்

கொண்டு வந்த அந்த நாளிலே அவர்தம் வாழ்க்கை முறையில் மற்றொரு மாறுதல் புகுந்தது எனக்கொள்ளல் பொருந்துவதாகும். அவர்கள் தாங்கள் உணவு பெற முயன்றபோதோ, மற்றவரை வெல்ல நினைத்த போதோ தம் முயற்சியில் சில சமயங்களில் தோல்வி கண்டிருப்பார்கள். அவர்கள் பயிரிட்ட பயிர் வகைகளை வெள்ளம் பெருக்கெடுத்து அடித்துச் சென்றிருக்கும். அல்லது மழையே பெய்யாது, பயிர்கள் வாடிக் கெட்டிருக்கும். தாங்கள் பழக்கி வைத்திருந்த வீட்டு மிருகங்களாகிய ஆடுமாடுகளுக்குப் பலவித நோய்கள் வந்திருக்கும். ஏன்? அவர்களுள்ளேயே பலர் பல கொள்ளை நோய்களால் மடிந்திருப்பர். அக்காலத்திலெல்லாம் சிந்திக்கக் கற்றுக்கொண்ட அவர்தம் உணர்வுகள் சிந்திக்கத் தொடங்கியிருக்கும். அச் சிந்தனைகளின் பயனே கடவுள் உணர்வு எனத்தகும். ஆனால், அந்த முதல் உணர்வு அச்சம் காரணமாகவே உண்டாயிற்று என்பது பொருந்தும். இன்றும் பலர் அச்சம் காரணமாகவே—ஏதாவது கொடுமை நேர்ந்து விட்டால் என் செய்வது என்று பயந்தே—பல வகையில் வழிபாடாற்றுவதைக் காண்கின்றோம். கிராமங்களில் உள்ள மாரி, பிடாரி போன்ற தெய்வங்கள் இந்த நிலையில் உண்டானவைகளே. அவற்றின் வழிபாட்டு முறைகளும் பிறவும் இன்றும் அஞ்சத்தக்க நிலையில் உள்ளன. அரசாங்கம் சட்டம் செய்து தடுத்த காரணத்தினாலேயே சில ஆண்டுகளாக இக் கோயில்களில் உயிர்ப்பலி நிறுத்தப்பெற்றுள்ளது. எனவே, பழைய வழிபாட்டுமுறை அச்சத்தால் உண்டானதே. இடிக்கும் இடியையும், காயும் சூரியனையும், தகிக்கும் நெருப்பையும், பொங்கும் கடலையும் தெய்வங்களாக அஞ்சி அஞ்சி வழிபட்டார்கள். இவற்றுள்

சில சில அவ்வவ்வினத்தன்மைக்கு ஏற்ப இன்றளவும் வாழ்கின்றன. 'அச்சமே கீழ்களது ஆசாரம்,' என்ற திருவள்ளுவர் கூற்றுப்படி, 'சிறந்த செம்மைப் பண்பாடு இது' என்று அறியாத கீழ்மக்களாகிய அந்த முன்னைய இனத்தவர்கள் அச்சத்தால் வழிபாடாகிய ஆசாரத்தை மேற்கொண்டார்கள். அப்பர் அடிகளார் முன்னைய அச்சவழிபாட்டையும் பின்னைய அன்பு வழிபாட்டையும் இணைத்து,

அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும்
நெஞ்சம் ; வாழி ; நினை ;

என்று மனத்துக்குச் சமய உணர்வை ஊட்டுகின்றார். ஒரு சிலர், இந்தத் தெய்வங்கள் தம் ஏவலால் மாற்றாரை அழிக்கவும் வல்லன என எண்ணினர். அதர்வண வேதத்தில் இத்தகைய குறிப்புக்களைக் காணமுடிகின்றது. அக்காலத்தவர் மரம் முதலியவற்றையும் ஊறு செய்யுமெனப் பாம்பு முதலியவற்றையும் கூட வணங்கினர். எனவே, மனித சமுதாயவரலாற்றில் சமயம் அல்லது வழிபாடு தோன்றியது ஒரு சிறந்த கட்டளைக் கல் எனக் கொள்ளல் பொருந்தும். தனக்குமேல் உள்ள ஒரு பொருள்—அது எது வாயினும்—தான் தவறு செய்தால் தண்டிக்கும் என்ற உணர்வு தோன்றியதால், அந்த மனிதன் ஓரளவு திருந்திய வாழ்வு பெற்றிருப்பனல்லவா? இந்த உணர்வு நிலை இன்றும் பல வகைகளில் வளர்ந்தும் உறழ்ந்தும் திரிந்தும் மாறியும் வாழ்வதை அறிகிறோமல்லவா?

நாடோடி வாழ்க்கை

இவ்வாறு குடும்பமும் இனமும் வளர்ந்த அந்தச் சமுதாய வாழ்க்கையிலேதான் சமய உணர்வு இடம்

பெறலாயிற்று. இக்காலத்துக்குப் பின்னர்ப் பல நூற்றாண்டுகள் கழித்தே மொழி உணர்வும் பிற கலை உணர்வுகளும் சமுதாயத்தில் மெல்ல மெல்ல உண்டாயின. இந்திய நாட்டு ஆராய்ச்சியின்படி சிந்து வெளி நாகரிக அகழ்ந்தெடுப்பால் இன்றைக்கு ஐயாயிரமாண்டுகளுக்குமுன்பே அங்கே மக்கள் அச்சத்தால் மட்டுமன்றி, அன்பாலும் கடவுளை வழிபட்டார்கள் என்ற உண்மையினையும் பல்வேறு வழிபாடுகள் இருந்தன என்பதையும், மொழியும் அங்கே இருந்த நிலையையும், பல்வேறு கலைகள் நலமுற ஓங்கி நல்ல நாகரிக நாடாய் அது விளங்கியிருந்ததையும் நாம் அறிகிறோம். அந்த இனத்தவரே அக்காலத்தில் குமரி முதல் இமயம் வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட இனத்தவர் என்று வரலாற்றாளர் கூறுகின்றனர். எனினும், ஆற்றின் மாற்றத்தால் அவ்வூர்கள் நிலை குலைந்தன. அக்காலத்துக்குப் பின் சுமார் ஓராயிரமாண்டுகள் கழித்தே மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் இந்தியாவில் புகுந்தார்கள் என்பது உண்மையான வரலாற்றுச் செய்தி. இந்த உண்மைகளையெல்லாம் ஆசிரியர் பலர் நன்கு விளக்குகின்றனர்.[1] ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே இங்கே சிறந்த நாகரிமிக்க திராவிட இனம் நாடுமுழுவதும் சிறக்க வாழ்ந்திருந்தது எனக் காட்டுவர். இப்படியே எகிப்து, சிறிய ஆசியா, கிரீசு, இத்தாலி, சீனு முதலிய நாடுகளிலும்மிகு பழங்காலத்திலேயே நல்ல பண்பட்ட இனத்தவர் வாழ்ந்து வந்தனர் என்பதைக் காண்கிறோம். தென்னமெரிக்காவிலும் இத்தகைய நிலை நமக்கு இன்று புலனாகின்றது.[2] எனவே, உலகெங்கணும் பல்வேறு

1. Early day life in Ancient India—by Sengupta.
2. PERU & MEXICO.

இனங்கள் தோன்றின என்றாலும், அவை அனைத்தும் ஒரே சமயத்தில் உண்டாயின என்றோ, ஒரே சமயத்தில் குடும்பமாகவோ இனமாகவோ வாழத் தொடங்கின என்றோ, ஒரே சமயத்தில் தத்தம் மொழி, கலை, நாகரிகம், பண்பாடு ஆகிய எல்லாவற்றையும் கண்டு கொண்டன என்றோ கூற இயலாது. இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்திலும், உரிமை பெற்றுப் பதினைந்து ஆண்டுகள் கழிந்த பின்பும், அரசாங்கம் எத்தனையோ வகையில் உதவிகளை வாரி வாரி வழங்கிய பின்பும் ஓர் அடியும் முன்னேறுத பல இனங்களை நம் இந்திய நாட்டில் நாம் காணவில்லையா? எனவே, 'இனம்' என்று உருவாகிய சமுதாயம் ஒரே நிலையில் ஒரே காலத்தில் உலகெங்கணும் உண்டாயிற்று என்று கொள்ள இயலாது. அவற்றுள் தொன்மையான பண்பட்ட இனங்களில் சில. அவற்றுள்ஒன்றே இன்று தமிழர் தம் இனம் எனக் கொள்ளும் திராவிட இனம். இந்த இனத்தில் மக்கள் உயர்ந்த நாகரிக வாழ்வையும் பண்பாட்டையும் நிலைக்களனுகக் கொண்டு வாழ்ந்தார்கள் எனக் காட்டும் வரலாற்றாளர்கள்; அதே காலத்தில் நாட்டில் வந்த பிற இனத்தவரையும், உலகில் வேறு சில பாகங்களில் வாழ்ந்த சில இனத்தவரையும் அவ்வளவு உயர்த்திக் காட்டமுடியவில்லை.

வேறுபாடும் வளர்ந்தது

எனவே, இனச் சமுதாயம் காலத்துக்கும் இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப, பல்வேறு வகையில் தோன்றி வளர்ந்தது என்பது பொருந்தும். இனி இந்த இனச் சமுதாயத்தில் சாதிப் பகுப்புக்களும் பிற வேறுபாடுகளும் தோன்றியதையும் எண்ணல் அவசியமாகும்.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்; சிறப்போவ்வா
செய் தொழில் வேற்றுமை யான்."

என்று திருவள்ளுவர் உயிரினத்தில் அமைந்துள்ள பாகுபாடுகளைச் சொன்னார். பிறப்பினாலே சாதிப்பாகுபாடு கற்பித்துக்கொண்டு, அதனால் இல்லாத மாறுபாடுகளையெல்லாம் உண்டாக்கிக்கொண்டு, அச்சேற்றில் சிக்கி, வெளி வர வழி தெரியாது வருந்திக் கொண்டிருக்கும் நமக்கு இந்தக் குறளை எண்ணிப் பார்க்கக்கூட நேரமில்லை. பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்தல் தவறு என்று அறிஞர் பலரும் எல்லா மொழிகளிலும் சொல்லிக்கொண்டு வருகின்றனர். எனினும், இந்த மொழிகள் தோன்றி வளர்வதன் முன்பே சிறப்பொவ்வா வேறுபாடுகள் மனித சமுதாயத்தில் இருந்து மெல்லச் சாதிப்பாகுபாடாக மாறி விட்டன எனக் கொள்ள இடமிருக்கிறது. பிறப்பால் வேறுபாட்டினை வேறு எந்த உயிரினமும் வளர்க்காத வாழ்வைக் காண்கின்றோம். மாடுகளில்—ஆடுகளில்—பூனைகளில்—நாய்களில்—இன்னபிற உயிர்களில் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்துப் போரிடும் கொடுமை இல்லையே! அவற்றை வளர்க்கும் மனிதனுடைய பண்பு, சூழல், வாழ்க்கை வசதி முதலியவற்றின் அடிப்படையில் வேண்டுமானால் சிற்சில மாறுபாடுகளைப் புறத்தில் காணலாம். ஆனால், அவற்றை அடிப்படையாகக் கொண்டு அவை சாதியை அமைத்து மாறுபாடு கொள்வதை நம்மால் காண இயலவில்லையே! ஆனால், அன்பு வழியில் தன்னை என்றும் பாதுகாத்துக்கொண்டு செல்ல வேண்டிய மனிதன், எத்தனை அன்புநல நூல்களும் கதைகளும் உபதேசங்களும் காலந்தோறும் நல்லவர்கள் எழுதிவைத்தாலும், அத்

தனையும் படித்துக்கொண்டே, மற்றவர்களுக்கு உபதேசம் செய்துகொண்டே, சாதியை வளர்த்து வருவதைக் காண்கிறோம். நம் நாட்டில் இராமாயணத்தைப் படிப்பவர் எத்தனை பேர்! பக்தியோடு பாராயணஞ் செய்வார் எத்தனைபேர்! இராமனைப் பிணித்த அன்பும் பாசமும் குகனை—சுக்கவனை—ஏன்? விரோதியாகிய விடணனை உடன் பிறந்தவர்களாக்கிவிடவில்லையா? அவற்றைத்தான் கம்பர் எத்தனை விரிவாக எடுத்துரைக்கின்றார். அத்தனைப் பாடல்களையும் படித்தும் பேசியும் அதே மனித இனத்தில் வேறுபாடு கற்பித்துக் கொண்டுதானே நாம் வாழ்கின்றோம்? 'இது இனி என்றுமே நீங்காதோ!' என்று நல்லவர் உள்ளம் வாடக் கூடிய வகையிலேதானே இது வளர்ந்துகொண்டுவருகின்றது? எது எப்படியாயினும், சமுதாயத்தில் இந்தச் சாதி உண்டான நாள் ஒரு பொல்லாத நாளேயாகும்.

சாதி எப்படி உண்டாயிற்று? வரலாற்றுசிரியர் கண்ட வகை ஒன்றுண்டு. ஆரியர் வடவிந்தியாவில் தங்கிய காலத்தில் ஓரளவு சமயம் மொழி ஆட்சிமுறை அனைத்துமே தெளிவு பெற்றுவிட்டன என்பர். அக்காலத்தில் இனமும் விரிவடைந்து கட்டுக்கடங்காத நிலை உண்டாகியிருக்கலாம். குடும்பத் தலைவனுய்த் தோன்றிய தலைவன் இனத் தலைவனுயப் பின் நாட்டுத் தலைவனுகும் நிலைக்குச் சமுதாயம் வளர்ச்சி அடைந்துவிட்டது. அப்படியே அஞ்சியும் அன்புகொண்டும் தோன்றிய வழிபாடு, சமயம் எனப்பெயர் கொண்டு சிறப்பொடு பூசனை செய்ய வேண்டிய தேவையை உண்டாக்கிவிட்டது. வயல் வளம், பெருகும் மக்களினத்துக்கு ஏற்பப் பெருகுமாறு இனப் பணி விரிவடைய

வேண்டிய நிலை உண்டாயிற்று ; அவ்வாறு விளைந்த பொருளையும் பிற தேவைகளையும் தேடிச் சேர்த்து மக்களுக்குப் பங்கிடவேண்டிய தேவையும் உண்டாயிற்று. இவற்றின் அடிப்படையிலேயே அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவினை அவரவர் செய்தொழில் வேற்றுமையால் உண்டாக்கினர். அவரவருக்கு இட்ட பணியை ஒவ்வொரு பிரிவினரும் திறம்படச் செய்திருப்பர். அதனாலேயே சமுதாயம் சிறக்க வளர்ந்தது. ஆனால், அந்தப் பிரிவே பின்னர் சாதிகளாகவும் நான்கு வருணங்களாகவும் அமைந்து, அவ்வப்பிரிவில் பிறப்பவர் தனித்தனி சாதியர் ஆக்கப்பெற்ற கொடுமை வளர்ந்துவிட்டது. இந்த நிலை மக்கட்சமுதாயம் வேண்டா நிலையிலேயே தேவையாலோ அன்றி வேறு காரணத்தாலோ, எப்படியோ கால்கொண்டுவிட்டது. எனினும், இது சமுதாயத்தை அரிக்கும் புற்றுநோய் என்பதை அறிந்து, உண்மையில் சமுதாயத்தை வாழ வைக்க நினைக்கும் ஒவ்வொருவரும் இந்த வேறுபாட்டை நீக்கச் செய்யும் வழியெல்லாம் பாடு பட வேண்டுமென்பதை உணரல் வேண்டும். இது வரையில் நாம் கண்ட வளரும் சமுதாயம் வரலாற்றுக்கு முற்பட்ட வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதேயாகும். வரலாற்றுக் கால எல்லையில் இச்சமுதாயம் பெற்ற எண்ணற்ற மாற்றங்களை நன்கு அறியும் நாமும் பிற துறைகளில் இச்சமுதாய வளர்ச்சியைக் கண்ட பிறகு தேவையாயின், வரலாற்று எல்லையில் சமுதாயம் பெற்ற மாற்றங்களை ஓரளவு காணலாம். இந்தச் சமுதாயம்—தோன்றிய நாள் இன்னதென வரையறுக்க இயலாத நிலையில் வாழும் சமுதாயம்-மனிதனுடைய ஆராய்ச்சி

எல்லையாகிய வரலாற்று எல்லையில் - தெளிந்த வரலாற்று எல்லையில் - கால்வைப்பதன் முன்பே தன்னைப் பலவகையில் நன்கு நிலை பெறச் செய்துகொண்டது. வரலாற்று எல்லைக்கு முன்பே சமுதாயம் பல இனங்களாகவே பிரிந்துவிட்டது. அவற்றை நாட்டு அடிப்படையிலும் பிரித்துக் காண்கின்றனர் அறிஞர். ஒன்றிய இந்தியா என்று உணரும் நம் நாட்டில் உள்ள பல்வேறு இனங்களை இணைக்க என்னென்ன வகையில் பாடுபட்டாலும் முடியாது, வேறுபாடுகள் வளர்வதை உணர்கின்றோம். இதே நிலையிலே உலகெங்கணும் வரலாற்று எல்லையில் வளர்ந்த சமுதாயத்தின் கதையையும் காண்கின்றோம்.

மாறுபாட்டுக்கிடையில் மனநிறைவு

இனப் போராட்டம் அல்லது வர்க்கப் போராட்டம் என்ற ஒன்றின் பேரால் நாட்டிலும் உலகிலும் எத்தனை எத்தனை வேறுபாட்டு உணர்ச்சிகளைக் காண்கின்றோம்! அண்மையில் உண்டான உலகப்போர் 'ஜெர்மானியர் ஆளப்பிறந்தவர்.' என்று ஊட்டப் பெற்ற இன உணர்ச்சி அடிப்படையிலேயே உண்டாயிற்று என்பதை யாரே மறுக்க வல்லார்! இப்படியே ஓரினத்துக்கும் மற்றோர் இனத்துக்கும் உண்டான போர்கள் எண்ணில. மொழியின் அடிப்படையில் உண்டான போர்களுக்கும் எல்லை உண்டா? இந்தியா உரிமை பெற்று இவ்வளவு காலமான பிறகும் இன்னும் அந்த மொழி உரிமைப் போராட்டம் முடிந்த பாடில்லையே! அதற்குப் பதில் மொழி வளர்த்த மாறுபாடுகளால் ஆயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப் பெறுவதையும், மொழிவழி மாநிலப் பிரிவால் பிற நலங்கள் தடுக்கப்படுவதையும் இன்ன பிற

கொடுமைகளையும் காண்கிறோம்! சமய மாறுபாட்டால் உண்டான போர்களை மறக்க இயலுமா? கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றாண்டுகளில் மணிமேகலையில் காணும் சமயவாதங்களும், ஏழாம் நூற்றாண்டின் சமயப் போராட்டங்களும் தமிழ் நாடு நன்கறிந்தவை. மத்திய ஆசியாவில் இடைக்காலத்தில் சமய அடிப்படையில் நடந்த போர்கள் எத்தனை! சமய அடிப்படையில் அரசாங்கங்களையே அடக்கி ஆளவும் கவிழ்க்கவும் செய்யப்பட்ட சதிகள் எத்தனை, எத்தனை! ஒரு நாடே—பரந்த பாரதமே—இந்தச் சமயக் காழ்ப்பும் போராட்டமும் அடிப்படையாக நிற்கவன்றோ பிரிந்தது? சமய வெறி நாட்டில் செய்த கொடுமைகளை இன்னும் சமுதாயம் மறந்துவிடவில்லையே!

சாதாரண வாழ்வின் அடிப்படைகளாகிய உணவு, உடை, பழக்க வழக்கங்கள் இவற்றால் நாட்டிலும் உலகிலும் உண்டாகும் மாறுட்டங்களும் போராட்டங்களும் எண்ணற்றவைஎனக் காணமுடிகின்றதன்றோ! இன்று கட்சியின் பேரால் நாட்டுச் சமுதாயம் நலிவுறுவதைக் காண மனம் வெதும்பும் நல்லவர் நாட்டில் இல்லையா? தந்தையையும் மகனையும் பிரிக்கும்—கணவனையும் மனைவியையும் பிரிக்கும்—அண்ணனையும் தம்பியையும் பிரிக்கும் கட்சி வேறுபாடுகள் நாட்டில் எத்தனை! இவைகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பதைவிட, எண்ணாது அமைதியாக இருத்தலே நல்லது என எண்ணத்தோன்றும். எனினும், சமுதாய வாழ்வை எண்ணி அறுதியிட உலக மொழிகளெல்லாம் முனையும் போது நாம் மட்டும் வாளாவிருத்தல் முறையல்லவே! இத்தனை மாறுபாட்டுக்கிடையிலும் ஒரே ஆறுதல் நமக்கு உண்டு.

எத்தனையோ மாறுட்டங்கள் இருப்பினும், 'பண்புடை யார் பட்டுண் டுலகம்' என்ற வள்ளுவர் குறளுக்கு ஏற்பச் சமுதாயத்தில் ஒரு சிலராவது நல்லவர் வாழ்ந்து இச்சமுதாயத்தை வாழவைக்கின்றனர் என் பதை எண்ண ஆறுதல் பிறக்கிறது. ஏட்டிலாவது குறள் வாழ்கிறது; ஆகவே, அது ஒரு நாளில் சமுதாயத்தை இக்கொடுமைகளிலிருந்து நீக்கி வாழ வைக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. இச்சமு தாயம் வரலாற்றுக்குமுன் எவ்வெவ்வாறு தெளிவ டைந்து வளர்ந்து இன்றைய நிலையை எய்திற்று என்பதை இனித் தொடர்ந்து காணலாம்.

III. சமூக அமைப்புக்கள்

குழுக்களின் பெருக்கம்—பதவிப் போட்டி — அடிப்படைச் சமூகம் குடும்பமே—ஊரும் உலகமும்—ஆணும் பெண்ணும்—ஊர்ச் சபைகள்—குழுக்களின் அடிப்படை உணர்வு—பெரும்பான்மையும் சிறுபான்மையும்—சட்ட திட்டங்கள்—கட்டுப்பாடுகள்—ஏற்றத் தாழ்வு—பணிமனைகளில் பாகுபாடு—ஒன்றிய உணர்வு வளருமா?

குழுக்களின் பெருக்கம்

இருநூறு கோடிக்குமேல் இன்று மக்கள் உலகத்தில் வாழ்கின்றார்கள். எல்லோரும் ஒன்றுக—ஒரே உணர்வோடு—'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்ற நல்ல உணர்வோடு வாழவேண்டும் என்று எல்லா நாட்டுத் தலைவர்களும் பேசுகின்றார்கள். ஆனால், அவ்வாறு வாழமுடிகின்றதா? உலகை விட்டு நம் பரந்த பாரத நாட்டுக்கு வருவோம். இது ஒரே நாடு என்று பேசப்பெறுகின்றது. எனினும், இதில் எத்தனை வகையில் என்னென்ன வேறுபாடுகள் வளர்வதைக் காண்கின்றோம்? ஏன் இந்த வேறுபாடு? இவ்வேறு

பாட்டு உணர்ச்சி இன்று நேற்றுத் தோன்றியதன்று. நாம் மேலே கண்டபடி மனிதன் சமுதாயமாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய அன்றே இந்த வேறுபாட்டு உணர்ச்சியும் வேர் விட்டுத் தளிர்க்கத் தொடங்கி விட்டது. பற்று அல்லது பாசம் காரணமாகவோ, கொள்கைகள் காரணமாகவோ, வேறு எத்தனையோ காரணங்களை முன்னிட்டோ இன்று நாட்டில் பல்லாயிரக் கணக்கான சபைகளும் குழுக்களும் அமைப்புக்களும் இருக்கின்றன. இவற்றின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தும் ஒரே தன்மையில் இருக்கலாம். உதாரணமாக, இனம்பற்றிய குழுக்களைஎடுத்துக்கொள்வோம். வேளாளர் சங்கம், வன்னியர் சங்கம், பிராமணர் சங்கம் போன்ற சாதிச் சங்கங்கள் இன்றும் நாட்டில் உள்ளன. அவற்றின் அமைப்பும் அடிப்படைக் கொள்கைகளும் அந்தந்த இனம் அல்லது மரபினை உயர்த்தப் பாடுபடவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அமைந்திருக்கலாம். என்றாலும், சமுதாயத்தை ஒத்து நோக்கி ஆராய்கின்றபோது இது போன்ற இனம் அல்லது சாதி பற்றிய சங்கங்கள் சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாகவே அமைகின்றன என்பது புலனாகும். ஒரு சிலர் இவ்வாறு தனித்தனி சமுதாயங்கள் கூட்டாக வளர்ந்தால், பிறகு பெரிய சமுதாயத்துக்கு இவற்றால் நிரம்பப் பயனுண்டாகும் என வாதிடுவர். ஆனால், எண்ணிப் பார்க்கும்போது அவர் தம் வாதம் பொருந்தாது என்பது நன்கு புலனாகும். நம் உடல் உறுப்பில் ஒவ்வொன்றும் தனித்தனியாக வளர மருந்துண்டு பிறகு உடலையே வளரச் செய்வோம் என்று எந்த நல்ல மருத்துவராவது சொல்வாரா? மாறாக ஏதேனும் உடலுறுப்புக் கெட்டு அழுகி அல்லது பயனற்றுப் போனால், அதை உடனே

வெட்டி எறிந்துவிட்டு மற்றவற்றை வாழவைக்கும் மருத்துவ முறையைத்தான் காண முடிகின்றது. எனவே, மக்கட்சமுதாயத்தில் சாதியாலும் சமயத்தாலும் நீதியாலும் நிறத்தாலும் இல்லாத வேறுபாடுகளையெல்லாம் கற்பித்துக்கொண்டு தனித்தனியாக அவ்வவற்றை வளர்ப்பதாகக் கூறுவது ஒப்பற்ற ஒரே மனித சமுதாயத்துக்கு அவ்வளவு நல்லதாகாது என்பதுதான் பல அறிஞர்களுடைய கருத்தாயுள்ளது. ஆயினும், சமுதாயம் உருவான அந்தத் தொடக்க நாளிலேயே இந்த வேறுபாடுகளும் குழு அமைப்புக்களும் உண்டாகிவிட்டன. அதன் காரணத்தையும் ஓரளவு முன்னரே கண்டோம். ஓர் இடத்தில் நிலத்தோ, அன்றிக் கூடிப் பல விடங்களில் திரிந்தோ வந்த ஓர் இனத்தவர், தம் கொள்கை அல்லது வாழ்க்கை நெறி அளவிலே ஒரே குழுவாக எண்ணி மற்றக் குழுவினரைக் கண்டால் மாறுபட்டுப் போர் விளைத்துத் தத்தம் வாழ்வை நிலை நிறுத்திக்கொள்ள முயன்றிருப்பர். காலம் செல்லச் செல்ல அந்த ஒவ்வொரு கூட்டத்திலேயும் பலப்பல பிரிவுகள் தோன்றியிருக்கலாம். குழுத்தலைவர்களும் அவர்களது ஆணைவழி மற்றவர் இயங்க வேண்டும் என்ற சட்டதிட்டங்களும் உண்டான பிறகு, அந்தப் பதவிப் போட்டிக்காகக் குழுக்கள் பல உண்டாகியிருக்கலாம். அன்றி, ஒரே குழுவே தன் வாழ்வை வளம்படுத்திக்கொள்ளப் பல்வேறு வகைகளில் பிரிந்து பல்வேறு பகுதிகளுக்குச் சென்ற காரணத்தாலும் அத்தகைய குழுக்களின் கூட்டம் பெருகியிருக்கலாம். இவற்றுள் பின்னர்க் காணும் பிரிவால் அதிகக் கொடுமையில்லை. முன்னர்க் கண்ட அதிகாரம் பற்ற வேண்டும் என்ற அடிப்படையை வைத்துப் பிரியும் பிரிவே நாட்டையும்

உலகையும் அன்றும் பல வகையில் சீர் குலைத்தது. இன்றும் இக்கொடுமையை நம் நாட்டிலும் உலகின எல்லாப் பாகங்களிலும் நாம் காண்கின்ற கோலம் நமக்கு இவ்வுண்மையை உணர்த்திக் கொண்டே இருக்கின்றதல்லவா?

பதவிப் போட்டி

இன்று நம் நாட்டில் காங்கிரஸ் குழு ஆளுகின்றது. என்ருலும், அதன் அமைப்பில் பல பிரிவுகளும் பிளவு களும் உண்டாவதைக் காண்கின்ருேம். கொள்கைக் காகவும் மக்கள் நலன் பரப்புவதற்காகவும் அத்தகைய பிரிவுகள் தோன்றினுல், ஓரளவு நாடு வரவேற்கும். ஆனுல், யார் ஆளுவது என்ற ஆசையின் அடிப் படையிலே பதவி கிடைக்காதவர்களெல்லாம் குழு அமைப்பதும், மற்றவரைப்பகைப்பதும், கட்சிவிலகுவது மாகிய செயல்கள் நடைபெறும் போதுதான் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமன்றி, மற்றவர்களுக்கும் 'சமு தாயம் இப்படிச் சீர் கெடவேண்டுமா?' என்ற வருத்தம் உண்டாகின்றது. அப்படியே 'எதிர்க்கட்சிகள் இத்தனை நாட்டுக்கு வேண்டுமா?' என்ற வினு எழும்போது, ஒரு சிலர் தாம் தாம் தலைவர் எனப் பெயர் பெறுவதற் காகவே பல கட்சிகளை அமைக்கின்றனர் என்பது புலனுகும். அது நாட்டுக்கு எவ்வளவு கொடியது என்பது நினைக்க வேண்டியுள்ளது. மற்றும் பட்டம் பதவிகளுக்காகக் கட்சி விட்டுக் கட்சி மாறுவதும், கட்சிக் கொள்கைகளை விடுவதும், கட்சியைக் காட்டிக் கொடுப்பதுமாகிய பல கொடுமைகள் நிகழ்வதைக் காண்கின்ருேம். இவையெல்லாம் 'அகில மெல்லாம் கட்டி ஆளினும் கடல் மீதிலே ஆணை செலவே நினைவர்,' எனத் தாயுமானவர் 'ஆசைக்கோர் அள

வில்லா' நிலையைக் காட்டியது போன்று, 'ஆளவேண்டும்' என்ற ஆசையால் உண்டான கேடுகளாகும். மக்களாட்சியை அமைத்துத் தேர்தல் முறை வைத்து அடிக்கடி மாறுதல் உண்டாக்கிக்கொண்டிருக்கும் இன்றைய பதவிகளுக்கே இத்தகைய குழு அமைப்புக்களும் கூட்ட அமைப்புக்களும் இருக்குமானால், ஒரு முறை ஆட்சி பற்றி இறுகப்பிடித்தால் என்றென்றும்-ஏன்—பரம்பரையாகவும் வைத்திருக்கலாம் என்று வரையறையில்லா வாழ்வு நடத்திய அந்தக் காலத்தில் எண்ணற்ற குழுக்கள் தோன்றி வளர்ந்ததில் வியப்பில்லை அல்லவா? சிறிய தமிழ் நாட்டில் முடியுடை மூவேந்தரும் எண்ணற்ற குறுநில மன்னரும் தத்தம் கொடிகட்டி ஆண்ட ஆட்சியை வாழவைக்க நடத்திய போர்கள் எத்தனை? வரலாற்றில் நடைபெற்றதாகக் காணும் அத்தனை போர்களும் இந்தப் போட்டி மனப்பான்மையில் உண்டானவைதாமே? ஆம்! அவற்றால் உண்டான அழிவு கண்டும் இன்னும் மனித இனம் ஒன்றி வாழ வேண்டும் என்ற உணர்ச்சியைப் பெற வில்லையே!

அடிப்படைச் சமூகம்—குடும்பமே

இவ்வமைப்புக்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றை எண்ணிப் பார்க்கலாம். தனி மனிதன் வாழ்விலிருந்து குடும்பம் என்ற பிணைப்பு முதலில் உண்டான வரலாற்றை மேலே கண்டோம். அந்தக் குடும்பமே அடிப்படை (Basic)ச் சமூகம். அதிலே தலைவன் தலைவி மக்கள் என்ற முறைகள் இருப்பதைக் காண்கிறோம். அங்கே மிகு பழங்காலந் தொட்டே ஆளுகின்றவன் அல்லது முதலிடம் பெறுகின்றவன் தலைவன் என்ற மரபு எப்படியோ உண்டாகிவிட்டது. எனி

னும், அதிலும் தலைவி தன் ஆணையைச் செலுத்த நினைத்தாலோ, 'தோளுக்கு மிஞ்சினால் தோழன்' என்ற மொழிப்படி வளர்ந்த மக்கள் தம் வாக்கினைச் செயலாக்க நினைத்தாலோ பல குடும்பங்கள் கெடுவதைக் காண்கின்றோம். பழங்காலத்தில் இக்குடும்பப் பிணைப்பைத் தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் காட்டி எந்த வேறுபாடு வந்தாலும் கணவனும் மனைவியும் பிரியலாகாது எனத் திட்டம் வகுத்திருந்தனர். இன்று அந்த நிலை இல்லை. எனவே, பல மாறுட்டங்களும் விவாகரத்துக்களும் எளிமையில் ஏற்படக் காண்கின்றோம். கணவன் மனைவியர்க்கும் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் நடைபெறும் எத்தனை வழக்குக்களை நீதிமன்றங்களில் காண்கின்றோம்! எல்லாம் எதனால் எழுவன? 'தான்' என்ற முனைப்பு, பொருள் உரிமை, ஆண முதலியவற்றினாலேயேயாகும். தலைவன் தான் மற்றவர்தம் நலத்துக்காகவே வாழ்கின்றவன் என்ற எண்ணத்தைக் கொண்டு, குடும்பம் என்னும் முழுச் சமுதாயமும் ஒருவிதக் குறையுமின்றி இலங்கினாற்றின், அக்குடும்பச் சமுதாயம் செம்மையுறும். அப்படியே அதில் உறுப்பினராய் உள்ள ஒவ்வொருவரும் தத்தம் உரிமையை விட்டுக் கொடுத்து, கடமை உணர்ந்து செயலாற்றுவாரானால், குடும்பம் என்னும் சமுதாயம் செழித்து வளரும். இந்த உண்மையே பரந்த உலக சமுதாயத்துக்கும் பொருந்துவதாகும்.

ஊரும் உலகமும்

இவ்வாறு வாழ்ந்த பல குடும்பங்கள் சேர்ந்த ஒன்றே 'ஊர்' என்பது. ஒரூரில் சுமார் நூறு குடும்பங்கள் இருக்குமானால், அந்த நூறும் தனித் தனி

இயங்கித் தனித் தனி வீட்டில் வசித்து வந்தாலும், ஊர் என்ற பொதுச் சமுதாயத்தை நோக்கத் தாம் ஒன்றே என உணர்தல் வேண்டும். 'ஊருடன் கூடி வாழ், என்ற ஔவையாரின் வாக்கும் இந்த அடிப் படையில் உண்டானதேயாகும். இந்த ஊர் அமைப்பு உண்டான காலத்தில் மக்கள் பலவகையில் முன் னேற்றமடைந்திருக்க வேண்டும். இன்றேல், ஒன்றிய ஊர் வாழ்வே அமையக் காரணமில்லையல்லவா ? தமிழ் நாட்டில் இந்த அமைப்பில் நால்வகைநிலப் பிளவுகளை யும் அவற்றில் வாழ்ந்த மக்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டுமக்கள் ஒன்றிவாழ்ந் தவர்களா அல்லரா என்ற கேள்வி நமக்கு இங்கே வேண்டாம். அவர்கள் மேற்கொண்டு வாழ்ந்த நிலப் பிரிவு வாழ்க்கையே இத்தகைய சமூகக் குழுக்கள் பலவற்றை அமைத்தது என்பதைக் காண்கின்றோம். மக்கள் தாங்கள் வாழ்கின்ற இயற்கைச் சூழலுக்கு ஏற்பவே வாழ்க்கையை அமைத்துக்கொள்வார்கள். குறிஞ்சியில் வாழும் மக்கள் வாழ்க்கைமுறை, உணவு, உடை, இன்னபிறவற்றையும், அப்படியே மற்றப்பகுதி களில் வாழ்வார் தேவைகளையும் ஒத்துநோக்கின், இவ் வேறுபாடு விளங்கும். அவ்வப்பிரிவில் தலைமை வகிக்கும் தலைவன் தலைவியர் பெயர் முதலியவற்றி லும் மாறுபாடு காண்கின்றோம். அவர்தம் தொழிலும் பண்பாடுங்கூட அவ்வந்நிலத்துக்கு ஏற்ற வகையில் அமைவதைக் காண்கின்றோம். ஐந்தாவது நிலமாகக் காட்டவந்த பாலை நிலத்து வாழ் மக்கள் 'வழியிடைச் செல்வோரை வருத்தியும் வாட்டியும் அவர்கள் கொண்டு சென்ற பொருள்களைக் கவர்ந்தும் தங்கள் வாழ்வை நடத்தினர்கள்,' என இலக்கணமே காட்டி யுள்ளனர். பண்பாட்டின் அடிப்படையில் இந்த

முறைபொருந்தாதே ! ஆயினும், சூழல் அந்தக் குழுவினை அப்படி வாழவைக்கிறது. எனினும், இயல்பான நிலம் திரிந்து மாறுபட்ட இடத்தில் அவர்கள் வாழ்வது போலவே, இயல்பான மக்களுக்கு இருக்க வேண்டிய பண்பாடு திரிந்து அவர்களும் வாழ வேண்டியுள்ளது என்பதைக் காணலாம். இந்த நிலையில் தமிழ் நாட்டு நால்வகை நில வாழ்வையும், அந்நிலமக்கள் பிறருடன் கலந்து வாழ்ந்த வாழ்வையும் நோக்கும் போது ஊர்ச் சமுதாயம் எப்படி அமையவேண்டும் என்ற விளக்கம் ஒருவாறு தெளிவாகும். இவ்வாறு சிற்றூர் பேரூராகி, பின்பு நகரமும் பெருநகரமுமாகி, நாடு உலகமாகி, தனியாகத் தொடங்கிய குடும்பம் என்னும் சமுதாயம் உலக சமுதாயமாய் விரிந்து விட்டது. இதன் பல பிரிவுகளையும் ஆராய்வதன் முன் இச் சமூகத்தில் இன்றியமையாது உள்ள ஆண் பெண் அமைப்புக்களைப்பற்றிச் சிறிது காண்போம்.

ஆணும் பெண்ணும்

மக்கட்சமுதாயமட்டுமன்றி எந்த உயிரினத்தும் ஆண் பெண் இரண்டும் இணைந்தே வாழவேண்டியுள்ளன. இதுவே சமுதாயத்தின் அடிப்படை வாழ்வு. இந்த இனம் பெருகவேண்டுமானால், இவை இரண்டும் இணைந்து வாழ்வதிலேயே கருத்திருத்த வேண்டும். ஆனால், இக்காலத்தில் ஆண் பெண் சேர்க்கையின்றியே கருவை உண்டாக்க இயலும் என ஆராய்ந்து வெற்றியும் கண்டு விட்டனர் என ஆய்வாளர் பேசலாம். எனினும், நின்று எண்ணினால், ஒன்று விளங்கும். அந்தக் கருவும் ஏதாவது ஓர் ஆணிடமிருந்து பெற்றதாகத்தானே இருக்கும்? ஆகவே, ஆண் இன்றிக் கருவில்லை. அதை வேண்டுமாயின், வேறுக

எடுத்துக் காத்து மகளிர் கருக்கொள்ளப் பயன் படுத்தலாம். இந்த நிலை பட்டினத்தார் காலத்தி லேயே இருந்ததாக அவர் பாடல் வழியும் வரலாற்று வழியும் ஓரளவு அறிகிறோம். மற்றும் ஆண் பெண் சேர்க்கை வழியின்றி வேறு வகையில் மகப்பெறும் மகளிரை மனம் விட்டுப் பேசச் சொன்னால், அவ் வாழ்வில் அவர்கள் இன்பம் பெற்றதாகக் கூறுவார் களா? மேலும், இந்த நிலை நாட்டில் பரவவில்லை; பரவுவதும் கடினம். என்றாலும், அவர்கள் இதை ஆராய்ச்சி வழிபெற்ற பெருவெற்றியாகப் போற்றிப் புகழ்ந்து கொள்ளுகிறார்கள்; இது பொருந்தாது.

ஆடவரும் மகளிரும் கலந்ததே சமுதாயம். இந்த உண்மையைப் பலர் உணர்வதில்லை. ஒரு சிலர் ஒரு கோடியிலும் வேறு சிலர் மற்றொரு கோடியிலும் நின்றுக் கூக்குரலிடுவர். சம உரிமை வேண்டு மென்று சீர்திருத்த வாதிகள் வாதிடுவார்கள். அதை யாரும் மறுப்பதில்லை; மறுக்கவும் முடியாது. ஆனால், எந்த வகையில் அந்தச் சமஉரிமை அமைவது? என்பதே கேள்வி: மகப்பெறுவது தங்களுக்குமட்டு மன்று ஆண்களும் அதில் பங்கு கொள்ளவேண்டு மெனப் பெண்கள் கூற முடியுமா? அப்படியானால், எல்லாக் கடின வேலைகளிலும் எங்களுக்கும் பங்கு வேண்டும் என்று அவர்கள் கூறமுடியுமா? அல்லது நல்ல குடும்பத்திலுள்ள பெண்கள் ஆடவரைச் சமைக்கச் சொல்லிவிட்டு, வயலில் அறுவடையை மேற்பார்வையிடத் தாங்கள் சென்றுவிடுவார்களா? இவையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டுவன. தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி, உலகில் எம் மொழியிலும் பெண்களை 'மெல்லியலார்' என்றும்,

'மலர்' போன்றவர் என்றும் பேசுகின்றனர். எனவே, அவர்கள் உடலமைப்பு, வாழ்க்கை அமைப்பு முதலிய வற்றின் அடிப்படையிலேயே அவர்கள் உரிமை அமையவேண்டும். ஆணும் பெண்ணும் கலந்து பயில வேண்டும் என்னும் கூக்கூரல் இப்போது அடங்கி வருவதைக் காண்கிறோம். அவரவர்கள் தனித் தனியே தனித் தனி கல்லூரிகளில் பயில் வதே சிறப்புடைத்து என்னும் கொள்கை நாள் தோறும் மேலை நாடுகளில் வளர்ந்து வருவதைக் காண்கின்றோம். பாரதியார் பெண்கள் விடுதலைக் குப் பாடுபட்டது போன்று வேறு யாரும் பாடுபட் டிருக்கமாட்டார்கள். அவர்,

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காண்என்று கொம்மியடி,

என்று பாடி, அதே வாயால்,

வேதம் படைக்கவும் சாத்திரம் செய்யவும்
வேண்டி வந்தோம் என்று கொம்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வ
சாதி படைக்கவும் செய்திடுவோம்,'

என்று பாடினர். இதன் கருத்தென்ன? ஆண்க ளோடு சரிநிகர் சமானமாக மற்றைத் துறைகளில் போட்டிக்கண்டு வெற்றிபெறுவதோடு, அவர்தம் இயல்பான பண்பாகிய நல்ல உணவு சமைத்தலையும், நன்மகப்பெறுதலையும் தவறாது மேற்கொள்ள வேண்

டும் என அவர் வற்புறுத்துகின்றார். இதைத்தான் குறுந்தொகை புலவருள் ஒருவர்,

'குவளை உள்கண் குய்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.'
(குறுந். 167)

எனக் கூறினர். எனவே, மனித சமுதாயத்தின் இருவேறு கூறுகளாகிய ஆடவரும் பெண்டிரும் தத் தம் நிலையில் வழுவாது, கடமையில் தவறாது, தம் உரிமையைக் கொண்டாடி, தேவையானால், அவளுக்கு அவன், அவனுக்கு அவள் விட்டுக்கொடுத்து வாழப்பழகினாற்றான் சமுதாயம் சீராகும். இதே வேளையில் ஆடவர் சமூகம் பெண்டிர் சமூகத்துக்கு இழைத்த கொடுமைகளும் சமுதாயப் புற்று நோய் களேயாம்.

பழங்காலத்தில் ஆடவரும் பெண்டிரும் சம நிலையில் வாழ்ந்திருப்பர். ஆனால், இடைக்காலத்தில் எப்படியோ பெண்களை விலங்கினும் கேடாக நடத்தக் கூடிய அளவில் சில சமூகக் கட்டுப்பாடுகள் உண்டாகி விட்டன.

'மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினில் நம்மிடம் காட்ட வந்தார்.'

என்ற பாரதியார் இன்னும் சற்று அதிகமாகக் கூடச் சொல்லியிருக்கலாம் என்ற அளவுக்கு நாட்டில் பெண்கள் நசுக்கப்பட்டார்கள். ஆடவர் தம் விருப்பம்

போல் எங்கே வேண்டுமானாலும் செல்லலாம் என்றும், பெண்கள் வீட்டின் எல்லையை விட்டே வரக்கூடாது என்றும், அப்படி வந்தால் அவர் உடல் முழுவதும் மறைத்தே வரவேண்டும் என்றும் நியதிகளை உண்டாக்கினர்கள். இவை இன்னும் உலகின் பல பாகங்களில் இருந்து வருவதை நேரில் கண்டுவருகிறோம். பெண்கள் அயல் ஆடவருடன் பேசுவதும் தவறு என ஆடவர் கருதினர். மற்றும் பெண்கள் ஆளவோ ஆலோசனை கூறவோ தகுதியற்றவர்கள் என்ற கொள்கை இடைக்காலத்தில் உலகெங்கணும் பரவியிருந்தது. சீன நாட்டில் இருந்த ஒரு பழக்கம் நினைத்தாலும் நடுக்கம் தருவதாகும். பெண்டிர் தம் விருப்பம் போல எங்கும் விரைந்து செல்லலாகாது என்று கருதி, அவர்தம் பாதங்களை இளமையிலேயே கட்டிப் போட்டுக் குறுகியனவாக்கி நடக்கவொட்டாமல் செய்த கொடுமையை யாரே அறியார்? தமிழ் நாட்டுப் பழங் காலச் சங்க இலக்கியங்கள் பெண்களுக்கு ஏற்றம் தந்து பேசுகின்றன என்றாலும், இடைக்காலத்திலெல்லாம் பெண்கள் விலங்கினும் கேடாக மதிக்கப் பெற்றதைப் புராண இதிகாசங்களில் காண்கின்றோம். மற்றும் சங்க காலத்திலும எதனையோ ஏற்றங்களைக் காணினும், பெண்களின் பரத்தமை வாழ்வு சங்ககாலச் சமுதாய வாழ்வில் நீக்க முடியாத ஒரு மாசுதானே? அவர்களுக்குச் சொத்துரிமையும் பிற உரிமைகளும் மறுக்கப்பட்டன. இப்படியே பிறநாடுகளிலும் இடைக்காலத்தில் பெண்களை மிருகங்கள் போல வைத்து வாழ்ந்ததைக் கண்ட காரணத்தாலே தான் உரிமை வேண்டியவர்கள் எல்லையற்றுக் கேட்டு வேண்டுவதையாவது பெறலாம் என்முன் நிற்கின்றனர். இன்று பெண்கள், சமுதாயத்தில் பல துறை

களில் முன்னேறியுள்ளார்கள். எனினும், இந்த மகளிர் முன்னேற்றம் அறிஞர் சிலர் உள்ளங்களில் சல சலப்பை உண்டாக்கி யிருக்கிறது. பல அலுவலகங் களில் ஆடவர்களோடு பெண்டிரும் சமானமாகப் பணியாற்றுவதைக் காண்கின்றோம். சாதாரணமாக, குமாஸ்தா தொழில் தொடங்கி, மாநில மாளும் அமைச் சர் பதவிவரை மகளிர் பங்கு பெறுகின்றனர். ஆனால், நாட்டில் படித்த ஆடவர் பலருக்கே வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துகொண்டே போகின்றதே! இந்த நிலையில் பெண்டிர் அதிகமாக உரிமை காட்டிப் பங்கு பெறுவாராயின், சமுதாயத்தின் அடிப்படையே தளருமே என அன்னர் வாதிடுவர். அவர்தம் வாதத் தில் ஓரளவு உண்மை இருக்கிறது என்றே கொள்ள லாம். என்றாலும், இந்தச் சூழ்நிலைக்கு யார் காரணம்? சமுதாயமேதான். பணிமனைகளில் தொழிலாற்றும் ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் கன்னிப் பெண் களே. அவர்தமை அழைத்து உள்ளம் தொட்டு அவர் களைச் சொன்னால், இந்த உத்தியோகப் பதவிகளைக் காட்டிலும் கொண்ட கணவனை உபசரிக்கும் குடும்ப வாழ்வுதான் அவர்கள் விரும்புவது என்பது புலனாகும். அவர்கள் படித்த காரணத்தினால் மட்டும் பதவி தேடி வரவில்லை. தாம் விரும்பும் நல்ல குடும்ப வாழ்வு கிட்டாத காரணத்தினாலேயே பலர் பணிமனைகளை நாடிச் செல்கின்றனர். இதற்குச் சமுதாயச் சட்ட திட்டங்கள் செம்மைப் படவேண்டும். பெண்களைப் பெற்றவர்கள் அவர்களுக்குக் கணவரைத் தேட எத்தனை எத்தனை ஆயிரம் ரூபாய் செலவழிக்க வேண்டி யுள்ளது! ஏன் இந்தக் கொடுமை? 'வரதட்சிணை' என்றோ, வேறு என்ன பெயரிலோ அதை வழங்கி, அதனால் இளம் பெண்களின் வாழ்வைக் கெடுக்கும்

சமுதாயமன்றே பெண்கள் பணிமனை புகுவதற்குக் காரணமாகின்றது. படித்த ஆடவர்தாமே அதிகப் பணம் கேட்கின்றனர்? அந்தக் கொடுமை இல்லை யாஞல், எத்தனை பெண்டிர் தத்தம் விருப்பம் போலக் கணவரைக் கைபிடித்து அவர் காரியம் யாயினும் கைகொடுத்து இல்லற வாழ்வில் இன்புறுவர்! பெண் டிருள் ஒரு சிலர் உழைப்பாலேயே சில குடும்பங்கள் வாழவேண்டிய நிலையும் உள்ளது. எனினும், அது மிக மிகக் குறைந்த அளவினதே.

'மணம் புரிந்துகொண்ட மகளிருள் பலரும் பணியாற்றுகின்றரே?' என்ற வினவும் எழலாம். எனினும், அதுவும் எண்ணத்தக்கதே. மணம்புரிந்த ஒரு குடும்பத்தில் ஆடவனும் பெண்ணும் வாழ்வுக்கு வேண்டிய வருவாய் தரும் வேலை இல்லாமல் வாடிக் கொண்டிருக்க, அதே வேளையில் அண்டை வீட்டில் ஆண், பெண் இருவரும் சம்பாதித்துப் பெருவாழ்வு வாழும் நிலையும் நாட்டில்—சமூகத்தில்—இருக்கிறது. இதையும் சில வகையால் தடுக்கலாம். சில விதிவழி மணமாஞல் இருவரில் ஒருவருக்குத்தான் பணி உண்டு என வரையறை செய்து சமூகச் சீர்திருத்தம் செய்ய லாம். உண்மையில் இருவரும் பணியாற்றும் குடும்ப வாழ்வு இயந்திர வாழ்வாய் இருக்குமேயன்றி, இன்பம் நிறைந்த வாழ்வாங்கு வாழும் இல்லற வாழ்வாய் இருக்கமுடியாது. சென்னை போன்ற நகரங்களில் அத்தகைய குடும்ப வாழ்க்கையை காண்கின்றவர்கள், அக்குடும்பத்தினர் ஏதாவது ஒன்றில் குறையுடைய வராகவே வாழ்க்கை நடத்துவதைக் காணலாம்.

பெண்களுக்கெனப் பணிபுரிய வேறு தனித்த இடங்களும் உள்ளன. மருத்துவப் பணிமனைகளில்

செவிலியராகப் பணியாற்றுந்திறன் மெல்லியலாருக்கே உண்டு. பெண்கள் இளகிய உள்ளம் உடையவர்கள்; எனவே, நோயாளியின் நிலையறிந்து, தாய் பாசத்தால் சேயை உபசரிப்பது போன்று, அவர்களை அவ்வப் போது உபசரித்து நோய் நீக்குவார்கள். அதில் ஆடவர் போட்டியிடுவதென்பது பொருந்தாது. அரசாங்கம் இந்தத் துறையில் சில ஒழுங்கு முறைகளை அமைத்திருப்பது நல்லதேயாகும். இப்படியே உபசரிப்பு முறையில் பெண்டிர் ஆடவரைவிடச் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளனர். ஆகவே, பல அலுவலகங்களிலும் விமானம் முதலியவற்றிலும் உபசரிப்பாளராக மங்கையரை அமர்த்துகின்றனர். இதுவும் சிறந்ததே. இப்படியே பலப்பல ஆராயலாம். மக்கள் சமுதாயத்தில் இணைந்து வாழவேண்டிய சமயாகப் பங்குள்ள ஆடவர் பெண்டிர் என்னும் இருவகையாரும் இணைந்தாலன்றி—ஒருவரை ஒருவர் தழுவிக் சென்றாலன்றி—உலக சமுதாயம் ஒழுங்காகச் செல்லாது என்பது உண்மை எனக் கூறி மேலே செல்வோம்.

ஊர்ச் சபைகள்

ஆணும் பெண்ணும் இயைந்த மக்களினச் சமுதாயத்தில் அளவு, உணர்வு, அமைப்பு முதலியவற்றை ஒட்டிப் பல்வேறு குழுக்கள் அமைந்திருந்தன. தனி மனிதனுக்கும் குழுக்களுக்கும் பல தொடர்புகள் இருந்தன; இன்றும் இருக்கின்றன. ஆற்றல் வாய்ந்த சிலர் இக் குழு அல்லது சிறு சபையின் துணை கொண்டு தம்மைச் சேர்ந்த மற்றவருக்கு உதவி செய்யக் கடமைப்பட்டு வாழ்ந்தனர். சமுதாயத்தைக் கட்டுப்படுத்தப் பல சபைகள் அக்காலத்தில் இருந்தன.

அவை பெரும்பாலும் கிராமச் சபைகள் என்றே வழங்கப்பட்டன. ஒரு சுற்றுச் சார்பு எல்லைக்குள் அமைந்த அந்தக் கிராம நலங்கள் அனைத்தையும் அந்தச் சபைகளின் பொறுப்பில் விட்டு வைத்திருந் தார்கள். இந்தக் காலத்தில் பஞ்சாயத்து ஆட்சியைப் பற்றியும் அது திறம்படச் செயலாற்ற வேண்டிய அவசியம் பற்றியும் அரசியல் தலைவர்கள் பேசுவதைக் கேட்கின்றோம், இச் சபைகளே அன்று ஊர்களைச் செம்மையாகக் காத்துவந்தன. அதற்கும் கீழே கிராம திலில் ஒத்த கொள்கை உடையவர் சிலரோ பலரோ அங்கங்கமர்ந்து தத்தம் கருத்துக்கு ஒத்த செய லாற்றுவர். சிலர் கிராமங்களில் இராமாயணப் பிரசங்கங்கள் எற்பாடு செய்து கேட்டுக்கொண்டிருப் பர்; சிலர் பாரதத்தில் விராடபருவம் வாசிக்கக கேட்பர்; சிலர் சொக்கட்டான் அல்லது சோழியாடிக் கொண்டிருப்பர்; சிலர் சீட்டுக்கட்டு ஆடிக்கொண் டிருப்பர். மனத்தால் ஒன்றிய சிறு குழுக்கள் தொடங் கும் இடமே இதுதான். இது போன்ற சிறு குழுக்கள் நல்ல செயல்பற்றி இயங்குமாயின், நாட்டுக்கு அவற் றின் சேர்க்கை நலம் பயக்கும். கிராமச் சபைகள் இவற்றினும் மேம்பட்டவை. அவற்றின் முழுப் பொறுப்பிலேதான் கிராமங்கள் இயங்கவேண்டும். எனவே, அவற்றில் தனி மனிதன் சுயநலக் கொள் கையோ அல்லது ஒரு தொகுப்பார் நலமோ எண்ணக் கூடாத ஒன்று. கிராம வாழ்வே அச் சபையின் வாழ் வாக அமைதல் வேண்டும். அங்கே உயர்வு தாழ்வு இல்லை; செல்வர் வறியர் இல்லை; உற்றார் மற்றார் இல்லை. கிராமச் சபைகள் தெய்வ நலம் வாய்ந் தவை. அச் சபைகள் கிராமங்களில் உண்டாகும் எத்தகைய வழக்குகளையும் முன்னின்று தீர்த்து

வைக்கக் கடமைப்பட்டவை. தம் தீர்ப்பில் தவறு இருப்பின், அதனால் எந்தக் கொடுமையையும் ஏற்றுக் கழுவாய் தேடி மக்கள் முன் தமது தூய்மையை அக் குழுவினர் புலப்படுத்துவர். பழையனூர் நீலி வரலாற்றில் இந்தச் சபையாராகிய எழுபது வேளாளர் தங்கள் தவறு கண்டவிடத்துத் தீயிடைப் புகுந்து மாய்ந்ததைக் காண்கின்றோம். இவ்வாறு அக் கிராமச் சபைகளில் உறுப்பினராய் இருப்பவர் தம்மை மறந்து ஊருக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்டு நல்ல செயலாற்றுபவராய் இருக்கவேண்டும்.

குழுக்களின் அடிப்படை உணர்வு

இதுபோன்ற சபைகளேயன்றிச் சாதாரணமான கூட்டு அமைப்புக்களும் பல உள்ளன. நாம் முதலில் கண்டவுடன் பலரை உவந்தேற்றுக் கொள்ளுகிறோம். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்,' என்பது போலப் பலரிடம் மாறுபடுகிறோம். அதனால், எத்தனையோ இடர்ப்பாடுகள் உண்டாகின்றன. இப்படி நன்றுகப் பழகும்போது ஒரு வகையாலும் உடனே மாறுபட்டபோது வேறு வகையாலும் ஒரே ஊரில் இருவருடைய வாழ்க்கை நிலை அமையுமானால், அச் சமுதாயம் சிறந்தோங்க வழி யேது? அதனாலேயே வரையறுத்த சில அமைப்புக்களை, மக்கள் விரும்பினும் விரும்பாவிடினும், மேலே உள்ள ஆளும் சபையார் அமைக்கின்றனர். அந்த அடிப்படையிலேதான் இந்த மக்களாட்சியில் 'தனியார் உரிமை' போன்ற பல பேசப் பெறுகின்றன. இவ்வாறான குழுக்கள் பல் வேறு தொழில் அமைப்புக்களிலும் உண்டாகலாம். கல்வி, வாணிகம், விளையாட்டு, வழிபாடு போன்ற பலவகைகளில் இத்தகைய ஆக்கக் குழுக்கள் அமைந்து

செயற்பட்டுப் பல நல்ல பணிகளைச் சமுதாயத்துக்குச் செய்யலாம். நாட்டில் இன்று பல கல்விச் சபைகள் பல்வேறு வகைக் கல்விகளை வளர்த்து வருவதைக் காண்கின்றோம். அப்படியே வாணிகச் சபைகள் (Chamber of Commerce) பல ஊர்களிலும் இயங்கி நாட்டுச் சமுதாயம் வாணிகத்தால் நல்ல பயன் அடையும் வகையில் தொழிலாற்றுவதைக் காண்கிறோம். அப்படியே, விளையாட்டுப் பற்றிப் பல்வேறு குழுக்கள் பாரெங்கும் சுற்றிப் பல சமூகத்தாருடன் கலந்து நின்று பல போட்டிகளில் பங்கெடுத்துக்கொண்டுவருவதைக் காண்கின்றோம். வழிபாட்டு அடிப்படையில், ஒவ்வொரு சமயத்தவரும் பலப்பல குழுக்கள் 'Y. M. C.A.,' 'Y. W. C. A.' போன்ற பல சபைகளை அமைத்துக் கொண்டு செயலாற்றுவதைக் காண்கின்றோம். இவை அனைத்தும் 'மனித சமுதாயத்துக்கு உதவுவது' என்ற அடிப்படைக் குறிக்கோளாலேயே அமைக்கப் பட்டுச் செயலாற்றவேண்டும். அந்த எண்ணத்திலிருந்து மாறுபடுமாயின், இச் சபைகளே நிலைகெட்டும் போவதுடன், அவ்வப்போது சமுதாயத்தில் சில குறைகளும் உண்டாகும்.

பெரும்பான்மையும் சிறுபான்மையும்

இத்தகைய சபைகளில் உறுப்பினராய் இருப்பதற்குப் பல கட்டுப்பாடுகள் உள்ளன. இன்று சட்ட சபை முதலியவற்றில் இடம் பெறுதற்கும் வயது முதலியன பற்றிச் சிற்சில கட்டுப்பாடுகள் இருப்பதை அறிவோம். இக் காலத்தில் கீழ் நிலை வயதுமட்டும் எல்லையாய் உள்ளது; இடைக்காலச் சோழர் ஆட்சியில் மேல் நிலை வயதும் வரையறுக்கப் பட்டிருந்தது. அப்படி இருந்தால், இன்று நாட்டில் கிளம்பும் பல

சிக்கல்கள் வாதம் இன்றியே நீங்கிவிடும். இக் குழுக்களில் உள்ளோர் தாம் இக் குழுவுக்காகவும் இதன் வழியே சமுதாயத்துக்காகவும் தொண்டு செய்ய இருக்கின்றோம் என உணர்ந்து தொண்டு செய்ய வேண்டும். மாறுகத் தாம் இக் குழுவின் தலைவரான மையின் சமுதாயமும் குழுவும் தமக்குக் கட்டுப் பட்டவை என்ற எண்ணம் எழுதல் கூடாது. தன்னலம் மங்கிப் பொது வாழ்வு மேலோங்கி வளரத் தனி வாழ்வினும் பொது வாழ்வு வளரவேண்டும் எனப் பாடுபடுபவரே சமுதாயக் குழுக்களில் இடம் பெறவேண்டும். பழங்காலத்தில் இக் குழுக்கள் பெரும் பாலும் வேறுபாடு இன்றியே ஒன்றிய நிலையில் செயலாற்றி வந்தன. இன்று சபைகளில் '51' என்ற பெருவாரியான வாக்குகளே ஆட்சி புரிகின்றன. ஆனால், அன்று அப்படியன்று ; ஆள வருகின்ற அத்தனைபேரும் தம்மை மறந்து நாட்டுக்கு நலம் செய்ய வருகின்றவரானார். எனவே, அச் சபை நிறை வேற்றும் செயல்களில் இரண்டொருவருக்குக் கொள்கையளவில் வேறுபாடு இருந்தால், அவ் வேறு பாட்டின் காரணத்தை அறிந்து, தவறுயின் திருத்தி, அன்றுயின் தாம் திருந்தி, சபையின் ஒவ்வொரு செயலையும் ஒன்றிய உணர்வாலேயே மேற்கொள்வர். இந்தப் பழங்காலச் சமுதாய நிலை இன்று நாட்டில் இல்லாததே மக்கள் போராட்டங்கள் வளரக் காரண மாய் உள்ளது. தமது கட்சியோ இனமோ குழுவோ கொண்டுவந்தது என்பதை நோக்காது, ஒரு செயல் சமூகத்துக்கு எவ்வாறு பயன்படும் என்பதை ஆராய்ந்து குழுவில் உள்ளார் அனைவரும் விருப்பு வெறுப்பு அற்றுச் செயலாற்றுதலே சிறந்த கூட்டாட்சி முறையாகும். கொள்கை பல இருப்பினும், தம்முள்

அவற்றை விளக்கிக் காட்டித் தீர்வு காண வேண்டுமே யன்றி, அக்கொள்கை அடிப்படையில் சமூகத்தையோ தம்மையோ பிரித்துக்கொண்டு போதல் தவருகும். தலைவர் தம் பதவியினுல் மற்றவர் கொள்கைகளை இல்லையாக்கிக் கெடுக்க நினைப்பதோ, தாம் பிடித்த ஒன்றையே சாதிக்க எண்ணுவதோ, தவருன செய லாகும். வாக்கெடுத்துப் பெரும்பான்மை முடிவு செய்தலே தவருன ஒன்று. இதனுலேதான் பெரும் பான்மை சிறுபான்மை என்ற வேறுபாடுகளும் பெரும்பான்மையினரை சிறுபான்மையினர் நசுக்கி ஒடுக்கும் மாறுபாடுகளும், அவற்றுல் நாடுகளில் கொந்தளிப்பும் உள்நாட்டுச் சண்டைகளும் பிற வேற்றுமைகளும் தோன்றி மக்கட்சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு அழித்துச் செல்கின்றன. மனித உள்ளம் எவ்வளவு பொதுநலத்தில் ஈடுபாடு கொண் தாய் இருப்பினும், சில சமயங்கள் 'தான், தனது' என்ற ஒருமை உணர்வில் தன்னை மறத்தல் இயற்கை. ஆனல், பொதுப்பணி ஆற்ற முன்னிற்கின்ற சபை களில் அங்கம் வகிக்கின்றவர்கள் அத்தகைய உணர்ச்சிகளை அடக்கிச் சமுதாயமே வாழ வழிவகுக்க வேண்டும்.

நல்ல வேளையாக விஞ்ஞானிகள் இவ்வாறு தம் மனம்போன வழியில் போக முடியாது. விஞ்ஞானம் அல்லது அறிவியல் வளர்ச்சியைப் போற்றும் பல அறிவியற் சங்கங்கள் உலகில் உள்ளன. ஒரு கொள்கையை ஒரு சங்கம் கண்டுபிடித்தால், அதற்கு மாருக மற்றொரு சங்கம் கூறமுடியாது. இயற்கையின் நியதியை ஒட்டியே எல்லாச் சங்கங்களும் செயற் படுகின்ற காரணத்தாலும், அவ்வியற்கை மனித

உள்ளத்தைப்போல உள்ளும் புறமும் வேறுகக் காட்டாது ஒன்றுக அமைந்து நிற்பதாலும், விஞ்ஞானி கள் எத்துணை வேற்றுமை உணர்வு கொண்டவர் களாயினும், அவர்கள் முடிவை ஒன்றுகவே ஏற்றுக் கொண்டாக வேண்டியுள்ளது. இந்த விஞ்ஞானிகள் ஆய்வுகளால் உலகுக்கு நன்மை அளிக்கக் கடமைப் பட்டவர்கள். ஆனால், அங்கும் அரசியல் புகுந்து ஆக்கப் பணிக்குப் பதிலாக அவர்களை அழிவுக்குப் பற்றிச் செல்வதைக் கண்டு சமுதாயமே கவலைப் படவேண்டிய நிலை உள்ளது.

சிறு சிறு குழுக்களை விடுத்து, சமுதாயத்தில் செயலாற்றும் பல பெருஞ் சபைகளை எண்ணிக் காணலாம். இன்றைய உலக அரங்கில் 'U. N. O.' போன்ற பல பெருஞ் சபைகள் தொழில்படுகின்றன. ஆயினும், அவற்றிலும் நம்மால் அமைதி காணமுடிய வில்லை. ஏன்? அவை அடிப்படை மனிதப் பண் பாட்டை மறக்கின்றதே காரணம். அங்கும் 51, 49 என்ற - பெரும்பான்மை சிறுபான்மை என்ற - வேறு பாட்டு உணர்வு வருகிறது. பெரும்பான்மை சிறு பான்மையை அடக்கிவிடலாம் என்று துடிக்கின்றது. ஒரு சிலர் அறிந்தோ அறியாமலோ பெற்ற சில அதி காரங்களைத் தவருன வழியில் பயன்படுத்த முனைகின் றனர். இதனுலேயே அந்த உலக அரங்கால் உல குக்கும் மக்கட் சமுதாயத்துக்கும் நன்மையில்லை.

சட்ட திட்டங்கள்

எல்லா வேலைகளையும் எல்லோரும் பார்க்க முடி யாதே என்ற எண்ண அடிப்படையிலேதான், நல்லவர் ஒருசிலர் கையில் இத்தகைய பணிகளைப் பகுத்துச்

சமுதாயம் ஒப்படைக்கின்றது. மக்கட் சமுதாயம் என்றபோது உலக மக்கள் அனைவரையும் எண்ணிப் பார்க்க வேண்டுமேயன்றி, தம் நாடு தம் இனம் தம் மக்கள் என நினைத்தல் அறிவுடைமையாகாது. இதனுலேயே பலப்பல புதுவகையான சட்டதிட்டங் களும் தேவைப்படுகின்றன. நாட்டில் இன்றுள்ள திட் டங்கள் எல்லையற்று வளர்ந்துகொண்டு செல்லும் ஒன்றே, மக்கள் சரியான பாதையில் செல்லவில்லை என்பதைக் காட்டும். சமூகம் தொழிற்பட ஒரு சில சட்டதிட்டங்கள் தேவையே; யாரும் அதை மறுக்க முடியாது. ஆனுல், சட்டதிட்டங்களே எல்லாவற்றை யும் தம்முன் அடக்கும் வகையில் ஆட்சி நடந்தால் அதனுல் பயனில்லை என்பதோடு, மக்கட் சமுதாயம் அத்தகைய ஆட்சிலிருந்து தம்மை விடுவிக்க வழித்துறைகளை வகுத்துக் கொள்ளும் என்ற உண் மையைச் சென்ற கால வரலாற்று உண்மைகள் மூலம் அறிய முடிகின்றதன்றே! ஒன்றிய நிலை யில் பெருஞ் சபைகள் சட்டங்கள் இயற்றும்போது— அச்சபை பல இனத்தவர் பலசமூகத்தவர் சேர்க்கையால் ஆக்கப் பெற்றிருப்பின், அவ்வந்நிலத்து வாழும் மக் கள் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பச் சட்டதிட்டங்களை அமைத்துக்கொள்ள அவ்வந்நிலத்துச் சமுதாயத் துக்கு உரிமை அளித்துவிட்டால், பல இன்னல்கள் அகலும். பெருஞ் சமூகத்தில் எல்லாச் சட்டங்களும் அல்லது விதிகளும் எல்லாருக்கும் பொதுவாக இருக்க முடியாது. சில பொதுவாகவும் சில அவரவர் நாட்டுச் சமுதாய நிலைக்கு ஏற்றனவாகவும் இருத் தல் நலம் பயப்பதாகும். இவ்வாறு எல்லாப் பகுதி களையும் தழுவிச் செல்லின், நாட்டிலும் சமூகத்திலும் பிளவோ வேறுபாட்டு எண்ணமோ உண்டாக

வழியில்லை. சமூகத்தைக் கட்டுப்படுத்தச் சட்ட திட்டங்கள் தேவையேயாயினும், அவை எல்லைமீறிக் கட்டுப்பாடுகளை அமைப்பதோ, ஒரு சமூகக் கட்டுப்பாட்டினைப் பிற சமூகங்களை ஏற்றுக்கொள்ளச் சொல்வதோ தவறாகும். இந்திய அரசிற் சட்டத்தில் அதனாலேயே ஒவ்வொரு தனிப்பட்ட சமூகத்தாருக்கும் அவரவர் இனப் பண்பாட்டு நிலை கெடாத வகையில் பாதுகாப்பு அளிக்கப்பெற்றுள்ளது. சில சமயங்களில் சில நிகழ்ச்சிகள் அப்பாதுகாப்பு எல்லையை மீறி வளரும்போதுதான் மக்கள் உள்ளங்களில் மனக்கசப்பு உண்டாகின்றது. எல்லாச் சமூகத்தலைவர்களும் ஒன்றுகூடி, தாம் அனைவரும் பெரிய மக்கட் சமூகத்தின் உறுப்பினர் என்ற உணர்வில் செயலாற்றுவாராயின், அவர்களின் ஆணை வழி இலங்கும் நாடு நன்கு சிறக்கும். இந்த நிலை உலக சபைகளுக்கும் பொருந்துவதாகும். ஒன்றிய உலகைக் காணவேண்டும் என்ற உணர்ச்சி இல்லாது வாயளவில் பேசிவிட்டு, உள்ளத்தில் 'என் நாடு, என் இனம், என் மக்கள்' என்ற பகுப்பினைக் கொண்டு, பரந்த உலக சபையில் ஒவ்வொருவரும் செயலாற்ற நினைத்தால், அதனால் நாட்டுக்கோ உலகுக்கோ மக்கட் சமுதாயத்துக்கோ யாதொரு பயனும் இல்லை. அச் சபை இதைப்போல முன்னர் அமைந்திருந்த சபைகள் சென்ற வழியை நாடிச் செல்வதோடு உலகையும் பெருந் தொல்லையில் ஆழ்த்திவிட்டே செல்லும். அந்த நிலை வாராது மக்கட் சமுதாயத்தைக் காக்க ஒவ்வொருவரும் முற்படவேண்டும்.

கட்டுப்பாடுகள்

சில சமூக அமைப்புக்கள் தீங்கு பயப்பனபோலக் காணப் பெறினும், அவை இன்றியமையாதது வேண்டத்தக்கனவாய் உள்ளன. குடும்ப வாழ்க்கையைப் பற்றிச் சில அமைப்புக்களை முன்னரே பல சமூக அமைப்பாளர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். பெண்கள் ஒழுக்க நெறி தவறிய காரணத்தால் பல கட்டுப்பாடுகள் உண்டானமையும், அவற்றை நீக்கப் பின் வந்த தலைவர்கள் பாடுபட்டமையும் மேலே கண்டோம். குடும்பம் நிலைகுலையாது வாழ்வதற்கான நல்வகையில் பழங்காலத்தில் சில கட்டுப்பாடுகள் தேவையாய் இருந்தன. இந்த நிலையில் 'புல்லானுலும் புருடன், கல்லானுலும் கணவன்,' என்ற அடிப்படையில் பெண்கள் சமுதாயத்தில் வாழ்ந்துவந்தார்கள். எனவே, ஆடவர் மகளிர் பலரை மணந்தும் பலரை உரிமைமகளிராகவும் கொண்டும் வாழ்ந்துவந்தனர். இது சமுதாய வழக்கம் எனவும் வாதிட்டுவந்தனர்; ஆனுல், அண்மையில் பலதார மணத்தடைச் சட்டம் தேவதாசி ஒழிப்புச் சட்டம், விவாகரத்துச் சட்டம் போன்ற சில சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை மேல்வாரியாகப் பார்த்தால் சமுதாய உரிமையைத் தகர்த்துவிடுவன போலத் தோன்றும். எனினும், தனக் களித்த உரிமையால் சமுதாயத்தில் ஓரினம்—ஆணினம்—பெண்ணினத்தை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும்போது, பெருஞ் சமுதாய வாழ்வைக் கருதும் சபைகள் வாளா இருக்க முடிவதில்லை. இப்படிச் சில சமயங்களில், தவறு என எண்ணத்தக்கனவாகத் தோன்றினும் ஆய்ந்து சமுதாயம் கெடாது வாழத்தக்க வகையில்

பேரவைகள் சட்டங்கள் செய்யின், அவை ஓரளவு அப்போது வெறுக்கப்பட்டாலும், காலம் செல்லச் செல்ல அதன் பயன் விளங்க விளங்கச் சமுதாயம் அதை உணர்ந்து போற்றிப் பயனடையும். இப் படியே குடும்ப வாழ்வு தொடங்கி, சிறிய இனம், பிரிவு, சமுதாயம் முதலியவற்றில் அறிந்தோ அறி யாமலோ, இருக்கின்ற பிழைகளையும் குற்றங்களையும் உணர்ந்து, அவை அவர்தம் சமுதாய உரிமை என்று விட்டு விடாது அரசாங்கப் பார்வைக்குக் கொணர்ந்து அததகைய குற்றங்கள் மேலும் நடை பெறுவண்ணம் பாதுகாக்கத்தக்க வகையில் திறம் படச் சட்ட திட்டங்கள் இயற்றுவதில் சமூகப் பெருஞ்சபைகள் சற்றும் பின்வாங்கலாகாது.

ஏற்றத் தாழ்வு

சமுதாயத்தில் புதுப்புது வகையான அமைப்புக் கள் அன்று தொட்டு வளர்ந்துக்கொண்டே வரு கின்றன. 'செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா' என்ற வள்ளுவரின் வாய்மொழிப்படிதான் முதன் முதல் மக்களுக்குள் வேறுபாடு உண்டாயிற்று என்பதும், அதுவே பிற்காலத்தில் பல வேறு சாதி களாய் பிரிந்தது என்பதும் மேலே கண்டோம். இந்த வேறுபாடுகளை நீக்கவேண்டிய சமுதாயப் பேர வைகளோ, அரசாங்கச் சபைகளோ, இவற்றை வளர்த்துக்கொண்டே வருவதுதான் இன்று உலகுக் குப் பெருஞ் சுமையாக மாறுகின்றது. தொழிலமைப் பில் உண்டான சமுதாய வேறுபாடு, பின்னர் மொழி, இடம், சமயம், பண்பாடு, பதவி, பொருளாதாரம் ஆகிய பல்வேறு அடிப்படைக் காரணங்களாலேயும் பிரியத் தொடங்கிற்று. இப்பிரிவுகள் அவ்வச்சிறு இனம் வாழத் தேவைதான் என்றாலும், பரந்த மக்கட்

சமுதாயம் வளர இவை தேவையா என்ற ஐயம் உண்டாவது இயற்கையேயாகும். நாம் மேலே கண்டபடி இந்த வேறுபாடுகளால் உலகம் எத்தனை எத்தனை போர்களைக் கண்டிருக்கின்றது! எத்தனை எத்தனை உயிர்களை இழந்திருக்கின்றது! இன்று பொருளாதார எற்றத்தாழிவில் சமுதாயம் எங்கோ பிரிந்து செல்கிறது. ரஷ்யா நாட்டில் உண்டான பெரும் புரட்சிக்கு அடிப்படைக் காரணம் இப்பொருளாதார ஏற்றத்தாழ்வும் ஆட்சி முறையுமே என்பதை அறிவோம். பொது உடைமை வாதிகள் அவற்றைப் போக்கிப் புதுவகை அரசியலமைப்பை அங்கே உண்டாக்கினர்கள். அதுதான் சரியான மருந்து என்றோ, அன்றி அதுவே முடிந்த முடிபென்றோ யாரும் கூற மாட்டார்கள். என்றாலும், சமுதாயம் இந்த ஏற்றத் தாழ்வை வளராமல் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் அதற்கேற்ப இன்று பல வகையில் புதுப்புதுச் சட்டங்களைச் செய்துகொண்டு வருவதைக் காண்கின்றோம். என்றாலும், நாடுதோறும் நகரந்தோறும் செல்வர் செழுமாளிகைகளும் அல்லல் உருவான குடிசைகளும் வேறு வேறுபகுதிகளில் அளவற்று வளர்வதைக்காண மனித சமுதாயம் தன்னைத் திருத்திக் கொள்ள முடியாத தவறான வழியில் எங்கோ செல்கிறது என்பதை எண்ண இயல்கின்றது.

ஒரு காலத்தில் சமுதாய ஒழுக்கச் சபைகள் நாட்டை அல்லற்படுத்தின. ஒரு காலத்தில் சமயச் சபைகள் நாட்டை நிலைகுலைத்தன. ஒருகாலத்தில் சாதிகளின் ஆதிக்கம் நாட்டின் நல்ல பண்பை விலக்கு வரங்கிற்று. ஒரு காலத்தில் கொள்ளை கொலை முதலிய கொடுமைகளும் மக்கள் வாழ்வை

அடியோடு நிலைகுலைய வைத்தன. ஒவ்வொரு சமயத்தில் வேற்று நாட்டுப் படையெடுப்புக்களும் பிற மாநாட்டங்களும் நாட்டை நலிவுறுத்தின. இன்று பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் கட்சி வேறுபாடுகளுமே நாட்டை மிகக் கேவலமான நிலைக்கு ஈர்த்துச் சென்று மக்கட் சமுதாயத்தைப் பாழாக்குகின்றன. பொருளாதாரம் பற்றியும் கட்சிகள் பற்றியும் வாய்ப்பு நேருமேல் பின்னர் ஓரளவு காணலாம் என நினைக்கின்றேன். இங்கே அந்த அமைப்பில் இயங்கும் சட்டதிட்டங்கள் மக்கள் வாழ்வை மலரச் செய்வதற்குப் பதில் மாற்றச் செய்வதை மட்டும் குறிப்பிட நினைத்தேன்.

பணிமனைகளில் பாகுபாடு

நாட்டில் மற்றொருவகை அமைப்பு வெகு அண்மையில் தோன்றி வளர்ந்து வருகின்றது. அது உலகில் பிற நாடுகளைக் காட்டிலும் இந்தியாவின் பிற பகுதிகளைக் காட்டிலும் தமிழ்நாட்டில் அதிகமாக ஆணை செலுத்துகிறது. அதுதான் உத்தியோக சாதி. சாதிகள் எத்தனை எத்தனையோ வந்து நாட்டைக் கெடுத்தது போதாது' என்று, இன்று இந்தப் புதுச் சாதி கிளம்பியுள்ளது. கிராமத்தில் நூறுபேரை வைத்து வேலை வாங்கும் நிலமும் செல்வ வளமும் பெற்றவருங்கூட நகரில் ஐம்பது ரூபாய் சம்பாதிக்கும் 'பியூன்' உத்தியோகம் செய்யவே ஆசைப்படுகின்றார். அதற்கேற்ப, கம்பெனியார் ஆட்சிக்காலமாகிய 'கும்பினி' ஆட்சியில் 'உத்தியோகம் புருஷ லட்சணம்;' என்ற பழமொழியும் உண்டாயிற்று. ஆகவே, நெற்றிவியர்வை நிலத்தில் சொட்டப் பாடுபடும் வயல் உழவனைக்

காட்டிலும் மற்றவருக்குக் கைகட்டி வாழும் 'உத்தியோக' வாழ்வு மேலென்றும் அதையே மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் ஒருநிலை நாட்டில் உண்டாயிற்று. இந்த உத்தியோகத்திலும் எத்தனையோ மாறுபாடுகளைக் காண்கின்றோம். உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளவன் தன்னினும் தாழ்ந்த நிலையில் உள்ளவனை மதிப்பது இல்லை. அதற்கேற்ப அரசாங்கமும் அவர்களை 'G, O' 'N. G. O. 'என்ற இருவகையாகப் பிரித்து வேறுபடுத்திவிட்டது. பிறநாடுகளில் உத்தியோகத்தில் எத்தனை ஏற்றத் தாழ்வு இருப்பினும், அலுவலகம் அல்லாத பிற பொதுச் சமுதாய இடங்களில் பழகும்போது எல்லா அலுவலரும் சம நிலையில் பழகுவதைக் காணலாம். ஆனால், தமிழ்நாட்டில் அந்த உத்தியோக வேறுபாடு—அவர் நெருங்கிய உறவினராயினுங் கூட—, எல்லாச் சமுதாய அமைப்புக்களிலும் ஆணை செலுத்தும் கொடுமையையும் அதே கண்ணுற் காணலாம். எனவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற வேற்றுமைகளெல்லாம் போதாதென்று இப்புது வேற்றுமை வளரத் தொடங்கியுள்ளது வருந்தத் தக்கதாகும்.

இவற்றைத் தவிர்த்துத் தொழிலாளி முதலாளி என்ற வேறுபாடு இன்று நாடெங்கும் வளர்ந்து விட்டது. அந்த இரு துருவங்களை இணைத்து ஒன்றிய பண்பட்ட நல்ல உலக சமுதாயத்தை அமைப்பதற்குப் பதிலாக நாட்டிலும் உலகிலும் உள்ள தலைவர்கள் அவர்களிடையே வேறுபாடுகளை வளர்த்துக்கொண்டும் அவர்தம் இடைவெளியைப் பெருக்கிக் கொண்டும் செல்வதைக் காண்கின்றோம், முதலாளிகள் ஒரு தனிச் சமுதாயமாக வளர்கிறார்

கள்; தொழிலாளிகள் மற்றொரு தனிச் சமுதாயமாக வாழ்கின்றார்கள். இருவரும் சேர்ந்ததே ஒன்றிய மனித சமுதாயம் என்ற உணர்வு அவர்கள் உள்ளத்தில் அரும்பவிடவில்லை மற்றவர்கள். அரசாங்கம் எத்தனையோ புதுப்புது வகையான விதிகளையும் சட்டதிட்டங்களையும் இவ்விருவகையாரையும் இணைக்கச் செய்துகொண்டுவருகின்றது என்றாலும், அவ்விரு வேறு சமுதாயமும் தனித் தனிப் பாதையை நோக்கியே செல்கின்றன. 'முதலாளி இன்றேல் தொழிலாளி இல்லை; தொழலாளி இன்றேல் முதலாளி இல்லை இருவரும் இன்றேல் சமுதாயம் இல்லை' என்ற உணர்வு உண்மையில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அரும்பினாலன்றி, அமைதிகாண இயலாது.

ஒன்றிய உணர்வு வளருமா?

இருபதாம் நூற்றாண்டில் சிறந்த நாகரிகம் மிக்க நாடு என்று உலகத்தாரால் போற்றப்பெறும் அமெரிக்காவில் நீகிரோ வெள்ளையர் வேறுபாடு இன்னும் நீங்கவில்லை யல்லவா? இப்படி நிறத்தால் வேறுபாட்டை மனித சமுதாயத்தில் புகுத்திக் கொண்டே உலக அரங்கத்தில் தான் முன்னேறிவிட்டதாகக் காட்டும் எந்த நாடும், உண்மையில் முன்னேறிய நாடாகாது. புரையோடிய புண்ணைப் பட்டால் மூடிவைக்கும் ஒரு நிலையே அது. தென்னப்பிரிக்காவில் கறுப்பர்களையும் இந்தியர்களையும் ஒடுக்கும் ஒரு நாகரிகம் இன்றும் வாழ்ந்துகொண்டுதானே இருக்கின்றது! இந்தியாவிலும் வடக்குத் தெற்கு என்ற வேறுபாடும், ஆரிய திராவிட வேறுபாடும் பிற மொழி பற்றிய வேறுபாடுகளும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டுதானே வருகின்றன! இவற்றை

யெல்லாம் வைத்துக்கொண்டு நம் சமூகம் முன்னேறுகின்றது என்று எப்படிச் சொல்ல இயலும்? தமிழ்நாட்டில் அல்லது இந்திய நாட்டில் மட்டுமல்லாது, ஜெர்மனி, போலந்து முதலிய நாடுகளிலும் இந்தச் சமுதாய வேறுபாட்டு வளர்ச்சிகளைக் காண்கின்றோம். சிலநாடுகளில் நாம் மேலே கண்ட பெரும்பான்மை சிறுபான்மை என்ற வேறுபாடுகூட இல்லை. தென்னப்பிரிக்காவில் சிறுபான்மையினராகிய வெள்ளையரே பெரும்பான்மையினராகிய கறுப்பர்களை ஒடுக்குகின்றனர். ஆட்சியும் அதிகாரமும் பிற பொருளாதார ஆதிக்கம் போன்றவையும் அவர்கள் கையில் உள்ளமையே இதற்குக் காரணமாகும்.

மேலே கண்ட அத்தனையும் மனிதன் விரும்பியோ அன்றி இயற்கையாகவோ அமைத்துக்கொள்ளும் சமூக அமைப்புக்களேயாகும். மிகப் பழைய காலத்தில் இச்சமுதாய அமைப்புக்கள் மக்கள் கலந்து வாழ்வதற்காக உண்டாயின. ஊரும் நகரும் நாடும் அமைக்கும் காலத்தில் அவனவனுக்கு அவனவனது நாட்டையும் ஊரையும் வளர்க்கப் பயன்படும் உணர்வைத் தூண்ட இச்சமுதாய அமைப்புத் தேவையாய் இருந்தது. 'என் ஊர் வளர வேண்டும்; என் நாடு வளர வேண்டும்; என் சமுதாயம் வளரவேண்டும், என்று ஒவ்வொருவரும் தத்தம் சமூக அமைப்புக்களைப் போட்டியிட்டு வளர்த்து வந்தனர். அதற்கு ஏற்ப ஒரு சமூக அமைப்பும் வேறொரு சமூக அமைப்பும் நெருங்கிய தொடர்பு கொள்ளவில்லை. எங்கெங்கோ தோன்றிய தனித் தனி மக்கட் பிரிவுகள் 'தாம் தாம் உயர்ந்தவை,' என்ற உணர்வினால் அத்தகைய சமுதாய அடிப்படையை அமைத்துக்கொண்டன. பின்பு—

நாடும் நகரும் ஊரும் உலகமும் நன்கு உருவான பிறகும் அந்த வேற்றுமை அமைப்புக்களையும் வளர்த்தல் எப்படிப் பொருந்தும்? எட்டடிக் குடிசையில் குடியிருந்த ஏழெட்டுப்பேரும் வெளியுலகைக் காணுத வகையில் அதையே தம் உலகமாக எண்ணி, பிறியாது தம்மையே உயர்ந்தவராக எண்ணி வாழ்ந்திருக்கலாம். ஆனல், டில்லி 'அசோகா ஓட்டலில்' இந்த எழெட்டுப் பேரும் ஒரு பேரறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அதில் வந்து தங்கும் பிற நாட்டவரையும் நம் நாட்டவரையும் காணும்போதும், 'நாமே உயர்ந்தவர்; நம் இனமே உயர்ந்தது. ஆகவே நமக்கே முதலிடம்' என்று போட்டியிட்டுச் சண்டைபோட முடியுமா? முடியாதே! இதே நிலைதான் சமுதாய அமைப்புக்களிலும் உள்ளது. அறியாத அந்தப் பழங்காலத்தில் வாழ்ந்திருந்த பல சமுதாய அமைப்புக்கள் இன்று உலக சமுதாய அமைப்பில் ஒன்றி, ஒவ்வொரு சமுதாயமும் தனித் தனி என்ற உணர்வைவிட்டு, உலக மக்கட் சமுதாயமாகிய உடம்பிற்கு நாமெல்லாம் ஒவ்வோர் உறுப்பாய் அமைகின்றோம் என்ற உண்மையை உணர்ந்து செயலாற்றின், உலகில் மக்கட் சமுதாயம் வாழ்ந்து நிலைபெற்று வளர்ந்துவரும். ஆனல், இன்றைய உலகில் இந்த உணர்வு அருகி வருவதைத் தான் காண்கிறோம். அதிலும், படித்தவர்கள் மிக்குள்ள மேலை நாடுகளிலேயே இந்த உணர்வு இல்லை. ஆகவே, உலக சமுதாயம் என்னுகுமோ என நினைக்க வேண்டியுள்ளது. உணர்வுடைய நல்லோர் ஒன்றி வழிவகுத்தால் வாழையடி வாழையென வையகத்தையும் மனித சமுதாயத்தையும் வாழவைக்க வழியுண்டு! வல்லார் முயல்வாராக!

IV. தனி மனிதனும் சமுதாயமும்

இணைந்த வாழ்க்கை—நடந்த நிகழ்ச்சிகள்—முன்னேடிகள்—எப்படி வளர்ந்தது?—அமைதிக்கு வழி—எவர் உறவர்? எவர் பகைஞர்?—அவ்வழி நல்கூர் வாழிய நிலனே!—யார் பதில் சொல்வது?—எல்லார்க்கும் எல்லாச் செல்வமும்—உரிமையும் உடைமையும்—முதல் நாட வேண்டும் — இரண்டும் இணைந்ததே வாழ்வு—சமுதாயத்துக்கே பெரும் பங்கு.

இணைந்த வாழ்க்கை

விலங்கொடு விலங்காக வாழ்ந்த தனி மனி தன் குகையிலும் முழையிலும் வாழ்ந்து பின்னரே கூடிவாழக் கற்றுக்கொண்டான் என்றும், அக்கூட்டு வாழ்வே சமூகமாக வளர்ச்சியுற்றது என்றும் கண் டோம். இங்கே அந்தத் தனி மனிதனுக்கும் சமூ கத்துக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்து அறிய வேண்டி நிற்கிறோம். 'தனி மனிதன் சமூகத்திற்கா? சமூகம் தனி மனிதனுக்கா?' என்ற வினுக்கள் ஆராய்ந்து விடையளிக்கப் பெறவேண்டும். தனி மனிதன் தன்னை மறந்து பரந்த சமூகத்துக்கே உதவி செய்ய வேண்டும் என அறிஞர் பலரும் பேசு கின்றனர்; நாமும் மேலே அதுவே சிறந்த பண்

பாடு என்பதைக் கண்டோம். ஆனால், அதே வேளையில், 'சமூகம் தனி மனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் இல்லையா?' என்ற கேள்வி எழுதல் இயற்கைதானே? இன்றைய அரசியலில் 'தனியார் சுதந்தரம் பறிக்கப்படுகிறது' என்ற கூக்குரல் எங்கணும் ஒலிக்கக் கேட்கிறோம்! ஆகவே, தனி மனிதன் மேலானவனா? சமூகம் மேலானதா? இரண்டும் மேலானவையே என்ற விடைதான் கூற வேண்டியிருக்கும். தனி மனிதன் ஓரளவு தன்னை ஒறுத்துச் சமூகத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்பது உண்மையேயாயினும், அதே சமூகம் தன் உறுப்பினராகிய ஒவ்வொருவரும் சிறக்க வாழ்கின்றார் என்பதையும் நன்கு பார்த்து, தன்து அமைப்பைச் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். தனி மனிதன் தொடக்க காலப்போலத் தனியாக வாழ்வானானால், சமுதாயம் ஏது? சமுதாயம் என்னும் கூட்டு வாழ்வு இல்லையானால், அவனுடைய இத்தனை முன்னேற்றங்களும்- நாடும்—நகரும்— ஊரும் ஊர்தியும் — வான்வெளிப் பயணமும் — விஞ்ஞான விளைவுகளும்—இத்தனையும் அவன் எப்படிப் பெற இயலும்? எனவே, தனி மனிதன் சமூகத்துக்கும் சமூகம் தனி மனிதனுக்கும் கட்டுப்பட்டுத் தழுவி வாழும் நல்வாழ்வையே பண்பட்ட திருந்திய மக்களினம் விரும்பும். இந்த இணைந்த உண்மையை உணராதார் பலர் பலவாறு பேசுவர்.

நடந்த நிகழ்ச்சிகள்

இன்றும்—இத்துணை நாகரிகத்திலும் பண்பாட்டிலும் மனித இனம் வளர்ந்த பிறகுங்கூட—தனி மனித அல்லது தொடக்க மனித சமூகத்துக்கு அப்

பால் பிறவிலங்குகளோடு தனியாக இருக்கும் நிலை உண்டானால் அது தன் சமுதாய வாழ்வை இழந்து விடுவதோடு விலங்காகவேதான் வாழ்வதை அறி கின்றோம். இக்கருத்தை விளக்க அமெரிக்க ஆசி ரியர்கள் மூன்று நல்ல உதாரணங்களைத் தருகின் றார்கள்.[1] காஸ்பர் ஹவுஸர் என்பார். பிறந்து பதி னேழாண்டுகள் வரையில் மக்களினத்தில் சேர்க்கப் பெறாது தனிமையில் வைத்து வளர்க்கப் பெற்ற வர். பதினேழு வயது நிரம்பியபின் 1828ல் அவரை நூரம்பேர்கு,[2] நகரில் நடமாடவிட்டபோது அவர் நடமாட இயலாது, குழந்தை உள்ளமும் உணர்வும் கொண்டவராய், எதையும் புரிந்துகொள்ளாதவராய், உயிருள்ளவற்றுக்கும் உயிரற்றவற்றுக்கும் வேறுபாடு தெரியாதவராய்ச் சமூக உணர்வே அற்று இருந் தார். ஐந்தாண்டுகள் கழித்து அவர் கொல்லப்பட்டு ஆய்வு நடத்திய பொழுது சமுதாயத்தில் இளமை யில் அவரைப் பழகவிடாத நிலையே அவரை அந்நிலைக் குக் கொண்டுவந்தது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்தியாவில் 1920ல் கண்டுபிடிக்கப்பட்ட ஓநாய் களால் வளர்க்கப் பெற்ற இரு இந்துக் குழந்தை களைப் பற்றிய வரலாறு நெஞ்சை உருக்குவதாகும். இருவருள் ஒரு பெண் வயது ஒன்பது; மற்றதன் வயது இரண்டு போலும்! சிறுமி கண்டெடுக்கப் பட்ட சில நாட்களுக்குள் இறந்தாள். ஆனால் பெரியவள் பின்பு ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்து, 1929ல் இறந்தாள். அவள் கமலா என்று அழைக்கப் பெற்றாள். சமூகத்துடன் நெருங்கிப் பழகவைத்து

1. Society by R. M. Maciver and Charles H. Pag Pages 44—46. 2. Kaspar Hauser. 3. Nurem rg

Y:1 08310

அவள் நிலையை ஆராய்ந்தனர். எனினும், அவள் ஓநாய்களைப் போன்று நான்கு கால்களாலேயே நடந்து வந்தாள். ஓநாய்களைப் போன்று கத்துவதைத் தவிர பக்கத்து உள்ளார் பேசிய மொழியைக் கற்றுக் கொள்ளவில்லை. சாதாரண வீட்டுவிலங்கைப் போல அவள் வாழ்வு நின்றுவிட்டது. ஒன்பது ஆண்டுகள் முயற்சியின் எல்லையிலே அவள் ஓரளவு பேசவும் மக்களைப் போல உண்ணவும் பழகிக் கொண்டாள் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது தான் என்றாலும், அவளைச் சமூகத்தில் ஒருத்தியாக்க ஒன்பது ஆண்டுகள் போதவில்லை என்பது தெரிகின்றதல்லவா?

அமெரிக்க நாட்டு ஆய்வாளர், அன்னா [1]என்னும் ஆறுமாதக் குழந்தையை அறையில் பூட்டிவைத்துச் சமூகவாழ்வையே அவளுக்கு அளிக்காது ஐந்தாண்டுகள் முடிவைத்து உணவுமட்டும் அளித்துவந்தனர். ஆனால், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவள் வெளியே அனுப்பப்பெற்று, அவளை யொத்த சிறுமியருடன் விடப்பட்டபோது அவள் பக்கத்தில் உள்ளவர்களைப் பற்றி ஓர் உணர்வும் கொள்ளாது தனிமையில் இருந்ததைக் கண்டனர். பின்பு சில சிகிச்சைகளால் அவளை நாளடைவில் மனித உணர்வுடையவளாகச் செய்யமுடிந்தது. இவை யாவும் எதைக் காட்டுகின்றன? மனிதனுய்ப் பிறந்து விடுவதால் மாத்திரம் சமூக உணர்வு வந்துவிடும் என்று எண்ணுவது தவறு என்பதும் அந்த மனித உணர்வை அவனுக்கு அளிப்பதே சமூகந்தான் என்பதும் நன்கு விளங்குகின்றனவல்லவா?

1. Anna.

முன்னோடிகள்

மற்றொன்றும் இங்கே எண்ணத்தக்கது. கூடி வாழும் சமூக உணர்வைப் பற்றி முன்னரே கண்டோம். ஆனால், மனிதன் அக்கூட்டுவாழ்வின் பயனை நன்கு துய்க்க, பிற உயிரினங்கள் அந்த நிலையை அடைய வில்லை என்பர் சிலர். உயிர் நூற் புலவர் தம் ஆராய்ச்சியின் வழியே சில உயிரினங்கள் வாழும் கூட்டு வாழ்க்கை மனித சமூக வாழ்வினும் மேம் பட்டது என்பது புலனாகும். இதனால், 'மனிதன் சமூக விலங்கு' என்னும் கருத்துப் பொய் என்று கொள்ள வேண்டுவதில்லை. மனிதன் உணர்ந்து கூடி வாழக் கற்றுக் கொள்வதற்கு நெடுங் காலத்துக்கு முன்பே, அவன் முன்னோடிகளாகிய உயிரினங்களில் பல இத்தகைய கூட்டுவாழ்க்கையை மேற்கொண் டுள்ளன என்பதை நாம் அறிதல் வேண்டும். எறும்பு, வண்டு போன்ற உயிரினத்தின் தாழ்ந்த நிலையில் இருக்கும் சிற்றுயிர்களுங்கூடக் கூடித் திறம்பட வாழ்க்கை நடத்துவதை முன்னமே கண்டோம். தேனீக் கூட்டங்களின் அமைப்பும் முறையும் பணி களும் எவ்வெவ் வகையில் திறம்பட அமைந்துள்ளன என்பதை ஆராய்ந்து விளக்கும்போது நாம் வியக்கின் றோமல்லவா? நம் வீட்டில் அன்றாடம் காணும் காக்கையின் செயல் நமக்கு வியப்பூட்டவில்லையா? அதன் செயலைக் கண்டு வியந்த தாயுமான அடிகளார்

'காக முறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப்
பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ! இன்புற் றிடநாம் இனி
எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே!"

என்று அதைக் காட்டி நமக்கு அறிவுறுத்தவில்லையா?

அப்படியே மனித இனத்தை ஒட்டிவரும் வாலில்லாக் குரங்கு மனிதக் குரங்கு போன்றவை கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடப்பதை நாம் காண்கின்றோம். காட்டிலே பணியாற்றும் யானைகள் எவ்வளவு அழகாக அணி வகுத்துத் திறம்பட.ச் செயலாற்றுகின்றன! அமெரிக்க அறிஞர் ஒருவர்[1] வாலில்லாக் குரங்குகள் மனிதர் களைப் போன்றே இன்பதுன்பங்களை யேற்றும், சுக துக்கங்களை அவ்வற்றின் இயல்புகளுக்கு ஏற்ப அனுபவித்தும், பிரிந்தால் வாடியும், உற்றவர் இறந்தால் துக்கித்தும், சேர்ந்தால் மகிழ்ந்தும் பல்வேறு சூழல்களைப் பல்வேறுவகையில் உணர்ந்து, அனுபவிக்கின்றன என்பதைக் காட்டியுள்ளார்.[2] அவை மட்டுமன்றி, எத்தனையோ விலங்குகள் இந்த நிலையில் உள்ளமை காண்கின்றோம்! ஒரே வண்டியில் பூட்டிய இரு காளைகள் ஒன்று பிரிக்கப்படும்போது படும் பிரிவுத் துன்பமும் கண்ணீர் வடித்தலும் காணக் கூடி யவையே. கன்று கொட்டிலிலிருந்து கதறுங்கால் வெளியில் மேய்ந்து வரும் தாய்ப்பசு பரிவோடு எதிர்க்குரல் கொடுக்கும் இன்ப வொலி பலர் காதுகளில் வீழ்ந்திருக்குமே! தான் பொரித்த குஞ்சின் பக்கலில் மனிதர்கள் வந்தவுடன் 'என்ன கெடுதி நேருமோ' என்று தாய்க் குருவி அலறி வீறிடும் ஒலி வீடு தோறும் கேட்பதுதானே! எனவே, சேர்க்கையால் உண்டாகும் உணர்ச்சியாகிய மனநிலை முதலிய பண்பு களை மனிதனுக்கு முன்பே பல விலங்குகளும் பறவை களும் பெற்றுள்ளன. எனினும், இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளையே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மனிதன் தன் உள்ளுணர்வை நாளுக்கு

1. Wolfgang Kohler—German American psychologist.
2. Man and Society by Samul Koenig P. 18.

நாள் வளர்த்துக்கொள்கிறான். பிற உயிரினங்களோ, அந்த நிலையில் இல்லை. இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிறந்த மனிதனுக்கும் இன்றைய மனிதனுக்கும் இந்தச் சமுதாய உறவிலேதான் எத்தனை எத்தனை வேறுபாடுகளைக் காண்கின்றோம்! இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் விரைந்து மாறுபடும் சமுதாய வாழ்வை நோக்கும்போது அந்த மாற்றம் நன்கு புலனாகு மல்லவா? ஆனால், இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த எறும்பு, தேனீ, குருவி ஆகியவற்றிற்கும் இன்றைய அதே இனங்களுக்கும் அந்த உணர்வு வகையில் ஏது வேறுபாடு? எனவே, மனித அறிவும் உணர்வும் சமுதாயச் சேர்க்கையால்அன்றிவளர்ச்சிபெறு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மற்றும் பிற உயிரினங்கள் அவ்வுணர்ச்சிகளை உடனுக்குடன் மறந்துவிடும் தன்மையன. மனிதனோ, அவ்வுணர்ச்சிகளைத் தான் மட்டுமன்றி, வழிவழியாக வரும் தன் பரம்பரைகளுக்கும் விட்டுச் செல்கின்றான். இவையெல்லாம் தனி மனிதன் சமூகத்தின் சேர்க்கையினால் அடையும் வளர்ச்சியைக் காட்டுகின்றன அல்லவோ! எனவே, தனி மனிதன் சமூகத்துக்கு எத்துணை இன்றியமையாது வேண்டியவனோ, அதே நிலையில் சமூகமும் தனி மனிதனுக்கு அத்துணை இன்றியமையாது வேண்டப் படுவதேயாகும்.

எப்படி வளர்ந்தது?

தனி மனிதனிலிருந்து சமுதாயம் எப்படி வளர்ச்சி அடைந்தது என்பதை ஓரளவு முன்னரே கண்டோம். தனி மனித வாழ்வு, குடும்பத்துடன் இணைந்து குடும்பங்கள் ஊராகி, ஊர் இனமாகி, பின்பு நாடு

களும் நகர்களும் உருவாகிப் பெருஞ் சமூகங்களை உருவாகிய நிலை நாம் அறிந்த ஒன்றேயாகும். இவ் வாறு வளர்ந்த ஒன்றுகிய சமுதாயத்திற்கும் அதன் முதற் காரணமாகிய தனி மனிதனுக்கும் உள்ள தொடர்பினையே இங்கே நாம் எண்ணிப் பார்க்கப் வேண்டும்.

தனி மனிதனுடைய சமுதாயத் தொடர்பு குழந்தை வளர்ச்சியை ஒத்ததேயாகும். குழந்தை பிறந்தவுடன் உலகில் ஒருவரையும் அறியாது. பிறந்த சில நாள் கள் கழித்த பிறகுங்கூட அதற்கு ஒன்றும் தெரியாது. பால் உண்பதற்குத் தாயின் முலைக்காம்புக்கும் புட்டி யில் செருகிவைக்கும் இரப்பர்க் குழாய்க்கும் வேறு பாடு இல்லாதவகையில் சுவைக்கும். எனவே, உல கியல்பு சிறிதும் அறியாத குழந்தை அது. ஆனால், அது வளர வளர, தாயை உணர்ந்து கொள்ளுகிறது; தாய் காட்டத் தந்தையை உணர்ந்துகொள்ளுகின் றது. பிறகு தன்னை ஒத்த சிறு குழந்தைகளுடன் மூன்று வயதிலும் ஐந்து வயதிலும் பழகி, அந்தக் குழந்தை உலகத்துடன் தானும் ஒன்றுகி விடுகிறது. பின்பு பள்ளிக்கூடம் செல்லும் காலத்திலேதான் அதன் உலகம் சற்று விரிவடையும். அங்கே அது பலவகையான பிள்ளைகளைப் பலவகையான நிலைகளில் காணும் வாய்ப்பினைப் பெறுகின்றது. எனினும், எல் லாருடனும் அது கூடிப்பழக முடிவதில்லை. எனவே, தன் பண்புக்கும் விருப்பிற்கும் ஏற்றவகையில் சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுடனே தன் பழக்கத்தை நிறுத்திக்கொள்ளுகின்றது. சில குழந்தைகள் பலருடன் பழகும் தன் நிலைக்கும் திறத் திற்கும் ஏற்ப, அவ்வாறு பழகும்போது தன் பண்பிற்கும்

அறிவுக்கும் ஒத்த குழந்தைகளோடு பழகுவதால் பிற வற்றைச் சில சமயங்களில் வேற்றுக் கண்ணோடு நோக்க வேண்டிய நிலை உண்டாகிறது. அங்கே பிரிவு உணர்ச்சி—அதுவரையில் குழந்தை உள்ளத்தில் தலை காட்டாத மாறுபாட்டு உணர்ச்சி—தலைகாட்டு கிறது. தொடக்கப்பள்ளிப் படிப்பு முடிந்தபிறகு உயர் நிலைப்பள்ளிப்படிப்பு இன்னும் பலரோடு நட்பை வளர்க்கிறது; சிலரோடு மாறுபாட்டையும் வளர்த் திருக்கலாம். பின்பு திருந்திய நல்லறிவு பெற்றுக் கல்லூரி வாழ்விலோ, அன்றி உலக வாழ்விலோ புகும்போது, சிறுவன் பெரியவனாகின்றான். தன் இளமையில் தான் செய்த அறியாத்தனமான செயல் களை எண்ணி அவன் நகைக்கின்றான்; உலகை நோக்குகின்றான். உற்றார் மற்றார் வேறுபாடு அவ னுக்குத் தெரிகின்றது. அந்தச் சூழ்நிலைக்கிடையிலே தான் வாழ்வை அமைத்துக்கொள்கின்றான். குழந்தை வளர்ந்து தன்னிலை உணர்ந்த இந்த வரலாறே தனி மனிதன் சமூகத்தோடு தொடர்புகொண்ட வரலாறாகும்.

அமைதிக்கு வழி

பிறகு தனி மனிதன், எங்கோ, எப்படியோ, தாய் தந்தையரால் வளர்க்கப்பட்டுச் சமூகத்தில் ஒருவனாக வேண்டுமென்ற முயற்சியில் முன்னேறி மெல்ல மெல்ல வளரத் திட்டம் திட்டுகின்றான். அவனது வீடு, தெரு, ஊர், உற்றார், உறவினர், மற்றவர் என்று ஒரு வர் பின் ஒருவராக அவனுக்குச் சமூகத்தில் பலர் அறிமுகமாகின்றனர். அவன் தனது உள நிறைவுக் கும் பண்பாட்டிற்கும் பிற இயல்புகளுக்கும் ஏற்ப அவர்களோடு பழகுகின்றான். அவ்வாறு பழகுங் கால் பலப்பல எண்ணங்கள் அவன் உள்ளத்து

எழுவது இயல்பு. அவனுக்கு முன்பு ஒருசிலர் புக ரால் பாராட்டப்பெறுவர்; அல்லது சிலரால் இகழப் பெறுவர். இந்த நிலையில் அவன் உள்ளம் இகழ்ச் சியைக் காட்டிலும் புகழ்ச்சியை விரும்புவது இயற்கை. ஆனால், அவன் விரும்பும் புகழை அடைய அவ னுக்கு வாய்ப்போ வசதிகளோ இல்லாமலிருக்கலாம். அதை எண்ணி ஒருசிலர் வாளா இருப்பர்; ஒருசிலர் தொடர்ந்து முயன்று புகழ் ஏணியில் படிப்படியாகக் காலை வைத்து ஏற முயற்சி செய்வர். ஆனால், ஒரு சிலர் மற்றவர் புகழ்கண்டு உள்ளத்துப் பொருமி ஒதுங்குவர். ஒருசிலர் தாமும் அவ்வாறு புகழ்பெற வேண்டி, அதற்குரிய தகுதி இல்லையென்றாலும், ஒரு முயற்சியும் செய்யாது ஏதேனும் குறுக்குவழியில் புகழ்தேட வேண்டும் என்று மறைமுகமாகப் பல செயல்புரிவர். அங்கேதான் தனி மனிதன் சமுதா யத்துக்குச் செய்யும் கொடுமைகள் புலனாகும். தனக்கு இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துக்கொண்டு, அதற்கென மனிதப் பண்பில்லா நெறிகளில் செல் லும்போது பல தீய சக்திகள் உருவாகத் தனி மனி தன் காரணமாகின்றான். தனி மனிதனுகிய 'இட்ல' ரன்றோ, உலகப் பெரும் போருக்கே காரணமாயி னான்? இந்த நிலையில் சமூகம் அவனை வேற்றுப் பார்வையோடு நோக்குகிறது. இதனாலேயே அமை தியில் வாழவேண்டிய சமுதாயம் ஆரவாரம், அல் லல், அவதி இவற்றிற்கு உட்பட்டு உழன்று துன் புறுகின்றது. இக்கொடுமையை நீக்கத் தமிழ்நாட்டுப் பழங்காலப் புலவர்கள் பல நல்ல வழிகளைக் கண்டு பிடித்துள்ளார்கள்.

ஆனால், நாம் அவற்றை எண்ணிக்கூடப் பார்ப்ப தில்லை. சமுதாயத்தில் ஒருவன் உயர்வதும் தாழ்வ தும் அவனவன் சூழ்நிலை, வாழ்க்கை வசதி, பிற நிறைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமை கின்றனவே ஒழிய, உண்மையில் அவை போற்றவோ தூற்றவோ தக்க வகையில் அமையவில்லை எனக் காட்டுவர், கணியன் பூங்குன்றனார் என்ற புலவர்.

'நீர் வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தன மாதலின்
பெரியோரை வியத்தலும் இலமே ;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.' (புறம் 192)

என்று பாடி உண்மையை விளக்கிச் சென்றார். மக் களினம் இந்த உண்மையை உணர்ந்து தனது கட மையே இது என்று செயலாற்றினால் நலம் உண் டாகும்.

இப்படி அறுதியிடுவதால் மற்றொரு ஐயம் எழுவது இயல்பு. புகழ்வேண்டா என்றால், யாருமே எந்த முயற்சியும் இல்லாமல் மனித சமூகம் பிற உயி ரினங்களைப் போன்று வளர்ச்சி அடையாது நின்று விடுமே எனச் சிலர் எண்ணுவர். அதனாலேயே மனிதனுக்குக் 'கடமை உணர்ச்சி' என்ற ஒன்றை வற்புறுத்துவர் அறிஞர். 'நீ மனிதனாகப் பிறந்து விட்ட காரணத்துக்காக நீ செய்ய வேண்டிய கட மைகள் இவை,' எனப் பன்னெடுங்காலமாக ஆய்ந் தும் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வற்புறுத் திச் சென்றிருக்கின்றனர். இந்த அடிப்படையிலே தான் அப்பரடிகள், 'என் கடன் பணி செய்து கிடப்

பதே,' என்று பாடினர். மற்றும் புகழ் வேண்டித் தான் செயலாற்ற வேண்டும் என்றால், அவ்வாறு செய்கின்ற எத்தனைபேர் இறந்தும் புகழுடன் வாழ்கின்றார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காச் சத்தியாக்கிரக வாழ்வும், இந்திய விடுதலைக்காகச் சிறைபட்ட வாழ்வும் புகழ் கருதிச் செய்யப்பட்டவையா? இயேசு தம்மைக் கொல்ல மாற்றார் சூழ்ந்து நின்ற நிலையிலும் 'எந்தையீர், இவர்களை மன்னியும்!' என்று சொல்லி மௌனமாகச் சிலுவை ஏற்றது புகழைக் கருதியா? மணிவாசகரோ, மற்றை அடியவரோ, தமக்கு வந்த அத்தனை அல்லலையும் புகழைக் கருதியா ஏற்றனர்? 'ஆம்' என்று யாரே சொல்லவல்லார்? அப்படியே ஆய்வுக்களத்தில் அல்லும்பகலும் அமர்ந்து ஊனும் உடையும் உறையுளும்கூட மறந்து நியூடன் (NEWTON) போன்ற பெரிய அறிவியல் வல்லுநர்கள் உலகம் உய்யப் பலப்பல புதுமை கண்டு தந்துகொண்டே இருக்கிறார்கள் என்றால் அவர்கள் புகழ் கருதித்தான் அவ்வாறு தம் செயலாற்றுகின்றார்களென யாரே கூறவல்லார்? தம் வாழ்நாளையெல்லாம் இந்த வகையில் கடமை வழியில் செலுத்தித் தொண்டு செய்த அவர்களைப் புகழ் அவர் தம் வாழ்நாளிலோ பின்போ தேடி அடைகின்றதேயன்றி, அவர்கள் புகழை மனதில் எண்ணிச் செயலாற்றவில்லை என்பது தேற்றம்

அவரவர் கடமை வழியில் கருத்திருத்திச் செயலாற்றினால் அவர்கள் காலத்திலும் அவர்களுக்குப் பின்மனித இனம் வாழும்வரையிலும் அக்கடமை, அவர்களுக்குப் புகழைத் தேத் தடிருவதோடு அவர்களைப்

பின்பற்றி மனித சமுதாயம் செல்லவேண்டிய உண்மையையும் வற்புறுத்துகின்றது. அன்றி, ஒரு சிலர் விரும்புவதுபோலப் புகழே வேண்டும் என்று செயலாற்றத் தொடங்கினால், அது ஒருவேளை அவர் காலத்தில் புகழாக அமையலாம்; கால வெள்ளத்தில் அப்புகழ் கழுவி நீக்கப்பட்டுவிடும். எனவே, உண்மையில் தம்மை உணர்ந்து, சமுதாயத்தை அறிந்து, சமுதாயத்துக்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமை உணர்ந்து செயலாற்றும் தனிமனிதராகிய கர்ம வீரரே காலத்தை வெல்லும் 'புகழ்' பெற்று வாழ்வர். ஒரு வேளை அவரவர் காலத்தில் வாழும் மனித சமுதாயம் அக்கடமை உணர்ச்சிக்குப் பரிசுதரவில்லை என்றாலும், வழி வழியாக மங்காது வளரும் மனித சமுதாயம் அதற்குரிய பரிசைத் தரத் தயங்குவதில்லை. புத்தர், இயேசுநாதர், மணிவாசகர், அப்பர், காந்தியடிகள் போன்ற பெரியவர்களெல்லாம் இந்த வரம்பில் நின்று உலகம் உள்ளளவும் வாழ்கின்ற பெருமக்களாவார். எனவே, தனி மனிதர் தமக்கில்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி மறைமுகமாக அதனால் உயர நினைத்துத் 'தாழ்' வடைவதிலும், தம் நிலை உணர்ந்து அந்நிலையில் நின்று மக்கட் பணிபுரிதலே சிறப்புடையது எனக் கொள்ளல் வேண்டும். 'புகழை' இங்கே ஒரு மேற்கோளாக எடுத்துக் காட்டினேன். இப்படியே அதிகாரம், பட்டம், பதவி, செல்வம், செல்வாக்கு அத்தனைத் துறையிலேயும் வாய்ப்பும் வசதியும் இல்லாதவர்கள், அவற்றை நேர்முகமாக முயன்றுபெற முடியவில்லை எனக் காட்டி மாற்று வழிகளைக் கடைப்பிடித்து மக்கட் சமுதாயத்துக்கே தீங்கிழைத்து நிற்கின்றார்கள். அதிலும் இந்த நிலையினை நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிக

அதிகமாகக் காண்கின்றோம்! இந்தத் தனி மனித னுடைய பேராசையும் அதனால் உண்டாகும் பொறுமை முதலிய குணங்களும் அவற்றின் வழி எழும் தீச்செயல்களும் அடங்கினாற்றான் மனித சமுதாயம் நிலைபெற்று வாழும். அமைதி உண்மையில் உலகில் ஓங்கி நிறையும். மக்களினம் மன நிறைவுகொள்ளும்.

மேலை நாடுகளில் இந்த அடிப்படையிலேதான் தனி மனிதனை முன்னிறுத்தாவிடினும் தனி இனத்தை முன்னிறுத்தி இரண்டு உலகப் போர் களையே நடத்திவிட்டனர். இன்றும் அமெரிக்க இன மும் இரஷ்ய இனமும் அவர்களைச் சார்ந்தவரும் இயல்பில் இல்லாத உயர்வு தாழ்வு மனப்பான்மை யைக் கற்பித்து வளர்த்துக் கொண்டு உலகையே சாம்பலாக்கத் தகுந்த ஆயுதங்களையும் கொடுமைகளை யும் மேன்மேல் வளர்த்துக்கொண்டு வருகின்றன. எனவே, நாம் மேலே கண்ட தனி மனிதப் பண்பாடு அம்மனித நிலையின் எல்லை மட்டும் இல்லாது இனங் கள் பற்றிய நிலையிலும் பல்வேறு மக்கள் வேறு பாட்டுத் தொகுதிபற்றிய நிலையிலும் வளர்ந்துவரு தல் வேண்டும். மக்களுடைய பொதுவான முயற்சி மனிதனை நல்ல நெறிக்கும் ஒற்றுமை வழிக்கும் ஈர்த்துச் செல்லப் பயன்படத்தக்க வகையிலேதான் தனி மனிதனுடைய முயற்சியும் தனி இனத்தினு டைய முயற்சியும் அமைதல் வேண்டும். அதற்கு உரிய ஒரே வழி, கணியன் பூங்குன்றனார் காட்டிய வழிதான். இந்தஉலகம்உண்மையைஉணர்ந்துகொண் டால், 'எல்லாம் பெற்றோம்' எனத் தருக்கி வாழ்ந்து மற்றவரை வீழ்த்த நினைப்பதோ, 'ஒன்று மற்றோம்' என்று அஞ்சி அஞ்சி வாழ்வதோ, உலகில் மறைந்து

ஒன்றிய மக்கட் சமுதாயம் உறுதிபெற்று ஓங்கும். அதற்கே நல்லவர் வழிகாட்டவேண்டும்.

எவர் உறவர்? எவர் பகைஞர்?

தனி மனிதனுடைய செம்மையோ அன்றிச் சீர்திருத்தமோதான் சமூகச் சீர்திருத்தமாகின்றது என்பதை வரலாறு ஓரளவு நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றது. 'வீடு திருந்தின் நாடு திருந்தும், என்ற ஒரு பழமொழி நாட்டில் நெடுங்காலமாகவே வழங்கிவந்திருக்கும் ஒன்றல்லவா? எனவே, நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் திருத்தமாகச் செம்மை நலம்பற்றி வாழத் தொடங்கிவிட்டான் என்றால், பிறகு நாடும் சமூகமும் நலமுற்று வாழ்வதில் ஐயம் ஒன்றும் இல்லை. அவ்வாறு திருந்திய செம்மை சான்ற மனித வாழ்வில் பெரும் பாலும் நாம் முதலிற்கண்ட 'யான், எனது' என்ற இரண்டும் மறக்கப்படும். சமயம் பரப்ப வந்த அடியவர்களும் சமூகச் சீர்திருத்தம் செய்யவந்த அடியவர்களும் இந்த நிலையிலேதான் வாழ்ந்துவந்தார்கள். அப்பரின் தமக்கையார் திலகவதியார் அப்பரைச் சமயத் தொண்டராக்கிய வகையிலேதான் பேசப்படுகின்றார். அதற்குப் பிறகு அவரை எங்கும் காணவில்லை; அல்லது அப்பர் தமக்கையாரைத் தேடித் திருவதிகை சென்றார் என்ற குறிப்பும் காணப்படவில்லை. அங்கே 'யான், எனது' என்ற இரண்டும் அப்பர் உள்ளத்தில் மறைந்து உலக சமுதாயம் அல்லது சைவச் சமுதாயம் முன்னின்றது. அப்படியே இயேசு உலக மனிதரான பிறகு அவருடன் பிறந்தாரும் மற்றாரும் அவரிடம் தம்மை அறிமுகம் செய்துகொள்ள நினைக்கையில் 'பரந்த மக்கட் சமுதாயமே தன்

உறவு,' எனக் காட்டியது வரலாற்று உண்மையல் லவா? அண்மையில் அண்ணல் காந்தி அடிகளார் 'முப்பத்து முக்கோடி மக்களும் என் உறவினர்,' என்று பரந்த பாரத நாட்டைத் தழுவிக்கொண்டு அல்லவா சன்மார்க்க நெறிகாட்டி வெற்றிபெற்றார்? 'எவர் பகைவர், எவர் உறவர்?' என்ற வினாவை எழுப்பி, 'யாவரும் நம்மவரே' என்ற பதில் கண்ட நெறியிலேதான்—அத்தனி மனிதர்கள் கண்டவழி யிலேதான்—உலகச் சமுதாயம் இன்று அவர்களையும் வாழவைத்துத் தானும் வாழவிரும்புகின்றது, ஆனால், அதே வேளையில் 'யான்,' 'எனது' என்ற தனிமை உணர்வால் தடுக்கும் ஒருசிலரின் தனிவாழ்வு சமூகத் தில் தன் ஆணை செலுத்தப் போட்டியிடுகின்றது. எனவேதான் போரும் பிணக்குகளும் உண்டா கின்றன.

அவ்வழி நல்லை வாழிய நிலனே!

ஒரு நாட்டில் இந்த இருவகை மக்களில் எந்தப் பண்பாட்டாளர் வாழ்கின்றார்களோ அவர்கள் வழி அந்தநாடே நலமுறும். ஒரு நாடு சிறந்திருக்கிறது என்று சொல்வோமேயானால் அது - அந்தச் சிறப்பு- மக்கள் மேற்கொள்ளும் மெய்ம்மை வாழ்வைத்தான் பற்றும் என்பதை உணரவேண்டும். வெறும் போர்க் கருவிகளும் பிற மாறுபாட்டு நிலைகளும் நாட்டை நாடாக்க வல்லன அல்ல. அவை ஒருவேளை நாட்டு நலத்தைப் பாதுகாக்க அமைத்த துணைக் கருவிகளாக - சாதனங்களாக-இருக்கலாம். இதையே தான் வள்ளுவரும் 'அரண்' என்று வரிசைப் படுத் திக் காட்டுகின்றார். ஆனால், அவைதாம் நாடு என் றோ, அவற்றுள் அமைவதே சமுதாயம் என்றோ

அவர் எங்கும் காட்டவில்லை. சில தனி மனிதர்கள் இவற்றைக் கணக்கிட்டுத் தம் ஆணையை விரிவு படுத்தத் திட்டமிடுவர். ஆனால், உண்மையில் நாடு வாழ்கின்றது என்றால், அதில் வாழும் மக்கள்—தனித்தனி ஒவ்வொரு மனிதனும்—செம்மை நலம் பெற்றவராக இருக்கவேண்டும். அந்நாட்டில் பிற குறைபாடுகள் இருப்பினும் அவையெல்லாம் தெரியமாட்டா. ஆனால், அனைத்தும் இருந்தும் அந்த நல்லவர் வாழ்வு இன்றேல், உலகுக்கு நலமில்லை என்பது நன்கு விளங்கும். இதைத்தான் பழங்காலப் புலவர்,

> 'எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை வாழிய நிலனே! (புறம் 187)

என்று அழகாகச் சொல்லிவிட்டுச் சென்றார். எனவே, நாடு வாழத் தனிமனிதனும் அவன் வழிச் சமுதாயமும் நல்ல நெறியில் செல்லவேண்டும் என்பது தேற்றம்.

யார் பதில் சொல்வது?

'தனி ஒருவனுக்கு உணவிலை எனில் சகத்தினை அழித்திடுவோம்,' என வீரமுழக்கம் செய்தார் விடுதலைக் கவிஞர் பாரதியார். அவருடைய கருத்து, சமூகத்தினும் தனி மனிதன் மேம்பட்டவன் என்பதா? ஒருவகையில் ஆம் என்றே கொள்ளவேண்டும். தனி மனிதன் சமூகத்துக்குக் கடமைப் பட்டிருக்கிறான் என்பது போலவே, சமூகமும் தனி மனிதனுக்குக் கடமைப்பட்டுள்ளதன்றோ? உலகில் எத்தனை இனங்கள் அல்லது சமூகப் பிரிவுகள் வாழ்ந்தாலும் அத்தனையிலும் மக்களினத்தில் வாழும் அனைவரும்

அடங்கியே தீருவர். ஓரினத்தில் ஒருசிலர் இருப்பின், மற்றோரினத்தில் இன்னும் சிலர் இருக்கலாம். இன்றைய உலகச் சூழ்நிலையில் எந்தத் தனி மனிதனும், 'நான் சமூகத்தை விட்டு விலகிவிட்டேன்' என்று சொல்லித் தனித்து வாழ இயலாது. சில துறவிகள் ஒருவேளை இல்லற வாழ்வில் இல்லாமல் இருக்கலாம், ஆனால், சமூகத் துறவிகளாக அவர்கள் மாற இயலாது. அப்படி யாரேனும் சமூகத் துறவிகளாய் இருப்பதாகச் சொன்னால் அவர்கள் காடுகளில் விலங்கொடு விலங்காக மனித நியதியே அற்ற வகையில், நாம் மேலே கண்ட ஓநாய் வளர்த்த குழந்தைகளைப் போன்று மனிதப் பண்பே அற்று வாழ்பவராதல் வேண்டும். ஆகவே, மனிதனாக வாழும் ஒவ்வொருவனும் சமூக எல்லையில் நின்றவனே. எனவே, நிறைவுற்ற சமூகம் ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்வையும் சீர்தூக்கி அவனையும் தன்னுடன் அழைத்துச் செல்லவே வழிகாண வேண்டும். விரைந்து முன்னேறும் சமூகத்தில் ஒரு சிலர் பின் தங்கினால், அவர் முற்றும் வாழ்விழந்து விடுவர் எனப் பேசுகின்றோம். ஆனால், உண்மையில் ஆராயும்போது, அவ்வாறு ஒரு சிலரைப் பின்தங்க விட்டுச் சமூகம் முன்னேறுகிறதென்பது, உடம்பில் ஓரிடத்தில் சீழ்வடியும் புண்ணிருக்க அதை மூடிவிட்டுப் பிற விடங்களை அழுகுபடுத்துவதையே ஒக்கும். அந்தப் புண் புரையோடி உடம்பையே அழித்துவிடும் என்ற உணர்வே சமூகத்துக்குத் தேவை. உடனே அந்தப் புண்ணை அறுத்தோ மருந்திட்டோ அன்றிப் பிற பகுதிகளோடு அதையும் வளர்த்துக்கொண்டோ போதல் போல, தாழ்ந்த ஒரு சிலரைத் தனியாக விட்டுவிடாது, அவர்களையும் அழைத்து அவர்களின்

குறைகளையும் நீக்கி ஒரே இனமாக முன்னேறவேண்டும். சென்னை போன்ற பெருநகரங்களில் மனிதன் எத்தனை அளவில் முன்னேற்றம் கண்டு பலப்பல வகையில் தன் வாழ்க்கையை வளம்படுத்திக்கொண்டான் என்றாலும், அங்கங்கே குட்ட நோய்கொண்டு காசுக்குக் கையேந்தும் ஒருசிலரைப் பார்க்கும்போது நம் சமுதாயம் புரையோடிய சமுதாயம் என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றதல்லவா? அவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு உரிய விடுதிகள் அமைத்து, அவர்தம் நோய்கள் மேலும் பரவாவண்ணம் ஆவன செய்யச் சீர்திருத்தச் சமூகம் முன்னுக்கு வரவேண்டும். அன்றி, 'அத்தகையோர் ஒரு சிலர் தானே? அவரால் சமூகத்துக்கு என்ன கேடு வந்துவிடப்போகின்றது?' எனச் சமூகத்தைச் செலுத்திச் செல்லும் தலைவர்கள் தம்மனம் போனவழியில் போவார்களாயின், நாட்டில் கொடுமை தலைவிரித்தாடும். இந்த நிலையில் பாரதியார் உணவுப் பிரச்சினைக்கும் வழிகான நினைக்கின்றார். ஒரு சிலர் வயிறார உண்டு உறங்கிப் பட்டுடுத்துப் பவனிவருவதால் மட்டும் சமூகம் சிறந்ததாகிவிடாது. அவர்கள் சமூக ஏணியின் மேற்படியில் இருப்பவர்களாய் இருக்கலாம். ஆனால், அந்த ஏணியின் கீழ்ப்படியில் ஏழைகள் வயிற்றுக்குக் கூழற்று வாடுவார்களாயின், அச்சமூக ஏணி உதைத்துத் தள்ளப்படும். அப்போது மேலுள்ளவர்களுக்கே அதிக அடிபடும் என்பதை உணரவேண்டும். இரஷ்யாநாடு முதலியவற்றில் இந்த உண்மையை நன்கு உணர்ந்தோம். பாரதியாரும் அந்த நிலையிலேதான் எல்லோரும் உணவுபெற வேண்டும் என்றும் ஒருவனுக்கு உணவில்லை என்றாலும் அதற்கும் முழுச் சமூகமுந்தான்

பதில் சொல்ல வேண்டும் என்றும், அப்படிப் பதில் சொல்லத் தயங்கினால் அதை அழிக்கத் தயங்கலாகாது என்றும் விளக்கிச் சென்றார். இந்த நிலை உணவுக்குமட்டுமன்றி எல்லாச் செல்வங்களுக்கும் பொருந்துவதாகும்.

எல்லார்க்கும் எல்லாச் செல்வமும்

நாட்டில் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற கூக்குரல் ஒருபுறம் வளர்ந்து கொண்டே இருக்கையில் இன்னும் கல்லூரிகளையும் பள்ளிகளையும் எல்லோரும் படிக்கத்தக்க பொருளாதார வசதிகள் பிறவற்றையும் அரசாங்கம் செய்து கொண்டேயிருப்பதைக் காண்கின்றோம். இதன் அடிப்படைக் காரணம் என்ன? படித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்குவதால், அரசாங்கத்துக்கு என்ன இலாபம்? ஏன் அது இவ்வாறு கோடிக்கணக்கில் ஏழைகள் கல்வித் துறையில் செலவு செய்கின்றது? அதுதான் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வைப் போக்க ஒரே வழி. கல்வித் துறையில் நம் சமுதாயம் இன்னும் இணைந்து முன்னேறவில்லை என்பதை கண்டு, தனி மனிதன் ஒவ்வொருவனும் கற்றுத் தெளியும் வரையில் இத்துறையினை விரிவு செய்ய செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே இப்பணி நடைபெறுகின்றது. 'நாட்டில் உணவில்லாத பட்டினியின் காரணத்தால் ஒருத்தி தன் மக்கள் நால்வரைக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டாள்,' என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்க்கும் போது நமக்கு இரக்கம் உண்டாகின்றது. இந்த நிலையில், 'உணவின்மையால் ஒருவரைக் கொல்லும் நாடும் நாகரிக நாடோ?' எனக்

கேட்கின்றோம். பத்திரிகையில் அதுபற்றி விளக்குகின்றோம். பாராளுமன்றங்களிலும் சட்டசபைகளிலும் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழுகின்றன. மனித வாழ்வின் — மனித சமுதாயத்தின் — அடிப்படைத் தேவைகளுள் மிக முக்கியமானது உணவு. எனவே, அந்த அடிப்படையே இல்லையானால், அனைவருக்கும் ஆத்திரம் உண்டாகின்றது. சற்று ஆராய்ந்தால் சமூக வாழ்விற்கே அறிவு அடிப்படை என்பது புலனாகும். ஆனால், அதை உணராது கற்றவர் நூற்றுக்குப் பதினைந்து பேர் நிலையிலிருந்து இருபது நிலைக்கு உயர்ந்துவிட்டோம் எனப் பெருமைப்படுகின்றோம். அது சமூகவாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் எத்துணை மாறுபட்டது என எண்ணிப் பார்க்கவேண்டாவா? ஆம்! அதை எண்ணித்தான் சமுதாயத்தில் கல்வியால்—அறிவுடைமையால்—ஏற்றத்தாழ்வு இருத்தலாகாது என எல்லா நாட்டினரும் கோடிகோடியாகப் பணத்தைச் செலவு செய்கின்றனர். இங்கே சமுதாயம் தனிமனிதனைத் தன்னோடே பிணைத்துச் செல்லுவதைக் காணமுடிகின்றதல்லவா!

இப்படி வாழ்வின் பிற தேவைகளாகிய உடையையும் உறையுளையும் பிறவற்றையும் மனிதனுப் பிறந்த ஒவ்வொருவனும் பெற்றே தீரவேண்டும். விண்ணே கூரையாய், மண்ணே பாயலாய்க் கண்வளரும் பல்லாயிரம் மக்கள் நம் சென்னை போன்ற நகரங்களில் வாழும்போது நம்மை முன்னேறிய சமூகத்தார் என்று எப்படி நாம் கூறிக்கொள்ள இயலும்? ஒரு சிலர், சில நாள் தங்குவதற்கென உயர்ந்த பல மாளிகைகளைப் பூட்டிவைத்திருக்கும்போது, ஆண்டு முழுவதும் குளிரால் வாடி, மழையால் நனைந்து, வெயிலால் உலர்ந்து

பலர் வாடும் சமுதாயத்தைப் புரையோடிய சமுதாயம் என்று தானே சொல்ல வேண்டும்? இந்த வேறுபாடுகளையெல்லாம் களையத்தக்க நெறியில் எவர் அரசியல் நடத்திஞலும், அவர் அரசியல் வாழ்வு சிறக்கும் என்பது ஒருதலை. இவற்றையெல்லாம் உள்ளடக்கித்தான் : கம்பர் அக்காலத்திலேயே சமுதாயம் செம்மையாகப் புரை ஓடாத நல்ல நிலையில் அமையவேண்டுமானுல், உலகில் உள்ள அத்தனைச் செல்வங்களும் தனி மனிதர் எல்லைப்பட்ட ஒவ்வொரு வரும் பெற்றே ஆகவேண்டும் என வற்புறுத்திஞர். கம்பர் தாம் நேரில் காணுத ஒருநாட்டை— கோசல நாட்டைத் தம் நூலில் விளக்கப் புகுந்தார். அந்த நாடு உண்மையில் அவர் கற்பனையில் காட்சி அளித்தது. ஆனுல், அவர் கண்ட கற்பனை வெறும் பயனற்ற வெற்றுக் கற்பனையாகிவிடவில்லை: செம்மை சான்ற சமுதாயம் எப்படி இருக்கவேண்டும் என்ற கற்பனையில் அவர் உள்ளம் சென்றது. அந்த நாட்டில் உள்ள அத்தனைச் செல்வங்களும் சமுதாய உடைமையாய் இருந்த அதே வேளையில் தனி மனிதனுடைய உடைமையாகவும் இருந்தன எனக் காட்டுகின்ருர். அவர் வாய்ச்சொல் இதுதான்.

'எல்லாரும் எல்லாச் செல்வமும்
எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும்
இல்லை மாதோ."

இதைச் சில அரசியல் பொருளியல் வாதிகள் தத்தம் கருத்துக்களை விளக்கப் பயன்படுத்திக் கொள்வர். நான் இங்கே கூறுவது கம்பர் காட்டுவது இந்தக் குற்றமற்ற சமுதாய வாழ்வையே என்றென்றும் மனித சமுதாயம் அமைக்கப் கடமைப்பட்டிருக்கிறது என்ப

தாகும். இதை அடிப்படையாக வைத்து ஆராயின் தனிமனித வாழ்வு சமுதாயத்துக்கு எவ்வளவு பயன் பட்டுள்ளது என்பது நன்கு புலனுகவாமல்லவா!

உரிமையும் உடைமையும்

இப்போது நாட்டில் தனியார் உடமை பாதுகாக் கப்படவில்லை எனவும் தனியார் உரிமை பறிக்கப் படுகின்றது எனவும் பலர் பேசக் கேட்கின்றோம், அர சியல் தலைவர்கள் அதுபற்றிப் பல பக்கங்கள் கட்டுரை எழுதவும் கண்டிருக்கின்றோம். நாம் மேலே கம்பர் காட்டிய அடிகளைக்கொண்டு ஒருசிலர் எல்லா வற்றையும் அரசாங்கப் பொதுவுடைமையாகச் செய் வதுதான் சிறந்தது எனக் கருதுகின்றனர். அந்தக் கருத்தே 'தனியார் உரிமை' பறிக்கப்படுகின்றது என்ற கூக்குரல் எழக் காரணமாய் அமைகின்றது. இன்றைய இந்திய அரசியல் அமைப்பில் பிற எல்லா உடமைகளும் பாதுகாப்புப் பெற்றிருப்பது போன்றே தனியார் உரிமைகளும் பாதுகாக்கப் பெறுகின்றன. சில விடங்களில் ஆளுவோருக்கும் அவரை எதிர்ப் போருக்கும் உண்டான மாறுபாடுகள் காரணமாகவும் தனி உரிமைகள் மறுக்கப்படுவன என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது. எனினும், 'தனியார் உரிமை' அல்லது 'தனிமனித உரிமை' எந்த அளவு சமூக உரிமையோடு இணைந்து செல்ல வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தால், இவற் றின் வேற்றுமை நிலையும் வேற்றுமையுள் காணும் ஒற்றுமை உணர்வும் நன்கு புலனுகும்.

தனி உரிமை கூட்டு உரிமையாகிய சமுதாய உரிமையின் ஒருபகுதியே யாகும். அப்படியே பல தனி உரிமைகளின் அமைப்பே கூட்டு உரிமையை

வாழ வைக்கிறது என்பதையும் உணரவேணடும். வீடு என்பது தனி உரிமை; ஊர் என்பது கூட்டு உரிமை. வீடு என்னுடையது என்பதற்காக அதை என் விரும்பப்படி எப்படி வேண்டுமானலும் அமைத் கொள்வேன் என்று கட்டுவதோ அல்லது அவ்வாறு கட்டியவீட்டின் முன் தன் தனி உரிமையைக் காக்கத் தெருவை எப்படி வேண்டுமானலும் வைத்துக்கொள் வேன் என்று சொல்லுவதோ தனி உரிமையாகாது. தன் தனி உரிமை சமூக உரிமையைப் பாதுகாக்கும் அள வுக்குத் தன்னை ஒவ்வொருவரும் சரிசெய்துகொள்ள முன்வர வேண்டும். இப்போது புதிதாக அமைக்கும் நகரப்பகுதிகளில் ஆட்சியாளர் இன்னின்ன வகையில் வீடுகள் அமைய வேண்டுமென நியதியிடுகின்ற னர். அந்தப் பெரு நியதியின் எல்லைக்கு உட்பட்டு புறத்தோற்றத்தில் அவர் தம் சமூக அமைப்புக் கேடாத வகையில் ஆக்கவேலை செய்து, உள்ளே தன் உரிமையும் நலமும் காக்கப் பெறும் வகையில் மாறுதல் செய்துகொண்டால் யாரும் மறுக்கமாட்டார் கள். அப்படியே தத்தம் தெருக்களை எப்படி வேண்டு மானலும் வைத்துக் கொள்வோம் என்று கழிவான செறியவும் மாசு படியவும் வைத்திருந்தால், அது தனி உரிமையானலும் சமூக உரிமையையும் அது பாதிக்கிறது அல்லவா? அந்த வழியாகச் செல்லும் அத்தனை பேரும் அவற்றை மிதித்தும் கடந்தும் செல்லவேண்டி யிருக்கிறதல்லவா? இங்கே தனி உரிமை சமூகத்தைப் பாழாக்குகின்றதே! இந்த நிலை யிலேதான் சமுதாய வாழ்வையும் தனி மனித வாழ் வையும் பிணைக்க வேண்டிய அரசியலார் சில சட்ட திட்டங்களை ஏற்படுத்தி நாட்டினை—உலகினை—நலம் பெற வைக்கின்றனர்.

முதல் நாடவேண்டும்

'திருடுவது எனது தனி உரிமை,' என்று யாராவது சொல்லுவாரா? திருடுவது குற்றம் என்பதைப் பல்லாயிரமாண்டுகளாகச் சட்டங்களும் நீதி நூல்களும் வலியுறுத்துகின்றன. அப்படியே கொலை செய்வதும் மன்னிக்கமுடியாத குற்றமாகக் கருதப்படுகிறது. இருப்பினும், அவை இரண்டும் நாட்டில் நடைபெற்றுக் கொண்டு தானே வருகின்றன? நல்லவேளை! 'அது என் தனி உரிமை' என்று வாதாடும் வகையில் அவை செய்யப்பெறவில்லை! ஏன்? எத்தனையோ ஆயிரமாண்டுகளுக்கு முன்பே வரையறுத்த குற்றங்கள் என ஆக்கப்பெற்று, அவற்றைச் செய்ய யாருக்கும் உரிமை இல்லை எனச் சமுதாயம் தீர்ப்புக் கூறிவிட்டது. எனினும், அதிலும் தற்காப்பு முதலியவற்றிற்கு விலக்கு அளிக்கிறது. மற்றும் தனி மனிதனைக் கொல்லுவது தவறு என்று சட்டம் செய்யும் சமுதாயம் போர்களில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவிப்பதைக் காண்கின்றோம். ஆம்! அது சமுதாய நியதி; இது தனி மனிதன் நியதி என வாளா இருக்க வேண்டும்.

குற்றங்கள் என்று வரையறுத்துவிட்டு அவற்றைச் செய்தால் தண்டனை உண்டு என்றும் நீதி மன்றங்களை நிறுவிவிட்டு அமைதி பெறுவதுமட்டும் சமுதாயநலத் திட்டமாகாது என்று அறிந்து குற்றம் சிறையில் தள்ளும் எனத் தெரிந்திருந்தும், கொலை பதிலுக்கு உயிரிழைப்பைத் தேடித் தரும் எனத் தெளிவாக அறிந்திருந்தும் அவற்றை செய்யும் தனி மனிதர் பெருகிக்கொண்டேயிருக்கும் காரணத்தை அறிய முற்படவேண்டும். சமுதாயத்தை

நேரிய வழியில் பற்றி ஈர்த்துச் செல்ல விரும்பும் ஆட்சியாளர்கள், 'குற்றமும் தண்டனையும் உள்ளன; அவை ஒன்றை ஒன்று பார்த்துக்கொள்ளும்', என அமைந்துவிடலாகாது. குற்றங்கள் நிகழுவதற்கான அடிப்படைக் காரணங்களைக் காணல் வேண்டும். உண வில்லாது தற்கொலை அல்லது கொள்ளை—அப்படியே சில பிணக்குகள் காரணமாகக் கொலை—இந்த உண் மைகளை அலசி ஆராய்ந்து அக்கொடுமைகள் நிக ழக் காரணமாகிய அடிப்படைகளை நாட்டை விட்டே - சமுதாய வாழ்வின் வழியைவிட்டே கல்லித் தூர எறிய முயலவேண்டும். அந்த அடிப்படைக் கார ணத்தை அறிந்தோ அறியாமலோ விட்டுவைத்துக் குற்றம் செய்பவர்களை மட்டும் தண்டித்தால் அது வும் புரையோடிய புண்ணை மூடி வைப்பதேயாகும். மற்றும் அவ்வாறே செயலாற்றும் சமுதாய மருத்து வன், வள்ளுவர் வாய்மொழிப்படி மருத்துவனுக மாட்டான். நல்ல மருத்துவன் செயலை,

> 'நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
> வாய் நாடி வாய்ப்பச் செயல்.' (948)

என்று வள்ளுவர் காட்டுவர். இது உடல் நோய்க்கு மட்டும் கூறிய முறையன்று; சமுதாய நோய் உட் பட அத்தனை நோய்க்கும் பொருந்திய ஒன்றே. எனவே, சமுதாய உரிமைகளைக் காக்க விழையும் ஒவ்வொருவரும் இவவாறு தனியார் உரிமையில் ஏற் படும் எல்லாக் குறைபாடுகளையும் களைந்தே மேற் செல்லவேண்டும்.

இரண்டும் இணைந்ததே வாழ்வு

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதும் ஒற்று மையில் வேற்றுமை காண்பதும் மனித சமுதாயத்

தில் இயல்புதான். வேறுபாடு இல்லை என்று சொன்னால், வேற்றுமையில் எப்படி ஒற்றுமை காண இயலும்? மனிதனுக்கு மனிதன் வேறுபாடு உண்டு; இனத்துக்கு இனம் வேறுபாடு உண்டு; சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபாடு உண்டு. இந்த வேற்றுமைகளிலெல்லாம் ஒற்றுமை காண்பதே உலக சமுதாயத்துக்கு நற்காலம் உண்டாயிற்றென்ற அறிகுறி. தனி உரிமை போன்றே தனி நாட்டு உரிமையும் பேசப்பெறுகின்றது. சீனு உலக அரங்கில் இடம் இடம் பெறவில்லை யல்லவா? : அங்கே தனி நாட்டு உரிமை மறுக்கப்படுகிறது. அறிவறிந்த பிற நாடு நாடுகள் அக்குறையைக் காட்டி, அது சேராதவரையில் உலக அரங்கு உண்மைச் சமுதாய அரங்கா காது என வற்புறுத்துகின்றன. ஆனால், உலக சமுதாயம் செம்மையாகச் செல்லவில்லை என்பதையே உலக அரங்கின் நிகழ்ச்சிகள் நமக்குக் காட்டுகின்றன. அதனாலேதான் அடுத்த போர் என்று தொடங்குமோ என்ற அச்சத்திலே உலக மக்கள் அனைவரும் வாழவேண்டிய நிலையில் இருக்கின்றோம். உலகம் ஒன்றி வாழக் கூட்டுறவு முறையில் ஆட்சி அமைய வேண்டுமென முன் வாழ்ந்த வெல்ஸ்[1] போன்ற அறிஞர்கள் காட்டிச் சென்றனர். ஆனால், உலக வாழ்வுக்கென அமைக்கப்பட்ட ஒரு பெரிய அரங்கத்திலே அக்கூட்டுறவு குதிரைக் கொம்பாய் இருக்கிறது. தனி நாட்டு நலனை எண்ணும்போது அதன் பலம்—பொதுச் சமுதாய பலம்—பாதிக்கப் பெறுகின்றது. இதை அவர்கள் எண்ணமாட்டார்களா? எண்ணுகிறார்கள். என்றாலும், தனி நலம் அல்லது தனி நாட்டு உரிமை என்ற எண்ணம் வந்தபோது அனைத்

[1] H. G. Wells

தினும் கொடுமை புகுகின்றது. தனிநாடும் பொது நலமும் பிணைந்தே வாழ்வன என்ற உண்மையை ஒவ்வொரு நாடும்-ஏன்?-ஒவ்வொரு தனி மனிதனும் உணரும் வரையில் உலகம் இப்படி அஞ்சி அஞ்சியே செல்லவேண்டியுள்ளது.

தனி உரிமையும் பொது உரிமையும் இணைந்து காக்கத்தக்க வகையிலேயே நாடுதோறும் பல கூட்டுறவுத் தாபனங்கள் உண்டாக்கப்பெறுகின்றன. இன்றைய இந்திய அரசாங்கச் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் இவ்விரண்டையும் இணைத்தே ஆக்கப்பெறுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் கூட்டுறவுப் பண்ணை சிறக்க நடைபெற்ற தறிவோம். என்ருலும், மக்கள் அதில் முழுநாட்டம் கொள்ளவில்லை. கூட்டுறவு முறையில் பண்ணை முறை அமைக்கவேண்டும் என்ற நியதிக்கு எண்ணற்ற வாதப் பிரதிவாதங்கள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. அவற்றுள் 'இது, சரி' அல்லது 'இது தவறு' என்று நாம் இங்கு ஆராயவேண்டா. பொதுவாகக் கூட்டுறவு நிறுவனங்கள் தனி உரிமை பொது உரிமை இரண்டும் கலந்து, தனி மனிதனும் சமூகமும் பிணைந்து செல்ல உண்டானவை என்பதை மட்டும் நாம் நினைவில் அமைத்துக்கொண்டால் போதும்.

சமுதாயத்தில் சில நிகழ்ச்சிகள் கூட்டுறவு வகையிலேயே அமையவேண்டியுள்ளன. காற்பந்தாட்டப் போட்டியையோ கிரிக்கெட்டுப் போட்டியையோ காணலாம். அங்கே தனி மனிதன் என்ன செய்ய இயலும்? பலர் சேர்ந்தே அந்த ஆட்டத்தை

ஆடமுடிகிறது. வெற்று விளையாட்டை விட்டு வேறு தொழிலையே காண்போம். பெரிய ஆலைகளில் ஆடைகள் நெய்யப் பெறுகின்றன; வயல் வெளிகளில் விவசாயம் நடைபெறுகின்றது; பாதைகளில் வண்டிகள் செல்கின்றன; தண்டவாளம் அமைத்து இரயில் ஓடுகிறது. எல்லாம் தனி மனிதன் சாதனைகள் என்று சொல்லமுடியுமா? மக்கள் கூட்டுச் சாதனைகளே இத்தனை வழிகளையும் சமுதாயத்துக்குச் செய்து தந்தன. மற்றும் இந்தக் கூட்டுச் சக்திகளே ஓரளவு தனியார்துறை பொதுவார்துறை என்ற வேறுபாட்டையும் தீர்த்துவைக்கின்றன.

சமுதாயத்துக்கே பெரும் பங்கு

நாட்டில் தனியார் உரிமை பறிக்கப்படுகிறது என்ற கூக்குரல் எழுவதை முன்பு குறிப்பிட்டோம். அதன் அடிப்படைக் கருத்தென்ன? தனியார் செய்து வந்த பல தொழில்கள் அரசாங்க உடைமையாக மாறிக்கொண்டே செல்வதைக் காட்டுவர் பொருளாதார அறிஞர். அதற்கேற்ப நாளுக்கு நாள் அரசாங்கம் பல்வேறு தொழில் துறைகளைத் தன் உடமையாக்கிக்கொண்டு வருவதைக் காண்கின்றோம். ஏன் இப்படி நடைபெறுகிறது? ஒரு பக்கம் தனி உரிமைகளும் தனியார் தொழில்களும் நசுக்கப் பெறுகின்றன என்ற கூக்குரல் எழும்பும் அதே நேரத்தில் மற்றொருபுறத்தில் 'எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்குக' என்ற ஆரவாரமும் எழுந்துகொண்டேயிருப்பதைக் காண்கின்றோம். இவற்றுள் பொதிந்துள்ள அரசியல் சூழல்களையோ அன்றிச் சிக்கல்களையோ நாம் இங்கே எண்ணிப் பார்க்கவேண்டா. சமுதாய அடிப்படையில் இந்த இரு வேறு வகைக்

கூக்குரல்களையும் நோக்குவோம். தனியார் துறையிலுள்ள பல தொழில்களில் எண்ணற்ற தொழிலாளிகள் வேலை செய்கின்றார்கள். அவர்கள் தத்தம் தொழிலில் வரும் பொருளால் பெருகும் இலாபத்தில் பங்கு கோருகின்றனர். இக்காலத்தில் சும்பளம் போக, 'போனஸ்' என்றும் வீட்டு வசதி என்றும் பல வகைகளில் அந்த அதிக இலாபத்தில் பங்குதரப் படுகின்றது. ஆனால், அரசாங்கத் தொழில் துறையில் அத்தனை வசதிகள் இல்லை என்பதும் தெரிகிறது. தெரிந்தும், அரசாங்க உடைமையாக்க எழும் கூக்குரல் ஏன் உண்டாகின்றது? அடிப்படை ஒன்றே யாகும். அரசாங்க உடைமையால் அத்தொழிலால் வரும் இலாபத்தில் தொழிலாளிக்கு ஒரு சிறு பகுதியும் கிடைக்காது போயினும், அந்த இலாபம் முழுதும் பொதுச் சமுதாயத்துக்கே பயனுகின்றது. அதே வேளையில் போனஸ் முதலியன கொடுத்தும் தனியார் துறையில் வரும் இலாபத்தில் பெரும் பகுதி தனி மனிதனையே சென்று சார்கின்றது. பின்னது நாட்டில் பொருளாதார ஏற்றத் தாழ்வை வளர்த்துச் சமுதாயத்தைச் சீர்கெடச் செய்ய, முன்னது சமுதாயத்தில் சமப் பங்கு பெற வாய்ப்பளிக்கின்றது என்பதேயாகும். அரசாங்க உடைமையாக்குவதில் எத்தனையோ குறைபாடுகள் இருந்தும் இந்த ஒரே அடிப்படை காரணமாகத்தான் இரு வேறு வகைக் கூக்குரலை நாட்டில் கேட்கமுடிகின்றது. தனியார் உரிமை கோரும் மக்கள் இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து தங்கள் இலாபத்தின் எல்லையைக் குறைத்து அதைச் சமுதாயம் முழுதும் பயன்பெறும் வகையில் பங்கிட்டுக்கொடுக்க முன் வருவார்களானால், பின் வரும் கூக்குரல் பெரும்பாலும்

இல்லையாகும் இன்றைய சமுதாயத்தில் வாழும் அனைவரும் பல்வேறு வகைச் சூழல்களால் விழிப் புணர்ச்சி பெற்றுள்ளனர். எனவேதான் நாட்டில் பொதுநலம் காணவேண்டும் என்ற உணர்வு பெருகி யுள்ளது. ஆகவே, தனிமனிதர் மேற்கொள்ளும் எந்தச் செயலிலேயும் சமுதாயத்துக்கு அதிக பங் குண்டு என்பதைச் செயலில் காட்டத் தொடங்கினால் பல குறைகளும் வேலை நிறுத்தங்களும் பிற கொடு மைகளும் நீங்கும்

தனியார் பேச்சுரிமை எழுத்துரிமை பற்றியும் பேச்சுக்கள் எழுகின்றன. இந்திய அரசியல் அமைப் பிலே தனியார் பேச்சுரிமை எழுத்துரிமை வழங்கப் பெற்றிருந்தும் ஒரு சிலருடைய உரிமைகள் பறிக்கப் பெறக் காரணம் என்ன? எல்லாவற்றிற்கும் நாம் மேலே காட்டிய காரணம் பொருந்தும். தனக்கு உரிமை உள்ளதென்ற காரணத்தாலே 'எதையும் எழு தலாம், எதையும் பேசலாம்' என்ற உணர்வில் சமு தாய வாழ்வுக்கு ஊறுவிளைக்கும் பேச்சினையும் எழுத் தினையும் உலவவிட்டால், அவற்றைத் தடை செய் வது இயற்கை. ஆனால், எத்தகைய பேச்சு அல்லது எத்தகைய எழுத்து ஊறு செய்வது என்பது திட்ட மாக வரையறை செய்யப் பெற்றுள்ளதா? என்ற வினா எழும். ஆளுபவர் நல்லவர்களாயின் பொதுவாக மக்கள் சமுதாயத்துக்கு மாறுபாடுவிளைக்கும் அத்தனையையும் இந்த எல்லைக் கோட்டுக்குள் அமைக்கலாம். அன்றி அவர்கள் வேறு வகையில் இருப்பார்களாயின், தம் மைப் பற்றிக் குறைகூறுவதையும் பிறவற்றையும் இந்த எல்லைக் கோட்டுக்குள் அமைக்கலாம். ஆனால், உணர்வுற்ற மக்கள் சமுதாயம் அன்று இன்றெனும்

என்ருயினும் 'ஒன்றிய மக்கட் சமுதாயத்துக்கு ஒத்தது இது ; ஒவ்வாதது இது' என்று வரையறுத்து முன்னதை வாழவைத்து, பின்னதைக் குழி தோண்டிப் புதைத்து இல்லையாகச் செய்துவிடும். இதைக் கடந்த கால இலக்கிய வரலாறு நமக்கு நன்கு தெளிவாக்கும் என்பது ஒருதலை எத்தனையோ எதிர்ப்புகளுக்கும் மாறுபாடுகளுக்குமிடையே தமிழ்ச் சமுதாய வாழ்வினை ஒட்டி உண்டாகிய இலக்கிய இலக்கணங்கள் வாழ்வதையும், எத்தனையோ பக்க பலமும் பாதுகாவலும் இருந்தும் தமிழ்ச் சமுதாய நெறிக்கு மாறுபட்ட தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் அழிவதையும் நாட்டில் காண்கின்றோம். இந்த நிலை எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் காணக் கூடியதேயாகும். எனவே, தனியார் உரிமை அன்றைய அரசாங்கத்தாலோ மற்றவராலோ முடிவு செய்வதில் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், வளரும் மக்கட் சமுதாயம் அந்த உரிமைகளைப் போற்றும் வகையில் தேவையானவற்றை ஆயிர மாயிரமாண்டுகளாயினும் காப்பாற்றுவதோடு தேவை யற்றவற்றை அவ்வப்போது அழிக்கவும் தயங்குவ தில்லை.

இவ்வாறு எத்தனையோ துறைகளில் தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் உள்ள தொடர்பினைக் கால வரையறையின்றிக் கண்டுகொண்டே போகலாம். இங்கே நாம் கண்ட அனைத்தும் பெரும்பாலும் இந்த நூற்றாண்டின் அடிப்படையில் அமைந்தவையேயாகும். தனிமனிதன் சமுதாயமாக மாறின அந்த மிகப் பழைய நாள்தொட்டு நேற்றுவரை வளர்ந்து வந்த சமுதாய முறையில் இப்படி எத்தனையோ

வகையில் தனிமனிதனும் சமுதாயமும் இணைந்து வாழ்ந்து வரக் காண்கின்றோம். தனி மனிதன் இன்றேல் சமுதாயம் இல்லை; அப்படியே சமுதாய வாழ்வின்றேல் தனிமனித வாழ்வும் இல்லை என்ற இந்த உண்மையை உள்ளபடி உணர்ந்து மக்களாக வாழும் ஒவ்வொருவரும் தம்மை மறந்து சமுதாயத்துக்குத் தம்மை ஒப்படைத்து, அதே வேளையில் தேவையான 'தன்' வாழ்வையும் இழக்காது, அப்படி இழக்கநேரில் அது சமூக வாழ்வுக்காக அமையும் என்ற நெறியில் வாழ்ந்து வந்தால் உலக சமுதாயம் ஓங்கும். இந்தப் பிணைந்த சமுதாயம் வளர்ந்து வந்த நெடுங்காலத்தில் அதன் பக்கல் அணைந்து வளர்ந்து, சமுதாயத்தையும் வளர்த்தவை பல. அவற்றுள் ஒன்று நாகரிகம். எனவே, நாகரிகத்தோடு பிணைந்து வந்த மக்கட் சமுதாய வரலாற்றை எண்ணிப் பார்க்கலாம்.

V. நாகரிகமும் சமுதாயமும்

எது நாகரிகம்?—நாகரிகத்தின் அடிப்படை—பொன்னை நாட்கள்—காலந்தோறும் வளர்ந்த ஒன்று—சமயமும் நாகரிகமும்—திரும்பிக் காண்க—உழவும் உள்ளமும்—சில குறைபாடுகள்—தேவையான மாறுபாடுகள்—பன்மையில் ஒருமை

எது நாகரிகம்?

'சமுதாய வளர்ச்சிக்கு நாகரிகம் அடிப்படை,' என்னும் கொள்கையை யாவரும் மேற்கொள்வர். எனவே, சமுதாயமும் நாகரிகமும் இணைந்து செல்லக் கூடியவை என்ற முடிவும் கொள்ளப்பெறும். சமுதாயம் எப்படிக் காலம்காண முடியாது மிகப்பழைய காலத்திலிருந்து வருகின்றதோ, அப்படியேதான் நாகரிகமும் இருந்துவருகின்றது. 'நாகரிகம்' என்பதற்கு அறிஞர் பல்வேறுவகைப் பொருள் கொள்கின்றனர். அதற்குக் காலந்தோறும் வெவ்வேறு நிலையில் வெவ்வேறு பொருள்கள் அமைந்திருக்கலாம். அப்படியே வெவ்வேறு தோற்றங்களையும் வெவ்வேறு நாட்டுமக்கள் நாகரிகம் என்ற வகையில் வழங்குவர். அறிஞர் இந் நாகரிகத்தைப் புறநாகரிகம் எனவும்

அகநாகரிகமெனவும் இருவகையாகப் பிரித்து, புற நாகரிகத்தினும் அகநாகரிகமே மேம்பட்டது என வும் விளக்கியுள்ளனர். புறத்துறுப்புக்களை ஒப்பனை செய்வதிலும் ஆடை அணிகளைக் கொள்வதிலும் புறநாகரிகம் அமைய, உள்ளத்தைச் செம்மைப்படுத்து வதை அகநாகரிகம் என்பர். எல்லாப் பொருளுக்கும் அகம், புறம் என்ற இரண்டும் உள்ளன. இரண்டை யும் இலக்கண அமைப்புப்பற்றி நான் இங்கே குறிக்க வில்லை ; உள்ளும் புறமும் என்ற உணர்வுபற்றியே குறிப்பிடுகின்றேன். இரண்டும் தூய்மையாய் இருத் தலே நாகரிகமென்பது நல்லவர் கொள்கை. இரு தூயமைக்கும் உரியவற்றை வள்ளுவர் நன்கு தொகுத் துக் காட்டியுள்ளார்.

> 'புறந்தூய்மை நீரான் அமையும் ; அகந்தூய்மை வாய்மையாற் காணப் படும்.' (298)

என்று இருதூய்மைக்கும் நீரையும் வாய்மைமையும் தேவைப் பொருளாக அமைக்கின்றார். முன்னது நம் முட் பலர் மேற்கொள்வது ; பின்னது மறைத்து வைப்பது. உள்ளத்தூய்மை மற்றவருக்குப் புலப்படா தாகையால், அதில் மாறுபாடு இருப்பது மறைக்கப் படுகின்றது. ஆனால், அந்த மறைப்பும் சிலவேளை களில் எல்லைமீறும் நெறியில் வெளிப்பட்டே தீரும். புறத்திலுள்ள தூய்மை நீரால் அமைவதென்றார். உடல், உடை, உறையுள் இன்னபிறவற்றை நீரால் தூய்மை செய்துகொள்ளுகிறோம். சிலர் அவ்வா றும் செய்துகொள்ளாது, புறமும் தெரியாதிருக்கப் பல பொருள்களை மேற்பூச்சாகவும், அணிகளாகவும் அணிந்துகொண்டு அவ்வாறு அணிந்து, உடுத்து, பூசி

உலவுவதையே நாகரிகம் எனவும் காட்டுகின்றனர். சாதாரணமாக இன்று ஒருவன் நாகரிகமாய் வாழ்கின்றான் என்றால், அவனைச் சமுதாயத்தின் உயர்படியில் வாழ்பவனுகத்தான் நாம் கருதுகின்றோம். உடையும் உயர்ந்த மோட்டார் போன்ற வாகனங்களும் மாளிகையும் பிறசாதனங்களுமே ஒருவனைச் சமுதாயத்தில் நாகரிகம் வாய்ந்தவனுகக் காட்டுகின்றன. இவையெல்லாம் புற உலகுக்கு ஓரளவு தேவை என்றாலும், இவையே நாகரிகம் என்ற எல்லையை முடிவுகட்டுவனவல்ல. கிராமத்திலிருந்து வரும் ஏழை, பண்பட்டவனுய் இருப்பினும், அவன் உடை முதலியவற்றைக் கண்டும், எளிய வாழ்க்கை நிலையைக் கண்டும் அவனை எள்ளி நகையாடுகின்றோம். அப்படியே விருந்து என்றால் ஒருரூபாய் மதிப்புடைய பொருளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்து, மேசைநாற்காலியில் உட்கார்ந்து கத்தியும் கரண்டியும் கொண்டு உண்பதையே நாகரிகம் என எண்ணும் காலம்வந்துவிட்டது. இவையெல்லாம் நம்மை ஆளவந்த ஆங்கிலேயர் அவர் நாட்டுச் சமுதாயப்படி மேற்கொண்ட முறைகள். இவையும் அந்நாட்டு இயற்கைச் சூழலாகிய குளிர் நிலைக்கு ஏற்ப அமைத்துக்கொண்டவை. அப்படியே உடையிலும் 'டை' முதலியன கட்டிவாழ்தல் அந்நாட்டுக் குளிர் முறைக்கு ஏற்றவை. அவற்றையும் நாம் அப்படியே பின்பற்றிக்கொண்டோம்; கொண்டதோடு அவற்றையே நாகரிகமென்று, நம் நாட்டுப் பண்டைய பண்பாட்டு அடிப்படையில் அமைந்த செயல், உடை, உணவுமுறைகள் நாகரிகத்துக்கு மாறுபட்டவை என எண்ணி ஒதுக்கித் தள்ளவும் முனைந்துவிட்டோம். இது வளரும் நல்ல சமுதாயத்துக்கு ஏற்றதாகாது. சமுதாயத்தில் எங்கெங்கு நல்லநாகரிகமும் பண்பாடும்

உள்ளனவோ அவற்றைத் தேடி மேற்கொள்ளுவதே சிறந்த அறிவுடைமையாகும். ஆங்கிலேயர்தம் காலம் தவருக் கடப்பாடு, ஒழுங்கான வாழ்க்கை முறை, உழைப்பு முதலிய நல்லியல்புகளே மேற்கொண்டிருந்தால் நம் சமுதாயம் வளர்கின்றது என்பது பொருள். வீண் ஆடம்பரமானவற்றையும் நமக்குத் தேவையற்ற வற்றையுமே பற்றிக்கொண்டால் எப்படிச் சமுதாயம் வளர்ச்சியடைய முடியும் ?

நாகரிகத்தின் அடிப்படை

புறத்தில் மதிப்பளிக்கும் பல்வேறுவகைப் பண்டங்களிட்ட விருந்தினைக் காட்டிலும் உள்ளத்தில் அன்போடு அளிக்கும் கூழே சிறந்தது என்பதும் அதுவே பசிநீக்க வந்த மருந்து என்பதும் நம்நாட்டுப் பண்பாளர் கண்ட உண்மை ; அதுவே சமுதாய நாகரிகத்தின் அடிப்படையுமாம். வீண் ஆரவாரத்துடன் மனவிருப்ப மற்றுக் காட்டும் பல்வேறு உபசரிப்பினும், மனம் விரும்பி அன்பால் தரும் கூழே சிறந்தது என்ற உண்மையை ஒரு புலவர்,

'ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து உண்மை பேசி
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழமொடு பாலன்னம் முகம் சுளித்திடுவராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே'

எனக் காட்டினர். முதலடியில் புறநாகரிகம் முகமலர்ச்சியிலும் உண்மை உரைக்கும் இன் சொல்லிலும் கலந்துள்ளதை விளக்கி, பின்னதில் போலி நாகரிகம் எத்தகைய கொடுமை உடையது என்பதையும் புலவர் தெற்றெனக் காட்டிவிட்டாரல்லவா !

நாகரிகம் என்ற சொல் மிகப் பழமை வாய்ந்த ஒன்று. சங்க காலப் புலவர்கள் இதே சொல்லை உபயோகித்துள்ளனர். அவர்கள் அதை நம்பிக்கையின் அடிப்படையில் வளர்த்தார்கள். சமுதாயம் வளர்வதே நம்பிக்கையின் அடிப்படையில்தானே அவனை அவள் நம்ப, அவளை அவன் நம்ப ஆரம்பித்ததுதான் முதல் சமுதாயம். இன்றும் சமுதாயம் ஒருவரை ஒருவர் நம்புவதால்தான் வளர்கின்றது; நிலை கெடாமலும் இருக்கின்றது. அந்த நம்பிக்கையே நாட்டையும் உலகையும் வாழ்விக்கின்றது. எனவே நண்பரானும் திருவர் ஒருவரை ஒருவர் முழுக்க நம்பவேண்டும் என்பதும் ஒருவர் அறிந்தோ அறியாமலோ கொடுமை செய்தாலும், 'அவர் செய்யமாட்டார்' என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் அக்கொடுமையை ஏற்றும் கெடாது வாழ்வார் என்பதும் வள்ளுவர் போன்ற அறநூற்புலவர்தம் அசைக்க முடியாத நம்பிக்கை.

'பெய்க்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்' (580)

என வள்ளுவரும்

நஞ்சுண்டமைவர் நனிநாகரிகர்

எனப் பிற புலவரும் இதை நன்கு விளக்கிக்காட்டுவர். உற்ற நண்பர் நஞ்சே ஊட்டினும், நண்பர் நஞ்சு ஊட்டமாட்டார் என்ற நம்பிக்கையால் அந்த நஞ்சும் அவரை ஒன்றும் செய்யவில்லை என்பதையே அவர்கள் விளக்குகின்றனர். எனவே உள்ளப் பண்பாட்டின் வழி தோன்றிய நாகரிகம் இந்த அடிப்படையில் சமுதாயத்தை வாழ வைத்தது எனலாம்.

'பண்புடையார் பட்டுண் டுலகம்' என்று பண்பாட்டுக்குக் காணும் அதே தெளிவு இந்த நாரிகத்துக்குப் பொருந்துவதாகும்.

பொன்னை நாட்கள்

இவ்வாறு அகநாகரிகமும் புறநாகரிகமும் இணைந்தே மனித சமுதாயத்தை வளர்த்துவருகின்றன. அகநாகரிகம் ஆட்சிசெலுத்துங்கால் நாட்டிலும் உலகிலும் அமைதி உலவுவதும் புறநாகரிகம் மட்டும் ஆட்சி செலுத்துங்கால் நாட்டிலும் உலகிலும் போர் முதலிய கொடுமைகள் மூள்வதும் இயற்கையாக உள்ளது. இருவகைப்பட்ட நாகரிகங்களும் மனித சமுதாயத்தை வாழவைக்கத் தேவையானவையே. விலங்கென ஆடையின்றி அழுக்குடன் முடிய உடலோடு வாழவேண்டுமென யாரும் கூறார். எனவே புறநாகரிகம் அடியோடு வேண்டாமென்பதில்லை. புறநாகரிக மட்டுமாயின் அது விலங்குணர்வின் பாற்படும் என்றெண்ண வேண்டும். இரு நாகரிகக் கூறுபாடுகளும் மனித சமுதாயத்துக்குத் தேவை என்பதை உணர்ந்து அவற்றை ஒழுங்குபடுத்தி அந்நாகரிக அடிப்படையிலேயே சமுதாயத்தை வளர்த்தல் வேண்டும். சமுதாயமும் அந்த நிலையிலேதான் ஆயிரமாயிரமாண்டுகளாக வளர்ந்துவருகின்றது. அவை பிணைந்து வளர்ந்த வரலாற்றை இனிக் காண்போம்.

தேவை வாழ்வில் புதுப்புது கண்டுபிடிப்புக்களை உண்டாக்கிக்கொண்டே செல்லும் என்பது மேலைநாட்டுப் பழமொழி. தனிமனிதன் குடும்பமாகி, சிறு சிறு ஊர்களை வளர்த்து, நாடு நகரங்களை உண்டாக்கிக்

கொண்டு வளர்ந்த அந்தத் தொடக்க நாளில் அவனுக்கு எத்தனை எத்தனைப் பொருள்களோ தேவையாக இருந்தன என்று கண்டோம். அவ்வக்காலத்து அவரவர் மன அறிவும் புலனுணர்வும் சென்ற வழியிலே பலப்பல பொருள்களைக் கண்டார்கள். அவ்வவற்றுலே அவ்வக் காலச் சமுதாயம் மெல்ல வளர்ச்சியடைந்து வந்தது. வரலாற்று ஆசிரியர்கள் அவரவர்கள் கண்டெடுத்துப் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டே கால வரலாறுகளை அமைத்து அவைகளை நாகரிகம் என்றும் பெயரிட்டு அழைத்தனர். முதற்கற்கால நாகரிகம், செம்புக்கால நாகரிகம், இரும்புக் கால நாகரிகம் என்ற பெயர்கள் இந்த அடிப்படையிலே அமைந்தனவேயாம். முதல் மனிதன் கூரிய எலும்புகளையும் கூர்த்த கற்களையும் தற்காப்புக் காகப் பயன்படுத்திக்கொண்டான். கூரியவைதாம் தற்காப்புக்கு உகந்தவை என்பதையும் அவன் பறவை விலங்குகள் முதலியவற்றைக் கண்டே கற்றுக் கொண்டான். சிங்கம் புலி போன்ற காட்டு விலங்குகள் தம் கூரிய பற்களாலும் நகங்களாலுமே மாற்றாரை அச்சுறுத்தி விலக்கியதோடு, தத்தம் உணவினை உண்டும் வாழ்ந்தமை அவன் கண்டான். தன் பற்களோ அன்றி நகங்களோ அத்துணைத் திண்மையும் கூர்மையும் பெறுத காரணத்தினுலே கல்லையும், செம்பையும் இரும்பையும் பயன்படுத்தினுன். அவ்வாறு முதலில் பயன்படுத்திய ஆயுதங்கள் வடித்தவை என்றோ தீட்டியவையென்றோ பட்டையிட்டவை யென்றோ சொல்லமுடியாது. ஆனல் நாகரிகம் மிக மிக அவ்வுலோகங்களை உருக்கி வேண்டியவகையில் அவற்றை வடித்துக்கொள்ளவும் உருவாக்கிக்கொள்ளவும் கற்றுக்கொண்டான். அந்த வகையில் அவன்

கூட்டு வாழ்வு அவனுக்கு உதவிற்று. அந்தக் காலம் மனித சமுதாயம் ஒருபடி முன்னேறிவிட்டது என்பதை அறிவிக்கும் நிலையில் அமைந்துவிட்டது என்பதைக் காண்கிறோம். அப்படியே வீட்டுப் பொருள்கள் நாட்டுத் தேவைகள் ஆகியவற்றை ஆக்கிக் கொண்டே ஒவ்வொரு நாளும் சமுதாயத்தின் நாகரிக வாழ்வின் வளர்ச்சியில் பொன்னான நாட்களேயாகும்.

காலந்தோறும் வளர்ந்த ஒன்று

நாகரிகம் என்பது நிலையாக நிற்கும் ஒன்றன்று உலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்தே வாழவேண்டிய நிலை அன்று தொட்டே அமைந்துள்ளது. அந்தச் சார்பு, வாழ்வைச் செம்மையாக அமைத்துக்கொள்ளப் பயன்படும் நெறியே நாகரிகம் என்று சொல்லப்பெறுவது. அந்நாகரிகம் அதன் இயல்பிலே கால தேயச் சூழல்களுக்கு ஏற்ப, யார் வேண்டினாலும் வேண்டாவிட்டாலும் தடுத்தாலும் தடுக்காவிட்டாலும் வளர்ந்து கொண்டே வருவதாகும். என்றும் அது நிறைவெய்திவிட்டதென்றோ, இனி வளர்ச்சி அடையாதென்றோ யாரும் சொல்லமாட்டார்கள். மனித சமுதாயம் வாழ்கின்ற வரையிலே நாகரிகமும் பல்வேறு மாறுதல்களோடு வளர்ந்துகொண்டே செல்லும் என்பது உறுதி. இந்த இருபதாம் நூற்றாண்டின் இடையில் வாழ்கின்ற நாம்தாமே நாகரிகத்தில் மிக மேம்பட்ட நிலையில் உள்ளவர்கள் என்று பறைசாற்றிக்கொள்ளச் சிலர் தயங்குவதில்லை. எனினும் எல்லா வசதிகளும் நிறையப் பெற்று, தேவையை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்புகளை உடைய நாம் முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்லுகிறோம் என்று

சொல்லுவதிலும், அந்தத் தொடக்க நாளில் சமுதாயம் என்ற சொல்லே இல்லாமல் சமுதாயமாக வாழ்ந்த அந்த முதற்கால மக்கள் தம் வாழ்வுப் பாதையைக் கல்லிலும் முள்ளிலும் திசை தெரியா நிலையிலும் கொடிய சூழல்களுக்கு இடையிலும் அமைத்து முன்னேறிய நாகரிகமே சிறந்ததென்று சொல்லவேண்டாமா! இன்றைய மக்கட் சமுதாயமும் இதன் வழிவழியாக என்றென்றும் வரும் மக்கட் சமுதாயமும் அவர்களுக்குக் கடமைப்பட்டவையேயாம். நல்ல செம்மைப்படுத்தப்பட்டு, மற்றவரால் ஒழுங்கு செய்யப்பட்டு சிமெண்டு இட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட நல்ல சாலையிலே, வேறு யாரோ செய்து கொடுத்த 'காரி'லே 'நான் மணிக்கு அறுபது கல் வேகத்தில் அழகாகச் செலலுகிறேன் பார்' என்று பெருமைப்படுவதைக் காட்டிலும், காட்டு வழியிலே புற்றில்வாழ் அரவுக்கும் குகையில் வாழ் சிங்கம் புலி போன்றவற்றிற்கும் அஞ்சி அஞ்சித் தானே முட்களை வெட்டி வழி அமைத்து அடிமேல் அடிவைத்து ஒரு நாளைக்கு அரைகல் தூரம் சென்ற அந்த ஆதி மனிதன் பெருமைக்குரியவன் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா? இப்படியே உடை, உணவு, உறையுள் ஆகிய எல்லாத் துறைகளிலும் நம் முன்னேற்றம் வளந்ததாக இருப்பினும் இவற்றின் தேவையை உணர்ந்து இவற்றைப் பெருக்கி வளர்த்து வாழவைத்த அந்த முதல் மனிதர் பல வகையில் நம் பாராட்டுதலுக்கு உரியவராவர்.

இத்தகைய வளர்ச்சியுற்ற நாகரிகங்களை ஒட்டியே மக்களினத்தை வரலாற்றுசிரியர்கள் பிரித்துள்ளார்கள். எகிப்திய நாகரிகம், சுமேரிய நாகரிகம், சிந்து வெளி நாகரிகம், காவிரிக்கரை நாகரிகம், சீன நாக-

ரிகம், கிரேக்க நாகரிகம் என உலகில் இருந்த பழம் பெருநாகரிகங்கள் கண்டு பாராட்டிப் போற்றப் பெறுகின்றன. அவ்வந் நாகரிகமும் தனித் தனி மாறிய மக்கள் சமுதாயத்தை உருவாற்று என்பதை நாம் மறக்க முடியாது. எனவே நாகரிகங்களே சமுதாயத் தோற்றத்துக்கு அடிக்கல்லாக அமைந்தன. என்று சொல்லுவது மிகையாகாது. இந்த நாகரிகங்களில் எது முந்தியது எது பிந்தியது என்று போட்டியிட்டு ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியின் முடிவிலேதான் தத்தம் சமுதாயத் தொன்மையை அறுதியிட முனைகின்றனர். சிந்து வெளி நாகரிகம் அகழ்ந்தெடுப்பதற்கு முன்பு வட இந்தியாவின் தெளிவான பழைய நாகரிகம் ஆரிய நாகரிகமே என வரலாற்றாளர் முடிவு செய்தனர். ஆனால் மொகன் சோதாரோ, ஆரப்பா அகழ்ந்தெடுப்புக்களால் குமரி முதல் இமயம் வரை ஆரியர் வருவதற்கு முன்பே ஒப்பற்ற சிறந்த நாகரிகம் விளங்கியிருந்ததென்றும், அக்காலத்திய சமூகத்தார் பின் வந்த ஆரியரினும் எத்தனையோ வகையில் மேம்பட்டிருந்தனர் என்றும் காண்கின்றோம். அப்படியே எகிப்து நாட்டு நாகரிகத்தையும் அதன் தோற்ற வளர்ச்சியையும் கி. மு. 3300க்கு முன் கொண்டு சென்று அது வளர்ந்து நிலைபெற்ற தன்மையினை உணர்ந்து போற்றுகின்றனர். இப்படியே பிற நாகரிகங்களைப் பற்றியும் ஆராய்கின்றனர்.

பழங்கால நாகரிகங்களையும் அந்நாகரிகங்களின் அடிப்படைகளையும் ஆராயும்போது பலப்பல விசித்திரமான விளக்கங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். எல்லாவற்றையும் ஓரளவு அறிந்துவிட்டதாக எண்ணும் நமக்கு அவர் தம் எண்ணங்களும் கூற்றுக்

களும் செயல்களும் வேடிக்கையாகவும் விநோதமாகவும் தோன்றலாம். ஆனால் அந்த நாகரிக வளர்ச்சியின் பல்வேறு படிகளில் அந்தந்த உண்மையை உணர்த்திய அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். விண்ணைச்சாடி பல கிரகங்களைப் பற்றி ஆராய்ந்து அவற்றைப் பற்றிக் கூறும் இன்றைய பல கருத்துக்கள் பொய்த்துப் போகும் காலம் வரலாம். சுமார் ஐம்பது ஆண்டுகள் கழித்தோ ஒரு நூற்றாண்டு கழித்தோ வான்வெளிப் பயணம் மிக மிக எளிதாக மாறி அக்காலத்தில் உள்ளவர் நமது 'பகீரதப் பிரயத்தனங்களை'ப் படித்து நம்மைப் பைத்தியக்காரர் என வியந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, இப்படியே ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த சமுதாயம் அவ்வவற்றின் நாகரிகத்துக்கு ஏற்பப் பல்வேறு கருத்துக்களைக் கொண்டு வாழ்ந்து வந்ததென்றால் அவற்றை நாம் பாராட்டத்தான் வேண்டும். உதாரணமாக ஒன்றிரண்டைக் கண்டு மேலே செல்லலாம். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இடி, மழை, நெருப்பு இவற்றையே தெய்வமாகக் கொண்டு அவற்றை வணங்கினால் தமக்குத் தீங்கு உண்டாகாதென்றும், அவற்றை வணங்கிப் பகைவர் மேல் ஏவினால் அவை பகைவர்களைப் பொடியாக்கும் என்றும் நம்பி இருந்தார்கள். அப்படியே அவற்றை ஏவிச் செயலாற்ற முயன்றார்களென்றும் காண்கின்றோம். தமிழ் நாட்டிலும் எத்தனையோ நம்பிக்கைகள் அந்தப் பழங்காலத்தில் இருந்தன என்று காண்கின்றோம். இப்படியே கிரேக்க உரோம நாட்டுக் கதைகளிலும் பலப்பல நம்பிக்கைகளைக் காண முடிகிறது. எகிப்திலும் இத்தகைய பழங்கால நம்பிக்கைகளுக்குக் குறைவில்லை. எகிப்து நாட்டில் ஓடும் 'நைல்'

ஆற்றின் நீர் பசுமை நிறமாக இருக்கும்போலும். 'அந்தப் பசுமை நீர் பாய்ந்த காரணத்தினுலேதான் எல்லாப் பயிர்களும் பசுமை நிறம் பெற்றிருக்கவேண்டும்' என்று அக்கால எகிப்திய சமூகத்தார் நம்பி வந்தார்கள் எனக் காண்கிறோம்.[1] அப்படியே எகிப்தில் பெரும் பெரும் கோபுரங்களை (Perimids) இறந்தாரை அடக்கம் செய்ததற்குமேல் கட்டிபதற்கு காரணம் காட்டுவர். இறந்தவர்தம் செல்வங்களையெல்லாம் அவரவர்களுடனேயே வைத்து அடக்கம் செய்து விடுவார்களாகையின், அவற்றை யாரும் எளிதில் பெயர்த்து எடுத்துக் கொண்டு போகமுடியாத வகையிலேயே அவ்வளவு உயர்ந்த கட்டிடங்களைக் கட்டினர்களென்பர். வேறு சிலர், இறந்தார்தம் உடம்புகள் பிற எல்லாச் செல்வங்களிலும் மேம்பட்டவையாதலாலும், மறைந்த அவர் தம் எலும்புகளை எடுத்து மந்திரவாதி முதலாயினர் பலவகைக் கொடுஞ்செயலுக்குப் பயன்படுத்தினர்கள் என்று நம்பியதாலும் அவற்றை யாரும் எடுக்காத வகையில் பெரும் கோபுரங்களைக் கட்டினர்கள் எனச் சொல்லுவர். இன்னும் சிலர் இறந்தவர் எழுந்து வருவதுண்டு எனவும், அப்படி அவர்கள் வரும்போது இருப்பவர்கள் தவறு செய்வார்களாயின் கடுமையான தண்டனையைத் தருவார்களென்றும் எனவே அவர்கள் வராதிருக்கவே அத்தனை பெரிய கோபுரங்களைக் கட்டினர்களென்றும் சொல்லுவர். இப்படி எத்தனை எத்தனைக் கதைகள் சீன நாகரிக காலத்திலும் பிற நாகரிகங்களின் அடிப்படைகளிலும் வழங்குகின்றன. இவற்றைக் கொண்டு அக்காலத்திய சமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் யாரும் அறிவுடன் வாழ்வில்லை என்று முடிவு

(1) The growth of Civilization By V.T. Perry. P. 50.

கட்ட முடியாது. அந்த நிலையிலிருந்து மெல்ல மெல்ல மனித சமுதாயத்தை இன்றைய வாழ்வுக்கு வளர்த்த வையே அந்த நாகரிகங்கள் என்று உணர்தல்வேண்டும்; உணர்ந்து போற்றல் வேண்டும்.

சமயமும் நாகரிகமும்

பல்வேறு வகைப்பட்ட நாகரிகங்களிடையேதான் பல்வேறு வழிபாடுகளும் தோன்றலாயின. அப்படியே பல்வேறு நாகரிகங்கள் வழியில்தான் பலவகையான கட்டிடக் கலைகளும் பிற கலைகளும் தோன்றலாயின. தமிழ் நாட்டு வரலாற்றை அளவிட்டுக் காண்கின்ற ஆசிரியர்கள் இத்தகைய கலைக் கோயில்களையும் அவற்றின் கல்வெட்டுக்களையும் கண்டே அவை சோழர் காலத்தவை, பாண்டியர் காலத்தவை என அறுதியிட்டு உரைக்கின்றனர். அத்தகைய கலை வளர்த்த சமுதாயத்தைப் பற்றி மற்றொரு இடத்தில் விளக்கமாகக் காணலாம். இங்கே வழி பாட்டு முறையைத் தொட்டு மேலே செல்லலாம். சிந்து வெளி நாகரிக வழி பாடும் தென்னாட்டு வழிபாடும் ஏறக்குறைய ஒரே அமைப்பில் இருப்பதைக் கொண்டே அவை இரண்டும் இணைந்த ஒரே நாகரிகம் என்றும், அக்காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே சமுதாயம்தான் வாழ்ந்திருக்கவேண்டும் என்றும் வரலாற்றாளர் முடிவு கட்டுகின்றனர் அல்லவா! சிறப்பாக ஒன்றை மட்டும் கண்டு செல்லலாம். பசுபதியாகிய இறை வழிபாடு ஆரியர் அறியாத ஒன்று என்றும் அது தமிழ் நாட்டில் உள்ளது போன்றே சிந்து வெளிநாகரிகத்தில் உள்ளதால் அது ஆரிய நாகரிகத்துக்கு முற்பட்டது என்றும் காட்டுகின்றார்களன்றே. இப்படியே தென் அமெரிக்க முதலிய நாடுகளில் சிவலிங்க வழிபாடு இருப்பதைக் கண்டு ஒரு காலத்தில் உலக நாகரிகங்

கள். அனைத்திலும் சிவ வழிபாடு முக்கிய இடம்பெற்றிருந்தது எனக் காணமுடிகின்றதெனவும் அவர்கள் அறுதியிடவில்லையா? இப்படியே நாகர் வணக்கம் போன்றவற்றையும் பிறவழிபாடுகளையும் எடுத்துக் காட்டிப் பல நாகரிக நாடுகளையும் சமுதாயங்களையும் இணைப்பதையும் அவற்றின் காலங்களையும் வாழ்ந்த வரலாற்று நிலைகளையும் எண்ணிக் கணக்கிடுகின்றார்களன்றே! அப்படியே வழிபாடாற்றும் முறையிலும் மறுமை உணர்வு, மறுமையில் பெறும் வீட்டின்பம் ஆகியவற்றைக் கண்ட நாகரிக மக்கள் வாழ்வையும் காட்டிக் கணக்கிட்டு உலக சமுதாய வரலாற்றைக் கணக்கிடுவதையும் காணமுடிகின்றதன்றே! அப்படியே சமய அடிப்படையில் எழுந்த பல்வேறு பழக்க வழக்கங்களையும் அவை மேற்கொள்ளும் முறைகளையும் காட்டி அந்தந்த நாகரிக வாழ்வில் மக்கட் சமுதாயம் சென்றதையும் கணக்கிடவில்லையா? இந்தியாவில் இன்றுள்ள பல்வேறு சமயங்களின் பழக்க வழக்களை எண்ணிஎண்ணிப் பகுத்து அவற்றை நிலைகெடாத வகையில் அரசியல் சட்டம் காப்பாற்றவில்லையா? இப்படியே வரலாற்றுக் காலம் முதல் சமுதாயத்தையும் நாகரிகத்தையும் இணைத்த பலவற்றுள்ளும் சமயம் முக்கிய இடம்பெற்றுள்ளதென்பதை யாரே மறுக்கவல்லார்?

திரும்பிக் காண்க

வரலாற்றுக்குட்பட்ட நாகரிகங்களை அறுதியிடுவதைக் காட்டிலும் அதற்கு முன்னுள்ள நாகரிக வாழ்வுகளை அறுதியிடுதல் அத்துணை எளிதன்று. அக்கால வாழ்வை அறுதியிடக கிடைக்கும் சாதனங்களோ மிகக் குறைவாகவே உள்ளன என்பதைக்

காண்கின்றோம். பழைய கற்காலம் முதலிய வரலாற்று எல்லைக்கு முன்வாழ்ந்த மக்கள் நாகரிகமற்றோர் அன்றிக் காட்டுமிராண்டிகளாகவோ வாழ்ந்தார்கள் என்று எண்ண இடமில்லை. அவர்களும் அக்காலச் சமுதாய வாழ்வுக்கு ஏற்றவகையில் நாகரிகம் என்ற நெறியில் சென்றே வளர்ந்தார்கள். அவர்கள் அமைத்த படிகளையெல்லாம் கடந்துதான் நாம் இப்போது மேலே சில படிகளை அடைந்திருக்கிறோம். இன்று அவற்றை இல்லை என்றோ, அவை தாழ்ந்தவையென்றோ தேவையற்றவை என்றோ கூறமுற்படுவோமானால் 'தாய்க் கொலை சால்புடைத்து' என்றதற்கே நாம் பொருளாக்கப்படுவோம் என்பதை உணரவேண்டும். அக்கால மனிதர்கள், நெருப்பின் உபயோகத்தையும் பிற வற்றை அடக்கியாளும் திறனையும் அறியாத அந்த நாளில்—தம்மைத் தாம் பாதுகாத்துக் கொள்ளும் வழித்துறை அறியாத அந்த நாளில்—அமைத்த பல பொருள்களை, பழம்பொருள் ஆராய்ச்சியாளர் அகழ்ந்தெடுத்து உலகின்முன் வைக்கும்போது நாம் வியவாதிருக்க முடியவில்லை யல்லவா!

இந்தியா தொடங்கி அமெரிக்க நாடுவரையில் தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடும் பல்வேறு நாட்டு ஆராய்ச்சியாளர்களும் அங்கங்கே காணும் பழம் பொருள்களைக் கண்டு ஒருபுறம் வியப்பும் ஒருபுறம் அதிர்ச்சியும் அடைகின்றனர். ஒரு சில பொருள்கள் பல இடங்களில் ஒரே தன்மையியில் இருக்கக் காண்கின்றனர். அதே வேளையில் வேறு சில, இடந்தோறும் மாற்றம் பெற்றிருப்பதையும் காணமுடிகின்றது.[1] அவற்றை ஆராய்கின்றபோது மனித சமு

1. The Growth of Civilization By V. T. Perry. P. 107

தாயத்தின் அடிப்படைத் தேவைகளாம் உணவு உடை உறையுள் முதலியவற்றைத் தேடும் முயற்சிகள் ஒன்றுக இருப்பதாகவும் பிறநாகரிக அமைப்புக்களும் முடிவுகளும் வெவ்வேறு வகையில் உள்ளனவாகவும் கொள்ள முடியும். எப்படியாயினும் இன்று இருநூறு கோடி மக்களுக்கு மேலாகப் பல வேறு நாகரிகங்களுக்குட்பட்ட மனித சமுதாயம் மிகப்பழங் காலந்தொட்டே அறிந்தோ அறியாமலோ சிலவற்றில் மாறுபட்டும் பலவற்றில் இணைந்தும் 'மனித சமுதாயம் முன்னேறுவதே நாகரிகம்' என்ற குறிக்கோளில் வளர்ந்துள்ளது எனக் கொள்வதில் தவறு இல்லை.

உழவும் உள்ளமும்

இவ்வாறு வளர்ந்த நாகரிகத்தின் சிறந்த முதற்படி என்பதை வேளாண்மை என்றே பல ஆராய்ச்சியாளர்களும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். நாம் பண்பாட்டு வளர்ச்சி பற்றியும் சமுதாய வளர்ச்சிபற்றியும் ஆராயும்போது இதே உண்மையினை நாம் காண்கின்றோம். இதனால் பிறதொழில்களையெல்லாம் மனிதன் நினைப்பதற்கு முன்னே உழவாகிய வேளாண்மையை எண்ணி எண்ணியே தன் சமுதாயத்தையும் நாகரிகப் பண்பாட்டையும் பிறஎல்லா இயல்புகளையும் வளர்த்துக் கொண்டான் என்று அறிதல் வேண்டும். அதனால் தான் போலும் திருவள்ளுவரும்,

'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழன்றும் உழவே தலை' (1031)

என்று காட்டிச் சென்றார். ஔவையாரும்:

'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு'

என்று பாடிச் சென்றார். கம்பரும் தம்பெரு இராமாய

ணத்துக்கு நிகரென்னுமாறு ஏரெழுபதைப் பாடிச் சென்றார். இதனாலேயே பழங்கால மன்னர்தம் போர்களைப் பற்றிக்கூறும் போதெல்லாம் புலவர்கள் அவர்களை உழவரோடு ஒப்பிட்டே பாராட்டியுள்ளனர்.

இன்றும் உழவு உலகில் முதல் இடம்பெற்றே உள்ளது. உழவு பழங்கால முறையில் நடைபெற்றாலும் அன்றிப் புதுப்புது விஞ்ஞான விளைவுகளாலும் புதுக் கருவிகளாலும் புதுமுறைகளில் நடைபெறுலும் உழவு உழவுதானே. இந்த உழவு செம்மையாக நடைபெறுவிட்டால் நாட்டில் பிற எல்லா வளன்களும் செழித்தாலும் பயன் என்ன? திருவள்ளுவர் அதனாலன்றோ வேறு எத்துணை வகையில் உலகம் முன்னேறிச் சென்றாலும் அது திரும்பத் திரும்ப உழவின் பின் வந்தே ஆகவேண்டும் எனக் காட்டினார். இதனாலேயே மனித சமுதாய வரலாற்றை அறுதியிட நினைக்கின்ற வரலாற்றாளரெல்லாரும் அவனுடைய உழவுத் தொழில் தொடங்கிய நாளைப் போற்றிப் புகழ்கின்றனர். அவன் ஆற்றுநீரைக் கொண்டு நிலத்தின் புறத்தைப் பண்படுத்திப் பயிர்விளைந்த அதே காலத்தில் தான், உள்ளமெனும் நிலத்தை உண்மையெனும் நீரைப்பாய்ச்சி அன்பெனும் விதையைவித்தி நல்ல அறுவடை செய்து சமுதாயத்தைச் செம்மையாக்கிக் கொண்டான். வேளாண்மை அல்லது உழவு என்று சொல்லும்போது அகம் புறம் இரண்டிலும் நடந்த வேளாண்மையைத் தான் இங்கே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உழவுத்தொடக்க நாளிலேதான் நாம் மேலே கண்டபடி பலருடைய உதவியை மனிதன் நாடினான். அத்துடன் பலருடன் நன்கு பழகக் கற்றுக் கொண்டான். உள்ளம் திறந்து ஒருவரோடு

ஒருவர் பழகிய காலமும் அதுதான். அத்துடன் கூட்டுறவு முறையில் கலந்துவாழத் தொடங்கிய காலமும் அதுதான். மற்றும் அதுதான் மற்றெல்லாத் தொழிலிலும் மேம்பட்டது எனக் கூறுவர். சமயத்துறையில் கடவுள் உணர்வை விளைவிக்க வந்த அடியவர்களெல்லாம் கூட இந்த உழவையே தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக் காட்டுகின்றார்கள்.

'மெய்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையே நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே' (தேவாரம்)

என்ற கடவுள் நெறிப்பாடலில்தான் அப்பரடிகளார் எத்துணை உண்மைகளை உணர்த்திவிட்டார் என்பதை எண்ணி எண்ணி மகிழ வேண்டியுள்ளதன்றே!

அந்த உழவின் வாழ்வைப்பற்றிக் கூறும் ஆராய்ச்சியாளர்கள் மற்றொரு உண்மையையும் நமக்குக் காட்டுகின்றனர். அந்தப் பழங்காலத்தில் உழவுத் தொழிலால் பண்பட்ட நாகரிகத்தை மேற்கொண்ட மக்கட் சமுதாயம் சாதி முதலிய வேறுபாடுகளை அறியாத ஒன்று என்ற உண்மையை அவர்கள் கண்டு கூறும் போது நாம் எத்துணை மகிழ்கின்றோம். அக்காலத்தில் மக்களினத்தில் வேறுபாடு காணுது, அதே வேளையில் மாடு முதலிய விலங்குகளையும் தம் செயலுக்குப் பழக்கி, 'மாட்டை'யே செல்வமாக மதித்து அவர்

கள் புத்தம் புதிய நாகரிக வாழ்வை உலகுக்கு நல்கிய திறனை என்றென்றும் உலக சமுதாயம் மறவாது போற்றக் கடமைப்பட்டிருக்கிறது. போற்றும் என்ற உறுதியிலும் உணர்விலும் நின்று நாம் மேலே செல்லலாம்.

சில குறைபாடுகள்

நாகரிக வளர்ச்சியின் அடிப்படையில்தான் நாம் மேலே கண்ட சமுதாய அமைப்புக்களையும் அரசர் முதலிய பகுப்புக்களையும் அடக்குவர் ஆராய்ச்சியாளர். நாகரிகத்தின் முதற் படியாகிய வேளாண் வாழ்வின் காலத்தில் மக்கள் வேறுபாடற்று இருந்த நிலை கண்டோம். பின் அவர்கள் மேலும் வளர்ந்த காலத்தில் மன்னரும் மற்றவரும் இடம் பெற்றனர். அந்தத் தொடக்க நாளில் மன்னர் வாழ்வை நினைக்க நமக்கு அச்சமே உண்டாகின்றது. அப்படி ஒரு நாகரிகம் சில பகுதிகளில் இருந்திருக்க வேண்டும். அரசர் நாடாளத் தொடங்கு முன்பே தனி உரிமை நிலை உண்டாகியிருக்க வேண்டும். சேர்ந்து வாழக் கற்றுக் கொண்ட நாகரிக வாழ்க்கையில் சமுதாயப் பொது உடைமை என்றநிலை மாறித் தனி உரிமை உண்டான காலம் ஒன்று இருக்க வேண்டுமல்லவா! அக்காலத்திற்குப் பிறகே அரசர் வாழ்வு முளைத்திருக்க வேண்டும். அரசர் முதலிய பிரிவுகள் சமுதாயப் பொதுநல அமைப்புக்காக உண்டானவையே என மேலே கண்டாலும்கூட, பின் அவை மெல்ல மெல்லத் தனி உரிமை பெறும் நிலைக்குக் கொண்டு சென்றன. அவ்வாறு தன் உடமை, பிறர் உடமை என்ற வேறுபாடு உண்டான நிலையே பல வகையில் நாட்டில் கொடுமைகள் உண்டாகக் காரணம் எனச் சிலர் சொல்வர். அது ஆராய்தற்குரிய

தொன்று என்ற அளவில் மேலே செல்லலாம். சில பகுதிகளில் அரச வாழ்வு அச்சந்தருவதாக இருந்து வந்தது என்பதையே இங்கே காணலாம். அரசர் தம் முடைய ஆணையால் மற்றவரை அச்சுறுத்திவந்தார் என்பது பற்றி நாம் சொல்ல வேண்டா ; அது நாடறிந்த ஒன்று. ஆனால் சில விடங்களில் அந்த நாகரிகம் கண்டு வளராத சமூகத்தினிடையில் ஒருசில வழக்கங் கள் இருந்தனவாம். அவற்றுள் ஒன்று கொடியது. நாட்டின் வளமும் வண்ணமும் வளர அடிப்படைக் காரணம் அரசர்களே என்று அக்காலத்தில் முடிவு கட்டி இருந்தனர். ஆகவே அரசர் உறுதியற்ற ஒரு நிலையிலோ அன்றிக் கிழப்பருவத்திலோ இருந்தால் அவரைக் கொன்றுவிடும் வழக்கம் இருந்ததாம். எனி னும் இப்பழக்கம் நெடுங்காலம் நீடிக்கவில்லை எனத் தெரிகின்றது. அதற்குப் பதிலாக அந்தக் கிழஅர சனே தனக்குப் பின்னுல் வாரிசாக அரசையேற்கப் புது அரசரை நியமிக்க வேண்டுமென்ற வரையறையைச் செய்து கொண்டார்கள்போலும் [1] இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட நாகரிகங்களும் சமுதாயத்தில் இடம் பெறச் சமுதாயம் தன் அளவில் சிறுகச் சிறுக வளர்ந்து வந்தது எனக் காண்கின்றோம். எந்தக் காலத்திலும் எந்தச் தனிச் சமூகமும் உலகிற்குச் தேவையான எல்லா நன்மைகளையும் பெற்றிருந்தன என்றோ அன்றி எல்லாத் தீமையும் பெற்றிருந்தன என்றோ யாரும் கூறமுடியாது. இன்றும் எந்த அரசாங்கமும் சமூக அமைப்பும் நூற்றுக்கு நூறு நலம் பயக்கின்றதென்றோ நூற்றுக்கு நூறு தீமை பயக்கின்றதென்றோ யார் சொல்லமுடியும்? எல்லா

1. The Growth The Civilization P. 214.

வளர்ச்சிகளிலும் நன்மையுமுண்டு; தீமையும்உண்டு. அப்படியே பழங்காலத்தில் நாகரிகத்தின் இடையில் வளர்ந்த பல்வேறு நாட்டுச் சமுதாய வாழ்வுகளில் நன்மை தீமை இரண்டுமே விரவி இருந்தன எனக் கொள்ளல் பொருந்துவதாகும்.

தேவையான மாறுபாடுகள்

நாகரிக வளர்ச்சிக்குப் பொருளாதாரம் ஓரளவு அடிப்படையாக இருந்ததென்பதைப் பல அறிஞர் கள் வற்புறுத்திக் காட்டியுள்ளனர்[1] மனிதனுடைய இயற்கையான நாகரிக வளர்ச்சியே நன்மை தீமை இரண்டும் விரவியதாகி அவற்றிற்குச் சமூகத்தையே காரணமாக்கிச் செல்வதுதான் நாம் உலக வரலாற் றில் காணும் உண்மையாகும்.[2] ஒரு சில வகை யில் எண்ணிப் பார்க்கும்போது ஒரு சமூகத்தில் மேற் கொள்ளும் நாகரிக வழக்கம் மற்றொரு சமூகத்தில் தவறு எனக் கணக்கிட்டு, தண்டனைக்கும் உள்ளாக் கப்பெறும் என்பதையும் வரலாறு காட்டுகிறது. உதா ரணமாக ஒன்றைக் காண்போம். ஒருத்தி, உடன் பிறந்தவர் அனைவரையும் மணந்து கொள்ளுதல் இன்னும் நாட்டின் சில பகுதிகளில் வழக்காக மாக உள்ளது. ஆனால் சில பகுதிகள் உடன்பிறந்த வன் மனைவியை ஒருவன் விரும்பினாலும் அவனைத் தண்டனைக்கு உள்ளாகும் சமுதாய விதிகள் உள்ளதை அறிவோம். இரண்டில் எதை நாகரிகம் என்று கொள்ளுவது? எதைத் தள்ளுவது? அவ்வந்நாட் டுச் சமுதாய வாழ்வின் அடிப்படையில் அவை

1 Essays on Social Theory By G. D. H. COLE. P. 18.
2 Ibid. P. 73.

வளர்ந்துவிட்டன. வேண்டுமானால் முன்னதைக் கையாளும் சமுதாயத்தை விடப் பின்னதைக் கையாளும் சமுதாயம் சற்று நாகரிகத்தில் வளர்ந்துள்ளது எனக் கூறிக் கொள்ளலாம்.

பொருளாதார வாழ்விலே ஒருசில மாறுபாடுகள் இருந்தன. அவை ஒருவகையில் தன்னல வாழ்வை மாற்றிப் பொதுநல வாழ்வில் மனிதனை ஈடுபடுத்தின என்பர். அண்மையில் மலையாள நாட்டில் மருமக்கள் தாயம் வழக்கில் இருந்ததை அறிவோம். திருவாங்கூர்ச் சீமையை ஆளும் அரச உரிமையே அந்தவகையில் தான் இயங்கிவந்தது. தந்தைக்குப்பின் மகன்பட்ட மேற்பதோ அன்றித் தந்தையின் உடமைக்கு உரிமை கொண்டாடுவதோ அச்சட்டத்தால் இயலாது. தான் எவ்வளவு பொருள் பெருக்கினும் அவற்றையெல்லாம் உடன் பிறந்த மகளிர் தம் மைந்தருக்கே அளித்து விடவேண்டும். இந்த முறை நம்நாட்டின் பக்கத்தில் மலையாளப் பகுதியில் கண்ட காரணத்தால் விளங்குகிறது. எனினும் பலருக்கு இது புரியாத ஒன்றுதான். ஆயினும் சமுதாய நாகரிக இடைக்காலத்தில் இந்த மருமக்கட் டாயமே பலரிடம் இருந்தது என்பதைக் காணமுடிகின்றது.

ஒரே சமூகத்திலும் ஒருவகைப்பட்ட நாகரிகமே தொடர்ந்து இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழ்நாட்டில் சில ஆண்டுகளுக்குமுன் ஆண்டவன் திருக்கோயில்களில் தேவரடியார்கள் கலைப்போர்வையில் நடனமாடுவதும் அதைக்கண்டு களிப்பதும் நாகரிகமாக நாமே நினைத்திருந்தோம். வெறும் நடனத்தை மட்டும் கண்டு களிப்பதுடனன்றி

அவர்களைத் தமக்கு உரிமையாக்கிக் கொள்ளவும் சமுதாயம் இடமளித்துவந்தது. ஆனால் இன்றைய நாகரிகம் அந்த வழக்கத்தைச் சமுதாயத்தில் இடமில்லா வகையில் சட்டமாக்கித் தடுத்துவிட்டது. இப்படியே பல சமுதாய வாழ்வில் உள்ள மக்களின் அகத்தும் புறத்தும் உருவாகிவரும் உயர்ந்த மாடமாளிகைகள் தொடங்கி, மன நிலையில் உருவாகும் எண்ண அலைகள் வரை பரம்பரைக்குப் பரம்பரை மாறிக்கொண்டே இருப்பதைக் காண்கின்றோம். உடை உடுப்பதிலும் உணவு கொள்வதிலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்வதை மேலே கண்டோம். கலை முதலியவற்றையும் அவற்றின் வழி எழுந்த கோயில், மன வளர்ச்சி முதலியவற்றையும் இத்தகைய மாற்றங்களைத் தொடர்ந்து காண்போம்.

நாகரிக வளர்ச்சியில் தோன்றும் எந்த மாறுதலும் திடீரென ஒரே நாளில் மாறிவிடாது. இந்த நூற்றாண்டின் இடையில் அத்தகைய சில மாற்றங்கள் நடைபெறுவதைக் காணும் சிலர், நாகரிகமும் அவ்வாறு திடீர் மாற்றம் பெற்றிருக்கமுடியும் என எண்ண வாய்ப்பில்லை. நாகரிகம் இயற்கைவழியில் இயங்குவது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நாகரிகம் வெறும் புறத் தோற்றத்தால் மட்டும் எண்ணி அறுதியிடப் பெறுவதன்று; அகத் தோற்றமாகிய பண்பாடே அதற்குப் அடிப்படை. ஆகவே பழகிய நிலைத்த சமுதாய வாழ்வுக்கு ஏற்ற முறையிலேயே நாகரிகமும் மெல்ல மெல்ல மாறுதலடையும் என்பதை நாட்டு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு சில கலப்புக்களினாலும் மாற்றங்களினாலும் சமுதாய நாகரிக வாழ்வில்

பெருமாறுதல்கள் உண்டானமை போன்ற தோற்ற மிருப்பினும் கால எல்லையில் அந்த மாற்றம் கெட்டோ மாறியோ திருந்தியோ : மெல்லச் சமுதாயத்துக்கு ஏற்றவகையிலேயே நிலைபெறும். இந்த நியதிக்கு வேறுக ஏதேனும் சில பழக்க வழக்கங்களோ முறைகளோ வற்புறுத்தப்பெறுமானுல் அவை நிலைகெடும். அப்படியே சில அடிப்படைத் தேவையான சமுதாய வாழ்வுக்கு இன்றியமையாத மாறுதல்கள் யாருடைய தூண்டுகோலுமின்றித் தாமாகவே வந்து அமைவதும் உண்டு. இந்த அடிப்படையை மறந்து ஒருசிலர் தாமே சமூகத்தில் பெருமாறுதல் களைச் செய்துவிட்டதாக எண்ணி இறுமாப்பர். மனித வரலாற்றுக் கால எல்லையில் அவன் நாகரிகமாக வாழ்ந்த எல்லை மிக மிகச் சிறியது என்பதையும் அதிலும் அத் தனி மனிதன் காலம் ஒரு நொடியே என்பதையும் எண்ணிப் பார்ப்பானுல் அத்தகைய இறுமாப்பை எய்தாது திருந்திவாழ வழியுண்டு.

பன்மையில் ஒருமை

நாகரிக வாழ்வில் மக்கள் வாழ்வு என்னும் (Democracy) நாட்டாட்சி முறையும் மன்னராட்சி முறையும் மிகப் பழங்காலந்தொட்டே வளர்ந்து வந்துள்ளன. இன்றும் உலகில் இருவேறு வகைப்பட்ட நிலையும் அவற்றோடு கூடிய சர்வாதிகார நிலையும் மறைந்து விடவில்லை. பழங்காலத்திலும் சர்வாதிகாரமுறை இல்லை என்று சொல்ல முடியாது. இவைபற்றியெல்லாம் பின்னர் மேலே காணலாம்.

இவ்வாருன பல்வேறு நாகரிக வாழ்க்கையில் தனி மனித வாழ்வும் சமூக வாழ்வும் சேர்த்தே எண்ணப்

பெறும். தனி மனிதன் சமூக நாகரிகத்துக்கு பணிவதும் சமூக நாகரிகம் தனி மனிதர் வாழ்வுக்கு இடையூறு அமையாத வகையில் அமைவதும் எண்ணத் தக்கன வாம். எல்லா நாகரிக அடிப்படைகளும் மனிதன் நலம் பெற்று வாழ அமைந்தனவே எனக் கொள்ளல் வேண்டும். சமுதாயமாகச் சேர்ந்த மக்கள் நாகரிக வாழ்வுப் பாதையில் முன்னேற்றம் காண்கின்றார்கள் என்றால் அது உண்மையில் அச்சமுதாயத்துக்கு நலம் தருவதற்காகவே அமைதல் வேண்டும். இன்று உலக வல்லரசுகள் எல்லாம் பல ஆக்கம் தரும் அறிவியல் செயல்களை ஆற்றுவதோடு, உலகை அழிக்கும் அணுகுண்டு போன்ற கொடும் ஆயுதங்களை யெல்லாம் செய்கின்றார்களென்றாலும், அவற்றினின்று தத்தம் சமூகம் மட்டும் காக்கப்பெறும் என்ற எண்ணத்திலேயே அவ்வாறு தொழிற்பட முன்னிற்கின்றனர் என்பதையும் காண்கின்றோம். ஆனால் அந்த நினைவு வெற்றிபெறுமா என்பது காலம் காட்டவேண்டிய ஒன்று. இப்படியே கடந்த கால நாகரிகச் சமுதாயத்தில் எத்தனையோ தோற்றங்களும் அமைப்புக்களும் பலப்பல வகையில் மக்களுக்கு நன்மை உண்டாகும் அடிப்படையிலே அமைந்தனவாகும். என்றாலும் ஒரு சில, வேறுபட்ட சமுதாய மாறுபாட்டாளர்களை நசுக்கவோ அன்றிப் பொசுக்கவோ உண்டான மாறுதல்களாகும். ஆனால் அந்த மாறுதல்களால் வாழ்ந்தார் யார்? வீழ்ந்தார் யார்? என்று இன்று நம்மால் கணக்கிட முடியாது. இன்றும் பல நாகரிகங்களுக்குள்ளும் சமுதாயங்களுக்குள்ளும் நடைபெறும் போட்டி மனப்பான்மையைக் காண்கின்றோம். அதனால் இரண்டும் அழிந்து புதுச் சமுதாயம் உருவாவதும் உண்டு. இரண்டும் சிற்சில மாற்றங்களை

டன் இணைந்து வாழ்வதும் உண்டு. எப்படியோ கணக்கற்ற கால வெள்ளத்தில் பலப்பல வகையான நாகரிக அமைப்புக்களும் பிற சமுதாய வேறுபாடுகளும் மக்கட் சமுதாயத்தைத் தாழ்த்தியும் வளர்த்தும் மாற்றியும் புதுக்கியும் இன்றைய நிலைக்குக் கொண்டுவந்துள்ளன. இந்த வளர்ந்த சமுதாயத்துக்கு உறுதுணையான பிறவற்றையும் இனி எண்ணிப் பார்க்கலாம்.

VI. கலைவளர்த்த சமுதாயம்

கலையும் வாழ்வும்—கலையும் நாக
ரிகமும்—விழாக்களும் கலை
களும்—நகரங்களும் கலைகளும்—
கலைகாட்டும் பண்பாடு—நாட்டு
வாழ்வின் பண்பாடு—நகர
வாழ்க்கை—கிராமங்களும் நகர
வாழ்வும்—இன்றைய வாழ்வுச்
சிக்கல்—நகரங்களின் நன்மை
கள்—நன்மைதரும் திட்டமுறை.

கலையும் வாழ்வும்

'கலை கலைக்காகவே' என்று ஒருசாராரும் 'கலை வாழ்வுக்காகவே' என்று மற்றொரு சாரரும் பன்னெடுங் காலமாகப் பேசிக்கொண்டே வருகிறார்கள். இன்று வரை அவர்கள் எந்த முடிவையும் மேற்கொண்ட தாகவும் தெரியவில்லை. ஆயினும் அறிந்தோ அறியா மலோ மனித சமுதாய வாழ்வில் கலை ஒன்றிய இடம் பெற்றுவிட்டது. கலை எத்தனையோ வகையில் உலகில் போற்றப்படுகின்றது; வளர்க்கப் பெறுகின்றது. கலையைப் பற்றிப் பல அறிஞர்கள் எழுதிவைத் துள்ளார்கள். நானும் எனது முன்னைய நூல்கள் இரண்டொன்றில் கலையைப்பற்றிக் குறிப்பிட்டு எழுதி யுள்ளேன். இங்கே தேவை கருதி சுருக்கமாக அதுபற்றிக் காணலாம் என எண்ணுகின்றேன்.

மனித உள்ளம் அடங்காது ஓடுவது; அதைக் கட்டிப்பிடிப்பது அத்துணை எளிதன்று. அந்த உள்ளத்தைக் காட்டுவதே 'கலை' என்பர் சிலர். கல்விக்குக் கடவுளாக எண்ணும் தெய்வத்தைத் தமிழர் 'கலைமகள்' என்றே போற்றி வழிபடுவதைக் காண்கின்றோம். இதன்படி காணில் அறிவை வளர்க்கப் பயன்படுவன யாவும் கலையேயாகும். எனினும் இன்றைய உலகில் விரைந்து வளர்ந்து வரும் அறிவியலை (Science)க் கலையொடு சேர்க்கப் பலர் விரும்புவதில்லை. கலை வேறு அறிவியல் வேறு என்றே பேசப்படுகின்றது. கல்லூரிகளில் பயில்கின்ற மாணவர்களுக்கும் அந்த அடிப்படையிலேயே பாடங்கள் அமைக்கப் பெறுவதையும் காண்கின்றோம். சிலர் விஞ்ஞானமும் கலை வகைகளுள் ஒன்று என்று காட்ட நினைப்பர். எது எப்படியாயினும் கலை மனித னுடைய வாழ்வில் அவன் அறிந்தோ அறியாமலோ நிலைத்த இடம் பெற்று விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

சமுதாயம் கலை இன்றியும் வாழமுடியுமா? உலகப் பொருள்கள் அனைத்திலும் கலை இடம் பெற்றுள்ளது. செல்வர் வறியர் என்ற பல்வேறு வகையில் வாழும் மக்களினத்துக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்பக் கலை பயன்படுகின்றது. உயர்ந்த மேடை அமைத்து பல கற்றவர்கள் நாகரிகமாக உடுத்து உடல் ஆடாமல் அசையாமல் இருந்து சிலமணி நேரங்கள் நாடகங்கள் நடித்து பார்வைக் கட்டணமாக ஐந்தும் ஐம்பதும் வசூல் செய்கின்ற வாழ்க்கையை நகரங்களில் ஒருபக்கம் காண்கின்றோம். தம் கூட்டம் அத்தனைக்கும் ஐம்பதுக்கும் குறைவாகவே பணம் பெற்று

கிராம மக்கள் பல்லாயிரக்கணக்கில் பணமின்றி இரவெல்லாம் காணுமாறு தெருவில் நடித்து கலை வளர்ப்பதைக் கிராமங்களில் காண்கின்றோம். இரண்டையும் கலை இல்லை என்று சொல்லமுடியுமா? கலையால் பொருள்பெற வழியறிந்தவர் முன்னவர். கலையால் மக்களை மகிழ்விப்பவர் பின்னவர்.

இன்றைக்குக் கலையென்னும் பேரால் நாட்டில் எத்தனையோ கொடுமைகள் நடைபெறுவதைக் காண்கின்றோம். இந்தக் கொடுமைகள் உலகறிந்தவை. நாம் அவற்றை இங்கே விளக்கிக் கொண்டிருக்க வேண்டா. கடவுள் நெறிபடவந்த இராமலிங்கர் அடிகளார் இந்தக் கலையில் பேரால் நடந்த-நடக்கும் கொடுமைகளைக் கண்டு வருந்தி,

'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக'
எனப்பாடி

விட்டுச் சென்றார். எனவே வாழ்வை வளமாக்க வந்த கலை சில வேளைகளில் அவ் வாழ்வையே அநாகரிகச் சேற்றில் அழுத்தப் பார்க்கின்றது. என்றாலும் சமுதாய வாழ்வில் 'கலை' முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்ற காரணத்தால் நாம் இங்கே அது பற்றி எண்ணியே மேலே செல்ல வேண்டும்.

கலையும் நாகரிகமும்

ஆடுதல் பாடுதல் தொடங்கி வானோங்கி நிற்கும் கட்டடங்களை அமைத்தல்வரை அனைத்தும் கலைகளெனவே கொள்ளப் பெறுகின்றன. சாதாரணமாகக்

கிராம மக்கள் கூடிக் கொம்மி அடித்து விளையாடும் விளையாட்டும் ஒருவகைக் கலையேயாகும். கடவுளைப் பாடவந்த மணிவாசகர் தம்மைப் பெண்ணாக்கிக் கொண்டு அத்தகைய விளையாடல்களை யெல்லாம் பிற பெண்களோடு ஆண்டவன் பொருட்டுத் தாம் விளையாடியதாகப் பாட்டிசைத்துள்ளார். பொன் னூசல், சாழல், பொற்சுண்ணமிடித்தல் போன்ற பல மகளிர் விளையாடல்கள் அதில் காண பெறுகின்றன. இவைகளெல்லாம் சாதாரணமாகப் பெண்கள் விளை யாட்டு என்றாலும் அதில் உள்ள கலையின் சிறப்பைக் கண்டு இன்றைய ஆய்வாளர் அக்காலத்தில் சமூகம் இத்தகைய கலைகளை வளர்த்திருந்த தென்றால், அதன் ஏற்றம் மிக உயர்ந்ததாக போற்றப் பெற வேண்டும் எனக் கூறுவர்.

சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவை யைப் பற்றி அறிஞர்கள் இன்னும் ஆராய்ந்து கொண்டே இருக்கின்றனர். பெண்களை நிற்கவைத்து ஆடல் தொடங்கிய நிலையினை அறுதியிட இன்றும் பல புலவர்கள் எண்ணி எண்ணிப் பார்க்கின்றனர். அவற்றின் அமைப்புக்களும் பிற செயல்களும் அவற்றின் வழி எழுந்த பாடல்களும் பிறவும் அக் காலத்தில் தமிழ்ச் சமுதாயம் இசையிலும் நடனத் திலும் குரவைக்கூத்து போன்ற கூத்து வகையிலும் இன்னபிற நல்ல கலைத் துறைகளிலும் முன்னேறி யிருந்ததைக் காட்டுகின்றன. அதனால் அக்காலத்திய தமிழ்ச் சமுதாயம் நாகரிகத்தில் நல்ல வளர்ச்சி அடைந்திருந்தது எனக் காட்டுவர்.

உலக வரலாற்றை ஆராய்கின்ற அறிஞர்கள் இப்படியே ஒவ்வொரு கலையினையும் எண்ணிப்

பார்த்து அது சமுதாயத்தில் கொண்டுள்ள தொடர் பினை ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியின் வழியே வளம் பெற்ற சமுதாயத்தையும் வளங்குன்றிய சமுதாயத்தையும் அறுதியிடுவர். மொகன் சோதாரோ முதலிய இடங்களில் அமைந்த கட்டடக் கலை போன்றவற்றைக் கண்டுதானே உலக வரலாற் றாளர் அவற்றின் சிறப்பையும் அக்கால மக்கட் சமுதாயத்தின் ஏற்றத்தையும் போற்றிப் புகழ் கின்றனர். அப்படியே அச்சமுதாயம் எந்தெந்த வகையில் வளம் பெற்றிருந்தது என்பதையும் காட்டு கின்றனர். மற்றும் இதுபோன்றே ஆற்றங்கரை களிலுள்ள நகர அமைப்புக்கள் பிற மக்கட்டாழிகள் அவர்கள் வாழ்விற்குப் பயன்படுத்திய பொருள்கள் இவைகளைக் கொண்டே அவ்வந் நாகரிகங்களையும் அறுதியிடுவர். சிந்து வெளி நாகரிக மக்கள் ஐயாயிர மாண்டுகளுக்கு முன்பே நாகரிகத்திலும் பண்பாட் டிலும் சிறந்திருந்தார்கள் என்று வரலாற்றாசிரியர்கள் எழுதுகிறார்கள் என்றால், அந்த உண்மையை அவர் கள் அங்குள்ள கலைநலம் வாய்ந்த பொருள்களின் அடிப்படையில்தான் அறிய முடிந்தது. அந்தப் பகுதி களில் அமைந்துள்ள நகர அமைப்பும் வீட்டு அமைப் பும் அவர்தம் வியப்புக்கு ஆளாயின. வீடுகள் கட்டும் கலையை இந்த நூற்றாண்டில் வளர்ந்துள்ள பொறியியல் அறிவே (Engineering Skill) சிறக்க வைத்த தென்று இன்றைய சமுதாயத்தை நாம் பாராட்டத் தொடங்கிய நாளில், அந்தப் பழம்பெரு நாகரிகமும் அதை ஒட்டிய நகர வீட்டு அமைப்புக்களும் அக் காலத்திலேயே மக்கள் வீடுகட்டும் கலையிலும் நகர் அமைக்கும் கலையிலும் சிறந்திருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. கழிநீர் செல்ல அமைத்த

நெடுவழிகளும், நீச்சல் குளமமைந்த நிலையும், மாளிகைகள் கட்டியமைத்த சிறப்புக்களும்தாமே அக்கால மக்கள் அறிவியல் திறனை உலகுக்கு உணர்த்துகின்றன. எனவே அக்காலத்தில் சமுதாய நலத்தை விளக்குவன கலைகளேயாகின்றன. இப்படியே உலகின் பல பாகங்களிலும் வாழும் மக்களின் கலைநலன் காண்க் கண்டு வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு நாகரிகங்களையும் அவை பற்றிவாழ்ந்த சமுதாய வளர்ச்சியையும் ஆய்ந்து அறுதியிடுகின்றனர்.

விழாக்களும் கலைகளும்

இந்தக் கலை அமைப்பில் பலவற்றைக் காணலாம். முதலில் கண்டபடி ஆடல்பாடல்கள் ஒரு சமுதாய வாழ்வை—கூட்டு வாழ்வை நன்கு காட்டும். தொடக்க நாளில், ஆண்டில் சில மாதங்களில் நன்கு உழைத்து ஓய்வு பெறுகின்ற வேளைகளில், மக்கள் பொழுது போக்காகக் கூடி விளையாடினார்கள். அப்படி விளையாடும் பொழுதைப் பெரும்பாலும் ஆற்றங்கரைகளிலும் பிற பரந்த வெளிகளிலும் கழித்தார்கள். அந்த நாட்களும் பெரும்பாலும் நிறைமதி நாட்களாகவே இருந்தன போலும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இது உண்மையாக அமைகின்றது. ஒவ்வொரு திங்களிலும் நிறைமதிநாள் ஒரு சிறந்த விழா நாளாகவே தமிழ் நாட்டில் கொண்டாடப் பெறுவதைக் காண்கின்றோம். இவற்றின் விளக்கம் அனைத்தையும் எனது வேறு நூலில் முன்னமே விளக்கியுள்ளேன்.[1] அத்தகைய விழாக்கள் மக்கள் சமுதாய வாழ்வை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற

1. தமிழ் நாட்டு விழாக்கள்.

காப்பியங்கள் புகார் நகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் நடைபெற்ற விழாவைக் காட்டும்போது விழாவின் அடிப்படையை விளக்குகின்றன. விழாவினை முரசறையும் வள்ளுவ முதுமகன்,

> 'பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'ய

பிறகே விழாவைப் பற்றித் தெரிவித்தான் எனக் காண்கின்றோம். எனவே விழா என்றால் சமுதாயம் முழுவதையும் அணைத்துச் செல்லும் ஒன்று என்பதும், அந்த விழா நாளில் மக்கள் அனைவரும் எத்தகைய மாறுபாடும் இன்றி இயைந்து நல்ல வகையில் உண்டு உடுத்தி வாழவேண்டும் என்பதும் அறியக் கிடக்கின்றன அல்லவா? மற்றும் அத்தகைய விழாநாட்களிலேதான் ஆடல் பாடல் போன்ற பல கலைகளும் விளக்கம் பெறுகின்றன எனவும் காண்கின்றோம். கோவலனும் மாதவியும் தம்மை மறந்து கானல்வரிப் பாட்டிசைத்த நிலையை நம்மால் காணமுடிகின்றது. இன்றும் இப்படியே பலப்பல விழாக்கள் நடைபெறுவதைக் காண்கின்றோம். பழைய முறையில் நடைபெறும் விழாக்கள் ஒருபக்கம் இருக்க, இக்காலத்தில் ஆண்டுதோறும் பொருட்காட்சி என்றும் இசைவிழா என்றும் பலவகையில் நடக்கும் விழாக்களிலும் இத்தகைய கலைகள் முக்கிய இடம் பெறுவதைக் காண்கின்றோம். ஆயினும் பெரு நகரங்களில் நடைபெறும் இதுபோன்ற சில விழாக்களில் செல்வர்கள் மட்டுமே இடம் பெறுகின்றமை சமுதாயம் தவறான வழியில் செல்லுகிறது என்பதையே நினைவூட்டுகிறது.

நகரங்களும் கலைகளும்

நகர வளர்ச்சியைப் பற்றிச் சற்று விளக்கமாகக் காண்பது நலம் பயப்பதாகும். பெரும்பாலும் பழங் கால நாகரிகங்களும் அவற்றின் வழி வளர்ந்த பல்வேறு வகைப்பட்ட சமுதாய நெறிகளும் இந் நகரங்களை அடிப்படையாகக் கொண்டே இயங்கு கின்றன. தனிமனிதன் கூட்டுவாழ்வு தொடங்கி, குடிசை அமைத்துக் குக்கிராமங்கள் அமைத்து அங்கங்கே வாழ்ந்தான் எனக் கண்டாலும் அவற்றை யெல்லாம் அறிந்து ஆராயமுடியாத அளவுக்கு அவை அழிந்து விட்டன. வெறும் மண்ணுலும் மட்டை களாலும் பிற எளிய பொருள்களால் ஆக்கப்பெற்ற குடிசைகளும் பிறவும் கால் வெள்ளத்தை வென்று வாழமுடியாமல் நிலை கெட்டுவிட்டன. ஆனால் கல்லும் சுண்ணும்பும் கொண்டு கட்டப்பெற்ற மாடங் கள் நிறைந்த நகரவாழ்வு காலத்தை ஓரளவு வென்று ஒரு சில ஆயிரமாண்டுகளில் மனித சமுதாயம் பெற்ற மாற்றங்களைக் காட்டிக் கொண்டே நிற்கின் றது. நமது சங்க இலக்கியங்களில் பல நகர அமைப் புக்களைக் காண்கின்றோம். புகாரும் வஞ்சியும் பல இடங்களில் பேசப்பெறும் பெரு நகரங்களாக இருந் தாலும் இன்று அவை இல்லை. அவற்றின் பெயர் களைத் தாங்கிக்கொண்டு இருபுறக் கடலோரங் களிலும் சிறு சிறு ஊர்கள் இருக்கின்றன என்றாலும் அவை பழம் பெருநகர்களின் ஏற்றத்தைக் காட்ட முடியாத நிலையிலேயே நிற்கின்றன. அந்த இரு பெரு நகரங்களும் கடலுள் ஆழ்ந்தன போலும். ஒரு வேளை கடலுள் ஆழ்ந்து தொல்பொருள் ஆய் வாளர் ஆராய்ச்சி செய்யின் ஏதேனும் பயன் கிட்டலாம். அவற்றை விட்டு இலக்கியங்கள் காட்டிய

மதுரை. காஞ்சி போன்ற நகரங்களை இன்றும் காண லாம். இவை இரண்டும் அந்த இலக்கியங்கள் காட்டிய அளவு அத்துணைப் பெருமையுடன் இன்று வாழ வில்லை என்று காண்கின்றோம். காரணம் அவற் றைத் தலைநகர்களாக்கிக் கொண்ட தமிழ் மன்னரின் பாதுகாவல் இல்லாமையாக இருக்கலாம். இத்தகைய நகரங்கள் கடற்கரையிலும் பேராற்றங் கரைகளிலும் அமைந்து கால வெள்ளத்தால் நிலை கெடுவதையே வரலாறு காட்டுகிறது. தமிழ் நாட்டில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் இந்த நிலை காண் கின்றோம். இலக்கியங் காட்டும் இந் நகரங்களின் ஒவ்வொரு மாளிகையிலும் தெருவிலும் பொதுவிடங் களிலும் வாயில்களிலும் வளவுகளிலும் எத்தனையோ கலை நலன்கள் காட்சி அளிப்பதைக் காண்கின்றோம். அக் கலைகள் அனைத்தும் அன்றைய மக்கட் சமுதாயம் வாழ்ந்த செம்மையான பண்பாட்டு நிலையையே உலகுக் குக் காட்டுகின்றன. இத்துணைப் பேரளவுக்கு மக்கள் கலைவளர்ச்சியில் கருத்திருத்தி வாழ்ந்தார்கள் என்றால் அவர்கள் வாழ்க்கை அமைதிபெற்ற நல்வாழ்வாக அமைந்திருக்க வேண்டுமென்பது நன்கு விளங்குகின்ற தல்லவா?

கலைகாட்டும் பண்பாடு

நகரங்கள் வாழ்வித்த சமுதாய நாகரிகங்களை எண்ணும்போது அழிந்த புகாரைப் போன்று முற்றும் அழியாதிருக்கும் சில நகரங்கள் நம் எண்ணத்தில் இடம் பெறுகின்றன. பல்லவர் காலத்து மாமல்ல புரத்தை யாரே மறக்க வல்லவர்! உலக யாத்திரிகர் பலரும் அந்த இடத்தை வந்து பார்த்துச் செல்லுகிறார் களன்றே! அது கலைக் கோயிலாக ஆயிரமாண்டு

களுக்கு முன் வாழ்ந்த மக்கட் சமுதாயத்தை நமக்கு அறிமுகம் செய்துகொண்டே இருக்கின்றதல்லவா! கடற்கரைக் கோயிலும் பல குகைக் கோயில்களும் சித்திரங்களும் இரதங்க ளெனப்பெறும் ஒற்றைக்கல் கோயில்களும் பல்லவர்காலத் தமிழ் நாட்டை இன்றும் வாழவைக்கின்றன அல்லவோ! அப்படியே சிற்றன்ன வாசல் சித்திரங்களும் திருச்சிக் கோட்டைச் சிற்பங் களும் பிற ஊர்களிலுள்ள அமைப்புக்களும் பல்லவர் காலச் சமூக வாழ்வை நமக்கு நினைப்பூட்ட வில்லையா! பிற்காலச் சோழர் காலத்தில் வானுயர்ந்திய கோபுரங் களோடு கூடிய கோயில்களும் அவற்றின் கலைகளும் சித்திர வேலைப்பாடுகளும் அமைப்புக்களும் கல் வெட்டுக்களும் பிறவும் அவ்வக்கால மக்கட் சமுதாய வாழ்வையும் பண்பாட்டையும் உணர்த்த வில்லையா! இப்படியே தமிழ் நாட்டுக்கு வெளியேயுள்ள வீழ்ச்சி யடைந்த விசயநகர் அமைப்புக்களும் அஜந்தா எல்லோரா போன்ற குகைகளும் அவற்றின் கலை நலங்களும் இலங்கையிலுள்ள அனுராதபுரம், பொல னருவா போன்றவையும் அவ்வக் காலத்தில் அங்கங்கே வாழ்ந்த மக்கள் வாழ்வைக் காட்டுகின்றனவன்றே! இவை அனைத்தும் வரலாற்று எல்லைக்குள் அமைந்த சமுதாய சம்பந்தமானவை. எனவே இவை பற்றிய குறிப்புக்களை நாம் பலவாகக் கொண்டுள்ளோம். ஆனால் வரலாற்றுக்கு முற்பட்ட ஆயிரமாயிர மாண்டு களின் சமுதாய வாழ்வை எத்தனையோ நாடு நகரங் களும் கலைகளும் வாழவைக்கின்றன. அவற்றுள் பெரும்பாலான மறைந்து விட்டன. இன்றைய ஆராய்ச்சி நிலையில் தொல் பொருள் அகழ்ந்து காணும் முறையில் பலப்பல நகரங்களையும் நாகரிகங்களையும் கலை வாழ்வுகளையும் உலகுக்குக் கொண்டுவந்து

காட்டலாம். இவைகளைத் தவிர வானுயர்ந்திய எகிப்திய கோபுரங்களும் (Perimids) யமுனை யாற்றங் கரையிலுள்ள தாஜ்மஹாலும், டில்லியின் குதுப்மினாரும், சாரநாத் அசோக ஸ்தூபியும் தமிழ் நாட்டுப் பெருங் கோபுரங்களும் தாம் தாம் தோன்றிய கால எல்லையில் நின்று உலகில் வாழ்ந்த மக்கட் சமுதாயப் பண்பாடுகளை விளக்கிக்கொண்டே அவற்றை வாழ வைக்கவில்லையா ?

நாட்டுவாழ்வின் பண்பாடு

நகர் அமைப்புக்கள் மக்கட் சமுதாய வாழ்வில் புது மாற்றங்களை உண்டாக்கிவிட்டன. நகர்கள் தோற்றுமுன் மக்கள் வாழ்ந்த வாழ்வுக்கும் அதற்குப் பின் வாழ்ந்த வாழ்க்கைக்கும் பெரும் வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. இன்றைக்கும் நாட்டுவாழ்க்கைக் கும் நகர வாழ்க்கைக்கும் வேறுபாடு அதிகமாக உள்ளதை நாமறிவோம். கிராமங்களில் மக்கள் சமுதாயமாக ஒன்றி வாழ்வதை இன்றும் காணமுடி யும். கிராமங்களில் ஒருசில வீடுகளே இருக்கும். அவற்றுள் வாழ்கின்ற மக்களும் பெரும்பாலும் ஒரே இனத்தவராகத் தம்முள் உறவு கொண்டவராக வும் இருப்பர். அவர்களுள் ஒருவர் வீட்டில் உண்டா கும் நலக் கேடுகளில் ஊரில் உள்ள அனைவரும் பங்கு கொள்வர். ஒரு வீட்டில் இழவு நேர்ந்தால் அவ் வூரில் உள்ள அனைவரும் அதில் பங்குகொண்டு துன் பத்தை அனைவரும் பகிர்ந்துகொண்டு, எல்லாச் சடங்குகளையும் முடித்து, பிறகே தத்தம் இல்லங்களுக் குச் சென்று அவரவர்தம் பணிகளை மேற்கொள்வர். அப்படியே ஒரு வீட்டில் திருமணம் அமையினும் ஒவ் வொருவரும் தத்தம் வீட்டிலேயே திருமணம் வந்ததாக

எண்ணிக் கணக்கிட்டு மகிழ்ந்து அனைவரும் கலந்தே விழா ஆற்றுவர். அப்படியே வேறு எந்தப் பொது விழா வந்தாலும் கிராமங்கள் எந்த வேறுபாடும் காட்டாது உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாது ஒன்றிக் கலந்தே தத்தம் வாழ்வைத் திறம்பட நடத்துகின்றன. அப்படியே ஊருள் ஒருவருக்குப் பெரு வாழ்வு வந்தால் அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு தாமும் துய்ப்பதைக் காண்கின்றோம். ஒருவருக்கு ஒரு நல்ல மாஞ்சோலை இருப்பதாகக் கொள்வோம். அவர் அதில் பழுத்த பழங்களைக் கொண்டு வந்து, ஊரில் அனைவருக்கும் கொடுத்துத் தாமும் உண்டு மகிழ்வர். அப்படியே பல விளைபொருள்களை அனைவரும் பகிர்ந்து கொள்வர். மற்றும் செல்வர் தம் வயலில் விளையும் பயன்களைத் தம்முள் கலந்து பணி செய்யும் வயலுழவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பர். இன்றைக்கும் கிராமங்களில் சென்றால் இத்தகைய வாழ்வைக் காண முடியும். பயிர்த் தொழிலில் உதவி புரியும் பண்ணையாளருக்கு மாதந்தோறும் படியாகச் சம்பளம் கொடுப்பதோடு, விளையும் தானியத்திலும் பத்தில் ஒரு பகுதியைப் பங்கிட்டுக் கொடுக்கும் வழக்கத்தை நன்கு காண்கின்றோம். அவர்களும் அதனால் மனநிறைவு பெறுகின்றார்கள். எனவே கிராமங்கள் வாழ்க்கை வசதிக்காகத் தனித்தனி வீடுகள் கட்டி வாழ்ந்தாலும், சமுதாய அமைப்பில் அவை ஒரே குடும்பமாக இன்பதுன்பங்களையும் பொருள்களையும் சமமாகப் பங்கிட்டுக்கொண்டு வாழ்ந்து வருகின்றன. தற்போது உலக நாகரிகத்தாலும் நகர வாடை நாட்டுவாழ்வில் அதிகமாகப் புகுந்துவிட்டதாலும் இந்த ஒன்றிய வாழ்வு மாறுபடுவதைக் காண்கின்றோம், எனினும் இன்னும் நகரங்களை நோக்க நாட்டு வாழ்வில் சிறக்கும்

மக்கள் சமுதாயத்தின் அடிப்படைப் பண்பாட்டைக் கெடாத வகையில் பாதுகாத்து வருகின்றார்கள் என்பதைக் காணமுடிகின்றது.

நகர வாழ்க்கை

நகர வாழ்வு காலத்தால் முந்தியது அன்று. நாட்டு வாழ்க்கை அல்லது கிராம வாழ்க்கை மலர்ந்து பல ஆயிரமாண்டுகள் கழித்தே நகரவாழ்வு மலர்ந்தது. எனினும் நாம் மேலே கண்டபடி அவற்றின் அடிப்படையிலேயே பண்டைச் சமுதாய வாழ்வை வரலாற்று ஆசிரியர்கள் அளவிடுகிறார்கள், அவையே இன்றளவும் கிடைக்கின்ற காரணத்தால். எனினும் நகர வாழ்வு வெறும் இயந்திர வாழ்வாக மாறுவதை நினைத்தால் அச்சமே உண்டாகின்றது. இன்று புது நகர்கள் அமைக்க முயலும் பல நாட்டு மக்கள் இந்த நிலையை உணர்ந்தே நகரமக்கள் சமுதாயமாகச் சேர்ந்து வாழப் பழகப் பல பொது இடங்கள் அமைத்து வருகின்றனர் எனினும் நகரமக்களுள் பலர் இயந்திரங்களாகவே வாழ்க்கை நடத்துகின்றனர். ஓர் இயந்திரத்தின் பல உறுப்புக்கள் போன்று மனி சமுதாயத்துக்கு மக்கள் என்று முன்னமே கண்டோம். ஆனால் அந்த உறுப்புக்கள் உணர்வுடைய உறுப்புகளாக இயங்க வேண்டும். ஒரு இயந்திரத்தில் பக்கம் பக்கமாக இருந்து இலங்கும் இருவேறு உறுப்புக்கள் ஒன்றை ஒன்று சார்ந்தே தத்தம் பணிகளை இடையறாது செய்கின்றன என்றாலும், அவை ஒன்றை ஒன்று அறிந்துகொள்ளமாட்டா. ஒன்றற்கு உறுதுயர் மற்றொன்றை ஒன்றும் செய்யாது. நகரில் வாழும் மனிதன் இன்று அதே நிலையில்தான் உள்ளான். நகரங்களில் ஒரே வீட்டில் பல குடிகள்

உள்ளன. எனினும் ஒன்றை ஒன்று அறிந்து வாழ்தல் அரிது. ஒரு வீட்டில் முன் பக்கத்தில் ஓர் இழப்பு நேர்ந்து அங்குள்ளார் வாடும் அதே நேரத்தில் பின்பக்கத்தில் இருக்கும் ஒரு குடியிலுள்ளார் கவலைப்படாது தம் வேலையைக் கவனிக்கச் சென்று விடுவர். அப்படியே ஒரு வீட்டில் மண நிகழ்ச்சி என்றால் பக்கத்து வீட்டில் உள்ளவர்களுக்கு அது பற்றி அறிய வாய்ப்பில்லை. ஒவ்வொருவரும் அவரவர் வயிற்றுப் பிழைப்புக்கென இரவு பகலற்று ஓடியாடி உழல்கின்றனர். அப்படியே ஓய்வு பெற்றாலும் கிராமமக்களைப் போன்று மற்றவருடன் நெருங்குவதில்லை. இப்படி நகரவாழ்வு சமுதாயத்தை வேறு எங்கோ ஈர்த்துச் செல்லுகிறது. கூடிக் கூடி வாழப் பெருகிய சமுதாயம் நகரம் கண்டது. ஆனால் அதே நகரவாழ்வு கூட்டுவாழ்வில் தனிமை நாடிச் சென்று கொண்டே இருக்கின்றது.

கிராமங்களும் நகரவாழ்வும்

இவ்வாறு வேறு வேறாக அமைக்கப் பெற்ற நாடும் நகரும் இன்று மின்சாரம், போக்குவரத்துக்கேற்ற 'பஸ்' போன்ற சாதனங்கள் ஆகியவற்றால் ஒன்றாக அமைந்து விட்டது போன்ற நிலை உண்டானாலும் உண்மையில் இரண்டும் வேறு பட்டே காண்கின்றன. இன்னும் நகரங்களைக் காட்டிலும் கிராமங்களில் வாழும் மக்கள் எண்ணிக்கையே நம் நாட்டில் அதிகமாக உள்ளது. நகரங்களில் மக்கள் எளிமையாக வாழப் பல சாதனங்கள் உள்ளன. என்றாலும் அவை மனிதனை இயந்திர வாழ்வுக்கே ஈர்த்துச் செல்லுகின்றன என்பர் நல்ல பண்பாளர் காந்தி அடிகள்; அதனாலேயே நகரச்

சாதனைகளை யெல்லாம் பாராட்டாது கிராம வாழ்வே மக்களுக்குச் சிறந்தது எனக் காட்டி அக் கிராமங் களிலேயே மக்கள் வாழ்வு சிறக்கப் பாடுபட்டார்.

இராமலிங்க அடிகளார்

'தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தால்
சிறுகுறும் என்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறம் தனிலே வாழவேண்டும்'

என்று பாடிக் கிராமவாழ்வே மேலானது என்பதை நன்கு விளக்கிக் காட்டுகின்றார். இன்றும் சில அரசியல் தலைவர்கள் நாட்டு அரசாங்க அலுவலகங்கள் பல கிராமங்களுக்கும் அவற்றின் சுற்றுப்புறங்களுக்கும் மாற்றப்படவேண்டும் என வற்புறுத்துகின்றனர். எனினும் கிராமங்கள் நகரங்களில் காணும் அத்தனை வெளித் தோற்ற வசதிகளும் வாழ்க்கை முறைகளும் பெருத காரணத்தால் யாரும் ஒரு முறை நகர் நோக்கி வந்த பிறகு, கிராமங்களை நோக்கிச் செல்லு வதில்லை. அதனாலேயே நம் நாட்டில் கிராமங்கள் நிலை வரவரத் தாழ்ந்து வருகின்றது. நகரங்கள் வளரவளரக் கிராமங்கள் தேய்கின்றன. நகரத் துக்குக் கிராம மக்கள் வருகின்ற அளவுக்குக் கிராமங் களுக்கு நகரமக்கள் செல்லுவதில்லை. கிராமங்களி லிருந்து நகரங்களுக்குச் செல்லுபவர் தம் வாழ்வை அச் சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்ளு கின்றனர். ஆனால் நகரத்தில் சில காலம் வாழ்ந்து விட்டாலும் பிறகு அவர்கள் கிராமவாழ்வை மேற் கொள்ளமுடிவதில்லை.

நாகரிகம் நகரங்களில்தான் வாழ்கின்றது எனச் சிலர் தப்புக் கணக்குப் போடுகின்றனர். கிராமங்களி

லிருந்து இன்று வந்த மக்களை நோக்கி, நேற்று அதே இடத்திலிருந்து வந்த இன்றைய நகரவாசி 'பட்டிக்காட்டான்' என்றும் 'காட்டு மிராண்டி' என்றும் கேலி செய்வதைக் காண்கின்றோம். கிராமத்தில் பல 'ஏக்கர்' நிலமும் நல்ல வருவாயும் யாருக்கும் அடிமையாகா உரிமை வாழ்வும் பெற்ற ஒருவர் நகரத்துக்கு மேலே ஆடை இல்லாது வருவாராயின், வண்ணான் கடையிலிருந்து அன்றுடம் உடையை வாடகைக்கு வாங்கிக் கூலி வேலையோ அடிமைப் பணியோ செய்து உழலும் ஒருவன் 'காட்டுமிராண்டி' எனக் கேலி செய்கின்றான். 'அநாகரிகம் பிடித்தவன்' என இகழ்கின்றான். இது 'நாகரிகம்' என்ற சொல்லுக்கு உண்மைப் பொருள் அறியாத அந்தக் கல்லாத நகரவாசியால் சமுதாயத்துக்கு உண்டாகும் தீங்காகும். கல்லாதவர் மட்டுமன்றிக் கற்றவரும் கற்பவரும் கூடத்தம் ஊர்மக்களை விலங்கினும் கேடாக மதிப்பதையும் நடத்துவதையும் நகரங்களில் காண்கிறோம். கல்லூரியில் பயிலும் மாணவனுக்குத் தன் உழைப்பை நல்கியோ உடைமையை விற்றோ மாதந் தோறும் நூற்றுக் கணக்கில் பணம் அனுப்பிவரும் தாயோ தந்தையோ நகருக்கு வந்தால், அந்த அருமந்த 'படித்த பிள்ளை' அவர்களை வெறுப்பதையும் அவர்தம் வருகையை விரும்பாத நிலையையும் காண்கின்றோம். இப்படி நகர வாழ்க்கை என்றால் எதோ மனித வாழ்வில் உயர்ந்த ஒன்று என்ற நினைப்பில் எல்லாக் கொடுமைகளையும் உள்ளத்தில் ஏற்றிக் கொண்டு வாழும் வாழ்வு உண்டாகி விட்டது.

கிராமங்களில் நாம் மேலே கண்டபடி தொழிலில் தலைமை நிலை என்ற தனி உரிமையில்லாது தொழில் எல்லோரிடமும் சமமாகப் பரவியுள்ளது. நகரங்களில் அந்த நிலையில்லை. நகரங்களில் அதிகாரம் ஒரு சிலரிடமே குவிந்துள்ளதைக் காண்கின்றோம். அப்படியே தொழில் நிலையங்களும் நகரங்களில் ஒரு சிலர் ஆணையின் கீழேயே இயங்கி வருவதைக் காணமுடிகின்றது. அத்தகைய தனியார் வாழ்வு வளர்வதாலேதான், அவ்வாழ்வை மலரச் செய்யும் தொழிலாளிகள் வாட அதனால் பல் வேறுபட்ட உணர்வுகளும் மாறுட்டங்களும் வேலை நிறுத்தங்களும் பிற குறைகளும் உண்டாகின்றன. நாட்டுபுறங்களிலும் ஒரு சில பகுதிகளில் நில உடமை அதிகமாக உள்ள இடங்களில் இத்தகைய நிலைகள் உண்டாகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நில உடமைக்கு உச்சவரம்பு அமைத்து அத்தகைய கொடுமைகள் கிராமங்களில் நிகழாவண்ணம் தமிழ் நாட்டு அரசாங்கத்தார் தக்க ஏற்பாட்டைச் செய்தது போற்றத்தக்கது. அப்படியே நகரங்களிலும் வீடு முதலிய வற்றிலும் பிற வருமானங்களிலும் எல்லை அமைப்பார்களானால் நாட்டில் இன்னும் சற்று அதிக அளவில் அமைதி நிலவும். இதைத்தான் இன்றைய எல்லா அரசியல் தலைவர்களும் வலியுறுத்திவருவதுடன் ஆளுகின்றவர்களும் இந்தத் துறையில் கருத்திருத்தி, மெல்ல மெல்லச் சம தர்மச் சமுதாயத்துக்கு வழி கோலி வருகின்றனர். பொருள் நிலை மட்டுமன்றி, இப்படியே பட்டம், பதவி, புகழ் முதலியவற்றையும் ஒரே நிலையில் இருக்கும் அளவிற்கு அனைவருக்கும் சமவாய்ப்பினைச் சமுதாயம் அளிக்கும் வகையில்

நாடாளும் நல்லவர்கள் வழி செய்தால் சமுதாயத்தில் இன்னும் சிறந்த வகையில் அமைதியைக் காண முடியும். இதைத்தான் நாம் முன்னமே கண்டபடி இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்பே கணியன் பூங்குன்றனார் அறிவுறுத்திச் சென்றார். இதனால் கணியன் என்ற பெயர் அவருக்குப் பொருத்தமான தாகவே அறிகின்றோம். சமுதாயம் நலலதாகச் செழிக்க வேண்டுமானால்—வருங்காலத்தில் இப்படி யெல்லாம் மாறின் கெடும் என்று கணிந்த உணர்வில்—இன்னின்ன வகையில் சிறக்கவேண்டு மென அவர் அறுதியிட்டவழி என்றென்றும் மக்கள் மேற் கொள்ளவேண்டிய செம்மை நெறியல்லவா !

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கிராம மக்கள் நாட்டு வாழ்வை விட்டு நகர வாழ்வை நாடப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று நாடு பருவ மழையை எதிர் நோக்கி நிற்பதாகும். இருவேறு பருவ மழைகளின் அடிப்படையிலேயே கிராமங்களில் உழவுத்தொழில் நடைபெறுகின்றது. அப் பருவ மழையும் பல ஆண்டுகளில் பொய்த்து விடுகிறது. சில ஆண்டுகளில் அளவு மீறிப் பெய்து பயிர்களை அழித்து விடுகின்றது. எனவே மக்கள் விரும்பிய வகை உழுது பயிரிட்டுப் பொருளாதார நிலையை நன்கு வளர்த்துக்கொள்ள முடிவதில்லை. மாறுக நகரங்களில் திங்கள் தோறும் நிலைத்த ஊதியம் பெறத்தக்க அலுவலகப் பணிகளும், குறைந்த உழைப்பில் நிரப்பப் பணம் பெருக்கும் வாணிப முறைகளும் உள்ள காரணத்தால் நாட்டில் நலிவுற்ற மக்கள் நகரங்களை நாடுகின்றனர். இதைத் தடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. கிராம

மக்களின் பொருளாதாரம் உயரத் தக்க வழியில் 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா' ஏரிகளும் வாய்க்களும் மின்சார வசதிகளும் பிற வசதிகளும் தேடித் தரவேண்டும். அப்படியே பெரு வெள்ளங்கள் ஊர்களை நிலை கெடுத்து உழவர்களை ஓட்டாண்டியாக்காத வகையில் அவற்றைத் தடுக்கும் முறைகளைக் கையாள வேண்டும். இந்த இருவேறு துறைகளிலும் வேகமாக முன்னேறிவரும் மேலை நாடுகள் சிறந்த விளங்குகின்றன எனக் கண்டவர் கூறுகின்றனர். நம் இந்திய நாட்டிலும் உரிமை பெற்றபின் இத்தகைய ஆக்கப் பணிகள் செழித்து வருகின்ற காரணத்தால் எதிர்காலம் நல்ல வாய்ப்புடையதாக அமைந்து கிராமங்களில் மக்கட் சமுதாயம் நிலைத்து வாழத் தக்கதாக இருக்கலாம் எனக் கொள்ள இட முண்டாகிறது. நாட்டுப் புறங்களுக்கு மக்களைச் சென்று வாழ வேண்டுமென்று கூறுகின்ற தலைவர்கள் அனைவரும் அண்ணல் காந்தியார் காட்டியது போன்று தாங்களே முதலில் சென்று வாழ்ந்து வழி காட்டவேண்டும்.

நாகரிகம் என்ற பெயரால் கிராமத்துக்கும் நகரங்களுக்கும் எத்தனையோ மாறுபாடுகள் இருப்பதைக் காண்கின்றோம். விரைந்த உந்துவண்டி வசதிகளும், பள்ளிகளும், மருத்துவ விடுதிகளும், 'சிமிட்டி'யிட்ட நல்ல சாலைகளும், உணவுக் கடைகளும், பொழுது போக்கு மிடங்களும் நகர நாகரிகங்களாக இன்று காட்சி அளிக்கின்றன. இவை அனைத்தும் உண்மையில் மக்களுக்கு உதவுவதாக அமைந்தாலும் உண்மையில் உளத் தன்மையில் ஒருமைப்பாடு காணும் பண்பாட்டில் அவை சமூகத்தை ஈர்த்துச் செல்லவில்லை என்பது கண்கூடு. ஒரு சிறு நோயாயினும்

அதைப் பெரிதாக்கிக் கொண்டு மருந்தகத்துக்குச் சென்று மணிக்கணக்காக இருந்துகொண்டு அன்றைய பணியை மறப்பது நாகரிக நகர வாழ்வாக உள்ளது. மற்றும் செல்வர்கள் சிறு நோய்க்கும் பெருந்தொகை செலவு செய்ய, அதே நிலையில் வறியர் வற்றிவாடும் இருவேறு காட்சிகளையும் நகரங்களில் காண முடிகின்றது. ஆனால் கிராமத்தில் எத்தகைய பெரு நோய்களையும் மிகச் சிறிய செலவில் அவரவர்களே தீர்த்துக் கொள்வதைச் சில ஆண்டுகளுக்கு முன் வரையில் கண்டு வந்தோம். குடும்பத் தலைவனே தலைவியோ மக்களைப் பெற்று விடுவதோடல்லாமல் அவர்களை நோயின்றி வளர்க்கும் நல்ல மருத்துவராகவும், குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் நல்ல ஆசிரியராகவும், அன்பாக நெறிப்பட்ட அறிவைப் போதிக்கும் ஞானசிரியராகவும் விளங்கியதோடு தம் மக்கள் பிறருடன் சமூகமாக எப்படிக் கலந்து பழகவேண்டும் என்ற உண்மையை உணர்த்தி வழிகாட்டிகளாகவும் விளங்கினர். நகரங்களில் இந்நிலை இல்லையே.

நகரங்களில் ஒரு சிலர் படாடோபமாகச் செலவு செய்ய அதைப் பார்த்துப் பொருளற்ற மற்றவரும் அவ்வாறு செய்ய வேண்டுமென எண்ணுகின்றனர். அவ்வாறு செய்வதுதான் தம் பதவிக்கும் பிறவற்றிற்கும் தகுதி வாய்ந்தது என உணர்ந்தே அப்படிச் செய்கின்றனர். ஆனால் அது வெறும் போலி உணர்வே என அவரால் அறிந்துகொள்ள முடிவதில்லை. அதனால் கண்ட விடங்களில் கடன் வாங்கித் தம் காலத்தையும் தம்பின் வரும் சந்ததியாரின் காலத்தையும் துன்ப நிலையில் வைத்திருப்பதைக் காண்கின்றோம். இப்

படியே கிராமங்களில் உள்ள அளவுக்கு ஆண் பெண் உறவு—உள்ளக் கலப்பு—நகரங்களில் அதிகமாக இல்லை. ஏழைத் தொழிலாளி, வீட்டிலும் வயல் வெளி களிலும் தன் குடும்பத்துடனே இணைந்து பழகி வேறுபாடு அறியாத வகையில் வாழ்ந்து கிராமத்தில் தன் பிணைப்பை உறுதி செய்து கொள்ளுகின்றான். அப்படியே சிறிய செல்வ வளம் பெற்றவர்களும் வெளியில் சென்றுவரும் சில நேரங்கள் கழித்துக் குடும்பத்துடன் கலந்து உறவாடித் தம் பிணைப்பைப் பெருக்கிக் கொள்வர். நகரங்களில் இந்த நிலையில்லை. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை இல்லையானால் பெற்ற வனை அறிந்துகொள்ள முடியாத குழந்தைகள் நகரங்களில் பலவாக இருக்கலாம். காலையில் குழந்தை எழுமுன் வேலைக்குச் சென்று அக் குழந்தை உறங்கிய பின்பே மாலையில் வீடு திரும்பும் ஏழைத் தந்தையர் நகரங்களில் பலரல்லவா! மற்றைய செல்வர்களிலும் கூடக் குடும்பத்துடன் கலந்து பழக நேரமில்லாது ஓடி ஆடி உழலும் ஆடவரையும் பெண்டிரையும் பல நிலையில் நகரங்களில் காணமுடிகின்றதே. பொருள் பெறுவதற்காகவே குடும்பங்களைவிட்டு ஓடி, அவர்களோடு கூடிவாழும் இன்பத்தைத் துறந்து மரக்கட்டைகளாக வாழ நினைக்கும் பல செல்வர்கள் நகரங்களில் வாழ்கிறார்களல்லவா! அவர்தம் பெண் களும் அப்படியே 'மகளிர் கிளப்' என்றும் வேறு வகையிலும் தத்தம் விருப்பம்போல் பல இடங்களுக்குச் சென்று இரவு நெடுநேரம் கழித்து வீடு திரும்புவதும் அதற்குள் ஆடவர் உறங்கி விடுவதும் அவர்களுக்கு இடையில் குழந்தைகள் வேறு யாராலேயோ வளர்க்கப் பெறுவதும் நகரங்களில் காணும் சாதாரண நிகழ்ச்சி கள்தாம். எனினும் பண்பட்ட சில குடும்பங்கள்

இவற்றிற்கு விலக்காக நகரங்களில் இன்றும் வாழ்ந்து வருவதைக் காண உள்ளத்தில் மகிழ்ச்சி பிறக்கின்றது. அவர்கள் வழி ஒருவேளை நகரச் சமுதாயமே உளப்பண்பாட்டிற்குத் திரும்பி, புறநாகரிகத்தைத் துறந்து அகநாகரிகத்தை ஒம்பி வளர்க்கத் தொடங்குமானால் இன்று உலகில் வளர்ந்துள்ள பல தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு எளிதில் விடை கண்டு விடலாம்.

கிராமங்களைக் காட்டிலும் நகரங்களில் அஞ்சத்தக்க கொலைகளும் கொள்ளைகளும் கற்பழிப்புகளும் பிற தீமைகளும் இருப்பதைக் காண்கின்றோம். அங்கேதான் காவலர் மேற்பார்வையும் பிற அரசாங்கக் கட்டுப்பாடுகளும் அதிகமாக உள்ளன. என்றாலும் அதற்கேற்ற அளவில் கொடுமைகளும் வளர்வதைக் காண்கின்றோம். இன்று இங்கிலை மெல்ல நாட்டுப்புறங்களுக்கும் பரவிவருகின்றது. இப்படியே கடவுள் நெறி அறவாழ்வு அனைத்தும் நகரங்களில் அதிகமாக இல்லை. என்றாலும் ஒருசில நல்லவர்களாவது தம் பண்பாடு மறவாது அறமாற்றிச் செயல் சிறக்கின்ற காரணத்தினால் தான் சென்னை போன்ற நகரங்கள் 'தருமமிகு சென்னை' என்ற இராமலிங்க அடிகள் போன்ற அறவோரால் போற்றப்படுகின்றன. கிராமங்களைக் காட்டிலும் நகரங்களில்தான் மக்கள் திருந்தா வாழ்வு அதிகமாக அமைந்து விடுகின்றது என்ற உண்மையை நாள்தோறும் நாம் காணும் செய்திகளின் மூலமே நன்கு அறிந்து கொள்ளுகிறோம்.

கிராம மக்கள் மற்றொருவகையில் நலம் பெற்றவராகின்றார்கள். அவர்கள் இயற்கையோடு கலந்த வாழ்வினை மேற்கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. ஆறும்

மலையும் ஏரியும் வயலும் சோலையும் காடும் அவனுக்கு —கிராமத்தானுக்கு இயற்கைச் சூழலாக அமைந்து அவனை இயற்கையோடு ஒன்றிய வாழ்வை வாழச் செய்கின்றது. இயற்கை மனிதனுக்கு உணர்த்தும் பண்பாட்டைப் பற்றியும் பின்னர் விளக்கமாகக் காண்போம். எனவே இங்கே கிராம மக்கள் இயற்கை வாழ்வோடு கலந்து வாழும் தெய்வ வாழ்வில் சிறக்கின்றார்கள் என்று கூறுவதோடு அமைவோம். அதே வேளையில் நகரங்களில் வாழும் மக்கட் சமுதாயம் செயற்கையோடு செயற்கையாகவே தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. காற்று 'வாங்க' வேண்டியுள்ளது. பிற செயற்கைப் பொருள்களே அவர்கள் வாழ்வுக்குப் பயன்படுகின்றன. எளிமையான செலவற்ற கிராம வாழ்வை விட்டு, நகரமக்கள் செயற்கை வாழ்வுக்கு அளவுமீறிச் செலவு செய்ய வேண்டியிருத்தலால் பொருளாதார முட்டுப்பாடும் பல நகர மக்கள் குடும்பங்களில் உண்டாகி விடுகின்றது. இந்தக் கிராம வாழ்வின் எளிமையையும் தூய்மையையும் நாடகம் வாயிலாகவும் கூத்து வாயிலாகவும் நகர மக்கள் கண்டு 'கலை' என்று இரசிக்கிறார்களே யன்றி அவற்றைத் தம் வாழ்வில் கொண்டு, அதனால் உளப் பண்பாடுற்றுச் சமுதாயத்தையே வளர்க்க அவர்கள் எண்ணுவதில்லை.

இன்றைய வாழ்வுச் சிக்கல்

இன்று நகர வாழ்வே நாட்டு வாழ்வை ஆளுகிறது. இந்த முறைதான் நகர நாகரிகம் கிராமத்துக்குச் செல்லக் காரணமாகின்றது. பொருளாதாரம், ஆணை, அரசியல் நெறி, பிறவாழ்வியல் பிணைப்புக்கள் அனைத்தும் நகரங்களில் அடங்கிக்கிடக்க, கிராமத்தான்

தான் விரும்பாவிட்டாலும் நகரத்துக்கு வரவேண்டிய தேவையை உண்டாக்கிவிடுகிறது. நெல்லைமாவட்டக் கிராமத்தில் இருக்கும் ஒருவன் தான் வீடு கட்டுவதற்காக இரும்பும் சிமிட்டியும் தேவையானால் சென்னை மவுண்ட்ரோடுக்கு (Mount Road) வரவேண்டியுள்ளது. பாவம்! அவ்வாறு வருகின்ற எத்தனையோ கிராம மக்களை ஏமாற்றி அவர்தம் பொருளையும் கொள்ளை கொண்டு வாழும் விசித்திர வாழ்க்கையை நாள் தோறும் நாம் பத்திரிகைகளில் படிக்கின்றோமல்லவா! விவசாயிக்கு வேண்டிய மண்வெட்டி, விதை, எரு முதலியவற்றிற்கும் பிற வீட்டுச் சாமான்கள் முதலியவற்றிற்கும் நகரங்களை நோக்கி வரவேண்டும் என்ற நிலை மாறின் நாட்டில் இன்றும் எதிர்பார்த்த அளவுக்கு மேல் பண்பாடு வளரும். இன்று இந்திய அரசாங்கத்தார்—சிறப்பாகத் தமிழ் நாட்டு அரசாங்கத்தார்—கிராமப் பஞ்சாயத்து ஆட்சியை மலரவைக்கப் பாடுபடுகின்றனர். அப்படியே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மக்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் தர ஏற்பாடு செய்கிறார்கள். என்றாலும் அவைகள் முறையாகவும் ஒழுங்காகவும் அடிப்படை கெடாத வழியிலும் நடைபெறுகிறனவா என்பதைக் காணல் வேண்டும். அப்படிக் காணுத காரணத்தினால் தான் நாம் மேலே கண்டபடி நெல்லைவாசி தென் கோடியிலிருந்து வட கோடிக்கு ஓடிவந்து வாட வேண்டியுள்ளது. இந்த நிலைக்கு அரசாங்கம் மட்டும் காரணமாகாது; சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு வரும் காரணம் எனலாம். இந்த நல்ல பங்கீட்டு முறையும் பரிமாறும் முறையும் எல்லோருக்கும் பயன் படும் வகையில் 'பதுக்கல்', 'கொள்ளை லாபம்' முதலிய முறைகளைக் கையாளாது 'பிறவும் தம

போற் செய்யும்' வாணிக முறையில் மக்கள் அனைவரும் சமுதாயப் பணிபுரிவர்களாயின் நாடு உண்மையில் எல்லா வேறுபாடுகளும் இல்லாது வாழும். அப்போது நகர நாட்டு வேறுபாடுகள் கூடப் பெரும்பாலும் மாறி, நாட்டு மக்கள் அங்கங்கு இருந்தே மக்கட் பணி யாற்றிச் சிறப்பார்கள் என்றும் அதனால் சமுதாயமே வளம்பெறும் என்றும் தெளியலாம்.

தற்காலத்தில் கிராமங்களில் உழைப்பு குறை வதைக் காண்கிறோம். உழைப்பே கிராமத்தின் உயிர் நாடியாக இருந்த காலம் ஒன்று உண்டு. ஆணும் பெண்ணும் நன்கு உழைத்துப் பயிர் விளைவித்தமை மட்டுமன்றி மனித சமுதாயத்தையே பெருக்கினர். உண்மையில் நல்ல உடல் உழைப்பு உள்ளவர்களுக்கே பலகுழந்தைகள் பிறக்கும் என்பது கண்கூடு. கிரா மங்களில் நல்ல பல குழந்தைகள் - தாயர் மருந்தகங் களுக்குச் செல்லா நிலையிலே - பிறந்தன ; நகரங்களில் அத்தகைய நிலை இல்லை. பல பிரசவங்கள் மருந்தகத் திலே பல சிக்கல்களுக்கு உள்ளாகியே நடைபெறுகின் றன. அப்படிப் பிறக்கின்ற குழந்தைகளில் பல உடல் நலமின்றி உள்ளன. கிராமங்களில் உள்ள குழந்தை கள் பெரும்பாலும் தாய்ப்பாலை உண்டு வளர, நகரங் களில் வேற்றுப் பால்களே குழந்தைகளுக்கு உணவாக அமைகின்றன. சில மேல் நாட்டு அறிஞர்கள் நகரங் களில் பிறக்கும் குழந்தைகளைக் கணக்கிட்டு, ஒரு சில நூற்றாண்டுகள் கிராமங்களிலிருந்து மக்கள் நகரங் களுக்குக் குடியேறவில்லையானால், ஒரு சில நகரங்கள் பிள்ளைகள் பிறக்கும் எண்ணிக்கைக் குறைவினால் நிலை கெட்டு அழிந்தேவிடும் எனக் கூறுகின்றனர்[1].

1 The Society P. 336.

கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்குப் போதிய கல்வி முதலிய வசதிகள் கிடையா. நகரங்களில் உள்ள சில கல்லூரிகளிலும் தொழிற் பயிற்சிச் சாலைகளிலும் அந்நகரங்களில் உள்ளார் தத்தம் செல்வாக்குகளைப் பயன்படுத்திக்கொண்டு இடம் பெறுகின்றனர். வாய்ப்பு அளிக்கப்பெற்றால் கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் சிறந்து ஓங்க வழியுண்டு. இன்று இத்தகைய நிலைகள் மாறிக்கொண்டு வருகின்றன. எழுத்து வாசனையே அறியாத ஒரு சில நாடோடி இனத்தவர் முதல் பிற்போக்கான எல்லோரையும் கல்வி முதலிய வசதிகளை அளித்துக் கைதூக்கிவிட முயன்று அரசாங்கத்தார் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர்.

நகரங்களின் நன்மைகள்

மற்றொன்றும் சில அரசியல்வாதிகள் கூறுவது உண்டு. உலகை அழிக்கும் போரை உண்டாக்கும் மக்கட் சமுதாயமே நகரங்களில்தான் வளர்கின்றது என்பர். விஞ்ஞானிகளும் ஆய்வுகளும் பிற நிலைகளும் நகரங்களில் உள்ளமையான் இவ்வாறு சொல்லுதல் மரபு. இத்தனையும் நான் கூறும் தனிக் கூற்றுக்கள் அல்ல; உலக சமுதாயத்தைப் பலவகையில் ஆராய்ந்து காணும் மேநாட்டு அறிஞர் பலர் ஆராய்ந்தறிந்து கூறியவையேளாகும். ஆயினும் சற்று அமைதியாக ஆராய்ந்து பார்த்தால் கிராம வாழ்க்கையினும் நகர வாழ்க்கை சற்று மனிதப் பண்பாட்டில் வழுக்கி விழுந்துவிட்டது என்றாலும், அது முழுவதும்வெறுக்கக் கூடியது என்றோ அல்லது அந்த நகர வாழ்வில் ஒரு நன்மையும் இல்லையோ என்றோ அடியோடு ஒதுக்கிவிட முடியாது. மற்றும் மேலே கண்ட தீமைகளுள் பல அங்கே வாழும் பல்வேறு மக்களால் வளர்க்கப்பட்

உனவேயன்றி நகரங்களின் இயற்கையும் அதுவன்று. நகரங்களால் எத்தனையோ நன்மைகளும் உள்ளன என்பதையும் மறக்கலாகாது. அவற்றையெல்லாம் இங்கே காட்டிக்கொண்டே சென்றால் எல்லை விரியும். பல நாட்டு மக்களோடு கலந்து பழகவும் பிறநாட்டு மொழி கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பகுத்துணர்ந்துகொள்ளவும் வாழ்வின் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் பெற முடியாத பல பொருள்களை எளிதில் பெறவும் பல நல்லவரோடு கலந்து உறவாடவும் கலை, கல்வி முதலியவற்றை முறைப்படிப் பெறவும் நகரங்கள் உதவுகின்றன என்பதை யாரே மறுக்கவல்லார்? எனினும் நகர வாழ்வு கிராம வாழ்வைவிட சுற்றுச் சார்புகளின் காரணத்தாலும் பிற வேறுபாடுகளாலும் இயல்பாக அமைய வேண்டிய இயற்கை வாழ்வொடுகூடிய மனிதப் பண்பாட்டை விட்டுச் சற்று தூரே சென்று விடுகின்றது என்பதை எல்லோரும் எற்றுக் கொள்ளுகின்றனர். என்றாலும் அதைத் தடுக்க முடியாத கொடுமை, என்றே சமுதாயம் ஏற்றுக் கொள்ளுகின்றது. இவற்றையெல்லாம் எண்ணி நகரங்களே அன்று தொட்டு உண்டாகாமலிருந்தால் உலகம் என்றோ ஒருவேளை நிலை கெட்டு மாறி அழிந்தும் போயிருக்கலாம், இன்று நாம் பேசும் எத்தனையோ நாகரிகங்களை வளர்த்த பல நகரங்கள் இல்லையானால் மனித சமுதாயத்தை எப்படி உணர்ந்து கொள்ள முடியும்? மற்றும் இன்றுள்ள பெருநகரங்களெல்லாம் இல்லையானால் அவற்றின் பல்வேறு தீச்சுழல்கள் ஒருபுறமிருக்க, அவற்றின் வழி உலகம் உணர்ந்துகொள்ளும் மக்கட் சமுதாயத்தின் வாழ்வும் வளமும் அவை பற்றிய வரலாறும் பிறவும் எங்ஙனம் புலனாகும்? எனவே நகரங்களை வேண்டாமென்றோ அவை மனிதப் பண்

பாட்டுக்குப் புறம்பானவையென்றே யாரும் ஒதுக்கிவிட முடியாது. சமுதாய வளர்ச்சியில் நகரங்கள் ஆற்றிய பங்கு பெரிது. எனவே அவை நீடு வாழ்வதாக! மனிதன் நல் உணர்வோடு எங்கே இருப்பினும் தன்னைச்சுழலுக்கு ஏற்பச் சரி செய்துகொண்டு தன் அடிப்படைப் பண்பு கெடாத வகையில் தனக்கும் பிறருக்கும் சமுதாயத் துக்கும் யாதொரு கெடுதியும் உண்டாகா வழி வாழப் பழகிவிடுவானேயானால், அவனுக்கு உடன் துணையாக வரும் கலையும் நகரும் பிறவும் அவன் எண்ணப்படி அமைந்து வரும்காலத்திலே அவன்சமுதாயத்தை நலம் பெற வாழ்விக்கும். எனவே புற நாகரிகங்களைக் காட்டிலும் மனிதனுடைய அகநாகரிகமே பண்பாட்டுக்கு அடிப்படையாகின்றது,

நன்மைதரும் திட்டமுறை

நாட்டை ஆளுகின்ற நல்லவர்கள் இந்தவகையில் கருத்திருத்த வேண்டும். சிறப்பாக இந்திய நாட்டில் உரிமைபெற்ற பிறகு பல ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்பெறுகின்றன. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடையில் நாம் தற்போது நிற்கின்றோம். இந்தத் திட்டங்களை உருவாக்கும் தலைவர்கள் நாட்டையும் நகரையும், நாட்டின் பல பகுதிகளையும் ஒன்றுக்கும் நல்ல திட்டங்களையே தீட்டவேண்டும். கிராமங்களுக்கு வேறு நகரங்களுக்கு வேறு என்று தீட்டப்படும் திட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும். உண்மையில் நாடு வாழ வழி கோலுபவர் இரண்டையும் இணைக்கும் வகையிலேயே திட்டம் தீட்டப் பெறல் வேண்டும். பொருளாதார வேறுபாடோ, பண்பாட்டு வேறுபாடோ வேறு வாழ்க்கை வசதிக்குரிய வேறுபாடுகளோ மக்களுகிடையில் தெரியாத வகையில் - எங்கே வாழ்ந்

தாலும் 'எந்தக் குறையுமிலோம்' என்று எண்ணி மகிழத் தக்க வகையில்-திட்டங்கள் தீட்டப்பெற வேண்டும். அப்படியே நாட்டினைப் பல பிரிவுகளாக - பிரதேசங்களாகப் பிரித்துத் திட்டங்கள் தீட்டும்போதும் ஒன்றற்கொன்று ஏற்றத் தாழ்வு இல்லாவகையில் அவை தீட்டப் பெறுதல் நலம் பயப்பதாகும், சில திட்டங்கள் நாட்டில் உள்ள பல்வேறுபாகுபாடுகளை இன்னும் அதிகமாக்கும் வகையில் தீட்டப்படுவதறிந்து பலர் திருத்த முன் வந்துள்ளனர். கம்பன் தன் இராமாயணத்தில் 'எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தவேண்டும்' என்று விரும்பிய ஒரு சமுதாயத்தை அமைக்கவே எல்லாத் திட்டங்களும் தீட்டப்பெற வேண்டும்.

நாட்டில் ஆணையும் செல்லமும் செல்வாக்கும் பிறவும் ஒருடத்தில் இருக்காத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படியே தனி ஒரு மனிதனை நம்பியே சமுதாயம் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்ற நிலையும் உலக நாடுகளிலிருந்து மாறவேண்டும். இந்த நிலையைத்தான் இன்று பல அரசியல் தலைவர்கள் உலகெங்கணும் வற்புறுத்தி வருகின்றனர். மேலை நாடுகளில் இந்த அடிப்படையில் கட்சி ஆட்சி மாறுதலும் பிற மாறுதல்களும் உண்டாதலைக் காண்கின்றோம். நம் நாட்டில் இந்த அடிப்படையில் மக்கள் உள்ளங்களில் பல்வேறு வகைப்பட்ட மாறுபட்ட உணர்ச்சிகள் அரும்புவதைக் காணமுடிகின்றது. அதனால் முன் இருந்த உறவு முறையும் பிற நல்லியல்புகளும்கூடக் கெடுமோ என்று எண்ணத் தக்க வகையில் பல மாறுபாடுகள் நிகழ்கின்றன. எனவே, நாடு முழுதும்-நகராயினும் கிராமமாயினும்-வடக்காயினும் தெற்காயினும்-மேலாயினும் கிழா

யினும்-எந்த மூலை முடுக்காயினும் அந்தந்த இடங்களில் வாழும் மக்கள் அனைவரும் தம்முள் எந்த வகையான வேறுபாடும் இல்லை என்று உள்ளத்தால் உணரும் வகையில் ஆளும் தலைவர்களும் மற்றவர்களும் அறிஞர்களும் திட்டங்களைத் தீட்டுவார்களாயின் நல்ல பயன் உண்டாகும். அரசியல் கிளர்ச்சிகளையோ கட்சிக் கட்டுப்பாடுகளையோ பிற வேறு வகைப்பட்ட மாறுதல்களையோ எண்ணிப் பார்க்காது நாடு ஒன்று, அதன் நலமே முதலிடம் பெறவேண்டும் என்ற நிலையில் ஆட்சிமுறை அமையுமாயின் எந்த எதிர்ப்புச் சக்தியும் பயன் இல்லாது மெல்லக் கழிந்தொழியும். இந்த நல்ல நிலைக்குப் பல நாடுகள் கூட்டாகச் சேர்ந்தாலும் தவறு இல்லை. மத்தியக் கிழக்கிலே பல அரபு நாடுகள் இணைந்து செயலாற்றுகின்றன. தென்கிழக்கு ஆசியாவில் பல தீவுகள் இணைகின்றன. வெறும் பொருளாதாரப் பிணைப்பின் அடிப்படையிலே இணைகின்ற நாடுகளும் சில உள்ளன. அவ்வாறு இணையும் நாடுகளில் பண்பாடு, நாகரிகம், சமுதாய வாழ்வு முதலிய சமுதாய அடிப்படை நிலைகள்கூட மாறி இருக்கலாம். ஆனால் மனித இனம் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளும் உயர்ந்த பண்பாடே வாழ்வில் அமைந்து விடுமானால் இந்த வேறுபாடுகளெல்லாம் அகன்று அன்றைய தமிழ்ப் புலவன் கூறிய,

> 'யாதும் ஊரே யாவரும் கேளிர்
> தீதும் நன்றும் பிறர்தா வாரா' (புறம் 192)

என்ற உண்மை ஏட்டிலன்றி நாட்டிலேயே வளம் பெற்று ஓங்கும். இந்த நிலைக்குத் தனி மனிதனே

தனி அரசாங்கமோ மட்டும் பாடுபட்டால் போதாது. உலகில் உள்ள எல்லா அரசாங்கங்களும் எல்லா மக்களும் இணைந்தே பாடுபட வேண்டும். அந்தப் பாடே உலக மக்கட் சமுதாயம் வாழ வழிகாட்டியாக அமைவது. இனியாவது இத் துறையில் உலக அரசுகள் முன்னின்று செயலாற்றின் பயன் உண்டு. உலகமே அழியக்கூடிய கொடிய ஆயுதங்கள் தயார் செய்வதை விட்டு, உலகம் வாழ அறிவியலைப் பயன் படுத்தினால் நலமுண்டு—செய்வார்களா ?

VII. பண்பாட்டு வழிச் சமுதாயம்

பரம்பரையும் கலப்பும் — சார்
புக்கு ஏற்ற வாழ்வு — பன்மை
யில் ஒருமை—சட்ட திட்டங்களும்
சமூக மாறுபாடுகளும்—பொரு
ளாதாரமும் அரசியலும்—நல்ல
அரசாங்கம் — மாறுதல்களின்
இயற்கை — வளரும் மக்கட்
டொகைக்கு வழி என்ன?
— பண்பாடு காண்போம்.

பரம்பரையும் கலப்பும்

'விதை ஒன்று இட்டால் சுரை ஒன்று முளைப்ப தில்லை' என்பது பழமொழி. இதன் பொருள் எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுக்க வேண்டுமே தவிர ஒன்றை விளைந்து மற்றொன்றை அறுக்கமுடியாது என்பதே. அப்படியேதான் சமுதாய மக்கள் வாழ்வையும் கணக்கிடுவர். 'அவர் அப்பன் குணம் அவனுக்கு' என்றும் 'அவன் பரம்பரைக் குணம் அது' என்றும் பேசுவதைக் காண்கிறோம். இதற்கெனப் புலவர்கள் பாடிய பாடல்களும் கணக்கில. ஒன்று நினைவுக்கு வருகின்றது.

'நீரளவே யாகுமாம் நிராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம்'

என்று ஔவையார் போன்ற பெரும்புலவர் பாடு

கின்றார் என்றால் பரம்பரையைப் பற்றி எவ்வளவு ஆழ்ந்த எண்ணம் இருக்கவேண்டும் என்பது தெரிகின்றது. அப்படியே பரம்பரையும் சுற்றுச் சார்பும் சேர்ந்தே சமுதாயத்தை வளர்க்கின்றன என்ற உண்மையை வரலாறு நமக்குக் காட்டுகின்றது. மற்றும் ஒட்டுவகையில் பல புதுப்புது பயிர்கள் உண்டாவதை நாம் காண்கின்றோம். மாவகையிலும் இரப்பர் மரவகையிலும் ஒட்டே அதிக பயன் தருவதைக் காண்கின்றோம். சாதாரண ஒரே இனத்தைச் சார்ந்த பரம்பரையைக் காட்டிலும் இப்படி ஒட்டு வகையில் இரு புது இனங்கள் ஒன்றுகச் சேர்வதால் சிறந்த வகையில் அதன் பயன் விளைவதைக் காண்கின்றோம். இந்த நிலை தாவர வகையில் மட்டுமன்றி விலங்கினத்தும் மனித இனத்திலும்கூடக் காணமுடிகின்றது. பல விலங்குகள்-மாடு நாய் முதலியன-கலப்பினால் (Cross) சிறந்தனவாகவும் உழைக்கும் திறன் உள்ளவையாகவும் அறிவுள்ளவையாகவும் இருக்கக் காண்கின்றோம். அப்படியே மனித இனத்திலும் தம் நெருங்கிய இரத்தக் கலப்புள்ள உறவிலேயே மணம் புரிவதைக் காட்டிலும் புதுவகைக் கலப்பு வைத்துக் கொண்டால் நல்ல அறிவுடைய பிள்ளைகளைப் பெறலாம் எனக் கூறுகின்றனர். அப்படியே பல பிள்ளைகள் பிறந்து அறிவும் திருவும் பெற்று விளங்குவதையும் காண்கின்றோம். எனவே வெறும் பரம்பரை மட்டும் மனித சமுதாயத்தில் கணக்கிட முடியாது எனப் பல மேனாட்டு அறிஞர்கள் விளக்கமாகக் காட்டியுள்ளனர். எனினும் இரண்டும் இணைந்தவையே யென்பதும் அவை ஒன்றையொன்று தழுவி வளர்கின்ற காரணத்திலேயே சமுதாயம் பல வகைகளில் சிறந்து வளர வாய்ப்பும் வசதியும் உள்ளன என்பதும்

காணலாம். ஒரு சிலர் இவ்விரண்டும் எந்த அளவில் கலக்கும் எனவும் ஆராய்ச்சி செய்வர். பர்க்ஸ்.[1] என்பர் பரம்பரை 80% என்றும் சார்பு 17% என்றும் கணக் கிட்டுக் காட்டுவர். ஆனால் அதுவும் பொருந்தாது. அவரவர் மன நிலைக்கும் பழக்க நெறிக்கும் மற்றவர் பழகும் முறைக்கும் ஏற்பவே அந்தத் தொடர்பு அமையுமேயன்றி இவ்வாறு எந்த வகையிலும் வரை யறுத்துச் சொல்லமுடியாது.

சுற்றுச் சார்பு என்னும்போது வெறும் மனித இனத்தை மட்டும் நாம் இங்கே குறிக்கவில்லை. மேலே சில சார்புகளைக் கண்டோம். அகச் சார்பு புறச் சார்பு எனச் சார்பினை இரண்டாகப் பிரிக்கலாம். மேலே கண்ட நாடு நகர் அமைப்புக்களும் ஐந்திணை வாழ்வு முதலியனவும் புறச்சார்பாகலாம். 'ஒட்டும் இரண்டுளத்தின் தட்டில் அறிந்தேன்' என்று பாரதி யார் கூறியபடி உள்ளப் பழக்கம், சட்டதிட்ட வரையறைகள், பிற வேறு பழக்கம் முதலியனவற்றை அகச்சார்பு என்பர். அப்படியே நாடுகளின் தட்ப வெட்ப நிலையும் சுற்றுச் சார்பாக அமையும். வட துருவத்திலிருந்த ஒரு சமுதாயம் நிலநடுக் கோட் டுக்கு அருகில் வந்தால் அந்தத் தட்ப நிலைக்கேற்பத் தன் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்வதைக் காண்கிறோம். மற்றும் ஒரே சுற்றுச் சார்பில் வாழும் இருவேறு இனத்தவர் ஒரே மாதிரியாக வாழ்வதில்லை என்பதையும் நாம் காண்கின்றோம். ஒரே இடத்தில் வாழும் இரு உயிர்கள் ஒரே நிலையில் இருப்ப தில்லையே! சில அறிஞர்கள் ஒரே தாய் வயிற்றில் வளரும் இரட்டைப் பிறவிகளாகத் தோன்றும் உயிர்

(1) Miss. B. S. Burks.

கள் ஒரே நிலையில் வளர்வதில்லை எனக் காட்டி இருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு தனி உயிரின் அல்லது தனி மனிதனின் வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் பரம்பரையோ, சுற்றுச் சார்போ அன்றி வேறு ஒன்றே காரணமென்றும் ஆகவே ஓர் இடத்தைச் சார்ந்த அனைத்தும் ஒரே வகையில் இருக்குமென்றும் காட்டுவது பொருந்தாத ஒன்றாகும். எனினும் இவை அனைத்தும் சேர்ந்தே சமுதாயத்தை உருவாக்குகின்றன. இவற்றை மனித வாழ்வோடு பிணைக்கும் ஓர் அறிஞர் இவை மனித வாழ்வுக்கு உணவும் நீரும் போல என்பர். உணவில் நீர் உண்டு; அப்படியே நீரில் உணவு உண்டு. வள்ளுவரும்,

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பாக்கு
துப்பாய தூஉ மழை' (குறள் 12)

என்று பாடவில்லையா! எனவே இரண்டும் பிணைந்துள்ளன. இரண்டும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதன. மற்றும் இரண்டுமே மனித வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவே. அப்படியே சமுதாயத்துக்கும் பரம்பரை, சார்பு இரண்டும் இன்றியமையாதன. ஒரு சிலர் பரம்பரையை உயிர்த்துளி (cell) என்றும் சார்பை அதன் (cell) வளர்ச்சிக்கு உதவும் பொருள் என்றும் காட்டுவர். அப்படியே இரண்டும் இணைந்து வளர்த்ததே சமுதாயம்.

சார்புக்கு ஏற்ற வாழ்வு

இச் சுற்றுச் சார்பின் வழி மனிதனுக்கும் அவன் சமுதாயத்துக்கும் பல ஆக்க நிலைகள் அமைகின்றன. சில நேர்முக ஆக்கமாகவும் சில மறைமுக ஆக்கமாகவும் அமைகின்றன. இவற்றையெல்லாம் மேலே

கண்டோம். இந்த ஆக்க நெறிகளில் ஒன்றை மட்டும் நாம் இங்கு உணர்தல் வேண்டும். ஒரு சூழலில் தீமையாகப் படும் ஒன்று மற்றொரு சூழலில் நன்மையாகும். உயர்ந்த நகர எல்லையில் புலால் உணவை வெறுத்த செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் மரபினர், தம் சார்பிக்கு ஏற்ப புலால் உண்வை உண்ணுதல் பாபம் என வெறுத்து அது பற்றி இலக்கியமும் செல்வர். திருவள்ளுவர் அதற் கெனவே ஓர் அதிகாரமே செய்துள்ளனர். ஆனல் காடே கதியென வாழும் வேடனுக்கு—அதுவும் அவன் பரம்பரைத் தொழிலை அவன் வாழும் காட்டின் சுற்றுச் சார்புக்கு ஏற்பப் மேற்கொண்ட அவனுக்கு-அந்தப் புலால் உணவைத் தவிர வாழ்வு ஏது? அப்படியே துருவங்களில் வாழும் மக்களுக்கு 'ஈசல்' போன்ற உயிர் உணவு அன்றி வேறு ஏது? எனவே ஒருவருக் குப் பாபமெனப்படும் செயல் மற்றொருவரை வாழ வைக்கின்றது. இப்படியே பல காணலாம்.

சூழ்நிலைக்கு ஏற்பச் சமுதாயம் ஓரளவு தன் பழக்க வழக்கங்களையும் பரம்பரைக் குணத்தையும்கூட விட வேண்டி இருக்கும் என்பர் சிலர். நாட்டுப்புரங்களில் வாழும் சிலர் நகரங்களுக்கு வந்தால் தாம் வாழ்வு நெறியில் சில மாற்றங்களைப் பெறுகின்றனர்.

> 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்' (குறள் 140)

என்ற வள்ளுவர் வாக்கின்படி தம் பதவியை எண்ணிச் சூழ்நிலை மறந்து வாழ்தல் கூடாது என்பதும் 'எவ்வ துறைவது உலகம்' எனஅறிந்து அப் படியே ஒழுகுதல் அறிவுடைமை என்பதும் உணரத்

தக்கன. ஒரு வேளை அப்படி உணராவிட்டால் இயற்கையே பல எதிர்ப்பாராத பெருஞ் செயல் களாலே மனிதனைக் தெருட்டும். வெள்ளம், போர், பூகம்பம் போன்ற கொடுநிலைகள் உலகில் உண்டா வதற்கு இந்த அடிப்படையியே காரணம் எனலாம். தன் கைவண்ணத்திறனால் சமுதாயம் பாலைவனத்தைச் சோலைவனமாக்க முடியும். எல்லோரும் வாழவேண் டும் என்ற நல் உணர்வு சமுதாயத்திடையிலும் தனி மனித உணர்விலும் வளர்ந்து நிலைபெறுமானால் கட்டாயம் சூழலுக்கு ஏற்பத் தன்னை மாறிக் கொள்வ தோடு, சூழலையே தன் இயல்புக்கு ஏற்ப அமைக்கவும் வழி காணமுடியும். ஒரு சில இயல்புகள் பரம்பரை யாக வருவதில்லை. அவை தலைமுறைக்குத் தலைமுறை மாறுபடலாம். அதையே பிடித்து, 'என் தந்தையும் பாட்டனரும் அப்படி அப்படியெல்லாம் வாழ்ந்தார்கள்; எனவே நான் அந்த வகையிலிருந்து பரம்பரைப் பெரு மையை விட்டுக் கொடுக்க மாட்டேன்' என்று வீண் பேச்சு பேசிக்கொண்டு காலம் கழித்தல் அறிவுடைமை யாகாது. வெள்ளத்துக்குத் தலை தாழ்த்தும் நாணலே அதை வென்று கரையைக் கட்டிக்காக்கும். எதிர்க்கும் கற்சுவரோ அடித்துக்கொண்டு போகப் பெறும். இதைத் தனிவாழ்விலும் சமுதாய வாழ்விலும் உணர வேண்டும். இந்த அமைப்பிலே வாழும் நிலையினையே சமுதாயப் பரம்பரை எனக் காட்டுவர் சிலர்.[1] இந்த அமைப்பு முறையினை, பல கடந்த காலங்களைக் காட்டிலும் இரு பதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட மனிதன் படிக்கக் கற்றுக் கொண்டான் என்று மேலை நாட்டுப் புலவர்க ளெல்லாம் காட்டுகின்றனர். எனினும் இந்த முறை

1. Social Heritage—The knowledge, experiment and habits.

எந்த அளவு சமுதாயத்தை எங்கே ஈர்த்துச் செல்லுகிறது எனக் காணவேண்டுமென்பர் மற்றொரு சாரார். இந்த அமைப்புமுறை கெடுவதாலேதான் இலங்கை, பர்மா, மலேயா முதலிய இடங்களில் தமிழ்மக்கள் சீர்கெட நேரிடுகின்றது. சீன நாட்டு மக்கள் யாண்டு சென்றாலும் தம் பண்பாட்டைக் காத்துக் கொண்டு, அதே வேளையில் சென்று வாழும் நாட்டிலுள்ள மக்கள் மனநிலைக்கு ஏற்ப வாழும் தன்மையையும் அறிவார்கள். எனவே எந்த நாட்டிலும் அவர்கள் சிறக்கின்றனர். தமிழ் நாட்டு மக்கள் பழங்காலந் தொட்டு பிற நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒன்றிப் பழகாத காரணத்தினாலேயே அந்த நாடுகளில் பல இடர்ப்பாடுகள் உண்டாகின்றன. நம் நாட்டில் வந்து வாணிபம் புரியும் வடநாட்டு மார்வாரிகள் நிலையும் சில ஆண்டுகளுக்குமுன் அதே வகையில் இருந்தது. எனினும் காலநிலையை அறிந்து அவர்கள் தற்போது திருந்தி நம்மோடு கலந்து தமிழரே என்னுமாறு வாழ்வதோடு இங்கேயே பல அறப் பணிகளைச் செய்து சிறப்பதால் அவர்களை நம்மவர் வேற்றுக் கண்ணோடு நோக்குவது குறைந்துள்ளதன்றோ! எனவே பரம்பரைப் பண்பாட்டில் எத்தனை மாறுபாடுகள் இருப்பினும், அவற்றை அடியோடு விட்டுவிடாது, அதே வேலையில் தாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் பழகாவிட்டால் எந்தச் சமுதாயத்துக்கும் வாழ்வில்லை என்பது வெளிப்படை. இந்த நிலை மொழி, சமயம், வாணிபம், கலை, கல்வி போன்ற எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இயல்பு. எல்லாவற்றையும் ஒன்றுக்குவது என்பது இயலாத ஒன்று. அதனால் சமுதாயம் கட்டாயம் இந்த உண்மையை அறியாவிடில் அழிய நேரிடும் என்று

எல்லா அறிஞர்களும் உணர்ந்து போற்றத் தலைப் பட்டுள்ளனர்.

பன்மையில் ஒருமை

இச் சமூகத்தைக் கட்டுப்படுத்தப் பல விதிகள் உள்ளன. அவற்றைச் சிறப்பாகப் பல இனங்கள் வாழும் இந்நாட்டிலே காணலாம். பொதுவான மனித இனம் வாழ வகுத்த விதிகள் பல. இந்திய நாட்டில் வாழும் நாற்பது கோடி மக்களுக்கும் என்று வரையறுத்த விதி கள் சில. ஆனால் தனித்தனியான இனங்களுக்காகவும் சில விதிகள் உள்ளனவே. முகமதியர்களுக்கெனச் சட்ட ரீதியில் இன்றும் தனிச் சட்டங்கள் உள்ளன அல்லவா! இன்று நாட்டில் உள்ள பலதாரத்தடைச் சட்டம் அவர்களைக் கட்டுப்படுத்தாது. அது அவர்தம் சமயத்தோடு பொருந்திய ஒரு தெய்வ நெறி. எனவே அதை மற்றவர்கள் சட்டம் செய்து தடுக்க முடிய வில்லை. இப்படியே சில சமுதாய விதிகளும் நாட்டின் பல பகுதிகளில் மாறுபட்டுள்ளன. சாதாரண அர சாங்க விடுமுறை விதிகளிலேயே இந்த வேறுபாட்டை நன்கு நாம் காண்கின்றோம். ஒவ்வொரு பகுதிக்கு ஏற்ப அவரவர் தம் பழக்க வழக்கங்களுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் விழாக்களுக்கும் ஏற்ப விடுமுறை விதி கள் அமைக்கப் பெறுகின்றன அல்லவா! கிறித்தவ மத மதியக் கோயில்களுக்குத் தேவையில்லை இந்து சமயப் பாதுகாப்புச்சட்டம். அரிசனங்கள் கோயில் நுழைவுச் சட்டம் நாட்டில் உண்டான காரணம் என்ன? இவை யெல்லாம் வேற்றுமையில் ஒற்றுமைகாண எழுந்த சமுதாயச் சட்டங்களே. இவ்வாறு அன்றி இந்நாட் டில் எல்லோரும் ஒரே வகையில்தான் இருக்க வேண்டு மென்று இன்றைய மக்களாட்சிப் பெரும்பான்மை

பலத்தாலோ அன்றித் தனி மனித சர்வாதிகார முறையி னாலோ சட்டங்கள் செய்யமுயன்றால் இந்நாட்டில் என்றும் அமைதியைக் காணமுடியாது. இவ்வாறு சமுதாயச் சடங்கு, பழக்கவழக்கங்களுக்குக் காட்டிய நெறி, மொழி முதலிய பிறவற்றிற்கும் பொருந்துவ தாகும். ஒரு மொழியை நாட்டின் பிற பகுதிகளில் கட்டாயப்படுத்துவதால் பொது வாழ்வில் பல சிக்கல் களும் மாறுபாட்டு உணர்ச்சிகளும் மலிவதைக் காண் கிறோம். எனவே பல்வேறு சமுதாயச் சூழ்நிலையே வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே அந்த இணைந்த சமுதாயத்தை வாழ வைக்கும் சிறந்த வழியாகும். அதற்கு ஏற்படும் நாட்டின் தனிவிதிகளையும் பொது விதிகளையும் கூட்டுவிதிகளையும், அகவிதிகளையும் புறவிதிகளையும் அமைத்தல் வேண்டும்.

சட்டதிட்டங்களும் சமூக மாறுபாடுகளும்

இத்தகைய மாற்றங்களால் அவரவர் கொள்கை களை விட்டுக்கொடுக்க வேண்டுமென்று யாரும் கூறார். கொள்கை என்பது ஆடை உடுப்பதும் முதல் நாடு வாழ வழி காண்பது வரையில் அமையும். எல்லோரும் ஒரேவகையான உடை உடுக்க வேண்டுமென்றோ அல்லது நம் நாட்டுக்கு வருபவர் ஒரே வகையில்தான் உடை உடுக்க வேண்டுமென்றோ வற்புறுத்துவ தியல லாது. காந்தி அடிகளார் உடலெல்லாம் தெரியச் சிறு துண்டையே ஆடையாகக் கொண்டுதான் லண்டன் நகரத்துக்குச் சென்று வட்டமேசை மாநாட்டில் பங்கு கொண்டார். இப்படியே உணவு முதலிய சாதாரணப் பழக்க வழக்கங்களாயினும் சரி, சமுதாயத்தைப் பற்றிய பெரு நெறிகளாயினும் சரி, அனைத்தையும் கொள்கை அடிப்படையில் விடாது, அதே வேளையில் நாட்டின்

சமுதாய வாழ்வில் நலிவு உண்டாகாத வழியில் வளர்க்க வேண்டும், தமிழ்நாட்டுச் சமயநெறியோடு அரசியல் நெறிபற்றி வாழ்ந்த அப்பர், மாணிக்க வாசகர் போன்ற பெரியவர்கள் கொள்கையை விடாமலேயே மக்கள் வாழ்வை மலர வைத்தமையினுல்தான் இன்றளவும் சிறக்க வாழ்கின்றனர். அப்படியே பாரதத்தில் கொடையாளியாகக் காட்சிதரும் கன்னன் 'ஏழைழு பிறப்பும் இல்லை யென்றுரைப்போர்க்கு இல்லையென் றுரையா இதயம்' வேண்டிக் கொள்கையை நிலை நாட்டிய காரணத்தினுலேயே உலகம் உள்ளளவும் வாழ்பவனுனன். இடைநாட்டுக் கிறித்துவும் அப்படியே கொள்கையோடே வெற்றி கண்டார். அண்ணல் காந்தி அடிகளார் அப்படியே கொள்கையை விடாது உரிமை வாழ்வை அடைந்தார் என்பதைக் காணவில்லையா! இந்த நிலையில் ஒரு சிலர் கொள்கையென்ற பெயரால் சில சாதாரணச் சடங்குகளையும்கூட மேற்கொள்ள நினைப்பதோடு அதையே வற்புறுத்தவும் நினைப்பர். அப்படியே சிலர் குறியிடுகளுக்காகப் போரிடுவர். இவை சில சமயங்களில் தீங்கினை விளைப்பதும் உண்டு. சில சமயங்களில் நாடுகளில் இந்தக் கொள்கை அடிப்படையிலும் பல சமுதாயநெறி அடிப்படைகளிலும் மாறுபாடுகள் எழுவதும் இயற்கை. அப்போது சிலர் நீதிமன்றங்களின் உதவியை நாடுவர். ஆளுவோராயிருப்பின் படை பலத்தை நாடுவர். ஆயினும் அவையெல்லாம்—நீதிமன்றமும் படையும் பிறவும்—சமுதாயத்தின் கையாட்களாக இருக்க வேண்டுமேயன்றி சமுதாயத்தின் தலைவராக மாறக்கூடாது என அறிந்தோர் வரையறுப்பர்.

நாட்டில் எத்தனைத் திருத்தங்களும் முன்னேற்றங்களும் காணவிழைந்தாலும், ஒரு சிலர் தம் பழக்க வழக்கத்தையும் வாழ்க்கை முறைகளையும் விட்டு மாறுபட விரும்பார்; மாற்றம் எத்துணை உயர்ந்ததாக இருப்பினும் அவற்றை விரும்புவதில்லை. நம்நாட்டில் வாழும் குருவிக்காரர், வில்லிகள். தோதர்கள் போன்றோர் அவர்களுக்கு எத்தனை எத்தனை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்தாலும், வேண்டாமென்று ஒதுக்கி ஒதுங்கியே தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்வதைக் காண்கின்றோமல்லவா! இப்படியே இந்திய நாட்டின் பிற்பகுதிகளிலும் பல பிற்போக்கான வகுப்பினர் இருந்துகொண்டே இருக்கின்றனர், உலகின் பல பாகங்களிலும் இத்தகைய பிற்போக்கான மக்களைக் காணலாம். முன்னேறிய சமுதாய மக்கள் இவர்களையும் ஓரளவு கூடவே முன்னேற்றிக்கொண்டு சென்றால் தான் சமுதாயம் நிறைநலம் பெற்றதாகக் கருதப்படும்.

இவ்வாறான சமுதாய அமைப்புக்களை ஆராயும் போது முக்கியமாக ஐந்தே முன்னிற்கின்றன என்பர் சிலர். அவை சமயம், நீதி. சட்டம், வழக்கம், பழக்கம் என்பன. சிலர் சமயம். அரசியல், கல்வி, குடும்பவாழ்வு, பொது வாழ்வு எனவும் காட்டுவர். எப்படிப் பிரிப்பினும் சமுதாய வாழ்விற்கு அவை ஒவ்வொன்றின் தேவையையும் யாகும் மறுக்கமுடியாது. சமயத்தையும் நீதியையும் ஒன்றாகச் சிலர் பிணைத்துக் காண்பர். இன்றும் சில நாடுகளில் சமயம் சமூகத்தை ஆளும் நிலையினைக் காண்கின்றோம். சமயத் தலைவர்தம் ஆணைக்கு ஆளுவோர் அஞ்சி நடக்க வேண்டிய நிலையினை இந்த நூற்றாண்டிலும் நாம் காண்கின்றோமே. அப்படியே சில நீதிகள் சில சமயங்களில் நாட்டை ஆள்வதும் உண்டு.

'மனு தர்ம சாத்திரம்' நாட்டை ஆண்டதெனவும் அது வேண்டமெனவும் நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்டதன்றே! மக்களினத்தில் வேறுபாடு கற்பிக்கும் எந்த நீதியும் சமயமும் நாட்டை ஆளத் தொடங்கினால் அந்த நாட்டில் அமைதியைக் காண முடியாது என்பதைச் சமூக வரலாறு நன்கு எடுத்துக் காட்டுகின்றதன்றே!

வெறும் சட்டத்தால் பழக்க வழக்கங்களையோ பிற சாதாரணச் செயல்களையோ கட்டுப்படுத்துவது சமுதாய நல்வாழ்வுக்கு மாறுபட்டது எனக் கண்டோம். சட்டம் புற வழக்கத்தையே கட்டுப்படுவது. அப்புற வழக்கங்களும் அவ்வவ்வினத்தாருக்கும் சமயத்தாருக்கும் இயல்வதாயின் மற்றவர் அவற்றைத் தடுக்கவோ அன்றிக் கெடுக்கவோ கூடாது, சட்டம் எல்லா மனிதருக்கும் அடிப்படையான உரிமைகளை வழங்கவும் மாறுபாடுகளால் நாட்டில் கொடுமைகள் நிகழாமல் தடுக்கவுமே பயன்படவேண்டும், ஒரு சிலர் சிறு சிறு மாற்றங்களுக்காகவும் மாறுபடுவர். சென்னை நகரத் தெருப் பெயர்களை மாற்ற நடைபெற்ற சிறு சிறு சச்சரவுகளைச் சில ஆண்டுகளுக்கு முன் கண்டோம். தமிழ் நாட்டில் பல ஊர்ப் பெயர்களையும் இடைக்காலத்தில் மாற்றியிருப்பதையும் காணலாம். சிலர் இந்த மாற்றத்தால் தம் உயர்வை நிலைநாட்ட முடியும் என எண்ணுகின்றனர். ஆனால் ஆணைமூலம் ஒரோவழி ஒவ்வொரு காலத்தில் சில மாற்றங்களைச் செய்தாலும், என்றும் உண்மை, நீறுபூத்த நெருப்பினைப் போலிருந்து தேவையானபோது மெல்லத் தலை தூக்கி உண்மைப் பண்பாட்டையும் அதன்வழி உருவாகும் சமுதாயத்தையும் வாழவைக்கும் என்பது உறுதி. இதை உணராத கார

ணத்தினுலேயே நாட்டில் பல சிறுசிறு சண்டைகள உண்டாகின்றன.

பழக்க வழக்கங்கள் என்னும் பேரால் உடையிலும் உணவிலும் இன்று எத்தனையோ வகையான மாறுதல் களை நாள்தோறும் காண்கின்ருேம். வேலையற்ருேர் வயிற்றுப் பிழைப்புக்காகவும் சாமர்த்தியசாலிகள் பொருள் பெருக்குவதற்காகவும் புதுப்புது நாகரிக வழக்கங்கள் என்று பலப்பல ஆடை அலங்காரங்களைப் புகுத்துவர். அதிலும், இன்று திரைப்பட உலகம் மக் களை ஆட்டிப்படைக்கும் தெய்வமாகக் காட்சிஅளிக்கும் வேளையில், அவற்றில் வரும் நடிகை நடிகர்களின் நடை உடைகளையே தம் வழி காட்டிகளாகக்கொண்டு தம் மனம்போன போக்கிலெல்லாம் மக்கள் செல்வதை அறி கின்ருேம். தமிழ் நாட்டில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் இந்த மாறுபாட்டைக் காண்கின்ருேம். புதுப்புது வகையான உடைகள் என்னும் பேரால் உடலையே புறத்தில் காட்டும் நாகரிக அலங்கோலத் தைக் காண்கிருேம். உடைவகையில் காணும் இதே நிலை உணவு வகையில் காணமுடிகின்றது. கைவருந்திப் பாடுபட்டு நல்ல உணவினை உண்டுவந்த நிலைமாறி அதையே பல நிறங்களிட்டு எதேதோ பெயர் சொல்லிக் கண்ணுடிப் பெட்டியில் அழகுற அடுக்கி வைத்தால் அதைக்கண்டு நாவில் நீர்சுரக்க வாங்கித் தின்று வயிற் றையும் கெடுத்துக்கொண்டு வாழ்வையும் பாழாக்குகின் ருேம். உணவும் உடையும் மட்டுமின்றி அணிவகை களிலும் இந்த வேறுபாடு. பொன்னும் மணியுமட்டு மன்றி எல்லாவற்றையும் பூணுவது ஒருபுறம் இருக்க பொன்னைப் பலவகையில் வாணிபத்துக்காக மாற்றி மாற்றி அமைக்க, அவற்றில் புதுமோகம் கொள்ளுகின் ருேம், இவற்றைப் பழக்கம் (Fashion) என்று கொள்ளு

கிறோம். குழந்தை கண்டதையெல்லாம் பற்ற நினைப்பது போன்று நாம் அறியாது இவற்றையெல்லாம் பின்பற்றி ஓடுகிறோம். அந்த வேளைக்கு இவையெல்லாம் நலம் தருவன போன்று தெரியும்; காலப்போக்கில் அவற்றின் தீமை தெளிவுறும். இந்த உண்மையை மேலை நாட்டவர் இப்போது உணர்ந்து திருந்தி வருகின்றனர். நம்நாட்டவர் திருந்த இன்னும் சில ஆண்டுகள் தேவைபோலும்.

பொருளாதாரமும் அரசியலும்

இதுவரை கண்ட வளர்ச்சிகளுக்கும் மாறுபாடுகளுக்கும் அரசியல் அமைப்பே காரணம் எனச் சிலர் வாதிடுவர். அவர் கூற்று அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அதில் உண்மை இல்லை என்று சொல்லமுடியாது. அரசியலும் பொருளாதாரமுமே சமூகத்தைச் செம்மைப்படுத்துவன என்பதை உலக அறிஞர்கள் ஓரளவு உற்று அறிந்துள்ளனர். இன்னும் சற்று அதிகமாகச் சொன்னால் பொருளாதார அரசியலே இன்று உலகைக் காட்டி ஆளுகிறது எனலாம். அரசியலைப்பற்றி ஆங்காங்கு கண்டு கொண்டே வந்தோம்; தனியாக அதுபற்றிக் காணவேண்டியது இல்லை. என்றாலும் அதன் அமைப்பே சமுதாயத்தை ஆக்குவது ஆதலாலே சிறிது காண்போம்.

தனிமனிதன் ஆரம்பித்த சமுதாய வாழ்வு வீட்டு வாழ்வாய் மாறிய காலத்தில் குடும்பத்தலைவனும் தலைவியும் தோன்றினர்கள். பின்னர் இனம் உருவான நாட்களில் இனத் தலைவன் தோன்றிய வரலாறும் அறிவோம். அக்காலத்தில்தான் தொழிலால் பகுப்பு உண்

டாகிப் பின் அவையே நால்வகைச் சாதிகளாக மாறி விட்டன என்பதும் அறிவோம். அதற்குப் பிறகே செம்மையான அரசியல் உருவாயிற்று. அன்று தொட்டு இன்று வரையில் உலகில் அரசியல் முறை பலவகைகளில் வளர்ந்துகொண்டே வருகின்றது. ஒரு காலத்தில் மன்னராட்சியைச் சிறந்ததாகப் போற்றினர், தமிழ் நாட்டுக் கடைச்சங்க கால இலக்கியங்களோ நோக்குவோமானால் அரசர், மக்கட் சமுதாயத்தின் உயிர்நாடியாக விளங்கினர். மேலை நாடுகளிலும் இந்த நிலையை இடைக் காலத்தில் காண்கின்றோம், இன்றும் சில நாடுகள் மன்னரைப் போற்றுகின்றன. இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஆட்சிமுறை அமைப்பில் வெறும் தலைவியாக இராணி இருக்கிறார். கால வளர்ச்சியில் 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற உணர்வில் மக்கள் நாடுதோறும் வளர ஆரம்பிக்கத் தொடங்கவே மக்களாட்சி உலகின் பல பாகங்களிலும் வளர்ந்துள்ளது. நாட்டில் உள்ள மக்கள் அறிவுடைய மக்களாக இல்லையானால் இம்மக்களாட்சிமுறை நிலை கெடுவதுண்டு. அக்காலங்களில் சர்வாதிகார ஆட்சிகள் மலரும். பொதுவுடைமைக் கொள்கையாகிய பொருளாதார அடிப்படையில் அமையும். ஆட்சிகளும் உள்ளன. எனவே நாட்டை ஆளும் இந்த ஆட்சிமுறை காலந்தொறும் மாறி வந்துகொண்டே இருக்கின்றது. இன்றும் நிலைத்த முறையில் உள்ளது என்று சொல்ல முடியாது. எதுவும் வளர்ச்சி கருகி நிலையாக அமைவதன்று. ஆதலால் இந்த ஆட்சி முறைக்கும் சமுதாயத்துக்கும் உள்ள தொடர்பு நிலையே பெரும்பாலும் வரலாற்றில் பேசப்பெறுகின்றது. நாமும் மேலே ஒருசில இடங்களில் அம்முறைகள் பற்றி ஆராய்ந்தோம்.

நல்ல அரசாங்கம்

இன்றைய நிலையில் நாடாளும் உரிமை ஒவ்வொரு வருக்கும் இருக்கின்ற காரணத்தால் நாட்டில் உண்டாகும் நலக் கேடுகளுக்கு ஒவ்வொருவரும் பதில் சொல்ல வேண்டியவராவர். அரசாங்கம் மக்களுக்குள்ளே சமுதாயத்தால் வளரும் உறவை யன்றி வேறு பல உறவுகளையும் உண்டாக்குகின்றது, அரசாங்கம் தான் வாழ வேண்டும் என்று நினைப்பதைக் காட்டிலும் தன் நாடும் சமுதாயமும் வாழ வேண்டும் என்று நினைப்பதே சிறந்தது. அவ்வாறு நினைத்துச் செயலாற்றும் அரசாங்கங்களே நெடிதுவாழக் காண்கின்றோம். ஆணையும் படைத்துணையும் அளவற்றிருப்பினும், அமைதியாக நாட்டை ஆளுவதே சிறந்த அரசாங்கமாகும். தன் எல்லையிலுள்ள பல சமுதாய அமைப்புக்களை மாறுபாடில்லா வகையில் இயங்கச் செய்வதே சிறந்ததாகும். நாட்டு அடிப்படைப் பண்பாடு, கலாசார வாழ்வு இவற்றை நல்ல அரசாங்கம் திருத்த முற்படாது வளர்க்கவே பாடுபடும். பல்வேறு சமுதாயச் சூழல்கள் போட்டியால் மாறுபடாது அமைதியில் வாழ வழி கோல வேண்டும். தனி உரிமை ஆதிக்கமுறை நாட்டில் இருக்கவே கூடாது. பல நாடுகளின் தொடர்பாலும் பொருளாதார நிலையாலும் ஏற்படும் மாறுதல்களை ஏற்றுச் சரி செய்யும் திறம் பெற்றதாக அது இயங்க வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியாகிய வாணிபத்திலும் பிற துறைகளிலுல் அரசாங்கமும் சமுதாயமும் கலந்து பங்கேற்று வளர்க்கவேண்டும். எல்லா மக்களும் எல்லா நலன்களும் பெற்றுச் சமநிலையில் வாழ வழி செய்ய வேண்டும். அரசாங்கமே நாட்டில் உண்டாகும் எல்லாப் பொறுப்புக்களுக்கும் பிறவற்றிற்கும் காரணம் என்ற உண்மையை உணர

வேண்டும். தனிமனிதனைத் தனி மனிதனும் சமுதாயத்தைச் சமுதாயமும் தாக்காமல் காத்துக்கொள்ள வேண்டும், வஞ்சகத் தன்மை எந்த வகையிலும் வளராது காக்கவேண்டும். நீதி ஒழுங்காக அமைய வேண்டும். உரிமைகள் அவரவர்களுக்கு ஏற்ற வகையில் - தனி உரிமை பொது உரிமை போன்றவை நேரிய வகையில் – அமைய வேண்டும். சமய இனப் பண்பாடுகளை நசுக்காமல் காப்பாற்ற வேண்டும். அரசியலில் உயர்ந்தார் தாழ்ந்தார் என்று பிரித்து, 'பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும்' செய்யும் நிலை இல்லாதிருக்க வேண்டும்.

இவ்வாறு அகநாட்டைக் காக்கும் அரசாங்கமே ஒவ்வொரு நாட்டிலும் அமையுமானால் உலக சமுதாயத்துக்குப் பாடுபடும் உலக அரசாங்கம் எளிதில்அமைந்து விடும். இவ்வாறு செம்மை பெறுத அரசாங்கங்கள் இன்றேல், 'U. N. O.' போன்ற பெரும் தாபனங்களால் பலனில்லை. அங்கே 'வெட்டு' (Veto) அதிகாரத்தால் நேர்மை தடுக்கப்படுகிறது எனப் பேசுகின்றோம், அந்த நிலைமாறி உறுப்பினர் எல்லோரும் சமம் என்ற உணர்விலேயே உலக அரசாங்கம் அமைக்கப்பெற வேண்டும். இன்னார் இனியார் என்னுது உற்றார் மற்றார் என்னுது உலகத்தை ஒன்றுகவே நோக்கி வாழும் திறமே உலக அரசாங்கம் செம்மையாகச் செயல்பட உதவுவது. இன்று உலகை அல்லலுறுத்தும் போரை நிறுத்தும் முயற்சி உண்மையில் அமையவேண்டும். உதட்டுப் பேச்சு உள்ளத்துப் பேச்சாக மாறினால் மற்றெல்லாம் சரியாகிவிடும். இவ்வாறு நாட்டு அரசாங்கங்கள் பற்றியும் உலக அரசாங்கம் பற்றியும் பலப்பல கூறலாம். உலக அறிஞர்கள் எத்தனையோ நூல்களை எழுதி வைத்

துள்ளார்கள். எனவே நாம் இந்த அளவிலே இதை விடுத்து மேலே செல்வோம்.

இன்று உலகில் வளரும் தொழில் வளர்ச்சி அரசாங்கங்களின் அடிப்படையிலேயே சிறக்கின்றது. உரிமைபெற்றபின் நமது நாட்டின் தொழில் வளர்ச்சி எல்லையற்றுப் பெருகி வருவதைக் காண்கின்றோம். அத்தொழில் வளர்ச்சியும் நாட்டுச் சமுதாயத்துக்கு ஊறு செய்யாததாய் - உலக சமுதாயத்தை ஒருமை உணர்வில் வாழ வைப்பதாய்—அமைய வேண்டும். இன்றைய உலகில் தொழில்வளர்ச்சியே உலகப் பொருளாதாரத்துக்கு வழி காட்டியாக இருப்பதால் அரசியல் தலைவர்களும் பொருளாதார நிபுணர்களும் இத்துறையில் கருத்திருத்தின் உலகமும் சமுதாயமும் செம்மையில் சிறக்க வழியுண்டு.

மாறுதல்களின் இயற்கை

இவ்வாறான அரசியல், தொழில் முயற்சிகளால் சமுதாயம் மாறுவது இயற்கையே. அம் மாறுபாடு அடிப்படைப் பண்பாட்டை கெடுக்காத வகையில் அமைந்தால் தவறில்லை. இந்த அமைப்பில் சமூகம் மூவகையாக மாறுதல் பெறும் என்பர். இன்றைய விஞ்ஞான உலகில் பலப்பல புதுக் கண்டுபிடிப்புக்களால் சமுதாயம் மாறுதலடைகின்றது. தமிழ் நாட்டில் பிராமணர்கள் கப்பலில் மகளிருடன் செல்வதில்லை என்ற நிலைமாறி, வான்வழியும் பறந்து செல்லும் காலம் வந்துவிட்டதை நாமறிவோம். அப்படியே உணவு உடை அணி முதலியவற்றிலும் காண்கின்றோம். அப்படியே விஞ்ஞான வளர்ச்சியினால்

சமுதாய வாழ்வே அடியோடு மாறுவதைக் காண முடிகின்றது; இது ஒருவகை.

உள்ளத்தில் மேன்மேலும் வளர வேண்டுமென்ற விருப்பத்தினாலும் மாற்றங்கள் பெறலாம். 'எண்ணியர் திண்ணியராகப் பெறின், எண்ணிய எண்ணியாங்கு எய்துவ'ராதலின் சமுதாயத்திலுள்ளவர் விடா முயற்சியுடன் உழைப்பார்களாயின் தம் எண்ணத்தின் வழியே பலவகைகளில் வளர்ச்சி பெறுவர். அவ்வாறு தோன்றும் புத்தம் புதிய வளர்ச்சிகளால் சமுதாயம் மாறுவதும் உண்டு. மூன்றாவது முறை சமுதாயச் சுற்றுச் சார்புகளினால் அறிந்தோ அறியாமலோ வேண்டியோ வேண்டாமலோ மாறுபாடு நடைபெறுவதும் உண்டு. இப்படி மாறும்போதெல்லாம் சமுதாயத்தில் பல சிக்கல்கள் உண்டாவதையும் காண்கின்றோம்.

இவ்வாறு மாறுபாடுகள் நிகழும்போது சில மாறுபாடுகள் மெல்ல நிகழ்வதுண்டு. அந்தமுறையே சிறந்த ஒன்றாகும். எதிர்பாராது வெகு வேகமாக முன்னேறுகின்றோம் என்ற உணர்வில் பழமையெல்லாம் மறந்து செல்லுதல் பண்பாடாகாது; சமுதாயமும் அதை அப்படியே யேற்றுக் கொள்ளாது. மனிதன் தனது முயற்சியால் இவ்வாறு விரைந்து போவதினும் இயற்கை தன்போக்கில் இயல்பாக மாற்றிச் செல்லும் வளர்ச்சிமுறை (Evolution) காலப் போக்கில் நலம் பயப்பதாகும். அந்த இயற்கையின் நியதியை அறிந்து மனிதன் தன்னை அதற்குத் தக்க வழியில் பக்குவப் படுத்திக்கொண்டு செல்வானையின் நிச்சயமாக அவனுடைய சமுதாய வாழ்வும் நாளும் நாளும் நலம்

பெற்றுக்கொண்டே போகும். மாறுகத் தன் முயற்சியாலேயே எல்லாம் முடிவுறும் என்று இயற்கையைச் சாடி விரைந்து முன்னேறுவது போன்ற காட்சியை மனிதன் காட்ட முயன்றாலும் அது பெரும்பாலும் முன்னதைப் போன்று சிறக்காது என உணர்தல் வேண்டும். இருவகை வளர்ச்சிகளும் மனிதனுக்குத் தேவையே. எனினும் அவற்றைக் காலமறிந்து இட மறிந்து ஏற்கச் சமுதாயம் பழகவேண்டும்.

உலகம் உண்டான நாள் தொட்டு எத்தனையோ மாறுதல்கள் நடைபெற்றுள்ளன. சில விரைந்தும், சில மெல்லவும் சில அமைதியாகவும் நடந்தன. எல்லாம் சமுதாய வாழ்வை மையமாகக் கொண்டனவே. கடிகாரத்தில் மையத்தை இடுகைக் கொண்டு மூன்று முட்கள் சுற்றுவன போன்றே இவற்றின் வேகமும் அமைகின்றன. மணி காட்டுதல் ஒன்றே குறிக்கோள் என அவை பணியாற்றுவது போன்று சமுதாய வாழ்வு ஒன்றே என்று இவை பணியாற்றுமாயின் திட்டமாக நல்ல பயனை எதிர் நோக்க முடியும். இவ்வளர்ச்சிகளை வரலாற்று எல்லையில் நின்று ஆராயும்போது மனிதனது அளவுக்குட்பட்ட வளர்ச்சியும் அவனது ஆற்றலைக் கடந்த பெருவளர்ச்சியும் சமுதாயத்தை ஈர்த்துச் செல்வதைக் காண்கின்றோம். அந்த ஆற்றல்களை விஞ்ஞானம் அல்லது அறிவியல் என்றோ இயற்கையென்றோ கடவுள் என்றோ காட்டுகிறோம். எப்படியாயினும் மனித சமுதாயம் அம் மனிதனுடைய தன் முயற்சியால் மட்டுமின்றி, அவன் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றின் உறுதுணையாலும் வழிகாட்டும் நெறியாலும் வளர்ந்து, அவன் வேண்டினாலும் வேண்டா

விட்டாலும் வளர்ந்துகொண்டே செல்லுகிறது என்பது தெளிவு. இனியும் வளர்ச்சி யுறும்.

வனரும் மக்கட்டொகைக்கு வழி என்ன ?

இன்றைய மனித எண்ணிக்கை வேகமாக வளர்கின்றதென்றும் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் பலர் கூறுகின்றனர். நம் நாட்டில் அதற்கேற்ற வழித்துறைகளையும் வகுத்துள்ளனர். உயிர் நூற் புலவர்கள் இவ்வளர்ச்சியை நிலை பெற்ற வளர்ச்சியாகக் கொள்வதில்லை. சில காலம் வளர்வதும் சிலகாலம் தேய்வதும் சிலகாலம் அமைந்திருப்பதும் இயற்கை என்பது அவர்கள் வாதம். எனவே அப்படி வளர்கின்ற வளர்ச்சி திடீரென ஒரே நாளில் அழியினும் அழியலாம் என்பர். இன்றைய உலகச் சூழலும் அவர் கூற்றை மெய்ப்பிக்கும்மாறு அமைந்துள்ளது. இன்றைய மக்கள் வளர்ச்சியைக் கணக்கிடும் அறிஞர்கள், கடந்த நூற்றுஐம்பது ஆண்டுகளில் அன்றைய மக்கட்டொகையைக் காட்டிலும் ஐம்பது மடங்கு அதிகமாக மக்கள் இருக்கின்றனர் என்கின்றனர்.[1] அவர்கள் கூற்று ஒரு நாட்டுக்கு (U. S. A.) உரியதென்றாலும் இந் நிலையே உலகெங்கணும் காணப் பெறுகின்றது. அடுத்து வருகின்ற ஒரு நூற்றாண்டில் பொதுவாக உலக மக்களினம் பல மடங்காகப் பெருகும் என்பது தெளிவு. எனினும் அதற்காகப் பிறப்பைக் கட்டுப்படுத்துவ தென்பது முறையா என எண்ணிப் பார்க்கவேண்டும். எத்தனை மடங்கு மக்களினம் பெருகினாலும் அதற்கேற்ற உணவுப் பிறவும் அளிக்க உலக அன்னை தயாராக இருக்கிறாள் என்பதை அறிவியல் விளக்குகின்றது.

1 Society P. 532.

எனவே காடுகொன்று நாடாக்கி விளையுள் பெருக்கி, கடல் வளத்தையும் சூரிய வெப்பத்தையும் வாழ்வுக்கு ஏற்றதாக்கிப் பல்வேறு வகையில் இயற்கையைப் பயன்படுத்தினால் இன்னும் எத்தனை மடங்கு மக்கட் சமுதாயம் வளர்ந்தாலும் கவலைப்பட வேண்டியதே யில்லை. அதற்கேற்ற சூழ்நிலையில் இன்று அறிவியல் வளர்ந்துள்ளதை எண்ணி மகிழவேண்டும். ஆனால் அதே அறிவியல் ஆக்கத் துறையை விட்டு அழிவுத் துறைக்கு வழி கோலும்போது அஞ்சவேண்டி யுள்ளது. இன்று உலகை ஆளுவோம் என்றும் விஞ்ஞானத்தைத் தம் வழிச் செயலாற்றத் தொடங்கி விட்டோம் என்றும் கூறும் தலைவர்கள் இந்த வழியில் சிந்திக்க வேண்டும். மக்கட் சமுதாயத்தை அதன் இயற்கை நெறியில் வளரவிட்டு அதற்கேற்ற வகை யில் வாழ்க்கை வசதிகளைத் தேடித் தருவதே அறி வுடைமை. பழைய கற்காலத்துக்குமுன் பயனற்ற கிழங்களையும் உபயோகமற்றவரையும் கொன்று குவித்த அந்தக் கொடுநிலைக்கும் இன்று பிறப்பிற்குக் கட்டுப்பாடு விதிக்கும் இந்த நிலைக்கும் உண்மையில் என்ன வேறுபாடு காணமுடியும்? ஆளும் உலக அரசாங்கங்கள் இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இடைக்காலத்தில் இந்தப் பண்பாட்டு நெறியைச் சமயத்தோடு இணைத்தனர் சிலர்; அறநெறியாக்கினர் சிலர். கொடுமை செய்வது அறநெறிக்கு மாறு பட்டது என்று கூறினும் கேட்காத காரணத்தால், கொடுமை செய்தால் கடவுள் தண்டிப்பார் என்று காட்டினர். ஆனால் இன்றைய மனிதன் அவற்றை யெல்லாம் கடந்துவிட்டது போலப் பேசுகின்றான்.

அறநெறி, கடவுள் நெறி அனைத்தும் மனித சமுதாயம் வாழ்வதற்குத் தேவையான பண்பாட்டின் வழியே அமைக்கப்பட்டவைதாம், எனவேதான் சமயத் தலைவர்களும் அறநெறி கூறும் அறிஞரும் சிறந்த பண்பாட்டாளனாக இருந்து உள்ளொன்று வைத்துப் புறமொன்றுபேசா நிலையில் மனிதன் வாழ்வானுயின் அவனுக்கு வேறு எதுவும் தேவையில்லை எனக் காட்டினர்

பண்பாடு காண்போம்

எது பண்பாடு என்பதையும் அது எப்படி மனித இனத்தைக் கட்டுப்படுத்துகிறது என்பதையும் ஓரளவு உணர்ந்து கொண்டால் நம் வாழ்வே திருந்தி விடும். இந்நூலின் அடுத்த பகுதி முழுதும் பண்பாட்டைப் பற்றியே விளக்க வருகின்றது. பண்பாடு வெளியில் தெரிவது என்றும் பிறரோடு பழகும் காலத்தில் புலனுவ தென்றும் அப்படி வாழ்வதுவே பண்பட்ட வாழ்வு என்றும் பலர் கூறுவர். உள்ளத்தில் கள்ளம் வைத்து உதட்டில் இனிமை பேசி, வெளியில் பகட்டாக உடை யுடுத்திப் பழகினால் அது பண்பாடாகிப் பயன் விளைக் குமா? நாகரிகம் என்பதையே பண்பாடு என்பர் பலர். மேலை நாடுகள் இப்பண்பாட்டைக் குறிக்கும். 'Culture' போன்ற சொற்களுக்கும் நம் நாட்டில் அது பற்றி வழங்கும் 'கலாசாரம்' போன்ற சொற்களுக்கும் உள்ள பொருள்களுக்கெல்லாம் மேலாகத் தமிழில் உள்ள 'பண்பாடு' என்ற சொல் பயன் தருகின்றது. அதன் அமைப்பையும், விளக்கத்தையும் அது மனித இனத் தோடு மட்டுமன்றி உயிருள்ள எல்லாப் பொருள்களை யும் பற்றி ஈர்க்கின்ற தென்பதையும் அடுத்து வரும் பகுதியில் விளக்கமாகக் காணலாம்.

எண்ணிப் பார்க்க முடியாத நெடுங் காலத்துக்கு முன்தோன்றிப் பல்வேறு சுழல்களுக்கிடையிலும் மாறுபாடுகளுக்கிடையிலும் உறழ்ந்தும் பிறழ்ந்தும், மாறியும் வளர்ந்தும் வளர்ந்த இந்தச் சமுதாய வாழ்வுக்கு அடிப்படை பண்பாடே. இன்னும் உலகம் உள்ளளவும் இந்தச் சமுதாயத்தை வாழவைக்கப் போவதும் இந்தப் பண்பாடேயாகும். உலகில் அன்று தொட்டு இன்று வரை அறம் பாடிய புலவர்களும் கடவுள் நலம் போற்றிய சமயத் தலைவர்களும் பிற நல்லவர்களும் இந்தப் பண்பாட்டையே உயிர் நாடியாகக் கொண்டு பாராட்டிப் போற்றி இதுவரை வழித்துறைகளைக் காட்டியுள்ளனர். நாமும் வருங்காலச் சமுதாயம் வேறுபாடற்று ஒரே உலக சமுதாயமாக வாழ இப்பண்பாடு எவ்வெவ் வகையில் உதவும் என்பதைக் காண்போம். பண்பாடு என்ற சொல் மொழியில் இடம்பெறு முன்பே—ஏன்? மொழியும் பிற மக்கட் சாதனங்களும் உலகில் தோற்றுவதற்குமுன்பே அது தோன்றி வளர்ந்தது. அந்தப் பண்பாடே மனிதனைக் கூட்டி வைத்தது. வாழவைக்கிறது - இனியும் மனிதனைமட்டுமல்லாது - எல்லா உயிரினங்களையும் வையத்தையும் - ஏன்? அதற்கப்பாலுள்ள அண்டகோள அமைப்புக்கள் அனைத்தையும் வாழவைக்கும். அத்தகைய 'பண்பாடு வாழ்க' என்று வாழ்த்திக் கொண்டே, அடுத்து அப்பண்பாட்டைப் பற்றி அறியத் தொடங்குவோமாக! வாழ்க பண்பாடு! வளர்க அதன்வழிச் சமுதாயம்!

பகுதி இரண்டு

பண்பாடு

I. எது பண்பாடு?

எது பண்பாடு—பண்பாட்டின் பொருள்—பண்பாட்டின் தோற்றம்—சூழலும் குடிப்பிறப்பும்—அகமும் புறமும்—பிணைக்கும் அன்பு—கல்வியின் துணை—நீக்க மற நிறைந்த ஒன்று — வீடும் நாடும்—உடைவழி—உணவு வழி—சமயத்தின் வழி—கலை வழி—மொழி வழி — பண்பாட்டை வளர்க்கும் பிற—மருந்து வழி—அரசியல் வழி—விஞ்ஞானத்தின் வழி—செல்வ நிலை — சமுதாய அடிப்படை?—மனித உணர்வு—சார்பு வாழ்க்கை — வரலாற்று எல்லை—தமிழ்நாட்டு வரலாறு.

எது பண்பாடு?

இருபதாம் நூற்றாண்டின் இடையில் வாழ்கின்ற மனிதன் அடிக்கடி 'பண்பாடு' என்று பேசிக்கொண்டிருக்கின்றான். என்றாலும் அப்பண்பாட்டை விளக்கும்போது அவன் இடர்ப்பட வேண்டியுள்ளது. தமிழில் பண்பாடு பற்றி விளக்கம் தரும் நூல்கள் இல்லை. ஆங்கிலத்தில் ஒரு சில நூல்கள் உள்ளன வேனும் அவை அனைத்தையும் துருவிக் காணினும் பண்பாட்டின் எல்லையை வரையறுக்க முடியவில்லை. பண்பாடு உடலைப் பற்றியதா? உயிரைப் பற்றியதா? உள்ளத்தைப் பற்றியதா? உதட்டில் முகிழ்ப்பதா? புறத் தோற்றமா? அகப் பொலிவா? இக்கேள்விகளுக் கெல்லாம் விடைகாணல் அரிதே. மேலை நாட்டு

அறிஞர்களுள் சிலர் வெறும் புறத்தோற்றத்தையே பண்பாட்டுடன் இணைத்துப் பேசுகின்றனர். நாகரிகமே பண்பாடு என்பாரும் உளர். ஆனாலும் அந்த நாகரிகத்துக்கு அவர்கள் காணும் பொருள் புற அமைப்பேயாம்.

தமிழில் மிக்கப் பழங்காலந் தொட்டே இப் பண்பாடு, நாகரிகம் என்ற இரண்டும் இலக்கியத்திலும் வாழ்விலும் நிறைவுற்று வருகின்றன. 'பண்பெனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்' எனக் கலித்தொகை சங்க காலத்திலேயே பாடியுள்ளது[1]. அந்த அடிப்படையிலேயே குறளுக்கு உரை எழுத வந்த பரிமேலழகர் பண்புடைமையாவது. 'பெருமை சான்ற உண்மைகளில் தாம் வழுவாது நின்றே, எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்' என விளக்கியுள்ளார்.[2] பண்பிற்குப் பொருள் கூறவந்த சென்னைப் பல்கலைக் கழக அகராதியும் கலித்தொகையின் அடிப்படையிலேயே 'பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம்' எனக் காட்டியுள்ளது.[3] மற்றும் பண்பு என்னும் சொல்லுக்கு அழகு, முறை போன்ற உரைகளும் உள்ளன. பின்னும் 'பண்' என்ற சொல்லிற்கும் தகுதி, அமைவு, தொண்டு, பருவம் போன்ற பொருள்களும் உள்ளன. பண், பண்பு இரண்டும் ஒரே அடிப்படையில் பிறந்தனவா அல்லவா என்ற ஆராய்ச்சி இங்கு நமக்குத் தேவை இல்லை. எனினும் இரண்டும் ஒரே பொருள் காட்டும் நெறிக்கு வழியாக அமைவதை எண்ணி மேலே செல்லலாம். பண்பு படுதல் பண்பாடு ஆகும். அஃதாவது பண்பு பொருந்துதலே—பண் பொருந்துதலே

1. நெய்தற்கலி 16. 2. பண்புடைமை—அதிகாரப் பொருள். (3) Vol. IV. பக். 2454.

பாடு எனப் பெறும். பாடு என்பதற்கும் உலக ஒழுக்கம் (கலி 133) கடமை, குணம், செவ்வி (புற 120) கடமை, பலன், முறைமை (புறம் (197) முதலிய பொருள்கள் உள்ளமையால் 'பண்பாடு' சிறந்த ஒன்று என்பது நன்கு விளங்கும்.

நாகரிகம் என்ற சொல்லும் அதே கலித்தொகையிலும் குறளிலும் எடுத்தாளப் பெறுகின்றது.

'பெயக் கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்' (குறள் 580)

என்ற குறளில் உள்ள நாகரிகம் என்ற சொல்லிற்குக் கண்ணோட்டம் எனப் பொருள் காண்கின்றனர் அறிஞர். கண்ணோட்டமாவது 'கிருபையாகிய பார்வை', 'பயின்றூர் கூறின மறுக்கமாட்டாமை,' 'பொறுத்தல்' என்று பல வகையில் விளக்கப் பெறுகின்றது. எனவே மற்றவர் மனமறிந்து பிறருக்குத் தீங்கு செய்யாதிருத்தல் என்பது அதன் பொருளாகின்றது. இதனால் நாகரிகம் என்பது கருணை உடையவராய்க் கண்டிக்கத்தக்காரிடத்தும் தண்ணளி காட்டுவது எனப் பெறும். மணக்குடவர் அறம் பொருள் இன்பத்தின் கண் நற்குணங்கள் பலவும் உடைமை என நாகரிகத்துக்குப் பொருள் காண்கின்றூர். அத்தகைய நாகரிகம் உடையவர் உற்றவர் நஞ்சினையே கொண்டுவந்து தரினும், அதனை உண்டு சாவாது அவரொடு அமைந்து வாழ்வர் என்பதே வள்ளுவர் காட்டவந்ததாகும். எனவே நாகரிகம் என்பது நம்பிக்கையின் அடிப்படையில், உற்றவர் தீமை இழைக்கமாட்டார் என்ற உறுதிப்பாட்டில்

அத்தீமையால் சாகாது வாழும் திறம்பெற்றதாகும். இதையே கலித்தொகை,

> 'நஞ்சுயிர் செகுத்தலும் அறிந்துண்டாங்கு அளிஇன்மை
> கண்டுநின் மொழிதேறும் டெண்டிரும் ஏமுற்றூர்
> (மருதக்கலி. 9)

என்றும், நற்றிணை,

> 'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்' (நற். 355, 6-7)

என்றும் விளக்கிக் காட்டுகின்றன. எனவே பண்பாடு நாகரிகம் என்ற இரண்டும் ஏறக்குறைய ஒரேபொருளை விளக்குவனவே என்று முடிவு செய்வர் ஆராய்ச்சி யாளர்கள். சில மேலை நாட்டு அறிஞர்கள் இரண்டும் ஒன்று எனவே எழுதியுள்ளனர்.

இன்றைய 'நாகரிக' உலகில் நாம் இதை ஏற்றுக் கொள்ள முடியுமா? நாகரிகம் என்ற சொல் நாம் கண்ட பொருளிலே சங்க ஏட்டிலே தவழ்கின்றதே யன்றித் தமிழ்நாட்டிலோ உலகின் பிறபாகங்களிலோ அந்தப் பொருளில் வழங்குகின்றதா? இன்று நாமெல்லாம் நாகரிகம் என்று கொள்வது பெரும்பாலும் புறத் தோற்றத்தைத்தானே. மேலை நாட்டு அறிஞர்கள் நாக ரிகம் பற்றிப் பலப்பல நூல்கள் எழுதியுள்ளார்கள். அவர்களுள் பெரும்பாலோர் புறத்தோற்றத்தையே நாகரிகம் என்கின்றனர். கலியும்; நற்றிணையும் குறளும் காட்டுகின்ற நாகரிகம் அவர்களுக்குப் புரியக் காரணம் இல்லைதான். எனினும் தமிழ் நாட்டில் வாழும் நாமும் அந்தச் சொல்லுக்கு அவர்கள் காட்டும் பொருளையே கொள்வதுதான் வியப்பாகும். அழகிய உடையும் உணவு முறையும் மேசை நாற்காலியும்

உயர்ந்த மாளிகையும், நகர வாழ்வும், உந்து வண்டியும் குளிர் சாதனமும் பிற புதுப்பொருள்களுமே நாகரிகத்தின் சின்னங்கள் என நாம் நினைக்கின்றோம். மனதால் மற்றவர்க்குத் தீங்கு நினைக்கவும் தெரியாது, 'சொக்காய்' போட்டுப் பழகிக்கொள்ளாத கிராம மக்களை 'அநாகரிகர்' என ஏசுகின்றோம். இந்த நிலை இன்று உலகில் எங்கும் காணும் நிகழ்ச்சியேயாகும். எனவே இவ்வாறு பொருள் கொள்ளும் புறத்தோற்ற நாகரிகத்தை நாம் எப்படிப் பண்பாட்டோடு இணைக்க முடியும்? நாகரிகத்துக்கு இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் தமிழர் கண்ட பொருள் மக்கள் வாழ்வில் மலரும் மாலை அன்று வேண்டுமாயின் நாகரிகமும் பண்பாடும் இணைந்து செல்வன என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளலாம். அதுவரை எப்படி அவற்றை இணைத்துப் பார்த்து நலம் காணமுடியும்?

பண்பாட்டின் பொருள்

பண்பாடு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் 'Culture' என்ற சொல் பயன்படுத்தப்பெறுகின்றது. அதற்கு Tiliage, Improvment by training, Intellectual development, Cultivate என்பன பொருள்களாகக் காட்டப்பட்டுள்ளன[1] The State of being cultivated[2] என்ற பொருளும் உண்டு. இவற்றின் வழி உள்ளது சிறந்தல் என்பது நமக்குப் புலனாகின்றதன்றே! இந்தச் சொல்லோடு ஆங்கிலத்திலே உள்ள மற்றொரு சொல்லையும் இணைத்துப்பார்த்தால் பொருள் நன்கு விளங்கும். அச் சொல் 'Agriculture' என்பதாகும் இதற்குக் Cultivation of the Soil என்பது ஓர் உரை; மற்றொரு அகராதி

(1) Oxford Dictionary P. 277.
(2) Cambridge Dictionary P. 227.

அந்தச் சொல் வந்த வரலாற்றை விளக்குகிறது[1]. அச் சொல் இலத்தீன் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்ததாம். 'Ager' என்ருல் வயல் (field). 'Cultura' என் ருல் பண்படுத்தல் (Cultivate) எனக் கொள்ளுகின்ற னர். இவற்றைப் பொருத்திநோக்கினுல் நிலத்தை நல்ல வகையில் மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுக்கும் வகையில்—நல்ல பயிர் விளையும் வகையில்—பண்படுத்தல் 'Agriculture' ஆகின்றது. எனவே அந்த அடிப்படையில் மனதை மற்றவர்களுக்கு உதவும் வகையில் யான் எனது என்னும் செருக்கு அற்று, மற்றவர்களை வாழ்விக் கும் நெறியில்—பல்வேறு வகையில் பறந்து செல் லும் மனதை அது செல்லும் வழியில் அல்லாது நல்ல நெறியில் திருப்பி நலம் பேணும் வகையில்— நல்ல அறிஞர்தம் மொழிகளும், ஆசிரியர்தம் பொன்மொழிகளும் ஆகிய எருவினை இட்டு, சிந்தனை ஏர் ஓட்டி நல்லவகையில் நம்மை நாம் பண்படுத் திக்கொள்வதே பண்பாடு என்பது நன்கு விளங்கு மன்ருே! அத்தகைய பண்பட்ட உள்ளமே தனக் கென வாழாத உள்ளமாக—தன் முனைப்பு அற்ற உள்ளமாக—ஆண்டவன் உறையும் அன்புக் கோயி லாக அமையும் என்பதை அடியவர்களும் ஆராய்ச்சி யாளர்களும் காட்டியுள்ளார்கள். பண்பட்ட நல்ல நிலத்து விளையும் தானியம் பிறருக்கு உணவாக உதவுவது போல, உளப்பண்பட்ட நல்லவர்கள் உடல், பொருள், உயிர் அனைத்தாலும் மற்றவர்களுக்கு உத வுவார்கள் என்பது தேற்றம். எனவே பண்பாடு

(1) Oxford Dicionary P. 26
Combridge Dictionary P.18

என்பது 'தியாக வாழ்க்கை' யாக அமைகின்றது எனலாம். இதையே புரோனிஸ்லா.[1] என்பார் நன்று விளக்குகின்றார்.[2]

தியாக வாழ்வு என்றால் அனைத்தையும் விட்டுத் துறவு நிலையை மேற்கொள்வதோ எனச் சிலர் ஐயுறுவர். பண்பட்ட நிலம் அப்படிச் செய்வதில்லை. எத்தனை ஆண்டுகள் அது விளைவினை வாரிவழங்கினும் அது அழிவதில்லை—அன்றிக் கெடுவதும் இல்லை. நல்ல பண்பாளரும் அதே நிலையில் தாம் கெடா வகையில்—அதே வேளையில் மற்றவர் வாழும் வகையில் மக்கள் பாதையை வகுத்துச் செல்பவர் களேயாவர். இதைத்தான் நாம் முதலில் கண்டபடி பரிமேலழகர் 'பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே, எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்' எனப் பண்புடைமைக்கு விளக்கங் காட்டினார். எனவே பண்புடையார் தம் பெருமை யிலும் சான்றாண்மையிலும் வாழுவார். அதே வேளை யில் மற்றவர் இயல்பறிந்து, தன்மை அறிந்து அவர் நலம் கெடாவகையில் ஒழுகவும் செய்வர். இந்தப் பண்புடைமை நாட்டில் உண்டா ?

பண்பாட்டின் தோற்றம்

பண்பாடு என்பதைப் பல கோணங்களிலிருந்து ஆராய்கின்றனர் மேலை நாட்டு ஆராய்ச்சியாளர். தனித்து வாழ்ந்த மனிதனை இணைத்து வைத்ததே பண்பாடுதான். விலங்கிலிருந்து பிறந்த மனிதன்

1. BRONISLAW MALINOWSKI (London School of Economics & Political Science.)

2 Encyclopaedia of Social Sciences. P. 645.

விலங்குணர்ச்சியோடு கண்டதைத் தின்று, காட்டிலும் மேட்டிலும் வாழ்ந்த காலத்தில் மற்றவர் உதவியை வேண்டாதவனுக இருந்திருப்பான். காலம் செல்லச் செல்ல, கூடி வாழ்ந்து, பயிரிட்டு உணவு தேடிக் கொள்ளத் தொடங்கிய அந்த நாளில் மற்றவர் துணை அவனுக்குத் தேவை அல்லவா! அப்போது தன் னைப் போல் மற்றவர் வாழவேண்டும் என்ற உணர்வு அவன் உள்ளத்தில் தோன்றியிருக்கும். அந்த உணர்வே அவன் கூட்டுவாழ்விற்கு வித்தாக அமைந் தது. இதைத்தான் இலண்டன் பொருளாதார அரசியல் பள்ளிப் பேராசிரியர் திரு புரோனிஸ்லா[1] என்பார் பண்பாடு தனி மனிதனை கூட்டுவாழ் விற்குப் பற்றிச் செல்கிறது என்றும், அதன் வழியே சமூகம் உருவாகின்றது என்றும் காட்டுகின்றார். எனவே இந்தத் தனக்கென வாழாப் பண்பாடே— தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கின்ற பண் பாடே—முதல்முதல் மனித சமுதாயத்தை உருவாக் கிற்று. அன்று அவன் சிறந்த நாகரிகத்திலோ சுற் றுச் சார்பிலோ வாழ்ந்தான் என்று சொல்ல முடியா விட்டாலும் சூழல் அவனைப் பண்பாட்டாளனுக மாற்றி விட்டது.

சூழலும் குடிப்பிறப்பும்

பண்பாடு சூழலுக்கு ஏற்பவே உருவாகுமென் பர் சிலர். ஓரளவு அது உண்மையேயாகும். மனி தக் குழந்தை கரடியால் வளர்க்கப்பட்டமையின் அதன் உள்ள அடிப்படையிலே மாறுதல் கண்டார்

1. Culture transforms individuals into organised groups and gives these an almost indefinite Community"

கள் என்று சென்ற ஆண்டு (1960) வந்த வடநாட்டுச் செய்தி மூலம் அறிந்திருக்கிறோம். நீக்ரோவர் குழந்தையைப் பாரிஸ் வெள்ளையர் எடுத்து வளர்த்தமையின் உண்டான மாறுதலை அந்நாட்டு மக்கள் அறிந்துள்ளார்கள். எனவே இப்பண்பாடு ஓரளவு சூழலுக்கு உட்படுவதாகும். எனினும் பரம்பரையைப் பற்றி நிற்பதிலேயே பண்பாடு சிறக்கின்றது. தமிழ்ச் சமுதாயம் வழிவழிப் பண்பாட்டால் சிறந்தது எனப் பேசுகின்றோம் நாம். அப்படியே ஒவ்வொருவரும் தத்தம் பண்பாட்டையே உயர்த்திப் பேசுவர். எனவே வழிவழியாக வரும் உளத்திண்மையும் உணர்வும் பண்பாட்டைக் கெடாது காக்கின்றன. இதையே வள்ளுவனார்

> *'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்*
> *பண்புடைமை என்னும் வழக்கு'* (992)

எனக் காட்டுகின்றார். குடிப்பிறப்பு என்பதற்கு 'உலகத்தோடமைந்த குடியின்கண் பிறத்தல்' எனப் பரிமேலழகரும், 'நெறியமைந்த நல் குடிப்பிறப்பு' எனக் காளிங்கரும் விளக்கம் தருகின்றனர். எனவே வள்ளுவர் இன்று சாதி அல்லது இனவழியாகக் காணும் குடிப்பிறப்பைக் கொள்ளவில்லை என்பது தேற்றம். அவரே அடுத்த குறளில் 'உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்று' என்று காட்டிப் பண்பால் ஒத்துவாழ்தலே ஒப்பு என்பதைக் விளக்குகின்றார். எனவே குடியென்பதை வழி வழி உலகத்தோடு அமைந்து, அதன் நலமே தன் நலமாக எண்ணும் நல்ல குடி எனவே கொள்ளவேண்டும். ஆகவே, பண்பாடு பரம்பரையான நல்ல குடித்தன்மையானும் பிறரிடம் வேறுபாடு காணுத நல்ல

ஒழுக்கத்தாலும் பொருந்த அமைவதே என்பது தேற்றம்[1].

அகமும் புறமும்

பண்பாடு என்பது மனித சமுதாயத்தில் ஒவ்வொருவனும் ஓர் உறுப்பினன் என்ற நிலைமையில் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், வழக்கங்கள் முதலின பற்றிப் பெற்ற ஒருவித வாழ்த்கை முறையாகும் என்று டெய்லர் என்பார் விளக்கம் தந்துள்ளனர்[2] அவ்வாழ்க்கை முறை வெறும் புறத் தோற்றத்தால் மட்டும் அமைவதன்று; சட்டம், வழக்கம் முதலியன பண்பாட்டைப் பாதுகாப்பதற்கும், பண்பாட்டை விளக்குவதற்கும் பயன்படலாம். ஆனால், அவையே பண்பாடு எனக் கொளளமுடியாது. பண்பாடு புறத்தில் இப்படி என்று காட்டமுடியாததாகி, உள்ளத்தால் செயல்வழிக் காட்டும் ஒப்பற்ற ஒன்றாகும். அன்று தொட்டு இன்றுவரை அதை 'இப்படிப்பட்டது' எனக் காட்டமுயன்ற பலர் முழுதும் வெற்றி பெறவில்லை. என்றாலும் பண்பாடு உண்மையினால் தான் உலகம் வாழ்கின்றது. பண்பின்றேல் வாழ்வில்லை. தனி மனிதன் சமூகத்துக்குத் தருவதும், சமூகமும் தனி மனிதனுக்கு உணர்த்துவதும் பண்பாடுதான். அத்தகைய பண்பாடு இல்லையானால் உலகம் இல்லை; உயிர் இல்லை, உற்ற செயல் இல்லை;

---

1. Culture Comprises inherited artifices, goods, technical processes, ideas, habits and values (Encyclopaedia of the Social Sciences. p. 621.)

2. F. B. TAYLOR, (கலைக்களஞ்சியம் Vol VI. P. 690)

ஒன்றும் இல்லை. இவற்றை எல்லாம் எண்ணித்தான் வள்ளுவர்

> 'பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்' (996)

எனத் திட்டமாகக் காட்டுகின்றார்,

பிணைக்கும் அன்பு

விலக்கினத்திலிருந்து வேறுபடுத்தி மனிதனை மனிதனுக வாழவைப்பது பண்பாடு என்று கண்டோம். அவ்வாறு விலங்கிலிருந்து பிரிந்த மனிதன் தனி வாழ்வை விட்டுக் குடும்ப வாழ்வை மேற்கொண்டான். அக்குடும்ப வாழ்வில் அவனை அறியாமலேயே அவன் உள்ளம் மனிதவிமக்களிடம் பற்றிச் சென்றது. அதை அவன் 'பற்று' அல்லது 'பாசம்' என்று உணர்ந்தான். ஆயினும் அதுவே பண்பாடு என்று கொள்ளமுடிய வில்லை. பொல்லா உள்ளத்தாரும்கூட உற்ற மனிதரிடமும் பெற்ற மக்களிடமும் பிறர் கூறுமலேயே அன்பு காட்டத் தொடங்குவர். ஆனால் அந்த அன்பின் எல்லை அந்தப் பற்றுடன் முடிந்துவிடாது விரிந்து பரந்து சென்று பிறரையும் பிறவற்றையும் பற்றவேண்டும். 'அன்புடைமை' என்று வள்ளுவர் இதைத்தான் காட்டுகின்றார். அதனாலேயே அறத்துப்பாலில் இல்லறம் என்ற அதிகாரத்துக்கு அடுத்து வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு என்ற இரண்டையும் அமைத்து அவற்றிற்குப் பிறகே அன்புடைமையை அமைத்துள்ளனர். எனவே தம்மொடு தொடர்பு அற்றார்மேல் இயல்பாகச் செல்லும் உள்ள நெகிழ்ச்சியே அன்பாகவும் பண்பாட்டிற்கு அடிப்படையாகவும் கொள்ளப் பெறுகின்றது. அந்த அன்புள்ளமே ஆண்டவன் தங்கும் உள்ளம்

என்பதை எண்ணித் தான் பரிமேலழகர் "அன்பால் நினைவாரது உள்ளத்தே விரைந்து சேரலின் 'ஏகினான்' என இறந்த காலத்தால் கூறினார்" என்று கடவுள் வாழ்த்துக் குறளுக்கு உரைகாண்கின்றார். இவற்றுள் தனியாக வாழ்ந்த மனிதன் - வீட்டில் மற்றவரோடு - மனைவி மக்களோடு கூடி வாழ்ந்த மனிதன் - சமுதாயத்தோடு இணைந்து வாழுங்கால் தன் முனைப்பு அற்று எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் நல்ல உள்ளத்தோடு, உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பயின்று, அவ்வுலக நிலைக்கு ஏற்ப வாழ்ந்து தன்னையும் உலகையும் ஒருசேரப் பின்னிப் பிணைத்துப் போற்றிப் புரந்து வளர்க்கவேண்டுமென்பதும் தெளிவாம். அதுவே பண்பாடு.

கல்வியின் துணை

அத்தகைய பண்பாடு உருவாகுங்கால் மனிதன் தன்னை மறப்பான். அந்தப் பண்பாட்டை அளிப்பதே கல்வி. 'தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார் ஆதலின், உலகம் வாழத் தான் வாழும் வழிகாட்டுவதே கல்வி. அக்கல்விதான் அவனை மறக்கவைத்துக் காட்டிய தன்னையும் மறக்க வைத்து ஒரே ஒன்றிய உணர்வில் 'உலகம் வாழ' வழி உணர்த்தி மனிதனை மனிதனாக வாழ வைப்பது. அந்தப் பண்பாட்டின் உச்சியில் அவன் தன்னைப் பற்றியும் தன் ஏற்றம் பற்றியும், புகழ்பற்றியும் பொருள் பற்றியும், வேறு எந்த உயர்வு பற்றியும் எண்ணுது, 'என் கடன் பணி செய்து கிடப்பதே, என்ற உணர்வில், 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும்' திறத்தில் மேலோங்கிச் சிறப்பான். பண்பாடும் பண்பாட்டின் வழி அமையும் நல் இயல்பும் இப்படியே இணைந்து உலகை வாழ

வைக்கின்றன. அத்தகைய நல்லவர் எப்போதாவது உலகில் தோன்றி மறைகின்றனர். அண்ணல் காந்தி அடிகள் அந்த வகையில் நம்முன் வாழ்ந்து மறைந்த பெரியார். ஆம்! "பண்பாடு நாம் கற்றனவும் கேட்டனவும் நிலை கெட உள்ளத்து நிலைத்து நிற்பது; குணமோ நாம் செயலெலாம் மறந்து கடமை வழி நம்மை வாழ வழி காட்டுவது" என்று இவ்விரண்டையும் இணைத்து டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் நல்ல உண்மையை உணர்ந்துகின்றார்கள்.[1]

நீக்கமற நிறைந்த ஒன்று

உள்ளத்துள் உணர்வாகவும் எண்ணமாகவும் அவற்றின் வழி இலங்கும் செயலாகவும் அமைவது பண்பாடு என்றும், அதுபுறத்தில் 'இப்படி இருந்தது' என்று எடுத்துக்காட்ட இயலாதது என்றும், எனினும் அந்தக் கண் காணு ஒன்றுலேயே உலகம் வாழ்கின்றது என்றும், வள்ளுவர்போன்ற அறநூற் பெரும்புலவர்கள் யாவரும் இந்தஉண்மையையே வலியுறுத்தினர்களென்றும், இப்பண்பாடு நாகரிகத்தொடு - உண்மை நாகரிகத் தொடு - இணைந்து செல்லுகின்றதே அன்றி இரண்டும் ஒன்று அல்ல என்றும் கண்டோம், அந்த ஒரு பண்பிலுல் உலகம் எப்படி வாழமுடியும்என அன்று தொட்டு இன்று வரை எண்ணற்ற அறிஞர்கள் எண்ணி இருக்கிறார்கள்; அவருள் சிலரே தத்தம் கருத்துக்களை ஏட்டில் வடித்திருக்கிறார்கள். அவர்கள் வழியே ஆராய்ந்தால் உலகின் ஒவ்வொருநிகழ்ச்சியிலும்,புறத்தோற்றத்திலும்

[1] Culture is that which remains when we forget every thing that we learn, even, as, character is what remains when we forget all the deeds we do.'

Dr. S. Radakrishnan (An idealistic view of life P 209

இப்பண்பாடு நீக்கமற நிறைந்திருக்கும் வகை காண முடியும். குடும்பத்திலே, உடையிலே, உண்ணும் உணவிலே, கலையிலே மொழியிலே, கற்பனையிலே, காட்சியிலே, சமயத்திலே, விளையாட்டிலே, விஞ்ஞானத்திலே பொழுதுபோக்கிலே, மருத்திலே, மந்திரத்திலே, அரசியலிலே மற்றும் மனிதன் வாழ்வில் என்னென்ன உள்ளனவோ அத்தனைப் பொருள்களிலே பண்பாடு நீக்கமற நிறைந்திருக்கின்றது என்பது உண்மைதான். ஒவ்வொருவனது உள்ளப் பண்பாட்டுக்கு ஏற்பத்தானே அவனுடைய சார்பும் சமுதாயமும் பிறவும் அமையும். எனவே அவற்றின் துணைகொண்டு பண்பாட்டை ஆராய்வர் ஆராய்ச்சியாளர், அவர்தம் ஆராய்ச்சியின் வழி ஓரளவு சென்று பண்பாட்டைப்பற்றி அறிய முயலலாம் என நினைக்கின்றேன். பண்பாட்டாளர் வாழ்க்கை செம்மையான வாழ்க்கையாக இருக்கும். எனினும் உலகத்தில் பலரும் பண்பாட்டை அறியாது அல்லது அவமதித்து வாழும்போது, ஒரு சிலர் மட்டும் பண்பாட்டுளத்தால் வாழ முயன்றுல் அவர்கள் வாழ்வில் பல தொல்லைகள் வருவதோடு அவர்கள் வாழ்க்கையே அழிவுறுவதும் உண்டு, இயேசு, சாக்கிரடிஸ், காந்தி போன்றூர் வாழ்க்கையே இதற்கு எடுத்துக் காட்டாகும். ஆயினும் அவர்கள் செத்தும் சாகாமல் வாழ்கின்றூர்கள், உலகம் உள்ளளவும் அவர்தம் பேரும் புகழும் நிலைபெற்றிருக்கும் என்பது உறுதி. பண்பாட்டை வாழ்வில் கொண்டு ஒழுகியதாலேயே அவர்கள் அல்லல் பெற நேர்ந்தது. எனினும் 'துயரப்படுகிறவர் பாக்கியவான்கள், என்ற இயேசுவின் மொழிப்படி அவர்கள் சிறந்தவர்களாகவே உலகத்தாரால் என்றென்றும் போற்றப்படுவார்கள். எனவே எத்தனைத் துன்பங்கள் வந்து வாழ்விடைக் குறுக்கிட்ட போதிலும் உள்

ளப் பண்பாட்டை விடாது பற்றிச் செம்மை நெறியில் வாழ்ந்தால் அவ்வாழ்வே மனித வாழ்வாகும் என்பதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது. மற்றைய வாழ்வுகளோ.....?

வீடும் நாடும்

மனிதனை மனிதனுக வாழவைப்பது பண்பாடு என்று கண்டோம்; எனவே அவன் வாழ்வில் பண்பாடு ஒவ்வொருவரு துறையிலும் வெளிப்பட்டுத் தோன்றும் அப்பண்பாடு தனிமனிதன் தொடங்கி வீடு, நாடு. சமூகம். உலகம் என்று விரிந்துகொண்டே செல்வது. இப் பண்பாட்டின் அடிப்படையில்தான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சங்க அடியும் எழுந்தது. பண்பாடு முதலில் வீட்டில் தொங்கும். வீட்டைப் பண்பாட்டால் சிறக்க வைக்காத எவனும் நாட்டைச் சிறக்க வைக்க முடியாது. குடும்பத்தில் வாழும் ஒரு சிலருக்குள்ளே பண்பாடு வளருதலே உலக வாழ்வுக்கும் பண்பாட்டுக்கும் அடிப்படை. வள்ளுவரும் உலக அறங் கூறுமுன் வீட்டு அறத்தைக் காட்டியே மேலே செல்லுகின்றார். எனவே ஒவ்வொரு குடும்பமும் தனித்தனிப் பண்பாட்டு நெறியில் செல்லத் தொடங்கினால் நாட்டிலும் உலகிலும் பண்பாடு வளரும். மனித வரலாற்றிலே விடுகட்டி வாழக்கற்றுக்கொண்ட மனிதன்தான் - கூடி வாழக்கற்றுக் கொண்ட மனிதன்தான் - பின் நாடுநகரங்களின் சமுதாயத்தை உருவாக்கி வாழ்கின்றான்எனக் காண்கின்றோம். பண்பாடு அப்படியே வளரவேண்டுவது; அது மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்துவது அல்லவா! விலங்கினத்திலிருந்து தோன்றிய மனிதன் அதனினும் தான் வேறுபட்டவன் என்பதை உணரத் தொடங்கிய நாளே பண்பாட்டின்

தோற்ற நாள், அந்தப் பழங்காலத்தில் மற்றவரோடு சேர்ந்து வாழ நினைத்துக் குடும்பம் அமைத்தான். அக் குடும்ப நெறி பின் வள்ளுவர்தம் ஆன்ற குடிப்பிறத்தல் என்ற பண்பாடாயது. நல்ல பண்பட்ட குடிவழிவரும் மக்கள் 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' என்று போற்றப்படுவர். மற்றல்லாதார் யாரோ.....

தனிக் குடும்ப வாழ்வில் நாம் முதலில் கண்டபடி ஒருவருக்கொருவர் தியாகம் செய்து வாழ்வதில் தான் உலகப் பண்பாடு தொடங்குகின்றது. 'கண் இரண்டும் ஒன்றையே காண்' என்றபடி காதன் மனை யாளும் காதலனும் ஒருமை உணர்வில் பழகக் கற்று கொண்டால் அவர்கள் வழி அவர்தம் மக்களும் சுற்றமும் பண்பாட்டுச் சூழலில் பற்றுவர். இப்படியே ஒவ்வொரு குடும்பமும் பழகினால் சமூகம்—நாடு—உலகம் பண்பாட்டில் சிறக்கும். ஆனால் இன்று இந்தப் பண்பாடு வீட்டிலும் இல்லை; நாட்டிலும் இல்லை. எங்கோ ஓரிரு மூலையில் அமைதியாக அது வாழ்கின்ற தென்றாலும் அதன் வழி வாழும் மக்களை உலகம் பின்பற்றுவதில்லை - ஏன்? - அவர்களை நன்றாக வாழவிடுவதும் இல்லை.

உடை வழி

பண்பாட்டை விளக்குவன பல என்றோம். ஒவ்வொன்றாகத் தொட்டுக் கண்டு செல்லலாம். சாதாரண உடையிலே பண்பாடு காண்கின்றோம். தமிழ் நாட்டில் மிகப் பழங்காலந்தொட்டு உடை இருந்து வந்துள்ளது. மனிதன்—உள்ளத்தைத் திறந்து காட்டி வாழ வேண்டிய மனிதன்—உடலை மறைக்க வேண்டியவனானான். உலகில் சில பகுதிகளில் வாழ்

கின்ற மக்கள் இயற்கைச் சூழல்களுக்கு ஏற்பத் தம் உடலைப் பொதித்து மூடவேண்டிய தேவையும் உண்டாயிற்று. குளிர் நாட்டில் தோலும் கம்பளமும் உடலைக் குளிர் தாக்கா வண்ணம் பாதுகாக்கின்றன. வெப்பநாட்டிலும் அத்தகைய உடையின்றேனும், உடலை மறைக்க அது தேவைப்படுகின்றது. முன்னது இன்றியமையாமையின் பாற்பட்டது. பின்னது பண்பாட்டின் பாற்பட்டது. எப்படி உள்ளந் திறத்தல் பண்பாடோ அப்படியே உடலில் சில பகுதிகளை மறைத்தலும் பண்பாடு. எனவே உடை பண்பாட்டு வாழ்விற்கான பல அடிப்படைக் கற்களில் ஒருகல் ஆகும். முதன் முதல் தோன்றிய மனிதன் ஆடையற்று விலங்கொடு விலங்காக வாழ்ந்த காலத்து உணர்வின்றி விலங்குகள் போலவே வாழ்ந்திருந்தான். தன்னை எண்ணத் தோன்றிய நாளில் —தன்னைச் சார்ந்த பிற மக்களை எண்ணத் தோன்றிய நாளில்—சுற்றுச் சார்பினை நினைத்த நாளில்—உடலை மறைக்க நினைத்திருப்பான். அதனால் அன்று கண்ட பொருள்களை ஆடைகளாகப் பயன்படுத்தியிருப்பான். காலப் போக்கில் அது வளர்ந்து வந்தது. பிறகு ஆடை அணிவதே நாகரிகம் என அரும்பலாயிற்று. நாகரிகம் என்ற சொல்லுக்கு இன்று, பண்டைத் தமிழர் கண்ட பொருள் இல்லை. உள்ளப் பொலிவு இன்றைய நாகரிகத்தில் தேவை இல்லை. புறத்தோற்றமே இன்றைய நாகரிகத்துக்கு அடிப்படையாகின்றது. எனவே அதற்கு உடைதேவையாயிற்று. அந்த வகையில் உடைப் பண்பாடு ஒரு வேண்டாத புது நாகரிகத்தில் ஒதுங்கிவிட்டது. தன்மானத்துக்காக வந்த ஆடை, பிறர்கண்டு தம்மைக் காமுறவும், மதிக்கவும் பயன்பட தொடங்கிவிட்டது. இந்த நிலையில்

ஆடை பண்பாட்டை வளர்ப்ப தெங்கே? மனிதன் எந் தெந்த உறுப்புக்களை மறைத்துப் பண்பாட்டை வளர்த்தானே அவற்றையே பல கோணங்களில் பிறர் காணவேண்டுமென்றே செய்யும் உடைகளும், அவற்றை அணியும் மக்களும், அவர்களை நேர்முக மாகவும் படங்களிலும் காணத் திரளும் பெருங்கூட்ட மும் உள்ள நாளில் உடை பண்பாட்டை வளர்க்கின் றது என்று சொல்ல முடியுமா? நாட்டின் வெப்ப நிலைக்கு ஏற்ப 'உடுப்பன இரண்டே' என்ற நாட்டிலே எத்தனையோ உடுக்கக் கற்றுக்கொண்டோம். ஆங்கி லேயனிடத்தில் உள்ள நற்பண்புகளைக் கற்க மறந் தாலும் அவன் உடையையும் உணவு முறையை யும் பற்றிக் கொண்டோம். ஆயினும் அதைப் பண் பற்ற உடை என்று கூறமுடியாது. ஒருநாட்டுக்குத் தேவையற்ற ஒரு வகை உடை மற்றொரு நாட்டுக்கு இன்றியமையாததாக இருக்கும். கம்பளியும், பிற மேநாட்டு உடைகளும் இன்றேல் அவர்கள் வாழமுடி யாது. நமக்கோ அவை தேவை என்ற அந்த அள வில்தான் நம் உடைகள் அமைகின்றன. ஆனால் தன் மானம் இழந்து பிறர்காணக் காட்டக் கூடிய ஆடை என்ற பெயரில் எதை எதையோ உடுத்து உலகில் உலவுவதை எப்படிப் பண்பாடு என்று ஏற்றுக் கொள்ளமுடியும்? பண்பாடு உள்ளத் துணர்வேயாயினும், அதை நேரில் நம்மால் காண முடியாது என்றாலும், அப்பண்பாடு இத்தகைய புறத்தோற்ற நிகழ்ச்சிகளால் அவ்வப்போது தோன்று வது உண்டு போலும். எனவே உடை, பண்பாட்டை வாழவைப்பதாயினும், இந்த நூற்றாண்டின் சிலர் உடுக்கும் உடைகள் பண்பாட்டைக் குழிதோட்டிப் புதைப்பனவேயாகும்.

உணவு வழி

உணவு வகையிலும் பண்பாட்டைக் காண்பர் ஆராய்ச்சியாளர். சிலர் மரக்கறி உணவு கொள்கின்றனர்; சிலர் மாமிச உணவு கொள்கின்றனர். இரண்டில் எது பண்பாட்டிற்கு எதற்கு? நாட்டில் பலரும் மரக்கறி உணவே பண்பாட்டிற்கு ஏற்றதென்பர். பிற உயிர்களைக் கொன்று தின்னு வள்ளுவர் அறத்தின் வழி அது சரியாகத் தோன்றினும், மக்கள் வரலாற்றையும் நில அமைப்பையும் ஒத்து நோக்கின் அக் கூற்று அத்துணைப் பொருத்தமற்றதாகவே தோன்றும். வடதுருவத்தில் வாழும் மனிதன் ஈசல் அன்றி வேறு தின்ன முடியுமா? பாலும் பருப்பும் காயும் கிழங்கும் அன்றுடம் அவனுக்குக் கொண்டு அளிப்பார் யார்? அவன் மரக்கறி உணவு கொள்ளாதவன்; ஆகவே பண்பற்றவன் என ஒதுக்க முடியுமா? மரக்கறி உணவு கொள்ளும் எத்தனையோ பேர் பண்பாட்டின் வாசனையைக் கூட நுகர்ந்த பாடில்லையே. பூசணிக்காயை அறுப்பது பாவம் என்று சொல்லிக் கொண்டே மக்களைத் சித்திரவதை செய்யும் மக்கள் வாழ்வதைக் காண்கின்றோமே! இவர்கள் மரக்கறி உணவு உண்பதாலேயே பண்பாட்டாளராகிவிட முடியுமா? விலங்கினங்களில் யானை முதலியவற்றைக் காட்டி அவை மரக்கறி உண்பதால் உயர்ந்தும் பலம் பெற்றும் இருக்கும் நிலை காட்டி—மரக்கறி உணவு மேல் என்பார் சிலர். உடல் உரம்பற்றிய ஆராய்ச்சி நமக்கு இங்குத் தேவையில்லை. பழிதீர்த்துக் கொள்ளும் உள்ளத்தோடு உலவும் மரக்கறி உண்ணும் யானையிலும், நன்றி உணர்வோடு வாழும் எலும்பினைக் கடிக்கும் நாய் 'பண்பாட்டில்' உயர்ந்தது இல்லை என்று யார் கூற முடி

யும்? எனவே உண்ணும் உணவின் வகையினாலே பண்பாட்டைக் காண முடியாது. உண்ணும் முறையினாலே ஓரளவு பண்பாட்டைக் காண இயலும் என்பர் சிலர். அதில் ஒரு நாட்டு மக்கள் வெறுத்துத் தள்ளும் முறை மற்றொரு நாட்டு மக்களின் 'நாகரிக' உணவாக அமைந்துள்ளதை நாம் இன்றும் காண்கின்றோம். எனவே முறையாலும் உணவினைக் கொண்டு பண்பாட்டை விளக்க முடியாது. இயல்பாகத் தேவையற்ற அருவறுக்கத்தக்க உணவினைக் கொள்வது பண்பாடாகாது. உணவு வகையில் சிறந்த பண்பாடு நாம் கொள்ளவேண்டுமானால், அந்நெறி உலகில் வாழும் எல்லாரும்-எல்லா உயிரும் உணவு கொள்ளும் நல்லதாய நெறிக்கு வழிகாட்டும் ஒன்றாக அமைதலேயாம். அல்லாதன வேறு தேய, நாடு சூழல் இவைகளுக்கு ஏற்ப மாறுவனவேயாம்.

சமயத்தின் வழி

சமயம் பண்பாட்டின் மாளிகையில் வாயிற்படி என்பது ஓரளவு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றுதான். எனினும் அதிலும்தான் எத்தனை எத்தனை வேறுபாடுகளைக் காண்கின்றோம். அமைதி வாழ்வுக்காக அன்பின் இருப்பிடமாகத் திகழவேண்டிய சமயத்தால் எத்தனை எத்தனையோ போராட்டங்கள் நாட்டில் நடைபெற்றன. விலங்கினத்தின்றும் வேறுபட்ட அந்த முதல் மனிதன் தொடக்க நாட்களில் விலங்குணர்ச்சியோடு வாழ்ந்திருந்தான் அன்றே! அன்று அவனுக்குக் கடவுளைப் பற்றி எண்ணத் தெரியாது. தன்னை உணர்ந்து, சுற்றுச் சூழலை மதித்து, மனிதத் தன்மையோடு வாழத் தொடங்கிய அந்த நாளிலேதான் அந்தக் கடவுள் உணர்வு

அரும்பி இருக்கும். தான் மேற்கொண்டவற்றி லெல்லாம் வெற்றி கொண்ட மனிதன் களித்திருப் பான். என்றுலும் சிலவற்றுள் தான் தோல்வி கண்ட போது அவன் உள்ளம் எண்ணியிருக்கும். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் சமயம், பண்பாடு இரண்டுமே இரட்டைக் குழந்தைகள் போலப் பிறந் திருக்கும். தனக்குமேல், தன் ஆற்றலையும் மீறிச் செயலாற்றவல்ல ஒரு பொருள் இருக்கிறது என்ற உணர்வே சமயத்தை உண்டாக்கிற்று. இந்த உண் மையை மேலைநாட்டு அறிஞர்கள் நன்கு ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள். அந்த முதல் மனிதன் அந்தக் காணுத ஒரு பொருளுக்கு அஞ்சியே வணக்கம் செலுத்தித் தன் செயலில் வெற்றிபெற நினைத்தி ருப்பான். ஆனல் காலம் செல்லச் செல்ல அவன் உள்ளம் நன்கு உணரத் தொடங்கிய நாளில் அஞ்ச வேண்டிய நிலை நீங்கிட, அன்பு வழி பிறந் திருக்கும். அன்று 'அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே' என அவன் வாய் பாடியிருக்கும். ஆம்! அதுவே பண்பாடு எனவும் சிறந்ததாயிற்று, கடவு ளைக் கண்ட, காண முயன்ற அன்பர்கள் அனைவரும் 'எவ்வுயிரும் பராபரன் சன்னிதிய'தாகவே கண்டார் கள். அந்த உணர்வில் உற்றூர் மற்றூர் என்ற வேறுபாடோ, இன்னூர் இனியார் என்ற மாறுபாடோ, கற்றூர் கல்லார் என்ற வேற்றுமையோ, நணியார் சேயார் என்ற பிரிவோ, வேறு எந்த மாறுபாடோ கிடையாது. எல்லோரையும் ஒத்துநோக்கி, அன்பால் பேணிப் போற்றிப் பாதுகாப்பதே ஆண்டவனுக்கு ஆற்றும் பணியாகும். இதையே திருமூலர்,

'நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடும் கோயில் பரமர்க்கு அங்கு ஆகும்'(திருமந்திரம்)

எனத் திட்டவட்டமாகத் தீட்டிச் சென்றார். பிற சமயத்தவரும் இக்கொள்கையை நன்கு உணர்ந்து எழுதியுள்ளனர். இந்த எழுத்து-ஏட்டுரை—நாட்டு வாழ்வில் இருந்தால் சமயமும் பண்பாடும் இணைந்த இரட்டைக் குழந்தைகளே எனலாம். ஆனால் இன்றைய உலகில் சமயங்களின் நிலை என்ன?

சமயக் காழ்ப்பால் தமிழ்நாட்டு வரலாற்றில் எத்தனையோ மாறுட்டங்களும் போரூட்டங்களும் கழுவேற்றலும் கழுவேறலும் பிறகொடுமைகளும் நடைபெற்றுள்ளதைக் காண்கின்றோம். மத்திய ஆசியாவின் இடைக்காலச் சிலுவைப் போர்கள் உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. நாகரிகம் பேசும் இந்த இருபதாம் நூற்றாண்டில் 'பரந்த பாரதம்' சமயக் கொடுமைகளுக்கு உட்பட்டு, பல மக்களின் உயிரைப் பணயம் வைத்து இரண்டாகப் பிரிக்கப்பெற்றதே. இவைகளையெல்லாம் சமயங்களுக்கு முதற் காரணராக இருந்த அப்பழம்பெரும் அருளாளர்கள் வந்து காண்பார்களேயானால் இவற்றை 'அழிக' என்று சாபமிட்டுப் பொசுக்கமாட்டார்களா? எனவே இன்றைய சமய வாழ்விலே 'பண்பாடு' இருக்கிறதா என்ற கேள்விக்கு நீங்களே விடைகூறலாமல்லவா! ஆம்! பண்பாட்டின் உறைவிடமாய், வளர்க்கும் கோயிலாய், உற்ற நண்பனுய், உயிர் தாங்கும் உரமாய் இருக்க வேண்டிய சமயத்திலேயே அப்பண்பாடு மறைக்கப்படுகின்றது. மற்றும் நாடு தோறும் சமய அமைப்பும் வாழ்க்கை முறையும் மாறி மாறிக் கொண்டுபோகின்றன. ஒரே சமயத்திலும் எத்தனை எத்தனை வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. திருமாலை வணங்கும் ஒரே சமயத்தில் உண்டான

பிணக்கு உயர் நீதி மன்றம் சென்று—பின் கடல் தாண்டியும் நீதி வேண்டும் நிலைக்குச் சென்றதைத் தமிழ்நாடு இதற்குள் மறந்திருக்க நியாயமில்லை. இன்றும் அன்புச் சமயத்துக்கு ஆக்கம் தேடுவதாக நினைத்துப் பலர், அறங் கூறு அவையம் ஏறி வழக்காடுவதைக் காண்கின்றோமே ! இவையெல்லாம் சமயம் பண்பாட்டை வளர்க்கும் குறிகளா? அன்றிப் படுகுழி பறிக்கும் குறிகளா ?

கலை வழி

கலையைப் பற்றியும் காண்போம். உலகில் கலை எத்தனையோ வகையில் உருப்பெற்று வாழ்கின்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து, மக்களையும் வாழவைக்கும் நல்ல கலைகள் நாட்டில் உள்ளன. நாடு தோறும் கலையின் நலன் பல்வேறு வகையில் சிறந்து விளங்குகின்றது. 'கலை இன்றேல் வாழ்வில்லை' என்று எண்ணும் அளவுக்குச் சிலர் வாழ்ந்ததாக அறிகின்றோம். இக்காலத்தில் கலையின் பெயரால் நடை பெறும் பல கொலைகளும் நமக்குப் பழக்கந்தான். நாட்டில் உண்பதும், உடையணிவதும்கூடக் கலை தான். ஆடுவதும் பாடுவதும்கூடக் கலைதான். ஏன் ? பேசுவது, ஓடுவது, எண்ணுவது, எழுதுவது எல்லாமே கலை என்னும் வரம்பிற்குள் அடங்கிவிடுவனவே. இக்கலைகள் உண்மையில் பண்பாட்டை வளர்ப்பனவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாமல்லபுரக் கற்கோயில்களும், வானுங்கிய தமிழ் நாட்டுக் கோபுரங்களும், சிற்றன்ன வாசல் வண்ண ஓவியங்களும், சங்ககால இலக்கியங்களும் தமிழ் நாட்டுக் கலைகளாய், பண்பாட்டின் உறைவிடங்களாய் உலகம் போற்றும் வண்ணம் உயர்ந்துள்ளன.

ஆனால் அவை தாமே கலையின் காவலர் என்றோ தம் மையன்றிக் கலையில்லை என்றோ பறைசாற்றிக்கொண்ட தில்லை. ஆனால் இன்று கலையின் பெயரால் தமிழ னின் பண்பாட்டுக்கே மாசு உண்டாகும் வகையில், மட்டரகமாக மங்கையர் உடலங்களைப் பல்வேறு வகையில் படம் இட்டுக் காட்டியும், காட்ட வேண் டாத பண்பாட்டில் மறைக்க வேண்டிய பகுதிகளைப் பற்றி மிக மட்டமாக விளக்கியும் வாழும் தமிழ் நாட்டில் அக்கலையும் பண்பாடும் எப்படி வாழ முடி யும்? கலை உள்ளத்தைத் தொடுவது. 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளும்' நல்ல பண்பட்ட உள்ளங் களைக் கலைகள் தம் பக்கம் ஈர்க்கும். ஆனால் கலை நலம் தெரியாக் காமுகர் வழி காசுறிப்பதற் கென்றே இன்று 'கலை' என்னும் பெயரால் தமிழ் நாட்டில் பல கொலைத் தொழில்கள் நடக்கின்றனவே!

உலகில் எத்தனையோ வகையான கலைகள் நாடு தோறும் வாழும் மக்கள் மனவிளக்கமென வளர்கின் றன. கலை ஒருமை உணர்வைத் தருவது; உள் ளத்தைத் திறந்து காட்டுவது, கள்ளங்கொள்ளாப் பண்பாட்டின் வழிபட்ட உள்ளங்களே நல்ல கலை களை நாட்டிற்குத் தரமுடியும். இதை எண்ணியே பாரதியார்,

'உள்ளத்தில் உண்மை ஒளிஉண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவும்'

என எடுத்துக் காட்டியுள்ளனர். எனவே கலை என்பது பண்பாட்டின் அடிப்படையிலே அமைந்து தூய நல்ல உள்ளத்தின் அமைதியிலிருந்து பிறப்

பது. அந்தக் கலை உயிர்களை எல்லாம் உயர்த்தும்; வாழ்விக்கும்; வளம் பெருக்கும். 'பள்ளத்தில் வீழ்ந்திருந்த குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வர்' என்ற பாரதியின் பாட்டு நிலைக்கு ஏற்ப, நாட்டில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுள் பலர் உயர வழிகாட்டும். எனவே பண்பாட்டின் எல்லை இகவாத கலை—வெறும் புலன் உணர்வுக்கு மட்டுமன்றி மக்கள் உள்ளத்துக்கு உணர்வூட்டும் கலை—மக்கள் மனத்தில் கால எல்லையைக் கடந்தும் அழியா நிலை பெற்ற கலை—உண்மையில் சமுதாயத்தை உயர்த்த உதவும். இச்சமுதாய நெறியும் வாழ்வும் உலகெங்கணும் வாழும் மக்கள் மன நிலைக்கு ஏற்ப மாறுவதால் கலைகள் பலவகையில் சிறக்கின்றன. எந்த நாட்டிலும் எத்தகைய கலை வாழ்ந்தாலும் அது பண்பாட்டு எல்லை கடவாத நிலையில் இருக்குமேயானால் உண்மையில் அது உலகை வாழ வைக்கும். ஆனால் வெறும் பொருள் கருதியும், புகழ் கருதியும், பட்டம் பதவி கருதியும் கலையின் பெயரால் செய்யப்படும் மேற்பூச்சுக்கள், அக்காலத்தில் சிறந்தன போலத் தெரியினும், அவை கால வெள்ளத்தை வென்று என்றும் வாழாது அழிவதோடு, தன் அழிவுடன் மக்கட் சமுதாயத்தையும் அழிவுப் பாதைக்குப் பற்றிச் சென்று கொடுமையால் அழிக்கும். ஆகவே பண்பாடு கெடாத நல்ல கலைகளை நாட்டில் வளரவிட வேண்டுவது அறிஞர்தம் தலையாய கடனாகும். இக்கலைகள் இனிமையும் எளிமையும் பொருந்தியனவாக, எல்லோரும் கண்டோ, கேட்டோ, உற்றோ மகிழக் கூடியனவாக அமைய வேண்டும். ஒரு சிலருக்கு மட்டும் கலை என்ற நிலை இருப்பின் அது பண்பாட்டுடன் இணைந்ததாகாது.

சமயமும் கலையும் மக்களினத்தினிலே வேறுபாடு காட்டுவனவாயின் அவை என்றென்றும் வாழ்வன அல்ல ; பண்பாட்டுடன் பொருந்தியனவாகவும் அவை எண்ணப்படா.

மொழி வழி

பண்பாட்டை விளக்கும் மிகச் சிறந்த ஒன்று மொழி[1], மொழி இன்றேல் மக்கள் வாழ்வே மலர்ந்திருக்காது என்பர். விலங்கிலிருந்து பிரிந்த மனிதன் சில காலம் செய்கைகளால் பேசிப் பின் மெல்ல மெல்ல பேச்சு மொழி பெற்று, பின் எழுத்தில் உருவம் கண்டு மொழியை வளர்த்திருப்பான். மொழியே பண்பாட்டை விளக்கும்கருவியாக அமைந்துவிடுகின்றது. மொழியே மக்களைக் கலந்து பழக வைக்கின்றது. தனித்த மனிதனைக் கூடி வாழ வழி காட்டியது மொழிதானே. உள்ளக் கருத்தை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளவும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு ஒட்டி வாழவும் வழி காட்டுவது மொழிதானே! அன்று தொட்டு இன்றுவரை நாட்டில் வாழ்ந்த நல்ல பண்பாளர்களை நமக்குக் காட்டுவதும் அம்மொழியன்றே! அப்பண்பாளர் தம் அறிவுரைகளை என்றென்றும் வாழவைப்பனவும் உலக மொழிகள்தாமே! மனிதனை விலங்கினின்றும் விலக்கி, பண்பாட்டாளர் வாய் மொழிகளைக் காட்டி விளக்கம் தந்ததும் மொழி. அதே மொழி மனிதனை மனிதனாக வாழவைக்க எத்தனையோ முயற்சிகள் செய்கின்றதே! என்றாலும் மனிதன் அதன் உதவியைப் பெற மறுக்கின்றான். இன்றைய சூழலில் மக்கள் மொழி

1. Language is an integral part of culture
(En. of Social Science P. 262)

யிலும் ஒன்றிய உணர்வினராகி, உலகில் அன்பையும் பண்பையும் வளர்ப்பதை விட்டு, வம்பையும் கொடுமையையும் வளர்க்கின்றார்கள். 'பண்பட்ட பாரத நாடு, என்று வாய்முட்டப் பேசும் நம் நாட்டில் இன்று மொழி வெறி தலை விரித்தாடுவதைக் காண்கின்றோம். அசாம் எல்லையில் மொழியின் பெயரால் நடைபெற்ற கொடுமை நாடறிந்ததன்றோ! தம் மொழியை வற்புறுத்திப் பிறர் மேல் திணிக்கும் கொடுஞ்செயலும், அதைத் தடுக்க நினைக்கும் உள்ளமும் நாட்டையே மறுபடியும் கூறு படுத்திவிடுமோ என்று அஞ்சக்கூடிய அவல நிலைக்கு அன்றோ இன்று மொழி மக்களை வாட்டுகின்றது. இது பண்பாட்டை வளர்ப்பதாகுமா? பண்பாட்டை வளர்ப்பதற்குப் பதில் மாய்க்க அல்லவோ மொழி வழி தேடுகின்றது. எனவே வெறும் மொழி எப்படிப் பண்பாட்டை உருவாக்கியது எனக் கூறமுடியும் எனவும் நினைக்க வேண்டியுள்ளது. மொழி வளர்த்த உள்ள நிலையே இன்று நாட்டிற்குத் தேவை. பண்பாடு மொழி இரண்டும் கலந்தால் நாட்டில் மக்கள் சிறக்க வாழ்வார்கள். ஆனால் இன்று நாம் கண்பது.....

பண்பாட்டை வளர்க்கும் பிற

இவைகளே யன்றி விளையாட்டு, வேடிக்கை, பொழுதுபோக்கு, விழா, மணி, மந்திரம், மூலிகை முதலிய அனைத்துமே பண்பாட்டில் உருவானவை என்றும் பண்பாட்டை வளர்ப்பன என்றும் கூறுவர் ஆய்வாளர். இவை அனைத்தும் பண்பாட்டின் பிற செயல்களோடு கலந்து புது நிலைகளை உருவாக்குகின்றன.[1] ஒவ்வொரு

1. Magic, Art. Music, Dance, Plays - all becomes associated with other cultural activities and develop a series of secondary functions. (En. Social Science 644)

விளையாட்டும் வேடிக்கையும் பொழுது போக்கும் ஓர ளவு அவ்வந்நாட்டு மக்கள் உள்ளுணர்வைக் காட்டக் கூடியதாக இருக்கும். ஆயினும் தமிழ் நாட்டில் பழங் காலத்தில் இருந்த விளையாட்டுக்களின் பெயர்களைக் கூட நாம் மறந்து விட்டோம். உணவிலும் உடையி லும் பிறரைப் பின்பற்றியது போன்றே, இந்த விளை யாட்டு முதலியவற்றிலும் மாறுபட்டு விட்டோம். கிரிக்கெட் வி ளை யா ட் டு இன்று நாட்டில் பெரும் விளையாட்டாகப் போற்றப்படுகின்றது. அது குளிர் நாடுகளில் நல்ல வெய்யிலில் நின்று காண வும் விளையாடவும் பயன்படும் வகையில் அந்த நாடு களின் நிலைக்கும், தன்மைக்கும், அவற்றின் வழி நேரும் பண்பாட்டுக்கும் இயைய அமைந்தது. ஆனால் இங்கே தமிழ் நாட்டில் கொளுத்தும் கோடை வெய்யிலில் கண்டும் ஆடியும்அல்லலுறும் பல லட்சக்கணக்கான மக் களைக் காணமுடிகின்றது. இதை இந்நாட்டுப் பண் பாட்டின் தொடர்புகொண்டதென யாரே கொள்வார்? இப்படியே பிறவற்றிலும் வேறுபாடுகள் காணமுடியும்

மருந்து வழி

மருந்து வகையில் நாம் நம் நாட்டு முறையை மறந்து விட்டோம். நம் நாட்டில் அறுவை வைத்திய மும் பிறவும் பழங்காலத்திலிருந்தே சிறந்து வந்தன. இந்நாட்டிலே சிற்சிலகாலங்களில் வந்துசேர்ந்தார் மன நிலைக்கு ஏற்ப மருந்து செய்யும் முறைகளிலும் மாற்றம் உண்டாயிற்று. சித்தவைத்தியம். யுனானி, ஆயுர்வேதம், ஓமியோபதி என்று பலவகைகளில் நாட்டு மருந்து நிலை மாற்றங்கள் பெற்றுள்ளது. எனினும் இன்று மேலை நாட்டு மருந்துகள் இவை அனைத்தையும் மாற்றும் நிலை யில் வளர்கின்றன ஒரு சிறு இலையைப் பிழிந்து சாறு

இட்டு நீக்கும் சில நோய்களுக்கு ஆயிரமாயிரமாகச் செலவு செய்தும் நோய் நீங்கப்பெறுத பல நிகழ்ச்சிகளை நாம் காண்கின்றோம். இது மருந்தின் கூறு என்றோ மருத்துவர் வேறுபாடோ என்று கூற வேண்டியதில்லை. நம் நாட்டில் நமக்குப் பழக்கமான முறைகளைக் கைவிட்டு, பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த மணி மந்திர மருந்து முறைகளை வேண்டாமென ஒதுக்கிச் புறநிலைக்கு ஏற்பமாற்றி அமைத்துக் கொண்டதால் வந்த விளையின் விளைவே இது. அந்தந்த நாட்டு நிலைக்கும் தேவைக்கும் கிடைக்கும் பொருளுக்கும் ஏற்ப நல்ல மருந்துகளைக் குறைந்த விலையில் நாம் செய்து கொள்ளமுடியும். ஆனால் யார் அதை நினைக்கின்றார்கள் ? இதிலேயும் பண்பாட்டை விட்டு அகலும் நெறியே காண வருந்தவேண்டியுள்ளது.

அரசியல் வழி

அரசியல் மக்கள் வாழ்வின் உயிர்நாடி. 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை' எனச் சங்க காலப் புலவர் நிலத்தை வாழ்த்தினர் நாட்டுமக்கள் வழி நாடு நலம் பெறும் என்ற கருத்தினால், அவர்கள் நல்ல அரசியல் ஆணைவழி இயங்குவார்களானால் நாடு நாடாகு மன்றோ! 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்பது அன்றைய பழமொழி. எல்லா உயிர்களிடத்தும் வேறுபாடு காட்டாது, இன்னார் இனியார் என்னாது நேர்மையில் நின்று ஆண்ட மன்னவர் உலகில் பலர். அந்த நல்லவர்களாலேதான் உலகம் இன்றளவும் வாழ்கின்றது. 'அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோதான்' என்ற சேக்கிழார் வாக்குப்படி, மன்னர்கள் அரியணை ஏற அஞ்சினர். தவறு நேரில் என்செய்வது என உள்ளம் குமுறினர். தவறு நேர்ந்துழி தன்

மகனே யாயினும் தண்டிக்கத் தயங்கவில்லை. அத் தகைய மன்னர்கள் நாட்டில் வாழ்ந்தால் அவர் ஆளும் எல்லையில் பண்பாடு செழித்து ஓங்கும் என்று சொல்ல வும் வேண்டுமோ' ஆனால்.....?

இன்று உலகில் எத்தனையோ அரசாங்கங்கள் நடைபெறுகின்றன. இன்று முடிசூடும் மன்னர் பரம் பரை பெரும்பாலும் அருகிவிட்டது. மக்கள் ஆட்சி என்ற பெயரிலே பலநாடுகள் ஆளப்பெறுகின்றன. சர் வாதிகார ஆட்சியில் அடங்கிய நாடுகளும் சில உள. ஆட்சிமுறை எதுவாயினும் ஆளுகின்ற மக்கள் உள் ளங்கள் ஒரே நிலையில்தான் உள்ளன. மக்கள் ஆட்சி யில் சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகின்றது. சர்வாதி காரத்திலும் சமத்துவ ஒளி தெரிகின்றது. இருந்த உள் ளங்களிலும், பிற ஆட்சியாளர் உள்ளங்களிலும், தான் அல்லது தாம் என்ற பண்பாட்டுக்குத் தேவை இல்லாத ஒரு முனைப்பு, உருவாகி உள்ளதைத்தான் காண்கின் றோம். இந்த முனைப்பினாலேயே முந்திய உலகஅரங்கு அழிந்து பெரும்போர் மூண்டது; இன்றும் உலக அரங்கு வாழுமா வீழ்மா என்ற எண்ணத்தில் நாம் வாழ வேண்டியுள்ளது. இதனால் மனித இனமே அழி யினும் அழியலாம். உயிர் இனத்தைச் சேர்த்துத் தழுவிச் செல்லவேண்டிய அரசுகள் இன்று தத்தம் சொந்தக் கருத்துக்களையும் பிறவற்றையும் நாட்டில் பரவவிடுவதற்காகவும் தனி ஆணை செலுத்துவதற் காகவும் பிறமக்களை நசுக்க நினைக்கின்றன. அந்த நினைப்பு மனிதனை விலங்காக்குகின்றது. நாடுகளில் கொள்ளையும் கொலையும் பிற கொடுமைகளும் உண் டாகின்றன. இதனால் வாழ்வின் அடிப்படையான சமு தாயத்தின் செம்மையும் பண்பாடும் பிற நல்லியல்பு

களும் நசுக்கப்பெறுகின்றன. உலகில் மக்கள் நல் வாழ்வுக்கெனத் தொடங்கப்பெற்ற அரசியல், அந்த மக்கள் நல்வாழ்வையே நாசம் செய்து, உலகைச் சுடு காடாக்கத் திட்டமிடுகின்றது. இந்த நிலையில் அர சியல் பண்பாட்டுடன் இணைந்த ஒன்று என்பதை எண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை. இந்த நிலை மாறுமா? நம்பிக்கை பிறக்கவில்லையே.

விஞ்ஞானத்தின் வழி

இன்றைய வளரும் விஞ்ஞானம் மனிதப் பண்பாட் டினையே மாற்றிவிடுகின்றது. ஆக்கத் துறைக்குப் பயன்பட வேண்டிய விஞ்ஞானம் அழிவுத்துறைக்குப் பயன்படுகின்றது. உலக நல்லறிவாளர்கள் வேண் டாம் வேண்டாம் என மன்றாடிக் கேட்டுக்கொண்டே இருக்க, வல்லரசுகள் விஞ்ஞானத்தின் வழிச்சொல்லும் கருவிகளை உண்டாக்கிக்கொண்டே இருக்கின்றன. ஒரு வேளை போர் தொடங்கின் சில வினாடிகள்தான்; அதற்குப் பின் உலகம் இருக்குமா என்று நினைக்கக் கூடிய மிகக் கொடிய அழிக்கும் ஆற்றல் வாய்ந்த பலப்பல ஆயுதங்களை வல்லரசுகள் வைத்துக்கொண் டுள்ளனர் என அறிகின்றோம். இந்த நிலையில் விஞ்ஞா னம் மனிதனை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும்.

விஞ்ஞான வளர்ச்சியால் மனிதனுடைய வாழ்க் கைக்கு உதவும் பொருள்கள் பலப்பல. வீட்டுச் சமை யல் முதல் நாட்டில் செல்லும் இரெயில், வானவழிப் பறக்கும் விமானம் ஈறுகப் பலப்பல வசதிகளை மனிதன் பெற்றிருக்கிறான். என்றாலும் இந்த வளர்ச்சியெல் லாம் மனிதப் பண்பாட்டை வளர்த்துள்ளனவா என் பது ஐயமே! இரெயில் போன்ற சில சாதனங்களால்

சாதி வேறுபாடு முதலியவற்றை நீக்கி, பிரிந்த மனித மனப்பான்மையை இணைக்கும் பண்பாட்டை விஞ்ஞானம் உண்டாக்கியது என்பது ஓரளவு உண்மைதான். என்றாலும், மனிதனை வெறும் இயந்திரமாக அது மாற்றி அமைத்து விட்டது. மக்களுக்குள் ஏற்றத் தாழ்வை நீக்கும் சில சாதனங்கள் ஒருபுறமிருக்க, மக்களுக்குள் ஏற்றத் தாழ்வை வளர்க்கும் சாதனங்களே அதிகமாக வளர்ந்து வருவதையும் நாம் அறிவோம். உந்து வண்டியாகிய மோட்டாரும், குளிர் சாதன அறைகளும், வானவூர்தியும், பிறவும் வேறுபாட்டை வளர்க்கின்றனவல்லவா! மோட்டாரில் செல்லும் மனிதரில் சிலர், தம்முடன் வாழும் மக்களை நடந்து செல்லுகின்ற காரணத்தால் விலங்கினும் கேடாக மதிப்பதில்லையா! காரில் நாய்களை ஏற்றிச்செல்லும் நல்லவர்கள் உண்மையிலே வாடுகின்ற மக்களை வழியிடைக் கண்டால் 'நாயே' என்று பழிப்பதைப் பார்க்கின்றோமே! இரயிலேயே முதல் வகுப்பில் போவோர் மற்றவர்களைக் கேவலமாக மதிப்பதைக் காண்கிறோமல்லவா! இப்படி ஒருவரிடம் உயர்வு மனப்பான்மையும், மற்றவரிடம் தாழ்வு மனப்பான்மையும் வளரவிடுதல் சமூகத்துக்கே கேடுதருவது என்பதை வரலாறு காட்டுகின்றது. இந்த ஏற்றத்தாழ்வுகள் இல்லாத வாழ்வு - உலக வாழ்வு அமையாது என்பது ஓரளவு உண்மைதான். அங்கேதான் பண்பாடு மனிதனுக்கு உதவுகின்றது. செல்வத்தாலோ செல்வாக்காலோ மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு உயர்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு பண்பாடு உயர்ந்து கொண்டே போகவேண்டும்.

'எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து, (125)

என்று வள்ளுவர் இந்த உண்மையை நன்றாக விளக்

கிக் கூறியுள்ளதை நாள்தோறும் படிக்கும் - மற்றவர் களுக்கு விளக்கும் பலர்-தம் வாழ்விடை இதைக் கொள்வதில்லை. அந்தச் செல்வ நிலையிலே பண்பாடும் ஒன்ற வேண்டுமென்பது நன்மக்கள் ஆசை. விஞ் ஞான வளர்ச்சியே இன்று செல்வர் வறியர் நிலையை அதிகமாகக் காட்டிப் பண்பாட்டை அழிக்கின்றது.

செல்வ நிலை

செல்வம் 'தாமும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைக்கும்' பண்பாட்டை உலகுக்குக் காட்டவே உண் டாயிற்று. ஆனால் செல்வர்கள் பண்பாட்டைக் குழி தோண்டிப் புதைத்து மாறுபடுகின்றனர். நல்ல அறி வுடைய அறிஞர்களும்கூட இப்படிக் கெட்டொழிவார் கள் என்ற உண்மையைக் கம்பர்,

'அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறவருந் திருப் பெற்றபின் சிந்தனை பிரிதாம்'

என விளக்கிக் காட்டிச் செல்லுகின்றார். இதுபோன்று பல நல்ல உண்மைகளை - வாழ்வும் பண்பாடும் இணைந்த சிறப்பியல்புகளை - அன்று தொட்டு இன்று வரையில் சான்றோர் காட்டிக்கொண்டேதான் வருகின் றார்கள். ஏன்? நாமும் எழுதியும் பேசியும் உலகுக்குக் காட்டிக்கொண்டேதான் வருகின்றோம். ஆனால் அந்த இணைப்பு வாழ்வில் முகிழ்க்கவில்லையே.

இதுவரை கண்டவற்றால் உலகில் உள்ள ஒவ் வொன்றும் பண்பாட்டொடு பின்னிப் பிணைந்தனவே என்றும், எனினும் அவை அனைத்தும் பண்பாட்டின் அடிப்படையில் ஒன்றி மக்கள் உள்ளத்தில் இடம்

பெருமையால்தான் நாட்டில் அன்று தொட்டு இன்று வரை எத்தனையோ போராட்டங்களும் மாறுபாடுகளும் கொடுமைகளும் நடைபெறுகின்றன என்றும் நாம் ஓரளவு உணர்ந்துகொள்ளுகின்றோம்! எனவே பண்பாடு இவற்றொடு இணைந்தாலும் இவற்றினும் வேறுபட்டு மிக உயர்ந்த நிலையின் உணரக்கூடிய ஒன்று என்பது புலனாகும்.

சமுதாயப் அடிப்படை

இதுவரையில் கண்ட உணவு, உடை, கலை, சமயம், மொழி, செல்வம், அரசியல், விஞ்ஞானம் அனைத்தும் பண்பாட்டின் உறுதுணைகளென்பதும் அவை பண்பாட்டை வளர்க்கவும் பாதுகாக்கவும் பயன்படும் என்பதும், எனவே பண்பாடு அவற்றுள் எல்லாம் நீக்கமற நிறைந்தும் அவற்றுக்கு அப்பாற்பட்டும் நிற்கும் மேலாய ஒன்று என்பதும் கண்டோம். இத்தகைய பண்பாட்டையும் அதன் உறுதுணையாகிய பிறவற்றையும் உலகில் வளர்ப்பதும் வாழவைப்பதும் சமூகமேயாகும். மனிதனை நீங்கிய மற்றைய விலங்கினங்களும் பிற உயிர்களும் இத்தகைய பண்பாடு என்னும் வாழ்க்கைக் கோட்டை தொடவேண்டிய தேவையில்லை; தெரியவும் தெரியாது. ஆனால் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் பகுத்துணரும் மனிதனே இப்பண்பாட்டை உள்ளத்தால் உணர்ந்து புறத்தே சொல்லாலும் செயலாலும் விளங்குமாறு செய்ய வல்லவன். எனவே இப்பண்பாடு சமுதாயத்தை ஒட்டியே வளர்ந்தும் சிறந்தும் மாறியும் சிதைந்தும் பலப் பலவகையாகக் காலத்தாலும் சூழலாலும் பிறவற்றாலும் உறழ்ந்தும் வருவது என அறிகின்றோம்.

ஆகையினால் மனித சமுதாயமும் பண்பாடும் கலந்தே காண வேண்டுவனவாகும். 'ஆன்ற குடிப்பிறத்தல் பண்புடைமை' என்றபடி மனிதனுடைய பிறப்பு, வாழ்க்கை முறை, சுற்றுச் சார்பு பிறவற்றைப் பற்றி வளர்வது பண்பாடு[1] என்பதை ஒரளவு மனித இனம் உணர்ந்து இருக்கின்றது. எனவே பண்பாடு மனித வாழ்வின் வரலாற்றை ஒட்டியேதேயாம்.

உலகில் வாழ்கின்ற மனிதன் தோன்றிய அன்று தொட்டு இன்றுவரை ஒரே நிலையில் வாழ்ந்தான் எனக் கொள்ள முடியாது. அல்லது உலகின் பல பகுதிகளில் வாழ்கின்ற மனிதன் ஒரே பண்பாட்டில் நிலைத்திருக்கிறான் என்றுதான் கொள்ள முடியுமா? நாம் மேலே கண்டபடி, அவனவன் வாழும் நாடு, தட்ப வெப்ப நிலை, சூழல் இவற்றிற்கு ஏற்ப அவனவன் வாழ்க்கை முறையும் பழக்க வழக்கங்களும் பிற அடிப்படைத் தேவைகளும் மாறுபடலாம். இவையெல்லாம் புறத்தே பண்பாட்டைக் காட்டுவன. ஆயினும் உள்ளத்தே மலரும் பண்பாட்டு உணர்வு—அன்புடைமை—பெரும்பாலும் உலகின் எந்தப் பாகத்திலும் மாறுகின்றது எனக் காட்ட இயலாது. மனிதப் பண்பு—திருந்திய மனிதப் பண்பு—உலகெங்கணும் ஒரே தன்மையாகவே இயங்கும் எனக் கொள்வதில் தவறில்லை. தமிழ்நாட்டில் தோன்றிய அன்றைய வள்ளுவர் அறத்துக்கும், இன்று குஜராத்தில் தோன்றிய அண்ணல் காந்தி அடிகளாரின் அறத்துக்கும் இருவரும் இடையில் தோன்றிய எண்ணற்ற பிற இந்திய மெய்ஞ்ஞானிகளின் பொன் மொழிகளா

1. Social heritage is Culture (Encyclopaedia of Social Sciences P. 621)

கிய அறவுரைகளுக்கும், யூதேய நாட்டில் தோன்றிய கிறித்துவின் அறவுரைக்கும், அரபிய நாட்டு முகமதுவின் உரைகளுக்கும், மேலை நாடுகளில் வாழ்ந்த சாக்கிரடிஸ் போன்றோர் தம் நேர்மை வாழ்க்கை முறைக்கும் உரைக்கும் என்ன வேறுபாட்டை உலகில்காண முடியும்? மொழியும் கலையும், நாகரிகமும் பழக்க வழக்கமும் நாடுதோறும் மாறுபடுவன என்றாலும் உள்ளப் பண்பாடு மட்டும் அடிப்படை உணர்வில் மாறுபடும் என்று காட்ட முடியாது. எனினும் சிற்சில சமயங்களில் அப்பண்பாட்டினை மறந்தோ—அன்றி விட்டு விலகியோ—மனித உணர்வு நசுங்கப் பெற்றோ நிற்கின்ற சில வேளைகளில், ஒருவரை ஒருவர் அடக்கியாள நினைக்கும் நிலையில், பண்பாடு நாடுதோறும் மாறிவிட்டதாகக் காண்கின்றோம். அந்தக் காட்சி வழியிலேதான் பண்பாட்டு வரலாறும் அறிஞர்களால் திட்டப்பெறுகின்றது. ஒரு நாட்டு வரலாறு மற்றவர் சேர்க்கையால் மாறலாம்; கெடலாம். ஆனால் இருவர் உள்ளமும் மனிதத் தன்மை கெடாத நிலையில் இருப்பின் சேர்க்கையால் பண்பாடு மாறவோ, கெடவோ வழியில்லை. எனினும் நாம் மேலே கண்டபடி பண்பாட்டை அகத்திலன்றி புறத்தே காட்டும் பல சாதனங்களைக் கொண்டே எண்ணும் உணர்வு அரும்பிவிட்டதால் அந்த நெறியிலே நாமும் நின்று சிறிது சிந்தித்துப் பார்க்கலாம்.

இந்திய நாட்டில் எத்தனையோ வகையான மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களையெல்லாம் அரசியல் ஒன்றே பிணைத்து நிற்கின்றது. குமரிமுதல் இமயம் வரை எத்தனையோ மொழிகள், உணவு, உடைவகைகள், பழக்க வழக்கங்கள் இருந்தபோதிலும் அரசியல்

அனைவரையும் 'வேற்றுமையில் ஒற்றுமை' காணச் செய்கின்றது. என்றுலும் நாட்டில் ஆங்காங்கு ஒற்றுமை குலைவதையும் மொழியின் பெயராலும், பொருளாதாரம், வாழ்க்கை அமைப்பு, தேவை முதலியவற்றின் பேராலும் பெரும் போராட்டங்களும் கொள்ளைகளும் கொலைகளும் நடப்பதைக் காண்கின்றோம். அரசியல் தலைவர்கள் எவ்வளவுதான் முயன்றும் நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்ட முடியவில்லை. ஏன்? இவையெல்லாம் வேறுபாட்டை வளர்ப்பன. புறத்தே 'ஒற்றுமை' என்று ஆரவாரம் செய்யும் நிலையில் என்றும் எங்கும் ஒற்றுமையைக் காண இயலாது; அகத்தே ஒற்றுமை உணர்வு அரும்பல் வேண்டும். அந்த உணர்வுக்கு அடிப்படையே பண்பாடு. இந்தப் பண்பாட்டு உள்ளம் மனித உள்ளமாக இருக்கும் வரையில் மாறுது. அந்த மனித உள்ளத்தை வளர்க்கத்தான் சங்ககாலப் புலவன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உண்மையை உணர்த்திவிட்டுச் சென்றுன். மேலை நாட்டுப் பல பகுதிகளில் பிறந்து, அவற்றின் தட்ப நிலைக்கும் சூழலுக்கும் ஏற்ப வளர்ந்த எத்தனை எத்தனை சமயப் போதகர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து நெல்லை நாட்டுத் தேரிகளிலும் கோடையின் கொடுமையிலும் பண்பாட்டு உள்ளத்தோடு வாழ்ந்து சமயம் பரப்பினர்கள் என்பதைக் காண்கின்றோம். இன்றும் மலேயா, இலங்கை முதலிய நாடுகளில் வாழும் நம்மவர் சிலர் உள்ளத்தால் மலேயா மக்களாய் - இலங்கை மக்களாய் மாறி, மனிதப் பண்பாட்டைக் கெடுக்கா வகையில் அவ்வந் நாட்டு மக்களோடு இணைந்து வாழ்கையில், ஒரு சிலர் பண்பாடு கெட்டு உரையாலும் உற்ற செயலாலும் புறத்தே நடித்து அதனுல் தாமும் கெட்

டுத் தம் பொன்னுட்டுக்கும் கெட்டபெயரை வாங்கித் தருகிறார்கள். இவ்வாறு பண்பாட்டின் அடிப்படை வாழ்வில் ஒருமை உணர்வைத் தந்து சிறக்கும் இப்பண்பாடு வளர்ந்து கொண்டே வருகின்றது என்பர் ஆராய்ச்சியாளர்.

மனித உணர்வு

உலகில் தோன்றும் எந்த ஒன்றுக்கும் வளர்ச்சி உண்டுதான். எதுவும் வளரவில்லையானால் வாழ்வற்று அழியும் என்பதும் உண்மைதான். அந்த நிலையில் பண்பாடும் வளரும் தன்மை உடையதே. ஆயினும் அந்த வளர்ச்சி உள்ளத்தைப் பற்றியதேயாக அமைந்த ஒன்றே. 'உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல்' என்று வள்ளுவர் கூறியபடி உள்ளத் துயர்வே —உள்ள வளர்ச்சியே—பண்பாட்டின் வளர்ச்சியாகும். நாம் மேலே கண்டபடி பிற விலங்குகளுக்கும், மற்ற வற்றிற்கும் இல்லாத, வெறும் உடல் உறுப்புக்களால் மட்டும் அறுதியிட முடியாத உயர்ந்த உள்ளப்பண்பாடு மனிதனுக்குத்தான் உள்ளது.[1] உடல் உறுப்புக்கள் பெற முடியாத உயர்ந்த உண்மையை அவன் பண்பாட்டில்தான் உணர முடியும்[2]

1. Culture, the cumulative creation of man, extends the range of individual efficieney and of power of action; and it gives a depth of thought and breadth of vision undreamed of in any animal species. (En. Social Science, P. 645)

2. Culture endows man with an additional extension of his anatomical apparatus, with a protective armour of defence and safeguards, with mobility & speed through media where his direct bodily equipment which have entirely failed him. (ibid. P 645).

இது மனித உணர்வில் மாறுபடக் காரணம் இல்லையே. தன்னலமும் பிற மாறுபாடுகளும் நுழையும் காலத்திலேதான் பண்பாடு மாறியதாக நினைக்கவழி யுண்டு. ஆனல் ஒரே காலத்தில் வாழும் ஒரே மனித உள்ளத்திலே மாறுபாடு தோன்ற வழியில்லை.

என்ருலும் தோன்றிய முதல் மனிதன் பண்பாடு அற்றவனுகவே வாழ்ந்திருக்க வேண்டும். விலங்கொடு விலங்காக வாழ்ந்த மனிதன் பண்பாட்டைப் பெற்ருன் என்று சொல்ல முடியுமா? பண்பாடு உடல் உறுப்பின் செயல்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்று கண்டபடியினுலே, வெறும் உடலால் மனிதனுன ஒருவன் எப்படிப் பண்பாட்டைப் பெறமுடியும்? மெல்ல மெல்ல அறிவுவரப்பெற்று, உணர்வு திருந்தப் பெற்று, சுற்றி உள்ள மற்றவரையும் பிற உயிர்களையும் கண்டு தெளிந்து, அவையும் தன்னைப்போல் வாழவேண்டியவையே என எண்ணி, அந்தப் பொது வாழ்வுக்குத் தன் வாழ்வை ஓரளவு தியாகம் செய்தல் வேண்டும் என்ற திருந்திய செம்மையான அறிவுபெற்று, உணர்வு பெற்றவழி அவன் செயலாற்றத் தொடங்க எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கழிந்தனவோ நாம் அறியோம். அந்த நாளிலெல்லாம் உள்ளப் பண்பாடு மெல்ல மெல்லக் கருவாகித் தோன்றி, மொட்டாகிப் பின்மலர்ந்து சிறுகச் சிறுக வளர்ந்து பின் பிஞ்சாகிப் காயாகிக் கடைசியில் கனிந்து பழமாகி உலகிற்குப் பயன்பட்ட காலமே மனித வாழ்வின் செம்மைசான்ற காலமாகும். அந்தக் காலத்தை உருவாக்க உழைத்த அத்தனை அறப்பெருஞ் செல்வரும் செல்வியரும் உலகம் உள்ள

ளவும் மறக்கமுடியாத நிலைபேறுடைமை பெற்றவர். அவர்கள் வழி மனித உள்ளப் பண்பாடு வளர்ந்து கொண்டே வருகின்றது.

சார்பு வாழ்க்கை

மற்றவர் சார்பினுல்தான் பண்பாடு வளர்கிறது என்றுல் வாழ்வைக் கூட்டுறவு வளர்த்தது என்றே கொள்ள வேண்டும். மனிதன் தனியாக இருக்கும் போது அவனுடைய பண்பாட்டை எப்படி உறுதி யிடமுடியும்? மற்றவரோடு கலந்து பழகும் காலத் தில் அவன் பழகும்முறை, நோக்கும் கண்ணோட்டம், பகுத்துண்டு வாழும் வாழ்க்கை, இனிய கூறும் சிறப்பு இன்ன பிறவற்றையும் நோக்கியே அவன் பண் பாட்டாளன் எனப் பாராட்ட முடியும். அந்த கூட்டு றவில் இணையும் தனிப்பட்ட இருவரே—இரண்டு தனிச் சமூகங்களே—இரண்டு பெருநாட்டு மக்களே—அன்றி இருவேறு இனங்களே—தத்தம் உள்ளங்களை மற்றவர்களுக்காக மாற்றி அமைத்து வாழ்வது தான் பண்பாடு. கடவுள் உணர்வை எண்ணிய அடி யவர்கள் இறைவனோடு இரண்டறக் கலத்தலே சிறந் தது என்ற எண்ணத்தினுலே 'நீவே றெனை திருக்க நான் வேறெனை திருக்க நேராக வாழ்வதற்குன் அருள் தாராய்' என்று பாடினர். இந்த நிலை பண்பாட்டுக் கும் பொருந்தும். பழகும் சமுதாயம் வேறுபாடற்று—தனி மனிதன் மற்றவரோடு மாறுபாடற்று—ஒரு நாடு பிறநாட்டோடு போரும் பிற கொடுமைகளும் அற்று —ஒருஇனம் மற்றொரு இனத்தோடு பகைமை அற்று —உதட்டால் அல்லாமல் உள்ளத்தால் ஒன்றி, அந்த ஒற்றிய உள்ளத்தால் நிகழும் பிற நிகழச்சிகளும், செயல்களும், பிறவும் யாவும் தனி மனிதனுக்கும்

தனிச் சமூகத்திற்கும் தனி நாட்டிற்கும் தனி இனத்துக்கும் என்றும் இல்லாமல் எல்லாருக்கும் ஒப்ப இருக்கும் வகையில் வழிகாட்டுவதே பண்பாடாகும்.

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
நீ அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'

என்ற தாயுமானார் முறையிட்ட வேண்டுகோள் இப்பண்பாட்டின் அடிப்படையில் முகிழ்ப்பதுவேயாம். 'பிறப்பொக்கும் என்ற உயிர்க்கும்' என்ற வள்ளுவர் வாக்கு இப்பண்பாட்டின் உச்சவரம்பாக உள்ளது. எனவே தனி மனித வாழ்விலிருந்து மனைவி, மக்கள், சுற்றம், விருந்து, இனம், நாடு, உலகம், பிற உயிர்கள். புல், பூண்டு, இப்படி எல்லையற்ற உயிர்களிடம் கருணை வளர்ந்து கொண்டு போவதே பண்பாட்டின் வளர்ச்சியாகும். எங்கோ ஒரு சிலர்தாம் இப் பண்பாட்டின் வளர்ச்சியிலே தாமும் வளர்ந்து உலகையும் வளர்க்கப் பாடுபட்டு—ஆனால் தோல்வியுற்று —மறைந்து விட்டனர். என்றாலும் அவர்கள் பாடிய, எழுதிவைத்த, சொல்லிய பொன்மொழிகள் உலகப் பண்பாட்டை வளர்க்கும் என்ற உறுதி நல்லவர் உள்ளங்களில் இடம் பெற்றுள்ளது. உயர்ந்த பண்பாட்டாளர் உள்ளம் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடும்; பாடினையும் , மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறன் அனைத்து ' என்று அறுதியிடும். 'உன்னைப்போல் பிறரை நேசி' என்று உணர்த்தும். இப்படிப் பாடிய அறுதியிட்ட, உணர்த்திய உள்ளங்கள் மனிதப் பண்பாடு நாட்டில் வளரவில்லையே என நைந்து நைந்து மடிந்தன. எனினும், அவ்வுள்ள உணர்வுகள் நாட்டில்—உலகில்—நடமாடிக் கொண்டிருக்கின்றன. மனி

தன் அவற்றைப் பற்றிக் கொண்டு மெல்ல மெல்லப் பண்பாட்டு ஏணியில் கால்வைத்து ஏறத் தொடங்கினால் உலகம் உய்யும்—உயிர்கள் வாழும்—உள்ளங்கள் நல் உள்ளங்களாகச் செழிக்கும்—சமூகம் தழைக்கும். ஆனால் அந்த நிலை உலகில் உருவாக இன்னும் எந்தனை எத்தனை ஆயிரமாயிரமாண்டுகள் ஆகுமோ! அதுவரையில் வல்லரசுகள் உலக உயிர் இனத்தை வாழவிட்டால்தானே அப்பண்பாட்டின் உச்சியை மனிதன் காணமுடியும். காண்பமோ அந்த உயர்வை என்று நல் உள்ளங்கள் தடுமாறுகின்றன.

வரலாற்று எல்லை

பல்வேறு உணர்வுகளை உடைய மக்கள் வாழ்வதனாலேதான் வரலாற்று ஆசிரியர்கள் பண்பாட்டையும் பலப்பல வகையாகப் பிரிக்கின்றனர். காலத்தால் மனிதன் உணர்வு மாறுபடுவது இயற்கையானாலும் தேய்த்தாலும் பிற சூழ்நிலைகளாலும் கூட மனித உணர்வு மாறுபடுவதைக் காண்கின்றோம். அந்தந்த உள்ளப் பண்பாடும் அவர் நாட்டு இயற்கை நியதிக்கு ஏற்ப மாறுபடும் போலும். எனவே சமுதாயம் ஒன்றோடொன்று கலக்கும் போதும், மோதும் போதும் நாட்டில் பண்பாட்டின் அடிப்படையும் மாறுவதாக நினைக்கின்றோம். பரந்த பாரத நாட்டில் பண்பாடு, சிந்து வெளிநாகரிக காலந்தொட்டு இருபதாம் நூற்றாண்டின் எல்லை வரை எத்தனை எத்தனை படை எடுப்புகளுக்கும், குடியேற்றங்களுக்கும், பிறவற்றிற்கும் ஏற்ப மாறுபாடுகளைப் பெற்றுள்ளது என நினைக்கின்றோம். உள்ள நெகிழ்ச்சியாகிய உணர்வோடு கூடிய

நெகிழ்ச்சியே பண்பாடு எனக் காணின் அது கட்புலனுகாமையின் பிறவற்றைப் பற்றிக்கொண்டு நாம் கணக்கிடுகின்றோம். எனவே புறத்தேக் காணும் பண்பு நிலைகள் பிறவற்றுல் மாறுபடுவது இயற்கைத் தானே! காலந்தோறும் மக்கள் வருகையாலும் பிரிவாலும் பிறவற்றுலும் பண்பாட்டின் திறன் உயர்ந்தும் தாழ்ந்தும் உறழ்ந்தும் பிறழ்ந்தும் மாறுபடுகின்றது. எனவே அந்த வரலாற்று எல்லையில் பண்பாடு அடங்கி அதற்கு ஏற்ப வளர்ச்சியடைகின்றது.

தமிழ்நாட்டு வரலாறு

தமிழ்நாட்டில் தொல்காப்பியனுர் காலத்தைத் தான் நம்மால் மிகப் பழங்காலம் என நினைக்க முடிகின்றது. அத்தொல்காப்பியத்தின் வழியே அதற்குப் பலப்பல நூற்ருண்டுகளுக்கு முன்பே மொழியும் கலையும், பண்பாடும், நாகரிகமும் நாட்டில் சிறந்திருந்தன என அறியமுடித்தாலும், காலம் அவற்றைக் காட்ட மறுத்துவிட்டது. எனவே தமிழ்நாட்டு வரலாற்றில் மிகப் பழங்காலம் தொல்காப்பியர் காலமாகும். அடுத்து நாம் காண்பது கடைச் சங்க காலமாகும். அதை அடுத்து அறியமுடியாத இருண்ட காலத்தில் மூன்று அல்லது நான்கு நூற்ருண்டுகள் உருண்டு ஓடுகின்றன. பின்னரே காஞ்சியில் பல்லவர் செழித்துச் செங்கோல் ஓச்சுகின்றனர். பின்னர்த் தஞ்சைச் சோழர் ஆட்சிக்காலம் தமிழ்நாட்டு வரலாற்றின் பொற்காலமாகத் திகழ்கின்றது. அடுத்துப் பாண்டியர் தலைதூக்கிச் சில காலம் நாட்டுத் தலைவர்களாக ஆணை செலுத்தினர். பின்னர் விஜயநகர மராட்டிய மன்னரும் மகமதியரும் மேலை

நாட்டினரும் அடுத்தடுத்துத் தமிழ்நாட்டின் நிர்வாகத்தில் உரிமை கொண்டாடி வாழ்ந்தனர். இறுதியாக இன்று இணைந்த பாரதத்தோடு நாம் வாழ்கின்றோம். எனவே இனித் தொல்கர்ப்பியனர் காலம் தொட்டு இன்றுவரை ஏற்பட்ட மாறுதல்களுக்கிடையிலே தமிழ் சமுதாயம் பண்பாட்டு நெறியில் எப்படி வாழ்ந்தது என்பதை ஓரளவு அறுதியிட்டுக் காணலாம். உணர்வால் ஒன்றிய பண்பாடு வரலாற்று எல்லைக் கோடுகளைக் கடக்கும் காலங்களில் என்னென்ன வகையில் வளர்த்தும் உறழ்ந்தும் மாறுபட்டதாகத் தோன்றுகின்றது என்பதைத் தொடர்ந்து காண்போம்.

II. வளரும் பண்பாடு

சங்க காலத்தில்—பல்லவர் காலத்தில்—உளப் பண்பாட்டாளர் அறவுரைகள்—சோழர் காலத்தில்—உயர்வும் தாழ்வும்—விசயநகர வேந்தர் நாளில்—இன்றைய நிலை—நீறு பூத்த நெருப்பு—கடவுளும் பண்பாடும்.

சங்க காலத்தில்

தமிழ்நாட்டு வரலாறு தொல்காப்பியர் காலம் வரை எட்டுவது. தொல்காப்பியத்திலும் சங்க நூலிலும் மனிதன் பண்பாட்டோடு வாழ்ந்த வரலாறு காட்டப்பெறுகின்றது. 'தன்னுயிரைப் போன்று மன்னுயிரை'க் காத்து, 'உற்றார் மற்றார்' என்னாது, 'இன்னார் இனியார், என நோக்காது, 'நமர் எனக் கோல் கோடாது, பிறர் எனக் குணங் கொல்லாது' உயரிய பண்பாட்டில் அவர்கள் வாழ்ந்தாரெனக் காண்கின்றோம். வையத்துள் வாழ்வாங்கு மக்கள் வாழ்ந்தார்கள். எத்தனையோ இன்னல்களுக்கு இடையிலும் அவர்தம் வாழ்வு பண்பட்ட வாழ்வாகவே சிறந்து விளங்கிற்று. அவர்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பான்மையில் வாழ்ந்தனர். ஆற

றிவு படைத்த மக்களை மட்டுமன்றி ஓரறிவுடைய புல் தொடங்கி அனைத்தையும் ஒத்து நோக்கினர். தொல் காப்பியர் புல் மரம் முதலியவைகளை ஓரறிவுடைய உயிர் என்றே காட்டுகின்றார். அந்த உயிருக்கும் மனிதனுக்கும் வேறுபாடு இல்லை என்பதைத்தான் திருவள்ளுவர்,

> 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்'
>
> (-குறள் 972)

என்று எடுத்துக் காட்டினர். இக் குறளுக்கும் தொல் காப்பியர் இலக்கணத்துக்கும் இலக்கியமாக விளங்கினன் வேள் பாரி. நாத்தழும்பிருப்பப் பாடாதாயினும் முல்லையினையும் ஓர் உயிராக எண்ணி, அதுபற்றிப் படரத் தன் பொற்றேரை விட்டுவந்தான். மயிலுக்குப் போர்வை அளித்த பேகனும் உயிர் வேற்றுமை காணுத உயர் பண்பாளன். சேக்கிழாரால் பாராட்டப்பெறும் ஆரூர் ஆண்ட மனுச்சோழனும் தன் மகன் உயிரையும் பசுங்கன்றின் உயிரையும் ஒன்றுகவே மதித்து நீதி செலுத்தினன். இவ்வாறு எவ்வுயிரையும் ஒத்து நோக்கி அவற்றின் துன்பநீக்கத்தின்வழி உழைத்தலே பண்பாடாகும்.

அக் காலத்தில் சிலர் தம் வாழ்வினும் பிற வாழ்வே மேலெனக் கருதினர், ஆகவே, தாம் நலம் பெறுவதனினும் பிறர் நலம் பெறுவது நல்லதென நினைத்தனர். நெல்லிக்கனியைத் தான் உண்டு நெடுங் காலம் வாழ நினைத்த அதிகமான், தன்னினும் ஔவையார் வாழ்ந்தால் உலகுக்குப் பயன் உண்டு எனக் கருதி அவருக்கு அதை அளித்தான்.

அதன் சிறப்பையும் பிறகே கூறினன். அதனுல் ஔவையார்,

'ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே'

(புறம் 91)

எனப் பாராட்டினர். இத்தகைய சான்றாண்மை மிக்க ஒழுக்க சீலர்கள் - பண்பாட்டாளர்கள் - நாட்டில் வாழ்வார்களாயின் அந்நாட்டில் துன்பம் இல்லை - பசி இல்லை - பிணி இல்லை—ஏன்? மூப்பும் இல்லை. இதைத் தான் பிசிராந்தையார் பாடல்நமக்குனினவூட்டுகின்றது. தன் தலை நரைக்காததற்கும் மூப்புத் தெரியாமைக்கும் அவர் காட்டும் காரணங்கள் அமைந்த பாடலே உயர்ந்த பண்பாட்டின் இலக்கியமாகும்.

'யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

(புறம் 191)

என்ற பாடல் என்றென்றும் வாழ வேண்டிய பாட லாகும்.

இவற்றி லெல்லாம் பண்பாடென்பது நெஞ்சை ஒளிக்காது, மற்றவர்களுக்குத் தீமை செய்யாது, எல் லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் ஒன்று என்பதும் அந்த உணர்வின் வழியே செயலாற்றின் உலகில் மக் கள் யாதொரு இன்னலுமற்று வாழ்வார்கள் என்பதும்

நன்கு புலனுகின்றன வன்ரே! 'மறந்தும் பிறன் கேடு சூழாத' பண்பாடே வையத்தை வாழவைப்பதாகும். எனினும், இத்தகைய உயர்ந்த பண்பாடு இன்று ஏட்டளவில் வாழ்கின்றதன்றி நாட்டில் வாழ்கின்றதென்று காட்ட முடியுமா? காலந்தொறும் இப் பண்பாட்டு நெறி எப்படி எப்படி மாறுபட்டது எனக் காணலாம். பண்பாடு காலம் மாறினும் தான் மாருத ஒன்று என்ருலும், அப் பண்பாட்டைப் பற்றும் மனித உள்ளம் காலத்துக்கும் பிற கலப்புக்களுக்கும் ஏற்ற ஒன்றை விட்டு ஒன்றைப் பண்பாடு எனப் பற்றிக் கொள்ளுகின்ற காரணத்தால் ஒரு சமுதாயத்தின் பண்பாடு மாறுபட்டதாக நினைக்கவேண்டியுள்ளது. தமிழர்தம் மாருப் பண்பாடு இன்றளவும் நாட்டில் ஏட்டளவில் கெடாது வாழ்கின்றது. எனினும், வாழ்வின் சூழலுக்கு ஏற்ப எத்தனையோ மாருட்டங்களைப் பெற்றுள்ளமையின் அம் மாற்றங்களை யெல்லாம் கால எல்லையில் நின்று காண்போம்.

பல்லவர் காலத்தில்

கடைச் சங்க காலத்துக்குப் பிறகு பல நாட்டவர் தமிழ் நாட்டுக்குள் வந்து தங்கியதோடு ஆட்சி செலுத்தவும் ஆரம்பித்தனர். பல சமயங்கள் நாட்டில் பரவத் தொடங்கின. அதனல் தமிழ் நாட்டு வரலாறே இருளில் சில நூற்ருண்டுகள் மறைந்துகிடந்தது. அக் காலத்தில் நாட்டில் எத்தனையோ மாற்றங்கள் உண்டாயின. அதனல், பண்பாட்டின் அடிப்படையிலும் ஆட்டங் கண்டது எனலாம். மனத்தாலும் மற்றவர்களுக்கு - மற்ற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை என்ற பண்பாடு ஓரளவு மறக்கப்பட்டது. நாட்டில் சமய வேறுபாடுகளும் அவற்றின்

வழிப் போராட்டங்களும் உண்டாகத் தலைப்பட்டன. பல்லவ அரசர்கள் தமிழ்நாட்டை ஆளத் தொடங்கிய ஏழாம் நூற்றாண்டில் இச் சமயங்களின் அடிப்படையிலேயே பண்பாடு அமையலாயிற்று.

சமயங்கள் யாவும் மக்கள் நலனுக்கே தோன்றின என்றாலும் அவற்றின் அமைப்பிலும், கொள்கைகளிலும், வளர்ச்சியிலும், பிற வகைகளிலும் பற்பல வேறுபாடுகள் தோன்றலாயின. தமிழ் நாட்டில் சமயத்தின் பெயரால் இலக்கியங்களைச் சங்க காலத்தில் காண இயலவில்லை. பரிபாடலும், முருகாற்றுப் படையும் கடவுளைப் பாடுவன வாயினும், அவற்றுள்ளும் சமயக் காழ்ப்பும் பிற கொடுமைகளும் காணவில்லை. சமணமும் பௌத்தமும் நாட்டில் புகுந்து ஒன்றை ஒன்று சாய்க்கப் போரிட்ட அந்த வேளையில்-பல்லவர் ஆட்சியில்-ஏழாம் நூற்றாண்டில்-சைவமும் வைணவமும் ஓங்கி அவ் விரண்டையுமே நிலைகுலையச் செய்தன. இந்தப் போராட்டங்களுக்கிடையிலே தத்தம் சமயத்தை வளர்க்கப் புது முறைகளையும் எளிய வழிகளையும் மக்களிடைக் கற்பித்தனர். உள்ளத்தால் பொய்யாத உயர்ந்த பண்பாடு ஓரளவு தளர்ந்தது. ஊர்தோறும் இறைவனைப் பாடுதலும், துறை மூழ்குதலும் பாவத்தைப் போக்கும் என்ற நம்பிக்கையை உண்டாக்கினர். பிற சமயங்களைப் பழிக்கவும் இழித்துரைக்கவும் தொடங்கினர். தத்தம் சமயமே மெய்ச் சமயம் எனவும் வாதிட்டனர். மக்கள் செய்வ தறியாது திகைத்தனர். வாழ்க்கையில் சுலபமான முறையைக் கையாள அவர்தம் உள்ளம் நினைத்தது. வள்ளுவரும் பிற சங்கப் புலவரும் காட்டிய அந்தத் தூய உள்ளப் பண்

பாட்டிலும் துறை மூழ்குதலும் கோயில் வழிபாடும் தம் குற்றத்தை நீக்கும் என்ற எண்ணத்திலே அவர் கள் வாழத் தொடங்கினர். 'குற்றம் செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கை கண்டு' பாட்டி சைத்தனர். அதனுல், ஓரளவு உள்ளப் பண்பாடு குறைந்து புற ஒழுக்கங்களே பண்பாடாக எண்ணப் பட்டன.

இந்த முறை கடைச் சங்க காலத்தை ஒட்டியே வளர்ந்துவிட்டது. சிலப்பதிகாரத்திலேயே 'பவ காரணி', 'புண்ணிய சரவணம்', 'இட்ட சித்தி' முதலிய தீர்த்தங்களில் மூழ்கினுல் பயனுண்டாகும் எனும் வாத மும் கவுந்தி அடிகளின் மறுப்பும் காட்டப்பெறுகின் றன. தோழியால் காமன் கோட்ட வழிபாட்டின் ஏற் றம் காட்டப்பெறலும் கண்ணகி அதைப் 'பீடன்று' என மறுப்பதும் அதில் காண்பனவே. மாடல மறை யோன்.

'என்வாய்க் கேட்டோர் இறந்தோர் உண்மையின்
நன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்'

(சிலம்பு)

என்று கூறிப் பாவ நீக்கங் காரணமாகக் கங்கை நீராடி, அப் பாவ நீக்க முயற்றதும் அதில் காட்டப் பெறுகின்றது. இவ்வாறு காப்பிய காலத்திலே தொடங்கிய மாருட்டங்கள், பல்லவர் காலத்தில் நன்கு நிலைபெற்றுவிட்டன. இவை சரியா தப்பா என்ற ஆராய்ச்சி இங்கே நமக்குத் தேவை இல்லை. இவற்றில் வள்ளுவர் காட்டிய உளப் பண்பாடு மறக்கப்பட்டது என்பது மட்டும் திட்டமாகத் தெரிகின்ற தன்றே!

உளப் பண்பாட்டாளர் அறவுரைகள்

மனத்தாலும் மாணு செய்யாத தலைமை அறமாகிய பண்பாடு மாறி, தவறு செய்தால் தீர்த்து வைக்கும் கழுவாயாக நீராடலும், கோயில் வலம் வரலும் அமைந்துவிட்ட காலத்தில் மக்கள் இந்த முறையை வேகமாகப் பின்பற்றினர். அதனுல்தான் அக் காலத் தில் நாட்டில் ஊர்தொறும் பலப்பல கோயில்கள் உரு வாயின. அத்துடன் ஊர்தொறும் யாத்திரை செய் தலும் பிற சமயச் சடங்குகளும் இடம் பெற்றன. சமண, பௌத்த சமயப் பிரசாரங்களுக்குப் பதிலாகச் சைவ வைணவ சமய இலக்கியங்கள் தோன்றலாயின. அவற்றுள் கடவுள் நெறி சிறந்ததாகப் போற்றப் பட்டது. எனினும், பழந் தமிழர் கண்ட மாசற்ற மெய்ந் நிலையை பிற்காலத்தில் சமய நெறியைக் காட்டிய நல்லவர் மறந்துவிடவில்லை, கடவுளை வணங்குவதற்கும் உளத் தூய்மையே உயர்ந்தது என் பதையும், தீதகன்ற நல் உள்ளத்திலே இறைவன் தங்குவான் என்பதையும், அந்தத் தூய உள்ளமற்ற பிற வழிபாடுகளெல்லாம் வெறும் ஆரவாரமே என் பதையும் அவர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். புறத் தோற்றத்தைக் காட்டிலும் அகப் பொலிவே பண்பாட் டிற்கும் சமய நெறிக்கும் ஏற்ற தென்பதை அவர்கள் வற்புறுத்தினர்கள்.

'உள்ளம், உரை, செயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து, இறை
உள்ளில் ஒடுங்கே' *(6—1·2·8)* என்று நம்மாழ்வாரும்

'கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு நீர்க்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசன் எனைதவற் கில்லையே'

(—5·99·2) என்றும்,

'குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நீர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே'

(—5·96.9)என்றும்,

'பொய் அனைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்யனே'

(—5·48·9)

என்றும் அப்பர் புற வேடத்திலும் அகப் பொலிவே மேம்பட்டது எனக் காட்டுகின்றனர். சுந்தரமூர்த்தி அடிகளாரும்,

'தண்ணில் ஆசறு சித்தமும் இன்றித்
தவமுயன்று அவமாயின பேசி
பின்னல் ஆர்சடைக் கட்டிஎன் பணிந்தால்
பெரிதும் நீந்துவ தரிது'

(—7·64·7)என்றும்,

'மறையிடைத் துணிந்தவர் மனையிடை இருப்ப
வஞ்சனை செய்பவர் பொய்கையு மாயத்
துறையுறக் குளித்துள தாகவைத் துய்த்த
உண்மை யெனும்தக வின்மையை ஓரேன்'

(—7·58·9)

என்றும் ஊர்தோறும் சென்று பொய்கையாடுதல் முத

லாய புற ஒழுக்கங்களைக் காட்டிலும், அக் கடவுள் உணர்வோடு இல்லிலே இருந்து வாழ்தலே மேலானது என்று காட்டுகின்றார். இவ்வளவு விளக்கமாகச் சமயத் தலைவர்களே உளப் பண்பாட்டைக் காட்டினாலும் பொது மக்கள் இவற்றைப் புரிந்துகொள்ளாது வெறும் புற வழிபாடுகளையும் தீர்த்த யாத்திரைகளை யுமே மேற்கொண்டு அவற்றுல் தம் பாவம் அகன்று விட்டது என எண்ணிவிட்டார்கள். அதனுல் வாடிய பல அடியவர்கள் மக்கள் பணியே இறைவன் பணி என்று வெளிப்படையாக எடுத்துக் காட்ட வேண்டிய தேவையே உண்டாகிவிட்டது.

'நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கங் காமே

—திருமந்திரம் — (1857)

என்று திருமூலர் வெளிப்படையாகவே மக்கட்பணியே மாதவன் பணி எனக் காட்டினர். என்றாலும் அந்த இடைக் காலத்தில் பல்வேறு சமய மாறுபாடுகளுக்கும் சமுதாய வேறுபாடுகளுக்கும் நடுவில் மக்கள் மிகச் சுலபமான முறையிலேயே வாழ விரும்பி உள்ளத்தால் உள்ளுவதாகிய உயர் பண்பை மறந்து, புற ஒழுக்கங் களிலேயே தம்மைச் செயல்படுத்தினர். அதனுல், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற நிலைமாறி, பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை நாட்டில் வளர்ந்தது. அந்தச் சாதி சமய வேறுபாட்டால் சமூகத்தின் கட்டுப்பாடும் பிற நல்லியல்புகளும் கெடலாயின. எனினும், மேன்மேலும் புதுப் புதுக் கலப்புக்கள் புகப்புக பலமாறுபாடுகள் தொடர்ந்து உண்டாகி வளர்ந்தன.

சோழர் காலத்தில்

பல்லவர் காலத்திற்கும் சோழர் காலத்துக்கும் பல வேறுபாடுகளைக் காண்கின்றோம். சங்க காலத்தில் வாழ்ந்த சோழர் பரம்பரைக்கும் தஞ்சைப் பரம்பரைக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. பிற்காலச் சோழ பாண்டியர் காலத்தில் உண்டான ஆயிரமாயிரம் கல்வெட்டுகள் அக் காலத்திய மக்கள் வாழ்வையும் அவற்றின் வழியே பண்பாட்டையும் உலகுக்கு உணர்த்துகின்றன. அக் காலத்தில்தான் இன்று தமிழ் நாட்டில் காணப்பெறுகின்ற கோயில்களுள் பல தோன்றின. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற அடிப்படைப் பண்பாட்டு உணர்வு மாறி, பலப்பல தெய்வங்களும் சாதிகளும் வளரலாயின. மற்றும் கோயில்களுக்கு விளக்கெரிக்கவும், ஒரு சாராருக்குத் தானம் வழங்கவும், வேறு பல ஒரு சார்பான அறங்கள் செய்யவும் மக்கள் உள்ளங்கள் மாறலாயின. ஓரறிவுயிருக்கும் ஊதவ வேண்டுமென்ற வேறுபாடு தோன்றுத நல்ல பண்பட்ட உணர்வு மாறி 'பாத்திர மறிந்து பிச்சை இடு' என்ற பழமொழி அன்று புதுமொழியாக நாட்டில் அரும்பிற்று. நாடாண்ட நல்ல மன்னர்களும் 'இரணிய கருப்பம்', 'துலா பாரம்' போன்றவற்றுல் தம் பாவம் கழுவப் பெரும் என்று நம்பினர். பொன்னுல் ஒரு பெரும் பசுவினைச் செய்து அதன் வாய்வழிப் புகுந்து வயிற்றில் தங்கிப் பின் வால்வழி வெளிவந்து அதை அப்படியே பிராமணர்களுக்குத் தானம் கொடுத்தல் இரணிய கருப்பமாகும் (இரணியம் – பொன்). தன் எடையுள்ள பொன்னைத் தராசில் நிறுத்து அதை அப்படியே பிராமணர்களுக்குக் கொடுத்தல் துலாபாரமாகும். இத் துலாபார முறை சேரன் செங்குட்டவன் மாடலனுக்குக்

கங்கைக் கரையில் கொடுத்த வகையில்[1] அந்நாளில் இருந்தது என்றாலும், இடைக் காலத்தில் நடந்த சமயப் போராட்டங்கள் காரணமாக அத்தகைய முறையினை நம்மால் காண முடியவில்லை. பிற்காலச் சோழர் காலத்தில் பல மன்னர்களும் அரசிகளும் இரணிய கருப்பம், துலாபாரம் இரண்டும் செய்து தம்மை உயர் நிலை உலகத்துக்கு இவணின்றே உரிமையாக்கிக் கொண்டார்கள் என அறிகின்றோம். 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவனே' சிறந்தவனுகவும் வானுறையும் தெய்வத்தினும் மேம்பட்டவனுகவும் உள்ளான் என்ற கருத்து மாறி, இத்தகைய அறம் புரிகின்றவனே வானுறையும் தெய்வ வாழ்வைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை இடைக் காலத்தில் மன்னரிடத்தில் - நாட்டில் நல்ல பண்பாட்டை வளர்க்க வேண்டிய மன்னரிடத்தில் - மலர்ந்தது. அதனுலே, மற்றச் சாதாரண மக்களும் ஒரு சாராருக்குத் தானம் தருவதாலேயே தம்முடைய பாவம் கழியும் என நம்பினுர்கள். அதனுல், நாட்டில் பலப்பல சடங்குகள் வளரலாயின. மற்றும் தேவதானம், பிரமதேயம், பட்டவிருத்தி, பள்ளிச் சந்தம் போன்ற புதுவகையான கொடைகள் வளரலாயின. அன்று தொட்டு இன்று வரை பல சடங்குகள் வாழ்ந்து வருகின்றன. இந்தப் புதுமுறைகளால் மக்களுடைய உண்மைப் பண்பாடு ஓரளவு மறையத் தொடங்கியது எனலாம். சமயமும் கடவுட் பற்றும் பண்பாட்டை வளர்க்க உதவுவனவே. கடவுளுக்கு முன் எந்த வேறுபாடும் கிடையாது. தன்னலமற்ற சிறந்த தொண்டர்க ளிடத்திலேயே இறைவன் வாழ்வான் என்ற நல் உணர்வு மாறி, இறைவனை ஒரு சாராருக்கே உரிமையாக்கிவிடத்தக்க மனநிலை நாட்டில் வளர்ந்

1. சிலம்பு. 27, 173—176.

தது. அதனால், வள்ளுவர் காட்டிய பண்பாடு நாட்டில் மறையலாயிற்று. அக் காலத்திலேயே இந்த முறைகளை மாற்றி உளப் பண்பாட்டை வளர்க்க வேண்டுமென உணர்த்திய பல அடியவர்களும் நாட்டில் தோன்றினர்கள். எனினும், தமிழ் நாட்டு மன்னருக்கும் மக்களுக்கும் வந்த புதுப்புது மொழி களின்மேலும் பிறவற்றிலும் 'மோகம்' பிறந்த காரணத் தால் நாட்டில் பலப்பல புது வழக்கங்கள் தோன்றலா யின. இறைவனை 'நீயுநானுமாய் ஏகபோகமாய்' வழி பட்ட நெறி மாறிற்று. தமிழ் நாட்டில் உண்டான கோயில்களில் தமிழ் மொழி இடம் பெறவில்லை. கலை வளர்க்கும் நிலைக்களன்களாக நின்ற கோயில் களில் ஒரு சில கலைகளே இடம்பெற்றன. எந்த இறைவன் முன் யாதொரு வேறுபாடும் தலைகாட்டலா காதோ, அதே இறைவனை முன்னிருத்திப் பல்வேறு வகை மாறுபாடுகளையும் சாதிப் பூசலையும் வளர்த் தார்கள். இறைவனைக் காட்டிய அப்பர் அடிகள்,

> 'இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
> இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
> கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
> கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே'
>
> (—6·61·3)

என்று இறைவனை வேறுபாடு காணுத நல்ல உள்ளங் களில் இருப்பவனுகவே காட்டுகின்றார். ஆனால், அவர் பாடிய பாடல்களால் புகழுற்றுப் பின் வளர்ந்த பெருங் கோயில்களில் இல்லாத வேறுபாடுகளை யெல்லாம் பிற்காலச் சோழர் காலத்தில் காண் கின்றோம். இவை யெல்லாம் அக் காலப் பண்பாடு போலும்.

உயர்வும் தாழ்வும்

இவ்வாறு மனத்தாலும் பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்கலாகாது என்ற உயரிய பண்பாட்டு நிலை நீறுபூத்த நெருப்பாகி மங்கியது. தவறு செய்தால் அதற்குக் கழுவாய் அல்லது 'பிராயசித்தம்' உண்டு என மக்கள் நம்பலாயினர். களவு முதலியவற்றைச் செய்ய நினைத்தலும் தவறு என்ற வள்ளுவர் காட்டிய நெறி போய், கொலை முதலிய செய்தாலும் மக்களுக்கு அப் பாவங்களை நீக்கிக்கொள்ளும் கழுவாய் உண்டு என்று எண்ணத் தொடங்கினர். அதனால், நாட்டில் சில கொடுமைகள் உண்டாகி யிருக்கலாம். அன்றியும் அக் காலத்தில் சமயப் போராட்டம் மட்டு மன்றி, சாதிப் போராட்டமும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் எழுந்த பொறுமை உணர்வுகளும் சாதாரண மக்களை மனமாற்றிக் கெடுக்க, அரசர்களுக்கோ நாட்டாசையும், வேறு மன்னர் தம் படை எடுப்புக்களைத் தகர்க்க வேண்டிய ஏற்பாடுகளும், பிற புதுச் சூழல்களும் தோன்றி நாட்டுப் பண்பாட்டை நிலை குலையச் செய்தன. எனவே, அக் கால அரசியல் துறையில் எத்தனையோ போற்றத்தக்க மாற்றங்களும் ஏற்றங்களும் உள்ளன எனவும் கங்கையும் கடாரமும் கொண்ட பெருமை தமிழருக்கு உண்டு எனவும் எண்ணி மகிழ்கின்ற அதே வேளையில், மனிதனுக்கு இன்றியமையாது வளர வேண்டிய மனப் பண்பாடு வளர வில்லையே என எண்ணி வாடவேண்டியுள்ளது. இதனால்தான் போலும் அந்தக் காலத்தில் வாழ்ந்த படித்த புலவர்களுக்கும்கூட ஒருமை உணர்வாகிய பண்பாட்டு நெறி வழக்கத்தில் இல்லை என நினைக்க வேண்டியுள்ளது. ஒட்டக் கூத்தர், புகழேந்தி, ஔவை, கம்பர் போன்ற புலவர்கள் அக் காலத்தில் வாழ்ந்

துள்ளனர். அவர்களது ஒற்றுமைக் குலைவைக் காட்டும் பாடல்களே தனிப்பாடல் திரட்டில் ஏராளமாக உள்ளன. அப் பாடல்கள் அனைத்தையும் நாம் உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். என்றாலும், இந்த வேற்றுமை உணர்வை வளர்க்கும் வகையில் நாட்டில் பாடல்கள் வளர்ந்துவிட்டனவே என்பதை நினைக்க வருந்தாதிருக்க முடியவில்லை. உலகுக்குப் பண்பாட்டை விளக்கும் புலவர்களும் அப் பண்பாட்டை நிலைபெறச் செய்ய வேண்டிய் மன்னர்களும் தனிப் பாடல்திரட்டின்படி உண்மையிலேயே மாறுபட்டு வாழ்ந்திருப்பார்களாயின் அவர்களை எப்படிப் போற்ற முடியும்? எனினும், அப்புலவர்தம் பாடல்களில் இத்தகைய மாறுபாட்டு உணர்ச்சிகளை அதிகமாக நாம் காண முடியாத காரணத்தினால்தான் அவர்களால் இன்றளவும் நம்மிடையில் வாழ முடிகின்றது.

விசயநகர வேந்தர் நாளில்

அடுத்து வருகின்ற பாண்டியர் காலம் மிகக் குறுகிய ஒன்று. அக் காலத்திலேயே மகமதியரும் அவரை ஒட்டி மராட்டியரும் விசயநகர வேந்தரும் தமிழ் நாட்டில் கால் வைத்தனர். சோழர்களைப் போன்றே பாண்டியரும் விசயநகர வேந்தரும் பல புதுக் கோயில்களைக் கட்டியதோடு சில பழங் கோயில்களையும் புதுப்பித்துச் செப்பம் செய்தனர். அவ்வக் காலங்களில் எழுந்த கல்வெட்டுக்களும் அளப்பில. எனினும், அக் காலத்தில் மனிதன் தன்னை இன்னும் பல்வேறு வகைகளில் பிரித்துக் கொண்டான். சமூகத்தில் பிறர் வந்து சேரச் சேரச் சமூகம் வளர்கின்றது என்பர் சிலர். எண்ணிக்கையிலோ, புதுவகையான

எண்ணங்களிலோ மட்டும் அது வளர்ந்துவிட்டால் போதுமா? அடிப்படையான பண்பாட்டையும் பிற நல்லியல்புகளையும் நழுவ விட்டுவிட்டு, வெறும் புற அழகால் மட்டும் பொலிவது உண்மையில் எப்படி வளர்ச்சியாக முடியும்? அக் காலத்தில் பல்வேறு வகைப்பட்ட கிளைச் சாதிகள் வளர்ந்தன. சமயத்தை வளர்க்கும் போராட்டங்கள் நிறைந்திருந்தன. ஒரே சமயத்திலுள்ளும் வேறுபாடுகள் புகுந்தன. வடகலை தென்கலை என்ற வைணவ வேறுபாடுவளர்ந்தது. வீர சைவம், சைவம் என்ற வேற்றுணர்வுகள் அரும்பின. இன்னும் எத்தனையோ சமய வேறுபாடுகளும், சாதி வேறுபாடுகளும் எண்ணற்று வளர்ந்த காலம் அந்தப் பிற்காலப் பாண்டிய விசயநகர வேந்தர் காலமேயாகும். பல்வேறு வகைப்பட்ட அரசியல் போராட்டங்களுக்காக இனத்தவரே ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்கத் தொடங்கினர். அந்தக் காட்டிக் கொடுக்கும் கயமை தமிழ் நாட்டைத் பொறுத்த வரையில் இன்றளவும் வாழ்கின்றது. தன் தனிப்பட்ட வாழ்வும் வளமும் பெருகுவதற்காகத் தனக்கு உற்ற வரை, கலையை, பண்பாட்டை, மொழியை - ஏன்? நாட்டையே காட்டிக் கொடுக்கும் நிலை உண்டாயிற்று. அதனாலேயே பண்பாட்டின் அடிப்படையிலே மாறுபட்ட பலர் தமிழ் நாட்டில் அன்றுமட்டு மன்றி என்றுமே நிலைபெற்று வாழும் நிலை உண்டாயிற்று. ஒருமை உணர்வை வளர்க்க வேண்டிய சமயமும், அச் சமயத்தை வளர்க்க அமைந்தகோயில்களும் மடங்களும் மக்களுக்குள்ளேயே வேறுபாட்டுணர்வை வளர்த்தன. இலக்கியங்களும் பல வேறுபாட்டைத் தூண்டும் வகையிலேயே அமைந்தன. பிற சமயங்களைப் பழித்துரைப்பதும், பிற மக்களை இழிவு படுத்துவதுமாகிய

கொடுஞ் செயலைப் புலவர்களே—பண்பாட்டை வளர்க்க வேண்டிய புலவர்களே—செய்தார்கள். அவற்றை யெல்லாம் ஈண்டு விளக்கத் தேவை இல்லை என நினைக் கின்றேன். ஊர்தோறும் சாதிக்கு ஒரு சேரி மிகப் பழங் காலத்தில் இருந்ததாகக் காணினும், அக் காலத்தில் விசயநகர வேந்தர் காலத்தைப் போலப் பிறப்பாலே பிறவற்றுலே வேறுபாடு காணவில்லை எனலாம். சாதியே அற்ற தமிழ்ச் சமுதாயத்தில் நால்வகைச் சாதி என்றே இடைக் காலத்தில் உருவாயிற்று. அதை நாலாயிரம் சாதியாக வளர்த்த நிலை இப் பிற்காலத்திலேதான் உருவாயிற்று. அன்று அவர் கள் செய்த அக் கொடுமை, இன்று எத்தனை எத்தனை சீர் திருத்தங்களை நாம் செய்தாலும், மறையாது சமுதாயத் தில் ஒட்டி வளர்ந்து கொண்டேதான் வருகின்றது என்பதை அறியாதார் யார்? எனவே, எத்தனையோ நல்ல காரியங்களை அக் காலத்தில் அவர்கள் செய்தார் கள் என்று நாம் கொண்டாலும், அவை அனைத்தும் சமுதாயத்தின் பண்பாட்டு அடிப்படையை மாற் றிய காரணத்தால் அவர்களை நாட்டில் போற்ற முடியாமல் செய்துவிட்டன என்பதையும் வரலாறு காட்டுகின்றது. எனவேதான், பிற்காலச் சோழ ருக்குப் பின் தமிழ் நாட்டில் நல்ல அரசு நிலைக்கவில்லை என வரலாற்று ஆசிரியர்கள் எழுத நேர்ந்தது.

இன்றைய நிலை

இத்தனை வேறுபாடுகளுக்கும் இடையிலே தமிழ் நாட்டுத் தனிப் பண்பாடு - எவ் வுயிரையும் ஒத்து நோக்கும் இனிய பண்பாடு – நீறு பூத்த நெருப்பென நன் மக்கள் உள்ளங்களில் மறைந்து அழியாது வாழை யடி வாழையென வளர்ந்து கொண்டே தான் வந்

துள்ளது. பிற மக்களது உணர்வும் காலப் போக்கில் தமிழர் தம் மாறிய உளநிலையும் மனிதனை விலங்கினும் கேடாக மாற்றிவிட்டன. உள்ளத்திலும் புற அமைப்பே நாகரிகமாகவும் பண்பாடாகவும் மலர்ந்து விட்டது. அதனாலேயே இன்று இருபதாம் நூற்றாண்டின் இடையில் மனிதன் முழுக்க முழுக்கச் சுயநலவாதியாகி மற்றவர் துன்பமே தன் இன்பம் என மதிக்கும் உள்ளம் உடையனாகி என்றென்றும் வாழ்பவனாக எண்ணிப் பலப்பல கொடுமைகள் செய்கின்றான். இன்று நாட்டில் இதுவரை இருந்த வேறுபாடுகளுக் கெல்லாம் மேலாகக் கட்சி வேறுபாடு வந்து மக்கள் வாழ்வை மாய்க்க வைக்கின்றது. நம் நாட்டிலே உள்ள கட்சிகள் மக்கள் மனதை என்னென்ன வழிகளில் எந்தெந்த போக்குக்களில் திருப்பிக் கெடுத்துப் பண்பாட்டை அழிக்கின்றன என்பதைக் கண்ணால் காண்கின்றோம். இன்னார் இனியார் என்ற வேறுபாடோ, உற்றார் மற்றார் என்ற மாறுபாடோ தேவை இல்லை என்ற அடிப்படைப் பண்பாடு மாறி, தம் கட்சிக்காரன் சொல்வதே சரி, மற்றவர் உண்மை சொல்லினும் தவறு என்று கூறி, அவரவர்களைப் பின்பற்றும் வழக்கம் உண்டாகிவிட்டது. இந்த நிலையில் வள்ளுவர் காட்டிய பண்பாடு வளர்வது எங்கே ?

நீறு பூத்த நெருப்பு

இத்தனை இடர்ப்பாடுகளுக்கும் இடையிலே சில நல்லவர்கள் தமிழர்தம் பண்பாட்டைக் கெடாத வகையில் போற்றி வருகின்றனர். சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாயுமானார் இறைவனிடம் விடுக்கும் வேண்டுகோள் அவர்தம் உயர்ந்த பண்பாட்டையும் அதன் வழி தமிழர்தம் உண்மைப் பண்பாட்டையும்

உலகுக்கு உணர்த்துகின்றது. ஆண்டவனை அபிடேக அலங்காரங்களால் சிறப்புச் செய்து தத்தம் வாழ்வு வளம் பெறவேண்டும் என வேண்டும் தன்னலத்துக்கு மாருகத் தாயுமானுர் ஆண்டவனை நோக்கி,

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேருென் றறியேன் பராபரமே'

என்று வேண்டுவது தமிழர் பண்பாடு தரணியில் இன்னும் வாழ்கின்றது என்பதைக் காட்டுகின்ற தன்ருே! இந்த நூற்ருண்டு நாகரிகம் 'உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுவது'. இது பழங்காலத்தி லெல்லாம் ஓரளவு இருந்திருக்கின்றது என்ருலும் இன்று இருப்பது போன்று யாண்டும் நீக்கமற நிறைந் திருக்க வில்லை. இன்று கற்றவர் என்று தம்மைக் கூறிக்கொண்டு மற்றவர்களுக்கு அறவுரை வழங்கும் முன்னணி 'வீரர்கள்' கூடப் புறங்கூறும் 'பண்பாட் டில்' தலைநிற்கிருர்கள். அதனுல்தான் போலும் வள்ளல் இராமலிங்க அடிகளார் இறைவனை நோக்கி,

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்'

என்று வேண்டுகின்ருர். இவ்வாறு தாயுமானுர், இராமலிங்க அடிகளார் போன்ற நல்லவர்கள் சில நூற்ருண்டுகளுக்கு இடையிலே தோன்றிய காரணத் தாலேயே தமிழர்தம் உண்மைப் பண்பாடு உலராது வாழ்கின்றது எனக்கொள்ளலாம். இவ்வாறு நீறு பூத்த நெருப்பெனப் பண்பாடு மறையாது வாழ்ந்து கொண்டே வருகின்றது. உண்மையில் அப் பண் பாடு அனைவரையும் ஒத்து நோக்கும் பண்பாடு—நாட் டிலும் உலகிலும் வளர்ந்தால்தான் மனித குலம்

வாழும். அன்றேல், இன்று இருக்கும் சூழ்நிலையில் உலகம் என்று வேண்டுமானலும் அழிய வாய்ப்பு உண்டு.

புறத் தோற்றங்களாகிய நாகரிகம், உடை, உணவு பழக்க வழக்கங்கள், வாகனங்கள், மேற்பூச்சுக்கள் முதலியவற்றையே நாம் பண்பாடு எனக்கொண்டு இன்று அதிகமாக மதிக்கின்றோம். கலை என்னும் பேரால் பண்பாட்டைக் குழிதோண்டிப் புதைக்கின் றோம். உடல் உறுப்புக்களை மூடவேண்டும் என்ற பண்பாட்டின் அடிப்படையில் தோன்றிய அதே ஆடை இன்று அவ் வுடல் உறுப்புக்களைப் பல கோணங்களில் பார்த்துப் பிறர் மகிழும் வகைக்கே உதவுகின்றது. இப்படியே ஒவ்வொன்றையும் எடுத்துக் காட்டிக் கொண்டே போகலாம். இந்த நிலையெல்லாம் மனிதன் பண்பாட்டை மறந்துவிட்டான் என்பதைத்தான் காட்டுகின்றன. இப் புறநிலைப் பொருள்களெல்லாம் பண்பாட்டைவிளக்குவனவே,அவைஅமையவேண்டிய வகையில் அமைந்தால். சிலர் உடையைக் கண்டே அவர்தம் உயர்ந்த பண்பினை நாம் இன்றும் போற்று கின்றோம். சிலர் கூந்தலைக் கொண்டையிடும் அமைப் பிலேயே அவர்களின் பண்பினை அறுதியிடுகிறோம். சிலர் நம்மிடம் பழகும் முறையிலேயே பண்பாட்டை அறிகின்றோம். எனவே, இவை யெல்லாம் பண் பாட்டை விளக்கும் சாதனங்களாக அமைகின்றன. அவற்றின் உண்மை நிலையினை உணர்ந்து அந்தந்தச் சமுதாயத்தையும் தனி மனிதனையும் பண்பட்டவர் எனப் போற்றுகின்றோம். எனினும், வரவர 'உள் ளொன்று புறமொன்று' என்ற நாகரிகம் வளர்ந்து வரு வதனால், ஒருவரை ஒருவர் நம்பாத சமுதாயம் உருவா

வதால், நாம் மிக்க எச்சரிக்கையோடே யாரிடமும் பழக வேண்டியுள்ளது. ஆகவே. நெஞ்சத்து அழகு நலம் பொங்கும் பண்பாட்டை மிக எளிதில் புறத்திலே காண முடியாது என்றாலும், போலியை நல்லவற்றினின்றும் பகுத்தறிந்து காண்பதுபோலத் தெய்வத் தன்மை வாய்ந்த உண்மைப் பண்பாட்டை எப்படியும் உணர்ந்து கொள்ளலாம். உணர்ந்துகொண்டு உற்ற கடமை வழிப் பண்பாடு கெடாது நாமும் நம் வாழ்வைச் செம்மை நெறியில் செலுத்திச் சென்றால் உய்தி உண்டு. அன்றேல்.....?

கடவுளும் பண்பாடும்

பண்பாடு இவ்வாறு காலந்தொறும் அடிப்படை நிலையில் மாறவில்லை யென்றாலும், புறத் தோற்றத்தில் மாறுவதுபோன்று வளர்ந்துகொண்டே வருகின்றது. அப் பண்பாட்டை மனித சமுதாயம் பற்றுது நெடுந் தொலைவில் சென்றுகொண்டே இருந்தாலும், அவ்வப் போது நல்லவர்கள் தோன்றி அச் சமுதாயத்துக்கு அறிவுறுத்தித்தான் வருகின்றார்கள். சமுதாயம் வள ரும் தன்மையது. பண்பாடும் அடிப்படையில் மாறு விட்டினும் பிறவற்றால்-புற அமைப்புக்களால்—வளரும் தன்மையதே! பண்பாடும் தெய்வமும் ஒன்றிய நிலை யில் உள்ளன. தெய்வம் உண்டான அந்த நாளில் இருந்தது போன்றே இன்றும்அடிப்படையில்மாறுபாடு இன்றி நிலைத்துள்ளது. எனினும், அத்தெய்வத்தை வழிபடுவர் 'தன்தெய்வம் என்தெய்வ' மென்று மாறு பட்டும் வேறுபட்டும் பலப்பல வகையில் நாள்தோறும் அதன் புறத் தோற்றத்தையும், பிற அமைப்புக்களையும் அதன் இயல் இடம்போக்கு முதலியவற்றையும் தத்தம் மனம் போன வழியில் மாற்றி அமைக்கின்றனர். எனி

னும், இன்றும் அத்தெய்வம் தன் அடிப்படைத் தன்மையில் கெடாத ஒன்றாக அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கின்றது. பண்பாடும் அப்படியே. அன்று உள்ளொளியாகி உலகில் பரந்த பண்பாடு இன்றும் அந்த அடிநிலையில் கெடாமல்தான் வாழ்ந்து வருகின்றது. எனினும், அதைப் போற்றும் மக்கள் - பலநாட்டு மக்கள் - பல சமய மக்கள்-பல இன மக்கள் தத்தம் மனம்போன வழியில் 'தன் பண்பாடு, என் பண்பாடு' என்று வேறுபாடு கற்பித்துக்கொண்டு, கால வெள்ளத்துக்கும் இடையீட்டுக்கும் ஏற்ப மாற்றியும் திருத்தியும் சிதைத்தும் புதுக்கியும் அமைத்து அதை வாழவைப்பதாக நினைக்கின்றனர். எனினும், அந்த 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அடிப்படை கொண்ட பண்பாடு, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், என்ற பண்பாடு உலகில் மறையாது, கடவுளைப் போன்று காணாநிலையில் அமைந்துகிடக்கின்றது. கடவுளிடம் ஈடுபாடுடைய அன்பர்கள், உலகில் கொடுமை மிகும் காலத்தில் கடவுள் பல்வேறு உருவில் தோன்றி அவதாரம் செய்து மறம் கொன்று அறம் வளரச் செய்வான் என்பர். அது போன்றே பண்பாடும்-என்றும் அழியாது வாழும் பண்பாடும்—அமைவுற்று வாழ்ந்தாலும் தன் சமுதாயத்தைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய நிலை உண்டானால் தன் உண்மை உருவை மக்கள் உள்ளத்தில் மலர வைத்து வையத்தை வாழவைக்கும் என்பது உறுதி.

III. எங்கே பண்பாடு ?

சொல்லும் செயலும்—நேற்றும்
இன்றும்—உலவும் பண்பாடு—
வள்ளுவர் உவமைகள்—உயிரற்
றனவும் உதவுகின்றன — கதை
களின்வழியே கருத்துக்கள் —
இராமனும் வாலியும்—கற்பனைக்
கதையும் காட்டுகின்றது —
திகைத்த இராமன்—பண்பாடு
காட்டிய வாலி — மனிதரினும்
மேம்பட்டான்—இன்னும் அதே
நிலை—எங்கே பண்பாடு ?

சொல்லும் செயலும்

இந்த இருபதாம் நூற்றாண்டில் பண்பாட்டைப் பற்றி அதிகம் பேசுகின்றார்கள். பலப்பல நூல்கள் உலக மொழிகளில் வந்துகொண்டே இருக்கின்றன. ஆறறிவு பெற்ற - அறிவு நலம் சான்ற - மக்கள் அப் பண்பாடு பற்றி ஆராய்ந்து புதுப்புதுக் கருத்துக்களை எழுதிக்கொண்டும் பேசிக்கொண்டு வருகின்றார்கள். சிலர் 'பண்பாடு' என்று பலப்பல நூல்களை எழுதுவ தோடு அமைந்து, அதை வாழ்விடைக் கொள்ளத் தயங்குகிறார்கள். 'பண்பாடு என்பது எது?' என்ற தலைப்பிலே ஓரளவு அதன் அமைப்பைக் கண்டோம். என்றாலும் அதைத் திட்டமாக வரையறுத்துக் காட்டப் பலரும் தயங்குகின்றனர். அப்படிக் காட்டமுயன்று

எழுதியும் பேசியும் வருகின்ற ஒருசிலரும், 'சொல்லுதல் யார்க்கும் எளியது அரியவாம் சொல்லியவண்ணம் செயல்' என்ற குறளுக்கு இலக்காகி வருகின்றனர். இந்த நிலையில் பண்பாடு எங்கே வாழ்கின்றது என்று தேட வேண்டிய அவசியம் உண்டாகின்ற தன்றே!

நேற்றும் இன்றும்

ஒருசிலர் இந்த இருபதாம் நூற்றாண்டின் பல்வேறு சூழல்களுக்கு இடையில் சிக்கிய மக்கள் தமது பண்பாட்டை நழுவவிட்டு மிகக் கெட்டு விட்டார்கள் என்றும், பழங்காலத்திலெல்லாம் அவ்வாறின்றி மக்கள் நல்ல பண்பட்ட உள்ளத்தோடே வாழ்ந்தார்களென்றும் கூறுவார்கள். அக்கூற்றையும் அப்படியே உண்மை எனக் கொள்ளமுடியுமோ? உலகில் வரலாறு தோன்றிய நாள்தொட்டு உயிரினத்தும் மக்களினத்தும் மாறுபாடுகளும் போராட்டங்களும் இல்லை என்று கூறமுடியுமா? ஒரே குடிக்குள் நடந்த போராட்டங்களை எத்தனை எத்தனை இலக்கியங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் வடக்கே பாரதமும் தெற்கே புறநானூறும் அந்த உண்மையை விளக்கவில்லையா! பிற நாடுகளிலும் சமயப் போராட்டங்களும் நாட்டாசை பற்றிய போராட்டங்களும் வேறு போராட்டங்களும் நடந்துள்ளன என அறிகின்றோம். ஒரே குடியில் பிறந்த பாண்டவரும் கவுரவரும் செய்த போரே பாரதப் போராகப் பெரும் அளவில் இதிகாசத்திலும் தொல் வரலாற்றிலும் குறிக்கப் பெறுகின்றது. அப்போர் முறை தவறு என்று அன்றுகூடப் பண்பாடுபற்றி எழுதியவரும் விளக்கியுள்ளனர். தெற்கே ஒரே சோழர் குடியில் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் செய்த போரைப்பற்றி நாடு அறியும். ஆயினும் அது

முறையற்றது என்றும் தவருனது என்றும் கோவூர் கிழார் போன்ற புலவர் பெருமக்களால் கண்டிக்கப் பெறுகின்றது. இந்த நிலை அவ்வந்நாடுகளுடைய பண்பாடுகளின் அடிப்படையில் அமைந்தனவாகலாம். இங்கு நமக்கு வேண்டுவது இவற்றுலெல்லாம் மனித இனம் தோன்றிய நாளிலிருந்து மாறுட்டங்களும் போராட்டங்களும் இருந்தன எனக்கொள்வது பொருந்துமென்பதே. திடீரென இருபதாம் நூற்றுண்டில் மனித இயல்பு கெட்டுவிட்டது என்பது பொருந்தாது. நாட்டில் நலக்கேடுகளின் அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஓரளவு இருக்கலாமே யன்றி, முற்றும் தூய்மையுற்ற காலமே வரலாற்றில் இருக்கவழியில்லை.

மனிதனை பண்பாட்டின் உச்சியில் வாழ்கின்றவன் எனக கணக்கிடுகின்றோம் நாம். ஆயினும் அவனுக்கு வழி காட்டப் பலப்பல விலங்குகளும் பறவைகளும், ஊர்வனவும் நெளிவனவும் - ஏன் ? உயிரற்றவையும் தேவைப்படுகின்றன. இந்த நிலையில்தான் அன்று தொட்டு இன்றுவரை பண்பட்ட அறநெறியை உலகுக்கு உணர்த்தும் நூல்கள் அனைத்தும் பல உவமைகளை எடுத்தாண்டு மனிதனைத் திருத்த முயல்கின்றன. இந்த நிலையைக் காணின் மனிதனிடத்தில் வாழவேண்டிய பண்பாடு வேறு எங்கெங்கோ வாழ்கின்றது என நினைக்க வேண்டியுள்ளது. பண்பாட்டுடன் வாழவேண்டிய மனிதன் அந்நிலைகெட்டு, தன் பழம் உயிர் வளர் நிலைக்கு ஒப்ப எங்கோ கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன் என்ற உண்மையைப் பல அறிஞர்கள் இன்று காட்டிக்கொண்டே வருகின்றனர். உயிர்த் தோற்ற வளர்ச்சியின் எல்லையில் மனிதன் எப்படி இன்றைய நிலையை அடைந்தான் என ஆராய்பவர்கள்

மீனினத்திலிருந்து மெல்ல மெல்ல விலங்காகிக் கடைசியில் அவன் தோன்றினான் எனக் காட்டுவர். முதன்முதல் அசையும் உயிரினம் நிலத்தில் தோன்ற வில்லை என்றும், அவ்வுயிரினம் நீரில்தான் உண்டாகி யிருக்க வேண்டும் என்று காட்டுவர் அறிஞர். அண்மையின் இங்நிலை பற்றி ஆராய்ந்த உயிர்நூற் புலவர் சர் அரிஸ்டர் ஹார்டி என்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் மனிதன் கடல் தோன்றி, பின் வாலில்லாக் குரங்கென (Sea ape) இருந்து வளர்ந்தவனே எனக் காட்டுகின்றார்.[1] இவர் இத் துறையில் கடந்த முப்பது ஆண்டுகளாக முயன்று உழைத்து இந்த உண்மையைக் கண்டனராம். இவ்வாறு நீரிலும் பிறகு நிலத்திலும் மெல்ல மெல்ல வளர்ந்து, இன்றைய நிலையிலும் அறிவு வரப்பெற்ற மனிதன், முற்றிய பண்பாடு உடையவனுக, தாம் இன்புறுவது உலகின்புறக் காணும் தகுதி பெற்ற உள்ளம் உடையவனுக வளரவில்லை என்பது கண் கூடு. எனினும் உலகில் எங்கோ ஒரிருவர் தோன்றி அப்பண்பாட்டை மங்காமல் பாதுகாத்து வருகின் றார்கள் என்றும், அவர்கள் வாழ்கின்ற காரணத்தா லேயே உலகம் வாழ்கின்றது என்றும் காணமுடிகின் றது. இதனுல்தான் போலும் வள்ளுவர் 'பண்படை யார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்' என்று எழுதி வைத்தார். எனினும் அப்பண்பாட்டாளர் மிக உயர்ந்தவர்களாக—நூற் றுக்கு நூறு பண்பாட்டைப்பற்றி வாழ்பவர்களாக— மற்றவர்களை வாழவைக்க முயல்பவர்களாக இருந்

[1]SIR ALISTAR HARDY (64) Oxford Professor of Zoology. The Mall 7-3-1960.

தால் அவர்களை என்றும் உலகம் வாழ வைக்கவில்லை. இயேசுவைச் சிலுவையில் அறைந்த உலகம்—மகமதுவைக் கல்லால் எறிந்த உலகம்—மணிவாசகரை மணலில் புரட்டிய உலகம்—சாக்கிரடிசுக்கு விஷ மிட்டுக் கொன்ற உலகம்—ஜோன் ஆப் ஆர்கைத் தீயிடைப் பொசுக்கிய உலகம்—இந்த இருபதாம் நூற்றாண்டில் அண்ணல் காந்தி அடிகளாரைக் குண்டிட்டுக் கொன்றது. இந்த நிலையில் பண் பாட்டை எங்கே காண்பது? என்றுதான் காண்பது? இதனால்தான் போலும் அறிஞர்கள் பண்பட்ட வாழ்வு வாழவேண்டிய மனிதனுக்குப் பிற உயிர்களை உவமை யாகக் காட்டவேண்டிய தேவையை உணர்ந்து அவ்வாறு செய்கின்றனர்.

உலவும் பண்பாடு

தமிழ் நாட்டிலும் உலகிலும் அன்றுதொட்டு இன்று வரை வாழ்ந்த அன்புடைப் பெருமக்கள் எத்தனை எத்தனையோ வகையான நூல்களை எழுதி யுள்ளனர். அவற்றுளெல்லாம் மனிதனுக்குப் பண் பாட்டையும் அதன் வழி உருவாகும் அறவாழ்வையும் எடுத்துக்காட்ட எத்தனையோ விலங்குகளும் தாவரங் களும் பிறவும் பயன்படுகின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து எழுதின் ஏட்டில் அடங்கா. எனவே ஔவையார், வள்ளுவர் போன்ற அறநெறி இலக் கணம் வகுத்த ஒருசிலர் தம் பாடல்களையும் இலக்கியம் வகுத்த கம்பர் போன்றார் பாடல்களையும் கண்டு அமையலாம் என நினைக்கின்றேன்.

'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல்' பண்புகளுள் உயர்ந்த ஒன்று என்பதும், வருகின்ற

துன்பத்தைத் தாங்கிக்கொள்வதோடு, அத்துன்பம் செய்தாருக்கு ஏதம் வருமேஎன அவருக்காக நொந்து வாடுதலே அந்தப் பண்பு உள்ளத்தின் செயல் என்பதும் அறிவோம். எனினும் இந்த நிலை நாட்டில் பெரும்பாலான மக்களிடம் உண்டா? **'உன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக்காட்டு'** என்ற இயேசு பெருமானின் பொன்மொழிகளைக் கூறிக் கொண்டேதான் மேலை நாடுகளில் ஒரே தலைமுறையில் பல உலகப் போர்களை உருவாக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர். இங்குமட்டும் எதைக் காண்கின்றோம் ? இன்ன செய்யாதாருக்கும் இனியவே செய்பவருக்கும் மற்றவருக்கும் எண்ணிக் கொடுமை இழைக்கும் நாகரிகத்தைத்தானே நாட்டில் காண முடிகின்றது ! அதுவும் அவ்வாறு செய்பவர்களே நாட்டில் பெரிய மனிதர்களாக உலவத் தொடங்கிவிட்டால் நாடு உய்வதுதான் ஏது? இவற்றையெல்லாம் எண்ணிய ஔவையார் ஓரறிவுயிராகிய மரத்தின் முன்னின்று மனிதனுக்கு அறிவுறுத்துகின்றார். உண்மையில் அறிவுடைவர் பிறந்துயரைத் தம் உயிராகக் கொள்ளுபவரன்றே! **'அறிவினுள் எல்லாம் தலை என்ப தீயசெறுவார்க்கும் செய்யா விடல்'** என்ற குறள் உண்மை அறிவைத் திட்டவட்டமாக விளக்குகின்றதன்றே! வெறும் அறிவுடையவராகத் தம்மை மதிக்கும் பலரும் இந்த அடிப்படை அறிவை இழந்துள்ள ஒன்றை நாட்டில் காண முடியுமே. எனவேதான் ஔவையார் மரத்தைக் காட்டி மனிதனுக்கு அறிவுறுத்துகின்றார். மரம் வெட்ட வெட்டத் தழைத்து, அந்த வெட்டினவனுக்கே தண்ணிழல் தந்து ஆதரிக்கவில்லையா? ஆம்! அது போலவே தீமை செய்பவருக்கும் நன்மை செய்பவர் தாம் உண்மை அறிவுடையவர் என்கின்றார் அவர்.

'சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையார்—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்!

என்பது அவர்வாக்கு. மனிதன் நன்றி கெட்டவன் என்று பலரும் பேசுகின்றனர். அவ்வாறு உலகைப் பற்றிப் பேசும்போது தம்மை மறப்பவரும் உண்டு. அதுதான் இன்றைய நாகரிகமாகவும் இருக்கின்றது. நன்றி கெட்ட மனிதனைத் திருத்த ஔவையாருக்கு மற்றொரு மரம்தான் துணை செய்கின்றது. நன்றியைக் கொல்பவர்களுக்கு எந்த வகையாலும் உய்தி கிடையாது என்ற உண்மையை. **'எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மாகற்கு'** என வள்ளுவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இப்படிச் சொல்லியும் இந்த மனிதன் புரிந்துகொள்ளவில்லையே என வருந்திய ஔவையார் இன்னும் எளிமையாக விளக்கிப் பார்க்கலாம் என நினைத்தார். அவருக்குத் துணையாக அவர் பக்கத்திலிருந்த தென்னை மரம் உதவிற்று. உடனே அந்த வெண்பாவைப் பாடினார் அவர்.

'நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்'

என்ற பாடல் அவருடையதன்றோ! ஔவையாருக்கு இந்த உலகின்மேல் கோபம் வருவதுகூட உண்டு போலும். அவர்களுக்கு மரத்தை உவமையாக்கிக் காட்டுவதோடு அமையாது, படிக்காத அறிவற்ற உடம்புகளே மரங்கள் எனவும் வெறுத்துக் கூறுகின்

ரூர். காட்டு மரங்களிலும் நல்ல மரங்கள் இங்நாட்டு மனித மரங்களே என்பது அவர் கருத்து.

'கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்ரூன் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்'

எனப் பாடுகிறது அவர் வாய்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது 'பண்பாடு எங்கே?' என்று தானே கேட்கத் தோன்றுகின்றது. ஔவையார் மட்டுமன்றிச் சிவப்பிரகாசர், குமரகுருபரர் போன்ற அறநெறி பாடிய சமயத் தலைவர்களும் பிறரும் இவ்வாறு ஓரறிவுடைய மரத்தை மட்டுமன்றிப் பிற விலங்குகளை யெல்லாம் எடுத்துக் காட்டி மனிதனைத் திருத்த முயன்றுள்ளனர். ஆனால், அவன் திருந்திலனே! நிற்க, அவர்தம் எழுத்துக்களை யெல்லாம் ஈண்டு எடுத்துக்காட்டின் எல்லையில்லாது பெருகிக்கொண்டே போகும். ஆதலால் இந்த அளவோடு இதை நிறுத்தி வள்ளுவர் இவ்வகையில் காட்டிய காட்சிகளை மட்டும் காண்போம்.

வள்ளுவர் உவமைகள்

வள்ளுவர் தம் திருக்குறளே மக்கள் வாழ்வைச் செம்மையாக்கும் கட்டளைக் கல். அதில் சிறக்க வாழ வேண்டிய மனிதப் பண்புகளையும், மறைய வேண்டிய கொடுமைகளையும் பல்வேறு வகையில் பகுத்துக் காட்டியுள்ளார் அவர். அவ்வாறு காட்டும் முறையிலே அவர் சிறந்த உவமைகளை யெல்லாம் கையாண்டுள்ளார். அறத்தில் மட்டுமன்றிப் பொருளிலும் இன்பத்திலும்கூட அவர் உவமையாகக்கொண்ட பொருள்கள்

எத்தனையோ உள்ளன. அவற்றுலெல்லாம் நாம் அறிவது என்ன? மனிதனைக் காட்டிலும் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தும் விலங்கினமும் பறவைகளும் நல்ல பண்போடு வாழ்கின்றனவே எனத்தான் நினைக்க வேண்டியுள்ளது.

நாம் மேலே ஔவையார் காட்டிய பொறையுடைமையைக் கண்டோமல்லவா! இகழ்வாரை - ஒறுத்தாரை - பொறுக்க மரம் அங்கே பயன்பட்டதன்றே! வள்ளுவர் மண்ணையே உவமையாகக் காட்டுகின்றார்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை (16.1)

என்ற குறளில் தன்னை மண்வெட்டி கொண்டு வெட்டுபவரையும் வேண்டாம் என ஒதுக்காது தாங்கித் தன்னனி செய்யும் நிலம் போன்று, மக்களும் இகழ்வாரைப் பொறுத்தல் தலையாய அறம் என அவர் காட்டியுள்ளார்.

'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றுல் செல்வம் (22.6)
நயன் உடையான் கட் படின்!

என்றவர் இக்குறளின் வழி நல்லவர் செல்வம் நாட்டிற்குப் பயன்படுவதை பழுமரத்தின் துணைகொண்டே விளக்குகின்றார். அப்படியே அன்பற்ற அல்லவர் கைப்பட்ட செல்வம் கொடிய பாலையில் வளர்ந்த வற்றிய மரம்போல் யாருக்கும் பயன்படாது அழியும் என்ற உண்மையும்,

'அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று' (8·8)

என்று நன்கு எடுத்துக் காட்டுகின்றார். இப்படி மரமே

நலம், கேடு இரண்டையும் காட்டப் பயன்படுவதறி கின்றோம்.

'நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று' (101-8)

என்ற குறளும் அந்த அடிப்படையில் அமைந்ததே யாகும்.

இவ்வாறு அறநெறிக்கு மட்டுமன்றி அரசியல் வாழ்விலும் மனிதனுக்கு உணர்வளிப்பன பிற விலங் கும் பறவைகளுமேயாம். தாம் பெற்ற பெருஞ்செல் வத்தை மற்றவர்களுக்கும் பங்கிட்டு வாழ்வதே மனி தப் பண்பாடு என்ற உண்மையைச் சிறப்பாக அரசி யலில் ஏற்றி அதற்கெனச் சிறந்த உவமையையும் கையாண்டு திருவள்ளுவர்,

'காக்கை கரவா கரந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள' (53·7)

என்று காட்டுகின்றார். இந்தக் காக்கை நிகழ்ச்சி நம் மில் பலரும் நாடோறும் காண்கின்ற நிகழ்ச்சியே. எனினும் நம்மில் எத்தனைபேர் இதை எண்ணிப் பார்க்கின்றோம்? 'நாடெங்கும் வாழவேண்டும்!' என்ற நல்லுள்ளம் பெற்ற வள்ளுவர் போன்றோரது உள்ளத்தில் இக்காக்கையும் கூகையும் பல உண் மைகளை உணர்த்துகின்றன. அவர்கள் உணர்ந்த உண்மையை 'தாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என உலகுக்கு வாரிவழங்குகின்றார். இக் காக்கையின் உவமையைச் சமயம் பாடவந்த தாயு மான அடிகள் சிறந்தவகையில் எடுத்துக் காட்டு வதை முன்னரே [1] கண்டுள்ளோம்.

1. பக்கம் 103.

உயிரற்றனவும் உதவுகின்றன

மக்கட் பண்பு உள்ளவர் யார்? என்ற கேள்விக்கு எதிர் மறைமுகத்தான் ஓர் உவமையை எடுத்துக் காட்டுகின்றார் திருவள்ளுவர். மரத்தை உவமையாகக் கொள்ளும் முறையே தனியாகும். ஔவையார் போன்று அவர்களை மரமாகவே கூடக் காட்டவிரும்பவில்லை திருவள்ளுவனார். ஏன்? அதனால் மரத்துக்கு உள்ள பெருமைகூடக் குறைந்து விடும் என்று அவர் கருதுகின்றார். எனவே, 'மரம் போல்வர்' என்று வேறு உவமைகாட்ட முடியாத நிலையிலே ஏதோ ஒத்திட்டுப் பார்க்கின்றார்.

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்' (100. 7)

என்று அவர் மனிதன் எத்தனைதான் கூரிய அறிவுடையவனையினும், பட்டம் பதவி வகைகளில் உயர்ந்தவனையினும், பெருஞ்செல்வனையினும், பிற வகைகளிலெல்லாம் உயர்ந்தவனையினும், 'பண்பாடு' ஒன்று அவனுக்கு இல்லையாயின், அவன் ஓர் அறிவுடைய மரத்தினும் கீழ்ப்பட்டவனாகிவிடுவான். அவன் **'நெட்டுயிர்ப்போ டுற்ற பிணமாக'** உலவுகின்றமையின் அவனை உயிரற்ற கட்டையாகக் கூறவும் முடியவில்லை. ஓரறிவுடைய மரத்துக்கு நேராகச் சொன்னாலும் மரத்தின் சிறப்பு குறைந்துவிடும். எனவேதான் எண்ணி எண்ணி ஏதோ ஒருவகையில் 'மரம் போல்வர்' எனக் கூறி மன நிறைவு கொள்ளுகின்றார் வள்ளுவர். அவர்.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்
தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி' (12.8) என்றும்,

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவற்கு' (27.7) என்றும்,

'கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பலால் கொளல்' (28.9) என்றும்

'அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பி
நூலின்றி கோட்டி கொளல்' (41.1) என்றும்,

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு' (46.1) என்றும்,

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்' (48.5) என்றும்,

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்
[தேர்க்கு
அச்சாணி அன்னர் உடைத்து (67.7) என்றும்

'நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணல் உயிர்மருட்டி யற்று' (202.10) என்றும்,

'அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்' (108.6) என்றும்,

'பாலோடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்' (113.1)

என்றும் அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பொருள்களைப் பற்றியும் விளக்கும் காலத்தில் உயிரற்ற பொருள்களை உவமையாக எடுத்துக் காட்டி மனிதனைப் பண்பாட்டுடன் வாழ வேண்டுகின்ருர். அவன் பண்பாடு பெற்ருல் உயரும் நிலையினையும் அல்லாவிட்டால் அடையும் கேட்டினையும் பல்வேறு உவமைகளால் விளக்கும்வதை யாரே அறியாதார்! இப்படியே உயிருள்ள பொருள்களாகிய மரம்

முதலியவற்றை உவமையாகக் காட்டுவையும் மேலே கண்டோம். இன்னும் நாடாளும் மன்னவன் ஆற்ற வேண்டிய செயல்களையும், பிறமுறைகளையும், மக்கட் சமுதாயம் பெறவேண்டிய அறவாழ்வையும் காதல் நெறியையும் வள்ளுவர் பலப்பல உவமைகள் வழியேதான் விளக்குகின்றார் என்பதை நன்கு அறியின் அவை மனிதனைக் காட்டிலும் எந்தெந்த வகையில் பண்பட்டு உயர்ந்துள்ளன என உணரலாம்.

'புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை'

(6.9) என்றும்,

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' (9.10) என்றும்,

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து' (13.6) என்றும்,

'பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது' (49.1) என்றும்,

'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து' (49.10) என்றும்,

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற' (50.5) என்றும்,

'காலாழ் கனரில் நரியடும் கண்ணஞ்சா
வேலான் முகத்த களிறு' (50.10) என்றும்,

'மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா குடைத்து, (63.4) என்றும்,

'அணங்குகொல் ஆய்மயில் சொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு' (109.1) என்றும்,

'காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கும்
மாணிழை கண்ணெவ்வேம் என்று' (112.4) என்றும்

திருக்குறளில் அறம் பொருள் இன்பம் என்ற மூன்று இயல்களிலும் உயிருள்ள பொருள்களை—மனித அறிவினும் கீழ்ப்பட்ட விலங்கு, பறவை, செடிகொடி முதலியவற்றை—எடுத்துக் காட்டிக் காட்டித் தாம் காட்ட விரும்பிய பண்பாட்டுக் கருத்துக்களை வள்ளுவர் விளக்குவது அறிந்தறிந்து மகிழத்தக்கதன்றே! இங்கே ஒருசில குறட்பாக்களையே நான் எடுத்துக் காட்டினேன். இன்னும் இவைபோன்ற குறட்பாக்கள் பல வள்ளுவர் வாய்மொழியாக உள்ளன. அவற்றையெல்லாம் ஒவ்வொருவரும் பயில வேண்டும் என்பது என் ஆசை. ஆம்! பயின்றால் மட்டும் போதாது. 'அதற்குத் தக நிற்கப்' பழகுதல் வேண்டும். வள்ளுவர் ஆசையும் அதுவே. இவ்வாறு அன்று தொட்டு இன்றுவரை விண்முட்டப் பண்பாடு பற்றிப் பேசும் மனிதனுக்கு உண்மையில் அவனினும் கீழ்ப்பட்ட பிற உயிர்ப் பொருள்களுக்கு உள்ள பண்பாடுகூட இல்லை என்பதைக் காட்டிக் காட்டி அறமுரைத்த அறிஞர் பலர். தமிழ்நாட்டு இலக்கியங்களில் மட்டுமன்றி உலகில் உள்ள எல்லா மொழிகளிலும், அவ்வந்நாட்டில் வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் பண்பாடுபற்றி எழுதிவைத்துச் சென்றுள்ளார்கள். எனினும் உலகில் வாழும் மனிதன் பண்பட்டவனாக வாழ இன்னும் எத்தனை எத்தனை ஆயிரமாண்டுகள் ஆகுமோ? எனவே இந்த நிலையில் 'பண்பாடு எங்கே?' என்று கேட்கத் தோன்றுவது இயல்புதானே.

கதைகளின் வழிக் கருத்துக்கள்

இனி அறநெறிக்கு இலக்கணம் வகுத்த இந்த அறநூல்கள் அல்லாது, காவியம் பாடிய இலக்கியப் புலவர்கள் இந்த உண்மைகளை எடுத்தாண்டதைக் காணின் அவை பலப்பலவாக விரிவடையும். எல்லா இலக்கியங்களும் சில பல உண்மைகளை விளக்கத் தான் உலகில் எழுந்துள்ளன. அத்தகைய உண்மை விளக்கா இலக்கியங்கள் நாட்டில்—உலகில்-காலமென் னும் கடும்புனலை நீந்தி வாழ்தல் அரிதினும் அரிது. எனவே அவ்வாறு வாழும் இலக்கியங்கள் தவறி விழும் மனிதனைத் தட்டி எழுப்பி 'உன்னிலும் தாழ்ந்த விலங்குகளும் பிறவும் எவ்வளவு பண்போடு வாழ் கின்றன; நீமட்டும்—பண்பாட்டோடு வாழவேண்டிய நீமட்டும்—ஏன் இப்படி வீணே அழிந்து போகின்றாய்' என்று தெருட்டி நேரிய முறையில் வாழ அவற்றைக் கண்டாயினும் பழகிக்கொள் எனக் கூறுகின்றன. இவ்வாறு கூறும் முறையில் தமிழில் உள்ள சில இலக்கியங்களில் கற்பனை அதிகமாகவும் வரக் காண்கின்றோம். எனினும் அவையும் அறம் கூறும் செய்திகளாக இருப்பின் கதையைத் தள்ளிக் கருத்தை ஏற்றுக்கொள்வதில் தவறு இல்லையன்றே!

வடமொழியிலிருந்த இராமயணத்தைக் கம்பர் தமிழில் மொழிபெயர்த்தார். இதில் மனிதன் பல விடங்களில் வழுக்கி வீழ்கின்றான். அவ்வப்போது விலங்குகளும் பறவைகளும் வந்து மனிதனுக்கு நீதி புகட்டுகின்றன. ஏன்? மனிதன் மனிதனாக வாழ உதவியனவே அவ்விலங்குகள் தாமே! இந்த நிலையில் வால்மிகியும் கம்பனும் கடவுள் அவதார மெனக் கரு தும் இராமனைச் சாதாரண மனிதனாகக் காட்டி

அவன் சூழலுக்கு ஏற்பத் தன்னிலை தவறி 'பண்பாடு' அற்ற வகையில் வாழ்ந்தாலும், அதைத்தவறு என்று எடுத்துக் காட்ட விலங்கினத்தைத்தான் துணைக்கு அழைக்கின்றனர். வால்மிகி எப்படிக் கூறுகின்ருர் என்று இங்கு நாம் ஆராயவேண்டா. சிறப்பாகக் கம்பன் பல பாத்திரங்களின் வழி நாட்டு மனிதரினும் காட்டில் வாழ்வார் பண்பாட்டில் உயர்ந்தவராகவே உள்ளனர் என்பதையும், மனிதனைக் காட்டிலும் விலங்குகள் பண்பாடு கெடாமல் வாழ்கின்றன என்பதையும் பல விடங்களில் விளக்கிச் செல்லுகின்ருன். அவற்றுள் ஒன்றை மட்டும் இங்கே கண்டு இந்தப் பகுதியை நாம் முடித்துக் கொள்ளலாம்.

இராமனும் வாலியும்

திருமாலுடைய பத்து அவதாரங்களும் உயிர்த் தோற்ற வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்தனவே எனவும், நீரில் தோன்றிய உயிர் அடுத்தடுத்து மெல்ல மெல்ல நிலத்தில் வாழ்ந்து வளர்ந்துள்ள வரலாற்றையும், அதன் இன்றைய நிலையையும் இனிவரும் நிலையையும் விளக்குவனவே அந்த அவதார அமைப்புக்களெனவும் நான் முன்னமே வேருெரு இடத்தில் விளங்கியுள்ளேன்.[1] அந்த வரிசையில் இராமனுடைய அவதாரமே 'நிறை குணத்தினும் நல்லவனுக' மனிதன் வாழ்வைக் காட்டுவதெனக் குறித்துள்ளேன். மனிதனுடைய நிறைநலமே (Perfectness) அந்த அவதாரத்தில் காட்டப்பெறுவது. எனினும் அந்த மனிதனுடைய இனம் முழுதுமே பண்பாட்டின் அடிப்படையில் இன்று வாழவில்லையே! என்றுமே வாழ்ந்த

1 மனிதன் எங்கே செல்கிருன்?—கட்டுரை. 2

தில்லையே! மற்றும் அந்த நிறை நல மனிதனும் சில வேளைகளில் சுயநலம் காரணமாகவும் பிற சூழலினும் நிலைகெட்டு விலங்கினும் கேடாக மாறிவிடுவதை அறிகின்றோம். அப்போது அந்த நிறை மனிதனுடைய 'பண்பாடு எங்கே?' என்று கேட்கின்றோம். ஆம்! இந்த நிலையில் இராமனும் சிலவிடங்களில் தடு மாறுகிறான். 'மெய்த் திருப்பதம் மேவென்ற போதி லும், இத்திருத் துறந்து ஏகென்ற போதிலும்' மாறுத தெளிந்த உளமும் முகமும் உடைய மனிதனுகிய இராமனும் சிற்சில விடங்களில் வழுக்கிவீழ்கின்றான். அந்த வேளைகளில் விலங்குகளே அவனுக்கு அவன் தவறிய பண்பாட்டைச் சுட்டிக் காட்டி 'மனிதன் தன் பண்பாட்டினின்று வழுக்கிவீழ்ந்தால் விலங்கு களின் கீழும் தள்ளப்படுவான்' என்ற உண்மையை விளக்குகின்றன. அப்படிப்பட்ட இடங்கள் இராமாய ணத்திலே சில உள எனினும் நாம் இங்கே ஒன்றைக் காண்போம்; பெருந்துன்பத்தின் காரணத்தாலோ அன்றி வேறு எதனாலோ வழுக்கிவீழ்ந்து, பண்பாட் டினை இழந்த இராமனை வாலியின் முன்னிறுத்தி இவ் வுண்மையைக் கண்டறிவோம்.

இராமன் தன் தலைவியைப் பறிகொடுத்தபின் தன் நிலையை இழந்தான் என்று கம்பனும் வால்மிகி யும் பல விடங்களில் காட்டுகின்றனர். மலைகலங்கி னும் மற்றெது கலங்கினும் கலங்காத பண்பட்ட உள் ளத்துடன் மனிதன் இருக்கவேண்டும் என்பதை யும் அவள் பிரிவு மாற்றுகின்றது. ஆகவே அவன் சிந்தையும் திகைக்கின்றது. எப்படியாவது தன் மனைவியைப் பெறவேண்டும் என அவன் உள்ளம் விரும்புவதில் வியப்பில்லை. அத்துடன் மற்றொரு

சுயநலமும் அவன் உள்ளத்தில் தலை நீட்டுகின்றது. தன் தம்பி, தனக்கே உரித்தானது எனப் பலரும் நினைத்திருக்கும் அயோத்தி அரசினைக் கைப்பற்றிக்கொண்டான் என்ற அவச் சொல் உண்டாயிருப்பதையும் அவன் அறிவான். அதனால் தன் குடிக்கே பழி உண்டாகுமோ எனப் பயந்தான். எனவே, அவனினும் கொடிய நிலையில் உடன்பிறந்த இருதம்பியரைக் காட்டிவிட்டால் அவன் புகழ் ஓங்கும் என்று எண்ணினான். இந்த இரண்டு எண்ணங்களே அவனை ஓரிடத்தில் வாலியைக் வதைக்கவும், மற்றொரு இடத்தில் விடணனுக்கு அரசளிக்கவும் தூண்டின.

கற்பனைக் கதையும் காட்டுகின்றது

நமக்கு இந்த இடத்தில் ஓர் எண்ணம் எழுகின்றது. நாட்டிலே வழங்கும் கதை நினைவுக்கு வருகின்றது. ஒரு மன்னன் தன் குடிகளை மிகவும் வருந்திவந்தானும். அவன் துன்பத்தின் எல்லையைக் குறிக்க ஒரு நிகழ்ச்சியைக் காட்டுவர். அஃதாவது அவன் தன் குடிமக்களுக்கு ஒரு திட்டம் ஏற்படுத்தி இருந்தான். அதன்படி ஒவ்வொரு குடிமகனும் ஒரு குறித்த அளவுக்கு அரிசியைக் கொண்டுவந்து கொடுத்து அதே அளவுள்ள நெல்லைப் பெற்றுச் செல்லவேண்டும். இது முறையா ? பாதி அரிசிதானே அந்த அளவுக்குச் சரியாகும். இதனால் மக்கள் அவனைப் போற்றுவார்களா ? தூற்றத்தானே செய்வார்கள் ! ஆகவே அவன் நாட்டுமக்களின் பழிச்சொல்லுக்கு ஆளானான். எனினும் அவன்து கடைசி காலத்தில் அவன் உள்ளம் அவனை வாட்டியது. எனவே அவன் தன் மகனை அழைத்துத் தனக்கு உண்டான கெட்ட பழியை எப்படியாவது அவன் நீக்கவேண்டும் என்ற

வேண்டுகோளுடன் தன் கடைசி மூச்சை முடித்துக் கொண்டான். பிறகு அவன் மகன் தந்தையின் விருப்பத்தை உடனே நிறைவேற்றிவிட்டான். எப்படி? தான் அவனிலும் கொடியவனுன். என்ன செய்தான்? அவன் ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்தான். ஒவ்வொரு குடிமகனும் ஓரளவு அரிசியைக் கொண்டுவந்து கொடுத்துப் பதிலுக்கு அதே அளவு உமியைப் பெற்றுச் செல்லவேண்டும் என்பதே அவ் வுத்தரவு. இதனுல் என்ன நடந்திருக்கும்? நிச்சயமாக அந் நாட்டுமக்கள் முன்னவனே நல்லவன் என்று புகழ்ந்திருப்பார்க ளன்ருே! இந்த நிலையில்தான் உலகமும், மற்றவர்களோடு சேர்ந்து உடன்பிறந்த வரைக் கொன்று அவர்கள் ஆட்சியையும் உடமைகளையும் கைப்பற்றிக்கொண்ட சுக்ரீவனையும் விடணனையும் நோக்க, பரிவுடன் பாதுகையின் துணையுடன் ஆண்ட பரதனைப் போற்றும் என இராமன் நினைத்து இந்தச் செயல்களை யெல்லாம் மேற்கொண்டான். என்ருலும் இராமனும் கைகேயியும் சுமந்திரனும் வசிட்டரும் அறிவார்கள் அந்நாட்டுரிமை பரதனுக்கு உரிய தென்பதை. அதை முன்னமே அறிந்தமையினுல் தான் இராமன் அமைதியாகக் காடு செல்ல மும்மடங்கு பொலிந்த முகத்துடன் புறப்பட்டான். இந்த உண்மையை எனது மற்ருெரு நூலில் நன்கு விளக்கியுள்ளேன்.[1] ஆயினும் உலகம் உண்மை உணராது உடன்பிறந்த தம்பியைத் தூற்றுவது கண்டு அவனுக்கு உள்ளம் கொதித்தது. ஆகவே இக் கருமத்தை யெல்லாம் செய்து பரதனை உயர்ந்தவனுக உலகத்துக்கு காட்ட விழைந்து செயலாற்றினுன். இதை நாமாகக் கற்பனை செய்து கொள்ளவில்லை.

(1) மணிபல்லவம்—கடைசிக் கட்டுரை.

'எத்தாயர் வயிற்றில் பிறந்தார்களும், ஒத்தால் பரதன் பெரிதுத்தம னுவதுண்டோ?' என்ற வினுவை இராமனே எழுப்பி அதற்கு விடையாகவே இந்தச் செயல்களே மேற்கொண்டான் என்று இலக்கியம் சான்று தருகின்றதே! இனி வாலி வதைப் படலத்துள் சென்று அந்த நிகழ்ச்சியைக் கண்டு அமைவோம்.

திகைத்த இராமன்

சீதையை இழந்து பல விடங்களில் தேடிக் கிட்கிந்தையை இராமன் அடைந்ததும், அங்கே சுக்ரீவனே நட்பு கொண்டதும் முன் நடந்த நிகழ்ச்சிகள். சுக்கிரிவனும் மனைவியை மற்றவரிடம் பறிகொடுத்தவன் என உணர்ந்தான் இராமன். அதனுல் மட்டும் அவனிடம் பரிவு காட்டினுன் என்று கூறமுடியாது. அவன் அண்ணன் வாலி என அறிவான் இராமன். இராமன் வாலியின் வலியை முன்பே அறிந்திருந்த வனுதல் வேண்டும். வாலி நினைத்திருந்தால் அங்கிருந்தபடியே இராவணனை அழைத்துச் சீதையை இராமனிடம் சேர்த்திருப்பான். இந்த ஆற்றலும் இராமனுக்குத் தெரியாதிருக்க நியாயமில்லை. எனினும் அவன் வாலியைக் கொல்ல ஒருப்பட்டமைக்கு ஒரே காரணம் நாம் மேலே கண்ட காரணமாகத்தான் இருக்கவேண்டும். அப்படியே, சுக்கிரீவனுக்கு வாக்கு கொடுத்து, நேரில் செல்லாது மறைந்து—தன் மனிதப் பண்பாட்டை இழந்து கொன்றுவிடுகிருன். தன் மனைவியைத் தூக்கிச் சென்ற இரவணனையே போர்க்களத்தில் ஆயுதமற்ற நிலையில் 'இன்று போய் நாளை வா' என்று கருணை காட்டி அனுப்பிய அதே இராமன் தான் இங்கே வாலியின் முன்னிற்க முடியாத நிலையில் மறைந்து கொல்லுகிருன். ஆம்! இரண்டிடத்தும்

அவன் மனிதப் பண்பு மாறி மனித ஆராய்ச்சி வழி அறிவு துணைசெய்கிறது. இராவணன் மறுநாள் ஒருவேளை சீதையுடன் திரும்பிவந்தாலும் அவனுக்கு தண்டனையாக 'நாட்டிழப்பைச்' செய்துவிடலாம். ஆனால் வாலியின் முன்சென்று என்ன காரணத்தால் அவனுடன் போர் தொடுக்க இயலும்? இவ்வாறெல்லாம் எண்ணித்தான் இராமன் மறைந்து அம்பு தொடுத்துக் கொன்றான். அவன் முன் சென்றால் மாற்றார் பலம் பாதி ஒடுக்கும் என்பதும் பிறவும் பொருந்துவன அன்று. மற்றும் இலக்குவன் 'முன்னே இராமன் தம்பிக்கு வாக்களித்தபின், நேரில் வந்தால் அவனும் பணியின் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாதே' என்று காட்டும் காரணம் ஏதோ வெறும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணமாக அமைந்துள்ளது. பின் வாலி இராமனிடம் காட்டும் அன்பும் பக்தியும் நாம் நோக்குவோமாயின் இராமன் கூறினால் நாட்டைத் தம்பியிடம் விட்டு எங்கோ கண்காணா நாட்டிற்குக்கூடச் சென்று அவன் மறைந்து விடுவான் எனக் கொள்ள இடமுள்ளது. எனவே இலக்குவன் சமாதானம் பொருந்தாது. இராமன் சமாதானம் சொல்ல அறியாது தத்தளிக்கையில் அண்ணனின் தடுமாற்றம் அறிந்து தக்கசமயத்தில் கை கொடுத்த தம்பி என்ற பெருமை இலக்குவனுக்கு உண்டு; அவ்வளவே!

பண்பாடு காட்டிய வாலி

இனி, கம்பன் வாலி வாக்கில் இராமன் செய்த தவறுகளைப் பலவாகக் கண்டிக்கின்றான். மேலே வள்ளுவரும் ஒளவையும் பிறரும் அறவழி மேற்கோளாகக் காட்டிய உண்மையினையே, கம்பன் தன் காவியத்

துக்கு ஏற்ப, பாத்திரவாயிலாகவே காட்டுகிறான். 'குரங்கு பேசுமா?' என்ற ஐயம் நமக்குத் தேவையில்லை. பேசாதவற்றையும், மனிதன் தன் பண்பாடு கெட்டகாலத்தில், பேசவைத்து அறங்காட்டி விளங்குவது புலவர்தம் மரபாகும். இங்கும் அப்படியே வாலி பேசுகிறான். பல பாடல்களில் அவன் உள்ளம் காட்டப்பெறுகின்றது. ஒன்றிரண்டு காண்போம்.

'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ பரதன்முன் தோன்றினையே'

என்று முதல் முதலிலேயே கம்பன் வாலி வாக்கிலே இராமன் விழைந்த விழைவுக்கு விடை தந்து விட்டான். வாலி பரதனைப் புகழ்ந்து விட்டான். 'அந்தச் சிறந்த பாதனுக்கு முன்னே பிறந்து, என் தம்பி சொற் கேட்டு என்னைக் கொன்று பழி தேடிக் கொண்டாயே' என்று வாலி கூறியதாகக் காட்டிய கம்பன் அவன் வாய் வழியே மேலும் பேசுகிறான். இராமன் நிலை கெட்ட காரணத்தை,

'ஆவியை சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை திகைத்தனை போலும் செய்கை'

என்று வாலி விளக்கி விட்டான். மற்றும்,

'அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறு
குரங்கினத்து அரசைக் கொல்ல மனுநெறி கூற்றிண்டோ'

என்று அவனுடைய நெறி தவறுத மனு வழியையும் அறம் திறம்பாத அரசு நிலையையும் காட்டி

ARCHIVES LIBRARY
108310

அத்தகைய மனுவேந்தன் வழி வந்து, உலகம் உள்ளளவும் பழி ஏற்ற இராமன் நிலையை எடுத்துக் காட்டுன்கிருன் வாலி. மற்றும்,

'கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ ; பெற்ற
தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப்
போந்து
நாட்டொரு கருமம் செய்தாய் ; எம்பிக்கு இவ்வரசை
நல்கிக்
காட்டொரு கருமம் செய்தாய் கருமந்தான்
இதன்மே லுண்டோ ?'

என்று இருவகையில் இராமன் நாட்டிலும் காட்டிலும் செய்த செயல்களை எள்ளி நகையாடுகின்ருன் வாலி. அத்துடன்,

'நூல் இயற்கையும் நும்குலத்து உந்தையர்
போர் இயற்கையும் சீலமும் போற்றலை
வாலியைப் படுத்தாயலை—மன்அற
வேலியைப் பிரித்தாய்'

என்று அறத்தையே இராமன் அழித்ததைக் காட்டு கின்ருன். இன்னும் அவன் காட்டும் அறங்கள் பல. இராமன் பண்பு கெட்டவனுகத்தான் அவன்முன் நிற்கவேண்டி வந்தது. தம்பியின் மனைவியைக் கொண்டது தவறு என இராமன் காட்ட நினைத்தான். ஆயினும் வாலி அது அவனுடைய குலத்தின் பண்பாடு என மறுத்து விட்டான். பின் வாலியின் வாதத்தின் உண்மையை உணர்ந்து அவன் மனிதப் பண்பாட்டில் உயர்ந்தவனே என்பதையும், மனித னுகத் தன்னைப்போல் பிறந்தும் பண்பாடு அற்ருல்

விலங்கே என்பதையும் குறிப்பாகக் காட்டுகின்றான் இராமன்.

'தக்க தின்ன தாகாதன இன்னவென்று
ஒக்க உன்னல ராயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே, மனுவின் நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே'

என்று நலம் தீங்கறியா மக்கள் பண்பாடு கெட்டால் விலங்காவதும், விலங்குகளும் பண்பாட்டுடன் வாழ்ந்தால் மக்களாவது மட்டுமன்றி புத்தேளுலகும் ஈண்டே பெறலாவதுமாகிய உண்மையை ஏற்றுக் கொள்ளுகின்றான். எனினும் முடிவில் மறைந்து கொன்றதற்குக் காரணம் காட்டமுடியாத நிலையில் தான் இலக்குவன் துணைக்கு வந்து,

'முன்பு நின்தம்பி வந்து சாண்புக முறையிலோயைத்
தென்புலத் துய்ப்பன் என்று செப்பினன்
செருவில் நீயும்
அன்பினை உயிருக் காக்கி 'அடைக்கல மாக' என்றி
என்பது கருதி அண்ணல மறைந்து நின்று எய்த'

தென்று கூறினான். பிறகும் வாலியைக் கம்பன் பண்பாட்டு உச்சியில் வைத்தே போற்றுகின்றான். இராமன் மறைந்து கொன்றவன் என்பதையும் மறந்து வாலி போற்றுகின்றான். அத்துடன் அவன் சுக்ரீவனையும் அனுமனையும்—ஆம்—தன் உயிருக்கே கேடு சூழ்ந்த அந்த இருவரையும் இராமனிடம் அடைக்கலமாகக் கொடுத்து அவரைக் காக்க வேண்டும் என்று வேண்டிய நிலையில் வாலி மிக உயர்ந்த நிலையில்—புத்தேளுலகத்தினுக்கு மேலாக—என்னென்றும் வாழும் அறத்தின் உச்சமாக—வைக்கப் பெறுகின்றான். அவன் அப்படி என்ன கூறுகின்றான்?

மனிதரினும் மேம்பட்டான்

சுக்கிரிவனைப் பற்றி வாலி கூறுவது மறக்க முடியாதது. பண்புகெட்ட மனிதன் சில வேளைகளில் தன் குறையை மறந்தோ மறைத்தோ மற்றவர் குறைகளையே பாராட்டுவன். அதனால்தான் இயேசு பெருமானும் 'எதிரி கண்ணில் உள்ள துரும்பை எடுக்க முயலுமுன் உன் கண்ணிலிருக்கும் உத்தரத்தை அப்புறத்து எடுத்துப் போடு' என்கிறார். ஆகவே ஒருவேளை பின் அயோத்திக்குத் திரும்பிய பின் இராமன் தம்பியர் சுக்கிரீவனை 'அண்ணனைக் கொன்றவன்' என்று இகழக்கூடும் என வாலியின் உள்ளம் எண்ணிற்று. உடனே இராமனை நோக்கி அவன் விடுத்த வேண்டுகோள் இதுவே.

'இன்னம் ஒன்று இரப்பதுண்டால் எம்பியை
உம்பிமார்கள்
தன்முனைக் கொல்வித்தான் என்றிகழ்வரேல் தடுத்தி
தக்கோய்'

என்று கூறித் தம்பியை அடைக்கலப் பொருளாகக் கொடுத்து நல்லபடியே உயிர் விடுகின்றான். இறுதியாகத் தம்பியையும் அனுமனையும் உடன் துணையாகக் கொண்டு 'வனிதையைப் பெறுக' என வாழ்த்தி,

'அனுமன் எனபவனை ஆழிஐய; நின்செய்ய செங்கைத்
தனுவென நினைதி ; மற்று என்தம்பி நின்தம்பியாக
நினைதி' ஓர்துணைவர் இன்றோர் அனையவர் இலை,
நீ ஈண்டவ்
வனிதையைத் தேடிக் கோடி வானினும் உயர்ந்த
தோளாய்'

என்று கூறி அமைதி பெறுகின்றான் வாலி. இத்தனையும் அறிந்தபின் இராமன் பண்பாட்டில் உயர்ந்த

வனு அன்றி வாலி உயர்ந்தவனு என அறிந்து கொள்வதில் என்ன இடப்பாடு இருக்கப் போகின்றது?

இதே நிலையில்தான் கொடியனுக நாமெல்லாம் நினைக்கும் கும்பகருணன், தன் குடிக்கே இறுதி தேடிய விடணனை, தன் இறுதிக் காலத்தில் அடைக் காலமாக இராமனிடம் தந்து அவனைக் காக்க வேண்டு கின்றன். இதோ அவன் வாக்கு,

> 'நீதியால் வந்த தொரு நெடுந்தரும நெறியல்லால்
> சாதியால் வந்ததொரு நெறியறியான் என்தம்பி
> ஆதியா னை அடைந்தான் அரசர் உருக்
> கொண்டமைந்த
> வேதியாய்! இன்னம் உனக்கு அடைக்கலம் யான்
> வேண்டிநின்றேன்'

என்று உருகிவேண்டுகின்றன். எனவே மனிதனிடத் தில் இருக்கவேண்டிய அந்தப் பண்பாடு—வள்ளுவர் காட்டிய பண்பாடு—விலங்காகிய வாலியிடத்தும் அரக்கனுகிய கும்பகர்னனிடத்தும் இருக்கக் காண் கின்றோம்; ஆனல் மனிதனிடத்து இல்லை. இவற் றைக் கண்டால் 'பண்பாடு எங்கே?' என்றுதானே கேட்கத் தோன்றுகின்றது.

இன்னும் அதே நிலை—எங்கே பண்பாடு?

இந்த வாலி வதை நிகழ்ச்சி ஏதோ இதிகாசக் கதையில் வரும் வெறும் கற்பனை என எண்ண வேண்டா. இன்றும் நம் வாழ்விடையிலும் இருபதாம் நூற்றண்டிற்கு இடையிலும் பலர் வாலி வதைப் பட லத்தை நடத்த முயல்கின்றனர். சிலர் வெற்றி பெறு கின்றனர். சிலர் செத்து மடிகின்றனர். அந்த அடிட் படையில் பல விந்தையான வழக்குகளும் நீதிமன்றங்

களுக்கு வருகின்றனவே. இருபதாம் நூற்றாண்டின் சட்டம் சற்றுச் செம்மையாக இருப்பதாலே இராமாயண காலத்தைப் போன்று நேரிடையாகவோ மறைந்தோ வேண்டாதவர்களைக் கொல்லமுடிவதில்லை. ஆகவே அவர்கள் அமைதியாகத் தொண்டாற்றினாலும், பலவகையில் அவர்களுக்குத் தொல்லை தருகின்றனர். பாவம் பலர் வீணே பழிக்கு ஆளாகி மடிகின்றனர். ஆம்! இராமனுவது தன் செயலில் வெற்றிகண்டு பழி ஏற்றான். இவர்கள் செயலும் இழந்து பழியையும் ஏற்பர். என்றாலும் தங்கள் பெருநிலையால் பழியை மறைத்து உயர்ந்தவரோடு உலவி வந்து செம்மாப்பர். இவர்கள் வாழ்வு புறத்திலே சிறந்ததாகத் தோன்றியும் உள்ளே உலுத்த வாழ்வாகவே முடியும். இவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உதட்டாளர்களே! உலகம் அறியாமல் அத்தகையோரைக் கண்மூடிப் போற்றுகின்றது; பின் உண்மையை உணர்கின்றது. இந்த நிலையில் 'பண்பாடு எங்கே?' என்று கேட்பதல்லது வேறு என்ன செய்யத் தோன்றும்? வள்ளுவர் காட்டிய பண்பாடு வாழ்வது பற்றிய கருத்திலே எழுந்த கேள்வியே இது.

IV. இலக்கியம் வளர்த்த பண்பாடு

எது இலக்கியம்?—வாழும் இலக்கியம்—காப்பியங்கள் ஏன்?—சங்க இலக்கியங்கள்—பாரியின் பண்பாடு — பேகனின் பெருநிலை—அகப்பொருளில் அறம்—அருள் உள்ளம்—அடுக்கலைப் பண்பாடு — சிலம்பில் பண்பாடு—மேகலையில் பண்பாடு—தேவர் காட்டும் பண்பாடு—மொழிபெயர்ப்பு இலக்கியங்களில் — சிற்றிலக்கியங்களில் — வேறுபாடற்ற இலக்கியங்கள்—நேரிய உணர்வு.

எது இலக்கியம் ?

எது இலக்கியம் ? தமிழ் நாட்டில் இதுவரை அந்த வகையில் அதிக ஆராய்ச்சி செய்யாவிட்டாலும் ஒரு சில புலவர்கள் தம் பாடலுள் இலக்கியத்தைப் பற்றிக் குறித்துள்ளார்கள். மேலை நாட்டவர்கள் அவ் விலக்கியங்களை நன்கு ஆராய்ந்து அவைபற்றிப் பல ஆராய்ச்சி நூல்கள் வெளியிட்டுள்ளார்கள். படிப்போர்க்கு இனிமை தரும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தொகுத்துத் தருவது : : என்றும் உலகில் உயர்ந்தவற்றை உணரப் பயன்படுவது

என்றும், மக்கள் விருப்பு வெறுப்பைக் காட்டப் பயன்படுவது என்றும், நிலைத்து வாழக்கூடியது என்றும், மனிதனுக்கு எந்நாளும் உணர்வூட்டுவது என்றும், இன்னும் பலவகையாகவும் இலக்கியத்துக்கு இலக்கணம் கூறியுள்ளார்கள் மேலை நாட்டறிஞர்கள். தமிழ் நாட்டைப் பொருத்தவரையில் இலக்கியம் காலம் கடந்த ஒன்று. தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நாட்டில் எத்தனையோ இலக்கியங்கள் இருந்துள்ளன. இலக்கண அமைப்பே இலக்கியத்திலிருந்து உண்டானதே என்பர் அறிஞர்.

'இலக்கிய மின்றேல் இலக்கண மின்றே
எள்ளின் ருகில் எண்ணெயு மின்றே
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தி னின்று எடுபடும் இலக்கணம்'

என்பது பழஞ் சூத்திரம். சிலர் அகத்திய சூத்திரம் என்பர். எப்படியாயினும் இலக்கியம் மிகப் பழங் காலந் தொட்டே தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகின்றது என்பதை யாவரும் அறிவர். இலக்கியத்துக்கு மேலைநாட்டவர் எத்தனையோ பொருள் சொல்லுகிறார்கள் என்றாலும், நாம் இலக்கியம் என்றால் வாழ்வோடு பிணைந்து அழியாது வளர்ந்து வரும் ஒன்று என்றே அதைக் கூறலாம். மக்கள் வாழ்வோடு பின்னியதாக, கவிஞன் தன் தனி வாழ்வை மறந்து பரந்த உலக வாழ்வை உணர்ந்து—அதிலும் என்றும் மக்களுக்கு இன்பம் தரும் வாழ்வை எண்ணிப் பாடுவது இலக்கியம். இவ் விலக்கியம் காலம் கடந்து வாழ்வது; எழுதியவரை எண்ணற்ற ஆண்டுகள் வாழவைப்பது; உலகம் வாழவும் வழிகாட்டுவது.

வாழும் இலக்கியம்

இத்தகைய இலக்கியங்கள் உலகில் பலமொழி களிலும் உள்ளன. அவ்வந் நாட்டு மொழிகளுள் உள்ள இலக்கியங்கள் அவ்வந் நாட்டு மக்களின் வாழ்க்கை முறை முதலியவற்றை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஒரு சில இலக்கியங்கள் அவை எழுதப்பெற்ற காலத்தில் அந்நாடு இருந்த நிலையை யும் மக்கள் வாழ்வின் அமைதியையும் விளக்கிக் காட்டுகின்றன. ஆங்கில நாடகங்கள் எழுதிய செகப்பிரியர் (Shakespere) தம் நாடகங்கள் பலவற்றுள் அக்கால அரசியல் நெறி, வாழ்க்கை முறை முதலிய வற்றைப் படம்பிடித்துக் காட்டுவது போன்று விளக்கியுள்ளார் என அறிகிறோம். அத்துடன் அவர் நின்றிருப்பாராயின் அவரும் அவர் நாடகங்களும் என்றோ நம்முன் இல்லாது மறைந்திருக்கலாம். ஆனால் அத்துடன் அவர் எக்காலத்தும் வாழும் மக்கள் வாழ்வுக்கு வேண்டிய பல உண்மைகளையும் தம் நாடகங்களுள் காட்டியுள்ளார். எனவேதான் அவை வாழ்கின்றன. இந்த நிலை எல்லா இலக்கியங்களுக்கும் பொருந்தும்.

தமிழ் நாட்டில் எத்தனையோ இலக்கியங்கள் தோன்றி வாழ்ந்து காலத்தை வென்று வாழ்கின்றன. இவற்றுள் அறநூல்கள் பல. அறநூல்கள் இலக்கிய நெறியில் நின்றிலும் அவற்றைச் சிலர் இலக்கியம் என்று ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றை அறநூல்க ளெனவே காட்டுவர். ஒரு சில மேலை நாட்டு அறிஞர் கள் அதன் அடிப்படை உண்மையை ஆராய்ந்து ஒரு அடியாயினும், தொடராயினும், பாட்டாயினும், உரையாயினும், எதுவாயினும் மக்கள் உள்ளத்தைத்

தொடுவதோடு அவர்தம் வாழ்வையும் மையமாகக் கொண்டிருப்பதே இலக்கியம் என்றும் இலக்கியக் கலை என்றும் காட்டுவர். இலக்கியத்திற னுய்கின்ற புலவர்கள் இந்த வகையில் வாழ்வோடு பொருந்திய நெறியினை ஆராய்ந்து காட்டுவர். நாம் இங்கே பரந்த அளவில் இலக்கியத்தை ஆயாது வாழ்வோடு பொருந்திய தனிபாடலும் பெருங்காப்பியங்களும் இலக்கியமே என்ற அடிப்படையில் மேலே செல்வோம்.

சங்கக்காலப் பாடல்கள் அளவில் சிறியன; ஆழ்ந்த பொருளுடையன. பல அவ்வக் கால நிகழ்ச்சியின் அடிப்படையில் அமைவன. ஆனால் அவற்றுள்ளும் உலக சமுதாயம் வாழவேண்டிய பண்பாட்டை உணர்த்துகின்ற நல்ல பாடல்கள் பல உள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் அவை சிறந்து வாழ்வதே அவற்றின் உயிர்த் தன்மையையும் பொருளாழத்தையும் நமக்குக் காட்டும். எனவே அவற்றைச் சிறந்த வாழ்விலக்கியங்களாகக் கொள்ளல் பொருந்துமன்றே! பிற்காலத்தில் தனி மனிதனைப் பாராட்டும் பெருங்காப்பியங்களும் உண்டாயின. அவ்வாறு தனி மனிதனைப் பாடிய பெருங்காப்பியப் புலவர்கள் அவனுடனே அவன் உற்றார் உறவினருடனே அல்லது அவன் காலத்துடனே தாமும் நிற்றிருப்பார்களாயின் அவரும் அவர் காப்பியங்களும் காலத்தை வென்று வாழ மாட்டா. தனி மனிதனுடைய வாழ்வை முன்னிறுத்தி, உலக மக்கள் என்றென்றும் வாழத் தக்க பல பண்பாட்டு உண்மைகளையும் உணர்வுகளையும் நெறிகளையும் கதையோடு பிணைத்துக் காட்டுகின்ற காரணத்தினாலேயே அக் காப்பியங்களும் காலத்தை வென்று வாழ்கின்றன.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், சாத்தனாரின் மணிமேகலை, தேவரின் சிந்தாமணி, கம்பரின் இராமாயணம் போற்றவை இக் காப்பியங்களே. இவை தனித்தனியே தத்தமது தலைவர்களைப் பற்றிய சிறப்புக்களைப் பாராட்டுகின்றன ; எனினும் அவ்வக் கதையுடன் பல நல்ல பண்பாடுகளையும் நீதிகளையும் நமக்கு உணர்த்திக் கொண்டே செல்கின்றன.

காப்பியங்கள் ஏன் ?

ஒரு காலத்தில் கல்வியில் சிறந்து அறிவின் உச்சி எல்லையிலே நின்ற தமிழ் நாடு இடையில் நிலை கெடலாயிற்று. வெறும் உவமையைக் காட்டி உண்மை அறிவையும் அறத்தையும் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் விளக்கியநெறியை உணர்ந்து கொண்ட காலம் ஒன்று இருந்தது. எனினும் மக்கள் பல்வேறு சூழல்களுக்கு இடையில் அந்த உயர் நிலையிலிருந்து வீழலாயினர். காரணங்களை இங்கே நாம் ஆராய வேண்டா. அக்காலத்தில் வெறும் உவமையை விட்டு, வேறொரு மனிதனின் வாழ்வைக் கொண்டு வந்து காட்டவேண்டியிருந்தது. 'அவன் அந்த வகையில் அறங் கெடாது வாழ்ந்தான், எனவே உயர்ந்தான்' என்றும், 'அவன் அறநெறி பிழைத்தான், எனவே தாழ்ந்தான்' என்றும் காட்ட வேண்டிய நிலை உண்டாயிற்று. அக்காலத்திலேதான் தலைவரைக் கொண்ட காப்பிய இலக்கியங்கள் உண்டாயின. எனவே அவற்றுள் அறநெறியும் பண்பாட்டுச் சிறப்பும் வேண்டிய இடங்களில் விளக்கிக் காட்டப் பெற்றன. எனவே தமிழைப் பொருத்த வகையில் சங்ககால இலக்கியங்களாயினும், பிற்காலக் காப்பியங்களாயும், தனி மனிதனை முன்னிறுத்தியும் தனி

மனிதனின் வாழ்வை விளக்கியும் அவை உண்டாயின என்றாலும், உலகச் சமுதாயம் வாழ அவை உணர்த்துகின்ற உண்மைகள் பல. அவற்றுள் ஒரு சிலவற்றைக் காண்பதே இப் பகுதியின் நோக்கமாகும்.

இலக்கியங்கள் என்னும் போது சமய இலக்கியங்கள், இயற்கை பற்றிய இலக்கியங்கள், மொழிபற்றிய இலக்கியங்கள் எனப்பல உள்ளன. அவைபற்றியெல்லாம் ஓரளவு அந்தந்த தலைப்புக்களிலேயே காண்போமாதலின் இங்கே வரையறுத்த வாழ்விலக்கியங்கள் அளவிலே நாம் அமைவோம். அகநானூறும் புறநானூறும் அவை போன்ற பிற சங்க இலக்கியங்களும் சமயச் சார்பில்லாத காப்பிய இலக்கியங்களும் இங்கு நாம் காண வேண்டியவை என்ற அந்த அளவில் அமைவோம். அந்த இலக்கியங்கள் செவியறிவுறூஉவாகவும் பிற வழியாகவும் ஒருவனுக்கு அறங்கூறுவதாக இருக்கலாம்; அந்த ஒருவன் வாழ்வைக் காட்டுவதாகவும் இருக்கலாம். அவற்றுள் மனிதப் பண்பாடே அடங்கியுள்ளது எனக் காணும்போது அவற்றைப் பாடிய புலவரை நாம் பாராட்டாதிருக்க முடியாது.

சங்க இலக்கியங்கள்

சங்க காலத்தில் வாழ்ந்த எத்தனையோ தனிமனிதர்கள் தத்தம் பண்பாட்டை உலகுக்குக் காட்டிச் சென்றுள்ளார்கள், ஆயினும் அவற்றை உலகுக்குக் காட்டி வாழவைத்தவர்கள் இலக்கியம் பாடிய புலவர்களே. புலவர்தம் பாடல்கள் இல்லையானால் அவர்களைப் பற்றி நாம் அறிவ தேது? கடைச் சங்ககால வள்ளல்கள் பண்பாட்டின் உச்சியில் நின்றவர்கள். தம்மை ஒறுத்தும் தரணியை வாழவைத்தவர்கள். இன்பம் எல்

லோருக்கும் பொது என்று உணர்ந்தவர்கள். துன்பத்தை எல்லோரும் பங்கிட்டுக் கொண்டு வாழ்ந்தால் உலகவாழ்வே கசக்காது என்ற உண்மையை உணர்ந்து வாழ்ந்தவர்கள் - உலகுக்கு உணர்த்தியவர்கள். 'அவர்களும் நம்மைப்போல் தனி மனிதர்கள் தாமே, அவர்கள் வாழ்வு எப்படி அமைந்தாலென்ன' என்று நாம் அவர்தம் வாழ்வையும் அவ்வாழ்க்கை முறைகளை விளக்கும் இலக்கியங்களையும் தள்ளிவிட முடியாது. அப்படி யாராவது தள்ளிவிட நினைப்பார்களாயின் அவர்கள் பண்பாட்டை உணராதவர்கள்—வாழத் தெரியாதவர்கள்—என்றே சொல்லிவிடலாம். பாரியும் காரியும், பேகனும் அதிகனும், குமணனும் ஓரியும் வாழ்ந்ததை விளக்கும் வாழ்விலக்கியத்தைவிட வேறு எதைப் பண்பாட்டுக்கு இலக்காக எடுத்துக் காட்டுவது? அப்படியே பிற்காலத்தில் வரும் பல காப்பியங்களின் தலைவர்கள் வாழ்ந்து காட்டிய வளமான நெறிகள் பல. அவர்கள் வாழ்க்கை அத்தனையும் நூற்றுக்கு நூறு சிறந்தது என்று நான் வாதிடவரவில்லை; வாதிடவும் முடியாது. மனிதன் சூழலுக்கு ஏற்ப நன்மை தீமைகளின் வழிச் செல்லுகின்றவனே; தவறும் இடங்களும் ஒவ்வொருவனுக்கும் உண்டு. ஆனால் அந்த தவறுகளை மட்டும் கவனிக்காது அத்தனி மனிதன் வாழ்வில் மேற்கொண்ட பண்பாட்டை ஆராய்தலே மனிதனுக்கு வேண்டுவது. பேகனுடைய வாழ்க்கையிலே இருந்த நன்மை, தீமை இரண்டையும் பரணர் போன்ற புலவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். கோவலனிடமிருந்த நலக்கேடுகள் இரண்டையும் இளங்கோவடிகள் விளக்கிக் காட்டியுள்ளார். இராமனிடத்தில் இருந்த பெருமை, சிறுமை இரண்டையுமே கம்பர் காட்டத் தவறவில்லை. இப்படியே பிற புலவர்

களும். ஆனல் அவர்தம் இலக்கியங்களில் ஆழ்கின்ற நாம் வேண்டாத தீமையை விலக்கி. மக்கள் வாழ்வுக்குத் தேவையான பண்பாடுற்ற நல்லவற்றையே கொள்ளவேண்டும். நான் மேலே பலமுறை கண்டது போன்று 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்' என்பதே. இந்த உண்மையை நமக்கு உணர்த்தியதும் கலித்தொகை என்னும் இலக்கியம்தான். எனவே இலக்கியங் காட்டும் இரு கோணங்களில் தவறிழைத்தால் தாழ்வார் என்ற உண்மையைக் காண்பதிலும் பண்பாட்டுடன் வாழ்வார் உயர்வார் என்ற உண்மையை மட்டும் நாம் கண்டு செல்வோம்.

பாரியின் பண்பாடு

பாரியைப் பற்றி நாமறிவோம்; நாடு நன்கு அறியும். அவன் என்ன செய்தான்? அவன் முன்னூறு ஊர்களைக்கொண்ட மிகச்சிறிய நாட்டுக் குறுநில மன்னன். ஆயினும் பாரெலாம் சிறக்குமாறு கொடிகட்டி முடிசூடி ஆண்ட மூவேந்தர்களுக்கு இருந்த—இருக்கின்ற — புகழைக் காட்டிலும் இவனுக்கு அதிகமான புகழும் சிறப்பும் அமைவானேன்? ஆம்! அவன் தன்னை மறந்தான். 'கொடை மடம்' பட்டான் என்பார் புலவர். மடம்படுதல் இகழத் தக்கது என்பர். எனினும் நல்லவற்றில் தம்மை இழக்கும் மடம் படுதல் மிகவும் உயர்ந்தது. முல்லைக் கொடி வாய்திறந்து பாடவில்லை; 'வாட்டம் பெறுகிறேன்' என்று கூறவும் இல்லை; அது தரையிலே படர்ந்திருந்தது. ஆனல் அது படர்வதற்கு வேண்டிய பற்றுக் கோடு இல்லை என்பதை எங்கிருந்தோ தன் தேரில் வந்திருந்த பாரிக்கு அவன் உள்ளம் உணர்த்திற்று. அவன் மன்னன்; மாளிகை சென்று பணியாளர்களை அனுப்பி அக்கொடிக்குக்

கொழு கொம்பை ஊன்றப் பணித்திருக்கலாம். அதைச் செய்யவில்லை அவன். தன்னை மறந்தான்; தான் சென்று ஆள் அனுப்பி அவன் செயலாற்றும் அது வரையிலும் அவ்வாறு பற்றுக் கோடற்றுக் கொடி வாடுவதா என்ற அவன் மடம்பட்ட உள்ளம் அவனுக்கு உணர்த்திற்று. எனவேதான் தனது தேரிலிருந்து இறங்கினான்; குதிரைகளை அவிழ்த்துவிட்டான்; கொடியின் அருகில் அத்தேரை நிறுத்தி அதன்மேல் அதைப் படர வைத்தான். பார்ப்பவருக்கு இச்செயல் விநோதமாக இல்லையா? — ஏன்? பயித்தியக்காரத் தனமாகவும்கூட இருக்கும். அக் காலத்திலேயும்கூட அவன் நாட்டு மக்களும் அவன் பணியாளர்களும் அந்தச் செயலை வேடிக்கைக் கண் கொண்டு நோக்கியிருப்பர். பண்பாட்டில் தன்னை மறந்த பாரிக்கு அவற்றையெல்லாம் காணவும், கண்டு நினைக்கவும் நேரம் ஏது? அவன் அவ்வாறு செய்தலையே கடமை என எண்ணினான். தன் கடமையை நிறைவேற்றி விட்ட உள்ள நிறைவோடு தன் மாளிகைக்குச் சென்றிருப்பான். அதனாலேயே அவனைக் கண்ட மற்றவர் அவன் கொடைமடம் பட்டான் என்று கூறினர். கபிலர் வாய்வழிப் புகழுக்கு ஏங்கிய மன்னர் பலப்பலர் அக் காலத்தில் நாட்டில் இருக்க, அவர் பாரியை விடாது பற்றி அவனைப் பலவாறு பாராட்டிய பெருமை இக் கொடை மடத்தா லன்றே அமைந்தது. அவன் புகழ் மூவேந்தர் புகழினும் மேலாக ஒங்கியதற்குக் கொடை மடமன்றே காரணம். இந்தத் தன்னை மறந்து, மற்றவர் தன்னைப் பற்றிக் கூறும் ஒன்றையும் நினையாது உலகுக்குத் தன்னுடையதை வரையாது வாரி வழங்கும் பண்பாட்டைக் கபிலர் தம் இலக்கியத்தின் மூலம் என்றென்றும் இதே உலகுக்குக் காட்டிக் கொண்டு தாமும்

பாரியும், பண்பாடும் வாழ வழி செய்த சிறப்பை எண்ணுத தமிழன் உண்டோ !

பேகனின் பெருநிலை

பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தவன். அவன் தனி வாழ்க்கையில் சில வேறுபாடுகள் இருந்தன ; இல்லை என்று சொல்லமுடியாது. என்றாலும் அவன் கொடைமடம் அவனைச் 'சிாஞ்சீவி'யாக்கியது. வாழ்வில் அச்சிறு தவறும் இல்லையாயின் அவன் இன்னும் நன்றுகச் சிறப்புற்று விளங்கியிருப்பான் என்பதில் ஐயமில்லை. அவன் மாரிக் காலத்தில் மயிலுக்குப் போர்வை நல்கினான். நல்ல மேகங்கள் சூழ்ந்த இனிய காலம் ; சிறிது குளிரும் இருந்திருக்கும். மயிலின் தன்மை பேகனுக்கு நன்கு தெரியும். மேகம் வரக் கண்டு உளங்களித்து விரிக்கும் தோகை விரித்து ஆடுவது மயில் என்பது அவன் அறிந்த ஒன்றுதான். இருந்தாலும் அவன் கொடை மடம் பட்ட காரணத்தால் அனைத்தையும் மறந்தான். குளிரால்தான் மயில் நடுங்கி வாடுகிறது என்று உணர்த்திற்று அவன் உள்ளம். எனவே தான் போர்த்தியிருத்த உயர்ந்த விலையுள்ள போர்வையை அப்படியே எடுத்து மயிலுக்குப் போர்த்தித் தன் வழியே சென்றான். பாரியை வியப்புக் கண்ணோடு நோக்கிய அச்சமூகம் இவனையும் அந்த வியப்போடு நோக்கி இருக்கும் என்பதில் ஐயமில்லை. என்றாலும் பேகன் அதுபற்றி எண்ணவில்லை ; பிற உயிர்களின் வருத்தம் நீக்குவதே தன் கடமை என்று உணர்ந்தான். அந்த உணர்வுப் பண்பாடே அவனை வாழவைத்தது. உலகம் எக்காலத்தும் அவ்விருவரைக் காட்டி அறநெறியை வாழவைக்க நினைக்கின்றது.

'முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத்து இசைவிளங்க—தொல்லை
கரவாமல் ஈந்தார் அஃதேபோல் நீயும்
இரவாமல் ஈகை கடன்' (பு. வெ. மாலை 193)

என்று அவ்விருவரையும் காட்டியே உலகம் கொடைத் தொழிலை நன்கு எடுத்து விளக்குகிறது. இவ்வாறு கொடை மடம் பட்டுக் கொடுப்பதால் வரும் இன்பதை உணர்பவர் மிகச் சிலரே. திருவள்ளுவனார் 'ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்?' என்று மக்கட் சமுதாயத்தை நோக்கிக் கேட்டுகெட்டுச் சலிப்படைத்து விட்டார். இந்த இன்பத்தை உணர்ந்தவர் மிகச் சிலரே. அவர் தம் உயிரையும் துரும்பாக எண்ணி மற்றவருக்கு உதவும் கடப்பாடே சிறந்தது என்று உதவுவர். குமணன் அவ்வாறு தன் உயிரையும் மதியாது புலவரை வாழவைப்பதற்காக, தன் தலையைக் கொய்யும்படி தன் வாளையே தந்ததை மேலே கண்டோமல்லவா !

அகப் பொருளில் அறம்

தனிப்பட்ட வள்ளல்கள் நிலை இப்படி என்பதோடு அமையாது ஊர்பேரறியாத தலைவர்களை முன்னிறுத்தி அறத்தையும் பண்பாட்டையும் வாழவைத்த புலவர் தம் வாய் மொழிகளுள் சிலவற்றைக் காணல் நலம் பயக்கும் என நம்புகின்றேன். அறங் கூறுவது அமைதியின் படி புறத்தின் பங்காகக் கொள்ளினும் அகத்தின் நெறி கூற வந்த விடத்திலும் அறநெறி பற்றிய பண்பாட்டைப் பல புலவர்கள் விளக்குகிறார்கள். பண்பாட்டின் சிறப்பு, புறத்தைக் காட்டிலும் அகத்திலேயே நன்கு சிறக்கவேண்டும். காதன் மனையாளும் காதலனும் மாறின்றிக் கலந்து வாழும்

இன்ப அகவாழ்வு இன்னேர்க்கு இன்னவகையில் இருந்தது என எடுத்துக்காட்ட முடியாதது. எனினும் அந்த உணர்ச்சி வாழ்வாகிய அகத்திலும் மனிதப் பண்பாடு ஒளிர் விடுகின்றது. தலைவன், தலைவி, தோழி ஆகிய அகப்பொருட் பாத்திரங்கள் வாயிலாகச் சங்ககாலப் புலவர்கள் எத்தனையோ பண்பட்ட உள்ளங்களைக் காட்டுகிறார்கள். அகவாழ்வு பொய்யும் வழுவும் புகாத வாழ்வாக இருக்கவேண்டிய ஒன்று என அவர்கள் உணர்த்துகிறார்கள். உள்ளத்தையும் உற்ற அனைத்தையும் முன்பின் அறியாத தலைவனுக்கு உடைமையாக்கிய தலைவி–நாண மேலீட்டால் அவனது ஊரையும் பேரையும்கூடக் கேட்டறிந்து கொள்ளாத தலைவி—அவன் பிரிந்து, வரும் காலம் சற்று நீட்டிக்க, தன் நெஞ்சோடு பேசும் சொற்களும் அவற்றின் முடிவிலே தலைவன் வரும் காட்சியும் உள்ளப் பண்பாட்டை வாழவைப்பனவாகும். **'தன் நெஞ்சறிவது பொய்யற்க'** என்று வள்ளுவனார் காட்டிய அறப் பண்பாட்டின் வழியே தலைவனும் தலைவியும் ஒழுகிய காரணமே அகப் பொருளை வாழவைத்தது.

'யாரும் இல்லை; தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?
திணைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே' (குறுந் 25)

என்ற குறுந்தொகைப் பாடல் உள்ளம் ஒன்றிய அவர்தம் உணர்வையும் அவ்வுணர்வே சாட்சியாகத் தலைவன் தலைவியை வந்து மணந்து செல்லும் பண்பாட்டையும் விளக்குகின்றதே!

இந்த உளப் பண்பாட்டுக்கு மனிதன் ஏற்றம் அளிக்காத காலமும் இருந்திருக்கின்றது. இந்த இருபதாம் நூற்றாண்டின் இடையில் இந்த உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது தான் நாகரிகம் என்று அறம் கூறக்கூடப் பல நல்லவர் இருப்பதை அறிவோம். ஆனால் அகப் பொருள் செழிக்க வளர்ந்த அந்தப் பழங்காலத்தில் இந்த 'நாகரிகம்' அவ்வளவாக வில்லை. எனினும் தொல்காப்பியர் காலத்திலேயே இந்த உளப் பண்பாட்டுக்கு இழுக்கு உண்டாகி இருக்கவேண்டும். அதனாலேதான் அவர்,

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் காரணம் என்ப' (பொரு.144)

என்று சூத்திரம் வகுக்க வேண்டிய தேவை உண்டாயிற்று. நாட்டில் சட்டங்களும் வரையறைகளும் எல்லையில்லாது வளர்க்கின்றன என்றால் அதற்குக் காரணம் மக்கள் வாழ்வில் ஒழுக்கமின்மை வளர்வது தான். எனவே கரணத்தொடு மணங் கொள்ளும் சடங்கு, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னரே உண்டாகியிருக்கவேண்டும் என்கின்றார் அவர். அண்மையில் வாழ்ந்த சமயநெறி போற்றிய இராமலிங்க அடிகளார் 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்றே ஆண்டவன் முன்னின்று தன் வேண்டுகோளை விடுக்கின்றார்.

அருள் உள்ளம்

சங்ககாலப் புலவர் ஒருவர் இந்த அகப் பொருள் அடிப்படையிலே சிறந்த உளப் பண்பாட்டை உணர்த்

துகிறார். முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வை யும் கொடுத்த மன்னரைப் போன்று இந்தத் தலைவ னுடைய பெயர் நமக்குத் தெரியாது. தெரியவும் வேண்டுவதில்லை. அவன் மனிதன்—மனிதனுக வாழ்ந் தான். தன் மனைவி, அவளொடு பெறும் இன்பம், அவள் வருத்தம் போகும் ஆர்வம் இத்தனைக்கும் இடையிலும், தன்னுயிரைப்போல் மன்னுயிரை ஒம்பும் பண்பாட்டை வாழவைத்த மனிதன் அவன். அவன் பண்பாடு உலகில் என்றென்றும் வாழவேண்டும் என்பதே புலவர் ஆசை.

குறித்த நாளிலே திரும்பிவருவதாகத் தலைவியி யிடம் வாக்களித்துவிட்டு வெளியே புறப்பட்ட தலைவன், தன்பணி முடித்துவிட்டான். அதற்குள் அவன் குறித்த நாளும் வந்துவிட்டது. 'காரோ வந் தது; காதலர் ஏறிய தேரோ காணேன்' என்று தலைவி வாடவும், அவள் வாட்டத்தைப் போக்கவே தோழி 'வந்த மேகம் தூதாக அமைந்தது' என்று பொய்க் காரணம் கூறுவாள். அங்கே தலைவனே ஒரு பக் கம் தலைவியின் வாட்டத்தை நோக்கும் எண்ணமும் மற்றொரு பக்கம் தான் குறித்த நாளில் தலைவியைக் காணவிட்டால் சொல்தவறுமே என்ற உணர்வும் உந்த, பாகனை வேகமாகத் தேரை ஓட்டச் சொல்லுகின் றான். தேர் காட்டுவழியே விரைந்து செல்லுகின் றது. கார் காலமல்லவா! முல்லை மலர்கள் காடுமுழு வதும் நன்கு மலர்ந்து மணத்தோடு ஒளியையும் வீசிக் கொண்டிருக்கின்றன. மலர்களென்றால் வண்டுகள் இல்லாமல் இருக்குமா? பல வண்டுகள் கூட்டங்கூட்ட மாக—ஆணும் பெண்ணும் இணைந்து இணைந்து— அம்மலர்களில் உள்ள தேனை உண்டு உண்டு மகிழ்கின்

றன. அவற்றை நோக்குகின்றான் தலைவன். அதே வேளையில் தன் தேரின் வேகத்தால் அத்தேரில் அழகுற அமைந்த மணிகள் ஒலி யெழுப்புகின்றன. அவ் வொலியினைக் கேட்ட பறவைகளாகிய அந்த வண்டுகள் அஞ்சிப் பல திசைகளில் பறக்கின்றன. கண்ட தலைவன் பண்பாட்டின் தலை நிற்கிறான். 'வண்டுகள் வாடுவதா?' என்ற உணர்வு உள்ளத்தில் அரும்புகின்றது. தன்னை மறக்கிறான்; தலைவியை மறக்கிறான்; அவள் வாட்டம் மறக்கிறான்; தன் வாழ்வை மறக்கிறான்; தலைவியோடு மகிழும் இன்பத்தை மறக்கிறான். வண்டுகளின் வாட்டம் தீர்ப்பதே முதற்பணி என்று அவன் உள்ளம் உணர்த்துகிறது. எனவே தன் பாகனை அழைக்கிறான்; தேரை நிறுத்தச் சொல்லுகிறான்; தேர் நிற்கிறது. தேரிலே உள்ள மணிகளின் நடுநாவினையெல்லாம் ஈர்த்து அசையாதபடி தேர்த் தட்டிலே பிணித்துக் கட்டுகிறான். பிறகு தேரைச் செலுத்த மணி ஓசை எழுமா? வண்டுகள் மகிழ்ச்சியும் குறையவில்லை. அந்த இன்பத்தைக் கண்டு தான் மகிழ்ந்து கொண்டே தலைவியை நோக்கிச் செல்லுகிறான் தலைவன். இச்சிறப்புக்களையெல்லாம் தலைவிக்குத் தோழி காட்டுவதன் மூலம் அந்த அகநானூற்றுப் புலவர் உலக மக்கள் என்றென்றும் உணரும் வகையில் ஏட்டில் வடித்துத் தந்துவிட்டார். இதோ அவர் வாக்கு.

'பூத்த பொங்கர்த் துணையோடு வதித்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்
உதுக்காண் தோன்றும் குறும்பொறை நாடன் (அகம்.4)

என்பது அகம். 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்ற இலக்கணத்திற்கு இதனினும்

சிறந்த இலக்கியம் வேறு என்ன காட்ட முடியும்? ஆம்! இது எல்லா உயிரினத்தும் பரவிய உயர்ந்த பண்பாடே!

அடுக்களைப் பண்பாடு

இவ்வாறு உயர்ந்த வாழ்வின் அடிப்படையைக் காட்டும் சிறந்த பண்பாட்டினை மட்டுமன்றி, அன்றுட வாழ்வில் ஆடவரும் பெண்டிரும் ஆற்ற வேண்டிய வாழ்க்கை முறைபற்றியும் வாழ்வொடு பிணைந்த பல பண்பாடுகளையும் சங்கப் புலவர் காட்டுகின்றனர். 'சாதம் படைக்கவும் செய்திடுவோம், தெய்வ சாதிபடைக்கவும் செய்திடுவோம்' என்று உரிமைநாளின் வாழ்வை வரையறுக்கும் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் கூறியுள்ள அந்த நடைமுறை வாழ்க்கையினையே அழகிய பாட்டாகக் குறுந்தொகைப் புலவர் நன்கு பாடியுள்ளார். 'உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே' என்ற அக்காதல் வாழ்வை வளமாக்குவன பல. அவற்றுள் ஒன்று இன்னடிசில். அந்த உணவினை இனிமையாகச் செய்து அதன் இனிமையை ஆரத் துய்க்கும் கணவன் அதன் அருமைப்பாட்டைப் போற்றும் நிலையினை எண்ணும் கற்புடைப் பெண்டிர் வாழ்வைக் காட்டும் புலவர் வாக்கு சிறந்ததாகும்.

'குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் தழந்தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்றால் ஒண்ணுதல் முகனே
(குறு. 167)

இவ்வாறு அடுப்பறை வாழ்வுதொட்டு அகன்ற நாட்டு வாழ்வு வரையில் உள்ள பண்பாடுகளை

நுணுகி நுணுகி ஆராய்ந்து சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. நாடாளும் பண்பாடும் போர் நிலை போன்ற பண்பாடுகளும் விளங்க உரைக்கும் புறப் பாடல்கள் எண்ணற்றன. அவற்றையெல்லாம் விரிப்பிற் பெருகும் என்று அஞ்சி இந்த அளவோடு அமைகின்றேன்.

சிலம்பில் பண்பாடு

இனி, சங்க இலங்கங்களை விடுத்துப் பெருங்காப் பியங்களாகிய இலக்கியங்கள் காட்டும் வாழ்வுப் பண்பாடுகளுள் ஒரு சிலவற்றைக் காணலாம். காப் பிய இலக்கியங்களுள் சிறந்ததாகப் போற்றப்படு வது சிலப்பதிகாரம். **'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'** என்று பாரதியார் ஏற்றங்கொடுத்துப் பாடினர். அக் காவியத்துக்கும் நமக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. கதையைப் பற்றிய அளவில் வெறும் கதையாகமட்டும் அக்காவியம் இருந்திருக்குமானால், இன்று தோன்றி மறையும் எத்தனையோ நாவல்களைப் போல—சிறுகதை களைப்போல—அதுவும் செத்திருக்கும். சுமார் இரண் டாயிரமாண்டுகள் அது இறவாது வாழ்கின்றது என்றால் அதற்கு வெறும் கதைமட்டும் காரணமன்று; அது காட்டும் பண்பாடே அதன் வாழ்வுக்கு அடிப் படை. எத்தனையோ கோவலரும் கண்ணகியும் மாத வியும் இன்றும் கண்முன்னே வாழலாம். அது போலவே அவர்களும் அன்று வாழ்ந்து கழிந்திருப் பார்கள். இளங்கோவடிகள் அவர்கள் கதையின் அடிப்படையிலேயே உலகம் என்றென்றும் கடை பிடிக்க வேண்டிய நல்ல பண்புகளையும் விளக்குகின் றார். கோவலனை வெறும் காமுகனுகவே காண்கின்

ரேம் நாம். கொண்ட மனைவியாகிய கற்பிற் சிறந்த கண்ணகியை விடுத்து, மாதவியின் மையலிலே மயங்கி உள்ள பொருள் அத்தனையும் இழந்த அவனை நம் உள்ளம் எப்படிச் சிறந்தவனென்று மதிக்கும்? அவன் காமந்தகாரனுகக் கருதப்பட வேண்டியவன். அவன் எப்படிப் பாட்டுடைத் தலைவனுவான்? என் ருலும் நாம் மேலே பேகனிடத்தில் கண்டதுபோன்ற சில உயிர்ப்பண்புகள் இவனிடத்திலும் இருப்பதை உணரும்போதுதான் சிறந்த புலவராகிய இளங் கோவடிகள் இவனைத் தலைவனுகக் கொண்டு ஒரு வாழ்விலக்கியத்தையே எழுதிவிட்டார் என்பதை உணரமுடிகின்றது. கோவலன் வாழ்வு முடியும் கட் டத்துக்குமுன் அவனை மாடலன் முன்னிறுத்தி, மாட லன் வாயிலாக அவன் பண்பாட்டை நமக்குக் காட்டுகின்ரூர் ஆசிரியர். செல்லாச் செல்வ, கருணை மறவ என்ற தொடர்களுடன் அவன் கொண்ட— காட்டிய—வாழ்ந்த—தன்னையும் தன் உடமையையும் தியாகம் செய்யும் அளவுக்கு வாழ்ந்த—கழிந்த கால வாழ்வையெல்லாம் காட்டுகின்ரூர். அப்போது உண் மையில் நமக்குக் கோவலன்மேல் கொண்டிருந்த வெறுப்பெல்லாம் இரக்கமாக மாறுகின்றது. இத் தகைய பண்பாட்டாளனை பொற்கொல்லனுல் கொல்லப் படுகிரூன் என்று எண்ண உள்ளம் கசிகின் றது. இப்படியே கண்ணகி, மாதவி போன்ற மகளிரிடத்தும் சிறந்த பண்பாடுகளைக் காண்கின் ரேம். கண்ணகி கடவுளர் போற்றும் தெய்வமானுள். கணியைர் குலத்துப் பிறந்த மாதவி தன் பிழைப் பறியாது தவித்துக் கோவலன் நீங்கியபின் வாழ் வையே வெறுத்து, தன் தாய் கூறியபோதும் தன் மகளையும் துறவுக் கோலத்தில் கண்டு மகிழ்ந்த

வாழ்க்கை 'சேற்றிலும் செந்தாமரை மூளைக்கும்' என்ற உண்மையைக் காட்டவில்லையா! பண்பாடு குலத்தால் அமைவதன்று உளத்தால் உருவாவது என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும். சில பண்பியல்கள் சுற்றுச் சார்பினாலும் வழி வழித் தோற்றத்தாலும் அமைவது மேல்வரிச் சட்டமாக இருப்பினும் நல்ல பண்பாடுகளின் தோற்ற வளர்ச்சிக்கு உள்ளமே அடிப்படையன்றோ!

சிலப்பதிகாரத்தில் மற்றொரு மேலான பண்பாட்டை 'மாதரி' என்னும் இடைக்குல மாதரிடம் காண்கின்றோம். 'இடைக்குல மாதர்க்கு அடைக்கலம் தந்தேன்' என்று கவுந்தி அடிகள் அடைக்கலமாகக் கொடுத்த பொருளை முற்றும் காப்பது தனது கடமை என்பதை அவள் உணர்ந்ததும், அந்நெறியினின்று அவள் தவறியது உணர்ந்து தான் உயிர்விட்டதுமாகிய பண்பாடு உலகில் என்றென்றும் வாழ்வார் அடைக்கலப் பொருளை எவ்வாறு காக்கக் கடமைப்பட்டவர் என்ற உண்மையை உணர்த்துகின்றதன்றோ! அவ்வாறே, தன் தவறு உணர்ந்த பாண்டிய மன்னன்,

'யானே அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்' எனக்

கூறி அரசுகட்டிலில் வீழ்ந்து இறந்ததும், 'கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்' லெனப் பாண்டிமாதேவி மாய்ந்ததும் அரசருக்கும் பத்தினிப் பெண்டிருக்கும் அமையவேண்டிய சிறந்த பண்பாட்டின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன அல்லவோ! மூன்று உண்மைகளின் அடிப்படையிலேயே தம் காப்பியத்தைத் தொடங்குவதாகக் காட்டிய அடிகள்

தம் நூல் முழுவதிலும் என்றென்றும் மனிதர் குலம் வாழத் தக்க நல்ல பண்பாட்டு உண்மைகள்—மூன்று—முன்னூறு—மூவாயிராமா?—பலவற்றைத் தொகுத்தே தம் நூலை இயற்றியுள்ளார். காணக் கண் வேண்டும்.

மேகலையில் பண்பாடு

சிலப்பதிகாரத்தோடு ஒட்டி எழுந்த இணைக் காப்பியமாகிய மணிமேகலையும் வாழ்க்கைப் பண்பாட்டை விளக்கிக் காட்டத் தவறவில்லை.

நீர் இன் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'
(புறம் 18)

என்ற புறப்பாட்டின் அடிகளை ஒன்றி எழுந்து உயர்ந்த சமூகப் பண்பாட்டின் அடிப்படையில் முளைத்ததே இந்தக் காப்பிய இலக்கியம் இலக்கிய அமைப்பினும் செறிவினும் உயர்வினும் இளங்கோவடிகளுடைய சிலம்பொடு ஒத்து எண்ணமுடியாத நிலையில் இது இருந்தபோதிலும், இதுவும் இருபது நூற்றாண்டுகள் உயிர் வாழ்வதற்குக் காரணம் அதுகாட்டும் பண்பாட்டு நெறியேயாகும்.

'பாரக மடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து'

என்று சாத்தனார் உணவை உயிரின் மருந்தாகக் காட்டி ஆதிரையை நமக்கு அறிமுகம் செய்து வைக்கு நிலையினை எண்ணும்போது அந்த அன்னையாரின் கற்புநெறியும், அவர்கள் உயிர் ஓம்பும் பண்பும், அந்த நெறி வழியே மணிமேகலை தன் அமுதசுரபியைக் கைக்கொண்டு உலகை உண்பித்த உயர்ந்த பண்பாடும் ஒன்றன்பின் ஒன்றாக நம் உளத்திரை

யில் நிழலாடி என்றென்றும் நலத்தை வாழவைக் கும் நல்லியப்பிற்கு நம்மை அழைத்துச் செல்வதை உணருகின்றோமன்றோ ! மணிமேகலையில் வரும் ஆபுத் திரன் ' இந்திர போக ' வாழ்வையும் விரும்பாது வருந் திவந்தோர்க்கு உணவளிக்கும் வாழ்வே பண்பட்ட வாழ்வு என்று வாழ்ந்ததை நினைக்கும்போது நாம் பெற்ற செல்வம் நாட்டுக்கே என்ற உணர்வும், செல்வ வாழ்வினும் பிறர்க்கு உதவும் செம்மை வாழ்வே சிறந்தது என்ற நெறியும் நமக்குத் தோன்றுவது இயல்புதானே. மனத்தாலும், வாக்காலும், உடலாலும் வரும் குற்றங்களைச் சாத்தனர் எடுத்துக் காட்டி அவை உயிரினத்தை வீழவைக்க முயலுவதையும், அதைப் போக்குவதே ஆறறிவு படைத்த மனித சமு தாயத்தின் அடிப்படைப் பண்பாடு என்பதை உணர்ந்து அக்குற்றங்களுக்கு நாம் ஆளாகாமல் வாழவேண்டிய நிலையினையும் எண்ணி நல்ல பண்பாட்டு நெறியை உணர்கின்றோம் நாம். இவ்வாறே சாத்தனர் வாழ்வின் இன்றியமையாத் தேவைகளாக உள்ள பல அடிப் படைப் பண்பாட்டு நிலைகளைக் காட்டியே தன் காவி யத்தையும் காவியத் தலைவியையும் மற்றவரையும் வாழவைக்கின்றார்.

தேவர் காட்டும் பண்பாடு

இனி இவர்களைப் போலவே பின்வந்த தேவர்தம் சிந்தாமணியிலும் சில கருத்துக்களைக் காணக் கடமைப் பட்டுள்ளோம். தேவர்தம் சிந்தாமணி உண் டான காலத்தில் நாட்டில் சமய அடிப்படையில் மாறுபாடுகள் உண்டாகிவிட்டன. ஏன்? மணிமேகலை யிலேயே சர்த்தனர் அந்த வேறுபாட்டைக் காட்டி விட்டார். சமயம் வளர்த்த பண்பாட்டில் ' ஒன்றிய

சமய உணர்வே' சிறந்தது என்பதைக் காண்போம். எனவே இவ்வாறு ஒருசமய அடிப்படையில் உண்டாகின்ற இலக்கியங்கள்—சிந்தாமணி பெரிய புராணம் போற்றவை—சிறந்து வாழமுடியாவிட்டாலும், அவை காட்டும் பண்பாட்டு முறையிலே அவை பிறவற்றோடுவைத்து எண்ணி போற்றப்பட்டுவருகின்றன. திருத்தக்க தேவர் சிந்தாமணியைச் சமய அடிப்படையிலே காட்டினர் என்றாலும், பொதுவாக மக்கள் மேற்கொள்ளவேண்டிய பல நல்ல பண்புகளையும் அவற்றை மேற்கொள்வார் சிறக்கும் நெறிகளையும் விளக்கிய காரணத்தாலே அவர் நூல் சிறந்த ஒன்றாக மதிக்கப்படுகின்றது.

சீவகன் சிறந்த தலைவன். இறுதியிலேயும் இடையிலே சிற்சில இடங்களிலேயும் சமநெறியோடு சார்த்தி அவனைச் சமணனாகத் தேவர் காட்டினாலும், நூல் முழுதும் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதனாகவே அவனைக் காட்டியுள்ளார். அவன் பிறந்த நாட்டையும் நகரையும் விளக்கவரும் முன்னைய பாடல்களுள்ளேயே இயற்கைச் சூழலை முன்னிறுத்தி உலகத்துக்குப் பல பண்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றார். சீவகன் பல மனைவியரை மணந்த காரணத்தால் சிலர் அவனைக் காமுகன் என்றே மதிப்பிடுவர். ஆனால் தேவர் அவனுக்கு அத்தகைய மாசு உண்டாகாமல் நல்ல பண்பாடுகளாகிய கவசங்கள் இட்டுக் காப்பாற்றுகிறார். அனங்கமாலை என்னும் பாத்திரத்தைத் தேவர் சிவகன் செந்தண்மையைக் காட்டவே படைத்திருக்கின்றார். தன் காதலைச் செல்லுமிடமறிந்து, உண்மை நெறியிலேதான் சீவகன் செலுத்தினானே யன்றி, வெறும் காமந்தகாரனாக அவன்

வாழவில்லை என்பதைப் பல விடங்களில் காட்டியுள்ளார். அப்படிக் காம வெறிபிடித்தவனுக அவன் இருந்திருப்பானுயின் தந்தை சச்சந்தனைப் போல் காமத்தால் எல்லாவற்றையும் இழந்திருப்பான். ஆனுல் சீவகனே தந்தை காமத்தில் இழந்த அத்தனையையும் முயன்று பெற்றிருக்கின்றுன் என்றுல் அவன் காமத்தினிடம் கொண்ட தூய்மையைத்தானே அவன் வெற்றி காட்டுகின்றது.

இன்னும் அவன் தன்னை அடக்கி நின்ற நிலையும், பிறநாடுகளிலே நடந்து கொண்ட வகையும், தம்பியரைப் பற்றித் தருக்கும் நிலையும், தாயினைக் கண்டு கருத்தழிந்த நிலையும், கடைசியில் வெளிப்பட்டுக் கட்டியங்காரனை வீழ்த்தி நின்ற நிலையும், ஒவ்வொரு வகையில் பண்பாட்டின் அடிப்படையிலேயே அமைகின்றன என்பதைக் கண்டு உணரின் தேவரின் திறன் விளங்கும். இறுதியாக அரச வாழ்வை ஏற்றபோது அவன் தான் விளையாட நிழலளித்த பெரு மரத்தையும் மறவாமல் நன்றிப்பெருக்கால் அதன் வாழ்வு வளரவும் அறமாற்றினுன் எனவும் காண்கின்றோம். அவன் வாழும் வரையும்—தேவர் தம் சிந்தாமணி வாழும் வரையும்—அந்த மரமும் வாழும் என்பது உறுதியல்லவா! தன்னுடன் தன்னைச் சேர்ந்தார் அனைவரையும் வாழவைத்த வள்ளன்மையாகிய பண்பாட்டு உணர்வு சிறந்த ஒன்றன்றே! மற்றும் மக்களிடம் காதல் கொள்ளுங்கால் அவர்கள் தமக்கு உரியராகும் வரையில் நடந்து கொண்ட பான்மையும் பிறவும் மனங்கொள்ளத்தக்கன. சீவகன் மட்டுமின்றி பிற எல்லாப் பாத்திரங்களுமே தேவர் தம் கையிடைப்பட்ட காரணத்தால் நன்கு விளக்கம் பெறுகின்றன.

அத்தனைக்கும் காரணம் தேவர் தம் தூய பண்பட்ட உள்ளமேயாகும். அவர்தம் உளத் தூய்மைக்கு நாடறிந்த கதையை நாம் இங்கே மறுபடியும் எடுத்துக் காட்ட வேண்டா. எனவே அந்த நல்ல உள்ளத்தில் உலகம் வாழ வேண்டும் என்று உருவான பண்பாட்டு நலனே சிந்தாமணியாகத் தோற்றம் பெற்றுச் சிவகனை வாழ வைத்துத் தானும் வாழ்கின்றது.

மொழி பெயர்ப்பு இலக்கியங்களில்

இவ்வாறே எத்தனையோ இலக்கியங்களை எண்ணி எண்ணி வாழ்நாள் முழுவதும் கண்டு கொண்டே இருக்கலாம். பிற மொழிகளிலே இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இலக்கியங்களையும், அவற்றின் ஆசிரியர்கள் தமிழ் நாட்டுப் பண்பாடு கெடாத வகையிலே மொழிபெயர்த்துள்ளனர். வால்மீகியின் இராமயணத்துக்கும் கம்பனுடைய இராமயணத்திற்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. சீதையின் மணத்திலே, இலங்கை மன்னன் சீதையைக் கொண்டு சென்ற நிலையிலே, இலங்கையில் சீதை வாழ்ந்த முறையிலே, இவை போன்ற பிறவற்றிலே எத்தனையோ வேறுபாடுகளைக் கதைப் போக்கில் காண்கின்றோம். மொழிபெயர்ப்பாளர் கைக்கொள்ள வேண்டிய நெறி அது. ஒரு நாட்டுக் கதை மற்றொரு நாட்டில் மொழி பெயர்க்கப்படுமானால் அந்த நாட்டு நிலைக்கு ஏற்பவே வாழ்க்கை முறை அமைக்கப் பெறல்வேண்டும். அவ்வாறு மாற்றி அமைத்ததனாலேதான் கம்ப இராமாயணம் இன்றளவும் வாழ்கின்றது. இல்லையானால் ஒருவித எதிர்ப்புமின்றி அழிந்த எத்தனையோ ஆயிரக்கணக்கான நூல்களோடு இதுவும் தன் வாழ்வின் இறுதியைக் கண்டிருக்கும். மற்றொரு வட

நாட்டுக் கதையாகிய பாரதமும் அத்தகையதே வில்லிப்புத்தூரார் எவ்வளவு முயன்றாலும் கதையின் அடிப்படையை மாற்ற முடியாதே. 'ஐவருக்கும் பத்தினி' என்ற அடிப்படையே தமிழ் நாட்டுப் பண்பாட்டுக்கு மாறுபட்டது. எனவேதான் கம்பராமாயணம் வாழ்கின்ற அந்த அளவுக்கு மக்கள் வாழ்வில் தொடர்பு கொண்டு பாரதத்தால் வாழ முடியவில்லை. அதன் ஆசிரியரும் தம் மொழிபெயர்ப்பு நூலில் எத்தனையோ மாற்றங்களைச் செய்திருக்கிறார். 'பழம் பொருந்து சருக்கம்' என்ற ஒரு சருக்கத்தையே புதிதாக உண்டாக்கி, தம் நாட்டுப் பண்புக்கு ஏற்பப் பல கருத்துக்களைப் புகுத்தியிருக்கிறார். 'இல்லை யென்று உரைப்போர்க்கு இல்லை யென்று உரையா இதயம்' பற்றிக் கன்னனை முன்னிறுத்தி நன்றாக விளக்கியுள்ளார். இன்னும் எத்தனையோ மாற்றங்கள். கதையும் பாமரரும் விரும்பத்தக்க பல வேடிக்கைக் கட்டங்கள் நிறைந்தது. என்றாலும் அது சிறக்க வாழாத காரணம் அதன் அடிப்படைப் பண்பாடு தமிழ் நாட்டு வாழ்வுக்கு மாறுபட்டமையேயாம்.

இந்த இரண்டு மொழிபெயர்ப்புக்களாகிய இலக்கியங்களிலிருந்து ஒவ்வொரு பாத்திரமும் உலகுக்கு உணர்த்தும் பண்பாட்டை எல்லையற்று விளக்கிக் கொண்டே போகலாம். அவற்றுள் சில முன்னும் பின்னும் விளக்க முறுகின்றன. எனவே இன்னும் இவ்வாறு தனித்தனியே பிரித்து ஆராயின் எல்லை விரியும் என்ற காரணத்தாலே இந்த அளவோடு இந்த நிலையினை நிறுத்திப் பொதுவாகச் சில உண்மைகளைக் கண்டு அமைவோம்.

சிற்றிலக்கியங்கள்

சிலப்பதிகார காலந் தொட்டு இன்று வரை எத்தனையோ கவிதைகளும் காவியங்களும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அவை அனைத்தும் இலக்கியங்கள் என்னும் பெருநிலைக்குத் தகுதி உடையவை என்று கூறமுடியாது. ஒருசில சமயம் பற்றி, இனம் பற்றி வேறு சில குறுகிய மனப்பான்மை பற்றி ஒரு சில மக்களுக்குள்ளே வாழ்கின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பாடும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உணர்வும் நாட்டில் காலப் போக்கில் மறைந்து விட்டன. சமயத்துறையிலே இவ்வுண்மையை அவ்வப்போது தாயுமானவர் இராமலிங்க அடிகளார் போன்ற பெரியவர்கள் எடுத்துக் காட்டினர்கள் என்றாலும், அன்பால் மக்கள் இனத்தைப் பிணைத்துவைக்க வேண்டிய சமயம், காழ்ப்பால் மக்கள் இனத்தைப் பிரிவுபடுத்திக்கொண்டே செல்வதைக் காண்கின்றோம். இப்படியே இன அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் பல்வேறு கவிதைகளும் காவியங்களும் தோன்றினாலும் கூட, அவை இலக்கியம் என்ற தரத்துக்கு உயரமுடியாதனவாகிக் காலத்தை வென்று வாழமுடியாமல் கழிகின்றன.

பிற்காலத்தில் எத்தனையோ சிற்றிலக்கியங்கள் உண்டாயின. கோவை, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ் போன்ற பற்பல சிற்றிலக்கியங்கள் தோன்றின. அவற்றுள் பல கடவுள் சார்புற்று வளர்ந்தன. வேற்று நாட்டிலே இருந்து வந்த கிறித்தவ சமயம் போன்றவையும் தமிழ் நாட்டு இயல்புக்கு ஏற்பச் சிற்சில இலக்கியங்களைப் படைத்தன. அத்தகைய பிற்காலச் சிற்றிலக்கியப் படைப்புக்கள் பல வடநூலார்

மதம் பற்றித் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களாயின. அவற்றுள் ஒருசில தாம்தாம் காட்ட வந்த கடவுள் நெறியுடன் சிற்சில நல்ல பண்புள்ள கொள்கைகளைத் தம்முள்ளே அமைத்திருந்த போதிலும், அவற்றினும் பிற ஆதிக்கங்களே அதிகமாக இருந்த காரணத்தினாலே உலகில் எல்லாரும் போற்றக்கூடிய இலக்கியங்களாகவோ பண்பாட்டுக் கலங்கரை விளக்கங்களாகவோ வாழாது வழக்கிழந்தும் அழிந்தும் வருகின்றன. ஒரு சில வழிநடைப் பதம் போன்றவை அவ்வக் கால மக்கள் போற்றிய சில பண்பாட்டு நெறிகளை விளக்குவன. சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் உண்டான தல புராணம் போன்றவற்றிற்கும் இன்று காலை தோன்றி மாலை மறையும் கவிதைகளுக்கும் இந்த உண்மை பொருந்துவதாகும். பள்ளு குறவஞ்சி போன்ற நூல்கள் சமுதாயத்தில் வாழும் ஒருசார் மக்களுடைய பண்பாட்டைக் காண உதவும். எனவே சிறந்த இலக்கியம் காலத்தை வென்று வாழ்வதென்பதும் அவ்வாறு அதை வாழவைப்பது அவ்விலக்கியம் தான் எடுத்துக் காட்டும் பண்பாட்டு நெறியே என்பதும் நன்கு உணரவேண்டியனவாகும். இவற்றால் இலக்கியமும் பண்பாடும் ஒன்றை ஒன்று பற்றிப் பின்னிப் பிணைந்து வளர்ந்து வாழ்ந்து வையத்தை வாழவைப்பன என்பது தேற்றம்.

வேறுபாடற்ற இலக்கியங்கள்

இனி, இவ்விலக்கியங்களில் வரும் பாத்திரங்களின் படைப்பைப் பற்றி ஒரு சிலகண்டு அமைவோம். சிலர் இலக்கிய அடிப்படையாகிய பண்பாட்டினை மறந்து அவற்றுள் வரும் பாத்திரங்களை

யும் அவர்தம் நாட்டு எல்லை முதலியவற்றையும் கொண்டு ஆராய்ச்சிசெய்து உண்மையை மறந்துவிடுவர். ஆராய்ந்து பார்த்தால் உள்ளத்தில் உண்மை ஒளி பெற்ற நல்லாசிரியர் உதட்டில் உருண்டு ஏட்டில் தவழும் நல்ல இலக்கியங்கள் மொழி, நாடு, சாதி, சமயம் எல்லா வேறுபாடுகளையும் கடந்தனவேயாம். அவற்றுள் வரும் பாத்திரப் படைப்புக்களும் அப்படியே. நாம் சிலப்பதிகாரத்தில் வெறும் வணிகனை மாசாத்துவான் மகன் கோவலனையும் மாநாய்கன் மகள் கண்ணகியையும் காண்கிறோமா? மாதவி வெறும் பரத்தையர் குலப்பிறந்த பெண்ணாகவும், மாதரி எளிய இடைக்குல மகளாகவுமா காட்சி தருகின்றனர்? பரத்தை பரம்பரைக் குணத்தையும் சித்திராபதியின் செயல்களையும் கொண்டவராகவா மணிமேகலை காட்சி தருகிறார்? வெறும் ஏமாங்கத நாட்டு மன்னன் மகனாக மட்டும் சிவகன் இருந்திருப்பானேயானால் நாம் அவனை நினைப்போமா? வெறும் தசரதன் மகனை இராமனையும் சனகன் மகளான சீதையையும் நாம் கம்பராமாயணத்தில் காணவில்லை. இப்படியே எல்லா இலக்கியங்களையும் எண்ணிப்பார்த்தால் பல பண்பட்ட நல்ல உண்மைகள் நமக்கு விளங்காமற் போகாது. ஆம். நாம் காணும் பாத்திரங்களே வேறு. ஒரு வேளை அவை இடத்தை நிலைக்களாகக் கொண்டிருக்கலாம். ஆனால் அவற்றைத் தோற்றிய கவிஞர் உள்ளம் அந்த எல்லைகளையெல்லாம் கடந்தது; பண்பாடுற்றது. நாட்டையும் உலகையும் வாழ்விப்பது.

நேரிய உணர்வு

நாம் இலக்கியங்களின் இளங்கோவடிகளின் கோவலன், மாதவி, கண்ணகியையும், சாத்தனாரின் மணிமேகலை, ஆதிரை ஆகியோரையும், தேவரின் சிவ

கனையும் கம்பரின் இராமனையும் சீதையையும் காண்கின்றோம். இந்த உணர்வோடு இலக்கியங்களைப் புரட்டிப் பார்ப்போமேயானால் ஒவ்வொரு ஏடும் உலக வாழ்விற்கு எண்ணற்ற உறுதிகலந்த உண்மைகளை விளக்கிக் கொண்டே இருக்கும். அத்தகைய செம்மைப் பார்வையினாலேதான நல்லதல்லாத போலி இலக்கியங்கள் தீயினில் தூசாக மடியும். இலக்கியத்தை ஆராய்கின்ற ஒவ்வொருவரும் இத்தகைய காய்தல் உவத்தலில்லாத நல்ல நேரிய பார்வையில் ஆராயவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆம். அவ்வாறு ஆராய்ந்தால் இலக்கியம் காட்டும் எண்ணற்ற பண்பாடுகளை உணர்ந்து அவற்றின் வழி ஒழுகி நாம் முன்னேறுவோம்.

இவ்வாறு இலக்கியங்களை எத்தனையோ வகையாக ஆராயலாம். இலக்கியங்களும் பல திறப்பட்டனவாக வாழ்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து ஆயின் காலம் இடந்தராது; எல்லையற்று விரியும். மற்றும் எல்லா நூல்களும் இலக்கிய அடிப்படையில் அமைவனவே. இந்நூலின் பிற பகுதிகளிலும் இலக்கியம் இடம்பெறுகின்றது. எனவே இந்த அளவிலே இலக்கியத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பினை இங்கே நிறுத்தி அமைவோம். உலக மொழிகளிலுள்ள இலக்கியங்கள்—சிறப்பாகத் தமிழ் இலக்கியங்கள்—மனிதனை மனிதனாக வாழவைக்கத் தேவையான பண்பாடுகளை உணர்த்திச் சமூகவாழ்வை வளம் படுத்துவனவாக! இலக்கியம் காண்போரும் இலக்கியம் ஆராய்வோரும் இத்துறையில் கருத்திருத்தி உயர்வார்களாக! பண்பாடும் இலக்கியமும் இணைந்து உலகையும் உயிரையும் ஓம்புவனவாக!

V. இயற்கை உணர்த்தும் பண்பாடு

இயற்கையோ டியைந்த வாழ்வு —செயற்கை நாடும் மனித உள்ளம்—நிலம் நல்கும் பாடம்—மரம் உணர்த்தும் பாடம் — அன்பு வெல்லும்—புறம் காட்டும் நெறி —நல்லார் ஒருவர் உளரேல் — புழு உணர்த்தும் நெறி—சிந்தாமணியின் உவமை விளக்கம்—மலர் காட்டும் பண்பு—அகப் பொருளில் இயற்கைப் பாடம்—இயற்கையின் தாயுள்ளம்—கதைகள் வழி.

இயற்கையோ டியைந்த வாழ்வு

மனிதன் இயற்கைச் சூழலுக்கு இடையிலேயே வாழப் பிறந்தவன். இயற்கையோடு இயற்கையாக அமையும் இன்பவாழ்வே அவனுடையது. இயற்கையில் கலந்த பல பொருள்களே அவனை வாழ்விக்கின்றன. இயற்கையில் தோன்றும் கதிரவன் ஒளியும், அவ்வொளியால் விளையும் பல பொருள்களுமே அவனை நெடுநாள் வாழவைப்பன. ஒளியும் விண்ணின்று பெய்யும் மழையும் இல்லையானால் அவன் வாழ்நாள் அற்றுவிடும். எண்பது கோடி நினைந்து எண்ணும் உள்ளம் இயற்கை வாழ்வினை விரும்பி ஏற்றுல் எண்ணம் சிதறுது. எண்ணம் ஒன்றி அமையின் அவன் உயர்வான்—அவன் சூழல் உயரும்—

அவனை அடுத்து வாழும் அத்தனை உயிரினங்களும் நலம் பெறும். ஆனால் மனிதன் அந்த இயற்கை வாழ்வை மறத்து எத்தனையோ ஆண்டுகள் கடந்து விட்டன.

செயற்கை நாடும் மனித உள்ளம்

இயற்கையைக் கட்டியான மனிதன் எண்ணத் தொடங்கிவிட்டான். இயற்கையின் அடிப்படையில் அமைந்த வாழ்வின் நியதியை மறந்தவன், தானே இயற்கைக்குத் தலைவன் என்ற எண்ணத்தில் அந்த இயற்கையைக் கட்டியாள நினைக்கின்றான். அவன் நினைப்பு ஓரளவு வெற்றி பெற்றுவிட்டதாகவும்கூட நம் பார்வைக்குத் தெரிகின்றது. ஆனால், அவன் தருக்கும் காலத்திலெல்லாம் இயற்கை நல்ல பாடம் கற்பித்து மனிதனை மனிதனாக வாழவைக்க முயற்சி செய்கிறது. வெள்ளமாக, பூகம்பமாக, நிலநடுக்கமாக, இன்னும் பல வகையாக இயற்கை மனிதனை உணர்வுடையவனுக்க—இயற்கை நெறியில் வாழ்பவனுக்க—முயல்கின்றது. என்றாலும் மனிதன் செயற்கைச் சேற்றில் மூழ்கியே தன்னை மாய்த்துக் கொள்ளுகின்றான். தாவரங்களும் விலங்குகளும் இயற்கை வாழ்வு வாழ முயல்வதைக் கண்டும் மனிதன் தன்னைச் செயற்கை வாழ்வுக்கு ஈர்த்துச் செல்லுகின்றான். அறையில் முளைக்கும் செடியும் எங்கே கதிரோன் ஒளியென்று வெளிச்சத்தை நாடிப் படர்வதைப் பார்க்கின்றான் மனிதன்; நாட்டு விலங்குகளைக் காட்டிலும் காட்டிலே இயற்கையோடு வாழும் விலங்குகள் வளமும் உடல் உரமும் பெற்றும் உளத்திண்மை பெற்றும் வாழ்வதைக் காண்கின்றான் மனிதன். கண்டும் தான்

மட்டும் ஏனோ செயற்கை வழியே தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகின்றன்.

பரந்த நிலப்பரப்பிலே இயற்கைச் சூழலிலே சிறு குடில் அமைத்துக்கொண்டு வாழ்ந்த பழங்கால மனிதனுக்கு இருந்த உடல் உரமும் உள்ளப் பாடும் நாகரிகமும் செயற்கை அரண் அமைத்துக்கொண்ட மனிதனிடம் காண முடியுமா? இயற்கையான காயும் கனியும் பாலும் பிறவும் உண்டு வளர்ந்த மனித னைப் போல் செயற்கை உணவு உண்ணும் மனிதன் சிறக்க முடியுமா? செயற்கையால் தன்னை ஆக்கிக் கொள்ளநினைக்கும் மனிதன் தன்வாழ்வை நாற்சுவர் சுற்றுக்குள் அமைத்துக் கொண்டான். அந்த எல்லையே அவனுக்கு உலகமாகிவிட்டது. அங்கே உட்கார்ந்து நோக்கும்போது தன்னினும் பெரிதாக வீடுகட்டி வாழும் ஒருவனைக் கண்டு பொறுமை கொள்ளுகின்றன். அப்பொறுமை அவன் வாழ்வையே பாழாக்குகின்றது. மனிதனோடு வாழப் பழகிய காரணத்தினாலே நாய்முதலிய நல்ல விலங்குகள்கூட பொறுமை உணர்வோடு ஒன்றை ஒன்று பகைத்துக் கொள்ளுகின்றனவே அன்றி, பொதுவாக விலங்கினங்களும் பிற உயிரினங்களும் போட்டிஇட்டு மடிவதில்லை. மாறுக நல்ல வகையான வாழ்க்கை நெறியில் வாழ்ந்து, வழி நிலையற்ற மனிதனுக்கு அவன் வாழவேண்டிய பண்பாட்டை அடிக்கடி உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. தன் மாளிகையிலிருந்து வெளிக்கிளம்ப நினைக்காத மனிதனுக்கும் வீட்டிலேயே சிறு சிறு சிட்டுக்குருவிகள் தங்கிப் பல உண்மைகளை உணர்த்துகின்றன. மனிதனோடு வாழ்கின்ற மனிதன் அவர்கள் வாழ்வைத் தன் வாழ்

வாக எண்ணி அவர்களோடு உள்ளத்தால் வாழ வேண்டிய நல்ல நிலை மாறிப் பலவகைகளில் மாறு படுகின்றான். அம்மாறுட்டம் இயற்கை வாழ்வுக்கு மாறுபட்ட ஒன்று என்பதை அச் சிட்டுக் குருவிகள் அவனுக்கு உணர்த்துகின்றனவே. ஆணும் பெண்ணும் ஒன்றிக் குடில் அமைத்து, பெண் முட்டை இட்டுக் குஞ்சுப் பொறிக்க, அக்குஞ்சுகளுக்கு இரண்டும் கலந்து இரைத்தேடித் தந்து வளர்த்து வாழவைக்கும் அக்குரு விகள் மனிதனுக்குக் கோடிக்கணக்கான உண்மை களை உணர்த்துகின்றன. எல்லாவற்றிலும் தன்னை உயர்ந்தவனாக எண்ணும் மனிதன் அவை உணர்த்தும் பாடங்களைப் படிக்க மறுக்கிறான். அகவாழ்வின் எல் லையில் அறிய வேண்டிய உண்மைகள் பல; புறவாழ் விலும் அப்படியே. தானே சிமிட்டியும் கல்லும் மரமும் மண்ணும் பிறவும் கொண்டு மாளிகை அமைத்துத் தருக்கித் திரியும் மனிதனை நோக்கி ஔவை, அந்தக் குருவி முதலியவற்றைக் காட்டி, அவை வாழும் வீட்மைப்பைக் காட்டி, 'அப்படி உனக்குக் கட்ட முடி யுமா?' என்று கேட்கின்றார். அவை தம் சொந்த முயற்சியினாலேயே வீடுகள் கட்டிக் கொள்ளுகின்றன. மனிதனை மற்றவர் உதவியால்தான் வீடுகட்டிக் கொள்ள முடியும். இந்த நிலையில் தருக்கு ஏன் என்கின்றார் அவர்.

> 'வான்குருவியின் கூடு வல்லரக்கு தொல்கரையான்
> தேன்சிலந்தி யாவர்க்கும் செய்வரிதால்'.....

என்று காட்டி இயற்கையை உணர்ந்து தருக்கி வாழ வேண்டாம் என மனிதனுக்கு உணர்த்துகின்றார்.

இயற்கை மனிதனுக்கு உணர்த்தும் பண்பாடு கள் பலப் பல. பாடறிந்து ஒழுகுதலாகிய பண்பாட்டினை

மனிதன் விட நினைத்தாலும் அவனைச் சுற்றியிருக்கும் இயற்கை நிலைகள் அவ்வப்போது அவனுக்கு அவன் நிலையை உணர்த்துகின்றன. இயற்கை உணர்த்தும் பாடமாகிய பண்பாட்டைப் பற்றிப் பலப்பல நூல்கள் எழுதலாம். எனினும் நான் இங்கே ஒரு சிலவற்றை மட்டும் காட்டி அமையலாம் என எண்ணுகின்றேன்.

திருவள்ளுவர் போன்ற உலகம் உள்ளவும் சிறந்த அறநூல் செய்த நல்ல புலவர்கள் மனிதனுக்கு இயற்கையைக் காட்டியே பல பாடங்களை உணர்த்துகின்றனர். அவற்றுள் சில முன்னமே கண்டோம். மனிதன் தவறு இழைக்கா வகையில் என்னென்ன அரண்கள் அமைக்க வேண்டுமோ அத்தனையையும் அமைக்க அவர் இயற்கையின் துணையையே நாடுகின்றார். மண்ணும் மரமும் பிற இயற்கைப் பொருள்களும் அவர்களுக்கு உதவியாக நின்று அவர்தம் அறநூலைச் சிறக்க வைக்கின்றன. நாமும் இங்கே ஒரு சில காண்போம்.

நிலம் நல்கும் பாடம்

நிலம்—இயற்கைக்கு அடிப்படையாகிய நிலம்—வள்ளுவர் வாய்மொழிப்படி மனிதனுக்கு நல்ல பண்பாட்டைக் கற்றுத்தருகிறது. மனிதன் தனக்குத் துன்பம் இழைத்தவனைப் பழிக்குப் பழிவாங்க நினைக்கின்றான். ஒரு சிலர் இன்னும் சற்று முன்னேறி, ஒன்றும் செய்யாதவனுக்கும் துன்பிழைத்து அவன் வாடத் தாம் மகிழும் அளவில் வளர்ந்துள்ளனர். தும்பியைக் கட்டிப் பறக்க விட்டு மகிழும் புத்தி அறியாத இளம் பிள்ளைகள் போல, மற்றவரைத் துன்புறுத்துவதிலேயே சிலர் மகிழ்ச்சி கொள்வதை

இன்றும் காண்கின்றோம். மனிதன் அந்த வகையில் வெகுதூரம் முன்னேறிவிட்டான். ஆனால் அவனைத் தாங்கும் நிலம் எப்போதும் அவனுக்கு அவன் செயலைத் தவறு என்று காட்டிக் கொண்டே இருக்கிறது. நிலத்தை வெட்டுகிறோம் நாம்; பிளக்கிறோம் நாம்; அதை நிலை கெடுத்து மாற்றுகிறோம் நாம். அத்தனை கொடுமைகளைச் செய்யும் நம்மை அது தாங்க மாட்டேன் என்று எப்போதாவது சொன்ன துண்டா? நம்மை வேண்டாம் என்று தள்ளிய துண்டா? இந்த நிலையால் அது 'நாமும், நம்மைத் துன்புறுத்துபவருக்கு, பதில் துன்பம் செய்து இகழாமல் தாங்கி ஆதரிக்க வேண்டும்' என்ற உண்மையைத் தானே உணர்த்து கின்றது. இதையே திருவள்ளுவர்,

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை' (குறள் *151*)

என்கின்றார்.

மரம் உணர்த்தும் பாடம்

இதே உண்மையை ஔவையார் மரங் கொண்டு உணர்த்துகின்றார். மரத்தின் கிளைகளை வெட்டுகின் றான் மனிதன். அடிக்கடி அதன் இலைகளையும் கிளை களையும் தழைகளையும் கெடுத்துத் தன்னலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். அது தழைத்து நிழல் தருகின்றது. அதுகாலை வெட்டிய மனிதன் நிழலுக் குத் தன் அடியில் ஒதுங்கினால் அவனை அது தள்ளி விடுகிறதா? இல்லையே. மற்றவர்களைப் போல் அவனை யும் ஏற்று நிழல் தருவதை நாம் காணவில்லையா! கண்டும் ஏன் நம்மை ஒறுத்தவர்களிடம் நாம் அன்பு காட்டவில்லை. மிகக் கொடுமை செய்தவர்களுக்கும்

நன்மை செய்ய வேண்டுவதல்லவா மனிதப் பண்பு. அறிவினுள் எல்லாம் தலை, தீய, செறுவார்க்கும் செய்யா விடுதல் அன்றே! இதைத்தான் ஔவையார்,

'சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்'

என்று காட்டுகிறார்.

இவ்வாறே மரங்களின் துணை கொண்டு திருவள்ளுவனார் பிறர்க்கு உதவும் பண்பாட்டை விளக்கிக் காட்டுகிறார். உலகில் செல்வம் பெற்றவர் சிலர்; பெறுதவர் பலர். அச்சிலரும் இப் பலருடைய உதவியாலேயே அப் பெருஞ் செல்வத்தைச் சேர்த்துக் கொண்டனர். அத்தனை பேருடைய உழைப்புத் திறனே ஒரு சிலரிடம் செல்வம் சேரக் காரணமாயிற்று. ஆனால் இந்த உண்மையை எல்லாச் செல்வரும் எண்ணிப் பார்க்கிறார்களா? எங்கோ ஒரிருவர் இருக்கலாம். என்றாலும் பெரும்பாலான செல்வர்கள் இவ் வுண்மையை உணர்வதில்லை; உணர்ந்தாலும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆகவே செல்வம் பெற்று, பெற்ற செல்வத்தை மற்றவருக்கு வாரி வழங்கும் பண்பே மனிதப் பண்பு என்று உணர்ந்து வாழ்பவர்களைப் பயன் மரமாகவும், அவ்வாறு வாழ மாட்டாதவர்களை நச்சு மரமாகவும் குறிக்கின்றார் திருவள்ளுவர்.

'பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்' (குறள் 216) என்றும்

'நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று' (குறள் 1008)

என்றும் அவர் இரண்டு வகையில் எடுத்துக் காட்டி உலகியலை விளக்குகின்றார். இவ்வுவமையில் பிறர்க் கென வாழாதவனுடைய பண்பற்ற நிலையையும் அவன் பெறும் நிலையையும்கூடப் குறிப்பாக உணர்த்து கின்றார். செல்வம் நல்லவனிடம் சேர்ந்தால் அது ஊரின் நடுவின் பழமரம் பழுக்கும் தன்மையை ஒக்கும். பொது மரத்தில் பழம் பழுத்தால் யாவரும் தத்தம் விருப்பப்படி கொண்டு பயன் பெறுவரன்றே! அச் செல்வம் பெற்றவன் சமூகத்தை வாழவைப்பவன் என்கிறார். ஆனால் அவ்வாறு பயன் தருதலைச் செய்யா தவன் நிலை இரங்கத்தக்கது. அவன் நச்சு மரத்துக்குச் சமம். நச்சு மரத்தை நாட்டில் வாழவைப்பார்களோ? அதுபோலவே சமூகம் அவனை வாழ வொட்டாது தடுக்கும் என்ற உண்மையையும் காட்டுகின்றார். மற்றும் அவற்றின் கனிகள் மக்கள் பாட்டால்—உழைப்பால்—அமைந்தன. அந்த உழைப்பை அவர் களுக்குத் திருப்பித் தருதல்தான் முறை. அதுவே நன்றி என்ற பண்பாடு. மனிதன் மறந்த அந்த பண்பாட்டை மரங்கள் காக்க வேண்டும் போலும். காக்கின்றன சில. இதை ஔவையார்,

> 'நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
> என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
> தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
> தலையாலே தான்தரு தலால்'

என்று தென்னையின்மேல் ஏற்றி உலக மக்களுக்கு உணர்த்துகின்றார்.

அன்பு வெல்லும்

உலகில் சிறந்த செல்வ நிலையிலோ அதிகாரத் திலோ உள்ளவர்கள் மனிதப் பண்பாட்டை மறந்து

சில கொடுமைகளைச் செய்கின்றனர். இனிய தன்மையிலே பிறர் மனதைக் கவர்ந்து அவர்களோடு இணைந்து வாழும் பண்பினை மறந்து, ஆணவத்தால் தம் அதிகாரத்தைக் காட்டிக் கொடுமையால் பிறரைக் கட்டியாள நினைக்கும் நாகரிகத்தை இந்த இருபதாம் நூற்றாண்டின் இடையிலே நன்கு காண்கின்றோம். ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் பெற்ற வெற்றி அடிவேர் அற்ற அழுகிய வெற்றி என்பது விளங்கும். அதே வேளையில் அன்பால் உலகை அணைத்துச் சென்றவர் வெற்றி உலகம் உள்ளளவும் சிறந்த வெற்றியாகும். கொடுமையால் நாடாண்ட ஆங்கிலேயர் வெற்றியினும் அன்பால் மக்கள் உள்ளங்களை ஆண்ட காந்தி அடிகளார் வெற்றி சிறந்த ஒன்றல்வா. ஆம்! கொடுமை செல்லாத இடங்களில் இனிமை செல்லும்; வன்கண்மை செல்லாத இடங்களில் அன்பு செல்லும். வன்மை மாற்ற முடியாத வற்றை—பிளக்க முடியாத பலவற்றை—சேர்த்துக் காக்க முடியாத பலவற்றை—அன்பும் இனிமையும் மாற்றி, பிளந்து, சேர்த்து உலக மக்களுக்கு நன்மை செய்யும். இந்த உண்மையினையும் இயற்கை வாயிலாகவே காட்டுவர் அறிஞர்.

> 'வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
> பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது—நெட்டிருப்புப்
> பாறைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
> வேருக்கு நெக்கு விடும்'

என்பர் ஔவையார். வள்ளுவர் இனிமையை விட்டு இன்னுரைச் சொல்லல் கனிவிட்டுக் காய் திருடுவது போல என்கின்றார்.

> 'இனிய உளவாக இன்னாத கூறல்
> கனி இருப்பக் காய்கவர்ந் தற்று' (100)

என்கிறார். இவ்வாறு இன்னுமையை நீக்கி இனிமை யைப் போற்றி வளர்க்க வேண்டிய பெரு நெறியை மரமும் காயும் வேரும் கனியும் பிற இயற்கைப் பொருள்களும் நமக்கு நாள் தோறும் உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. ஆனால் மனிதன் அவற்றை உணர்ந்தால் தானே !

புறம் காட்டும் நெறி

சில புலவர்கள் மக்கள் சமுதாய நெறி செம்மையில் செல்லவில்லையானால் இயற்கை மாறி அறிவுறுத்தும் என்ற உண்மையை மிகப் பழங் காலத்திலேயே நன்கு விளக்கியுள்ளனர். நாட்டைச் செம்மை நெறியில் செலுத்த வேண்டிய பொறுப்பு நாடாளும் நல்லவர் களிடம் அமைய வேண்டிய ஒன்று. அன்று முடியாட்சி நிலவிற்று; இன்று மக்களாட்சி மலர்ந்துள்ளது. எத் தகைய ஆட்சியாக இருந்தாலும் ஆளுகின்றவர் செம்மை நெறி திறம்பாமல் ஆளக் கடமைப் பட்டவர். அவர்கள் அவ்வாறு பண்பட்ட நெறியில் வாழவில்லை யானால் - தவறி நடப்பார்களேயானால்—இயற்கையெல் லாம் மாறி நில்லை கெடும்; கெட்டு ஆளுபவருக்கு அறி வுணர்த்தித் திருத்த முற்படும். மாரி பெய்ய வேண் டிய காலத்தில் பெய்யாது; தேவையற்ற காலத்தில் பெய்து நாட்டையே வெள்ளத்தில் ஆழ்த்தி நலிவு பெறச் செய்யும். இத்தனைக் கொடுமைகளைச் செய்து ஆளுபவருக்கு அறிவு உணர்த்தும். அப்படியும் உணர வில்லையானால் அவர்கள் கெட வேண்டுவதே. பாண் டிய மன்னன், தன் பொருள் கொண்டு கோயில் கட்டிய மணிவாசகரை மடக்கி, தன் ஆணையால் அவரை குற் றம் செய்தவர் போல மற்றவர் கண்ணுக்குத் தெரியக் காட்டிக் கொடுமை செய்தான். பயன் காலமற்ற

காலத்தில் வைகையில் பெருவெள்ளம் பெருகி நாட்டை அழித்தது. இத்தகைய வரலாறுகள் விவிலிய நூலிலும் இருக்கக் காண்கிறோம். எனவே இயற்கை தன் முறையான நெறியிலிருந்து மாறுபட்டுச் சீற்றம் கொண்டு திசை மாறினால் அதன் பொருள் நாட்டை நல்லவர்கள் ஆளவில்லை என்பதுதான். இந்த உண்மையைத் தமிழ்நாட்டு மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்திருந்தனர். தெளிந்த நல்ல பார்வை உடைய உலகம் இயற்கை நிலை கெடின் அதற்குக் காரணம் மன்னவனே என உணர்ந்து அவனைப் பழிக்கும் என்ற உண்மையைச் சங்ககாலப் புலவர்,

> 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
> இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
> காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம் (புறம் 35)

என்று காட்டி, அதனால் அரசன் முறை திறம்பாது நாட்டை ஆளவேண்டிய உண்மையை வற்புறுத்திச் செல்லுகின்றார். ஆம்! இயற்கை இவ்வாறு அரசியல் பண்பாட்டில் அமைந்த மனித உணர்வை அவ்வப்போது தேவையான காலங்களில் அன்று தொட்டு உணர்த்திக் கொண்டேதான் வந்துள்ளது. அந்த உண்மையை உணர்வோர் சிலரே!

செல்வம் ஓரிடத்தில் நிலைத்து நிற்பதில்லை. சிலர் சில காலம் செல்வம் பெறுவர். நேற்றுச் செல்வராயிருந்தவர் இன்று பிச்சை எடுப்பதனையும் நேற்றுப் பிச்சை எடுத்தவர் இன்று பெருஞ் செல்வராய் வாழ்வதையும் காண்கின்றோம். இந்த உண்மையை உணர்ந்து கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்கின்றவர்கள் மிகச் சிலர். செல்வமும் வாழ்வும் பிறநல் வளங்களும் என்றும் எல்லோரிடமும் குடி

யிருப்பன அல்ல; ஆகவே பெற்றபொழுது மற்றவர் களுக்கு வழங்குங்கள் என்று அறியாதோரையும் அறிவு றுத்திக்கொண்டே திங்கள் தோறும் சந்திரன் தேய்ந் தும் வளர்ந்தும் காட்டுகின்றான் எனப் புலவர் பாடுவர்.

'தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரு உலகம்' (புறம் 27)

என்று புறநானூறு பறை சாற்றி முழங்குகின்றது மக்கள் பிறத்தலும் இறத்தலும் உயர்தலும் தாழ்தலும் மிக எளிய நிகழ்ச்சிகள் என்றும், எனவே என்றும் வாழ நினைப்பின் பண்பாடு கெடாது வாழவேண்டும் என் றும் நமக்குப் பல இயற்கைப் பொருள்கள் உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. நாம் உறங்குவது போலும் விழிப்பது போலுமே இறப்பும் பிறப்பும் என்று காட்டி இந்தக் குறுகிய காலத்தில் வாழ்வாங்கு வாழவேண்டிய உண்மையை உணர்த்தும் இயற்கையைக் காட்டும் புலவர் பலர்.

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு' (குறள் 339)

என்பர் வள்ளுவர். பின்வந்த கம்பர் இந்த உண்மையை இயற்கையின் தலைவனைய சூரியன் வழியாக உலகுக்கு உணர்த்துவர்.

'துறக்கமே முதல வாய தூயன யாவை யேனும்
மறக்குமா நிலையல் அம்மா! வரம்பில தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போல் முன்னோன்
இறந்தான் பின்னாள்
பிறக்குமா றிதுவென் பான்போல் பிறந்தனன்
பிறவா வேய்யோன்

எனக் காட்டுவர். உண்மையில் சூரியனுக்குப் பிறப்பும் மறைவும் இல்லை என்பதைப் 'பிறவாவெய்யோன்' என்ற தொடரால் விளக்கி, அப்படிப்பட்டவனுகிய அச் சூரியன் நாம் நலம் பெற அறிவுணர்த்தவே இவ்வாறு காட்டுகிறுன் என விளக்குவர். எனவே இயற்கையின் சூழல்களின் தலைவரெனப்படும் சூரியனும், சந்திரனும், பூமியும் உணர்த்தும் நீதிகள் எண்ணிலவாகும். அவற்றை உணர்ந்து நடத்தல் மக்கள் கடனுமாகும்.

இத்தகைய விண்ணையும் மண்ணையும் காட்டுவதை விட்டுச் சிறு சிறு இயற்கை நிகழ்ச்சிகளைக் காட்டி அறிஞர்கள் கூறும் பல உண்மைகளை ஆராய்ந்து காணலாம். கோதுமையின் உவமையிலே இயேசு பெருமான் மக்கள் தமக்கென வாழாத பண்பாட்டை விளக்குகின்றுர். இது பற்றிச் சமயம் காட்டிய பண்பாட்டிலும் காண்போம். கோதுமை தான் வாழும் போதும் உலகை உண்பித்து மகிழ்கின்றது; அல்லது நிலத்தில் விதையாக இடும்போதும் தான் கெட்டு மேலும் கோதுமையை உண்டாக்கித் தந்து உலகை உண்பிக்கின்றது. ஆகவே வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் மற்றவரை வாழ்விக்கும் பண்பாட்டைச் சாதாரண கோதுமை நமக்கு உணர்த்துகின்றது.

நல்லார் ஒருவர் உளரேல்

நெல்லும் புல்லும் மக்களுக்கு உணர்த்தும் நீதிகள் எத்தனை! உலகில் நல்லவர் ஒருவர் இருப்பின் அவர்வழி நாடு நலம் பெறும் என்று ஔவையார் கூட்ட நினைத்தார். மழைபெய்தால்தான் நாடு

சிறக்கும் என நாமறிவோம். அந்த மழை பருவத்தே பெய்யவேண்டுமானால் நல்லவர் வாழவும் நல்லவர் ஆளவும் வேண்டும் என்று புறநானூற்றுல் மேலே அறிந்தோம், ஆம்! அத்தகைய நல்லவர் ஒருவர் இருந்தாலும் பருவந் தவறாது மழைபொழியும்; விளைவு பெருகும்; நாடு நாடாகும். அந்த நல்லவராலே மற்றவர் நன்கு பயன்பெறுவர். இந்த உயர்ந்த பண்பை நெல்லையும் புல்லையும் முன்னிறுத்திக் காட்டுவார் ஔவையார். வயலில் உள்ள நெல்லுக்குப் பாய வேண்டிய நீர் வாய்க்கால் வழி ஓடுகின்றது. அது வழியிடை வாழவைக்கின்ற புல் எவ்வளவோ. நெல் இல்லையானால் அங்கே நீர் செல்லாது; அதனால் புல் வளர வழியில்லை. நல்லதாகிய நெல்லுக்காகச் செல்லும் நீர் வழியிடையுள்ள புல்லையும் வளர்க்கிறது என்ற இயற்கை நியதியை வைத்தே ஔவையார்

> 'நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
> புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்உலகில்
> நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
> எல்லார்க்கும் பெய்யும் மழை'

என்றுபாடி உயர்ந்த மேன்மக்களுடைய நல்ல பண்பை விளக்கிக் காட்டி உலகை வாழ வைக்கிறார்.

நல்லவர் செல்வம் உள்ளபோது வாரிவழங்குவர். செல்வம் அற்றபோதும் அந்தப் பண்பாட்டிலிருந்து மாறமாட்டார். 'இலம் என்று வெஃகுதல் செய்யாத' பெருமையோடு, அந்த இல்லாத காலத்திலும் தம்மால் இயன்ற அளவுக்கு மற்றவர் வாழ என்னென்ன வழிகளுண்டோ அவற்றுலெல்லாம்

உதவிசெய்வார். அதனுல் தம் உயிர்இழக்க நேரினும் அஞ்சார். குமணவள்ளல் இதற்குச் சான்றாக உள்ளதைக் காண்கின்றோம். புலவருக்கு இல்லை என்று சொல்லும் கொடுமையிலும் இறப்பதேமேல் என்று கருதிய குமணன் பெருஞ்சித்திரனாருக்குத் தன் வாள் தந்து தன் தலையைக் கொய்து தம்பி கைக் கொடுத்து, விலையினைப் பெற்று வறுமை நோய் களையச் சொல்லுகிறார். இது நல்லவர்தம் பண்பாடாகும், ஒன்றும் இல்லாத காலத்தும் உளப்பண்பாட்டால் உலகை வாழ வைக்க முயல்வர். அவ்வாறாய நல்லவர்கள் கெட்டாலும் மேன் மக்களாகவே விளங்குவார்கள். அதனாலேயே அறிஞர்கள் நல்லார் கண் பட்ட வறுமையினும் பொல்லார்கண் பெறும் செல்வம் தீமை பயப்பது என்கின்றனர். வள்ளுவர்,

'நல்லார் கண்பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு' (குறள் 408)

என்பர். இவ்வாறு தாழ்ந்தும் உதவும் தன்மையையும் கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே என்ற நல்ல உண்மையையும் ஔவையார் இரண்டு இயற்கை நிகழ்ச்சிகளை வைத்து உலகுக்கு உணர்த்துகின்றார். இரண்டும் மிக எளிமையாகப் பொருள் விளங்கத்தக்கனவேயாம். வெள்ளத்தால் உலகை ஊட்டிய நல்ல ஆறு, அவ்வெள்ளம் அற்ற காலத்தும் தன்னுள் மூடிவைத்த ஊற்றுப் பொருக்கால் உலகு உண்ண நீரளிக்கும். பாலை எவ்வளவு காய்ச்சினாலும் காய்ச்சக்காய்ச்சச் சுவை அதிகரிக்குமே யன்றிக் குறையாது. இவை இரண்டும் இயற்கை நியதிகள். இவற்றைக் காட்டி நல்லவரை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார் ஔவையார்.

'ஆற்றுப் பெருக்கற்(று) அடிசுடும்அந் நாளும்அவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவற்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து' என்ற பாடலும்,

அட்டாலும் பால்சுவையிற் குன்றாது, அளவலா
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்'

என்பதும் ஔவையார் பாடல்கள்.

புழு உணர்த்தும் நெறி

ஓடையும் ஊற்றும், அவற்றால் வளமாகும் நிலமும், அந்நிலத்தை நலம்பெறச் செய்யும் நாக்கூழ்ப்புழுவும்கூட ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு எத்தனையோ வகையான பாடங்களை உணர்த்துகின்றன. அவற்றை இலக்கியம் உணர்த்தும் பண்பாட்டிலேயும் காணலாம்; என்றாலும் இங்கே இயற்கையோடு சார்த்திக் காண்பதே சிறப்புடையதாகும். ஓடையின் கரையில் நடராசன் நின்றுகொண்டு அவ்வோடையின் நீர்ப்பெருக்கையும் அது விளைக்கும் பயிரையும் அதனால் உண்டாகும் பயனையும் எண்ணிப் பார்க்கின்றான். அதன்பின் அந்த மழைக்கு ஆதாரமாக உள்ள மேகத்தையும் அதுகடலிலிருந்து கிளம்புவதையும் மழையாகி, வெள்ளமாகி, உலகை ஊட்டி, திரும்பவும் கடலுள் கலப்பதையும், இப்படியே மாறி மாறி உலகைச் செழிக்கச் செய்வதையும் எண்ணிப் பார்க்கிறான். அவன் வாயிலாக ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறும் அடிகள் என்றும் எண்ணத் தக்கன.

இனி ஒன்றுக்கும் உதவாத நாங்கூழ் புழுவை முன்னிறுத்திச் சுந்தரம்பிள்ளை அவர்கள் மக்களுக்கு உழைக்க வேண்டிய உண்மையை உணர்த்துகின்றார்.

'ஒஒ நாங்கூழ்ப் புழுவே
உன்பாடு ஓவாப்பாடே
உழைப்போர் உழைப்பின் உழுவோர் தொழில்மிகும்
உழுவோர் கெல்லாம் விழுமிய வேந்துநீ
எம்மண் ணையினும் நன்மண் ணைக்குவை
விடுத்தனை இதற்கா எடுத்தஉன் யாக்கை
இப்புற் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி உண்டாம்?' —(மனோன்மணியம்)

என்று கேட்டு, புழு இயற்கையாகச் செய்யும் செயலை வியந்து போற்றி, மக்கள் பிறர் வாழ்த் தம் வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டிய நிலையை விளக்குவது சிறந்தது!

சிந்தாமணியின் உவமை விளக்கம்

இலக்கியம் பாடுகின்ற புலவர்கள் மட்டுமன்றி இலக்கணங்களுக்கு மேற்கோள் காட்ட நினைக்கின்ற புலவர்களும் இந்த இயற்கை வழங்கும் பண்பாட்டு ணர்வை உலகுக்குக் காட்டுவர். உவமையை விளக்கப் பல பாடல்களைக் கையாண்டதைக் கண்டோம். மேலே எடுத்துக் காட்டிய ஔவையார் வள்ளுவர் பாடல்கள் அத்தனையும் உவமையாக அமைந்த நிலையையே விளக்கின. இதோ இயற்கை இவ்வாறு வாழ்ந்து காட்டுகிறது பார். நிலம் இப்படி, நீர் இப்படி, செடி இப்படி, புழு இப்படி — நீ மட்டும் ஏன் வேறு வகையில் செல்லுகிறாய்? அவை சொல்லித்தரும் பாடங்

களைப் பயின்று பண்பட்டு வாழலாகாதா? என்று கேட்பது போல ஒவ்வொரு பாடலும் அமைகின்றது. மக்களுக்கு ஒரு பொருளை விளக்குவதற்கு உவமையே சிறந்த கருவி. கண்ணால் எதிரில் காணப்படும் ஒன்றைக் காட்டி விளக்குவதே உவமை. தொல்காப்பியர் இந்த உவமையை விளக்குவதற்கு 'உவம இயல்' என்ற ஒன்றையே தனியாக அமைத்துள்ளார் இந்த உவமையைப் பல தனிப்பாடல்கள் விளக்குகின்றன. தண்டியலங்காரத்துள் இவ்வுவமையை விளக்க வரும் பாடல்கள் பல. ஒரு பாடல் பயிர் வளர்வதைப் பற்றியது.

பயிர் அழகாக வளர்கின்றது, பச்சைப் பசேலென நிமிர்ந்து நிற்கின்றது. உரிய பருவம் வரவும் கதிர் அடியிலிருந்து மேலுக்கு முட்டி வர முனைகின்றது, நடுத் தண்டில் தங்கும் ஒரு காட்சி அப்புலவருக்குத் தெரிகின்றது. அதற்கு ஓர் உவமையைக் கண்டு கொண்டார். பிறகு அக்கதிர் வெளிவந்து முற்றுவதற்குமுன் நிமிர்ந்து தலைதூக்கி நிற்கின்றது. அதற்குப் புலவர் ஆளும் உவமை மனிதனுக்கு வேண்டாத குணம் பற்றிய உவமையாக அமைகின்றது. வேண்டா என்று ஒன்றை ஒதுக்கிய ஆசிரியர், மனிதன் மேற்கொள்ள வேண்டிய கற்றறிந்த ஒரு பண்பாட்டை மற்றொரு உவமையாகக் கடைசியில் எடுத்தாளுகின்றார். எதற்கு? ஆம்! அப்பயிர் கதிர் முற்றித் தலை சாய்ந்து 'நான் மற்றவருக்கு உதவத் தக்க வகையில் தியாகம் செய்யத் தயாராகிவிட்டேன். என்னை ஏற்று மற்றவர் வாழுங்கள்' எனக் கூறும் நிலையே அது. இவ்வாறு நெல் விளையும் ஒரே பயிரில் மனித இனத்துக்கு

வேண்டாத ஒன்றையும், இன்றியமையாது வேண்டப் படும் ஒன்றையும் காட்டும் நிலை உணர்ந்து மகிழத்தக்க தாகும்!

'சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே'
(சிந்தா. 53)

என்ற பாடல் எண்ணி எண்ணி இன்புறத் தக்கதாகும். கருவிருந்த நிலைக்கு இங்கு கருவுற்ற பச்சைநிறப் பாம்பை உவமை ஆக்குவது சிறந்தது. தலை நிமிர்ந்த பயிரின் காட்சி, அற்பர் செல்வம் பெற்றால் எப்படித் தலை நிமிர்ந்து தருக்கி நிற்பார்கள் என்ற நிலையை அப்புலவருக்கு நினைவூட்டுகின்றது. இயற்கை அந் தப் பாடத்தை அவருக்கு உணர்த்த அவர் உலகுக்கு உணர்த்திவிட்டார். இறுதியாக முற்றிய பயிர் தலை வணங்கி, இறைஞ்சி நிற்கும் காட்சியே புலவர் உள் ளத்தைத் தொட்டு உயர்ந்த பண்பாட்டை உணர்த்தி விட்டது. 'தேர்ந்த நூல் கல்விசேர் மாந்தர்' என்கின் றார் புலவர். வெறும் கற்றவர் என்று சொல்ல அவர் உள்ளம் விரும்பவில்லை. உலகில் இன்றும் படித்தவர் எனத் தம்மைப் பறை சாற்றிக்கொள்வோரா லன்றோ உலகில் எண்ணற்ற கொடுமைகள் நடைபெறுகின்றன. 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்று பண்பட்ட மேலோர் உள்ளம் எண்ணும் அளவுக்கு இன்று கற்றவர்கள் சென்று விட்டார்கள். இவர்கள் எதைக் கற்றவர்கள்? கற்க வேண்டியவற்றைக் கற்ற

வர்களா? இல்லை: அதனால்தான் வள்ளுவர் கல்வியைப் பற்றிக் கூறும்போது,

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' (குறள் 39)

என்று சொன்னார். அவர் காட்டிய கற்பவை என்பதையே இப்பாடலில் ஆசிரியர் 'தேர்ந்த நூல் கல்வி' என்கின்றார். குறள் போன்ற அறிவும் அன்பும் பண்பும் தரத்தக்க நூல்களைக் கற்றவர்தாம், தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு உயர்ந்த பண்பாட்டில் வாழ முடியும் என்பதை உணர்ந்த தேவர் இவ்வாறு தலை தாழ்ந்து இறைஞ்சும் பணிபுரிபவரை 'தேர்ந்த நூல் கல்விசேர் மாந்தர்' எனக் காட்டுகின்றார். பயிர் விளைந்து உலகுக்குப் பயன்படுவது போன்று, இந்த நல்ல புலவர் வாழ்க்கை நாட்டுக்குப் பயன்படும் என்பதாகும்.

மலர் காட்டும் பண்பு

விருந்தினைப்பற்றி வள்ளுவர் நன்கு விளக்குவர். அவ்விளக்கத்துக்கும் இயற்கையே துணை செய்கின்றது. விருந்தினர் மென்மையான மனம் படைத்தவர்கள்; வரவேற்பவர்தம் பார்வையிலிருந்தே அவர்கள் நிலையை உணர்ந்து அவர் மகிழ்ந்தும் நைந்தும் செல்வர் என்று காட்டுவர் வள்ளுவர். அதற்கு எடுத்துக்காட்ட அவர் பயன் படுத்தியது அனிச்ச மலராகும். அனிச்சம் மிக மென்மை வாய்ந்தது. காமத்துப் பாலில் மிக மென்மையான மலரைக் கூற நினைத்த வள்ளுவர், 'அனிச்சமும் அன்னத்தின் தூவியும்' என்றே எண்ணுகின்றார். அத்தகைய மெல்லிய அனிச்சத்தினும் மெல்லிய உள்ளம் படைத்தவர் விருந்தினர். அனிச்சம் அருகிலெடுத்து முகர்ந்தால்தான் குழையும்;

ஆனால் விருந்தினரோ தூரத்திலிருந்து நோக்கும் பொழுதே குழைந்துவிடுவார்கள் என்ற உண்மையை,

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' (குறள் 90)

என்று காட்டுவர். மலரினையே காமத்துடன் ஒன்று படுத்தி வள்ளுவர் காட்டும் காட்சி, காதல் வாழ்வில் தம்மை மறப்பவருக்குச் சிறந்த பண்பட்ட பாடமாகும். காமத்தின் வழி வாழ நினைக்காதவர் இலர். என்றாலும் அக் காம வாழ்வை நன்கு துய்த்து உணர்பவர் எத்தனை பேர்? மலர்களின் இனிமையை எண்ணுபவர் பலர். ஆனால் அம்மலர்களைக் கெடாமலும் நிலைபேறுமலும் உற்ற பொருளாக்கி ஒம்புவார் எத்தனைபேர்? எண்ணி எண்ணிப் பார்க்கின்றார் வள்ளுவர். மிகச்சிலரே அவற்றின் அருமை தெரிந்து, அவற்றில் தம்மை மறந்து இன்பம் கொண்டு சிறக்க நிற்பதை உணர்கிறார்.

'மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்' (குறள் 1289)

என்று அவர் வாய் பாட்டிசைக்கின்றது.

இவ்வாறு அறநூல்களிலும் பிறநூல்களிலும் இயற்கை மனிதனுக்கு உணர்த்தும் பண்பாடுகள் எண்ணில. அவற்றையெல்லாம் தொகுத்துக் கூறல் எளிதன்று. ஒரு சிலவற்றை முன்னர் இலக்கியம் உணர்த்தும் பண்பாட்டில் கண்டோம். எனவே இந்த அளவோடு இவற்றை நிறுத்தி, பல இயற்கைப் பொருள்களைக் கற்பனைக் கதைகளாகவே காட்டி, கற்றார் மட்டுமன்றிக் கல்லாதவரும்கூடப் புரிந்து கொள்ளும் வகையில் பல புலவர்கள் எழுதியுள்ள

சிறு சிறு கதைகளையும் அவற்றின் மேற்கோள்களை யும் கண்டு அமைவோம். அதற்குமுன் அகப்பொருட் பாடல்களுள் வரும் இறைச்சி, உள்ளுறை உவமம் காட்டும் இன்றியமையாத சில உண்மைகளைக் காணலும் இங்கே தேவையானதென உணர்கின்றேன்.

அகப்பொருளில் இயற்கைப் பாடம்

தலைவன் தலைவியர் மேற்கொள்ளும் காதல் வாழ் வையே தமிழர் அகவாழ்வு என்கின்றனர். உள்ளத் தால் தம்மைப் பரிமாறிக் கொண்ட ஒருத்தனும் ஒருத்தியும் இம்மையில் மட்டுமன்றி மறுமையினும் பிரியமுடியாத பெருவாழ்வை வாழவிரும்புகின்றனர். எனினும் இடையில் சில சுற்றுச் சார்புகள் சிற்சில வேளைகளில் இருவரையும் பிரித்துவைக்கின்றன. ஓத லும், தூதும், பொருளும் பிறவும் பற்றிப் பிரிகின்ற பிரிவுகளை இயல்பாக எண்ணி அவைகளைப் புலவர் அதிகம் பாராட்டவில்லை. ஆனால் இயற்கை நியதிக்கு மாறுபட்ட பரத்தையிற் பிரிவைப் பற்றிப் பல புலவர் கள் எத்தனையோ பாடல்களைப் பாடியுள்ளனர் உற்ற வளாகிய தலைவியை விடுத்து, மற்றவளாகிய பரத்தை யைத் தொடரும் தலைவன் நிலையினை அவன் நாட்டு இயற்கைப்பொருளைக்கொண்டு உணருமாறே பல மருத நிலப் பொருள்களைப் புலவர்கள் முன் கொணர்ந்து காட்டுவர். பரத்தையிற் பிரிவு ஊடலுக்கு இடம் தருவது; ஊடல் மருத நிலத்துக்கு ஏற்றது. எனவே மருதநிலத்து மாடும் கோரையும் புல்லும் நெல்லு மாகிய இயற்கைப் பொருள்களைக் காட்டித் தலைவனை யும் அவனுக்குத் தூதாக வரும் பாணனையும், தோழி யும் தலைவியும் திருத்த நினைக்கும் முறையில் பல புலவர்கள் பாட்டிசைத்துள்ளனர். அனைத்தையும்

ஈண்டு காணமுடியுமோ!' அகநானூறும், நற்றிணையும், குறுந்தொகையும், பிற்காலக் கோவைப் பாடல்களும் இவைபற்றிப் பலவாக விளக்குகின்றன. 'தலைவர் ஊர் இத்தகையது; அதில் வாழும் மாட்டின் பண்பு இது. அப் பண்புவழி வாழும் தலைவர் எப்படித் தலைவியொடு இருப்பார்?' என்பது போன்று பல உள்ளுறை இறைச்சிப் பொருள்களை வைத்துப் பாடினர் புலவர்.

மருத நிலத்தில் எருமைகள் அதிகம். அது வயல் வெளியின் புறத்தே உள்ள புல்லை மேய்தல் மரபு; முறையும்கூட. ஆனால் சில எருமைகள் அந்த வேலிகளை முறித்தெறிந்து, வயலுள் புகுந்து நல்ல பயிர்களை மிதித்தும் துவைத்தும் மேய்ந்தும் கெடுக்கின்றன. வயலுக்குரியவன் வந்து அவற்றை அடித்து ஓட்டுகின்றான். இப்படிப்பட்ட நாட்டை உடைய தலைவன் இவன் என்றுதான் தோழி சொல்லுவாள். இதில் மருதவளம் நன்கு காட்டப்பட்டுளது என்று அறியாதோர் எண்ணி மகிழ்வர். ஆனால் அதனுள் தோழிகாட்ட நினைத்தது என்ன? எருமை தனக்கே உரித்தான புல்லை மேயாது கட்டுக்காவலை விட்டுக் கடந்து பிறருக்கு உரிய பயிரை மேய்ந்து பழிப் புண்டமை போன்று, தனக்கே உரிய தலைவியோடு உலக வரம்பிற்குக் கட்டுப்பட்டு எல்லை கடவாது இல்லற நெறியிலே இருந்து வாழவேண்டிய தலைவன், தன் நிலைகெட்டு, எல்லை கடந்து, மற்றவருக்கு உரியரான வேற்று மகளிருடன் கலந்து ஊரில் பழியையும் இழிவையும் ஏற்றுக்கொண்டான் என்பதையே அவள் காட்ட நினைத்தாள்; காட்டியும் விட்டாள். இதை உணர்ந்த தலைவன் திருத்தியிருக்கத் தானே வேண்டும்.

இயற்கையின் தாயுள்ளம்

இவ்வாறு மக்கள் சமுதாயத்தில் இயைந்து வாழச் சமுதாயமும் தனி மனிதனும் மேற்கொள்ள வேண்டிய நல்ல பண்புகளையும் நீக்கவேண்டிய தீய செயல்களையும் பலவகையில் புலவர்கள் காட்டியுள்ளார்கள். சங்க இலக்கியங்களும், தொல்காப்பியமும் காட்டும் திணைநிலப் பிரிவுகளே இப்பண்பாட்டின் அடிப்படையில் பிரிக்கப்பட்டவைகளே. திணை என்ற சொல்லுக்கே ஒழுக்கம் என்றுதான் பொருள் கூறுவர். உலகத்தை ஐவகைத்திணை எனப் பிரித்தார்கள் என்ருல், மக்கள் அந்த ஐவகை ஒழுக்க நெறியில் பண்பட்டு வாழவேண்டும் என்ற நியதியே அடிப்படையாக அமைகின்றது. அவனுடைய நல்வாழ்வைச் சிறக்க வைக்கவும் தீவாழ்வைத் திருத்தவுமே அவ்வந் நிலத்து உள்ள அத்தனைப் பொருள்களும் அவனுக்குப் பயன்படுகின்றன. இந்த உண்மையை உணர்ந்தால் மனிதன் இயற்கையொடு இயைந்த வாழ்வு வாழ்ந்து இன்பம் பெறுவான். அன்றேல்.....யாரறிவார் ?

தமிழ்நாட்டு நிலப்பிரிவே இந்த அடிப்படையில் அமைந்தது. உலகில் உள்ள எல்லா இயற்கைப் பொருளும் தம்மை மற்றவர்களுக்காக வாழவைக்கின்றன. இந் நிகழ்ச்சி நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இயல்பான நியதிப்படிச் செயல்படுகின்றது. அறிவு பெற்ற மனிதனே நல்லதற்குப் பயன்பட வேண்டிய அறிவைத் தன்மனம் போனவழி யெல்லாம் செலுத்தி, இயற்கையோடு மாறுபட்டுச் செயற்கைச் சேற்றில் சிக்கி மீள வழிகாணுது தடுமாறுகின்ருன். இந்தக் கொடுநிலை மாறவே இயற்கை அவன் பக்கத்தில் இருந்துகொண்டே அவனை வாழவைக்க வேண்டும்

என்ற கருத்தால் பல உண்மைகளை உணர்த்திக் கொண்டே இருக்கின்றது. இன்றில்லாவிட்டாலும் தன்னில் தோன்றி, தன்னில் வேருகாது வாழவேண்டிய மனிதன் வேருக நினைத்து ஓடினாலும், என்ருவது தன் வழிக்கு வருவான் என்ற உணர்ச்சியிலே இன்று மட்டுமன்றி என்றென்றும் இயற்கை அவனுக்குப் பண்பாட்டையும் அறவாழ்வையும் உணர்த்திக் கொண்டே இருக்கும். என்றென்றும் இயற்கை உணவாக, மருந்தாக, உற்றப் பல தேவைப்பொருளாக அவனுக்கு உதவிக் கொண்டேதான் இருக்கும்.

மனிதனின் வாழ்வுக்கு எத்தனையோ செடிகளும் கொடிகளும் மருந்தாகி உதவுகின்றன. 'மருந்தாகித் தப்பா மரத்தற்று' என்றபடி நல்லமரங்களை மருந்தாகப் பயன்படுத்துகிருன் மனிதன். கனியும் கிழங்கும், காயும் வேரும், புல்லும் பூண்டும், ஏன் பிற உயிர்ப் பொருள்களும் எத்தனையோ வகையில் மனிதனுக்கு உணவாவதோடு, மருந்தாகவும் இன்று அமைவதை அறியாதார் யார்? இந்த நாகரிக உலகில் கீரையை அல்லது பச்சிலையைக் கொண்டு நோய் நீக்க வழி அறிந்தும் மற்ற வழிகளில் ஆயிரமாயிரமாகக் கொட்டிக் கொடுக்கும் நாகரிகத்தைக் காண்கிறேம். அது இயற்கைக்கு மாறுபட்ட செயற்கை வாழ்வேயாகும். இன்றில்லாவிட்டாலும் என்ருவது அவன் அந்த உண்மையை உணரத்தான் வேண்டும். உணர்ந்தால் தான் உய்வுண்டு. இன்றேல்.....

கதைகள் வழி

இதுவரை இயல்பான இயற்கை உணர்வுகளைக் கண்டோம். இனி வெறும் கற்பனைக் கதைகளோடு இவ்வியற்கையையும் அதில் வாழும் புல் பூண்டு

பறவை விலங்குகளையும் இணைத்து மனிதனுக்குச் சில புலவர்கள் பண்பாட்டையும் வாழவேண்டிய வகைகளையும் உணர்த்துவர். பஞ்சதந்திரக் கதைகள் நாடறிந்தவை. உலகில் பிறந்த மனிதன் மற்றவர்களுடன் கலந்து வாழும்போது என்னென்ன வகையில் அமையவேண்டும் என்பவற்றையெல்லாம் எத்தனையோ கதைகள் மூலம் விளக்குகின்றனர் எனக் காண்கின்றோம். அக்கதைகள் பலவும் நாட்டுக்கு அறிமுகமானவையே. அவை வெறும் கற்பனைகள்தாம் என்றாலும் அவை எத்தனையோ நீதிகளை மனிதனுக்கு உணர்த்துகின்றனவே.

இலக்கணத்தில் அஃறிணைப் பொருள்களோடு பேசுவதற்கும் இலக்கணம் வகுத்துள்ளனர். வாடிய மனித உள்ளம் வாழ்வுபெற அவற்றோடு பேசுவது பயன் தரும் என்கின்றனர். சங்ககாலத் தலைவனும் தலைவியும் அவற்றொடு பேசித் தத்தம் தனிமை தீர்கின்றனர். அவற்றோடு பேசும் முகத்தான் ஒருவர் மற்றவருக்கும் அறிவுணர்த்துகின்றனர். எனவே இப்படிப் பேசாதனவற்றைப் பேசவைத்து இயற்கை அறிவூட்டும் நிலையும் உண்டு. அதனாலேயே இலக்கணப் புலவர்,

> 'கேட்பன போலவும் கிளக்குந போலவும்
> இயங்குன போலவும் இயற்றுந போலவும்
> அஃறிணை மருங்கினும் அறையப் படுமே'

என வரம்பிழைத்தனர். எனவே எல்லா இயற்கைப் பொருள்களும் நமக்கு, பேசாமல் பேசி உணர்த்துகின்ற உண்மைகள் பல-பண்பாடுகள் பல – பயன் தரு அறங்கள் பல. நாம் அவற்றின் வழி நடந்து நலம்பெறுவோமாக!

VI. சமயம் வளர்த்த பண்பாடு

எது சமயம்?—தொல்காப்பிய விளக்கம்—சமய நெறியாளர்—திருமூலர் அன்பு—மணி வாசகர்—இன்பமும் துன்பமும்—உலகம் வாழ—மனுச் சோழன்—மெய்ப்பொருளார்—சமுதாயத்தைத் திருத்தும் சமயம்—சமயம் உலக வாழ்வுக்கே—புறமும் அகமும்—விழாக்களின் அடிப்படை—கோயில் அமைப்பு—யார் பின் பற்றுபவர்?—உடலுக்கும் உளத்துக்கும்—யாம் இரப்பவை.

எது சமயம்?

பண்பாட்டைப் பற்றி முறையாகக் கண்டு வருகின்றோம். அது பல்வேறு துறைகளில் மனித வாழ்வைப் பற்றி வளர்ந்து வருகின்றது என்பதையும் அறிகின்றோம். அத்துறைகளுள் ஒன்று — தலை சிறந்தது — சமயம். சமயம் என்பதை என்ன என்று அறிந்து கொண்டால் சொல்லாமலேயே அது பண்பாட்டை வளர்க்கும் ஒன்று என்று அறிந்து கொள்ளமுடியும். இடைக் காலத்திலும் இன்றும் சிலர் சமயம் தனிப்பட்ட ஒன்று என்றும் அதற்கும் வாழ்வுக்கும் தொடர்பில்லை என்றும் எண்ணியும் பேசியும் வருகின்றனர். அவர்தம் எண்ண நிலைக்கு ஏற்றபடி சிற்சில மாறுதல்கள் சமய இடைத் தளத்தில் தோன்றி உள்ளன என்பது உண்

மையாயினும், ஆராய்ந்து பார்த்தால் அச்சமய அடிப்படை வாழ்வொடு பொருந்திய ஒன்றே என்பது விளங்காமற் போகாது. உண்மையில் அச்சமய அடிப்படையினையும், அது மக்கட் சமுதாயத்துக்குச் செய்யும் தொண்டினையும், அது வளர்த்து வரும் பண்பாட்டினையும் அறிவோமானால் மனிதன் எதை விட நேரினும் சமயத்தை விடலாகாது என்ற உண்மை உணர்வு தோன்றுமல் போகாது. எனவே முதலில் சமயம் என்ன என்பதையும் அதன் அடிப்படை எத்தகையது என்பதையும் கண்டு மேலே அது வளர்க்கும் பண்பாட்டை ஆராயலாம்.

சமயம் என்பது தெய்வ சம்பந்த முடையது எனச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். கடவுளை வழிபடுகின்ற நெறியே சமயம். என்றாலும் அச்சமயம் ஏன் மக்களிடத்தில் உண்டாக வேண்டும்? காணுத கடவுளைப் பற்றி மனிதன் ஏன் கவலைப்படவேண்டும்? இவ்வாறான கேள்விகள் எழுவது இயற்கை. மிகப் பழங்காலத்தில் மனிதன் சமயத்தோடு வாழ்ந்தானா? என்று எண்ணிப் பார்க்கும்போது ஓர் உண்மை புலனாகும். மனிதன் அறிவு பெற்ற நிலையிலேயே சமயம் உண்டாகியிருக்க வேண்டும். விலங்கொடு விலங்காக, தன்னை எண்ணாது கண்டதைத் தின்று காலம் கழித்த நாளில் சமயம் இல்லாதிருந்திருக்கலாம். ஆனால் அவன் சிந்திக்கத் தொடங்கிய அறிவு பெற்ற நாளிலே சமயம் பிறந்தது. அந்த நாள் எதுவாயினும் — எது என்று வரையறுக்க முடியவில்லை—அது அவன் வரலாற்றில் சிறந்த நாள்: மனிதனை மனிதனுக்கிய நாளே அதுவாகும். சமயம் உண்டான வகையினை முன்னரே ஓரிரு இடங்களில் கண்டிருக்கிறோம்.

சமயம் என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் நல்ல விளக்கங்களைக் காண்கின்றோம். நம்பிக்கை அடிப்படையில் வழிபாடாற்றுவதும், கடமை உணர்ந்து செயலாற்றுவதும், அன்பு தாழ்மை ஆகியவற்றின் அடிப்படையில் கடவுள் உணர்வோடு தம் கடமையைச் செய்வதுமே சமயம் என்பர்.[1] அறிவு ஒழுக்கநெறி நின்று கடவுள் உணர்வு பெற்று வாழ்வதும் சமயமாகும்.[2] எனவே இந்த அடிப்படைகளை வாழ்வுக்கு வேண்டாமென்று சொல்லுபவர்களே சமயம் வேண்டாம் என்பவராவர். அன்பு, கடமை, ஒழுக்கம் இவற்றை அடிப்படையாகக் கொண்டே உலக சமயங்கள் அனைத்தும் உண்டாயின. பின்னால் அச்சமய நெறியைப் பின்பற்றுகின்றவருள் சிலர் வழுக்கி வீழ்ந்தும் தம் கருத்துப்படி சமயத்தை ஈர்த்தும் நிலை கெடுகிறார்களே யன்றி, சமய அடிப்படை எச்சமயத்திலும் ஒன்றே. இதைத்தான் ஔவையார் எச்சமயத்தோர் சொல்லும் **தீதொழிய நன்மை செயல்** என்றார். ஆம்! சமயம் தீமையை நீக்கி நன்மைக்கு வழி காட்டுவதேயாகும்.

இந்த அடிப்படை உண்மையே மனித வாழ்வின் பண்பாட்டைச் சமயம் எப்படி மேற்கொண்டுள்ளது என்பதைக் காட்டுகின்றது. இதை உணர்ந்தால் சமயம் பண்பாடு இரண்டும் இணைந்தவை என்பது புலனாகும். என்றாலும் அச்சமய நெறிபற்றி வாழ்க்கைக் குற்ற பண்பாடுகள் சிலவற்றை கண்டு அமைவோம்.

தொல்காப்பிய விளக்கம்

தெய்வ வழிபாடு மிகத் தொன்மை வாய்ந்தது. தொல்காப்பியர் காலத்திலேயே தெய்வ வழிபாட்டைக்

1. Chambers's Twentieth Century Dictionary P. 783.
2. Oxford Dictionary P. 988.

காண்கிறோம். தெய்வத்தை வழிபடுவோர் பழிக்கு அஞ்சுவர்; கொடுஞ் செயல் ஆற்றமாட்டார். அவர்கள் பெற்ற செல்வம் பழிதீர்ந்த செல்வமாகும். அவர் குடும்பமும் வாழையடி வாழை எனச் சிறக்கும். இந்த உண்மைகளைத் தொல்காப்பியர் 'புறநிலை வாழ்த்து' என்ற துறையுள் அடக்கிக் காட்டுவர்.

'வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப
பழிதீர் செல்வமோடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்து' (செய். 106)

இவ்வாறான மெய்ச் சமய நெறியில் பொய்யான மாறுபாடுகள் பல புகுந்தன. அன்புக்காக வாழவேண்டிய சமயங்கள் ஒன்றற் கொன்று மாறுபட்டுப் பெரும் போர்களெல்லாம் நடத்தியுள்ளன. ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் நடைபெற்ற சமயப் போர்களும் மத்திய ஆசியாவில் இடைக்காலத்தில் நடைபெற்ற சமயப் போர்களும் (Wars of crusades), இந்தத் தலைமுறையில் இந்தியா துண்டாடப் பெறுவதன்முன் நடைபெற்ற போர்களும் சமயப் போர்களன்றோ! ஆனால் அப் போர்களை நடத்துபவரை உண்மையில் பண்பாடு நிறைந்த சமயத்தவர் என்று சொல்லலாமா? சமணர்களை வாதில் வென்று, சமணர்களைப் பழிக்கின்ற சம்பந்தர், பண்பட்ட உள்ளத்தொடு எண்ணும்போது சிவபெருமானே சமணரையும் இயக்குகின்றான் (1·66·10, 2·83·10) என்பதை உணர்ந்து இரு இடங்களில் பாடியுள்ளார். மாணிக்க வாசகர் 'தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்' என்ற உண்மையை உலகுக்குக் காட்டியுள்ளனர். இவ்வாறு காட்டிய சைவ அடியவர் பலர். அவற்றை விரிப்பிற் பெருகும். சைவ சமயத்தில் அக்காலத்தில் யாதொரு வேறுபாடும்

இல்லை. சாதியாலும், பொருளாலும் பிறவற்றாலும் வளர்ந்த பண்பாடற்ற வேறுபாடுகள் சமயம் காணுத ஒன்றாகும். இத்தகைய சமய நெறியே சங்ககாலத்தில் வாழ்ந்தது. அதனாலேயே அக்காலத்தில் பல சமயத் தவர்கள் வாழ்ந்திந்தாலும் அவர்கள் தம்முள் இணைந்து வாழ்ந்திருந்தனர். இணைந்து வாழ்வது தானே பண்பாடு.

சமய நெறியாளர்

சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவராயினும், அவர் எல்லாச் சமயங்களையும் சமமாகவே தம் இலக்கியத்தில் பாராட்டு கின்றார். தேவார காலத்திலும் இன்று காணும் பல மாறுட்டங்களைக் காண முடியாது. அந்தணர் குலத்த வரான அப்பூதியார் வேளாளர் குலத்து அப்பரைத் தெய்வமாகவே வழிபடுகிறார். அப்பூதியினுடைய சமயப்பண்பாடு மிகச் சிறந்தது. அடியவரை உண் பித்தலே கடன என்ற உறுதியில் இறந்த மகனைப் பற் றியும் கவலையற்று இருந்தார். இது யாரால் இயலும்? **'பெறவரும் புதல்வன் தன்னை பாயினுட்பொதிந்து மூடி'** (29) கவலை காட்டாது அப்பருக்குச் சோறிட்டார் என் றும், அப்பர் அவனைப் பற்றிக் கேட்டபோது **'இப்போது இங்கவன் உதவான்'** (33) என்று கூறினர் என்றும் சேக்கிழார் காட்டுவர். எனவே சாதி வேறு பாடு காட்டாதது மட்டுமன்றி, மற்றவர் மன மாறுபட வும் கூடாது என்ற பண்பாட்டில் அச்சமயத் தலைவர் சிறந்தவரானார்.

சேக்கிழார் ஓரிடத்தில் அப்பரையும் சம்பந்தரையும் இணைத்துப் பார்க்கின்றார். சைவத்துக்கு இருவரும் இரு கண்கள். சைவம் உலகுக்கு உணர்த்தும் பண்பாடு

யாது? அருளும் அன்பு மன்றே! அவ்விருவர்தம் அடியவர் திருக்கூட்டங்களை அன்புக் கடலாகவும் அருட் கடலாகவுமே காண்கின்றார் சேக்கிழார். அவை இருப்பின் எவை தேவை?

'அருட்பெருகு தனிக் கடலும் உலகுக்குக் கெல்லாம்
அன்பு செறிகடலும்' (திருநா· 185)

என்பது சேக்கிழார் வாக்கு. இத்தையை அருளும் அன்பும் கலந்ததே சமயப் பண்பாடு. மனிதன் இவற்றைப் பெறுவதே வாழ்க்கையின் நலம் நிறைந்த பண்பாடு என்ற உண்மையை உலக அறநெறியாளர் அனைவரும் காட்டுகின்றனர். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ற வள்ளுவர் காட்டிய மக்கள் பண்பாடே சமய நெறியிலும் சிவ வழிபாட்டிலும் உள்ளது என்ற உண்மையைத் திருமூலர்,

'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்திலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே'

எனக் காட்டுவர். எனவே சமயப் பண்பாடு அன்பெனும் அடிப்படையில் கட்டப்பட்டது. இவ் வன்புடைவர்தாம் ஆண்டவனை அடையமுடியும் என்று எல்லாச் சமயத்தவரும் எடுத்துக்காட்டி வருகின்றனர். ஆண்டவனை மணிவாசகர்,

அன்பெனும் பிடியுள் அகப்படு மலையே
அன்பெனும் குடில் புகுல் அரசே

எனப் பாடியுள்ளார். அப்படியே இயேசுவும் அன்பின் வழியே பிறரை நேசிப்பதே கடவுள் பற்று என்பதைக் காட்டியுள்ளார். இத்தகைய அன்புடையவர்களை

எப்படிக் காண்பது? அவர் உள்ளம் பண்பட்டதாக இருக்கும். அவர் தோற்றம் அதை நன்கு விளக்கும். அவர்கள் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றுக எண்ணுபவர். துன்பத்தைச் சிரித்து வரவேற்பர். எனவே அவர்களுக்கு 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை.' அவர்கள் அறிவு நிரம்பப் பெற்றவராவர்; கற்றவராவர், கோபம், காமம் முதலியவற்றைக் கடிந்தவராவர். இத் தகைய நல்ல பண்பாடுகளையும் சமயம் மக்கள் வாழ்வுக்கு அளிக்கின்றது என்றால் இதைவிடச் சிறந்த பண்பட்ட வாழ்க்கை முறையை வேறு எங்கே காணமுடியும்? நக்கீரர் இப் பண்பட்ட சமய நெறியாளர் தன்மைகளைத் தொகுத்துக் கூறும் திருமுருகாற்றுப்படையில்,

> இகலொடு
> செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
> கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
> தாம் வரம்பாகிய தலைமையர், காமமொடு
> கடுஞ்சினம் கடிந்த காட்சியர், இடும்பை
> யாவதும் அறியா இயல்பினர்' எனக் (முருகு 131–36)

காட்டி, அப்படிப்பட்ட நல்ல பண்பாட்டாளருக்கே கடவுள் காட்சி தருவான் என்பதையும் முறைப்படி எடுத்து விளக்கியுள்ளார்

திருமூலர் அன்பு

இனி, அன்றுதொட்டு இன்றுவரை சமய நெறி பற்றி வாழ்ந்த அடியவர்களின் வாழ்வையும் வாய் மொழிகளையும் ஆராய்ந்து பார்த்தால் சமயம் எவ் வெவ்வாறு பண்பாட்டை வளர்த்துள்ளது என்பதை அறியலாம். மற்றவரை வாடவிடக் கூடாது ஏன்பதே வாழ்வின் அடிப்படைப் பண்பாடு. மற்றவர் மட்டுமன்றி

மற்ற எல்லா உயிர்களுமே வாடுதல் கூடாது என் பதே தமிழர்தம் தலையாய பண்பாடு. அதனாலேயே 'முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்' அளித்த தமிழ் மன்னரைக் காணமுடிகின்றது. சைவ சமயத்தின் சிறந்த இலக்கியமாகிய திருமந்திரத்தை இயற்றிய திருமூலர் வாழ்க்கை அவற்றிலெல்லாம் மேம்பட்டு விளங்குகின்றது. தன்னையே அன்பிற்கு ஒப்படைத்தார் அவர். அவர் சென்ற வழியில் திருவாவடுதுறை இருந்தது. அந்த ஊர் எல்லையில் அவர் சென்றபொழுது பசுக்கள் கூட்டமாக வாடிய முகத்துடன் இருப்பதைக் கண்டார்; அருகில் சென் ரூர். அப்பசுக்களுக்குத் தலைவனாகிய 'மூலன்' என் னும் இடையன் இறந்துகிடப்பதையும் அவன் உட லைச் சுற்றிப் பசுக்கள் வாடுவதையும் கண்டார். தம்மை மறந்தார்; தம் பயணத்தை மறந்தார். உயிர் இடமாறும் வித்தை அவருக்குத் தெரிந்த ஒன்று. பசுக் களுக்கு எப்படியும் உதவ வேண்டுமெனவும், அதனால் தான் கெடினும் தவறில்லை எனவும் கருதித் தன் உடலை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு அந்த இடை யன் உடலிலே புகுந்து எழுந்தார். பசுக்கள் மகிழ்ந் தன. மாலையில் அவை வழி காட்ட, அவற்றுடன் ஊர் சென்ரூர். பசுக்கள் பழக்கத்தினால் தத்தம் வீடு சென்றன. மூலன் வீட்டுப் பசுவும் அதன்வீடுசென்றது. கடைசியாகச் சென்ற அப்பசுவுடன் அவ்வீடு சென் ரூர்; உள்ளே செல்லவில்லை. மனைத் தலைவி அழைத்தும் செல்லவில்லை. வெளியே வந்தார்; அந்தப் பழைய உட லைத் தேடினார்; காணவில்லை. எனவே தனிமையாக இருந்து 'மூலன்' என்ற அந்தப் பெயரையே தாங்கித் திருமூலராகி, திருமந்திரம் என்னும் ஒப்பற்ற பெரு நூலை இயற்றித் தந்தார். அவர் பசுக்களின் துன்பநிலை

கண்டு வருந்தியதைச் சேச்கிழார் படிப்பவர் மனம் குழையும்படி பாடியுள்ளார்.

'மற்றவன் தன் உடம்பினை அக் கோக்குலங்கள் வந்த
ணைந்து
சுற்றிமிகக் கதறுவன சுழல்வன மோப்பனவாக
நற்றவர் யோகியர் காண நம்பர் அருளாலே, 'ஆ
வுற்றதுயர் இவைநீங்க ஒழிப்பன்' என உணர்கின்றார் (12)

இவன்உயிர்பெற் றெழில்அன்றி யாக்கள்இடர்
நீங்காவென்று
அவன்உடலில் தம்உயிரை அடைவிக்க அருள்புரியும்
தவமுனிவர் தம்உடம்புக் கரண்செய்து தாமுயன்ற
பவனவழி அவனுடலில் தம்உயிரைப் பாய்த்தினர் (13)

என்பன அவர் பாடல்கள். இதனினும் சிறந்த பண்பாடு எங்கே காட்ட முடியும்? தான் கெடினும் மற்றவரை—மற்ற உயிர்களை—வாழவைக்கும் பண்பாடே சமயப் பண்பாடு. இதைத்தான் இயேசுபெருமான் கோதுமையின் உவமை வாயிலாக விளக்கினார். கோதுமை இருந்தபோதும் மக்களுக்கு உணவாகி அவர்களை வாழவைத்தது. பின் வயலுள் புகுந்து நீருள் மூழ்கி மூளைத்த காலையும்—தான் கெட்ட பிறகும்—மேலும் அதிக கோதுமையை விளைத்து உலகுக்கு உணவளித்தது. இதுவே சமயப் பண்பாடு; தாம் வாழுங்காலத்தில் மட்டுமன்றி வீழ்ந்த பிறகும்கூட உலகம் வாழ வழிசெய்வது. அப்படிச் செய்த சமயத் தலைவர்களே காலத்தை வென்று இன்றளவும் கெடாது வாழ்கின்றனர்.

மணி வாசகர்

மாணிக்கவாசகர் சிறந்த சமயத் தலைவர். அவர் வாழ்வே பண்பட்ட ஒன்று. அவ்வாழ்க்கை உலகுக்கு நல்லதொரு பண்பாட்டைத் தந்துள்ளது. குதிரை

வாங்கச் சென்றவர் ஓய்வு பெற்றார்; குருந்த நிழலில் இறையருளும் பெற்றார். தான் அதுவரை சேர்த்து வைத்த செல்வத்தில் அங்கே ஆண்டவனுக்குக் கோயில் கட்ட முனைந்தார். கோயில்பணி நன்கு நடைபெற்றது. அதனால் அவர் புகழ், நாடுமுழு வதும் பரவிற்று; பாண்டியன் புகழையும் விஞ்சக் கூடிய நிலை உண்டாயிற்று. மற்ற அமைச்சர்கள் பொறுமை கொண்டார்கள். மன்னவனிடம் பொய் கூறி, அவன் பணத்திலேயே கோயில் கட்டுவதா கக் கூறிப் பின் அவருக்குப் பல இன்னல் இழைத்த னர். மணிவாசகர் அவற்றிற்கெல்லாம் அஞ்சவில்லை. ஒருவேளை மன்னவன் பணத்தைத் திருப்பி அனுப்பி விட்டிருப்பார்; ஆனால் சான்றில்லை. எனவே அவர் புகழைப் பழியாக்க மன்னவனும் பிற அமைச்சர்களும் முயன்று அந்த வேளையில் ஓரளவு வெற்றியும் பெற்று விட்டார்கள். மணிவாசகரின் சில மறைமுக விரோதி கள் உள்ளே பின்னால் கைதட்டி மகிழ்ந்திருப்பர். என்றாலும் காலம் அவர்கள் பெற்ற தோல்வியையே காட்டுகின்றது. அப்பாண்டியனும் அவன் பரம்பரை யும் அமைச்சரும் அடியோடு மாண்டுவிட்டனர்; ஊர் பேரற்று மறைந்தனர். ஆனால் மாணிக்கவாசகர் இன் றும் சிறக்க மதுரையில் மட்டுமன்றி ஊர் தோறும் —மக்கள் உள்ளந்தோறும்—வாழ்கின்றார். அவர் உல குக்கு உணர்த்திய ஒருநெறி பண்பட்ட நெறியாகும். அதுதான் 'பேர் வேண்டேன்' என்ற பண்பாடாகும். இன்று உலகில் பேரும் புகழும் வேண்டி எத்தனையோ கொடுமைகள் நடைபெறுகின்றன. அதனால் செய்யத் தகாத செயல்களையும் சிலர் செய்வர். இயல்பாகத் தொண்டு செய்து சிலருக்குப் புகழ் சேரும். அதைக் கண்டு பிறர் பொறுமை அடைவர். எனவே இப்புகழ்

வள்ளுவர் காட்டியபடி உலகில் வாழ ஓரளவு தேவை என்றாலும் அதனால் பல போராட்டங்கள் நிகழ்கின்றன. இதனாலன்றோ மணிவாசகர் 'பேர் வேண்டேன்' என்று சொன்னதோடு, அமைதியாகக் கடவுள் பணி செய்தார், இந்த உண்மையைத்தான் சங்க காலப் புலவர்

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' (புறம் 192')

என்று காட்டிவிட்டார். இத்தகைய பண்பாடு மாணிக்கவாசகருக்குச் சமய அடிப்படையிலே முகிழ்த்தது.

இன்பமும் துன்பமும்

மற்றும் அவர்காட்டும் மற்றொரு பண்பாடும் எண்ணத்தக்கது. 'இன்பம் எங்கே? இன்பம் எங்கே?' என்று தேடி ஆடி அலுத்து வாடும் சமூகத்துக்கு—தேடிய இன்பம் கிடைக்காவிட்டால் மற்றவரை வருத்தும் சமூகத்துக்கு—அவர் உணர்த்தும் பண்பாடு உயர்ந்ததாகும். இன்பம் வந்தால் அஞ்சுகின்றார் அவர்.

'களிப்பெலாம் மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மரமலை மேவிய கடலே'

என்று அவர் பாடும் பண்பாடு ஒவ்வொருவர் வாழ்வினும் உண்டானால் பின் வேறு என்ன வேண்டும் சமூகத்துக்கு?

இவ்வுண்மையைப் பல சமயத் தலைவர்கள் உணர்ந்து காட்டியுள்ளார்கள். உண்மையில் ஆண்டவன் அடியவர்கள் துன்பத்தை ஏற்றலே வேண்டும். துன்பப்படுகின்றவர்களே உண்மையில் ஆண்டவனுக்கு வேண்டியவராவர். இவ்வுண்மையை இயேசு

பெருமான் **'துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராச்சியம் அவர்களுடையது'** என்று திட்டமாக எடுத்துக் காட்டியுள்ளார். திருக்குறானும் இந்த உண்மையை நன்குகாட்டி அன்பால் வாழச் சொல்லுகிறது. திருநாவுக்கரசர் தாம் பல்வேறு அல்லல்களில் பட்டுழன்று பின் நலமுற்றதை எல்லாம் எண்ணி,

'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தாய்'

என்று பாடுவார். வைணவ அடியாராகிய நம்மாழ்வார்

'நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க
எண்ணருந் துயர் விளைக்கும் இவைஎன்ன உலகியற்கை ?

என்று அடியவர் இயல்பே அது என விளக்கியுள்ளார். எனவே மற்றவர் இன்பம் பெறுவதற்காக, தம்மை ஒறுத்துத் தம் இன்பத்தையும் தியாகம் செய்யும் வாழ்வே சமய வாழ்வாகும். கடவுளின் கோலங்களையும், அவர்கள் தங்குமிடங்களையும் அவர்தம் அணி முதலியவற்றையும் காட்டி அனைத்தும் தியாக வாழ்வின் அடிப்படையே என விளக்குவர் அறிஞர். எனவே தன்னை ஒறுத்து உலகை மகிழ்விக்கும் பண்பாட்டைச் சமயம் சமூகத்துக்கு வழங்குகின்றதைக் கண்டு மகிழவேண்டும் நாம். இவைபற்றி நான் முன்னமே வேறு நூலில் விளக்கியுள்ளேன்[1]

உலகம் வாழ

சில நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த தாயுமானவர் காட்டிய பண்பாட்டைக் காணலாம். ஆண்டவன் முன்னின்று ஆடிப்பாடிப் பரவி வேண்டுகின்றார்; அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஆண்ட

1. சமயமும் சமூகமும்.

வன் நேரில்வந்து 'ஏன்ன வேண்டும்?' எனக் கேட்டிருப் பார். அடிகள் தமக்கென ஒன்றையும் கேட்கவில்லை. தன் உற்றார், தெருவார், ஊரார், மொழியார் நாட் டார், நகரத்தார் என்ற பாகுபாடே அவர் உள்ளத்தில் எழவில்லை. உலகம் அவர் முன்னின்றது. உலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் வாழவேண்டும் என்று எண்ணிற்று அவர் உள்ளம். வாய்,

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே'

என்று கேட்டது. ஆம். உலகம் வாழவேண்டும் என்ற ஒன்றைத் தவிர வேறு எதையுமே சமயத் தலை வர்கள் எண்ணியது கிடையாது. கடவுளை முன் னிறுத்தி முதன் முதல் தோத்திரப் பாடல் செய்தவர் நக்கீரர். அவர் ஏதோ கொடும் பூதத்திடம் அகப்பட் டுக் கொண்டாரென்றும், அவரைப் போன்று பலர் அங்கே இருந்தனர் என்றும் அனைவரையும் விடுவிக்க வேண்டியே திருமுருகாற்றுப்படையை அவர் பாடினர் என்றும் சொல்லுவர். அந்த ஆராய்ச்சி இங்கே நமக் குத் தேவையில்லை. அவர் பாடத் தொடங்குமுன் அவ ரிடம் தன்னலம் மறைந்தது, பிறநலம்—உலக நலம்— தலைதூக்கிற்று. உலகம் இன்புறுவதே தன் இன்பத் துக்கு ஊற்று என்ற பண்பாட்டை அவர் உள்ளம் அவருக்கு உணர்த்திற்று. எனவே அவர்,

'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு'

எனத் தொடங்கிவிட்டார். எனவே உலகை உவக்கச் செய்யும் பணியே செம்மைப் பணி என்பதை அந்த அடிகளால் விளக்குகின்றார். பெரிய புராணம் பாட

நினைத்த சேக்கிழாருக்கு இறைவன் 'உலகெலாம்' என்றே அடியெடுத்துத் தந்ததாகப் புராணம் கூறுகின்றது. எல்லா உலகங்களும் வாழவேண்டும் என்பதே அக்குறிக்கோள். அவ்வுலகங்களை வாழவைக்கும் பண்பாட்டை அவர் நூல் விளக்க வேண்டும் என்பதே அதன் அடிப்படை. இப்படியே வாழும் நல்ல இலக்கியங்களைப் பாடிய சமயத் தலைவர்களெல்லாரும் உலகை எண்ணியே பாட்டிசைத்து அவ்வுலகம் வாழவும் வழிவகுக்கின்றனர்.

மனுச் சோழன்

அரசாண்ட சில சமயத் தலைவர்கள் உயிர் ஓம்பும் நன்னெறியிலும் முறைசெய்த நன்னெறியிலும் சிறந்த பண்பாட்டைக் காட்டியுள்ளனர். பாண்டியன் முன்னின்று வழக்குரைத்த கண்ணகி தன் நாட்டுமன்னர் தம் பெருமையைக் கூறும்போது,

> 'நாவின் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தன்
> அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்'
> (வழக்குரை கதை)

என்று விறுதோன்றப் பேசுகின்றாள். இந்த மன்னன் வரலாற்றைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் அழகுபடக் காட்டுகின்றார். இவ் வரலாறு தமிழ்நாட்டு அரசியல் அன்று அமைந்த பண்பாட்டுக்கும் எடுத்துக் காட்டாக அமையும்; எனினும் சேக்கிழார் தம் சமய நூலாகிய பெரிய புராணத்தின் இனிய பாடல்கள் இவ்வரலாற்றை விளக்குகின்றமையின் நாமும் இங்கேயே காணலாம்.

இச்சோழனுக்கு மனுநீதிச் சோழன் என்று பெயர். அவன் மக்கள் மட்டுமன்றிப் பிற விலங்கு பறவை முதலியவற்றையும் ஒத்துநோக்கும் தமிழ்ப் பண்பாட்டின் வழி வந்தவன். அதனாலேயே பசு பெற்ற துன்பத்தைத் தான் பெற்றதாகவே எண்ணி அதன் துன்பத்தைப் போக்க விரும்புகின்றான்.

'அவ்வுரை கேட்ட மன்னன் ஆவுறு துயரம் எய்தி
வெவ்விடம் தலைக் கொண்டாற் போல் வேதனை
அகத்துமிக்கு இங்(கு)
இவ்வினை விளைந்தா வாறென்று இடருறும் இரங்கும்
ஏங்கும்
செவ்விது என் செங்கோல் என்று தெருமரும்
தெளியும் தேரான் (32)
'தன்னிளங் கன்று காணத் தாய்முகம் கண்டு சோரும்
அந்நிலை அரசனுற்ற துயரமோர் அளவிற் றன்றால்' (33)

என்ற பெரியபுராண அடிகள் படிப்பார் உள்ளத்தைத் தொடுகின்றன வல்லவோ!

அமைச்சர்கள் உண்மை அறிந்து அரசமைந்தனே அப்பசுவின் கன்றைக் கொன்றவன் என்று கூறிய போது, அரசன் அதற்குரிய தண்டனையைத் தன் மகனுக்குக் கொடுக்கத் தவறவில்லை; மயங்கவுமில்லை. சட்டம் என்ன சொல்லுகிறது என்று கேட்டான். மன்னவனுக்கு ஒரே மைந்தனாகிய காரணத்தால் அமைச்சர்கள் கழுவாயாகப் பல கூறினர். எனினும் ஒன்றாலும் தளராத மன்னன், யாரும் தன் மகன்மேல் தேரோட்டித் தண்டிக்க மயங்கிய நிலையில், தானே அந்தச் செயலை மேற்கொண்டான். தனக்கென ஒரு விதியும் மற்றவர்களுக்கென ஒரு விதியும்

அமைத்தல் அழகாகுமா? என்று கேட்டுத் தானே தேர் செலுத்தினான். அச்சிறப்பைச் சேக்கிழார்,

'ஒரு மைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதை உணரான்
'தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன் மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன் அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்'

என்று உணர்ந்து பாடுகின்றார். ஆம்? அத்தகைய செம்மை திறம்பாத நல்லரசு முறையை அவனுக்கு ஊட்டியது எது? அவனது சமய வாழ்வு. சேக்கிழார் இதைத்தான் பின் சிலபாடல்களில் விளக்கிக் காட்டுகின்றார். இது மட்டுமன்றிப் பெரிய புராண வரலாறுகள் அத்தனையும் சமய வாழ்வின் அடிப்படையில் தன்னை மறந்து கடவுள் நெறி ஒழுகி மற்றவரை வாழவைப்பதைக் காட்டுவனவேயாகும். அவற்றுள் ஒருசிலர் அன்பு வெறியாக மாறிய நிலையில் நடந்த வரலாறுகளைக் குறிப்பினும், பல அன்பின் வழியே சமயம் 'உலகம்' ஓம்பியதையே காட்டுகின்றன என்பதை மறுப்பார் யார்?

மெய்ப் பொருளார்

மெய்ப்பொருள் நாயனார் வரலாறு பண்பாட்டுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. மெய்ப்பொருள் நாயனார் சேதி நாட்டு மன்னர். எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு ஒழுகியவர். அவரது அன்பின் ஆழத்தால் யாரும் அவரை வெல்ல முடியவில்லை. எனினும் அவர் புகழால் பொறுமை கொண்ட கயவன் அவரைக் கொல்ல நினைத்தான். வஞ்சனையாலேதான் அவரை கொல்ல முடியும் என்று நினைத்தான் அவன். எனவே தன் வஞ்சனையை உள் வைத்து, புறத்திலே சிவ வேடம் தாங்கினான்;

தனிமையில் கண்டு பேச விரும்பினன். தனிமையில் இருக்கும் போது அவரை வாளால் தாக்கினன். அவன் மேல் ஐயங்கொண்ட அமைச்சன் மறைந்து அருகிருந்தமையால் உடனே அவனைப் பற்றிக்கொண்டான். மெய்ப்பொருளார் அப்போது தம் அமைச்சனுக்கு இட்ட ஆணையையே நான் இங்கே பண்பாடு என்று காட்டுகிறேன். 'மறந்தும் பிறன்கேடு சூழாத' உயர்ந்த நிலை—'சாந்தனையும் தீயனவே செய்திடினும், தாம் அவரை ஆந்தனையும் காக்கு அறிவு' நிலை— ஆகிய பண்பாடு மெய்ப்பொருளார்பால் அரும்பிநின்றது. அமைச்சர் அந்தக் கொடியவனைக் கொல்லக் கையை ஓங்கியிருப்பார். மெய்ப்பொருளரோ 'தத்தா நமர்' என்று சொல்லித் தடுத்தார். அத்துடன் அவனை வெளியே யார் கண்டாலும் விடமாட்டார்கள் என்பதை உணர்ந்த அவர், தம் நாட்டு எல்லையைக் கடந்து அவன் செல்லும் துணையும் வேறுயாரும் அவனுக்குத் தீங்கிழைக்காது காத்து அனுப்ப வேண்டும் என்று கட்டளையும் இட்டார். இதனினும் சிறந்த மனிதப் பண்பு உலகில் வேறு எங்கே காண முடியும்? ஆம்! அவர் உடனே மடிந்து விட்டிருப்பார். அவர் கைக்கொண்ட பண்பாடு அவரை என்றென்றும் வாழவைக்கிறது. வானுறையும் தெய்வமாக வையத்திலேயே வாழ்த்தபெறும் நல்ல நிலையில் அவர் வாழ்கின்றார். இப்படி ஒறுத்தார்க்கும் ஒன்றும் நினையாத பண்பு வாழின் நாட்டில் நலிவு உண்டோ!

சமுதாயத்தைத் திருத்தும் சமயம்

இந்த உண்மையைப் பிற சமயங்களும் அற நூல்களும் அளவற்ற வகையில் எடுத்துக் காட்டுகின்றன. 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக்

காட்டு' என்ற இயேசுவின் மொழி இதையே காட்டுகின்றது.

திருக்குராஞகிய முகமதிய வேதத்தில் ஒரு நல்ல நீதி காட்டப்பட்டிருக்கிறது. **தன் தேவைக்கு மேல் சேர்த்து வைப்பவன் கடவுளுக்குத் தொண்டனாக மாட்டான்** என்ற கருத்தை அது விளக்குகின்றது. சமுதாய அடிப்படையைத் திருத்த விரும்பும் இன்றைய அரசியல்வாதிகள் இதைத்தானே கூறுகின்றார்கள். சமயம் இந்த உண்மையை எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளாகவே கூறி வருகின்றதே! இப்பண்பட்ட வாழ்வினை உண்மையில் இவர்கள் விரும்பி ஏற்றால் சமயத்தையும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். திருக்குரான் மட்டுமன்றி எல்லாச் சமய நூல்களும் இந்த உண்மையை வலியுறுத்துகின்றனவே. யாரும் தம் தேவைக்குமேல் சேர்த்து வைக்கக் கூடாது என்பதே சமயவாழ்வின் அடிப்படைக் கொள்கை. இதையே,

'வைத்த பொருள் நமக்கு ஆம் என்று சொல்லி மனத்தடைத்துச்

சித்தம் ஒருக்கிச் சிவாய நம வென்றிரு'

என்று போதுமென்ற மனஅமைதியை வற்புறுத்துகிறார் அப்பர். சுந்தரர் ஆண்டவனைப் பாடினால் **'இம்மையே தரும் சோறும் கூறையும்'** என வாழ்வுக்கு வேண்டிய உணவும் உடையுமே அவன் தருவன என்று காட்டி, மற்றவை ஒருவன் மற்றவனை ஏமாற்றித்தேடிக் கொண்டவையே எனக் குறிப்பால் உணர்த்துவர். இயேசு பெருமான் 'உன் ஒரு அங்கியைக் கேட்டால் உள்ள மற்றொன்றையும் கொடு' என்று உணர்த்துவார். இப்படிப்பட்ட சமதர்மச் சமுதாயத்

தை உருவாக்கும் பண்பட்ட பணியே சமயங்கள் மேற் கொண்ட தெய்வப் பணியாகும்.

சமயம் உலக வாழ்வுக்கே

இவ்வுண்மையைப் பின் வந்த சில அடியவர் துற வுக்கு வழிகாட்டுவதெனத் தவருகப் புரிந்து கொண்டு வேறுவழியில் சொல்லலானுர்கள். துறவு நிலையை எந்தச் சமயமும் வற்புறுத்தவில்லை. அதற்கு மாருகத் தமிழ்நாட்டுச் சமயங்களின் தெய்வங்கள் சத்தியுடன் கூடிய ஆண்பெண் கோலத்தையே காட்டுகின்றன. அப்பர் கண்ட கயிலைக் காட்சி 'ஆண் பெண்' இயைந்த காட்சியே என்பதை அவர் பாடல்கள் நன்கு வலியுறுத்தும். எத்தனையோ சைவ அடியவர்கள் இல்லறத்தில் கருத்தொருமித்த காதல் வாழ்வில் திளைத்துக் கடவுளை அடைந் துள்ள நிலையைப் பெரிய புராணம் காட்டுகின்றது. ஒருவருக்கு இருவரை மணந்த சுந்தரர், ஆண்டவன் தோழனுகவே விளங்கினுர். இந்த உண்மையை உணராத சிலர், சமயம் இந்த உலகவாழ்வுக்கு வழி காட்டவில்லை, துறவுக்கும் மறுமைக்குமே வழிகாட்டு கின்ற தெனவும் ஆகவே அதுவாழ்வுக்குத் தேவை யற்ற தெனவும் வாதிப்பர். இவ் வாதம் பொருந்தா தென்பது நன்கு விளங்குகின்றதன்றே! எனவே இல்லற வாழ்வில் வாழ்வாங்கு வாழ்ந்து மற்றவரை யும் வாழவைத்து, முடியுமானுல் மற்றவர் வாழத் தான் விட்டுக்கொடுத்து நிற்பதே சிறந்த சமய நெறியாகும். இதுதான் வாழ்வுக்குத் தேவையான பண்பாடு.

புறமும் அகமும்

சமய இலக்கியங்கள் எத்தனையோ பண்பாட்டு உண்மைகளை உணர்த்துகின்றன. சாதாரண அற நெறி காட்டிய உண்மைகளைச் சமய இலக்கியமும் காட்டுகின்றது. எத்தனைக் கொடுமைகளை வேண்டு மானாலும் செய்து விட்டுத் தீர்த்தயாத்திரை சென்றும் நீர்மூழ்கியும் அர்ச்சனை செய்தும் அவற்றை மறைத்து விடலாம் எனச் சமயவாதிகள் சிலர் நினைப்பதும், அவர்களைக் கண்டு கடவுள் நெறியைச் சிலர் பழிப்பதும் இன்று நாம் காண்கின்ற காட்சியாகும். ஆனால் சமயத்தை உள்ளத்தால் உணர்ந்து பாடிய நல்லவர்கள் நல்ல உள்ளத்திலேயே இறைவன் தங்குவான் என்றும், அவ்வுள்ளம் பொய் முதலிய கொடுமைகள் அற்றதாக இருக்க வேண்டுமென்றும், அங்ஙல்ல உள்ள மன்றித் தீர்த்தமாடுதலும் பிறவும் உலகையும் ஆண்டவனையும் ஏமாற்றுவதோடு தன்னையே ஏமாற்றிக் கொண்டதாக முடியும் என்றும் காட்டுவர். **'பொய்யனைத்தும் விட்டவர் புந்தியுள் மெய்யனே'** என்று அப்பர் ஆண்டவன் தங்கும் நிலையைத் திட்டமாக எடுத்துக் காட்டுகின்றார். தாம் :இன்புறுவது உலகின் புறக்காணும் கல்வியைக் கற்றவரே ஆண்டவனை உள்ளத்தில் காண்பார் என்ற உண்மையை, **'கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக் கற்றார்கள் உற்றேரும் காதலானே'** என்ற அடிகளால் அவரே நன்கு விளக்குகின்றார். உள்ளத்தில் கொடுமையை மூடிவைத்து ஊர்தோறும் தல யாத்திரை செய்பவர் கொடுமையை,

> 'மறையிடைத் துணிந்தவர் மனையிடை இருப்ப
> வஞ்சனை செய்தவர் பொய்கையும் மாயத்
> துறையுறக் குளித்துளதாக வைத்துய்த்த
> **உண்மையெனும் தகவின்மையை'** ஒரேன்' என்றும்,

'தன்னில் ஆசறு சித்தமும் இன்றித்
தவமுயன்று அவமாயின பேசிப்
பின்னல் ஆர்சடைக் கட்டிஎன் பணிந்தால்
பெரிதும் நிந்துவ தரிது'

என்றும் சுந்தரர் விளக்குகிறார். அப்பர் இந்த உண்மையையும் வெளி ஆரவாரத்தால் செய்யும் பூசை பயனற்றது என்பதையும்,

குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர்நின்றதோர் நீர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே'

என்று காட்டுவர். இன்னும் இவைபோன்ற பண்பாட்டு நியதிகள் பலப்பல. கொடையாளர் உள்ளமும், தூய உள்ளமும், மற்றவரைத் தம்மைப்போல் காணும் உள்ளமுமே கடவுள் வாழும் உள்ளங்கள் என்று எல்லாச் சமயங்களும் காட்டுகின்றன.

விழாக்களின் அடிப்படை

இனி, இத்தெய்வ வணக்கத்தின் அடிப்படையில் தோன்றிய விழாக்கள் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்தனவே என்ற உண்மையினைக் காணலாம். இன்று நாட்டில் சமயங்களின் பேரால் பல விழாக்கள் நடைபெறுகின்றன. அவை தேவையற்றன என்றுகூடப் பலர் கூறுகின்றனர். ஆனால் அவற்றின் அடிப்படையே சமூக வாழ்வை உருவாக்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் இவ்விழாக்கள் இருந்தன. காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திர விழா இருந்தது. அந்த விழா நாளை வள்ளுவ முதுமகன் என்னசொல்லி அறிவிக்

கின்றன் என்பதைக் கண்டால் அவ்விழாவின் தேவை நன்கு விளங்கும்.

'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென'

வாழ்த்தி வள்ளுவ முதுமகன் முரசறைந்து விழாவை அறிமுகப்படுத்துகிறான். எனவே விழா நாட்களில் நாட்டில் பசி, பிணி, பகை அகன்று எல்லாரும் ஒன்றிய இன்பத்தில் திளைக்க வேண்டும் என்ற உண்மை நன்கு விளங்கவில்லையா? மனித இயல்பால் எப்படியோ பல வேறுபாடுகள் வாழ்க்கையில் தோன்றினாலும் விழா அவற்றையெல்லாம் போக்கி மக்களை ஒன்றுபடுத்துவது. இதைவிடச் சிறந்த சமுதாய வளர்ச்சிக்கான பண்பாட்டை வேறு எங்கே காணமுடியும்? தமிழ் நாட்டில் மட்டுமன்றி, உலகில் எங்கெங்கும் நடைபெறும் விழாக்களெல்லாம் இந்த அடிப்படையைக் கொண்டே நடைபெறுகின்றன. இன்ப அன்பு மலரத் தமிழ் நாட்டில் ஆண்டுக்கு ஒருமுறை அன்றி அடிக்கடி விழாவினைக் கொண்டாடினர். யாவும் இந்த அடிப்படையில் அமைந்தனவே.[1]

கோவில் அமைப்பு

இந்தத் தெய்வங்களைப் போற்ற ஏற்பட்ட கோவில்கள் சமுதாய வாழ்வின் பண்பாட்டில் அமைந்த உண்மையைக் காணலாம். கோவில்கள் மக்கள் வாழ்விற் கெனவே உண்டாயின. கோவிலின் வானோங்கிய கோபுரங்களும் பரந்த மண்டபங்களும் மக்கள் வாழ்விற்குத் தேவையே. கோவில் வழிபாட்டு அமைப்பும் உணவு முறையும் 'உலகம் வாழத் தான்வாழ

1. தமிழ்நாட்டு விழாக்கள்.

வேண்டும்' என்ற உண்மையினையே உணர்த்துகின்றன. தமிழ் நாட்டுக் கோவில் வழிபாட்டு முறை பற்றி நான் எழுதியுள்ள ஆங்கில நூலில்[1] அவைபற்றி விளக்கமாக காட்டியுள்ளேன். இங்கு இரண்டொன்று குறிக்கலாம் எனக் கருதுகின்றேன் கோவிலுக்குப் பலர் பலவகையில் தானம் செய்து, அவற்றுல் வரும் பொருள்கொண்டு சோருக்கி நாள்தோறும் வருபவர்களுக்கு வழங்கவேண்டுமெனக் கல் வெட்டுகளில் குறித்துள்ளனர். அந்த உணவு வகைகளும் மக்கள் உடலுக்கு ஊறு நேரா வகையிலே எளியமுறையிலும் அமைய வேண்டு மெனக் காட்டியுள்ளனர். அத்தகைய உணவை வழியிடைச் செல்வோர் யாவருக்கும் வழங்கவேண்டு மென்பதும் கட்டளை. அறக் கட்டளைகள் பல அந்த வகையில் உள்ளன. விரைந்த போக்குவரத்து வசதிகளும், கண்ட இடங்களில் உணவு விடுதிகளும் இல்லாத அந்தக் காலத்தில் யாத்திரை செய்யும் வழிபோக்கர்களுக்கு இந்தக் கோவில் உணவுகள் நன்கு பயன்பட்டன அவை தூய்மையாக இருந்தமையின் அவர்தம் உடல் நலமும் கெடாதிருந்தது. இன்று பணம் கொடுத்தும் கண்ட இடங்களில் கெட்ட உணவை உட்கொண்டும் வெளியே செல்லும் இடங்களில் நோயுற்று அல்லல் உறுவோரைக் காண்கின்றோம். எனவே அக்காலத்தில் கோவில் நல்ல உணவாக்கும் உயர்ந்த பண்பட்ட பணியைக் கொண்டிருந்தது.

பரந்த மண்டபங்களும் பிற இடங்களும் பள்ளிகளாகப் பயன்பட்டன. பலவகைக் கல்லூரிகள் தமிழ் நாட்டுக் கோவில்களில் இருந்ததாகக் காண்கின்றோம்.

1. Temples & Legends of Tamilnad.

சில கோவில்களில் தொழிற் கல்லூரிகள் இருந்துள்ளன. சில கோவில்களில் பல படுக்கைகள் உள்ள மருந்தகங்கள் இருந்தன. இவை அனைத்தையும் விளக்கிக் காட்டக் கல்வெட்டுச் சான்றுகள் உள. எனவே அக்காலத்திய சமய அடிப்படையில் அமைத்த கோவில்கள் மக்கள் வாழ்வை மையமாகக் கொண்டே அமைந்தன எனக் காண்கின்றோம்.

கோவில் குளங்களும் கிணறுகளும் மக்களுக்கு உண்ணீர் தந்து உதவும்வகையில் இன்றும் பல உள. ஊர்க்கிணறுகள் அனைத்தும் உவர் நீர்க்கேணிகளாக, கோவில்கிணறு நன்னீரை அளிக்கும் காட்சி நாட்டில் இன்றும் பல ஊர்களில் காணும் காட்சியே. மற்றும் வெள்ளம் மழை முதலியன உண்டாகும் காலத்தும் எல்லோரையும் ஏற்றுப் பாதுகாக்கும் பொதுவிடம் கோவிலேயாகும். பழங்காலத்தில் சில விடங்களில் கோவில்கள் பொருளாதாரத்தில் உயர்ந்திருந்த காரணத்தில் மக்களுக்குத் தேவையான காலத்தில் பணம் கொடுத்து வாங்கும் வங்கிப் (Bank) பணியையும் செய்ததாகக் காண்கின்றோம். இவ்வாறு பல வகைகளில் கோவில் சமுதாயத்திற்குச் சிறந்த பணி செய்துள்ளது.

யார் பின்பற்றுபவர்?

உலகில் பல சமயங்கள் உள்ளன என்று கண்டோம். அவ்வந்நாட்டில் உள்ள சமய வாழ்வு கண்டே அவர்தம் பண்பாட்டை ஓரளவு அறுதியிடமுடியும். அன்புச் சமயத்தை வளர்த்த இயேசுவைப் போற்றும் நலலவரே இன்று ஒரு தலைமுறையில் மூன்று பெரும் போர்களை உருவாக்கினர்கள் என்றதாலே அவர்கள் சமயநெறியை உள்ளத்தால் போற்ற

வில்லை என்பதை பர்னுட்ஷா வருந்திச் சொல்லிச் சென்றார். "There was only one Christain who died on the cross", என்பது அவர் வாக்கு. எனவே கிறித்து சமயத்தில் இயேசுவைப் போன்று யாரும் பிறக்க வில்லை என்கிறார். இவ்வுண்மையே எல்லாச் சமயங் களுக்கும் பொருந்தும். தமிழ்நாட்டில் சைவம் 'வெள் ளிக்கிழமைச் சைவம், அமாவாசைச் சைவம்' என்று உணவிலும் உதட்டிலும் இருக்கின்றதே ஒழிய உள்ளத்தில் இல்லை. ஆனால் இவைகளைக் கொண்டே சமயம் பண்பா டற்றது; அது வாழ்வுக்கு தேவை அன்ற தென்று எப்படி அறுதியிட முடியும்?

உடலுக்கும் உளத்துக்கும்

பழங்கால வழிபாடுகளிலே மக்கள் மேற்கொண்ட பண்பாட்டை ஓரளவு புரிந்து கொள்ள முடியும். நாகர் வழிபாடும் மரவழிபாடும் மிகப்பழையனவாம். சிந்து வெளிநாகரிக காலமாகிய இன்றைக்கு ஐயாயிரமாண்டு கட்கு முற்பட்ட காலமுதலே இவ்வழிபாடுகள் உள் ளன. தமிழ்நாட்டு மக்கள் நாகர் வழிபாடு கொண்ட துடன் நாக நாட்டோடு தொடர்பும் கொண்டவர்கள். நாகத் தீவு என்பது இன்றும் யாழ்ப்பாணம் பக்கத்தில் அதே பெயரோடு இருக்கிறது. அங்கேதான். மணி மேகலை அமுத சுரபியைப் பெற்றார் என்பர். மரவழி பாட்டால் உடலோம்பும் சிறந்த முறை உண்டு. இந்த நாகத்தை மரத்தின் கீழ்—சிறப்பாக அரசமரத்தின் கீழ் – நிறுத்தி வழிபாடு செய்யும் முறை அன்று தொட்டு இன்று வரை உள்ளது. அரசமரம் சுற்றுப் பருத்தது. அதைப் பல முறை வலம் வந்து வணங்கினால் நல்ல உடல் நலம் பெறுவதோடு, மக்கட் செல்வம் முதலிய பேறுகளையெல்லாம் பெறுவர். இவ்வாறு பல உடல்

நலத்துக்கும் வாழ்வுக்கும் வேண்டிய நலத்துறைகளைத் தமிழர் சமயத்தொடு இணைத்துள்ளனர். விழாநாட் களுக்கு முன் வீடுகளைத் துப்புரவு செய்வதும், மெழுகிக் கழுவுவதும், வெள்ளையடிப்பதும், வண்ணம் தீட்டுவ தும், மஞ்சள் இட்டு மாவிலைகட்டுவதும் ஆகிய எல்லாச் செயல்களும் இந்த அடிப்படையில் அமைந்தவை களே. ஒருகாலத்தில் மக்கள் சமயத்தின் அடிப் படையில் எதைச் சொன்னலும் தயங்காமல் மேற் கொள்ளும் நிலை இருந்திருக்க வேண்டும். எனவே இவ்வுண்மையை உணர்ந்த நல்ல சமயத் தலைவர் நலத்துறை, சமூகத்துறை, பண்பாட்டுத்துறை, வாழ் வியல் பொருளாதாரத்துறை ஆகிய அனைத்தையும் சமயத்தொடு தொடர்பு படுத்தி வைத்து அவை நிலைத்து வாழ வழிசெய்து விட்டார்கள். தற் காலத்தில் சிலர், கட்சித் தலைவர் என்ன சொன்ன லும் மேற் கொண்டு நடப்பதைக் காண்கின்றோம். இந்த நிலையை நாட்டில்—உலகில்—ஒருகால் சமயத் தலைவர்கள் பெற்றிருந்திருப்பார். எனவே அவர்கள் அனைத்தையும் சமயத்தின் வழி வளர்த்தனர். அவை அனைத்தும் மக்கள் வாழ்வுக்குத் தேவையான பண் பட்ட சிறப்பு வாய்ந்தவைகளாக உள்ளமையின் அவை சமயச் சார்பொடு கால எல்லையைக் கடந்தும் வாழ்ந்து வருகின்றன.

யாம் இரப்பவை

இவ்வாறு இன்னும் எத்தனையோ காட்டிக் கொண்டேபோகலாம், சமயம் வளர்த்த பண்பாட்டை விளக்க. உலக சமயங்கள் இந்த வாழ்வுப் பண்பாட் டையே வளர்க்கின்றன என்று கூறி அமைகின்றேன். கடைசியாக சமய உள்ளம் தனக்கென வாழாது பிறர்

கென வாழும் உள்ளமாக—அன்பையும் அறத்தை யுமே வேண்டும் உள்ளமாக—பொன்னும் பொருளும் அவற்றைத் துய்க்கும் வாழ்வும் தனி உடைமை இன்மையின் அவை வேண்டாவாழ்வை விளக்கும் உள்ளமாக—அமைந்த ஒன்றைக் காட்டி அமைகின் றேன். முருகன் முன் நின்று வேண்டும் அடியவர்,

'யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்லநின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருனிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே'

(பரி பாடல் 5)

என்ற விருப்பத்தையே முருகன் முன்வைக்கின்றார். ஆம். சமுகம் வாழ அடிப்படைப் பண்பாடுகளாகிய அருள், அன்பு, அறன் என்ற முன்றையும் வாழச் செய்வதே சமயநெறி. அந்த நன்னெறி வளர்ந்து நாட்டு மக்களுக்கு நலம் பயப்பதாக!

VII. மொழி வளர்த்த பண்பாடு

மொழி வாழ்வின் அடிப்படை—
ஆய்வின் வழியே—உணர்வைப்
புலப்படுத்துவது—அகர
முதல்—மன உணர்வும் பண்
பாடும்—உயிரும் மெய்யும்—
இன அமைப்பு—இன இணைப்
பின் சிறப்பு—திணை வகை—
சொற்களில் நற்பண்பு—ஒருவர்
என்ற சொல்—'கள்' நமக்குத்
தேவையா?—விளைச் சொல்
விளக்கம்—இடைச் சொல்—
புணர்ச்சி—உரிச் சொல்—
புலம்பே தனிமை—தெய்வ
நெறி—வேற்றுமையும் உண்டு—
பொருளியல்—மரபியல்—
தழாஅல் வேண்டும்

மொழி வாழ்வின் அடிப்படை

என்றோ தோன்றிய மனிதன் எப்படியோ கால வெள்ளத்தில் நீந்தி நீந்தி மெல்லத் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான்; வருகின்றான். அத்தகைய அந்த மனித இனத்தின் வரலாற்று எல்லையிலே சிறப்பாகக் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் சில நடைபெற்றுள்ளன, அவற்றுள் ஒன்றே அவன் வழங்கும் மொழி. அவன் தன் கருத்தை மற்றவர்களுக்குத் தெரிய உணர்த்தும் கருவி மொழியேயாம்.

மொழி தோன்றிய நாள் எதுவாயினும் - எது என்று இன்னும் திட்டமாகக் கண்டு வரையறை செய்யப் பெறவில்லை—அந்நாள் மனிதனுடைய வாழ்நாளில் சிறந்த நாளேயாகும். மனிதன் பிற விலங்கு பறவை முதலியவற்றி லிருந்து மாறுபட்டு, தன் உள்ளத்தை உலகுக்குத் திறந்து காட்டும் மொழி தான், அவனைப் பிற உயிர்களுக்கெல்லாம் மேம்பட்ட வனுக்கிற்று. இன்று உலகில் மனிதன் எல்லா வற்றையும் அறிந்தவனாக வீறுபெற்றுப் பேசிச் செயலாற்றுகின்றான் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் அவன் மொழியேயாகும்.

மொழியைப் பற்றியும் அதன் வளர்ச்சியைப் பற்றியும் மேலைநாட்டார் நன்கு அறிந்து ஆராய்ந்து எத்தனையோ நூல்கள் எழுதியுள்ளனர். தமிழில் அத்தகைய நூல்கள் இல்லை யென்றாலும், ஆங்கில நூல்களைப் படிக்கும் சிலர் அந்நூல்களை வியவாதிரார். மற்றும் அந்நூல்களில் பொதுவாக மொழிகளைப் பற்றிய அடிப்படை விளக்கங்கள் அனைத்தும் எல்லா மொழிகளுக்கும் பொருந்துவனவாக உள்ளமையின், அவற்றைத் தத்தம் மொழிமேல் ஏற்றி எண்ணி மகிழ வாய்ப்பும் உள்ளது. தமிழ்மொழியில் சில தனித்த அமைப்புக்களும் அவை வழி அமைந்த நல்லியல்புகளும் ஆராய்வாருக்கு நன்கு புலனாகும். அவற்றின் வழி மனிதப் பண்பாடே உருவாயிற்று என்று கூறுதல் மிகையாகாது, எனவே இங்கே நாம் பொதுவாக மொழி வளர்த்த பண்பாட்டின் சிறப்பியல்புகளை அறிந்து, அவற்றுடன் தமிழ்மொழியின் அமைப்பு மனிதப் பண்பாட்டை எப்படி உருவாக்கிய நிலையில் உள்ளது என்பதையும் கண்டு அமைவோம்.

ஆய்வின் வழியே

உலகில் மொழி வளர்ந்த வகையினையும் தோன்றிய நிலையினையும் பற்றி எத்தனையோ கதைகள் வழங்குகின்றன. பல்வேறு மொழிகள் உண்டானமைக்கு விவிலிய நூலில் ஒரு கட்டடக் கதை காட்டப்பெறுகின்றது. உலகெங்கணும் ஒரே மொழி இருந்ததென்றும், மக்கள் செருக்கை மாற்றக் கடவுள் வேறுபட்ட பல மொழிகளைத் தோற்ற நினைத்தார் என்னும் அதன் வழி உலகில் பல மொழிகள் தோன்றின என்றும் கூறுவர். நம் நாட்டிலும் கடவுள் தமிழ், வடமொழி என்ற இரண்டையுமே உண்டாக்கி அவற்றைப் பலருக்கு அறிவுறுத்தினர் என்றும் கதைகள் வழங்குகின்றன. இக்கதைகளை மொழி வரலாறு உண்மை என்று ஏற்றுக் கொள்ளாது; ஏற்றுக்கொள்வது முறையுமன்று. எனவே ஆராய்ச்சியாளர் துணிவுப்படி, மொழிகள், இடம், காலம், சூழ்நிலை இவைகளுக்கு ஏற்ப, வெவ்வேறு வகையில் மெல்லத் தோன்றித் தவழ்ந்து நிமிர்ந்து தளர்நடை இட்டு வளர்ந்தன என்று கொள்ளுவதே பொருந்துவதாகும். அத்தகைய மொழிகளே மனிதவாழ்வின் கண்ணுடிகளாக இன்று அமைந்து விட்டன

மொழிகள் மக்கள் வாழ்வை விளக்கிக் காட்டுவதோடு, அவை எவ்வாறு மனிதன் இனி வாழ வேண்டும் என்பதையும் விளக்குகின்றன். சென்ற காலத்தின் அருமைகளை யெல்லாம் 'வரலாறு' என்ற பெயரால் விளக்கிக் காட்டி, வருங்காலச் சிறப்புக்களையெல்லாம் 'அறநெறி' முதலியவற்றுல் விளக்கி, மனிதனை மனிதனுகவே வாழவைக்க மொழி பெரிதும் பாடுபடுகின்றது. தமிழ் மொழி இல்லையானுல் நமது பண்டைப் பெருமைகளை எதைக்காட்டி விளக்குவது? 'வாழ்வாங்கு

வாழ்' என அறம் உரைக்கும் குறள் நெறி வழி காட்ட வில்லையானால் எப்படி எதிர் காலத்தை வரையறுப்பது? எனவே தமிழ்மொழியே தமிழர்தம் வாழ்வினை உலகுக்கு உணர்த்துகின்றது; இனி அத் தமிழர் வாழும் வாழ்வுக்கும் வழிகாட்டுகின்றது. உலகின் பிறமொழிகளும் அப்படியே. சில மொழிகள் ஒன்றை ஒன்று தழுவிய நிலையில் உலகுக்கு உதவுவதும் உண்டு.

உணர்வைப் புலப்படுத்துவது

நாகரிகம் அல்லது பண்பாடு இன்னதென அறியாது வாழ்ந்த மனிதனுக்கு அவற்றின் உண்மைகளையும் வரலாற்றையும் உணர்த்தியதும் மொழிதான். விலங்கொடு விலங்காக வாழ்ந்த மனிதனைத் தன்னுணர்வு பெறச் செய்து பண்பாட்டுடன் மற்றவர்களோடு பழக வைத்ததும் மொழிதான். தமிழ் போன்ற சில மொழிகளில் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் பெரும் பாலும் ஒன்றுக இருப்பினும், பழங்காலத்தில் பல மொழிகள் எழுத்து வழக்குக்கும் பேச்சு வழக்குக்கும் வேறுபாடுகளை மிகுதியாகக் கொண்டிருந்தன. அத் தகைய மொழிகளே கால வெள்ளத்தைக் கடந்து வாழாமல் மறைந்தொழிந்தன. மனிதருள் உள்ளும் புறமும் ஒத்தநிலையில் வாழாதவர்கள் மறைந்து மறக்கப்படுவதைப் போன்றே அவை மறைந்து மறக்கப்பட்டன. உள்ளும் புறமும் ஒத்த மனிதர் பலரால் பலகாலம் போற்றப் பட்டு உயர்ந்து புகழ் பெற்று வாழ்ந்து வருவது போன்றே, இரண்டிற்கும் வேறுபாடற்ற மொழிகளும் உயர்தனிச் செம்மொழிகளாக, உலகத்தில் ஏற்படும் பல்வேறு மாறுபாடுகளையும் கடந்து வென்று வாழ்கின்றன. தமிழ் அத்தகைய மொழிகளில் ஒன்று.

விலங்குகள் தம் உணர்ச்சியை வெளிப்படுத்து கின்றன. ஏன்? ஓரறிவுயிர்களாகிய புல், மரம் முதலி யனகூட ஒரே வழியில் தத்தம் உணர்ச்சியைக் காட்டு கின்றன. ஆயினும் அவை எல்லாம் கட்டுப்பட்டன. நாய் தன் உணர்வினைப் பலவகையில் தாவியும் குழைந்தும் வாலை ஆட்டியும் காட்டுவதை அறி வோம். எறும்பு முதலியன தொடும் உணர்ச்சியாலேயே உணர்ந்து அறிந்து கொள்ளுகின்றன என்பர். ஆயினும் உணர்வுகளை வெளிக் காட்டும் அந்தச் செயல் நிலைகளெல்லாம் வரையறைக்கு உட்பட்டனவேயாம். ஆனால் மனிதன் தன் மொழியாலேயே உணர்வின் எல்லையை எட்டிப்பிடிக்க முடிகின்றது. தன் உணர்ச் சியை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்ட மொழி பயன் படுகிறது. உள்ளத்தைப் புரிந்து கொண்டு கருத்தைத் திருத்தமுறப் பரிமாறிக் கொள்ளுவது தான் பண்பாட்டின் முதற்படி. அப்படியே கருத்தை உணர்ந்து நடக்க முயல்வதே பண்பாட்டு வழி. எனவே பண்பாட்டின் முதற் படிக்கு உதவுவது மொழியேயாகும் தனி மனிதனைக் கூட்டுச் சமுதாயத் தில் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்து வாழ வழிகாட்டியது மொழி. உள்ளத்தைப் தெள்ளிதாகப் பிறருக்கு உணர்த்துவது மொழி. இவ்வாறு மனிதனை மனிதனுக வாழவைக்க வழிகாட்டுவதே மொழியாகும்.

அகர முதல

இம் மொழி இன்று நாட்டிலும் உலகிலும் பலவாக விரிந்துள்ளன. எல்லா மொழிகளும் இன்று இருக்கும் இதே நிலையில் தொடக்கத்தில் இருந்தன என்று கொள்ள முடியாது. பன்னேடுங்காலம் வெறும் பேச்சு வழக்கில் இருந்தே மொழிகள் மெல்ல மெல்ல

வரிவடிவத்தில் உருப்பெறத் தொடங்கியிருக்க வேண்டும். பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் இடையில் கழிந்த ஆண்டுகள் எண்ணற்றவாக இருக்கவேண்டும். எழுத்துக்களும் தோன்றிய அந்த நாளிலே இன்று இருக்கும் நிலையில் அமைந்திருக்க வில்லை என்பது உண்மைதான். என்றாலும் அடிப் படையில் பெரும் மாறுபாடுகள் இருக்கும் என்று எண்ணமுடியவில்லை. தமிழ்மொழியைப் பொருத்த வரையில் தொல்காப்பியர் காலத்துக்கும் நம் காலத் துக்கும் இடையிலே மூவாயிரமாண்டுகளுக்கு மேல் இருப்பினும் எழுத்தமைப்பில் அதிக மாறுபாடுகளைக் காணமுடியவில்லை. தொல்காப்பியனார் ஒலி வடிவம் வரி வடிவம் இரண்டையும் நன்கு ஆராய்ந்து தெளிவு படுத்திக் காட்டுகின்றார். எழுத்தினை எண்ணிக் காட்டும் தொல்காப்பியர்,

'எழுத் தெனப்படுப
அகர முதல
னகர இதுவாய் முப்பஃது என்ப' (தொல்-1)

என்பர். இதில் அகரத்தை முதலாவதாகக் காட்டு கின்றார். தமிழ் எழுத்து என்று சொல்லாது 'எழுத் தெனப்' படுப எனப் பொதுவாகக் கூறினமையான் இது எல்லாமொழிகளின் எழுத்துக்களுக்கும் பொருந் தும் என்பர் சிலர். எனினும் னகர எல்லையைக் கூறி எண்ணிக்கையினையும் வரையறுத்துவிட்டமை யானும், தொல்காப்பியர் தமிழ் மொழிக்கே இலக் கணம் செய்தமையானும் இந்தச் சூத்திரம் தமிழ் மொழியின் தனி எழுத்துக்களைப் பற்றியதே எனக் கொள்வதில் தவறு இல்லை. திருவள்ளுவர் கடவுளை

உலகுக்குக் காட்டவந்தபோது இந்த 'அ' என்ற எழுத்தையே உதாரணமாகக் காட்டுகின்றார்.

'அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு' (குற–1)

என்பது முதற் குறள். இதில் எழுத்தெல்லாம் என்ற தொடர் உலக எழுத்துக்கள் எல்லாவற்றையுமே குறிக்கும் என்பர். தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை எழுதவந்த நச்சினார்க்கினியரும் குறளுக்கு உரை வரைந்த பரிமேலழகரும் இந்த அகரமுதல என்பதை அலசி ஆராய்ந்து பல உண்மைகளை விளக்க முன்னிற்கின்றனர். இந்த அகரத்திற்கு உரிய தனிச் சிறப்பை உணர்த்தி, அது கடவுள் நிலையை ஒத்தது என்பர். அகரம் தானும் இயங்கிப் பிறவற்றையும் இயக்குதலான் அது சிறப்புடையது எனக் காட்டுவர். மற்றும் உலகத்துக்கும் கடவுளுக்கும் உண்டான இணைப்பை இவ்வெழுத்து காட்டுவது எப்படிப் பொருந்தும் என்பதையும் புலவர் விளக்குவர். அகரம் தானும் இயங்கிப் பிற எழுத்துக்களை இயங்குதல் போல் உயிர் தானும் இயங்கி, உலகையும் இயக்கும் பண்பாட்டில் வாழும் என்பர். இறைவனும் அப்படியே உலகில் காணும் எல்லாப்பொருள்களிலும் தான் கலந்து இயங்கி, அவற்றையும் இயக்குவிக்கின்றான். உலகுக்கு அடிப்படை இறை உணர்வு; மொழிக்கு அடிப்படை அகரம் என்று இந்த வகையிலெல்லாம் குறளுக்கு உரைகாண முடிகின்ற தன்றே! மேலும் 'எழுத்தெல்லாம்' என்ற தொடரை விளக்க வந்த அறிஞர்கள் உலக மொழிகளையெல்லாம் இணைத்து, அவை அனைத்தும் அகரத்தை முதலாக உடையன எனக் காட்டுகின்றனர். பலர் எழுத்தையும்

உலகையும் இறைவனையும் பிணைத்து அவை கலந்து வாழவேண்டிய பண்பாட்டையும் விளக்குவர். பிற மொழிகளெல்லாம் அகர முதலாக உடைமையின் எழுத்தெல்லாம்' என்று கூறினர் என விளக்கங் காட்டி, அதன் வழி உலகில் இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதை விளக்கி, அதன் வழி மொழி உலகியல் வாழ்விலும் பண்பாட்டிலும் நீக்கமற நிறைந்து நிற்க வேண்டிய ஒன்று என்பதையும் உணர்த்துகின்றனர் அவ்வுரையாசிரியர்கள். மொழி, உலகம், உயிர், கடவுள் இவற்றைப் பிணைத்து இறைவன் அணுவுக்கணுவாய் யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்பதுபோன்று, அகரம் மட்டு மன்றி மொழியே மக்கள் வாழ்விலும் பண்பாட்டிலும் நீக்கமற நிறைந்து நிற்கும் திறத்தையும் காட்டுவர். ஒன்ருன கடவுள் நெறி 'ஒன்ருய் முளைத்து எத்தனையோ கவடு விட்டு' வளர்ந்ததைப் போன்றே, மொழியும் தோன்றிய காலத்தில் ஒரே அடிப்படையில் அமைந்து இன்று பல் வேறு இனங்களாகப் பிரிந்திருப்பதையும் காட்டுவர். ஒரே மரத்தின் கிளைகள் தம்முன் மாறுபடுவதில்லை. ஆனல் பிரிந்த சமயங்கள் பேராலும், மொழிகளின் பேராலும் நாட்டில் எத்தனை எத்தனை கொடுமைகளும் போர்களும் நடைபெறுகின்றன.

மன உணர்வும் பண்பாடும்

தமிழ் மொழியின் அமைப்பு எப்படிப் பண்பாட்டை உருவாக்குகின்றது என்பதைக் காணுமுன் மொழியாலேயே பண்பாடு உருவாகிய நிலை காணல் நலம் பயப்பதாகும். மனிதன் மொழி அறிவைப் பெறுவதன்முன் வாழ்ந்த வாழ்க்கைக்கும் மொழி

அறிந்தபின் வாழும் வாழ்க்கைக்கும் எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. மொழியே மனிதனை விலங்கினின்றும் பிற உயிர்களினின்றும் பிரித்தது எனக் கண்டோம். பிறவற்றிற்கு இல்லாத ஓர் உணர்வு மனிதனுக்கு உண்டு என்று தொல்காப்பியம் காட்டுகின்றது. 'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்று காட்டிய தொல்காப்பியர் அந்த ஆறாவது அறிவை 'ஆறறி வதுவே அவற்றொடு மனனே' என்று காட்டுகின்றார். கண்டு கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல அறிவுகளுடன் அவைபோல் புறத்தே புலப்படாததாய் உள்ள மன உணர்வை ஆறாவது அறிவாகக் காட்டுவர். இந்த மன உணர்வைக் காட்டுவதுவே மொழி. அந்த உணர்வில் உருவாவதுவே பண்பாடு.

பண்பாடு என்ன என்பதை மேலே கண்டோம். பாடு என்ற சொல்லுக்குப் பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம் என்ற பொருள் உள்ளதைக் கலித்தொகை (133) விளக்குவ தறிவோம். இவ்வாறு பிறர் இயல்பை அறியப் பயன்படுவதே மொழி. எனவே பண்பாட்டுக்கு மொழியே அடிப்படையாக அமைகின்றது. மொழியாலேயே பிறர் இயல்பையும் இன்ப துன்ப உள்ள நெகிழ்ச்சிகளையும் உணர்ந்து கொள்ள இயலும் பிற உறுப்புக்கள் காட்டும் உணர்வின் வழி ஓரளவு, 'வாய்ச் சொற்கள் பயனில்லா வழியில்' உணர்ந்து கொள்ள இயலுமாயினும், முற்ற உணர்வது மொழியாலேயாம். 'வாய்திறந்து சொன்னால்தான் வருத்தம் தீரும்' என்ற ஒரு பழமொழி நாட்டில் வழங்குவ தறிவோம். எனவே மனிதன் தன்னைப் போல் பிறரை ஒத்து நோக்கி உணர்ந்து, அவர் இன்பத்தில் தாமும் மகிழ்ந்து, துன்பத்தில் தாமும்

பங்குகொண்டு வாழ்வதற்கு அவற்றை விளக்கும் மொழியே காரணமாகும். இம்மொழி எப்பெயரில் எந்நிலையில் இயங்கினாலும் அவ்வழி மொழி அவரவர் பண்பாடுகளை வாழவைக்கின்றது என்பது உறுதி. இனி நாம் தமிழ் மொழி வழி மேலே தொட்டதைத் தொடர்வோம்.

உயிரும் மெய்யும்

தமிழில் எழுத்துக்களுக்குப் பெயரிட்டிருப்பது சிறப்புடையது. முதல் எழுத்துக்களை 'உயிர்', 'மெய்' என்றே பிரித்தார்கள். உலக வாழ்விலும் உயிரும் மெய்யும் முதல்தாமே. மொழியிலும். அப்படித்தான் இந்த இரண்டும் சேர்ந்த பிறகே மொழியின் வாழ்வு தொடங்குகின்றது; உலக வாழ்வும் அப்படித்தான். உலகில் உடம்பின் அடிப்படையிலேதான் உயிர் தோன்றுகின்றது. உயிரைத் தனியாகக் காண இயலாவிடினும் அவ்வுயிர் இல்லை என்று யாரும் சொல்ல இயலாது. உடம்பினுள் உயிர்வந்து பொருந்துகின்றது. மொழியிலும் அப்படியே. உயிர் எழுத்துக்குத் தனி வடிவம் இருப்பினும், அது மெய்யோடு சேரும் போது தன்வடிவம் கெடுகிறது. அவ்வாறு உடலோடு உயிர் பொருந்துதல் இயல்பே என்ற உண்மையை நன்னூலார்,

'**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்பர். தொல்காப்பியர்,

'**மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே** (நூல் 18) என்பர். எனவே உலகில் உயிர்த்தோற்றம் உடம்பின் அடிப்படையில்தான் அமைகின்றது என்பதை உணர்கின்ற நாம், மொழியும் அவற்றின் எழுத்துகளும் அப்படியே அமைகின்றன எனக் காணல்

வேண்டும். இவ்வாறு உயிரும் மெய்யும் சேரின் அவ்வுயிரின் நிலைஎன்ன என்ற கேள்வி எழும். மெய்யோடு சேர்ந்த உயிர்த் தன்மை என்ன? உயிர் சார்ந்ததன் வண்ணம் என்றால் சார்ந்த உடலின் வண்ணமாக மாறுமா? மாறாது. எந்த உடலில் உயிர் இருப்பினும் அதன் இயல்பு மாறாது என்பதே உயிர்நூற் புலவரும் சமயப் புலவரும் கண்ட துணிபு. இந்த அடிப்படைப் பண்பாடு மொழிக்கும் உண்டு

'மெய்யோடு இயையினும் உயிரியல் திரியாது' *(1-10)* எனத் தொல்காப்பியர் எழுத்தியலே வாழ்வியல் என்று நன்கு காட்டுகின்றார்.

இனி, உயிர் புறத்தே புலனாகாத ஒன்று என்றும் உடலே உலகில் உலவும் தோற்றம் உடையதென்றும் அறிவோம். மொழியின் அமைப்பும் அப்படியே என்பதை தொல்காப்பியர்,

மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையில்
*(1—14)*என்றும்

மெய்யின் இயக்கம் அகரமொடு சிவனும்
(2—13) என்றும்

காட்டுவர். புள்ளி, அகரம் என்ற சொற்கள் இலக்கண அமைதியில் காட்டும் பொருள்களை அறிவோம். அச்சொற்களுக்கு உள்ள வேறு பொருள்களையும் நோக்கின் உண்மை புலனாகும். புள்ளி என்பதற்கு உலகப் புள்ளி, இமயம் போன்ற உரைகள் இருப்பதைப் பிங்கலம், இராமாயணம் முதலியன காட்டுகின்றன.[1] அப்படியே அகரம் என்பதற்கும் ஊர் என்ற பொருள் உள்ளது [2] எனவே மெய் இயங்

1. Lexi. P. 2796. 2. Lexi. P. 13.

கும் இயல்பே உலக வாழ்வு என்பதும் ஊர் அமைத்துக் கூடிவாழும் வாழ்வென்பதும் நன்கு புலப்படும். ஆகவே எழுத்தின் அடிப்படையாகிய உயிரும் மெய்யும் இணைந்து வாழத்தொடங்குவதே பண்பாட்டின் அடிப்படையாகிய கூட்டு வாழ்க்கை என்பதை உணர்தல்வேண்டும். மொழியின் அடிப்படையாம் எழுத்துக்களின் பெயர்களும், அவைகளின் இயக்கங்களுமே இவ்வாறு வாழ்வின் அடிப்படைகளை உணர்த்துகின்றன என்றால் அவ்வெழுத்துக்களாலாகிய மொழி காட்டும் பண்பாட்டை எல்லை இட்டுரைக்க முடியுமா?

இனி, உயிர் கலந்த மெய் ஒருகாலத்தில் உயிரை விட்டுப் பிரிகின்றது. மெய்யோடு சேர்ந்த உயிர் தானும் இயங்கி உடலையும் இயங்கவைத்து உலக வாழ்வையும் இயக்கும் என்பது கண்டோம். என்றாலும் வாழ்க்கை நியதிப்படி உயிர் உடலை விட்டு ஒருநாள் நீங்க வேண்டியதே. உயிரும்தான் அதன் பழைய நிலையை அடைகிறது என்பதறிவோம். உடலின் தன்மையும் அத்தகையதே என இன்றைய விஞ்ஞானிகள் காட்டுவர். உடல் பஞ்சபூதங்களின் சேர்க்கை என்றும் அது உயிரோடு கூடிய வழியே இரண்டும் கூடிக் கலந்து இயங்கும் என்றும், உயிர் நீங்கில் அப்பூதங்கள் அனைத்தும் தத்தம் இயல்பை அடையும் என்றும் கூறுவர். அவ்வாறு சேர்ந்த அவை பிரிவதை 'Decompose' என்ற ஆங்கிலச் சொல்லால் நன்கு விளக்குவர். மெய் எழுத்தின் தன்மையும் இதுவேயாகும். உயிர் நீங்கிய மெய் தன் இயல்பான உருவைப் பெற்று நிற்கும். இந்த உண்மையைத் தொல்காப்பியனார்,

'மெய் உயிர் நீங்கின் தன் உருவாகும்' (புணர் 37) எனக் காட்டுவர். இந்த உண்மையின் அடிப்படை உலகமும் உலகப்பொருள்களும் அழிவதில்லை என்பதும், அவை நிலை கெடுவதே தவிர முற்றும் மறையாது என்பதும் ஆகும். சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மை என்ற தத்துவத்தில் இதைத்தான் காட்டுகின்றது.

இன அமைப்பு

இனி இவ்வெழுத்துக்களின் அமைப்புக்களைக் காணலாம். எழுத்துக்களில் இனம் உண்டு. 'ஆகா' மொழியிலும் இன வேறுபாடா?' என்று வியக்கத் தோன்றும் சிலருக்கு. மக்களின் இனவேறு பாட்டுக் கொள்கை நாட்டுக்கும் உலகுக்கும் செய்யும் கொடுமைகளை நினைத்தால் 'இனம்' என்ற சொல்லே நடுக்கத்தை உண்டுபண்ணும். எனினும் மொழி வழிக் காணும் இனம் வேற்றுமையில் ஒற்றுமையை வளர்ப்பதாகும். தமிழில் உள்ள மெய் எழுத்துக்களை மூன்று இனமாகப் பிரித்துள்ளனர். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன. உயிரினத்தைத் தனியாகச் சொல்லுவர். மெய் எழுத்தின் இன அமைப்பு அவற்றின் ஒலி முறை பிறப்பிடம் முதலியவற்றின் அடிப்படையிலே அமைகின்றது. என்றாலும் மனிதனுடைய பிறப்பிடம், பிற வளங்கள் முதலியவற்றால் கற்பித்துக் கொள்ளும் வேற்றுமையைப் போன்று அவை அமைவதில்லை. பிறப்பால் உயர்வும் தாழ்வும், பிறவற்றால் வேறுபாடும் கற்பித்துக் கொள்ளுகின்ற மனிதன் ஒட்டினாலும் ஒட்டுவதில்லை; அவ்வேறுபாடுகளை வளர்த்துக் கொள்ளவே அவன் விரும்புகின்றான், மொழியில் உள்ள எழுத்

துக்களின் இனவேறுபாடு அந்த வகையில் இல்லை. பிறப்பிடம் முதலியவற்றால் வேறுபட்ட இனமாயினும் ஒன்றை ஒன்று தழுவிச் செல்வதே மொழி வளர்ச்சி என்பதை அவை உணரும். 'க ங' 'ச ஞ,' 'ட ண,' 'த ந,' 'ப ம,' 'ற ன' என்று ஒவ்வொரு வல்லினமும் ஒவ்வொரு மெல்லினத்தைத் தன்னுடன் இணைத்தே வைத்துக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். மனிதன் மொழியிடத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பண்பாடுகளுள் இதுவே சிறந்தது. பிறப்பு, வளன், வாய்ப்பு, வசதி முதலியவற்றால் உயர்ந்துள்ள மக்கள் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவரில் ஒவ்வொருவரையாவது தம்முடன் அணைத்து வளர்க்கவேண்டும். இடையில் உள்ளவர்கள் இடையின எழுத்துக்கள் ஓரினமாக அமைவது போன்று அமைந்து வாழ்வார்கள் எனவே தாழ்த்தப்பட்டவர்கள் உயர்த்தப்பட வேண்டுமானால், அவர்களை மிக்க உயர்நிலையில் உள்ளவர்கள் அணைத்தே செல்லவேண்டும். ஒருவேளை தாழ்ந்தோர் நிலை அணைக்கமுடியாத அளவுக்கு மிகத் தாழ்ந்திருக்குமாயின், உயர்ந்தவர்கள் தம் பெருமை கெடும் என்று வீண்வாதம் செய்து மேலேயே இருந்து கொண்டே இறங்கிவராமல் நின்று விடுதல் கூடாது. அவர்கள் ஒருபடி இறங்கி வந்தே தாழ்ந்தோரைத் தழுவவேண்டும். இந்த உண்மையை வல்லின மெய்கள் மெல்லின மெய்களைத் தழுவும் நிலையில் விளக்குகின்றன.

இன இணைப்பின் சிறப்பு

வல்லின எழுத்துக்கள் மெல்லின எழுத்துக்களோடு சேரும்போது தம் ஒலி நிலையில் தாழ்வதைக்

காண்கின்றோம். இதை மொழி நூலாசிரியர்கள் நன்கு ஆராய்ந்து விளக்கியுள்ளார்கள். தமிழ் மொழியை ஆராய்ந்த கால்டுவெல் பெருமகனார் இந்த உண்மையை உணர்ந்து விளக்குகிறார். (Convertability of Surds into Sonets) என்ற விதியை எடுத்துக்காட்டு கிறார். வல்லின எழுத்து மெல்லின மெய்யோடு சேரும்போது தாழ்ந்து ஒலிக்கும் ஒலித்தன்மையை விளக்குகிறார். அப்படி விளக்கு முகத்தான் தமிழில் சில ஒலிகள் இல்லை என்றும் அதற்கென பிறமொழி யில் அவ் வொலிஎழுத்து கடன் வாங்கவேண்டும் என்றும் கூறுவார் சொல்லை மறுத்து, பல ஒலிகள் இவ்வாறு எழுத்துக்கள் இணைவதால் உண்டாவதை யும் உணர்த்துகிறார். அந்த ஆராய்ச்சி நமக்கு இங்கே தேவையில்லை. வல்லினம் மெல்லினத்தோடு கலந்து எப்படி வாழ்க்கைப் பண்பாட்டை உணர்த்து கின்றது என்பதே நாம் அறியவேண்டியது. 'சுக்கு' என்ற சொல்லில் உள்ள 'கு'க்கு என்ன ஒலி என்று உச்சரியுங்கள். அப்படியே 'சுங்கு' என்ற சொல்லின் 'கு'வின் ஒலியையும் காணுங்கள். இரண்டுக்கும் வேறுபாடு நன்கு தெரிகின்ற தல்லவா! இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது? 'க்'குடன் சேர்ந்தபோது உண் டாகும் ஒலி 'ங்' கோடு சேர்ந்தபோது இல்லை. ஏன்? அதன் ஒலியில் வன்மை கெட்டு மென்மை பிறக் கிறது. ஏன்? ஆம்! வல்லினம் தன் இனமாகிய மெல் லினத்தோடு சேரும்போது தன்னை மறந்து அந்த மெல்லினத்தோடு மெல்லின ஒலியுடையதாகக் கலக் கிறது. இது தானே மனித வாழ்வின் அடிப்படைப் பண்பாடு. இப்படியே பட்டு, பண்டு என்பவற்றிற் கும் மச்சு, மஞ்சு என்பவற்றிற்கும் பத்து, பந்து என் பவற்றிற்கும் கப்பு, கம்பு என்பவறிற்கும் பற்று,

கன்று என்பவற்றிற்கும் உள்ள வேறுபாடுகளை உணருங்கள். உணர்ந்து இந்த அடிப்படைப் பண்பாட்டில் உலக மக்கள் வாழ்வார்களால் எந்த ஏற்றத் தாழ்வும் தலைகாட்டாதே! வாழுமா மனித முதாயம்? இந்த உண்மையை மாணிக்கவாசகர் 'தானே வந்தெம்மைத் தலையளித் தாட் கொண்டருளும்' இறைவன் தன்மையில் விளக்குவர்.

இவ்வாறு மொழியின் அடிப்படையாகிய எழுத்துக்களின் அமைப்பை ஆராய்ந்து கொண்டே போனால் அது எல்லையற்று விரியும். எனவே இருந்த அளவு எழுத்துக்கள் காட்டும் பண்பாட்டைவிட்டு, தமிழ்ச் சொற்கள் காட்டும் பண்பாட்டை இனிக் காண்போம்.

திணை வகை

தமிழில் சொற்களை இருவகையாகப் பிரிக்கின்றனர். ஒன்றை 'உயர் திணை' என்றும் மற்றொன்றை 'அஃறிணை' என்றும் காட்டுவர். இந்தச் சொல் அமைப்பு முறையே பண்பாட்டை உணர்த்தும். உயர்வுக்கு நேர் எதிர்மொழி 'தாழ்வு' அன்றோ. உயர்ந்தவரை உயர்ந்தோர் என்பதால் பெருமையே. ஆனால் தாழ்ந்தோரை அப்படிச் சொல்லலாமா? அவர்கள் மனம் புண்படாதா! சொல்லுபவரும் பண்பட்டவராவாரா? நல்லவர் யார் என்றால் உயர்ந்தவரைச் சொல்லலாம். மற்றவர்கள் கெட்டவர்தாமே என்றால் 'நமக்குத் தெரியாது; அவர்கள் யாரோ என்றுதான் சொல்லத் தெரியும்' என்பதே பண்பாடு. தாயுமானவர் இந்தப் பண்பட்ட வழியிலேயே நல்லவரையும் மற்றவரையும் காட்டுகிறார். இதை மேலே கண்டோம். எனவே மற்றவரை நல்லர் அல்லர் என்பது

கூறல்முறையன்று என 'யாரோ? எனக் கூறிவிட்டார். தமிழ்மொழியில் இலக்கண அமைப்பிலே அவ்வாறு உயர்ந்தோரைக் காட்டி மற்றவரைத் தாழ்ந்தோர் எனக் கூறுது உயர்திணைக்கு மாறுகத் தாழ்திணை யைக் காட்டாது அஃறிணை என்கின்றார். உண்மை யில் தாழ்ந்தோரைத் தாழ்ந்தோர் எனக் காட்டுவது பண்பாடு ஆகாது. இந்த உயர்ந்த உண்மையைச் சொற்கள் பாகுபாட்டின் அடிப்படையிலே மொழி நமக்கு உணர்த்துகின்றது. தொல்காப்பியர்,

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' (கிளவி.1)

என்பர். மக்கள் என்பதற்கு உரை கூறவந்த சேனா வரையர் 'மக்கள் என்னும் உணர்வைக் குறித்தார்' என் பர். இதனால் வெறும் புறத் தோற்றத்தில் மக்கள் உடலைப் பெற்றிருந்தாலும் நல்ல பண்பட்ட உணர்வு இல்லாவிட்டால் அவர்கள் உயர்திணையுடன் சேர்த்து எண்ணப்படமாட்டார் என்பது விளங்கும். 'கிளவி ஆக்கம்' என்ற இந்தச் சொல்லதிகார முதற் பிரி வுக்கே 'வழுக் களைந்து ஆக்குவது' என்று உரை கூறுகின்றார் அவர். எனவே மொழியில் யாரும் தம் மனம் போனபடி சொற்களை ஆக்குவது என்பது இல்லாதது என்பதும், குற்றத்தின் நீக்கிய செம்மை நெறியிலேயே அவற்றை ஆக்கவேண்டும் என்பதும் தெளிவாகும்.

சொற்களில் நற்பண்பு

இனி, இயற்கையாகவும் செயற்கையாகவும் உள்ள அல்லது தோன்றிய பொருள்களை எந்தெந்த வகையில் கூறவேண்டுமெனத் தொல்காப்பியர் வரை யறுப்பார். இயற்கைப் பொருளை இற்றென இனத்தல் என்பது அவர் காட்டிய மொழி. இதற்கு உரை காணும்

போது தன் இயல்பு திரியாது நின்ற பொருளை என்று கூறி, அதற்கு விளக்கமாக, 'இயல்பாவது பொருட்குப் பின் தோன்றுது உடன் நிகழும் தன்மை' என்று காட்டி, 'நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி உளரும், உயிர் உணரும்' என்று ஏதுவும் கூறி விளக்குவர் சேனாவரையர். மற்றும் 'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்' (கிள.20) என்று செயற்கை பொருள் பற்றிக் கூற வேண்டிய வகையையும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். இவ்வாறு சொற்களை வழங்கும் நிலையில் பண்பாட்டை அடிப்படையாக அமைத்தனர் தமிழ் இலக்கணப் புலவர்.

இனி, இச்சொற்களை இடத்தின் அடிப்படையில் மூன்றாகப் பிரித்தார்கள். அவற்றைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று பெயரிட்டு வழங்குவர். இந்த மூன்று பெயர்கள் அமைப்பும் பகுப்பும்கூடப் பண்பாட்டு வழியே ஆக்கப்பெற்றன என்பதை நாம் உணர்தல் வேண்டும். முதலிடத்தைக் குறிக்கும் தன்மை என்ற சொல் அமைதியிலேயே பண்பாடு சிறக்கிறது. ஆங்கிலத்தில் முதலிடத்தை 'First Person' என்பர். தமிழில் 'தன்மை' என்ற சொல் பல உண்மைகளை உணர்த்துகின்றது. 'தான் அடங்கத் தன் குலம் விளங்க' என்பது பழமொழி. ஆகவே 'தன்மை' சொல் மிக எச்சரிக்கையாக வழங்கப் பெறுவது. தன்மை என்ற சொற்கு இயல்பான் ஒழுகுதல் என்ற பொருள் காட்டியுள்ளனர். தன்மை என்ற சொல்லுக்கு[1] இயல்பு, குணம், நிலைமை, முறை, பெருமை, ஆற்றல், அழகு, நன்மை, மெய்ம்மை என்ற

(1) Lexi. P. 1811

பல பொருள்கள் உள்ளமை அறிகிறோம். எனவே தன்மைச் சொற்கள் இத்தனையும் பெற்றிருத்தல் வேண்டும். தான் என்ற உடனே முனைப்பு வருதல் இயற்கை. அதனால்தான் திருவள்ளுவர் 'யான் எனது என்ற செருக் கறுப்பான்' எனக் காட்டினார். எனவே இலக்கண அமைதி காண விரும்பிய நல்லவர் இத்தனைப் பண்பாடுகளையும் விளக்கும் 'தன்மை' என்ற சொல்லை முதலிடத்துக்கு அமைத்தனர்.

முன்னிலை என்பது எதிரில் இருப்பவரைக் குறிப்பது. இது பற்றிய தமிழ்ச் சொற்கள் பண்பாட்டு அடியில் முகிழ்ப்பனவே. ஆங்கிலத்தில் 'You' என்ற ஒரு சொல்லையே முன்னிலையாகக் கூறுகின்றோம். ஒருமைக்கும் பன்மைக்கும்கூட அங்கே வேறுபாடு இல்லை. பல மொழிகளும் அந் நிலையில் உள்ளன. சில படர்க்கைச் சொற்களை முன்னிலை மரியாதைச் சொற்களாகப் பயன்படுத்துகின்றன. ஆனால் தமிழில் அந்த முன்னிலைச் சொற்களே பண்பாட்டு அடிப்படையில் உள்ளன. நீ. நீர், நீங்கள் என்பன இன்று வழக்கத்தில் உள்ளன. இவை ஒருமை, உயர்வுப் பன்மை, பன்மை என்ற மூவகையில் அமைகின்றன. ஆகவே உயர்ந்தோர்க்கு உரிய மரியாதையையும் சிறப்பையும் அளிக்கும் பண்பாடு இதில் நன்கு விளங்குகின்றதன்றே!

ஒருவர் என்ற சொல்

படர்க்கையில் பல சொற்கள் உள்ளன. மொழிகளில் உள்ள சொற்களில் அனைத்தும் படர்க்கையேயாகும். தன்மை முன்னிலையைக் குறிக்கும் வரை

யறுத்த சில சொற்களைத் தவிர்த்து, பிற அனைத்தும் படர்க்கையேயாம். அவை மொழிதொறும் பல வகையில் அமைகின்றன. தமிழில் அந்தப் படர்க்கைச் சொல் அமைப்பிலும் ஒரு பண்பாட்டுச் சிறப்பைக் காண்கின்றோம். ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பன படர்க்கைப் பற்றி வருவன. ஆனால் ஒருவன், ஒருத்தி என்ற தனிப்பட்ட படர்க்கை உயர்திணையைக் குறிக்க, பண்பட்ட உயர்ந்த சொல் தமிழில் உண்டு. ஆங்கிலத்தில் He, She என்கின்றோம். வினைகளும் அப்படியே ஒருமையில் உள்ளன. ஆனால் அவ்வாறு காட்டப்படுவோர் உயர்ந்தவராயின் அவர்களுக்கு உரிய மதிப்பைத் தரவேண்டாமா? அதற்கெனச் சொல் வேண்டாமா? மற்றும் அந்த இருபாலரில் அவர் எந்த பாலைச் சேர்ந்தவர் என்று காணுவிடின் திகைப்பும் ஏற்படுமன்றோ! பிறமொழிகள் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டே ஓரளவு இக்குறையை நிறைவு செய்யமுடிவும். தமிழ்ச் சொல்லமைப்பு இப்பண்பாட்டிலும் தலை சிறந்து நிற்கின்றது.

'ஒருவர் என்ற பெயர்நிலைக் இனவி
இருபாற்கு முரித்தே தெரியுங் காலை (சொல். 5.37)

எனத் தொல்காப்பியர் அச்சொல்லை நமக்குத் தருகின்றார். ஒருவர் வந்தார் என்ற பொழுது அவ்வாறு வந்தவர் நம்மினும் மேம்பட்டவர் என்ற உணர்வு நம்மை அறியாமலே நமக்கும் கேட்பவருக்கும் உண்டாகின்றதல்லவா. இவ்வொருவர் என்ற இயற்சொல்லை வைத்துச் சமயப் புலவராகிய குமரகுருபரர் சிதம்பரத்தில் உள்ள இறைவனைப் பாராட்டித் தான் பெற்ற பாடல் செல்வத்தில் மகிழ்கின்றார். இச் சொல் ஆண்

பெண் கலந்த அம்மை அப்பர் உருவத்தைப் பாராட்ட அவருக்குப் பயன்படுகிறது; பாடுகிறார்.

'ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன் றுலவ்
உருவைஇஃது ஒருத்தன் என்கோ? ஒருத்தி என்கோ?
இருவருக்கும் உரித்தாக ஒருவர் என்றோர்
இயற்சொல் இலதெனில் யான் மற்று என்செய்கேனே'

(சிதம்பர செய்யுட் கோவை)

இவ்வாறு உயர்ந்தவர்களைப் பற்றிக் கூறவும், அழைக்கவும் நல்ல சொற்களை அன்றே இடமறிந்து முறையறிந்து பண்பாடு கெடாதவகையில் தமிழ்மொழி பயன்படுத்தியுள்ள தென்றால் அதன் பண்பாட்டை உணர்ந்து போற்ற வேண்டாமா!

சிலர் இந்த ஒருவர் என்ற சொல்லைத் தன்னைக் குறிக்கப் பயன்படுத்தித் தருக்கும் கொள்ள நினைப்பர். 'நாம் ஒருவர் சொல்லுகிறோம்' என்று பெருமையாகத் தம்மையே பாராட்டிக் கொள்ளுகின்றவர் இன்றும் இடைக்காலத்திலும் நாட்டில் உள்ளனர். நமக்கு மற்றவர் பெருமைதர வேண்டுமே ஒழிய நாமே நம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வது பண்பாடோ, நாகரிகமோ ஆகாது. ஆனால் இன்று சிலர் இதையேதான் தம் பண்பாடாகக் கொண்டு தற்பெருமை பேசுவர். அப்பெருமை நகைப்புக்கு இடமாகும் என்பது உலகம் அறிந்தது. எனவே இந்த உயர்வுப் பன்மை தற்பெருமைக்கு ஆகாது என்ற உயரிய பண்பாட்டைத் தொல்காப்பியர்,

'தன்மை சுட்டில் பன்மைக்கு ஏற்கும்' (கிளவி. 38)

என்றே விளக்கிவிட்டார். எனவே மனிதன்—பண்பட்ட மனிதன்—மறந்தும் தற்பெருமைக்கு அதைப் பயன்படுத்தக்கூடாது என்பது தெளிவு.

'கள்' நமக்குத் தேவையா ?

தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய சொற்கள் சில இக் காலத்தில் மாற்றம் பெற்றுள்ளன. சில வழக்கத்தில் இல்லாமலும் அற்றுவிட்டன. சில ஏட்டளவில் வாழ்கின்றன. பின்னுல் உரியியலிலும் மரபியலிலும் அவர் காட்டுகின்ற எத்தனையோ சொற்களை எண்ணி எண்ணி அவை அமைந்துள்ள பண்பட்ட மரபினை வியவாதிருக்க முடியாது. அவை பற்றிப் பின் காணலாம். தமிழில் உயர்திணை அஃறிணை முடிபுகளில் இன்று நாம் 'கள்'ளைத் தாராளமாகப் பயன்படுத்துகிறோம். அவர்கள் வந்தார்கள் என்ற சொல் இன்று மிகச் சாதாரணமாகப் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். தொல்காப்பியர் காலத்தில் 'கள்' உயர்திணைக்குத் தேவைப்படாத ஒன்று. மரங்கள், வண்டுகள், மாடுகள் போன்ற வகையில் கள் என்ற ஈறு அஃறிணைக்குப் பயன்பட்டன. 'கள்' என்ற சொல்மட்டுமன்றி அது வேறு வகையில் உணர்த்தும் பொருளும் உயர்திணையாகிய மக்கள் வாழ்வில் இடம் பெற்றுவிட்டது. அதனுலேயே வள்ளுவனுர் 'கள் உண்ணுமை' என்ற அதிகாரத்தையே அமைத்தார். காந்தி அடிகள் அதைப் போக்க முயன்ருர். இன்றை அரசாங்கம் சட்ட முறையில் நீக்க முயன்று ஓரளவு வெற்றி பெற்றுள்ளது. 'கள்' மக்கள் வாழ்வில் எத்தனையோ தடுமாற்றங்களை உண்டுபண்ணுவதை அன்ருட வாழ்வில் கண்ட நமக்கு அதன் கொடுமை நன்கு விளங்கும். அதனுல்தான் போலும் தொல்காப்பியர் அந்தச் சொல்லையே உயர்திணையோடு சேர்க்க வேண்டாம் என அறுதி செய்துவிட்டார், சிலசொற்களே மனித வாழ்வுக்கு ஊறுதருவன: அச்சொற்களின்

பெயர்கள் கெடுவதே மக்கள் வாழ்வு செம்மைப்படுவதற்கு வழி என அறிஞர் காட்டுவர்.

'காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்' (குறள் 360)

என்று வள்ளுவர் அவற்றின் பெயர்களே கெடவேண்டும் என்கின்றார். எனவே தொல்காப்பியர் 'கள்' என்ற பொருளின் கெடுநிலை அறிந்து, அந்தச் சொல்லையே உயர்திணை என்பாருடன் சேர்க்கலாகாது என விளக்கிய பண்பாடு வியத்தகு பண்பாடாகாதோ! எண்ணிப் பாருங்கள்.

வினைச் சொல் விளக்கம்

இனி, வினைச்சொற்கள் அமைப்பைக் காண்போம். அச் சொற்களின் அமைதியே பண்பாட்டை விளக்குவதாகும். தெரிநிலை குறிப்பு என இருவகை வினைகள் உள்ளன. சிலவற்றை வெளிப்படையாகப் பேச வேண்டியிருக்கும்; சிலவற்றைக் குறிப்பாக உணர்த்த வேண்டும். இக் குறிப்பால் உணர்த்துவது அரசியலிலும் பிற வாழ்வியல்களிலும் இன்றியமையாத ஒன்று. குறிப்பால் உணர்த்துவதும் உணர்ந்து கொள்ளுவதும் மிகவும் கடினம். அதனாலேயே திருவள்ளுவர்,

'குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்' (குறள் 703)

என வற்புறுத்துவர். எனவே குறிப்பு வினை மிக இன்றியமையாது, மொழிக்கு வேண்டுவது. தொல்காப்பியர் இக்குறிப்பு வினையை நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். இக்குறிப்பு வினையே பேச்சில் பண்பாட்டை விளக்குவது. சிலவற்றை சிலர் முன்னிலை

யில் சொல்லக்கூடாது. ஆனால் உடன் உள்ள மற்ற வர் உடனேயே அதை அறியவும் வேண்டும் என்ற நிலையில் குறிப்பு வினை பயன்படுகிறது. சில கூறத் தகாத சொற்களை மறைத்துக் கூறுதலும் தேவை. 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' (தொல் 9.46) என்பது போன்றவை இதனுள் அடங்கும். இவ்வாறு பலவகையில் தொல்காப்பியனர் குறிப்பு வினையைக் காட்டுவர். பல வினைகளைப் பகுத்து அவற்றின் இன்றியமையாத நிலையையும் மொழி யிடைப் பெய்து காட்ட வேண்டிய வகையையும் நன்கு விளக்குவர். (6.23). இன்னும் தமிழில் இவ்வி னைச் சொற்கள் சொற்செட்டாகப் பயன்படுகின்றன. தமிழில் 'வந்தான்' என்ற பயனிலையே வந்தவன் ஒரு வன் என்பதை உணர்த்தும். ஆங்கிலத்தில் He, Came' என்றுதான் சொல்லவேண்டும். 'Came' என்று சொன்னால் அது எல்லா எழுவாயையும் சாரும். எனவே தமிழ் வினையில் சொற் செட்டும் உண்டு. ஆனால் இங்கு அது பற்றிய ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை.

இடைச் சொல்

வினைச் சொல்லை இந்த அளவோடு நிறுத்தி, அடுத்துவரும் இடைச்சொற்கள் பற்றிக் காண்போம். தொல்காப்பியனர் இடைச் சொல் இலக்கணத்தை,

> 'இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
> நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே, (இடை.1)

எனக் காட்டுவர். இடைச் சொல் என்றும் தனக் கென வாழவே இல்லை; பிற பெயர் வினைகளுக்கா கவே வாழ்கின்றது. மக்கட் சமுதாயத்தில் அவ்

வாறு தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இணைந்திருக்கவே வேண்டிய மனிதன் பலவகையில் மாறுபடுகிறான். உடன் பிறந்து, ஒன்றுய் உண்டு ஒன்றுய் உலவி வாழ்ந்த வன் திடீரென மாறுபட்டுப் பிரிந்து விடுகின்றான். அப்படிப்பட்ட பிரிவை வளர்க்கலாமா? நல்லவர் அவர்கள் இடையில் நின்று அப்பிரிவை மாற்றி ஒன்று படுத்த முயலல் வேண்டும். சங்க இலக்கியத்தில் வரும் கோவூர்கிழார் போன்றவர்கள் அத்தகைய பணிகளைச் செய்திருக்கின்றனர். இருபதாம் நூற் றாண்டில் சிலர் மற்றவரைப் பிரித்துப் பகையாக்கி அதற்கிடையில் தம் வாழ்வைப் பெருக்கிக் கொள் ளும் நாகரிகத்தைக் காண்கின்றோம். நல்லவர்கள் அந்தக் கொடுமையைக் கண்டித்து, தாம் வாடினும் மற்ற இருவர்தம் இணைப்பைப் பிரிக்காது வளர்க்க வேண்டுமெனவே முயல்வர். இடைச் சொல்லும் இந்த பண்பாட்டையே உலகுக்கு உணர்த்துகின் றது. இடைச்சொல்லுக்குத் தனியாகப் பொருளோ வாழ்வோ கிடையாது. ஆனால் அது இன்றேல் மொழிக்கு வாழ்வு கிடையாது. தன்னலம் பேணுத நல்லவர் இன்றேல் சமூக வாழ்வு மலராதது போன்றே இடைச்சொல் பிற பெயரோடும் வினையோடும் வந்து தனக்கென எந்த இயல்பையும் கொள்ளாது மற்றவற்றிற்காகவே வாழ்கிறது. இது பண்பாட்டின் உச்சநிலை. தான் கெடினும் தக்கார் கேடெண்ணுத நிலை. இது எல்லாருக்கும் இயலாத ஒன்றுதான். ஒரு சிலராவது இந்தப் பண்பாட்டில் தலை நின்றால்தான் உலகம் வாழும். அப்படி வாழ்ந்த காந்தி, அப்பர், இயேசு, மணிமொழியார், கோவூர்கிழார் போன்ற வர்களாலேதான் உலகம் வாழ்கிறது. 'பண்புடை

யார் பட்டுண்டு உலகம்' என்று வள்ளுவராலும் பாடமுடிகின்றது, இடைச்சொற்கள் அனைத்துமே - அவை சிலவாயினும் இந்த உயர்ந்த பண்பாட்டின் அடிப்படையிலேயே மொழிக்குத் தொண்டு புரிந்து மனிதனுக்கு அறிவூட்டிக் கொண்டே இருக்கின்றன.

புணர்ச்சி

இடைச்சொல்லைப் பார்க்கும்போது மற்றொன்றை யும் காணவேண்டும். முன் எழுத்துக்களைக் காணும் போதே இதையும் கண்டிருக்கலாம். எனினும் இணைப்பு காட்டும் இங்கேயே அதைச் சேர்க்கலாம் என்று நினைத்தே அங்கே விட்டுவிட்டேன். அது தான் புணர்ச்சி என்பது. தொல்காப்பியர் அதை 'மயங்கியல்' என்றே காட்டுவர். உயிர் மயங்கியல், மெய் மயங்கியல் என்று அவை ஒன்றோடொன்றுசேரும் போது உண்டாகும் மயக்கத்தை விளக்குவர். ஒரு சொல்லும் மற்றொரு சொல்லும் சேரும்போது எத் தனையோ மாற்றங்கள் நிகழ்கின்றன. நிலைமொழி வருமொழி என்ற அந்த இரண்டும் தத்தம் நிலையிலி ருந்து சிறிதும் இறங்காது நிற்குமேயானால் பலசொற் கள் சேர முடியாது; எனவே மொழியே உண்டா காது மனித சமுதாயத்திலும் பலர் சேரும்போது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் பழகித் தம் முள் கலக்கவில்லையானால் சமுதாயம் கலந்து ஒன் றிய உயரும் சமுதாய மாகுமா? சேரும்போது சில சொற்களின் எழுத்துக்கள் கெடும்—சிதையும்— மாறும்—நிலை வேறுபடும். இப்படி எத்தனையோ வகை யில் தம்மைக் கெடுத்து—தாம் என்பதை மறந்து— பொதுவாக, மொழி என்ற ஒன்றை நினைத்தே அவை கலந்து மொழியை வளர்க்கின்றன. மனிதனும் அந்த

நிலையில் தான் தனது என்ற தனி நிலையை மறந்து பரந்த சமுதாயத்தை நினைத்து, சமுதாயம் வளரத் தான் தாழவேண்டுமாயினும் மாற வேண்டுமாயினும் தேவைக்கேற்பத் தன்னைச் சரிசெய்துகொண்டு தன்னோடு சேரும் மற்றவரோடும் ஒத்துவாழ வேண்டும் என்ற உண்மையினையே இந்தப் புணரியல் விதிகள் உணர்த்துகின்றன. மனிதன் உணர்ந்து அதன்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறான். இன்றேல் காலமும் சமுதாயச் சூழலும் நிச்சயம் அந்த மாற்றத்தைச் செய்தே தீரும். அப்போது அந்தத் தனி மனிதன் சமுதாயத்திலிருந்தே விலக்கப்பட்டு மறக்கப்படுவான்.

உரிச்சொல்

இனி உரிச் சொற்களைப் பற்றி ஒரு சில காணலாம். பண்பை விளக்குவதே உரிச்சொல் இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றுவதே உரிச்சொல் என்பர் தொல்காப்பியர். தமிழில் எல்லாச் சொற்களும் பொருள் குறித்தே உண்டாயின. தமிழர் வீண் சொற்களைப் பேசி வீணே காலம் கழிப்பவரல்லர். அது பண்பாட்டுக்கு மாறுபட்டதும்கூட. எனவேதான் திருவள்ளுவர் 'பயனில் சொல் கூறுமை' என்று ஓர் அதிகாரமே அமைத்துப் பத்துக் குறளினும் அதனால் உண்டாகும் தீமையை விளக்கிக் காட்டினார். எனவே வீணான சொற்களை உபயோகப்படுத்தி மொழியைப் பயனற்றுப் பயன்படுத்தவில்லை தமிழர். மொழியும் தன் பண்பாட்டிற் கேற்ப அதற்கு இடமும் தரவில்லை. எனவே தான் தொல்காப்பியர்,

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'
(பெயர் 1.)

என்றார். அவ்வாறு பொருளை உணர்த்தும்போது சில சொற்களே சமுதாயப் பண்பாட்டை நமக்குக்

காட்டுகின்றன என்பது உரிச்சொற்களால் நமக்கு விளங்குகின்றது.

புலம்பே தனிமை

மனிதன் கூடிவாழவே பிறந்தான். சமுதாய வாழ்வே அவனுடையது. சமுதாய ஒற்றுமையை வளர்க்க இன்றைய அரசாங்கத்தார் ஏதேதோ செய்கின்றனர். அவ்வாறு கூடிவாழவே மனிதன் பிறந்தான். அதை விட்டுத் 'தனிமையில் தான் வாழ்வேன்' என்று எவனுவது எண்ணி வாழ்வானுனுல் அவன் வாழ்வு துன்பத்தில்தான் முடியும். இதை இன்றைய உலகம், தனி மனித வாழ்விலும் சரி, நாடுகளின் வாழ்வினும் சரி நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. பிறநாடுகளோடு சேர்ந்து வாழாது தனித்து வாழ எந்த நாடாவது விரும்பின் அது வருந்திப் புலம்பி அழியவேண்டுவதே. தனி மனிதன் வாழ்வும் அப்படித்தான். கூட்டுவாழ்விலேதான் மனிதப் பண்பாடே மலர்கின்றது. தனி வாழ்வே அப்பண்பாட்டை மாய்க்கின்றது. இத்தனை பரந்த உண்மையைத் தொல்காப்பியர்,

'புலம்பே தனிமை' (உரி. 35)

என்று இரண்டு சொற்களால் நன்கு விளக்கிவிட்டார். 'புலம்பு' என்ற சொல்லுக்கே தனிமை என்ற பொருளைக் காட்டி, புலம்பாது வாழ விரும்பினுல் கூட்டுவாழ்வை மேற்கொள் எனக் காட்டுகின்ருர். இவ்வாறே பல சொற்களைக் காண இயலும்.

தெய்வ நெறி

தெய்வத்தை நாம் வணங்குகின்ருேம். கடவுளை நாம் போற்றுகின்ருேம். கடவுள் தமிழர் நெடுங்கால

மாக வழிபட்ட ஒன்று. ஏன் நாம் கடவுளைப் போற்ற வேண்டும், மாணிக்க வாசகரும் பிற சமயத்தலைவரும் அதற்குக் காரணங்களைக் காட்டுவர்.

'வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்
மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எலாம்
தொழவேண்டி
சூழ்த்து மதுகர முரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உனைப்
பரவுவனே'

என்று மாணிக்கவாசகர் காரணம் காட்டுவர். சுந்தரர் அப்பரமன் 'இம்மையே தரும் சோறும் கூறையும்' எனக் குறிப்பர். இவ்வாறு எதையாவது பெறுவதற்கே நாம் இறைவனைப் பரவுகின்றோம். அது சோறுயினும், வாழ்வாயினும், வீடாயினும் ஆகுக. தேவினைப் பரவுவது நாம் வாழவே. இந்த உண்மையைத் தொல்காப்பியர்,

'தெவு கொளற் பொருட்டே' (உரி. 46)

என்பர். தெவு என்பதும் தேவு என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும். 'தேவு தெண்கடல்' எனக் கம்பன் குறிப்பான். எனவே கடவுள் நெறி மக்கள் வாழ்வுக்கே என்ற உண்மையை இச்சொல் நன்கு விளக்குகின்றது. கடவுள் வேறு வாழ்வு வேறு, என்று எண்ணிப் பேசுவார்க்கும் இது நல்ல உண்மையை விளக்கு மன்றே.

சில சொற்களை இடமறிந்து பயன்படுத்தவேண்டும் என முன்னமே அறிந்தோம். இங்கே சில சொற்களைக் காணலாம். ஈ, தா, கொடு என்ற மூன்று சொற்கள் ஒரே பொருளில் வழங்குகின்றன. அவற்றை

வழங்கும் முறையில் தான் பண்பாடு அடங்கியுள்ளது. உயர்ந்தவன் தன்னினும் தாழ்ந்தவரிடத்தே 'அதை எனக்கு ஈ' என்று கேட்கலாமா? இலக்கண முறைப்படி தவறில்லைதான் கேட்கலாம்; பொருளிலும் மாறுபாடில்லை. ஆனால் அது பண்பாடு ஆகாது எனபதைத்தான் தொல்காப்பியர் காட்டுவர். 'கொடு' என்பதை உயர்ந்தோன் தாழ்ந்தோனிடத்தும் 'தா' என்பதை ஒப்போனிடத்தும். 'ஈ' என்பதை தாழ்ந்தோன் உயர்ந்தோன் இடத்தும் ஆளவேண்டும். இப்படிச் சொற்களையே இடமறிந்து தரமறிந்து வாழ்வறிந்து வகையறிந்து உபயோகிக்கும் மொழி காட்டும் பண்பாடு மனிதனிடம் வளர்ந்து விடுமானால் பின் அவனுக்கு வேறு என்ன தேவை?

வேற்றுமையும் உண்டு

சொற்களைப் பற்றி முடிக்குமுன் மற்றொன்றைக் காண்போம். அதுதான் வேற்றுமை என்பதாகும். 'என்ன மக்களினத்தில்தான் வேற்றுமை என்றால் மொழியிடத்தும் வேற்றுமையா?' என்ற கேள்வி எழும். ஆனால் மொழியிடம் காணும் வேற்றுமை மொழியை வளம்படுத்தி வாழவைப்பது. மக்களிடத்தில் உண்டாகும் வேற்றுமையோ சமுதாயத்தை கருவறுப்பது. தமிழில் எட்டு வேற்றுமைகள் உள. எழுவாயாகிய முதல் வேற்றுமையையும் விளியாகிய எட்டாம் வேற்றுமையையும் நீக்கி உருபுள்ள வேற்றுமைகள் ஆறே. இவை பெயர்ச்சொற்களின் ஈற்றில் வந்து அவற்றின் பொருளைத் தேவைக்கேற்ப மாற்றும். மனிதன் மரம் வெட்டினான் என்றால் பொருள் விளங்கவில்லை. ஆனால் மரத்தை வெட்டினான் என்றால் பொருள் விளங்குகிறது. அங்கே 'ஐ' வந்து

பொருளை விளக்குகிறது. 'மரம்', 'மரத்தை' ஆயிற்று, இது இரண்டாம் வேற்றுமை. இப்படியே பிற வேற்றுமைகளும். இவை மொழியில் ஆளப்படுவதால் பொருள் நன்கு புரிவதோடு மொழியும் வளம்பெற்றுச் சிறக்கிறது. ஆம்! உண்மையில் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு சிறப்பது மொழியேயாகும். மனிதன் அவ்வாறு பேசிக்கொண்டே நாளுக்குநாள் வேறுபாடுகளை வளர்த்துக்கொண்டேதான் போகின்றான். எனவே மொழியில் வரும் வேற்றுமைகள், மனிதன் வேற்றுமையால் ஒற்றுமை கண்டு வாழ்வை வளம் படுத்தவேண்டிய பண்பாட்டை அவனுக்கு வற்புறுத்துகின்றன.

பொருளியல்.

இதுவரையில் மொழியின் அடிப்படைகளாகிய எழுத்தும் சொல்லும் மக்கட் சமுதாயத்துக்கு உணர்த்தும் பண்பாட்டு நெறியினைக் கண்டோம். மேலும் அச்சொற்களாலாகிய பொருள்களும், அப் பொருள்கள் விளக்கும் இலக்கியங்களும் காட்டும் பண்பாட்டையும் கண்டுள்ளோம். பொருளதிகாரத்தில் பொருளையே அகம் புறம் என்ற இரண்டாகப் பிரித்து அவற்றின் வழி மக்கட் பண்பாடு எப்படி எப்படி உருவாயிற்று என்று நன்கு விளக்கித் காட்டுகின்றார் தொல் காப்பியர். அவர் காட்டும் மொழி வழிப் பண்பாட்டு நெறிகள் அளவில

தொல்காப்பியர் பெரிய பொருள் அதிகாரத்தைச் சொல்லுகின்றபோது, அதில் தனியாகப் பொருள் இயல் என்றே ஒன்று அமைத்துள்ளார். மற்றும் உயிர்களின் அடிப்படைத் தன்மையையும் அவை எப்படி எப்படி மெல்ல மெல்ல அறிவுகளைப் பெற்று

வளர்கின்றன என்பதையும் நன்கு விளக்கமாகக் காட்டி, அவற்றின் உச்சியில் மன அறிவு பெற்ற மனிதன் வளர்ந்துள்ளதையும் விளக்கி அவன் எப்படிப் பண்பாட்டுடன் வாழவேண்டும் என்பதையும் காட்டுகின்றார்.

'புல்லும் மரனும் ஓரறி னினவே (மர பு.28)

எனப் புல் தொடங்கி,

'மக்கள் தாமே ஆறறி உயிரே' (மரபு 33)

என மனிதன் வரை படிப்படியாகக் காட்டுகின்றார் தொல்காப்பியர். இதனுல் புல் முதலிய ஓரறிவுடைய உயிர்களிடத்தும் மக்கள் கருணைகாட்ட வேண்டும் என்ற பண்பாடு புலனுகின்றது. அண்மையில் வாழ்ந்த அருள்நலம் பெற்ற இராமலிங்க அடிகளார் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று ஓரறிவுடைய உயிர்களின் வாட்டத்தை கண்டு உணர்ந்து பாடுகின்றார். இதை உணராத சிலர் இன்று மரத்திற்கு உயிர் உண்டு என்று வங்க நாட்டு வசு கண்டுபிடித்தார் என்றும், அதற்கு முன் யாருக்குமே இந்த உண்மை தெரியாது என்றும் எழுதியும் பேசியும் வருகின்றனர். அவர்கள் அறியாதவர்க ளன்றே!

மரபியல்

இனித் தொல்காப்பியர் மரபியலுள் இன்னன்ன பொருளை இன்ன வகையில் சொல்வதுதான் பண்பாடுடுக்கு ஏற்றமுறை எனக் காட்டுவர்.

'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே'

என்று சுருக்கமாக நன்னூல் கூறிச் சென்ற உண்மையை இவர் ஒரு தனி இயலாகவே விரித்துக் காட்டி

யுள்ளார். ஓரறிவுயிராகிய புல் மரம் முதலியன தொடங்கி, விலங்கு பறவை ஆகியவற்றின் பெயர்களையும் அவற்றின் இளமை நிலையில் உள்ளவற்றின் பெயர்களையும், பிறவற்றையும் பிரித்துப் பிரித்துக் காட்டும்போது தமிழ்ச் சமுதாயம் இப்படிப் பெயரிட்டு அழைப்பதில்கூட எத்துணையோ பண்பாட்டைக் கொண்டது என அறிந்து மகிழ்கின்றோம். விலங்குகளிடத்துள்ள ஆண் பெண் வேறுபாட்டையும், மரத்துக்கும் புல்லுக்கும் உள்ள வேறுபாட்டையும் இன்றைய விஞ்ஞானிகளும் இதுவரை அறிந்து காட்டாத வகையில் தொல்காப்பியர் மரபியலில் நன்கு விளக்கியுள்ளார். இவ்வாறெல்லாம் மரபு நிலைகளை விளக்கி அம் மரபுவழி வரும் பண்பாட்டை மாற்ற நினைப்பவருக்கும் ஒருபாடம் சொல்லுகின்றார்.

'மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்' (88)

என்பது அவர் வாக்கு. இவ்வாறு 'மரபுவழி நான் வாழ மாட்டேன்' என்று யாராவது சொல்வார்களாயின் அவர்கள் நிலை கெடுவார் என்பதை இத்தகைய தொடரால் விளக்கி, அவர்கள் வாழ்க்கை சமுதாயத்துக்குக் கேடு பயக்கும் என்பதையும் காட்டி, அத்தகையவர் வாழினும் வீழினும் என் என்று குறித்துப் பல உண்மைகளை இதில் பிணைத்துள்ளார். இப்படியே பல சூத்திரங்களில் பொருள்இயல் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

தழாஅல் வேண்டும்

முடிவாகத் தொல்காப்பியர் வெறும் எழுத்துக்கும் சொல்லுக்கும் பொருளுக்கும் மட்டும் இலக்கணம் கூறிய தோடமையாது—அவற்றுல் சமுதாயம்

வாழவேண்டிய பண்பாடுகளைக் காட்டிய தோடமையாது—அவற்றிற்கெல்லாம் அடிப்படையாகிய இந்த உலகத் தோற்றத்தைக் கூறி, இதில் மக்கள் வாழவேண்டிய இலக்கண அமைதியையும் காட்டி, வாழ்வாங்கு திரிபின்பு வாழ்வதே வாழ்க்கை என்பதை ஒரே சூத்திரத்தால் நன்கு விளக்கிகுருர்.

> 'நிலம் நீர் தீ வளி வீசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் இவ்வுலகம் ஆதலின்
> இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
> திரிபில் சொல்லோடு தழாஅல் வேண்டும் (மர 86)

என்ற சூத்திரம் எண்ணி எண்ணி மகிழ வேண்டியது. உலகம் எதனுல்ஆயது என்ற உண்மையைப் பெரிய விஞ்ஞானிகள்கூட நேற்றுவரை அறியாது இடர்ப்பட்டனர். ஆனுல் தொல்காப்பியர் அன்றே—ஆயிரமாயிர மாண்டுகளுக்கு முன் பே—உணர்ந்து உரைத்துவிட்டார். பஞ்சபூதச் சேர்க்கையே இவ்வுலகம் என்பதை இன்றைய விஞ்ஞானம் விளக்குகின்றது. பஞ்சபூதங்களன்றி உலகில் வேறு ஒன்றும் இல்லை. அதைத்தான் தொல்காப்பியர் அவை 'கலந்த மயக்கம் இவ்வுலகம்' என்ருர். அம்மயக்கம் தெளிந்து உண்மை அறிய இத்தனை ஆயிரம் ஆண்டுகளாயின. இனியாயினும் அவர் இச்சூத்திரத்தின் பின் கூறியபடி இலக்கண இலக்கிய மரபு கெடாது, அவைகாட்டிய—காட்டுகின்ற—காட்டும்—பண்பாடு கெடாது மனிதன் வாழத் தொடங்க வேண்டும். அவ்வாறு வாழ முயல்வதே அவன் தன்னை வளர்த்த மொழிக்குச் செய்யும் கடமையாகும். மனித இனம் அக்கடமை உணர்ந்து பண்பாட்டு வழிபற்றி வாழ முயலுமாக!

VIII. பண்பாட்டு நிலைக்களன்கள்–1

பண்பாட்டை காட்டுவன பல—
ஆடை—அணி—சிலம்பு — இலக்
குவன் விடை—காப்பு—மலரும்
மணமும்—உணவு—பெயர்கள்—
உண்ணும் முறை — மருந்து —
அகமும் புறமும் — போரிலே
பண்பாடு — கல்வி — கலைகள் —
விழாக்கள் — பழக்க வழக்கங்
கள் — ஆசாரகோவை — விரதங்
கள்—இல்லறமா ? துறவறமா ?

பண்பாட்டைக் காட்டுவன பல

மனிதன் தனிவாழ்வை விட்டுக் கூட்டு வாழ்வினைத் தொடங்கிய நாள் தொட்டு இன்றுவரை எத்தனையோ வகையில் மாறுபட்டு வருகின்றான். கூட்டு வாழ்விற்குப் பலப்பல சார்புகளை அமைத்துக் கொள்ளுகின்றான். அந்தச் சார்புகளே அவனை உயர்த்தப் பயன்படுகின்றன. தன்னைப் பிறர் விரும்பும் வகையில் நடந்து கொள்வதே கூட்டு வாழ்வின் அடிப்படை உண்மையாக அமைந்துவிட்டது. பலர் நடுவில் தான் ஒரு தலைவனாக—நாயகமாக—விளங்க விரும்புகின்றது மனித உள்ளம். அந்த உணர்வை நிறைவேற்றிக் கொள்ள மனிதன் எத்தனையோ வழித்துறைகளைக் கையாண்டு வருகின்றான். இவை

களுள் பல, தொடக்க நாட்களில் அவனது பண்பாட்டைக் காட்டவே பயன்பட்டன. ஒரு சிலவற்றை எடுத்துக் காண்போம்.

ஆடை

மனித வாழ்வுக்கு உடை இன்றியமையாதது. ஏன்? அவன் உடலின் ஒருபாகத்தை மறைத்தே அவன் உலவ வேண்டிய நிலை, அவன் உள்ளம் பண்பாடு பற்றிய காலத்தில் தேவையாக இருந்தது. விலங்கொடு விலங்காக வேறுபாடு ஒன்றுமின்றி வாழ்ந்த நிலை மாறி, மனிதன் மனிதனுக வாழத் தொடங்கிய நாளில் உடை அவனுடைய பண்பாட்டு விளக்கமாக விளங்கிற்று. ஆணும் பெண்ணும் தத்தம் ஒழுக்கத்தையும் பிற நல்லியல்புகளையும் காத்துக்கொள்ள உடை பயன்பட்டது. எனவே உடை உடுத்தல் வளரும் மனித சமுதாயத்தின் வரலாற்றில் சிறந்த எல்லைக் கல்லாக அமைந்து விட்டது.

பழங்கால மனிதன் நெய்யக் கற்றுக் கொள்ளாத காரணத்தால் தழைகளைக் கோர்த்தும் மரப்பட்டைகளைப் பிணைத்தும் விலங்கினத்தின் தோல்களைச் சேர்த்தும் ஆடையாக உடுத்தான். பின்னல் பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் பலவகை ஆடைகளை நெய்யக் கற்றுக்கொண்டான். இன்று அத்துறையில் அவன் வெகுதூரம் முன்னேறி எத்தனை எத்தனையோ பொருள்களைக் கொண்டு பெரும் பெரும் இயந்திரங்களின் துணையால் பல ஆடை வகைகளை உண்டாக்கிக் கொண்டான். என்றாலும் ஆடை அவன் பண்பாட்டுச் சின்னம் என்ற உணர்வு அம்மனிதனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டதோ

என்று நினைக்க வேண்டிய அளவுக்கு அதை நிலை குலையச் செய்துவிட்டான். உடல் உறுப்புக்களை மறைத்தலே பண்பாடு எனவும், அதற்கெனவே ஆடைகள் தேவையெனவும் அறிந்து அதை கண்டு போற்றி வளர்த்த பரம்பரையில் வந்த இந்த மனி தன், அதே உறுப்புக்களை எத்தனை எத்தனைக் கோணங்களில் பிறர் கண்டு நிலைகெட முடியுமோ அத்தனைக் கேவலமாக உடைகளைத் தயார் செய்கின் றான். கலையின் பேரால் உடலுறுப்புக்களை உலகுக் குக் காட்டுகின்ற வகையில் ஆடைகளைப் பயன் படுத்துகின்றான். இந்த நிலை அவனைப் பண்பாடற்ற விலங்கு நிலைக்கே ஈர்த்துச் செல்லுகின்றது. இது வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.

இப்படியே நாட்டின் தட்ப வெட்ப நிலைக்கேற்ப ஒவ்வொரு நாட்டினரும் ஒவ்வொரு வகையில் உடுத் தியிருந்த ஆடையின் நிலைமாறி, மற்றவரைக் கண்டு அவர்வழித் தாம் உடுக்க நினைப்பதே நாகரிகம் என்ற உணர்வும் இந்த நூற்றாண்டில் அரும்பியுள்ளது. ஆளவந்த ஆங்கிலேயர் தம் பல நல்லியல்புகளை நாம் கைக்கொள்ளா விடினும் அவர்தம் உடைப் பழக் கம் நம்மை நன்கு அடிமைகொண்டுவிட்டது. 'கோட்டும் சூட்டும்' அணிந்துகொண்டு மின் விசிறி யின் கீழ் அமர்வதையே நாகரிகமென நினைக்கின் றோம் நாம். நாட்டு வெப்ப நிலைக்கேற்ற உடைகளை அணியின் மற்றவர் எள்ளி நகையாடுவர் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டோம். காந்தி அடிகளார் இந்த உணர்வை மாற்றவே ஆங்கில நாட்டுக்குச் செல்லும்போதும் சிறு துண்டு ஆடை யுடன் சென்றார். எனவே பண்பாட்டின் அடிப் படைக்கு ஆடை இன்றியமையாத ஒன்று என்று

உணர்ந்து வாழப் பழக வேண்டிய மனிதன் இன்றைய நிலையைச் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டியவனாகின்றான்.

இந்த ஆடையின் அமைப்பைப் பற்றியும். அது அமைய வேண்டிய முறை பற்றியும், ஆடையின் நிலை கண்டே ஒருவருடைய பண்பாடு, பணி பிற நிலைகள் பற்றி அறிந்துகொள்ளும் முறைபற்றியும் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவாக விரித்துரைக்கின்றன அல்லவோ! அரசர், அந்தணர் முதலியோர் மரபினையும், வாணிகர், வேளாளர், பணியாளர் முதலியோர் தொழிலினையும், பிற வகைகளையும் அவர்தம் உடைகளிலிருந்தே அறிந்து கொள்ள வாய்ப் பிருந்ததை யாரே அறியாதார்! இன்றும் அமைச்சர் முதலியோர் வருகையை அவர்தம் முன்னிலை அலுவலர் உடை முதலியன கண்டே உணர்ந்து கொள்ளுகிறோமல்லமோ!

'உண்பது நாழி உடுப்பன இரண்டே' என உணவுக்கும் உடைக்கும் வரம்புவைத்த புறநானூற்று அடி நாடறிந்த ஒன்றாகும். தமிழ்நாட்டு வெம்மை நிலைக் கேற்ப, மக்கள் அடிக்கும் மேலுக்குமாக இரண்டு உடைகளையே உடுத்துவந்தனர் எனவும், இவ்விரு உடைகளும் அணிபவர் செல்வ நிலைக்கேற்பப் பட்டாலும், நூலாலும், பிறவற்றாலும் அமைந்திருந்தன எனவும் காண்கின்றோம். 'மெய்ப்பை புக்குக்' காவலர் இருந்தனர் என்பதைப் பத்துப்பாட்டு நமக்கு உணர்த்துகின்றது. ஏழ்மையில் உள்ள தையலொடு கூடிய ஆடைகளைக் களைந்து பொன்னுடை போர்த்தி மகிழும் புரவலர்களைப் பல ஆற்றுப்படைகள் நமக்கு உணர்த்துகின்றனவே. ஆண்டிகளும் அர

சரோ என மருளவைத்தது ஆடையே என்பதை அவற்றின் வழி நாம் அறிந்துகொள்ளுகின்றோமல்லமோ!

இவ்வாறே பெண்டிர் புறத்தோற்ற அமைப்பாகிய ஆடையின் நிலை கண்டே அவர்தம் செம்மையினையும் பண்பினையும் உணர்ந்துகொள்ள வாய்ப்புடைய இடங்களைப் பல சங்ககாலப் புலவர்கள் காட்டுகின்னர். முதுகுடிப் பெண்டிரும் பரத்தையும் பரவிவரும் இலக்கியங்களில் இவ்வுண்மைகள் விளக்கப்பெறுகின்றன. மற்றும் மக்கள் இன்பதுன்ப நிலைகளையும் அவர்தம் உடை, அணி முதலியவற்றுலே அறிந்துகொள்ள வாய்ப்பிருந்ததே. மாதவியின் மையலிலே தன் கணவன் ஆழ்ந்த காலத்து 'மங்கல அணியன்றி பிறி தணியாது, எளிய உணவுடன், பூவும் பிற பொலிவுப் பொருள்களும் வேண்டாது வாழ்ந்த கண்ணகியை நமக்கு இளங்கோவடிகள் எப்படி வடித்துக் காட்டுகின்றார்! பின் வந்த கம்பர் 'ஓவியம் புனை உண்டதே ஒக்கின்ற' உருவினளாகிய சீதையை அவளது உடை, நிலை, அணிகலன் முதலியவற்றுல் காட்டுவது பண்பாட்டின் நிலைக்கள னல்லவோ! வேற்று ஆடையினையோ மலர்களையோ, பிறவற்றையோ கண்டால், தலைவியின் மாற்றம் அறிந்து தலைவியின் பெற்றோர் மேற்கொண்ட மணவினைகள் தாம் எத்தனை! மணவினையின் மங்கலப் பொருளாக அமையும் ஆடையின் சிறப்புக்கள் பலவன்றே! ஆண்டவனை வழிபட்ட அடியவர்கள் 'புலராகக் காழகம் புலர உடீஇ' போற்றிய மரபினை முருகு காட்டவில்லையா. இவை அனைத்தும் இன்று அடியோடு மாறவில்லை யென்று சொல்ல முடியாவிடினும்; ஆடை பண்பாட்டை வாழவைப்பது என்ற உண்மை நிலையை

மக்கள் உள்ளம் உணர மறுத்து வேறு வகையில் செல்லுவதைக் காண முடிகின்றதன்றே.

இவ்வுடைகளைப் பற்றிய குறிப்புக்கள் தமிழ் இலக்கியங்களுள் பல. அவற்றைத் தொகுத்துத் தருவ தென்பது இயலாது. எனவே சங்க இலக்கியங்களுள் உள்ள உடை பற்றிய ஒரு சில குறிப்புக்களை மட்டும் ஈண்டு சுட்டிக்காட்டி அமைகின்றேன். அவற்றின் விரிவும் விளக்கமும் அவ்வந் நூல்வழி அறிதல் சிறப்புடையதாகும்.[1]

அணி

இனி, அணிகளைப் பற்றியும் எண்ணிப் பார்த்தல் பயனுடைத்தாகும் என நினைக்கின்றேன். இன்று அணிகளையும் பலர் ஆடையைப் போல வெறும் அழகுக்காக இடுவதாகவே எண்ணுகின்றனர். தமிழ்நாட்டு இலக்கியங்கள் வழி ஆராயின் அணிகள் அவர்தம் வாழ்வோடு பிணைந்த பண்பாட்டினையே விளக்குவதைக் காணலாம். தமிழ்நாட்டு மகளிர் மணம் புரிந்து கொண்டபின் மற்ற ஆடவரால் நோக்கப் பெறுத வகையில் கற்புடையவராக இருக்க வேண்டியவர்கள். 'பிறர் மனை நோக்காத பேராண்மை' என வள்ளுவர் இதையே ஆடவர்களுக் குரிய சிறந்த பண்பாடாகவும் ஆண்மையின்

---

1. உடை :—வகை
நற். 64,21,33.
குறு—146
நெடுநல். 18,
முல்லைப், 51, 36,
கலி—58
பொருந—53,82,155,
பெரும்பா—29,175,328,469
முருகு—214
அகம்—387,136.
பட்டினப்—187
புறம், 379,389,189,

சின்னமாகவும் குறிக்கின்றார். எனவே மகளிர் தாம் மணம் புரிந்தவராகக் காட்டிக் கொள்வ தெவ்வாறு? கழுத்தில் அணிந்த மங்கல நாணே அவர்தம் மணத்தைக் குறிப்பது என்பர் சிலர். அந்த மங்கலமாகிய தாலியே சங்ககாலத்தில் இருந்ததா இல்லையா என்கின்ற ஆராய்ச்சி இன்னும் முடிவடையவில்லை. எனவே அதைக் கொண்டு காண முடியாது! மற்றும் அப்படியே இருப்பதாகக் கொண்டாலும் மகளிரின் மார்பின் அணியாக ஆடையுள் பொதிந்து கிடக்கும் அதை வேற்று ஆடவன் எப்படிக் கண்டு உணர்ந்து கொள்வது? அது இயலாத ஒன்று. எனவே மற்றவர் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் மணமான பெண்கள் மற்றவரினும் வேறுபடுத்திக் காட்டப் பெற்றனர்.

சிலம்பு

அதுவே மகளிர் சிலம்பணியும் முறை. மணமாகாத கன்னிப் பெண்கள் சிலம்பணிய மாட்டார்கள். இளங்குழந்தைகள் ஒருவகை மெல்லொலி எழும்பும் கிண்கிணி போன்றவற்றை அணியும் நிலை உண்டு. ஆனால் 'கலீர் கலிரென' ஒலிக்கும் செஞ்சிலம்பை மணம் புரிந்த மங்கையரே அணிந்தனர். அவர்கள் வரும்போது 'யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்ற மொழிக் கேற்ப, அவர்தம் சிலம்பொலி அவர் வருகையை உணர்த்தும். உணர்த்து ஆடவர் அவர்தம் முகம் நோக்காப் பண்பாட்டில் தலை சிறந்து விளங்கினர். இப்படி ஒரு காலணியே தமிழ்நாட்டின் தலைசிறந்ததாகிய கற்பெனும் பண்பாட்டை விளக்க அணிவது என்பதை உணர்ந்தவர் எத்துணையர்? கண்ணகி தன்

கணவனுக்கு எல்லா அணிகலனையும் கொடுத்துவிட்டாள் எனக் காண்கிறோம். அவள் காலணியாகிய சிலம்பு பல நூறாயிரம் பணம் பெறுமான தென்பதும் அதன் மாணிக்கப் பரலால் அறிந்துகொள்ள முடிகின்றது. ஒருவேளை அதை முன்னமே கோவலன் பெற்றிருப்பானையின், அதை விற்றுத் தன் வாழ்நாள் முழுவதும் மாதவியுடன் வாழ்ந்திருக்கலாமல்லவா! அவன் ஏன் அதைக் கேட்கவில்லை? அனைத்தையும் விருப்புடன் கொடுத்த கண்ணகி அதை யேன் தரவில்லை? ஆம்! அதுவே அவள் தன் மங்கலத்தைக் காத்த மேலான பொருள். இளங்கோவடிகள் 'மங்கல அணியன்றிப் பிறிதணி அணியாள்' என்று இதையே காட்டுகின்றார் போலும். தீவலம் வருவது போன்ற பல சடங்குகளுக்கிடையே மங்கல அணி அணிந்தார் எனக் காட்டுவதும் இதையேதான் போலும் அறிஞர் எண்ணிப் பார்த்து நல் விடைகளைக் காணவேண்டும்.

இவ்வாறு சிறந்த மங்கல அணியாகிய சிலம்பினைப் பின்னர் மதுரையில் கொடுத்தது முறையாகுமா?' என்ற வினா எழுதல் இயற்கை. அதுவும் தவறுதான். இரண்டு காரணங்கள் அதற்குக் காட்ட இயலும். அதைத் தவிரத் தம் வருங்கால வாழ்விற்கு வேறு வழி இல்லை என்ற நிலை உண்டாயிற்று. இன்றும் பல மிக வறிய குடும்ப மகளிர் மஞ்சளை அணிந்து கொண்டு தம் தாலியையே விற்று வாழ்வு நடத்துவதைக் காணவில்லையா. இதை ஒத்தே கண்ணகி வாழ்வுக்கு வேறு வழியில்லை என்ற காரணத்தாலே, 'வரண்டதன் வாழ்வு இனியாவது வளம் பெறுதா?' என்ற ஆசையில் செய்வதறியாது செய்திருக்கலாம்.

மற்றும் இளங்கோவடிகள் பல தீச் சகுனங்களாலே வரப்போகும் துன்பத்தை முன் சுட்டிக் காட்டுவதை நாமறிவோம். அப்படியே, இனி என்றும் கிலம்பணி யாத வாழ்வு அவளுடைய தென்பதை முன் அறி விக்கவே அதைக் கழற்றித் தந்தாள் எனக் காட்ட வும் விரும்பி யிருக்கலாம். எனவே சிலம்பு மணமக ளிர் வாழ்வையும் வளத்தையும் அவரை நோக்காத ஆடவர் பண்பாட்டையும் விளக்க வந்த ஒன்று என் பது நன்கு தெரியக் கிடக்கின்றது. இன்றும் மக ளிர் சிலம்பணியாவிடினும் மணநாளில் கால்விரல் களில் மோதிரம் அணியும் வழக்கத்தைக் காண்கி றோம். அதையும் கணவனே அணியும் மரபும் உண்டு ஆம்! அவள் தனக்கு உரியவள் என்பதையும், அதை உலகம் அவள் அடிநோக்கியே அறிந்து கொள்ள வேண்டுமென்பதையும் அது உணர்த்து கின்றது. இப்படியே மணமான ஆடவர் 'மெட்டு' என்ற காலணி அணிந்தார்கள் எனக் காண்கின்றோம். 'காலாழி மங்கையர் வாழ்வாழி' என்ற பழமொழி உள் நாட்டில் இன்றும் வழங்குகின்றது. இதை உண ராத இன்றைய பண்பாடறியாத மகளிரும் ஆடவரும் அத்தகைய அணிகளை விலக்குவது வருந்தத்தக்கதே.

இலக்குவன் விடை

இக் காலணியின் சிறப்பினைக் கொண்டு வழக்கில் இராமாயணத்திலே ஒரு கதை கூறுவது கண்டு. கிட் கிந்தையில் வானர வீரர்கள் சீதையின் ஆபரணங் களை யெல்லாம் கொண்டுவைத்தபோது, இராமன் அவற்றைக் கண்டு கண்டு கருத்தழிந்தான். எனினும் அவை சீதையினுடையவைதானு என அறியவிரும்பிப் பக்கத்திலுள்ள இலக்குவனை அவை பற்றிக் கேட்டான்.

இலக்குவன் 'பிறர் மனை நோக்காத பேராண்மையாள' னன்றே! அவன் கூறியதாக நாம் அறியும் விடையே பண்பாட்டை உணர்த்துகின்றது. அவன் பதில் இது தான். "அண்ணை, நான் அண்ணியின் ஆபரணங்களை எப்படி அறிந்து கொள்ளமுடியும்? ஒரு முறையேனும் நான் அவற்றைக் கண்டவனல்லனே. எனினும் அவர் தம் பாதங்களைக் கண்டு கண்டு கசிந்துருகி வணங் கும் பேறுபெற்ற காரணத்தால் அவர்தம் காலணி யினை மட்டும் கண்டு கூறுவேன்' என்றுகூறி அக் காலணி சீதையுடையதே என உறுதி செய்தான். இது எந்த இராமாயணத்தில் கூறப்பட்டதோ? அறியேன். எனினும் தமிழ்நாட்டில் இவ்வழக்கு உள்ளதை அறி வோம். எனவே மணமான மகளிர் வாழ்வை வளமாக் கும் அணிகள் பல இருந்தன என்பது தெளிவு.

காப்பு

'காப்பு' என்பது ஓரணி. காப்பு என்பதற்கு காவல் என்ற பொருளும் உண்டோ? மக்களைக் காக்க அணி வது அது. நோயுற்றகாலத்தும் இளமையினும் குழவி யையும் மற்றவரையும் காக்க வென்று தாயோ மற்ற வரோ கடவுளரை நினைத்துக் கையில் மஞ்சள் துணி அல்லது நூலிட்டு முடிந்து காப்புச் செய்தனர். இன் றும் இவ்வழக்கம் உள்ளதை அறிவோம். இதுவே பின் தங்கக் காப்பாக உருமாறிற்று. மற்றும் காலணி யைப் போல இக் கையணியாகிய 'காப்பும்' மங்கையர் கற்பின் காப்பாக அமைந்ததெனக் கொள்வதும் பொருந்தும். இவ்வாறே பல அணிகள் பண்பாட்டு நிலைக்களன்களாக விளங்கியதை அறிகிறோம். தமிழ்நாட்டில் செல்வரும் வறியரும் அவரவர் தகுதி களின்படி பலப்பல அணிகளை அணிந்திருந்தனர்.

நாம் ஆடையினைக் கண்டது போன்றே பண்பாட்டு நிலைக்களனாக அமைந்த அணியும் இன்று அப்பண்பாட்டை மாற்றும் வழிக்குச் செல்லுகிறதோ என்று எண்ணத்தக்க வகையில் நிலை கெடுவதை அறிகிறோமல்லமோ!

மலரும் மணமும்

சங்க இலக்கியங்களில் ஆடையினைப் போன்றே அணிகளைப் பற்றியும் பல குறிப்புக்கள் வருகின்றன. அவற்றை ஈண்டு விரிப்பிற் பெருகும். சுட்டி மட்டும் அமையலாம் என எண்ணுகின்றேன்[1] இப்படியே பல பூசும் பொருள்களாகிய சந்தனம், அகில் முதலியவற்றையும் பண்பாட்டு நிலைக்களன்களாகச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.[2] 'சந்தனம் சும்மா வந்தால் பூசலாம்' என்று 'பூசலாம்' என்ற சொல்லைச் சிலேடையாக உபயோகித்து, அதைப் பூசுவதன் பண்பாட்டை இன்று விளக்குகிறார்களல்லவோ! பல்வேறு நுகர்பொருள்கள் தம் மணம் வீசி, மலர்ந்து, மக்கள் வாழ்வில் இன்பம் பயக்கும் காட்சியை அன்றைய இலக்கியங்களும் இன்றைய வாழ்க்கை நெறிகளும் காட்டுகின்றனவே. மங்கலப் பொருள்களில் மணம் பரப்பும் மலரே முதலிடம் பெற்றுள்ளமையை அறியமுடிகின்றது. அம்மலரணி சிறப்பிலேயும் அகத்தும் புறத்தும் எண்ணற்ற பண்பாட்டு உண்மைகள் அடங்கிக் கிடப்பதை அறியாதார் யாரே!

---

1 அகம் 359, ஐங் 240, புறம் 380; குறுந்—19

2. நற்:—329
கலி—59,43,35,82 அகம்—329.
குறுந்—146,51,161.86, புறம்—282.
சிறுபாண்—191—92.

உணவு

அணி, ஆடை ஆகியவற்றைப் போன்றே உணவு வகைகளும் முறைகளும் பண்பாட்டு நிலைக் களன்களாக அமைகின்றன என்பதை ஒருசிறிது காண்போம். மனிதன் தனது தோற்ற நாளில் பிற விலங்குகளைப் போன்றே கண்டதைத் தின்று நெருப் பின் பயனை அறியாதுய், பச்சை மாமிசத்தையும் காய்கனிகளையும் உண்டுவந்தான். எனினும் பின்னல் கூடி வாழ்ந்து சமுதாய வாழ்வுக்குத் தன்னைப் பழக் கப் படுத்திக் கொண்ட பிறகு அவன் உணவும் மாறி விட்டது. பயிரிடக் கற்றுக்கொண்டு, உணவையும் பக்குவப் படுத்தி உண்ணத் தொடங்கினன். அந்த உணவு அளிக்கும் வகையிலேயும் மனிதன் காட்டும் பண்பாடுகள் அளவிறந்தன. செல்வச் சிறப்பால் பல் வேறு வகைப் பலகாரங்களும் பண்டங்களும் பிறவும் வாரிவாரி வழங்குவர் சிலர். அது பெரும்பாலும் ஆர வாரத் தன்மையோடு முடியும். அத்தகைய உணவு நிலை வெறும் பகட்டு வாழ்வை வளர்ப்பதையே இன் றும் காண்கின்றோம். பெரும் செல்வர்கள் விருந்து என்று பெயரிட்டு ஒரு ரூபாய் மதிப்புடைய பொரு ளுக்கு ஒன்பது ரூபாய் கொடுத்து உணவுச் சாலை களில் கூடி உண்பதைப் பார்க்கின்றோம். அவ்வாறு உண்ணும்போதே, சிலர் அவ் வுணவு அளித்தவனை யும் தமக்கு வேண்டாதவர்களையும் பழித்தும் இழித் தும் பேசுவதைக் காண்கின்றோம். விருந்து வைப்ப வரும் ஏதோ பெருஞ் செலவு செய்து தம் கடமையை முடித்துவிட்டதாக எண்ணி மகிழ்வர். ஆயினும் தந்தவர் கொண்டவர் இருவர் உள்ளமும் அமைதியோ ஆறுதலோ பெறுது. ஆனல் அதே நிலையில் ஓர் ஏழைக் குடியானவன் வீடு தேடி வந்த புதியவருக்கு

தன்னுடைய அகமும் புறமும் மலர, தன்னிடம் உள்ள கூழைக் கொடுப்பானுயின் அது சிறந்த செயலாகும். உணவு தரத்தால் எண்ணப் படுவதன்று ; மனப் பண்பால் அறுதியிடப்படுவது. இதையே ஒரு பிற் காலப் பாடல் விளக்குகிறது[1]. எனவே உணவிடும் வகை யைப் பண்பாட்டு நிலைக்களனுகத் தமிழர் கொண் டுள்ளனர். சங்க இலக்கியத்திலே 'ஆனு விரும்பிற் ருனின்று ஊட்டி' வந்த விருந்தினரை உபசரிக்கும் பண்பும் பேசப்படுகிறது. திருவள்ளுவர் விருந்தோம் பல் என்று ஓர் அதிகாரமே அமைத்து அதன் சிறப் பைப் போற்றியுள்ளார். அனிச்ச மலரினும் மெல்லிய உள்ளம் பெற்ற விருந்தினர் ஏற்கப் பெறவேண்டிய முறையினையை அவர்,

> 'மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
> நோக்கக் குழையும் விருந்து' (90)

எனக் காட்டி விளக்குகிறர். பாணுற்றுப்படைகள் பல உணவு வகைகளையும், அவற்றின் சிறப்பியல் புகளையும் எடுத்துக் காட்டி, அவற்றிற்கு மேலாக அவற்றை உண்பிக்கும் முறைகளை எடுத்தோதும் வகையில் பண்பாட்டைக் காட்டுகின்றன.

இல்லற நெறியில் கலந்து வாழும் கணவன் மனைவியராகிய இணை பிரியாக் காதலர் வாழ்வில் இவ்வுணவு காட்டும் பண்பாடு உயர்ந்தது. இரு பதாம் நூற்ருண்டின் இடையில் பெண்கள் சம உரிமை வேண்டி சமைக்கத் தெரியாத நிலையில் வாழ நினைத்

1. விவேக சிந்தாமணி

தாலும், அவர்களுக்கு உரிமை வழங்க வந்த பாரதியார், உணவு சமைத்தலின் சிறப்பை நன்கு காட்டுவர். தமிழ்நாட்டு இலக்கியங்களுள் பல காதல் வாழ்வையே விளக்கிக் காட்டுகின்றன. அவற்றுள் ஒரு சில இந்த உணவால் தலைவன் தலைவியர் பண்பைப் பிணைக்கின்றன[1].

உணவளிக்கும் விரும்தோம்பலே அறிந்தவன் வாழ்வே பண்பாட்டின் அடிப்படை என்பதைப் பின்னர் வந்த எத்தனையோ இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பின்வந்த பெரிய புராணம் சைவ அடியவர்களுக்கு உணவளிப்பதே வாழ்வின் குறிக்கோள் என்பதை,

> 'மண்ணினில் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும்
> அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
> கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
> உண்மை'

என உரைத்து உணர வைக்கின்றது. இப்படியே ஒவ்வொரு இலக்கியமும் உணவை, பண்பாட்டு நிலைக்களனாகக் கொண்டு இயங்குவதைக் காணின் எல்லை விரிவடையும். முன் ஆடைக்கும் அணிக்கும் கண்டமை போன்றே சங்க இலக்கியங்களில் இவ்வுணவு பற்றிக் காட்டும் இடங்கள் எவை எவை[2] என்பதை

---

1. மதுரைக்காஞ்சி-526-35 சிலப்பதிகாரம்-கண்ணகி கூற்று

2. புறம் 381, 335,29
அகம்—394, 340, 311, 313, 86 கலித்தொகை-131

மட்டும் தொட்டுக் காட்டி, மேலே செல்லலாம் என எண்ணுகின்றேன். சங்க இலக்கியங்களுள்ளும் ஒரு சிலவற்றையே இங்கே நான் சுட்டிக் காட்டினேன்.

பெயர்கள்

இவ்வாறு உடை, அணி, உணவு இவைகளின் அமைப்பும் பிறவகைகளும் மனிதனின் பண்பாட்டை விளக்குவதோடு, அவற்றின் பெயரமைப்புக்களே நல்ல இயல்புகளையும் அவை வந்த காரணங்களையும் விளக்குவதை காணல் நலம் பயப்பதாகும். ஆடை அல்லது உடை என்பது உடலை மறைக்க உடுக்கும் பண்புக்கு அமைந்த ஒன்றன்றல்லவா. அதாவது ஆடையற்றவன் முழுமனிதன் (The Perfect man) ஆக மாட்டான் என்ற உண்மையை விளக்குவதாகும். அதனாலேயே 'ஆடையற்ற மனிதன் அரை மனிதன்' என்ற பழமொழி நாட்டில் எழுந்தது. இன்னும் பல்வேறு உடைப் பெயர்களின் காரணங்களை எண்ணுதலும் நல்லது. நீண்ட 'பா' விலிருந்து துண்டிக்கப்படுவது துண்டு; வெட்டப் பெறுவது வேட்டி; கூறு செய்யப் பெறுவது கூறை; அறுக்கப் பெறுவது அறுவை; துணிக்கப் பெறுவது துணி. இவ்வாறு பாவினைத் துண்டாக்கி அலசி மனிதன் தன் புற உடம்பினை மூடிப் பண்பாட்டினை வளர்க்கின்றான். அப்படியே 'பா' வாகிய பாட்டினை அலசி, அதன் அகக் கூறுகளாக வரும் பல உண்மைகளை உணர்ந்து, தன் உள்ளப் பண்பாட்டினை வளர்க்கப் பாடுபட வேண்டும். இந்த அடிப்படையில் தான் புறப் பண்பாட்டை உணர்த்தும் ஆடைக்குரிய நூலையும் அகப் பண்பாட்டை வளர்க்கும் உள்ளத்துக் குரிய நூலையும் ஒன்றுக இணைத்து

வைத்து நமக்குப் பவனந்தி முனிவர், பாயிரத்தில் ஓர் உண்மையை உணர்த்துகின்றார்.

'பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சோற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாக கதிரே மதியாக
மையிலா நூல்முடியு மாறு

என்று அவர் காட்டுவது இதைத்தானே. இவ்வாறு ஆடையும் அதன் அடிப்படையாக உள்ள நூலும் அகப்புறப் பண்பாடுகளை வளர்ப்பதறிந்து மகிழ வேண்டாமா?

அணியிலேயும் இத்தகைய சிறப்புப் பெயர்கள் உள. காப்பு என்ற ஒன்றை முன்னமே கண்டோம். வளையினையும் நாமறிவோம். இன்று பெண்கள் பலவ கைகளில் வளைகளை அணிந்து கொள்வதைக் காண்கி றோம். வளை என்ற சொல் சங்குக்குப் பழங்காலத்தில் உள்ள பெயர். வளைந்திருப்பவை அனைத்தும் வள களே. எனினும் சங்கு அப்பெயரைச் சிறப்பாகப் பெற்றது. அதை அறுத்தே மக்கள் பெண்களுக்குரிய வளைகளைச் செய்து கொண்டார்கள். பழங்காலத்தில் காதில் ஓலையே மிளிர்ந்தது. பொன்னும் வெள்ளியும் நவரத்தினங்களும் அணிகளாக இடம் பெற்றன. என்றாலும். எல்லோரும் எளிமையாகப் பெறும் காதோலையே எங்கும் பேசப் பெறுகின்றது. காதோல யும் கழுத்தில் வாலிழையும் பணச் செலவின்றி அனை வரும் கொள்ளும் அணிகள். அத்தகைய 'வாலிழை மகளிரே, மங்கல வினைக்கு உரியவர் என்பதை அகம் காட்டுகிறதே[1]. எனவே அணியின் மதிப்பு தங்கம்

1. அகம் 86

பொன் வகையில் கணக்கிடப் பெறுது, அனைவரும் மேற்கொள்ளும் பண்பின் வகையிலேயே கணக்கிடப் பெற்றமை நன்கு காண்கின்றோம். அவ்வணிகளை இன்னின்னவற்றை இன்னின்ன இடங்களில் அணி தலே சிறப்புடைய தென்பதையும், மாறி அணியின் நகைப்புக்கிடமாகும் என்பதையும் புறப்பாட்டு நமக்கு நன்கு விளக்குகின்றது.[1]

உண்ணும் முறை

இப்படியே உணவு வகையிலும் கூட, உணவினை வந்த விருந்தினருக்கு எப்படி அளிக்க வேண்டும் என்ற முறை நாட்டில் இருந்தது,

> 'கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
> மண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
> உண்டி நாலுவிதத்தி லாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
> அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுசெய்ய அளித்துள்ளார்,

எனச் சேக்கிழார் உணவளித்தலின் முறையை அழகு படக்காட்டுகின்றார். விருந்தினரை ஏற்கும் முறை இது. ஆனால் பலவற்றை மேனாட்டவரிடத்துப் பற்றிக் கொண்ட நாம், உணவு வகையிலேயேயும் அவரை விட்டுவிடவில்லை. குளிர்நாட்டில் வாழ்கின்ற அவர் கள் கைகளையும் மெய்யையும் பல்வேறு ஆடைகள் கொண்டு மூடி வாழ வேண்டியுள்ளது. எனவே உண வினைக் கத்தியும் முள்ளும் கரண்டியும் கொண்டு உள்ளே தள்ளவேண்டிய நிலை அங்கு உண்டு. இங்கு வந்த அவர்கள் அதே நிலையில் வாழ்ந்தார்கள்.

---

[1]. புறம் 378

ஆனால் அதை ஒரு சிறிதும் மேற்கொள்ள வேண்டாத நாம் அவற்றைப் பின்பற்றி இன்னும் வாழ நினைக்கின்றோம். உணவு கொள்வதில் உட்கார்ந்து காலை மடக்கி (சப்பளமிட்டு) அமர்ந்து உண்ணும் முறையே உணவு சரிப்பதற்கும் பண்பாட்டிற்கும் ஏற்றதென அன்று அந்த முறையையே கொண்டார்கள். உணவினும் இன்னின்ன வகையான உணவுகளை இன்னின்ன வேளைகளில் உண்ணவேண்டுமென வரையறுத்தார்கள். இயற்கையின் விளையுளும் அதற்கேற்பவே அமைகின்றது. இந்த அடிப்படைப் பண்பாட்டு நிலைக்களன்களையெல்லாம் மறந்து எதை எதையோ பற்றிக் கொண்டு உடலை வளர்ப்பதற்குப் பதில் உடலுக்கு ஊறே தேடிக் கொள்ளுகின்றோம் நாம். அதனாலேயே எண்ணற்ற மருந்தகங்கள் தேவைப்படுகின்றன.

மருந்து

மருந்து என்று எண்ணியதும் அதுவும் மனித வாழ்வில் இன்றியமையாது வேண்டப்படும் ஒன்றாக உள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மனிதனுடைய உடற் கூறுகளை மிகப் பழங்காலத்திலேயே மக்கள் எண்ணிப்பார்த்து இருக்கிறார்கள். அக்காலத்திலேயே இக்கூறுகளின் அமைதிகளைக் கணக்கிட்டு, அவ்வவற்றை இயக்கும் முறைகளையும் அதற்கேற்ற உணவு வகைகளையும் கணக்கிட்டுக் காட்டியுள்ளனர். உயிர்க்கு அடிப்படையாகிய மூச்சு விடும் நிலையினை ஆராய்ந்து பகுத்து அந்தந்த நிலையில் மனிதன் எப்படி எப்படி வாழவேண்டுமெனவும் வகுத்துள்ளனர். மற்றும் இவ்வுடலை வளர்க்கும் உபாயமே தனி என்றும் அதை உணர்ந்து வளர்த்தலே உயிர்

வளர்ச்சிக்கு அடிப்படை என்றும் திருமூலர் காட்டுவார்.

'உடம்பை வளர்க்கும் உபாய மறிந்து
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'

என்பது திருமந்திரம். எனவே உயிரும் உடம்பும் பின்னிப் பிணைந்த வாழ்வுக்கு இன்றியமையா மருந்தினையும் அவர்கள் கண்டிருந்தார்கள். இன்று பலர் மருந்தினையே பல்வேறு உயிர்ச் சத்துக்கள் (vitamins) எனப் பெயரிட்டு உணவாகக் கொள்வதைக் காண்கின்றோம். ஆயினும் பழங்காலத்தில், உணவு வகை செம்மை யாக்கப்பட்டு, தேவையான காலத்தில் மட்டும் அவ் உணவினை கொள்ளின் நோயே வராது எனக் கண்டனர். இதையே வள்ளுவர்,

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின், (942)

எனக் காட்டுவர். பின் அகத்தியர், சித்தர், தேரையர் போன்றவர்கள் இயற்கை முறையோடு கூடிய மருந்து வகைகளையும் எடுத்துக் காட்டுவர். சங்க கால இலக்கியங்களுள் ஒரு சிலவும் மருந்தின் நிலையைக் காட்டுகின்றன.[1] மருந்து பற்றிய நல்ல நெறிகளையும் முறைகளையும் உணர்ந்து உடலை ஓம்பாத காரணத்தினாலேதான்—மருந்தின் பண்பாட்டு நெறியை உணராத காரணத்தினாலேதான்—எண்ணற்ற நோய்கள் புதுப் புதுப் பெயர்களோடு தோன்றி வளர்ந்து மக்கட் சமுதாயத்தை வதைத்து வருகின்றன. அறிவியல் துறை கொண்டு அவற்றின் நிலைகளை மட்டுப்படுத்திவிட்டோம் என இன்றைய நாகரிக உலகம் என்னதான் வீறு பேசினாலும், அவை மேல் போக்காக மறைந்தமை

1. நற். 134. கலி—17

போன்று காணப்படினும், அடிப்படை நோய்கள் மக்கள் உடலில்—உள்ளத்தில்—வாழ்வில் நீங்காமல் வேரூன்றி உள்ளதென்பதை நாட்டு நிலை காட்டுகின்றதே. எனவே உண்ணும் உணவு, உடுக்கும் உடை, அணியும் அணி, கொள்ளும் மருந்து அனைத்தையும் வாழும் வகையினையும் பண்பாட்டினையும் உணர்ந்து முன்னோர் அமைத்தவகையில் கொண்டு செல்லப் பழக வேண்டும் என்பதை மனிதன் உரணவேண்டும். ஆம்! தமிழ்நாட்டில் மனித வாழ்வின் ஒவ்வொரு துறையும் பண்பாட்டு நிலைக்களனாகவே விளங்குகிறது.

அகமும் புறமும்

இந்த மனித வாழ்வையே பண்டைத் தமிழ் மக்கள் அகவாழ்வு புறவாழ்வு எனப் பிரித்தார்கள். ஒருவனும் ஒருத்தியும் உள்ளத்தால் கலந்து வாழ்வதை அகமெனவும் அல்லாத பிற அனைத்தையும் புறமெனவும் பிரித்தார்கள். இந்த வாழ்வின் அமைப்பிலேயும் மனிதப் பண்பாடே அடிப்படையாக உள்ளது. 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும்' பண்பாடே இறுதியில் முகிழ்ப்பது. 'தான்' என்ற உணர்வை மாற்றுவது அகவாழ்வாகும். அவன் அவளுக்கும், அவள் அவனுக்குமாக இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தி, ஒருவர் மற்றவருக்காக வாழும் வாழ்வின் பண்பே அக வாழ்வு. பின் அவர்கள் இருவரும் 'தாம்' என்ற உணர்வில் சில காலம் வாழ்ந்த பிறகு, தம் கான்முளைகளைப் பிணைத்துக் காண்பர். பின்னர் அப்பண்பாடு விருந்து புறந்தோம்பி. ஒப்புர வறிந்து, உலக மக்களை ஒத்து நோக்கும் நிலையினைக் கொள்ளும். அடுத்து வரும் அனைத்தும் புறத்திலே அடங்கும். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கே மக்கள் வாழ்வில் இம்மை மறுமையில் பெறக்கடவன என்பர், பிற சம

யத்தவரும் பிற மொழியாளரும். தமிழரும் இவற்றை அகம் புறம் என்ற இரண்டினுள்ளேயே அடக்கி, அவை மனித வாழ்வின் அடிப்படை என்பதை விளக்குவர். தமிழ்நாட்டில் அன்று தொட்டு இன்றுவரை வளர்ந்துள்ள அத்தனை இலக்கியங்களும் இந்த உண்மையினையே உணர்த்துகின்றன. இந்த அடிப்படையை உணராத காரணத்தினால்தான் உலகில் பல போர்களும் பிறவும் நடைபெறுகின்றன.

போரிலே பண்பாடு

தமிழ்நாட்டில் போர் இல்லையா?—பின் புறம் இல்லையா? என்று கேள்வி யெழுதல் இயற்கை. எனினும் அவர்தம் போர் முறையைச் சற்று நின்று நினைத்து எண்ணிப் பார்ப்பின் அவர்கள் எத்தனையோ போர் நிலைகளைப் பற்றிப் பேசினும் அவர் விருப்பம் போர் விரும்பாச் சமுதாயமே என்பது நன்கு விளங்கும். அப்போர் முறையில் அவர்கள் மேற்கொண்ட பண்பாடு அந்த அமைப்பை நன்கு ஆராய்கின்றவர்களே உணர்ந்துகொள்ள முடியும். இதுபற்றி எனது மற்றொரு நூலில் விளக்கமாக எழுதியுள்ளேன்.[1]

இந்த அடிப்படையில்தான் பின்னர் வந்த கம்பர் முதலியோர் வால்மிகி போன்ற வடமொழிப் புலவர்கள் பாடாதொழியவும் தம் காவியங்களில் போர் விரும்பாப் பண்பாட்டை இடையிடையே காட்டிச் சென்றனர்.

> 'ஆனையா உனக் கமைந்தன மாருத மறைந்த
> பூனையாயின கண்டனை இன்று போய் பொரற்கு
> நானிவாவென நல்கினன் நாகிளங் கமுகின்
> வாளைதாவுறும் கோசல நாடுடை வள்ளல்'

என்ற கம்பன் பாட்டு இந்தப் பண்பாட்டின் அடிப்படையில் முகிழ்த்ததேயாகும்.

---

1. எல்லோரும் வாழ வேண்டும்

கல்வி

இனி, இவற்றையெல்லாம் விடுத்து, இம்மக்கள் வாழ்விற்கு அடிப்படையான கல்வி. கலை முதலியவற்றையும் காணலாம். கல்வி, கலை இரண்டும் இன்று எல்லோராலும் சிறக்கப் பேசப்பெறுகின்றன. நாட்டில் இவைபற்றிப் பேசாத அமைச்சர்களோ கல்வித் தலைவர்களோ கட்சித்தலைவர்களோ இல்லை. எல்லோரும் இவை இரண்டையும் பிணைத்தே பேசுகின்றனர். மக்கள் வாழ்விலும் பண்பாட்டிலும் இவை இரண்டும் முக்கிய இடங்களைப் பெற்றுள்ளன. எனினும் அவற்றை மக்கள் மேற்கொள்ளும் முறையில் எத்தனையோ மாறுபாடுகளைக் காண்கிறோம். கலை என்னும் பெயரால் மக்கள் நிலை குலைகின்றனர் என அறிந்தோர் பேசுவதும் நம் காதுகளில் விழாமல் இல்லை. அரசாங்கங்கள் கலைகளை வளர்க்கும் வகையில் கலைஞர்களுக்கு இலட்சக் கணக்கில் பொருளுதவி புரிந்து வருகின்றன. அப்படியே கல்வி வளர்ச்சியிலும் கோடி கோடியாகப் பணத்தைச் செலவு செய்கின்றனர். நாட்டில் பரவியுள்ள அறியாமை இயக்கத்தைப் போக்க வேண்டும் என்று அனைவரும் ஒருசேரப் பாடுபடுகின்றனர்; நல்லதுதான். ஆயினும் தமிழ்நாட்டுப் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த கல்வி முறையினை எண்ண அனைவரும் மறுக்கின்றனர். 'எண்ணும் எழுத்தும்' கல்வியின் அடிப்படை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் அவற்றின் வழி மக்கள் மனம் அமையவேண்டிய நிலையைத்தான் அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. பல ஆண்டுகள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயின்று வெளிவந்தபின் 'எதற்குப் படித்தோம்?' என்று எண்ணக் கூடியவகையில் இன்றைய கல்வி அமைந்துள்ளது. உத்தியோக விண்ணப்

பத்துக்குப் போட்டி யில்லாமல், அனைவரும் கெடத் தான் மட்டும் வாழவேண்டு மெனவே இன்றைய கல்வி திட்டமிடுகின்றது. ஆனால் தமிழ்நாட்டுக் கல்வி யைத் திருவள்ளுவர் காட்டும்போது, அது மற்றவர் களுக்காகவே வாழப் பழக்கும் ஒன்று எனத் திட்ட மாக விளக்குகின்றார்.

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்' (399)

என்பது அவர் வாக்கு. ஆம்! கற்றவர் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உணர்வில் பாடுபடுபவராக இருக்க வேண்டும். இன்றைய கல்வி யாளர்கள் இருக்கிறார்களா? எண்ணிப் பாருங்கள்.

கலைகள்

இப்படியே கலைஞனும் வாழவேண்டியவன். விண் ணைக் கண்டு கணக்கிடும் வான நூற்கலை தொடங்கி வாழ்வுக்கலை வரையில் மக்கள் முன்னமே நன்கு அறிந்திருந்தார்கள். சோதிடம் போன்ற கலைகளும் தமிழ்நாட்டில் இருந்தன. நாளும் கோளும் புள்ளும் பிறவும் மனித வாழ்வில் இடம்பெற்றதோடு, அவை அம்மனித வாழ்வின் மாறுதல்களை காட்டும் விரிச்சிப் பொருள்களாகவும் பிறவகைகளாவும் காட்சியளித் தனவே! வான நூலைப் பற்றிப் புறநானூறு நன்கு பல விடங்களில் விளக்கிக் காட்டுவதை அறிகி றோம்.[1] இப்படியே பல கலைகளும் அறிவியற் பொருள்களும் பேசப்பெறுகின்றன. ஆயினும் இவை அனைத்தும் நாம் இந்த நூற்றாண்டில் காணு வது போன்று மற்றவர்களைக் கொன்று குவிக்கும்

1. புறம். 30,41,44,60,204,229,299,388,398,400.

அழிவுத் துறைக்கு மனிதனை அழைத்துச் செல்லாது ஆக்கப் பணிக்கே அவனை ஈர்த்துச் சென்றன. அவற்றால் அவன் பெற்ற நலன்கள் பல. கலைஞன் தன்னை மறந்து, தன் வாழ்வை மறந்து, உற்றார், பெற்றார், நாடு நகரம் அனைத்தையும் மறந்து, தன் வாழ்வையே அக்கலைக்கு உரிமையாக்கிய வரலாறு நாட்டில் பல. இன்று அக்கலைப் பொருள்கள் வாணிபப் பொருள்களோடு ஒத்தே மதிக்கப்பெறுகின்றன. இவை அனைத்தும் மனிதன் தன் அடிப்படைப் பண்பாட்டில் மாறிவிட்டான் என்பதையே காட்டுகின்றன.

விழாக்கள்

இனி, மக்கள் வாழ்வின் மேற்கொண்ட விழா முதலியனவும் பழக்க வழக்கங்களும் அவர்தம் பண்பாட்டை எப்படி உலகுக்கு உணர்த்துகின்றன என்பதையும் எண்ணிப் பார்க்கலாம். மனிதன் உலகில் வாழ வாழப் பலப்பல விழாக்கள் உருவாக்கப் பெற்றிருக்கலாம். நாட்டில் விழா என்பது அனைவரும் வேறுபாடு மறந்து கூடிவாழ்வதற்கேயாகும். இன்று விடுதலை விழா, உரிமைநாள் விழா, காந்தியடிகள் பிறந்தநாள் விழா போன்ற பல விழாக்களை நாட்டில் கொண்டாடுகிறோம். இவை இக்காலத்தில் உண்டான சிறப்பு விழாக்கள். தமிழ்நாட்டில் மிகப் பழங்காலந் தொட்டே இவ்விழாக்கள் பண்பாட்டின் அடிப்படையில் உண்டாகி வளர்ந்தன. விழா நாட்களில் நாட்டில் மக்கள் எல்லாரும் வேறுபாடுகளை மறந்து பகையும் பிணிபுமின்றி உள்ளத்தால் கூடி வாழ வேண்டும். இவ் விழாக்கள் பற்றி முன்னமே விளக்கமாக்கி கண்டோம்.[1]

---

[1] பக்கம் 163,

இருபதாம் நூற்றாண்டின் இடையில் நாம் எத்தனையோ விழாக்களைக் கொண்டாடினாலும் தமிழ் நாட்டில் திங்கள் தோறும் நிறைமதி நன்னாளில் கொண்டாடப் பெறும் விழாக்களை நாம் இன்னும் மறக்கவில்லையல்லவா! அவ்விழாக்கள் கற்றூர் கல்லாதார் என்ற எல்லா மக்கள் உள்ளங்களிலும் நன்கு ஊன்றி நாட்டில் சிறந்திருக்கின்றன. 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்த' (சிலம்பு) சித்திரா பௌர்ணமி விழாவினை நாம் மறக்க முடியுமா? அப்படியே ஒவ்வொரு நிறைமதியினையும் எண்ணிப் பாருங்கள். பார்ப்பின் இவ் விழாக்கள் அனைத்தும் 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை, என்ற நல்ல பண்பாட்டில் அரும்பி வளர்ந்தன என்பது நன்கு விளங்கும்.

பழக்க வழக்கங்கள்

இவவிழாக்களை விடுத்துச் சாதாரணமான பழக்க வழக்கங்களை எண்ணினாலும் மனிதப் பண்பாடு அவற்றில் மிளிர்வதைக் காண முடியும். உடலை ஓம்பும் சாதாரணப் பழக்க வழக்கங்களும் வீடு முதலியவற்றைத் துப்புரவு செய்யும் பழக்க வழக்கங்களும் பிறவும் மனிதனை நோய் முதலிய கொடுமைகளிலிருந்து காப்பாற்றும் வகையிலேயே அமைந்து கிடப்பதைக் காணலாம். வாயிற்படிக்கு மஞ்சளிட்டு வேப்பிலை கட்டுவதும், மாரி என்னும் அம்மை வந்தால் வேப்பிலை பயன்படுத்துவதும் சாதாரணமான பழக்க வழக்கங்களேயாயினும் அவற்றில் வாழ்வின் நலத்துறை அடிப்படை பொதிந்துள்ளதே. மகளிர் மஞ்சளிட்டுக் குளிப்பது நாள் தோறும் நாட்டில் நிகழும் வழக்கமாகும். இதனால் மகளிர் உடம்பு கிருமிகளால் தாக்காதிருக்கும். இன்று இவை அதிகமாகப் போற்றப்

படாவிடினும், இவற்றின் உண்மை நாட்டைவிட்டு அடியோடு மறைந்து விடவில்லை என்பதைக்காண ஆறுதல் உண்டாவது உறுதி.

ஆசாரக் கோவை

தமிழில் 'ஆசாரக் கோவை' என்ற ஒரு நூல் உண்டு. அது பதிணென் கீழ் கணக்கு நூல்களுள் ஒன்று. அதில் மனிதன் மேற்கொள்ள வேண்டிய பலவகைப்பட்ட ஆசாரங்கள் பேசப் பெறுகின்றன. அவற்றுள் சில வேடிக்கையாகவும், தேவையற்றன வாகவும் இருப்பதை உணர்வோம். என்றாலும் அவற்றுள் ஒருசில மனிதப் பண்பாட்டின் அடிப்படையில் முகிழ்த்தனவோ என எண்ணி வியக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. உண்பதற்கும் உடுப்பதற்கும்—ஏன்?—நடப்பதற்கும்கூட அதில் பலப்பல வகையான வழிமுறைகளைச் சொல்லியுள்ளனர். அவையெல்லாம் புறத்தோற்றத்தில் தேவையற்றனபோலத் தோன்றினும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பண்பாட்டின் நிலையிலேயே அமைந்துள்ளன எனக் காண இயலும். உதாரணத்துக்கு ஒன்றிரண்டு காண்போம்.

> 'உடுத்தல்லால் நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
> உடுத்தாடை நீருட் பிழியார்'

என்பது ஆசாரக்கோவை. இந்த உடைக்கும் முழ்குவதற்கும் உண்பதற்கும் இத்தகைய வரையறுத்த விதிகள் தேவையா என எண்ணும் அதே வேளையில் அவற்றுல் நலத்துறை எவ்வளவு தூரம் பாதுகாக்கப் பெறுகின்றது என்பதையும் சேர்த்து எண்ணத்தானே வேண்டியுள்ளது,

இடைக்காலத்தில் 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்ற குறளுக்கு ஏற்பப் பல ஆசாரங்கள் அச்சத்தால் மக்கள்மேல் ஏற்றப்பட்டன. 'பொய்சொன்னுல் நா புழுக்கும்' 'ஏமாற்றினுல் குருடாவர்' போன்ற அச்ச உணர்வுகளும் அவற்றின் வழி ஆசாரங்களும் சமய நெறிகளிளும் பிறவகைகளும் உண்டாயின. மனிதன் உண்மையில் அன்பினுக்கு அடங்குவதினும் அச்சத்துக்குத்தானே அடங்குகிறுன். 'செருப்பாலே அடிப்பவர்க்கும் விருப்பாலே கோடி செம்பொன் சேவித்து ஈயும்' சமுதாயத்தை வேறு எப்படித் திருத்த முடியும்? எனவே ஆசாரங்கள் மனிதப் பாட்டை வாழவைக்க அச்ச வழியிலும் சமய நெறியினும் மேற்கொள்ளப் பெற்றன என்பது தேற்றம்.

விரதங்கள்

விரதங்களுக்குப் பெயர்பெற்ற நாடு தமிழ்நாடு. விரதங்களும் அவற்றின் அடிப்படையில் தோன்றிய சமயப் பழக்க வழக்கங்களும் மேல் வாரியாகக் காணும்போது தேவை யற்றனவாகவே தோன்றும். 'ஒருபோது' உண்ணும் வழக்கம் உடலுக்கு நல்லது என்பது மருத்துவ விதி 'உண்ணுதிருப்பவன் ஞானி ஒருபோது உண்பவன் யோகி, இருபோது உண்பவன் போகி, முப்போது உண்பவன் ரோகி, நாற்போது உண்பவன் உடல் விட்டுப் போகி' என்ற மொழி நாட்டில் வழங்குவது. எனவே துறவியர் உண்ணு நோன்பினராகவும் ஒருபொழுது உண்பராகவும் இருக்க. இல்வாழ்வான் இருமுறையே உண்ண வேண்டும் என்ற நியதி நாட்டில் உண்டு. அதற்கு மேல் உண்பவர் 'ரோகி' யாகி மாள்வர் என்பதையும் அத்தொடர் காட்டுகின்றது. இருமுறை உண்ணும் இல்லறத்

தாரும் திங்களில் சில நாட்கள் ஒரு போது உண்ணும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டியவராவர். அதையே விரதம் என்றும் 'ஒருபொழுது' என்றும் கூறுவர். எனினும் ஒருபொழுது என்ற பெயரிலே ஒரே ஆகாரத்துக்குப் பதில் பல ஆகாரங்களாகிய பலகாரங்களை அளவுக்கு மேல் உண்டு விரதம் கொள்ளும் போலி வழக்கம் பின்னல் நாட்டில் வளர்ந்தது. இது அடிப்படைப் பண்பாட்டையும் வாழ்விலக்கணத்தையும் சிதைக்கலாயிற்று. எனவே விரதம் காலப்போக்கில் கேலிக் கூத்தாக முடியுமோ என நினைக்க வேண்டிய நிலையும் உண்டாயிற்று. இந்த விரதம் தமிழ்நாட்டுப் பழம் பெருஞ் சமயங்களாகிய சைவ வைணவத்தில் மட்டுமின்றிப் பிற சமயங்கள் அனைத்திலுமே உள்ளமை அறிகிறோம். இவ் விரதங்களாகிய பழக்கங்கள் சமயச் சார்பாக இயங்கினும் இது பொதுவாக மக்கள் உடல் நலம் பேணும் ஒப்பற்ற நலத்துறை பற்றிய நல்ல பழக்கமே எனக் கொள்ளல் வேண்டும்.

இல்லறமா? துறவறமா?

இத்தகைய பண்பட்ட ஒழுகலாற்றில் வாழும் மக்கள் வாழ்வை இல்லறம் துறவறம் என்று இரண்டாகப் பழங்காலத்தில் பிரித்திருப்பதைக் காண்கின்றோம். இன்னும் உலகில் வாழும் பல மக்களிடத்தும்—பல இனத்தவரிடத்திலும்—பல நாட்டினரிடத்தும் இந்த இருவகை மாறுபட்ட நிலையினைக் காண்கின்றோம். ஒரு சில சமயத்தவர் இல்லறத்திலும் துறவறமே ஏற்புடைத்து எனக் கொள்ளும் அளவிற்குச் செல்லுகின்றனர். இல்லற வாழ்வினை வெறுக்கத்தக்க 'காம' வாழ்வு என்றே கொண்டு அதைத் தள்ள

நினைப்பவரும் சிலர். சிலர் துறவு நிலையிலிருந்து அதுபற்றிப் பேசிக் கொண்டே இருந்து பசு புலித்தோல் போர்த்ததுபோல, 'காம' வாழ்வில் பட்டுழல்வதும் உண்டு. இவற்றையெல்லாம் வள்ளுவர் கூடா ஒழுக்கம் போன்ற பல அதிகாரங்களில் நன்கு கண்டிக்கிறார். எனவே துறவறமா இல்லறமா எது சிறந்தது? எந்த வகையில் சிறந்தது? என்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன. பௌத்த, சமண சமயத்தவர் துறவறமே சிறந்ததெனும் கொள்கையுடையவர் எனச் சிலர் பேசுவர். எனினும் சீவக சிந்தாமணி போன்ற காவியங்களைக் காணும்போது அவர்தம் இல்லற வாழ்வின் ஏற்றம் சிறந்து விளங்கும். மேலை நாட்டுச் சமயங்களாகிய கிறித்தவ இஸ்லாமிய மதங்களிலும் துறவிகள் சிறந்த இட்த்தில் வைத்துப் போற்றப் பெறினும் இல்லறமே மக்கள் பண்பாட்டை மங்காமல் வாழவைப்பது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள் என்பதை அவர்தம் நாட்டு நிலை கொண்டு நன்கு அறியமுடிகின்றது. எனவே, துறவு உயர்ந்த ஒன்றுகப் போற்றப்படினும் அந்நிலை நன்கு காக்கப்பட வேண்டிய ஒன்று என்பதும், அதனினும் இல்லறமே உலகப் பண்பாட்டை வாழவைப்பது என்பதும் தேற்றம். இவ்வுண்மைகளையே திருவள்ளுவர் பல விடங்களில் விளக்கிக் காட்டுகின்றார்.

உலகில் உயிர்பெற்று வாழ்வது தமக்காக மட்டுமன்று. எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணும் பண்பாடே உலக வாழ்வுக்கு ஏற்றது. 'அன்பின் வழியது உயிர் நிலை' என்றும், 'உடம்போடு உயிரிடை நட்பு' மற்றவரோடு கலந்து வாழவே உண்டாயிற்றென்றும் வள்ளுவர் பலவிடங்களில் காட்டுகின்றார். இந்தப் பண்பாடு இல்லறவாழ்விலேதான் அமையும்

என்ற உண்மையினையும் அவர் 'இல் வாழ்க்கை' போன்ற அதிகாரங்களில் விளக்கத் தவறவில்லை.

'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்
என்றாங்கு
ஐம்புலத்தான் ஓம்பல் தலை' (43)

என்றும்

'துறந்தார்க்குத் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை' (42)

என்றும் வள்ளுவர் இந்த உண்மையைப் பலவாறு வற்புறுத்துவார். தமிழ்நாட்டு இலக்கியங்கள் பலவும் இதனாலேயே இல்வாழ்வில் மலரும் 'காதல்' வாழ்வினையே பாராட்டிப் பேசுகின்றன. எனவே மனிதப் பண்பாட்டைக் கெடாமல் பாதுகாப்பது இல்லறமே என்பது தேற்றம்.

இனி, இந்த உண்மையை வள்ளுவர் இரண்டையும் ஒப்பிட்டே நன்கு விளக்குகிறார்.

'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று' (49)

என்பது அவர் வாக்கு. இதில் இல்லறம் துறவறம் இரண்டையும் சீர்தூக்கி ஆராய்ந்து ஏகாரம் கொடுத்து இல்லறமே ஏற்றமுடைய தென்று காட்டிவிட்டார். ஆனால் 'அஃதும்' என்ற சொல்லைப் பிற்காலத்தவர் மாற்றி உணர்ந்தமையின் துறவறமும் இல்லறத்தோடு இயைந்ததோ என்னுமாறு எண்ணப்பெறுகின்றது. பரிமேலழகர் 'அஃதும்' என்ற சொல்லுக்கு மற்றைத் துறவறமோ எனின் என்று கூறி, அதுவும் பிறர் பழக்காத வழி நல்லது என்று பொருள் கொண்டார். வள்ளுவர் கருத்து அப்படி இருக்க வழியில்லை.

பரிமேலழகர் உரைப்படி இல்லறம் பழிக்கப்படுவதாயின் நன்றுகுமா? ஆகாதே. வள்ளுவர் துறவறத்தினும் இல்லறமே ஏற்றமுடைய தென்றே கூறினர். ஆனால் 'அந்த இல்லறம் தவறிய வழியில் சென்றால் நன்றுகுமா?' என்ற வினா எழுவது இயற்கை. அதற்கு விடையாகவே பின்பகுதியை வள்ளுவர் கூறியிருக்கிறார். எனவே 'அஃதும்' என்ற சொல்லுக்கு 'அந்த இல்லறமும்' என்றே பொருள் கொண்டு விளக்கம் காணவேண்டும். எனவே இரண்டில் இல்லறமே சிறந்ததெனவும், அதுவும் மற்றவர் பழிக்காத நிலையிலே வள்ளுவர் காட்டிய வழியில் வாழ்ந்தால்தான் சிறக்கும் எனவும் அறியவேண்டும். எனவே 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற தொடருக்கு விளக்கமாக, இல்லறத்தாரும் அவர்தம் பழக்க வழக்கங்களுமே பண்பாட்டை—மனித வாழ்வின் அடிப்படைப் பண்பாட்டை—வழிவழியாக மங்காது வாழவைக்கின்றன என்று கொள்ளல் பொருந்துவதாகும்.

இவ்வாறே மக்களது பல்வேறு வகை வாழ்க்கை முறைகளையும் தனித் தனியாகப் பகுத்து அவை மனிதப் பண்பாட்டை வாழவைக்கும் வகைகளை ஆயுள் முழுவதும் ஆய்ந்து கொண்டே இருக்கலாம். இங்கே ஒரு சிலவற்றைச் சுட்டிக் காட்டினேன். இவை பெரும்பாலும் மக்கள் உள்ளத்தை ஒட்டி வாழும் அடிப்படையில் அமைந்தவை. அடுத்த பகுதியில் மனிதனின் புறவாழ்வு நிலைகளையும் அவை வளர்க்கும் பண்பாட்டு நெறிகளையும் ஒரு சிறிது காணின் நலம் பயக்கும் என எண்ணுகின்றேன்.

IX. பண்பாட்டு நிலைக்களன்கள்–2

நில அமைப்பும் பண்பாடும்—
அமைதி இல்லையே—இயற்கை
வாழ்வு—சார்பு—நடிப்பு
வாழ்க்கை—நல்லவருக்கு மூன்று
வழி—சாதிவெறி—உழவும்
தொழிலும்—வாணிபப் பண்
பாடு—புலவர் வாழ்க்கை—
வீடும் நாடும்.

நில அமைப்பும் பண்பாடும்

மனிதன் நிலைபெற்று வாழ்வதற்குரிய பண்பாடு அவன் மேற்கொள்ளும் சில செயல்களைக் களனாகக் கொண்டு வாழ்ந்து, உலகை வாழ்வித்து வருவதைக் கண்டோம். அதே நிலையில் அவனுடைய பிற அமைப்புகளையும் ஆராய்ந்து அவை எப்படிப் பண்பாட்டை வாழவைக்கின்றன என்பதையும் இனிக் காண்போம்.

தமிழில் உலகிற்கு 'நானிலம்' என்றே ஒருபெயர் உண்டு. இம்மண் நால்வகைப்பட்ட நிலத்தாலேயே ஆவது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் பெயர்களைப் பெறுகின்றன. அப்பெயர்களோடு கூடிய நிலங்கள் மலை, காடு, வயல், கடல் ஆகியவற்றைச் சார்ந்து வளம் பெற்றுச் சிறந்தன என அறிகிறோம். அவ்வந் நிலத்துக்கு முதற்பொருள், உரிப்

பொருள், கருப்பொருள் என முன்று வகைப் பொருள் களைப் பகுத்து, அவை இன்னின்ன வகையில் ஒன்றை யொன்று பற்றிப் படர்கின்றன எனக் காட்டி, அவை பண்பட்ட மக்கள் வாழ்விற்கு எப்படி உறுதுணையாக அமைகின்றன என்பதையும் விளக்கித் தொல்காப் பியர் தம் பொருளதிகாரத்தை உலகுக்குத் தந்திருக் கிறார். நால்வகை நில அமைப்பும் அவ்வவற்றின் காலங்களும் இயற்கையை ஒட்டியே அமைந்துள்ள மையை நன்கு அறிவோம். மக்கள் இயற்கையொடு இயைந்த வாழ்வு வாழ்வதே சிறந்தது என்ற உண் மையை அவ்வந்நிலத்து மக்கள் வாழ்வினையும் வளத்தையும் கொண்டு நன்கு அறிந்து கொள்ளலாம். இக்கால மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள எத்தனையோ துணைக்கருவிகளைப் படைத்துக்கொண்டு தான் வளர்ந்து விட்டதாகவே காட்டிக் கொண்டாலும், அவனுடைய உள்ளமும் உள்ள அடிப்படையாகிய பண்பாடும் உறுதிபெற்றுச் சிறக்கவில்லை என்பதை உலக வரலாறு நன்கு விளக்கு கிறதல்லவா! கோடி கோடியாகப் பொன்னைக் குவித்து வைத்துக் கொண்டு, கோடைக்குக் குளிர் அறையும் குளிருக்கு அனல் அடுப்பும் வைத்துக் கொண்டு எவ்வளவுதான் இயற்கையை வெல்லும் வாழ்வை மனிதன் மேற்கொண்டு வாழ்ந்த போதிலும், அவன் உள்ளம் பண்பாட்டை விட்டு விலங்காகச் சென்று கொண்டிருப்பதை இன்றைய வரலாறும் கிடுக்கிப் போர்களும் (Cold war) பிற நிகழ்ச்சிகளும் நமக்கு உணர்த்துகின்றன வன்றே? எனவே தொல்காப்பியர் காலத்தில் அமைந்த நிலப் பிரிவுகளும் அவற்றின் அமைதியை ஒட்டிய வாழ்க்கை நெறிகளும் பண் பாட்டு நிலக்களன்களாக அமைந்தமை கண்கூடு.

தொல்காப்பியர் காலத்தில் நால்வகை நிலப்பிரிவு கள் இருந்தன எனக் கண்டோம். அவ்வந் நிலத்துக்கு ஏற்ற பொழுதில் அங்கங்கே வாழும் மக்கள் தம் நிலை திருந்த வாழ்ந்து, வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்று, தாம் தாம் விரும்பிய கடவுளரை வணங்கி வாழ்ந்து வந்தார்கள் எனக் காண்கின்றோம். அக் காலத்தில் தன் தெய்வம் என் தெய்வமென்று தொடர் வழக்கிட்ட வரலாற்றைக் காணோம். அவரவர் சூழ்நிலைக் கேற்ப தெய்வ வழிபாட்டை அமைத்துக் கொண்டார்கள். குறிஞ்சி நில மக்கள் முருகனையும் முல்லை நில மக்கள் திருமாலையும் வழிபட்டார்கள். அப்படியே பிறபகுதி மக்களும் கடவுள் வழிபாடு மட்டுமின்றி பிற எல்லாத் தேவைகளையுமே அவரவர் தத்தம் சுற்றுச் சார்பினை ஒட்டியே அமைத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். அதனாலேயே அவர்கள் மன நிறைவு பெற்று, பண்பட்ட உளத்துடன் வாழ்ந் தார்கள் எனக் கொள்ளுவது பொருந்துவதாகும்.

அமைதி இல்லையே

இந்த நூற்றாண்டின் இடைக்காலத்தில் இக் கொள்கை ஒருவேளை மறுக்கப்படலாம். எல்லாநாடு களும் கலந்து தத்தம் பொருள்களைப் பரிமாறிக் கொண்டு வாழ்வதாலேயே உலகம் செழிக்கின்றது எனச் சொல்லலாம். ஓரிடத்தில் விளைந்தாலும் விளையா விட்டாலும் பிற இடங்களிலிருந்து உணவுப்பொருள் களைக் கொண்டுவந்து உலகை ஊட்டும் வழக்கத்தை இன்று காண்கின்றோம். நாகரிகவளர்ச்சியின் உச்சி யில் வாழும் நமக்கு இது மிகச் சிறந்த வர வாழ்வு என எண்ணத்தோன்றும். உணவில் மட்டுமின்றி உடை, பழக்கவழக்கம், வழிபாடு இன்னும் பிறவற்

றிலும் இந்தக் கலப்பு வாழ்வும் மாற்று வாழ்வும் சிறந்தன எனக் கொள்வதில் தவறில்லை. பொருளாதாரத்தைப் பற்றிப் புதுப்புது ஆராய்ச்சிகள் நடத்தும் இந்த நூற்றாண்டில் மக்கள் வாழ்வைச் சற்றே எண்ணிப் பார்த்தால் பண்பாடு இல்லாத வாழ்வாகவே இது முடியும். உலக அரங்கில் ஒற்றுமை வேண்டுமெனப் பேசுகின்றவர்களும், ஒன்றுன இந்திய நாட்டில் ஒருமை உணர்வு வளரவேண்டுமென உபதேசம் செய்கிறவர்களும் நாளுக்கு நாள் பெருகிவரும் நிலை ஒன்றே மக்கள் வாழ்வு பண்படவில்லை என்பதைக் காட்டிவிடவில்லையா? மற்றும் 'எத்தனைப் பொருள்கள் உலகின் எப்பாகத்திலிருந்தும் கொண்டு வந்தாலும் சில ஆண்டுகளுக்கு முன் இருந்த அமைதி வாழ்வை இன்று பெறமுடியவில்லையே' என வருந்துபவர்தாமே நாட்டில் ஏராளம். 'ஐம்பது ரூபாய் பெற்று வாழ்ந்த அமைதி, இன்று ஐயாயிரம் பெற்றாலும் பெற முடியவில்லையே' என்று ஒவ்வொரு மனிதனும் கூறுவது எதைக் காட்டுகிறது. உயர்ந்த மாளிகையும், ஓடும் பறக்கும்—வாகனங்களும், இன்னம் பிற வசதிகளும் அளவற்றிருந்தும்—மனித உள்ளம் பண்பாட்டில் தோயாத பான்மையைத்தானே இது காட்டுகின்றது. உலக நாடுகள் ஒன்றற் கொன்று பொன்னும், பொருளும், உணவும், உடையும், கலையும் கலாசாரமும் மாற்றிக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்து வருகின்றன என்றாலும் அவற்றால் உண்டாகிய கூட்டுப் பேரவையில் அன்றாடம் சண்டை ஓயாது வளருதுவ எதைக் காட்டுகிறது? இப்படியே எத்தனையோ காட்டிக் கொண்டு போகலாம். இவற்றிற்கெல்லாம் அடிப்படை ஒன்றே. 'தாம் இன்புறுவது உலகின் புறக் காணும்' பண்பாடு மனித உள்ளத்திலிருந்து

மறைந்தமையே முதற் காரணம். இவற்றை நோக்கும் போது, பேராசையற்றுத் தத்தம் நிலத்தில் கிடைத்ததைக் கொண்டு பண்பாட்டுடன் அமைதியையும் காத்த அந்தப் பழங்கால மக்கள் நம்மைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு மேலானவர்கள் என்று சொல்வதில் தவறு இல்லையே. தத்தம் சூழலுக் கேற்ப மலைக்கும், காட்டுக்கும், வயலுக்கும், கடலுக்கும் அவற்றின் சுற்றுப்புறத்துக்கும் ஏற்ப-உணவு, உடை, கல்வி, கலை, கடவுள், இசை இன்ன பிறவற்றை அமைத்துக் கொண்டு வாழும்—வாழ்ந்த—அந்தப் பழங்கால அன்பு வாழ்க்கை—ஆரவார மற்ற அமைதி வாழ்க்கை—தமிழர் கண்ட தனி வாழ்க்கை—பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒன்று என்பதை யாரே மறுக்கவல்லார்!

இயற்கை வாழ்வு

பண்பாட்டுக்குச் சூழலும் சார்பும் நிலைக்களன்களாக அமைகின்றன எனக் கண்டோமல்லவா. உயிரினங்கள் அனைத்தும் ஒன்று எனவும் அவை காலப் போக்கில் பல வேறு வகையில் மாறுதல் பெறுகின்றன எனவும் அவற்றுள் எண்ணற்ற வேறுபாடுகள் வளர்ந்துவிட்டன எனவும் அறிந்தோர் கூறுவர். ஆனால் உடல் உறுப்புக்களால் ஒத்த ஒரே மனித இனம் இத்தனை வகையான—இன்று நாம் காணும்—மாறுபாடுகளை ஏன் பெற்றது என்பதை எண்ணிப் பார்ப்பின் பல உண்மைகள் புலனாகும். நில நடுக்கோட்டின் நடுவில் உள்ள மனிதனும் தென் வடதுருவங்களில் உள்ள மனிதனும் உணவு, உடை முதலியவற்றால் எப்படி ஒத்திருக்க முடியும்? நில நடுக்கோட்டில் குளிர் சாதனமும் துருவத்தில் வெம்மைச்

சாதனமும் செய்து கொள்ளும் அளவுக்கு மனிதன் என்னதான் மாறிவிட்டான் என்றாலும், முழுச் சூழ் நிலையினையும் அவனால் மாற்ற முடியவில்லை என்பதை அவன் ஒத்துக் கொண்டுதானே ஆகவேண்டும். எங்கோ செல்வ வளன் கொழிப்பால் ஓரிருவர் தம் சாதனங்களை அமைத்துக் கொள்ள இயலும். ஆயினும் பெரும்பாலான மக்களினமும் உயிரினமும் அவ்வச் சூழ் நிலைகளை ஓட்டியே வாழவேண்டி யுள்ளன. ஆகவேதான் 'இயற்கை வாழ்வே ஏற்றது' என்று அன்று தொட்டு அறிஞர்கள் அறிவுறுத்திக் கொண்டு வருகிறார்கள்.

சார்பு

இனி, சுற்றுச் சார்புகளுக்கு ஏற்ப இயற்கையில் அமைய வேண்டிய பல நிலைகள் மாறுவது பற்றி முன்னமே கண்டிருக்கிறோம். இங்கும் அதைத் தொட்டு மேலே செல்வோம். சில காட்டு விலங்குகள் நாட்டு விலங்குகளாகப் பழக்கப் பெறுவதைக் காண்கிறோம். ஒரு சில மனிதக் குழந்தைகள் ஓநாய் முதலியவற்றால் வளர்க்கப்பெற்று, அதனால் மனிதப் பண்பாடே அற்றுவிட்டமை கண்டோம்.[1] இவ்வாறு தாம் வாழவேண்டிய சூழலிலிருந்து வேற்றுச் சூழலுக்கு மாற்றப்பட்ட எவ்வுயிரும் ஓரளவு திரிந்து நிலை கெடுவது உண்டு. இதனாலேயே நல்லவர்கள் மக்கள் என்றும் நல்லவருடனேயே நட்பு கொண்டு வாழ வேண்டுமென வற்புறுத்துகின்றனர். ஆங்கிலத்திலும் 'உன் நண்பரைச் சொல்; உன்னை இன்னானென்று நான் சொல்லிவிடுகிறேன்' என்ற பழமொழி வழக்கத்திலுள்ளதை நாம்றிவோம். எனவே பண்பட்ட

1. பக். 101.

நல்லவரோடு வாழ்வதே செம்மையான வாழ்வை உருவாக்கும் என்பதை உணர்ந்த அடியவர்கள்,

> 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்
> உறவு கலவாமை வேண்டும்'

என்று பாடிவிட்டுச் சென்றார்கள். இந்த நிலை உயர்திணையாகிய மனித இனத்துக்கு மட்டுமன்றி விலங்கினத்துக்கும் பிறவற்றிற்கும்கூடப் பொருந்துவதாகும். வீட்டில் வளர்க்கும் நாய்களைக் காணின் இவ்வுண்மை புலனாகும். அவற்றின் உணவு வகை வளரும் இடங்களுக்கு ஏற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் இருப்பதைக் காண்கின்றோம். எனவே உயிர்கள் சூழலுக்கும் சார்புக்கும் ஏற்ப வாழும் பண்பாடு கொண்டவை என்பது உறுதி. இந்தச் சூழல் அடிப்படை நிலையே நாட்டையும் நகரையும் உருவாக்கின. சிறப்பாகப் பயிரிடக் கற்றுக்கொண்ட மனிதன் கூட்டு வாழ்வின்றிப் பயிர்த்தொழில் நடைபெறாது எனக் கண்டு அதற்கேற்ற சூழ்நிலையிலேதான் நாடுகளையும் ஊர்களையும் பிற சுற்றுப்புறங்களையும் அமைத்துக் கொண்டான், பின் அவனுடைய தொழில் பல வகையில் வளர வளரப் பெருநகரங்களும் கடலாதிக்கமும் வானவெளி ஆதிக்கமும் பிற ஆதிக்கங்களும் வளரலாயின. இவ்வாறு தானும் தன் இனமும் தன்னை ஒத்த உயிரினங்கள் பிறவும் இணைந்து வாழ்தவற்கெனவே அமைத்துக் கொண்ட பல சூழல்களையும் சார்புகளையும், நாடுகளையும் நகரங்களையும் இன்றைய மனிதன் வேற்றுக் கண்ணோடு பண்பாடற்ற உள்ளத்தோடு கண்டு அனைத்தையும் இல்லை யாக்கி மண்ணோடு மண்ணுக்கப் போட்டியிட்டுத் திட்டமிட்டுக் கழிவதை நாம் அறியும்போது வருந்தாதிருக்க முடியுமா?

நடிப்பு வாழ்க்கை

மனிதன் புறக்கோலங்களில் மற்றவர்களைப் போல நடிக்கக் கற்றுக் கொண்டான். இன்று மனித வாழ்வு நாடகமாகவே உள்ளது. தொல்காப்பியர் நாடகம் உலக வழக்கிலும் வேறுபட்டது எனக் காட்டியிருப்பினும் இன்றைய மனிதன் வாழ்வையே நாடக மாக்கிக் கொள்ளுகிறான். எனவே மற்றவரைக் கண்டு அவர்களைப் போல உண்ண உடுக்க நடிக்கப் பழகுகிறான். ஆனால் உள்ளம் கொடுமை நிறைந்துள்ளது. மற்றும் புறக்களத்துறுப்புகலெல்லாம் ஒரே வகையில் காணும் மனிதன் உள்ளத்தில் மாறுபடுகின்றான். அண்ணல் காந்தி அடிகளாருக்கும் நமக்கும் புறத்துறுப்புக்களால் வேறுபாடு உண்டா? அவற்றைப் பேணவு செய்வதில் நாம் செயற்கைச் சேற்றில் மூழ்கியிருக்கலாம். ஆனால் இயற்கை வாழ்வு வாழ்ந்த அடிகளார் உள்ளத்தையும் இயற்கை வாழ்வில் செலுத்தினர். அதனால சாகா வரம் பெற்றார்; செத்தும் சாகாது வாழ்கின்றார். ஆனால் அவர் பெயரை சொல்லிக் கொண்டு அவர் பிறந்த நாட்டில் வாழ்கின்ற நாம் புறத்தால் பொலிவைச் செய்வதையே பெரிதாக்கி உள்ளத்தைக் கள்ளம் பயில விட்டுவிடுகின்றோம். அதனாலேயே இருந்தும் செத்தவர் நிலையில் நாம் நிற்கின்றோம். இதைத் திருவள்ளுவர்,

> உறுப்பொறுத்தல் மக்களொப்பன்றால் வெறுத்தக்க
> பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு (993)

என்று விளக்கினர். இதை உணர்வார் எத்தனையர்?

நல்லவருக்கு மூன்றுவழி

இணைந்து வாழும் சூழலில் மனிதன் அமைத்துக் கொண்ட வழிகள் பல. அவை அனைத்தும் மற்ற

வருக்கு இடர் விளைக்காது செல்லும் வரையில் யாதொரு கெடுதியும் இல்லை. நாட்டில் 'நல்லவனுக்கு மூன்று வழி' என்ற பழமொழி இன்றும் வாழ்கின்றது. அதன் கருத் தென்ன? மனிதன் பண்பாட்டுடன் வாழ்கிறான் என்பதே அதன் பொருள். ஒரு சிறு ஒத்தையடிப் பாதையில் இருவர் எதிரெதிராக வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒருவரை ஒருவர் கடந்தே யாக வேண்டும். அங்கே 'யார் வழிவிடுவது?' என்ற வினு எழலாம். இருவரும் நல்லவராகவே இருந்தால் அதற்கு இடமில்லை. இருவருமே பொது வழியைவிட்டு விலகி வலபக்கத்தும் இடப்பக்கத்தும் தனித் தனி யாகச் சென்று தம்மைக் கடப்பர். இதுவே 'நல்வவருக்கு மூன்று வழி' என்ற மொழி எழக் காரணமாக அமைந் தது. இடையில் ஒருவழியும் இருபுரங்களிலும் இரு வேறு வழிகளும் அமைந்துவிட்டன. இதன் கருத் தென்ன? வாழ்வில் ஒரே நெறியில் செல்லும் மக்க ளுக்குள் பல மோதல்கள் உண்டாக இடமுண்டு; இல்லை என்று சொல்ல முடியாது. ஆனல் நல்லவர் கள் தம் அறிவுத் திறத்தாலும் பண்பட்டாலும் அம் மோதல்களைத் தவிர்த்துத் தாம் தாம் புதுவழி கண்டு, பொது வாழ்வு கெடாத வகையில் செம்மையாக நடந்து செல்வார்கள் என்பதே. ஆனல் தீயவர் அதே வழியில் செல்ல நேரில் யார் வழிவிடுவது என்ற வாதம் கிளம்பி வழக்கு மன்றம்வரை செல்ல முயல்வார்கள். இத்தகைய வழக்குகள் இன்று வீட்டுக்கு வீடும் நாட் டுக்கு நாடும் நடைபெறுவதைக் காண்கிறோமல்லவோ! எனவே பண்பாட்டு வாழ்க்கை கருகி உள்ளமையே இதைக் காட்டுகிறது. மனிதன் தன் அறிவையும் பண்பாட்டையும் இழக்காது எண்ணின் உண்மையை உணர்வான் என்பது உறுதி.

சாதி வெறி

இந்த அடிப்படையிலேயே அவனுடைய வாழ்க்கை நெறிக்கு அடிப்படையான பலவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று உழவும் தொழிலும் அவனுக்கு அடிப்படைத் தேவைகளாகிவிட்டன. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற உரிமைக் கவிஞர் பாரதி இரண்டையும் இணைத்துப் பாராட்டிவிட்டார். பண்டு தொட்டு மனிதன் மேற் கொண்டதும் இதே உண்மையைத்தான். இவற்றின் அடிப்படையிலேதான் எண்ணற்ற சாதிகள் நாட்டில் வளர்ந்துவிட்டன. அவரவர் செய்யும் தொழிலா லன்றி வேறுபாடு காட்டாது மக்கள் ஒன்றி வாழவேண்டும் என்று கருதிய வள்ளுவர்,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்' (*972*)

என்று சொன்னார். ஆனால் இன்று அத்தொழிலால் உண்டான வேறுபாடுகளே பெரும் சாதி வேறுபாடு களாக மாறி, நாட்டையும் உலகையும் நலியுறுத்து கின்றன. ஆரியர் வழி வளர்ந்த நால்வகை வருண வேறுபாடுகள் முதன் முதல் அவரவர் தொழிலால் அமைந்தவைதாமே. பின்னர் அவைகளே பல்வேறு வகையில் உருவெடுத்து, வள்ளுவர் எந்தப் பிறப்பால் சாதி வேறுபாடு வேண்டாம் என்றாரோ அதே பிறப் பால் சாதி வேறுபாடு வளர வழி செய்து இன்றளவும் வாழவைத்துக் கொண்டும் உள்ளன. உரிமை பெற்ற பின் நாம் எவ்வளவு சாதி வேறுபாடு நீங்க வேண்டு மெனப் பேசிக் கொண்டே இருந்த போதிலும் அவ் வேறுபாடு வீட்டு எல்லை தாண்டி, நாட்டு வாழ்வா கிய தேர்தல் வரை தலைகாட்டி வளர்ந்துள்ளதை

அறியமுடிகின்ற தன்ரே! நாட்டில் நல்ல வளர்ச்சிக்கு இணைந்த சமுதாயம் இன்று வெறிபிடித்து அலைகின்ற நிலையைக் கண்டால் இது ஏன் தோன்றிற்ரே என எண்ண வேண்டியுள்ளதே!

உழவும் தொழிலும்

உழவும் தொழிலும் நாட்டை வாழ்விப்பன. உழவு நாட்டுப் பண்பாட்டின் அடிப்படை என்று முன்னமே கண்டோம். நிலத்தைச் செம்மை செய்வது உழவு; உள்ளத்தைச் செம்மை செய்வது பண்பாடு. தொழிலால் உண்டாகும் உடை, ஊர்தி, வீடு இன்ன பிறவெல்லாம் மனித வாழ்வுக்குத் தேவையே என்ருலும் அவற்றிற்கெல்லாம் மேலாக உழவால் உண்டாகும் உணவுப் பொருளே அவ்வுயிர் வாழ்வுக்கு அடிப்படையாமாறு போல, பிற புறத்தோற்றத்துக்குரிய மேலே கண்ட எல்லாப் பொருள்களும் மனித வாழ்வுக்குத் தேவை என்ருலும், அனைத்துக்கு மேலாக அவன் செம்மையில் வாழ அவனுடைய உளப் பண்பாடு தேவை. எத்தனைத் தொழில்வளம் இருந்தும் உழவு சிறக்கவில்லையாயின் உணவின்றி உலகம் வாடுவது போலவே, எத்தனை பிற அமைப்புக்கள் இருந்த போதிலும் மனிதனுக்கு உளப் பண்பாடு இல்லையானுல் உலகம் வாடிவருந்தும் என்பது தெளிவு. மற்றும் இவ்வுழவும் தொழிலும் அவன் முதல் வாழ்வில் முளைத்தமை போன்ற அவனுடைய பண்பாடும் அதன்வழி அமைந்த உறவு முதலியனவும் மிகப் பழங்காலத்திலேயே அமைந்து விட்டன. இன்று உழவையும் தொழிலையும் வளர்க்கப் பாடுபடுமளவுக்கு ஒத்த உள்ளப் பண்பாட்டை வளர்க்கப் பாடுபடாத வேறுபாடுதான் இந்த உலகையே வருந்துகிறது.

அண்ணல் காந்தி அடிகள் இந்த 'உள்ளொளிப் பெருக்கத்'தைத்தான் தன் வாழ்நாள் முழுதும் வற்புறுத்தி வந்தார். வள்ளுவர்,

> 'புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும். யாக்கை
> அகத்துறுப் பன்பில் லவர்க்கு' (79)

என்று அன்றே சொல்லிவிட்டுச் சென்றார். இவர் தம் மொழிகளைப் பயிலும் நாம் அவற்றைப் பின்பற்ற நினைத்தால் பயனுண்டு. நினைக்கிறோமா?

வாணிபப் பண்பாடு

இன்று உழவும் தொழிலும் இணைந்துள்ளமை போன்று அவற்றுடன் வாணிபமும் பொருளியலும் இணைந்துள்ளன. உலகெங்கணும் பின்னவை இரண்டும் பேசப்பெறுகின்றன. அவையே உலகினை ஓரளவு ஆட்சி புரிகின்றன என்றுகூடச் சொல்லலாம். இவை பண்பாட்டின் வழி அமைகின்றனவா? என்ற கேள்விக்கு உலக நிகழ்ச்சிகள் 'இல்லை' என்ற பதிலைத்தான் தருகின்றன. மாற்றுப் பண்ட ஏற்று மதி இறக்குமதி பற்றி எத்தனை எத்தனை வழக்குகள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன 'வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்; வாழும் நாட்டில் பொருள் கேடல் கேட்டிலார்'என்று பாரதி வாணிபத்தைப் பற்றியும் பொருளாதாரத்தைப் பற்றியும் அடிமை நாட்டில் கூறிய உண்மை உரிமை பெற்றுப் பதினைந்து ஆண்டுகள் கழித்தும் பொய்த்துப் போகவில்லை யல்லவா? எனவே வாழ்வின் அடிப்படைத் தேவையான பொருளியலுக்கும் அதை

வளர்க்கும் வாணிகத்துக்கும் இன்று பண்பாடே தேவை என்பதை உணரவேண்டும். திருவள்ளுவர்,

'வாணிபமும் செய்வார்க்கு வாணிபம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்' (120)

என்று காட்டுவர். கொள்பவர் கொடுப்பவர் என்ற இருவரே வாணிபத்தில் முன் நிற்பவர். அவர் யாவராயினும் நிலைகெடாது தன்னைப் பிறரே ஒப்ப எண்ணிச் செய்வதே வாணிபம் என்பது அவர் கருத்து. இவ்வுண்மையைத் தான் மற்றொரு புலவர்,

'கொள்வதூம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது'[1]

வாணிபம் அமையவேண்டும் எனக் காட்டுவர். பழங் காலத் தமிழகத்தில் கடல் வாணிபமும் தரை வாணிபமும் அவற்றின் அடிப்படையிலே நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மிகச் சிறந்த நிலையில் இருந்தன என்பதைச் சங்ககால இலக்கியங்களைப் பயின்றுல் நன்கு உணரலாம். இங்கே விரிவஞ்சி விடுத்தல் நலமாகும். வேண்டுவோர் பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி போன்ற பாட்டுகளையும் சிலம்பு, மேகலை போன்ற காவியங்களையும் பயின்றுல் பண்பாட்டின் வழி நடந்த தமிழ் நாட்டு வாணிபப் பொருளாதார வளனை நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

புலவர் வாழ்க்கை

இவ்வாறு மக்கள் வாழ்வொடு பிணைந்த ஒவ்வொன்றும் பண்பாட்டினை நிலைக்களனுகக் கொண்ட சிறப்பினை நுணுகி நுணுகி ஆராயின் எத்தனையோ

1. பட்டினப்பாலை (210)

உண்மைகள் நமக்குப் புலனுகும். தமிழ்நாட்டு இலக்கியங்களின் வழியே இவ்வுண்மைகளையெல்லாம் காட்டியவர்கள் நல்ல பண்பட்ட தமிழ்ப் புலவர்கள். அவர்கள் நல்ல புரவலர்களால் ஓம்பப்பட்டவர்கள். எனவே அவர்தம் வாழ்வினையும் அவர்கள் மேற்கொண்ட பண்பாட்டினையும் ஒரளவு உணர்ந்து கொள்ளின் இந்த இலக்கிய எழுச்சிக்கு அடிப்படை நன்கு விளங்கும் என்பது உறுதி.

சங்க இலக்கியங்களில் காணும் புலவர் அத்தனை பேரும் வறுமையில் உழன்றவர்கள் என்றே காண்கின்ருேம். வறுமையில் பண்பாட்டை காணமுடியாது என்றே இன்று சிலர் வாதிடுகின்றனர். அன்று வாழ்ந்த புலவர்கள் வறுமையில் செம்மை கண்டார்கள். ஏன்? அவ் வறுமை அவர்களாகவே விரும்பிப் பெற்றது. இன்றைய வறுமை உலகில் மற்றவரால் தரப்பெறுவது. எனவே இரண்டிற்கும் வேறுபாடு காணமுடிகின்றது. அன்று வறுமையில் ஏன் புலவர்கள் விரும்பி வாடினர்கள்? அவர்கள் பெரும் பொருள் பெறவில்லையா? நாட்டில் வாழ்ந்த பெருமன்னரும் சிறுமன்னரும் அவர்களுக்கு வாரி வாரி வழங்கியதாக வரலாறுகள் உள்ளனவே! பின் அவர்களுக்கு வறுமையேன்? இங்கேதான் நாம் புலவர் பண்பாட்டை எண்ணவேண்டியுள்ளது. நாட்டில் எத்தனையோ மன்னர்களும் செல்வச் சீமான்களும் வாழ்ந்தார்கள். அவர்கள் யாவரும் புலவரைப் போற்றி ஆதரித்துப் பொன்னும் மணியும் பூனூலும் பிறவும் வழங்கினர்கள். ஆனல் புலவர்கள் அவற்றைத் தமக்கெனவே வைத்துக் கொள்ளவில்லை. நாட்டில் தம்மை நோக்க மிக்க வறுமையில் வாடும் மக்கள் அவர்தம் கண்முன் நின்றனர். அவர்களால் அரசர்களைப் பாடிப்

பரிசு பெறவும் முடியாது. எனவே 'தாம் பெற்ற செல்வம் வையகம் பெறுக' என வாரி வழங்கிய வள்ளல்களுக்கு மேல் பெரு வள்ளல்களாக விளங்கினர் புலவர். குமணனைப் பாடிய புலவர் பெருஞ்சித்திரனார் இந்த உண்மையைத் தன் வாழ்விலே நன்கு விளக்கியே காட்டிவிட்டார். பெற்ற பொருளைக் கொண்டு வந்து மனைவி கைக் கொடுத்து,

> 'இன்னோர்க் கென்னது என்னோடும் சூழாது
> வல்லாங்கு வாழ்தும் என்னது
> எல்லோர்க்கும் கொடுமதி மனைக்கிழ வோயே' (163)

என்று சொல்லி வாரி வழங்கிய வள்ளன்மையைக் காணமுடிகின்ற தன்றே! அவர் குமணனிடம் தன் வறுமையைக் கூறும் பாடலைப் படிக்கும்போது, அவரைக் காட்டிலும் வேறு வறுமையாளர் நாட்டில் இருக்கமாட்டார்கள் என்று எண்ணிப் படிப்பார் கண்ணீர் உகுக்கும் நிலையினைக் காண்கிறோம். ஆனால் அதே புலவர் பெற்ற பொருளை மற்றவருக்கு வாரி வழங்குமாறு மனைவி கையில் கொடுக்கும்போது அவர் பெருமிதத்தை எண்ணி வியக்கும் நிலையினை அடைகிறோம். இவ்வாறு வாழ்ந்த புலவர் பலர்—மிகப் பலர். ஆம்! அவர்தம் வாழ்வில் அனைத்துக்கு மேலாக 'மற்றவர் வாழத் தாம் வாழவேண்டும்' என்ற பண்பாடே தலைதூக்கி நின்றது. ஆற்றுப் படைகளைப் படிக்கும் போது நாட்டு மக்கள் அவர்களுக்குக் காட்டும் பரிவும் பண்பும் நம்மை மறக்கச் செய்கின்றன. வீடும் குடிலும் அமைக்கும் அவர் தம் வாழ்வே பண்பாட்டு வாழ்வு. 'திண்ணை' என்று ஒன்று அமைத்து அதில் வழிப்போக்கர் தம்மைக் கேளாமலேயே தங்கிச் செல்ல வசதி செய்த

வீட்டமைப்பு அவர்களுடையது. 'கேட்' அமைத்து 'உள்ளே நாய்' என்ற பலகை அமைத்து யாரையும் அண்டவிடாத வீட்டமைப்பு இருபதாம் நூற்றாண்டினுடையது. எது பண்பாடு? எண்ணிப் பாருங்கள்.

வீடும் நாடும்

இத்தகைய மக்களின் வீட்டு வாழ்வை மேலே அகத்திலே கண்டோம். 'கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை' என்ற உண்மையின், ஏழேழு பிறப்பும் பிரியா வகையில் கணவனும் மனைவியும் கலந்து வாழ்ந்த அந்த ஒருமை வாழ்வே பேரின்ப வாழ்வு என அவர்கள் உணர்ந்த உண்மையும் நாமறிந்த ஒன்று. இப்படித் தனி மனிதரான இருவரும்—கணவனும் மனைவியும்—அன்பாலும் காதலாலும் கட்டுண்ட நிலையிலே கான்முளைகள் தோன்றுகின்றன. அது வரை வள்ளுவர் அன்பு இயல்பாக வளரும் எனக் காட்டாமற் காட்டி, பிறகே அன்புடைமை என்னும் அதிகாரத்தை அமைத்துள்ளார். மனிதன் தனக்காகவும் தன் குடும்பமாகிய மனைவி மக்களுக்காகவும் மட்டும் வாழ்வது அன்புடைமையோ பண்புடைமையோ ஆகாது; ஆறறிவு பெறுத விலங்கினங்களும் பறவைகளும் பிறவும்கூட அந்த அளவில் அன்பும் பண்பும் கொண்டு வாழ்கின்றன. ஆனால் அந்த வீட்டு நிலையைத் தாண்டி நாட்டு நிலைக்கு நம்மை ஈர்த்துச் செல்வனவே அன்பும் பண்பும். அங்கும் அது மெல்ல மெல்ல விரிவடைகின்றது. சுற்றம், தழுவி, விருந்து ஒம்பி, பிறகு பரந்த உலகைக்கண்டு, எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியா நல்ல நெறிக்கு நம்மை ஈர்த்துச் செல்லுகின்றது. இந்தச் செம்மையான பண்பாட்டு

நெறி தனி மனிதனுல் மட்டும் உருவாவதன்று. அப் படியாயின் காந்தியார் காலத்திலோ அதற்குமுன் இயேசு, வள்ளுவர், புத்தர் போன்றார் காலங்களிலோ அது உருவாகியிருக்குமே. இல்லை யாதலால் இந்தப் பண்பு மக்களினம் முழுதும் கூடி உருவாக்க வேண்டிய ஒன்றாகும். இன்று நம்மை நாமே ஆளுகின்ற காரணத்தால் சிறப்பாகப் பண்பை உருவாக்கும் பொறுப்பு அரசியலார் கையில் உள்ளது உண்மை. ஆம்— ஓரளவு அது உண்மையே. உலகத்தை உயிராக ஓம்பும் மன்னவன் இந்த அடிப்படைப் பண்பாட்டை ஓம்புவானுனுல் 'மன்னவன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி' என்பதற் கேற்ப உலகமும் பின்பற்றிச் செல்லும். பழங்காலத்தில் மன்னரையும் உலகையும் உடலாகவும் உயிராகவும் கண்டனர்.

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனுல்
யான் உயிர் என்பதறிகை
வேல் மிகுதானை வேந்தர்க்குக் கடனே' (186)

என்ற புறப்பாட்டு எழுந்தது. பின்வந்த கம்பர் இந்த நிலையைச் சற்று மாற்றி 'உயிரெலாம் உறையுமோர் உடம்பு மாயினன்' எனத் தசரதனைச் சொன்னர். எப்படியாயினும் உயிரோடு உடம்பிடை நட்பே அரசருக்கும் உயிர்களுக்கும் உள்ள நட்பு. எனவே நாட்டில், நல்ல பண்பாடு குலையாது வாழ வேண்டுமானுல், மன்னர்—அல்லது இன்று நாடாளும் நல்லவர்—வழிகாட்டிகளாக அமையவேண்டும். சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர் பலர் அத்தகைய பண்பாட்டின் தலைநின்ற காரணத்தால் என்றென்றும் நிலைத்து வாழும் புகழைப் பெற்றதோடு, தாம் மேற்

கொண்ட பண்பாடு வாழவும் வழிகாட்டிகளாக உள்ளனர் என்பதை உணர்கின்றேம். அதே வேளையில் பண்பாடற்ற சில மன்னரையும் தலைவரையும் துச்சமாக எண்ணிப் புலவர்கள் வெறுத்து ஒதுக்கிப் பழிப்பதையும், அவர்கள் உலகமுள்ளளவும் பழியேற்ற பாழ்ங்கட்டைகளாக வாழ்வதையும் காண்கின்றேம். எனவே நாடுதிருத்த—நாடு நலம் பெற—நாடு பண்பாட்டுடன் வாழ நல்லவர்களாக ஆளுகின்றவர்கள் அமையவேண்டும். காய்தல் உவத்தல் அகற்றிய கருணை உள்ளத்துத் தலைவர்கள் வழிகாட்டவேண்டும். அவ்வாறு நல்லவர்கள் நலம்பெற ஆளுவர்களாயின் நாடும் நானிலமும் சிறந்தோங்கும். நாமும் எல்லா நலமும் பெற்று ஓங்குவோம் என்று கூறி அமைகின்றேன். வாழ்க சமுதாயம்! வளர்க அதன் பண்பாடு!

Y:1
N62
ARCHIVES
108310

அச்சிட்டோர் :
அமுர்தா பிரிண்டர்ஸ்
சென்னை-24.